ஹஜாரி ப்ரசாத் த்விவேதி

# பாணபட்டன்

## தன்வரலாறு

சாகித்திய அக்காதெமி
புது தில்லி

O15,1DBBw
N66
107869

350
2.66.

MADRAS RECORD OFFICE
MADRAS

# பாணபட்டன்

தன்வரலாறு

# பாணபட்டன்

## தன்வரலாறு

ஹிந்தி மூலம் :

ஹஜாரி ப்ரசாத் த்விவேதி

தமிழாக்கம் :

சு. சங்கரராஜு நாயுடு

சாகித்திய அக்காதெமி

புது தில்லி

BANABHATTAN THANVARALARU, Banabhatta ki 'Atmakaṭha' Hindi novel by Hazari Prasad Dwivedi. Tamil translation by S. Shankar Raju Naidu. Sahitya Akademi, New Delhi, 1966. Price Rs. 10

© சாகித்திய அக்காதெமி, புதுதில்லி

முதல் பதிப்பு 1966

015,1DBBW
N66

கிடைக்குமிடம் :

சாகித்திய அக்காதெமி

ரவீந்திரபவன், புது தில்லி–1

பிராந்தீய ஆபீஸ், சென்னை

பிராந்தீய ஆபீஸ், கல்கத்தா–29

ARCHIVES LIBRARY
107869
MADRAS-600 008

அச்சிட்டோர் :

கபீர் பிரின்டிங் ஒர்க்ஸ், சென்னை–5

விலை ரூ. 10

# முகவுரை

பாணபட்டனது 'தன்வரலாறு' தொடங்குதற்கு முன்னர் அது உருவாகிய சிறுவரலாற்றினை அறிதல் இன்றியமையாதது. மிஸ் காதரைன் என்பார் ஆஸ்திரிய நாட்டுக் கிருத்துவ உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் இன்னும் உயிர்த்திருக்கின்றார்; ஆயினும் அவர் புதுமையான நோன்பு பூண்டுள்ளார். சென்ற ஐந்தாண்டுகளில் அவர் எனக்கு ஒரே ஒரு கடிதம் வரைந்துள்ளார். அது இந்நூலுடன் தொடர்புகொண்டுள்ளதால் இறுதியில் தரப்பட்டுள்ளது. அவ்வம்மையாருக்கு இந்திய நூல்கள்மீதும் கலைகள்மீதும் எல்லையற்ற பற்றுண்டு. தமது நாட்டில் இருக்கும் பொழுதே வடமொழியிலும் கிருத்துவ இந்தி மொழியிலும் நல்ல பயிற்சி பெற்றார். தமது அறுபத்தெட்டு ஆண்டு நிறைந்த போது இந்நாட்டுக்கு வந்து எட்டாண்டுகள் இடையறாது பழம் பதிகளில் களைப்பின்றிச் சுற்றுப்பிரயாணம் செய்து வந்தார். இங்கு வந்து வங்க மொழியும் பயின்றார். ஆனால் அவர் அம் மொழியில் இதுவரை எழுதுந்திறன் பெறவில்லை. இனிப் பெறவும் இயலாது. நாங்கள் அவரைத் 'தீதீ' என்றழைப்பது வழக்கம். தீதீ என்றால் பாட்டி என்பது பொருள். பின்னால் தீதீ என்ற சொல் வந்தால் வாசிப்போர் காதரைன் அம்மையென்றே பொருள் கொள்ளுதல் வேண்டும். வங்க மொழியில் பாட்டியோடு கேலி செய்வது வழக்கம்; தீதீ இதனை அறிந்திருந்தார்; மேலும் எப்பொழுதாவது கடுமையான கேலியும் செய்து விடுவார். எங்கள்மீது—குறிப்பாக என்மீது—அவருக்கு அளவு கடந்த அன்புண்டு; அவர் நட்பு, தம் பெண்வயிற்றுப் பேரன் மீதுள்ள அன்புபோன்றது. பொறுக்க முடியாத சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு அவர் திரும்பும்பொழுது, எங்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்படுவதுண்டு. அவரிடம் புதிய

செய்திகளைக் கேட்கவும் புதிய பொருட்களைப் பார்க்கவும் கூட்ட மாகக் கூடிவிடுவோம். ஒருமுறை பனையோலைப் பழஞ்சுவடியை யும், மற்றொரு முறை ஓலைச்சுவடியின் மேலட்டைச் சித்திரத்தை யும், இன்னொருமுறை பழைய நாணயங்களையும் எடுத்தெடுத்துக் கையிலேந்தி அவற்றின் வரலாற்றை விளக்குவார். அப்பொழுது அவரது முகம் ஊக்கத்தால் மிளிரும். அவர்தம் சின்னஞ்சிறு நீலக்கண்களில் நீர் ததும்பும். பிறகு மெதுவாக அவர் சட்டைப் பைக்குள்ளிருந்து வெள்ளைப்பூனைக் குட்டியொன்று உடம்பைச் சுருக்கிக்கொண்டு வெளிக்கிளம்பும். இந்த வேடிக்கை எமக்குப் புதிதல்ல. அம்மையாரை மகிழ்விக்க எங்களில் ஒருவர் அப் பூனைக் குட்டியைக் கையேட்டு நூலைத் தாங்குவதுபோலத் தூக்கு வார். அப்பொழுது அது குதித்து விழுவதைக் கண்டு நாங்கள் மருண்டு அச்சமுறுவோம். இது கண்டு அப்புதிய குடிசையே அதிரும்படி அம்மையார் விழுந்துவிழுந்து சிரிப்பார். அம்மை யாரின் இத்தகைய ஒரு மகிழ்ச்சி விளைவாக அப்பொழுது கூடி இருந்தோர் விலையுயர்ந்த பொருட்களில் சிலவற்றைத் திருடிக் கொள்வார்கள். (யான் இத்தகைய தீய செயலைச் செய்ததே இல்லை.) ஆனால் இது அம்மையாருக்குத் தெரியவே தெரியாது. தொழுகையில் ஆழ்ந்து மெய்ம்மறந்து இருக்கும்பொழுது சதைச் சுருக்கமுற்ற அவரது முகம் ஒளி வீசும். நாமகளே எழுந்தருளி யது போன்ற காட்சி காண்போம். குறும்புக்காரப் பிள்ளைகள் பக்கமாய்ச் செல்வார்கள். மாட்டு வண்டிகள் தூசி பறக்கச் செல்லும். நாய்கள் குரைத்துச் சண்டையிடும். எனினும் தீதீ கருப்புரப்படிமம் போல அசைவின்றி அமைதியோடும் அமர்ந் திருப்பார். அவர் கண்விழித்தபொழுது அவருடன் உரையாடல் அறிவுக்கு விருந்தாக இருக்கும்.

கடைசி முறையாகத் தீதீ இராசக்கிருகத்தினின்றும் திரும்பி வந்தார். புத்த பெருமானையே அவர் நேரில் கண்டு திரும்பியது போன்று அவரது முகம் பொலிவுற்றிருந்தது. களைத்திருந்தார் எனினும் என்னைக் காண உடன்பட்டார்; இராசக்கிருகத்தி னின்றும் வரும்பொழுது ஒரு நரியைக் கண்டதாகவும் என்னிடம் தெரிவிக்க அவர் மறக்கவில்லை. அது புத்தர்கால நரியென்றும், அது தனது யுகத்தின் ஏதோ ஒரு செய்தியை உரைக்க விரும்பிற் றெனவும் அதன் முகத்தே இரக்கக் குறிப்புப் பொலிந்ததைத் தெளிவாகத் தாம் கண்டதாகவும் அம்மையார் நம்பினர். அந்தக் கால நரிகளும் எத்துணைக் கருணை பொருந்தியனவாக இருந்தன! வாய்ப்பளித்தால் அந்த நரியைப் பற்றி ஒரு புராணமே இயற்றி

விடுவார்; பின்னர் அவரிடமிருந்து விடுபெறல் அரிதாய்விடும் என்பதை அறிந்துகொண்டேன். "தீதீ! இப்பொழுது ஓய்வு பெறுக. நாளை நரியைப் பற்றிப் பேசலாம்" என்றேன். எனது சொல் கேட்டு உணர்ச்சியோடும் சொன்னார்: "ஆம் செல்வ, களைத்திருக்கிறேன். போதும். இன்று வீட்டிற்கு ஓடு! நாளைக் குத் தவறாமல் வருக. பார், இம்முறை சோணையாற்று இருகரை களிலும் கால்நடையாகவே வழி நடந்தேன்." நான் வியப்புற்று வினவினேன் "சோணையாறு?"

"ஆம் செல்வ, சோணையாறு"

"ஏதேனும் கிடைத்ததா தீதீ!"

"மிகமிக, நாளை வா"

எழுபத்தைந்து ஆண்டு முதியவரின் துணிவும் இடையறாத முயற்சியும் கண்டு மிகுந்த வியப்புற்றேன். வீடு சென்று உணவு முடித்து மீண்டேன். அவரை என் இல்லத்திற்கு உண்ண அழைத்துப்போக வந்தேன். ஆனால் எதிரே திறந்த வெளியில் ஒருமுகப்பட்ட தியான சமாதியில் அமர்ந்திருந்தார். எத்தகைய நிலவொளி! நீலவானம் திசைகள் யாவற்றையும் தன்னுள் அடக்கியது வெள்ளியுருக்கின் வெள்ளம். வானம் நீலக்குளம்; அதனில் அரச அன்னம்போலத் திங்கள் நீந்துகிறது. தொலை வில் வானமுனையில் ஒன்றிரண்டு மேகக்குழவிகள் நாள் முழுதும் நடமாடியதால் களைத்தனவாக உறங்கிக் கொண்டிருந்தன. அப் பொழுதும் கீழும் மேலும் நிலவுமட்டும் பரவி இருந்தது. தீதீ அம்மையார் சமாதியில் அமர்ந்திருந்தார். ஒருபால் ஒரு பேரீச்ச மரம் முழுப்பாழுக்கும் சான்றென நின்றிருந்தது. யான் பேசா மல் திரும்பிவிட்டேன்.

மறுநாள் மாலை அம்மையின் இருப்பிடம் சென்றேன். அவ ருடைய வேலையாள் உரைத்தான்: "இரவு இரண்டு மணிவரை பேசாதிருந்து பின்னர் மேசைக்குச் சென்று இரவு முழுவதும் எழுதிக்கொண்டிருந்தார். எழுதுவதிலேயே தன்மயமாகிவிட்ட தால் இன்று காலையும் எட்டு மணிவரை விளக்கை அணைக்காம லேயே எழுதிக்கொண்டிருந்தார். மேசைமீது தலைவைத்துப் பிற்பகல் மூன்று மணிவரை படுத்திருந்தார். எழுந்து நீராடித் தேநீர் அருந்தச் சென்றிருக்கின்றார்."

அவருடன் தேநீர் அருந்தியவாறு உரையாடிக்கொண்டிருந் தேன். அவரோடு உரையாடுவது எனது மனத்தை மிகமிகக் கவர்ந்தது. எனது நல்வினையைப் பாராட்டினேன். தேநீர் அருந்த இருந்தவர், என்னைக் கண்டதும் மிகு மகிழ்ச்சியுற்றுக்

கூறினர்: "உன்னையே எதிர்பார்த்திருந்தேன். சோணை யாற்று வழியினைக் கடந்தபொழுது கிடைத்த நூற் செய்திகளைக் கோத்து இந்தி மொழியில் வரைந்துள்ளேன். நீ இதை ஒரு முறை படித்துத்தான் பாரேன். எனது இந்தி நடையில் உள்ள தவறுகளைத் திருத்திவிடுக. ஆனந்தனைக் கொண்டு பிறகு, இதனை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்துக்கொள். இந்தா அப்பனே, வாங்கிக்கொள்." 'இந்தா அப்பனே' என்பது அன்பு மொழி. தம் அன்புக்கு உரியவர்மீது மிக்க மகிழ்ச்சி யோடு ஏதேனும் கொடுக்கும்போது 'இந்தா அப்பனே!' என்று அவர் கூறி வந்தார். இன்றுவரை இந்த அன்புமொழியோடும் தேநீரும் பிஸ்கட்டும் கிடைத்துவந்தன. ஆனல் இன்ரு நூலேட்டுக்கட்டும் அவரது அன்போடு கிடைத்தது. அவர் உரைத் தார்: "இஃது இருநூறு கல் கால்நடையாக வழி நடந்ததின் நற்பயன். இன்றிரவே இதனைச் செம்மைப்படுத்திவிடுக. நாளை ஐந்து மணி வண்டியில் கல்கத்தாவுக்குச் சென்று 'டைப்' அடித்து விடுக. நாளை மறுநாளே இதன் 'டைப்' ஏடுகளை எனக்குத் தருதல் வேண்டும்." நான் தயக்கத்தோடும் வினவினேன்: "ஏதேனும் பழைய ஏட்டுச்சுவடி கிடைத்ததா அம்மையே?" அம்மையார் அதட்டிக் கூறினர்: "ஒருமுறை படித்துத்தான் பார். இதனைப்பற்றிய மறைச் செய்தி பற்றிப் பின்னர் வினவுக. நீ மிகுந்த சோம்பேறி. வருந்தக்கூடிய செய்தி கூறுகின்றேன். ஆண்மகனுகப் பிறந்தனை. சோம்பல் விடுத்து வேலை செய்க. மாதர்களோ விரும்பினுலும் இடையருது அவர்கள் தொழிலில் ஈடுபட முடியாது. எனதுடம்பில் ஆற்றல் இருந்த நாட்கள் நாணத்தோடும் வீணுகக் கழிந்தன. முதுமையில் அவ்வளவு ஊக்கமும் இல்லை, ஆற்றலும் இல்லை. நீ மிகுந்த சோம்பேறி. பின்னர்க் கழிவிரக்கங் கொள்வாய். ஆணுகப் பிறந்து இவ்வளவு சோம்பல் அடையக்கூடாது. ஐரோப்பிய மாதர்கள் எதையும் இயற்றவல்லார் என்று கருதுவாய். இது தவறு. நாங்களும் பிற ஆட்சிக்கு உட்பட்டவர்களே. சமூக அடிமைத்தனம் குறைவுதான்; ஆனல் இயற்கை உறுத்தும் அடிமைத்தனத்தை விலக்க முடியாது. எனது வாழ்வில் அறுபத்தெட்டாண்டுகள் வீணுகக் கழிந்தன என்பதை உணர்கின்றேன்." தீதீயம்மை யின் கண்களில் நீர் ததும்பிற்று. ஏதோ சொல்லத் துடிதுடித்தது அவரது பொக்கை வாய். ஆனல் இயலவில்லை. சொல்லே கிடைக்கவில்லை போலும். சென்ற காலத்திருந்த எந்தப் பொருள்மீது அவர் நினைவு மெதுவாக ஊன்றியதோ அறியேன்.

பேசாது அமர்ந்தவாறிருந்தேன். ஒருமுகப்பட்ட நினைவு கலந்தபொழுது கண்களில் நீர் பொழிந்தவாறிருந்தது; அதனைத் துடைக்கவும் அவர் முயலவில்லை. சென்றகால நிகழ்ச்சிச் சிக்கலைச் சிக்கறுக்க அவர் முயல்வது போலத் தோன்றியது. அவர் நினைவை அம்முயற்சியின் நின்றும் வேறுவகையில் இழுக்க வினவினேன்: "இந்நாட்களில் சோணையைக் கடக்கப் படகுகள் உள்ளனவா, அம்மையே?" பொருளை அறிந்து சிரித்துக்கொண்டே உரைத்தார்: "பார், இங்குப் பல நாட்கள் நான் தங்க முடியாது. இம்மொழி பெயர்ப்பை நீ ஊன்றிப் பயின்று பார். நாளையே கல்கத்தாவுக்குச் சென்று 'டைப்' அடித்து விடுக. இரண்டோர் ஓவியங்களும் சேர்க்க வேண்டும். விரைவாகச் செய்."

ஏடுகளைத் தாங்கி இல்லம் சேர்ந்தேன். கண்பார்வை நன்றாக இல்லை. ஆதலின் இரவில் படிப்பது எனக்கு உடன்பாடன்று. எனினும் தீதீயார் கொடுத்த எழுத்தேடுகளைப் படிக்கத் தொடங்கினேன். 'பாணபட்டன் தன்வரலாறு எழுதப் பெறுகிறது' என்ற தலைப்பே கொட்டை யெழுத்துக்களில் எழுதப் பெற்றிருந்தது. "பாணபட்டன் தன்வரலாறு!" அப்படியானல் விலைமதித்தற்கு அரிய நூற்செய்திகளை இவர் பெற்றிருக்கின்ருர். ஊக்கத்தோடு முழுவரலாற்றையும் படித்தேன். கரைகாண்பதற்கரிய மகிழ்ச்சி எய்தினேன். இத்தனை நாட்களுக்குப் பின்னர் வடமொழி இலக்கியத்தில் சிறந்த ஒரு பொருள் கிடைத்துள்ளது. படித்தவாறே இரவு கழிந்தது. காலை கல்கத்தாவுக்குப் புறப்பட்டேன். அங்கு ஒரு வாரம் தங்க வேண்டி இருந்தது. திரும்பியபொழுது தீதீயார் காசிக்குச் சென்ருர் என அறிந்தேன். யாரிடமும் தம் இருப்பிடத்தைத் தெரிவித்துப் போகவில்லை.

இரண்டு ஆண்டுகள் வரை 'வரலாறு' அப்படியே கிடந்தது. ஒருநாள் அஃது எவ்வளவு உண்மையானது என்பதை அறியப் பாணபட்டன் நூல்களோடும் ஒப்பிட்டு நோக்க விரும்பினேன். 'வரலாற்றில்' கண்ட பல செய்திகள் பாணபட்டன் நூல்களில் கிடைக்கவில்லை. அவன் காலத்து நூல்களையும் ஆராய்ந்து அவற்றின் உதவிகொண்டு இந்நூலைப் புதியமுறையில் செம்மையாகப் பாகுபடுத்தினேன். நூல் மிகுந்த பெருமை வாய்ந்தது.

பன்னுட்கள் வரை தீதீயைப்பற்றிச் செய்தி ஒன்றும் கிடைக்கவில்லை. ஒரு நாள் திடீரென முகல்சராய் புகைவண்டி

நிலயத்தில் தீதீ காட்சியளிக்கக் கண்டேன். அவர் வண்டி மாறிக்கொண்டிருந்தார்; களைத்திருந்தார். என்னைக் கண்டு சற்றும் மகிழ்ச்சியுறவில்லை. கூலியை மட்டும் அதட்டிக் கூறினர்: "எச்சரிக்கையாக எடுத்துச் செல். நீ சோம்பேறி." 'கூலியாளும் சோம்பேறியா?' என்று நினைத்து உரக்கக் கூவி அழைத்தேன்: "தீதீ! என்னை அறிந்துகொள்ள முடியவில்லை? ஆகா!"

"பார் தம்பீ! எனக்கு மிகுந்த வருத்தம். பூனை என்னை ஏமாற்றிவிட்டது."

"என்ன நேர்ந்தது?" என்று வினவினேன்.

"அது பெண்ணாக இருந்தது. நான்கு குட்டிகளை ஈன்றது. எப்படி வளர்க்கப் போகின்றேனே!" என்றார் தீதீயார். நான் இடைமறித்துக் கூறினேன்: 'தீதீ, நீங்கள் கொடுத்த "தன் வரலாறு" அப்படியே என்னிடம் உள்ளது."

தீதீயார் சினங்கொண்டிருந்தார்; நிற்கவில்லை. வண்டியில் அமர்ந்த பின்னர், "நான் எனது நாட்டிற்குப் போய்க் கொண்டிருக்கின்றேன். முகவரி, எடுத்துக்கொள்" என ஒரு சீட்டு எறிந்தார். சீட்டை ஏந்தினேன்; வண்டி புறப்பட்டு விட்டது.

பாணபட்டன் 'தன் வரலாற்றினை' அன்பர்களுக்கு வழங்குகின்றேன். தீதீ அம்மையார் அதனை வெளியிடக் கட்டளை தந்துவிட்டார். பாணபட்டனின் வேறு நூல்களைப் போலவே இந்தத் தன்வரலாறும் அறைகுறையானது என்பது கவனித்தற்குரியது.

## உயிர்ப்பு ஒன்று

[1] வெலவந்தவன் பாணுசுரன் விழுச்சென்னியில் ஒளிர்ந்த
வலிமிக்கவன் பணிராவணன் தலைபத்தினும் வணந்த
சலியாச்சுரா சுரமன்னவர் தலையாவினு மிளிர்ந்த
நிலையாப்பவம் அறுக்குஞ்சிவன் நீள்பாதமே காப்பு.

பாணபட்டன் என்று அனைவரும் என்னை அறிந்திருப்பினும் அஃது என் முதற்பெயரன்று. அதன் வரலாற்றினை மாந்தர் அறியார், நல்லதாயிற்று. மிக முயன்று அதனை மறைத்துவைக்க விரும்பி இருந்தேன்; பல காரணங்களை முன்னிட்டு அதனை மூடிவைக்க முடியவில்லை. எனது வெட்கத்திற்குத் தலையான காரணம் இது. நான் பிறந்து, பெயர் பெற்ற வாத்தியாயன மரபில் ஒரிழிகறையாகவே எனது பெயரின் வரலாறுள்ளது. என் பாட்டன் என் தந்தை இவர்தம் இல்லங்களில் நான்மறைகளைப் பயில்வோர் குழுமியவண்ணம் இருந்தனர். இல்லங்களில் வளர்ந்த கிளி நாகணவாய்களும் மறைமொழிகளைப் பிழையின்றி மிழற்றி வந்தன. இது மிகையென மாந்தர் கருதலாம், எனினும் எம் முன்னோரின் மாணுக்கர்கள் அக்கிளி நாகணவாய்களுக்கு என்றும் அஞ்சியவாறே இருந்தனர் என்பது முற்றிலும் உண்மை. இவர்கள் மறையோதுவதில் ஏற்பட்ட பிழை

---

[1] இதன் வடமொழி மூலம்:

ஜயந்தி பாணுசுர மௌலி லாலிதா தஸாஸ்ய சூடாமணி சக்ரசும்பி ந;
சுராசுராதீஸ ஸிகாந்த ஸாயிநோ பவச்சிதஸ்த்ரயம்பக பாதபாம்ஸவ;

—காதம்பரிகதாமுகம் 2

களை அவை திருத்தி வந்தன.[1] எம் முன்னோரின் 'மனைகள் எப்போதும் வேள்விப்புகையான் கவியப் பெற்றிருந்தன. இவையெல்லாம் யான் கேட்ட செய்திகள். என் தந்தையான சித்திர பானுபட்டரின் செயல்களை நானே நேரில் காணும் பேறு பெற்றிருந்தேன். வேள்வி நேரத்தில், என் தந்தையின் திருவுடலில் கசிந்த வேர்வைத் துளிகளை நாமகளே வந்து தன் கைத்தளிர்களான் துடைத்துக்கொண்டிருப்பது வழக்கம் என்று கூறினும் மிகையாகாது. ஏனெனில், வைகறையில் இருந்து கதிரவன் முளைத்து இருமுழுத்தங்கள் வரை இடையறுது நெய் சொரிந்து வேட்ட பின்னர் என் தந்தையார் வேர்வையில் முழுகியவர் போன்று எழுந்து நான்மறைக்கூடம் சென்று புல்தவிசின்மீது வீற்றிருப்பார். இதுவே அவர் களைப்பாறும் முறை. இதே நேரத்தில், மறைப்பயிற்சி அளிக்க அளிக்க அவர் உடம்பின் வேர்வைத்துளிகள் உலர்ந்து வந்தன[2] என்றுல் நாமகளே வேர்வைத் துளிகளைத் துடைத்தாள் என்று கூறுவதல்லாமல் வேறு என்னென்று சொல்வது? இத்தகைய தூய தந்தையின் புல்லிய மகனே நான். பிறந்தபொழுதிலிருந்தே நாடோடி, வாயாடி, வெட்டிப்பேச்சாளன், வீணன், குறிக்கோளின்றித் திரிபவனுக உருவாகி விட்டேன். நான் வீட்டைவிட்டு ஓடிப்போன போது தனியாகக் கிளம்பவில்லை. பொல்லாதன சொல்லி, இன்னும் அடங்காப் பிள்ளைகளையும் உடனழைத்துப் போய்விட்டேன். அவரனைவரும் என்னுடன் இறுதிவரை இருக்கவில்லை. மகதமொழியிலே 'பண்ட்' என்பது வாலறுந்த எருதினது பெயர். ஆங்கோர் பழமொழி பெயர்போனது. அதன் பொருள் : 'வாலறுந்த எருது (பண்ட்), தான் போனதுமல்லாமல் ஒரு பத்து முழம் தும்பையும் உடனிழுத்துச் சென்றது.' ஆதலின் ஊர் மக்கள் எனக்குப் 'பண்ட்' என்ற பெயரிட்டனர். இதனையே பின்னர் வடமொழியில் 'பாணன்' என மாற்றி, ஊரார் இட்ட பெயரின் மதிப்பைக் காத்தேன். பிறகு மாந்தர் 'பட்டன்' என்ற பட்டத்தையும் சேர்த்தனர். ஆனுல் எனது முதற்பெயர் 'தட்சன்.' அதனை மிகுந்த விழிப்போடும் வேறிடத்தே பாதுகாத்து வைத்திருந்தேன். அதனைத் தக்க இடத்தில் குறிக்கின்றேன்.

என் தந்தைக்கு உடன்பிறந்தவர் பதினெருவர். அவரில் ஒருவரையேனும் யான் பார்த்ததில்லை. அவரில் ஒரு சிற்றப்பன்

---

[1] காதம்பரி கதாமுகம் 12. [2] காதம்பரி ஹர்ஷ சரிதம் உயிர்ப்பு 2.

திருமகன், [1] உடுபதிபட்டர். எனக்கு வயதில் மிக்க மூத்தவர். ஆனால் என்னோடும் ஒத்த வயதினராகவே ஒழுகி வந்தனர். அவர் அந்நாட்களில் சொற்போர் வல்லவர். அவர் வசுபூதி என்ற பௌத்த துறவியை நூல் போரில் தோற்கடித்தார். அவர் கல்விச் சிறப்பும் ஒழுக்கவிழுப்பமும் மன்னர்மன்னவன் ஹர்ஷ வர்த்தனனது உள்ளத்தைக் கவர்ந்தன. உடனே மன்னர்மன்ன வன் வைதிகநெறிக்குத் திரும்பிவிட்டான். என் உறவினரில் இந்த உடுபதி அண்ணாவே என்னிடம் மிகுந்த அன்புடையவர். அவர் பன்முறை என்னைக் கொடிய வீழ்ச்சிகளினின்றும் பாதுகாத்துள் ளார். அவர் தக்க நேரத்தில் என்னைக் காத்திராவிட்டால் எப் பொழுதோ வீழ்ச்சியுற்றிருப்பேன். இந்நூலில் உரிய இடத்தே அதைப் பற்றிக் குறிப்பேன்.

எனக்குப் பதினாறு ஆண்டுகள் நிரம்பியபொழுது தந்தை முன்னரே மீளாப் பதவியடைந்து விட்டார். தாயும் அவருக்கு முன்னதாகவே வானம் நண்ணினார்.[2] உடுபதி அவர்களே என் மீது தாயினும் இனிய அன்பு பூண்டு பாதுகாத்து வந்தார். ஆயினும் எனது தீவினையை வருத்தமுடன் விரித்துரைக்க விரும்புகின்றிலேன்; என் வாழ்வில் ஏற்பட்ட நல்வினையின் தோற்றத்தினின்றும் வரலாற்றைத் தொடங்குகின்றேன். எனி னும் வரலாற்றின் இடையிடை என் தீவினைக் குறிப்புகளான துயரச் செய்திகள் வருமாயின் படிப்போர் அன்புகனிந்த உள்ளத்தோடும் பொறுத்தருள்வாராக.

குறிக்கோளின்றித் திரியும் நாடோடியாகத்தான் இருந்தேன்; அன்று அந்த நகரில் இன்று இந்த நகரில், அன்று அவ்வூரில் இன்று இவ்வூரில்—இவ்வாறு திரிந்தவாறு இருந்தேன். இப்படித் திரிந்தபொழுது நான் தொடாத தொழில் இல்லை. இன்று நடிகன், நாளை பொம்மையாட்டுபவன்—இன்று நாடக அமைப் பாளன்—நாளை புராணம் ஓதுபவன் இப்படியாக நடித்து ஊராரை ஏமாற்றி வந்தேன். மாந்தரது எத்தொழிலையும் விட வில்லை; யாவற்றையும் கையாண்டேன். கடவுள் எனக்கு நல்ல வடிவழகை வழங்கினான். நாவன்மையும் நல்கினான். இவ் விரண்டும் என் பிள்ளைமையிலும் இளமையிலும் நன்முறையில் உதவின. எனது பன்முக வல்லமைகண்டு மக்கள் என்னைப்

---

[1] ஹர்ஷ சரிதத்தில் பாணபட்டர் தம் சிற்றப்பன் மகன் தாராபதி என எழுதி இருக்கின்றார். அவர் ஒருவேளை உடுபதியாக இருக்கலாம்.

[2] ஹர்ஷ சரிதம் உயிர்ப்பு 1.

புயங்கன் என்று கருதினர்; எனினும் மாதர்பின் ஓடுகிற காமுகனாக ஒரு நாளும் நான் இருந்ததில்லை. திரிந்துதிரிந்து ஒரு நாள் கன்னோசித் தலைநகராகிய தாணேசர்புரியை அடைந்தேன். அந்நாளை என் நல்வினை நாள் என மதிக்கிறேன்.

நகரில் புகுந்தபோது விழாவணியோசை மிக ஒலிப்பதைக் கேட்டேன். அரசத் தெருவில் ஒரு மாபெரும் ஊர்வலம் நகர்வதைக் கண்டேன். அதனில் மாதர் எண்ணிக்கையே பெரிது. அரச மாதர்கள் விலை மதிப்பரிய ஆடையணிகள் புனைந்து மிக்க அழகிய பல்லக்குக்களில் அமர்ந்திருந்தனர். பணிப் பெண்டிர் அடிமிதிப்ப அன்னக்குரலெனக் கிளம்பிய சிலம்போசை எண் திசைகளிலும் பரவா நின்றது. அவர் தோள்கொடிகள் ஒன்றையொன்று மோதுதலான் மணிகள் புதைத்த தோள்வளைகள் மிக்க பூசலைச் செய்தன. அவர் அழகிய அங்கைகள் மேலே உயர்ந்த பொழுது வானயாற்றில் மலர்ந்து காற்றினால் கீழே இறங்கிய தாமரை மலர்கள்போல மிளிர்ந்தன. கூட்ட நெருக்கத்தினால் அவர்தம் செவிகளில் சொருகப்பெற்ற தளிர்கள் நழுவி விழலாயின. அவர் ஒருவரையொருவர் மோதிக்கொண்டனர்; ஆதலின் தோள்வளையங்கள் நழுவி மற்றவர் முன்றானைகளில் சிக்கிக் கீறிக் கிழித்தன. வேர்வையில் பாவையர் முழுகினராதலின் மெய்யிற் பூசிய நறுமணச் சுண்ணம் வழிந்து பாய்ந்ததால் சீனப்பட்டாடைகள் புதுநிறந் தோய்ந்தனவெனக் காணப்பெற்றன. இக்கூட்டத்தில் நாட்டிய மாதர் குழுவும் இருந்தது. அவர்களது புன்னகை பூத்த முகங்களில் மலர்ந்த பெரிய கண்கள் கருங்குவளை மலர்க் காடுபோல அழகு செய்தன. அசைந்தவாறுள்ள தொடையல்கள் அவர் மார்பிடங்களைத் தாக்கிக்கொண்டிருந்தன. அவிழ்ந்த கூந்தற் செறிவுகள் நெற்றிச் சுட்டிகளில் மாட்டிக்கொண்டன. முகிலினம்போலக் காட்சியளிக்கும் கருங்குழற்கற்றைகள், இடையருது நிறப்பொடிகள் தூவப்பெறுவதால் செந்நிறங்கொண்டன. அவர் பாடும் இன்னிசைகளை அரசத் தெருக்கள் எதிரொலி செய்தன.

இவ்வழகிய காட்சியை நகரத்து நாற்சந்தியின் ஓரத்திலே நின்றவனாய் மெய்ம்மறந்து காணலுற்றேன். ஊர்வலத்தின் ஒரு பகுதி காணச் சுவையாக இருந்தது. அரண்மனைகளில் ஊழியம் புரியும் குள்ளர், கூனர், அலிகள் அனைவரும் 'குறும்பு நாட்டியம்' பொருதவராய் ஓடியவாறிருந்தனர். நெடிய அங்கி அணிந்த ஊழியனாகிய ஒரு முதியவனது நிலைதான் இரங்கத் தக்கதாக இருந்தது. நடனத்தில் ஈடுபட்டிருந்த மடமாதொருத்தி

யின் மேலாடை சென்று அவன் கழுத்தில் மாட்டிக்கொண்டது. அவனிழுக்க அவளிழுக்க வீடுகாண்கிலாது வாடி வருந்தினன். அவன் நிலை நகையாடற்குரியதாக அம்மக்கள் கருதினர். அரச இளநங்கையர் குழாம் ஊர்வலத்தின் நடுவே இருந்தது. இவ்விடத்தில் ஆட்டமும் பாட்டமும், ஒழுங்கும் கட்டுப்பாடும் பெருந்தன்மையும் உள்ளக் கவர்ச்சியும் கொண்டிருந்தன. ஒரு மருங்கில் பேரிகள் பெரிதும் அதிர்ந்தன ; முகிலென முழவுகள் முழங்கின. அவற்றின் ஓசை நிலத்தைப் பிளந்தது. மற்றொரு மருங்கில் அரச சிறுமியர்தம் செவிகளிலே அணிந்த மணியிழைத்த குழைகள் கன்னங்களைத் தாக்குதலினாலும் நீலோற்பலத் தளிர்களால் மிளிரும் சிவிகைகளில் அமர்ந்த அரச மாதர்தம் சிலம்புகள் புலம்புதலாலும் இனிய மெல்லோசை கிளம்பிற்று. அனைவரின் பின்னே சாரணரும் வந்தியரும் அரச புகழ்ப்பாக்கள் பாடியவாறு சென்றனர். அவர்களுடன் ஒருசிலர் மகிழ்ச்சிக் கிளர்ச்சியால் வெறிகொண்டிருந்தனர். அதனால் அவர்கள் வாயே ஒருவகை வாத்தியமாக முழங்கிற்று. ஊர்வலம் கடப்பதற்கு இரண்டு நாழிகை நேரம் பிடித்தது.[1] நான் அசையாத பாவை போல இவ்வளவு நேரம் வரை நின்றிருந்தேன்.

ஊர்வலம் கடந்ததும் பேருறக்கத்தினின்றும் விழித்தவனானேன். மன்னர்தம் மன்னன் ஹர்ஷ தேவனின் தம்பி குமார கிருஷ்ணவர்த்தனனது இல்லத்தே பிள்ளைப் பேறுண்டாயிற்று என்ற செய்தியைக் கேட்டுணர்ந்தேன். இன்று பெயர்வைப்பு நடைபெறும் என்றும் அதன்பொருட்டே இவ்விழாவணி என்றும் அறிந்தேன். கேட்டதும் ஒரு நொடிக்குள் என்முகம் தொங்கி விட்டது. எனக்கென் நிலை விளங்கிவிட்டது. இங்கோர் மகவின் நற்பேறுதான் என்னே! அதற்காக இவ்வழகிய விழாவணி நடைபெறுகின்றது! எனது இழிபேறுதான் என்னே! ஊர்தோறும் திரிந்து வந்துகொண்டிருக்கின்றேன். என் பிறந்த நாள் நினைவிற்கு வந்தது. நான் பிறந்த சிலவாண்டுகள் பின்னர் அன்னை உயிர்நீத்தாள். அப்போது அப்பா முதுமை எய்தி விட்டார். வேதம் ஓதுதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்டுவித்தல் ஈதல் ஏற்றல் எனும் நான்மறையாளர் கடமைகளை இயற்றுதற்கிடையே என்னை வளர்க்கும் பொறைமிகுந்த பொறுப்பும் அவருக்கு இருந்தது. அன்பு மிகுந்த வலிவுடையது. மகப்பற்று

---

[1] காதம்பரியில் சுகநாசர் பிள்ளை பிறந்த விழா வர்ணனையுடன் இதை ஒப்பிடுக.

வைரம் பாய்ந்த வலிய பொருளாகும். முதிய தந்தையின் நொந்த வாழ்விலே மற்றெரு துயர நிகழ்ச்சியும் நேர்ந்தது; எனினும் அவர் துளியும் தொல்லையுருது என்னை அன்போடும் வளர்க்க லானுர். வேள்விக்கூடம் விடுத்துப் புல் தவிசின்மேல் மறைபயில் கூடத்தே அமரும்பொழுது புழுதிகெழுமிய எனதுடம்பு அவர் மடிமீது தவழும். அவரது அன்புபெற்ற அளவுக்கு நான் அவரது அறிவைப் பெறவில்லை. எனக்குப் பதினுறு நிரம்பியதும் அவர் என்னைவிட்டு விண்ணுலகெய்தினுர். எனது வாழ்வின் கண் சாரம் உடையது ஏதேனும் உண்டெனில் அஃதென் தந்தை யன்பே. அஃதென்னை முன்னேற்றவும் செய்தது, வீழ்த்தவும் செய்தது. இன்றைய விழாவணியின் மகிழ்ச்சி நெகிழ்ச்சி என்னை நெட்டித் தள்ளி இவ்வாறு தந்தை மடிமீதுவிடுத்தது. ஒரு முறை வானத்தை அண்ணுந்து பார்த்தேன். என் மூதாதையர் வானத்தினின்றும் என்மீது துயரக் கண்ணீர் பொழிகின்றனர்போல உணர்ந்தேன். வெண்பட்டொளியின் தூய்மையே போலப் புகழ்வாய்ந்த மறையோதியவர்களின் மரபு எங்கே! இழிவென்னும் கடலில் முழுகிய நானெங்கே! 'ஏ! அன்னை நிலமே! நீ வெடிபடுக! அங்கே உன் வயிற்றுக்குள் எனக்குப் புகலிடம் அளிப்பாயாக!'

திடீரென உள்ளத்தில் ஒரெண்ணம் தோன்றியது. கிருஷ்ண வர்த்தனனுக்குப் பிள்ளைப்பேறு உண்டானதைப் பாராட்டி வாழ்த் தினுல் என்ன? வாழ்த்து வழங்குதல் அந்தணன் தொழிலுங் கடமையுமாகும். (திட்டப்படி நான் எதையும் செய்ததில்லை. இதனுலேயே இதுவரை எந்நூலையும் முடிவுவரை பயின்றதில்லை. ஆனுல் துணிவுகொள்ள நேரம் பிடித்ததில்லை.) இவ்வெண்ணம் தோன்றியதும் அரண்மனைக்குப்போக முடிவு செய்தேன். உள்ளங்குளிர நீராடினேன். உடம்பெங்கும் வெண்ணீறு பூசினேன். வெண்மலர் மாலை யணிந்து கொண்டேன். வெண் பட்டாடைகள் இரண்டணிந்தேன். இதுவே என் விருப்பமான ஆடை.[1] சிவபெருமானைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் போற்றிப் பணிந்து புறப்பட்டேன். மாலைநேரம் அணுகிக் கொண்டிருந்தது. கதிரவன் மணிக்கதிர்கள், நிலப்பரப்பினை விடுத்து மரவுச்சிகளில் ஏறிக்கொண்டன. அவ்விடத்தையும் விரைவில் விடுத்து மேற்கு மலையின் முடிமீது அமர்ந்தன. பின்னர், பொழுது சாய வெண்ணிலவும் பரவத் தொடங்கிற்று.

---

[1] ஹர்ஷ சரிதம், இரண்டாம் உயிர்ப்பு 40 பக்கம்.

அன்று வளர்பிறையின் பதின்மூன்றும் நாள். மயிர்பொடிக்க மகிழ்ந்தவனுய்க் கிருஷ்ணவர்த்தனன் இல்லம் நோக்கி விரைந் தேன். இந்நாள் அவன் என்னைக் காண உடன்படுவானு? இல்லையா என்று நான் நினைத்துப் பார்க்கவில்லை. இன்றென் உள்ளத்தில் அவாவலைகள் பொங்கிக் கிளர்ந்தன. இன்றே என் உள்ளத்தழுக்குகள் கழுவப்பெற்றன என்ற எண்ணம் பொங்கவே உள்ளமும் உடலும் பொறைநீங்கப் பெற்றனபோலக் காணப் பெற்றன. காமுகன் என்ற கெட்ட பெயரை இனி முற்றிலுமாக அகற்றிவிடலாம் என்ற நம்பிக்கை எழுந்தது. ‘இன்று குமாரன் கிருஷ்ணவர்த்தனன் நட்பைப் பெறுவேன்; பின்னர், பத்து நாட்களில் மன்னர் மன்னவன் அருளுக்குரியவனுகவும் திகழ் வேன். அதன்பின் எனதில்லம் வேள்விப்புகையால் கவியப் பெறும். மீண்டும் எனதில்லத்தே கிளிகளும் நாகணவாய்களும் மறைகளை மிழற்றி ஆங்கு வழிப்போவாரை மகிழ்விக்கும். இனி நான் வாத்தியாயன மரபின் கறையெனக் கருதப்பெறமாட்டேன்’ என வானக்கோட்டைகள் கட்டியவாறு நடந்தேன்.

ஆனல் எனதூழ்வினை ஏதோ தெரியாத முள்ளில் மாட்டிக் கொண்டு இருந்தது, என்பதனை நான் உணரவில்லை. விரும்பி யது நிகழவில்லை, நடக்கவேண்டியதே நடந்துவிட்டது. இப் பொழுது நானெரு நிகழ்ச்சியை விரித்துரைக்க இருக்கின்றேன்; அதை இன்று நினைத்தாலும் அச்சத்தாலும், ஐயத்தாலும் நெஞ்சம் படபடக்கின்றது. ஒரு பொருளினின்றும் தப்பித்துக் கொள்ள இத்துணையும் முயன்றேன்; ஆனல் அதே பொருளில் போய் மாட்டிக்கொண்டேன். ஊழை யாவரே மாற்றவல்லார்? ஊழென்னும் வலிய எழுதுகோலால் எழுதிய எழுத்தை யார்தான் அழிக்க முடியும்? காணுதற்கரிய ஊழாகிய கடலை வாரி இறைத்து யார்தான் தீர்க்க முடியும்?

## உயிர்ப்பு இரண்டு

காரெனக் கடிது சென்றேன். எதிர்கால இன்பக் கனவுகள் என்ற ஆழ்கடலில் மூழ்கி எழுபவன் அக்கம்பக்கம் முன்னும் பின்னும் காண முடியுமா? ஒருவாறுகக் கண்மூடிச் சென்று கொண்டிருந்தேன். இதே நேரம் ஒரு மெல்லிய இனிய குரலைக் கேட்டேன். "பட்ட! ஓ பட்ட! இங்கே பார்! என்னைத் தெரியுமா உனக்கு?" இக்குரல் கேட்டுத் திடுக்கிட்டேன். நெடுந்தொலை வில் இருக்கும் தாணேசர் புரியில் என்னைத் தெரிந்தவர் யார்? ஓடுங் குதிரையைக் கடிவாளக் கயிறு தடுத்து நிறுத்துவதென எனது நினைவொழுக்கினை இக்குரல் தடுத்து நிறுத்தியது. திரும்பிப் பார்த்தேன். ஓரிளம் பெண், கழிபேரழகி அல்லளாயி னும் கண்கவரும் இளமை பொலிபவள், ஒருத்தியின் குரல் என்னை அழைத்துக் கொண்டிருந்தது. அவள் முகத்தில் இளமை ஒளி ததும்பிற்று; எனினும் புகை கக்கும் விளக்குப் போல அவள் முகத்தின் இளவொளி மங்கிக் காணப்பெற்றது. அவள் கண்ணொளி மாலைக் காலத்தே மைவண்ணங் கலந்த மங்கிய சிற்றொளிபோல ஒளிர்ந்தது. அவள் இரு கண்களின் ஓரங்களிலே தெளிவாகக் காணும் மை வரிகள் அக்கண்ணொளி யைத் தம்முள் அமிழ்த்திவிட முடியவில்லை. அவள் வெற்றிலைச் சுருளை விற்பதோ குறைவு; ஆனால் புன்முறுவலை வழங்குவதோ மிகுதி என நினைத்தேன். மறந்தனவாகிய பழையனவற்றை உடனே அறியும் வல்லமையுடையேன் எனும் செருக்கு எனக்கு மிகவுண்டு. சிரிக்கவைக்கும் அழுகை—அழவைக்கும் சிரிப்பு— யாவற்றையும் உணரும் ஊற்றம் எனக்கு உண்டு எனப் பெரு மிதம் கொண்டவன் நான். ஆனால் இப்பெண்ணின் முறுவலிப்பு அறிந்திலேன். அஃது முற்றிலும் வேறுவகையாயிருந்தது. அதனில் கவர்ச்சி இருந்தது; ஆனால் பற்றில்லை. அன்பு அலர்ந்தது; ஆனால் காமக் கிளர்ச்சி இல்லை. அவளது கடையை நோக்கி என்னையும் அறியாமலேயே இழுக்கப் பெற்றேன். யாரெனக் கண்டு கொள்ள முயன்றேன். உடனே "பட்ட!

நீயுமா என்னைக் கண்டுகொள்ள முடியவில்லை?'' 'ஓ! நிபுணிகை!' வெறிகொண்டவன்போல் மயங்கினன் போல் மரமென நின்றுவிட்டேன். பின்னர் உடனே கூச்சலிட்டேன்: 'நிவுனியா! நிவுனியா!' வடமொழி 'நிபுணிகா'வின் பாகதம் நிவுனியா ஆகும். எனக்குப் பாகத நிவுனியாவே மிகவும் விருப்பம். நிபுணிகை கண்களால் என்னை அதட்டிக் கூறினாள்: ''கூச்சலிடாதே, அமைதியாகப் பேசு.'' பின்னர் ஒரு முக்காலியை என்னருகே நகர்த்தி நவின்றாள்: '' அமர்க, வெற்றிலை போட்டுக் கொள்க. உன் நலன்களை அறிய ஆவலுடையயேன்.'' முக்காலி மீதமர்ந்தேன்.

நிபுணிகையைப் பற்றிய அறிமுகம் சுருக்கமாகத் தருகின்றேன். தீண்டாதாரென முன்னே கருதப்பெற்ற மக்களில் கடைசி மகள் ஆக அவளிருக்கலாம். அம்மக்களுக்குக் குப்தபெரு மன்னர்களின் கீழ் ஊழிய நற்பேறு வாய்த்தது. அரசவூழியம் பெற்றமையால் அம் மக்களின், சமூகநிலை உயர்ந்தது. அவர்கள் இன்று தம்மைத் தூய வணிகர் இனத்தைச் சார்ந்தவரெனப் மதிக்கின்றனர். அந்தணர் அரசர் வகுத்த சமூக நடைமுறை வழிகளைப் பின்பற்றத் தொடங்கினர். அவரிடையே கைம்பெண் மறுமணம் அண்மையில் நின்றுவிட்டது. தானியம் வறுக்கும் காந்தவிக் வணிகன் நிலையில் இருந்தும், மாவாணிகன் நிலைக்குயர்ந்து விட்ட ஒருவனொடும் நிபுணிகையின் திருமணம் நடைபெற்றது. திருமணம் ஆன ஓராண்டுக்குள் அவள் கைம்மை அடைந்தாள். கொழுநன் இறந்ததும் அவளுக்கு இன்பதுன்பம் ஏற்பட்டிருந்ததோ அறியேன். இல்லம் விடுத்தோடிவிட்டாள். தனது முன் வரலாற்றில் இவ்வளவே என்னிடம் கூறினாள். அவளது பின் வரலாற்றின் பெரும்பகுதி நான் அறிந்ததுதான். நான் உச்சயினியில் இருந்தபொழுதே அவள் முதன்முதல் என்னைக் கண்டாள். ஆங்கு எனது தலைமையில் ஒரு நாடகக்குழு ஏற்பட்டிருந்தது. அவள் அக்குழுவில் சேர விரும்பினாள். அவளைச் சேர்த்துக்கொள்ள உடன்பட்டேன். பேரழகி அல்ல என முன்னரே சொன்னேன். அவளது உடல்நிறம் கருநெய்தல் போன்றிருந்தது. ஆனால் அவளது அழகுச் செல்வம் கண்களிலும் விரல்களிலும் சிறந்து திரண்டிருந்தது. மாதரது விரலழகை மிகச் சிறப்பாகக் கொள்பவன் நான். தொழுகையில் கைகூப்புதலுக்கும், பதாகை முத்திரைக்கும் ஒரு நடிகைக்கு மெல்லிய சுறுசுறுப்பான விரல்கள் இன்றியாமையாதன. அதனாலேயே அவளை நாடகக் குழுவில் சேர்த்துக் கொண்டேன். எனது நாடகக்

குழுவில் ஆண்களினும் பெண்களே எண்ணில் மிக்கு மகிழ்ச்சி யோடும் இருந்தனர். எனதிளமையில் இருந்தே மாதரை மதிக் கும் பண்பு பெற்றவன். உறுதியற்ற மாதருள்ளத்திலும் வீழ்ச்சி யுற்ற மாதருள்ளத்திலும் ஒருவகையான கடவுளியல்பு உண்டு என்பதைப் பலர் மறந்துவிடுகின்றனர். ஆனால் நான் மறக்க வில்லை. மங்கையின் உடம்பு கடவுள் மன்றம்போன்று தூய்மை வாய்ந்தது என்று மதித்து வந்தேன். மாதரைப் பற்றிப் பிறர் கூறும் இழிசொற்களையும் பழிசொற்களையும் நான் பொறுப்ப தில்லை. நாடக மாதர் விருப்பத்திற் கெதிராக எந்த ஆடவனும் பேசக்கூடாதெனக் கண்டிப்பான விதியை அமைத்து வைத் திருந்தேன். 'பாணபட்டனின் நடிகைகள் என்றுங் கட்டுப்பாட் டிற்குள், ஆடவர் அணுகாத இல்லத்திற்குள் உறைகின்றனர்' என்ற நற்செய்தி பொதுமக்களிடையே பரவி இருந்தது. இதன் விளைவு நல்லதாகவே இருந்தது. பொதுமக்கள் எனது நாடகக் குழுவை விரும்பினர். நிபுணிகையின் விருப்பப்படியே அவளை நாடக நடிப்பில் படிப்படியாக ஈடுபடுத்தலானேன்.

ஒருநாள் உச்சயினியில் நான் இயற்றிய நாடகமொன்று நடிக்கப் பெறவிருந்தது. பரமபட்டாரகர் நாடகத்திற் கெழுந் தருளியிருந்தார். ஆற்றலையெல்லாம் பயன்படுத்தி நாடக ஏற் பாடுகளைச் செய்திருந்தேன். ஒவ்வொரு நாடகப் பாத்திரமும் திறம்பட நடிக்க வேண்டுமென ஊக்க மூட்டினேன். மிக்க ஆடம்பரத்தோடும் நாடகம் நிகழவேண்டுமென மனத்திற்குள்ளே விரும்பினேன். அங்ஙனமே நடைபெற்றது. கதிரவன் மறைந்த ஒரு யாமம் ஆன பின்னர் நாடகம் பார்ப்போர் வந்து குழுமினர். நகரப் பெருமக்கள் தத்தம் இருக்கையில் அமர்ந் திருந்தனர். முரசு முழங்கிற்று. நானும் தொடக்க வினைகளை அணிபெற நடத்தி வைத்தேன். இசைவல்லுநரும் இசைக்கருவி வல்லுநரும் தத்தம் இடங்களில் அமர்ந்து கொண்டனர். நடிகைகளின் சிலம்பொலியுடன் யாழ், குழல், முழவம், மிருதங்கம் இன்ன பிறகருவிகளும் ஒலிக்கத் தொடங்கின. தொடக்கவினையாற்ற மேடைமீது நான் சென்றபோது பெருமக் களின் ஊக்கத்தை நோக்கி அளவிலாத மகிழ்ச்சியுற்றேன். எனது அவிநயம் வெற்றியுற்றது. திரையின் பின்னாகச் சென் றேன். நிபுணிகை கையில் மலர்மாலை ஏந்தியவளாய்க் காத்திருந் தாள். எனது குறியுணர்ந்து முரசுமீது ஒரு கொட்டுக் கொட்டப் பெற்றது. தேவதைகளுக்கு மலர்க்கொடை வழங்கக் கைகூப்பிய வாறு மேடைக்குள் நுழைந்தாள். நான் திரைமறைவில் இருந்து

கொண்டு அவளது அழகிய அவிநயங்கண்டு சுவைத்தவாறிருந்தேன். யாழ், குழல், முழவம், வெண்கலத் தாளம் முதலியன முழங்கிக்கொண்டிருந்தன; அவற்றினது ஓசை நிபுணிகையது சிலம்பொலியைச் சிறப்பித்தது; இனிமை மிகச் செய்தது. திடீரென இசைக் கருவிகளின் ஒலி நின்றுவிட்டது. நிபுணிகையின் இன்னிசை தொடங்கிற்று. இன்று நிபுணிகையின் ஒப்பற்ற திறனைக் கண்டு வியப்புற்றேன். அவளது பாட்டு நின்றதும் கருவிகள் இன்னொலியும் அவளது சிலம்பொலியும் இயைந்து கேட்கப் பெற்றன. அழகிய அவிநயத்தோடும் கடவுளர்களுக்கு மலர்க்கொடை வழங்கினாள். பின்னர் அழகு விளங்கத் திரையைக் கடந்து வந்தாள்.

நொடிப்பொழுதுவரை உள்ளம் என்னும் கடலில் ஒரு புயல் கிளர்ந்து எழுந்து பின் அமைதியுற்றது. என்றும் என்னை என் பிடிக்குள் வைத்திருப்பதில் வல்லவன் நான்; இதுபற்றிப் பெருமிதமும் கொள்வதுண்டு. அன்பு கனிந்த குரலில் அவளை 'நிவுனியா'' என அழைத்தேன். அவள் சடக்கென ஏன் எதிரே நின்று விட்டாள். தேடி முயன்ற பின்னரே காணப்பெறும் இடைமீது அவளது இடது கை இருந்தது. பொன்வளை கழன்று விழுந்தது. தளர்ந்த கொடிபோல அவளது வலது கை அசைந்து கொண்டிருந்தது. அவளது பொன்னுடல் என்னும் வல்லி எல்லையில்லாக் கவினொடும் வளைந்து காட்சியளித்தது. முகமெனும் நிலவுவட்டம் வேர்வைத் துளி நிரம்பி இருந்தது. அப்போது எனக்கு மாளவிகாக்கினிமித்திரம் எனும் நாடகத்தில் மாளவிகை பற்றிய நினைவு வந்தது. நான் புன்னகை புரிந்தவனாய்க் காளிதாசரின் சுலோகத்தைச் சொன்னேன்.[1]

நிபுணிகைக்கு வடமொழி தெரியாது. இச் சுலோகம் கேட்டு அவள் என்ன நினைத்தாளோ எப்படி அறிவேன்? அவள் இதழ்களில் மெல்லிய முறுவலிப்பு அரும்பியது. சில நொடிவரை

---

[1] வாமம் ஸந்திஸ்திமித வலயம் ந்யஸ்த ஹஸ்தம் நிதம்பே
க்ருத்வா ஸ்யாமா-விடபி-ஸத்ருஸம் ஸ்ரஸ்த முக்தம் த்விதீயம்
பாதாங்குஷ்டா லுலித குஸுமே குட்டிமே பாதிதாக்ஷம்
ந்ருத்யா தஸ்யா: ஸ்திதமதிதராம் காந்தம்ருத்வாயதாக்ஷம்.

இதன் பொருள் :—பரந்த கண்ணினள் தனது இடது கையை இடைமீது வைத்திருந்தாள். அவளது வலதுகை சோமக்கொடிபோல் அசைந்தாடிய வண்ணம் இருந்தது. அவள் அளித்த ஒரு மலர் கீழே தளத்தில் வீழ அவள் அதனைக் கால் கட்டைவிரல் கொண்டு நசுக்கிக் கொண்டிருக்கும் காட்சி மிகமிக மனங்கவரும் அழகிய அவிநயமாகும்.

அவள் கண்கள் கீழ்நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தன. தளர்ந்திருந்த கருங்குழலில் இருந்தும் ஒரு மல்லி மலர் கீழே விழுந்தது. அம்மலர் தான் செய்த குற்றத்திற்குத் தக்க தண்டனையை உடனே அடைந்தது; அவளது கால் கட்டைவிரல் அதனை இங்குமங்கும் தள்ளி நசுக்கிக் கொண்டிருந்தது. காளிதாசர் வருணித்த மாளவிகை வடிவத் தோற்றம் இதுவரை நிபுணிகையில் வராமல் இருந்தது; இப்போது வந்துவிட்டது. ஆதலின் 'கக்கட கக்கட' வெனச் சிரித்தேன். என் சிரிப்பினைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களில் நீர் ததும்பிற்று. மெதுவாக என்னை விட்டகன்ருள். என் சிரிப்பை அவளால் பொறுக்க முடியவில்லையென உணர்ந்தேன். நான் வேறு வேலையில் ஈடுபட்டிருந்தேன். நாடகம் தொடங்கி விமரிசையாக நடைபெற்றது. நான் அன்று எல்லையற்ற மகிழ்ச்சி யுற்றிருந்தேன். பட்டாரகர் முகத்தில் மகிழ்ச்சிக்குறி கண்டேன். அவரிடமிருந்தும் தக்க பரிசு பெறுவேன் என நினைத்தேன். காட்சியைக் காண்போர் கரை காண்பரிய மகிழ்ச்சியொடும் பாராட்டினர். நாடகம் இனிது முடிந்தது. மறுநாள் தமது சபையில் காட்சியருள்வதாகக் கூறிப் பட்டாரகர் போனர். நிபுணிகைக்கு நல்ல பரிசு அளிக்கவேண்டுமென நினைத்துக்கொண்டிருந்த நொடியிலேயே, 'நிபுணிகையை நாடகக் குழுவினிடையே காணவில்லை' என்று ஒருவன் வந்து செய்தி கூறினன். இரவு முழுவதும் இடிகேட்ட நாகம்போல் நடுங்கினேன். அவளைத் தேடினேம். நான்கு நாட்களாகத் தேடினேம், தேடினேம். அவளைக் காணவில்லை. பட்டாரகரது சபைக்குப் போகவில்லை. அவள் நனைந்த கண்கள் என்னுள்ளத்தை அறுத்தன. எனது தீய சிரிப்பை நினைத்து நினைத்துக் காலமின்றி மலர்ந்த மலர்போல வாடினேன். ஐந்தாம் நாளே நாடகக் குழுவைக் கலைத்தேன். நானெழுதிய நாடகங்களைச் சிப்பிரையாற்று அலைகளுக்கு வழங்கிவிட்டேன். அன்றிருந்து ஆறு ஆண்டுகளாக நாடகத் தொழிலையே கைவிட்டேன். இன்று அரச சபையில் பரிசில் பெறும் பொருட்டுப் போய்க் கொண்டிருக்கும்பொழுது அவளே, நிபுணிகையே என் முன்னர் காட்சியளித்தாள். அன்று அவள் காட்சி பெருததால் தடைகள் ஏற்பட்டன. இன்று அவளது காட்சியே தடையுண்டாக்குமா? ஊழிற் பெருவலி யாவுள?

சிறிது நேரம்வரை ஒன்றும் பேசவில்லை. இமைகொட்டாது அவளைப் பார்த்த வண்ணம் இருந்தேன். வெற்றிலைச் சுருள் மடித்து அடுக்கிக் கொண்டிருந்த அவள் உள்ளத்தில் ஏதோ

குழப்பப்பேரலை கிளர்ந்து கொண்டிருந்தது என்று எவனும் அறிந்துகொள்வான். நெடுநாளாக வெற்றிலைச்சுருள் மடித்து வரும் அவள் தளர்ந்த விரல்களைக் கண்டு இதுவரை உற்றிராத மகிழ்ச்சியுற்றேன். இதழ்களில் இன்முறுவலும் கண்களில் கலுழும் நீரும் பொலிந்தன. இருவரும் பேசாமல் இருந்தோம். ஒரு நாழிகை பின்னர் அவள் நிமிர்ந்து பார்த்தாள். கண்ணீர்ப் பொழிவு நிற்கவில்லை. கண்ணீர் பொழிந்தவாறிருந்தது. நான் பேச முடியாது பார்த்தவாறிருந்தேன். முடிவில் கூச்சலிட்டேன். "நிவுணியா! அழாதே!" எனது சொல் தழுதழுத்திருந்தது. அவள் விக்கிவிக்கி அழத் தொடங்கினாள். அவள் கண்ணைத் துடைக்க விரைந்தெழுந்தேன். அவள் உடனே என் கருத் துணர்ந்து கண்டிக்கும் குரலில் சொல்லத் தொடங்கினாள்: "சீச்சீ! என்ன செய்ய முற்பட்டாய்? கடைத்தெருவில் இருக்கி றோம். நீ காணவில்லை?" உறுதியொடும் உரைத்தேன்: "எங் கிருந்தாலென்ன, நான் பொருட்படுத்தப் போவதில்லை; உன்னை இனி இவ்வாறு அழவிடமாட்டேன். கொடிய ஊழினால் தாக்கப் பெற்றவளே! நீ ஏன் என்னைவிட்டு ஓடிப்போனாய்?" அவள் மீண்டும் கடைக்கண்ணால் அதட்டிச் சொன்னாள்: "வெற்றிலை போட்டுக்கொள்." இப்போதவள் குரல் இயல்பாகிவிட்டது. நானும் வெற்றிலைச்சுருள் ஒன்று வாங்கிக்கொண்டேன்.

போகவேண்டிய இடத்திற்குப் போக முடியவில்லை. தீவினை யால் அல்லலுற்ற இப்பெண்ணின் இன்பதுன்பங்களை அறியா முன்னம் எழமாட்டேன் என முடிவு செய்தேன். பன்னாட் களுக்கு முன்னர் முன்பின்பாராது சிரித்து வருத்தத்தைத் தூண் டியதற்குக் கழுவாய் செய்ய வாய்ப்பு இன்று கிடைத்தது. துன்ப மூட்டும் சிரிப்பினைச் சிரித்ததால் அது இவள் உள்ளத்தில் எத் தகைய சிறிய புண்ணைப் பெரியதாக்கிவிட்டதோ அறியேன். ஆறு ஆண்டுகளாக இவள் எங்கெங்கு வழியறியாது அலைந் தனளோ? கொடிய ஊழென்னும் வெள்ளத்தில் மூழ்கித் திகைத் தனளோ? இவற்றை யறியாமல் பாணபட்டன், கிளம்பமாட்டேன். அனைவர்பாலும் இரக்கம் கொள்ளும் பண்பே என்னை நாடோடி யாக்கிவிட்டது. குற்றம் பொருந்திய நகைப்பினால் முன்னே என்னுள்ளம் பிளந்தது. கண்ணீர் பொழிந்தாகிலும் அதனைத் தணியச் செய்யவேண்டும். இங்குள்ள போலி ஒழுக்கத்தினர் நிபுணிகையின் நடத்தை சரியல்ல என்பர்; உள்ளத் தூய்மையும் உடல் தூய்மையும் இருப்பினும் கீழினத்தவள் கீழ்மையையே புரிவாள் என்ற தவறான எண்ணங்கொண்டவர்கள் அவர்கள்.

இவளது வெற்றிலைக் கடையில் அமர்வதே மைசெறிந்த அறையில் அமர்வதற்கு ஒப்பாகும் என்பதை அறிவேன். ஆனால் என்னினும் நிபுணிகையே காப்பாற்றுதற்குரியவள். மிகுதிமதிப்பிற்குரியவள். மாதர் உடம்பைக் கடவுள் கோயிலாக மதித்து வந்திருக்கின்றேன். பொதுமக்கள் என்னைத் தூற்றுவார்கள் என்று அஞ்சிக் கோயிலாகிய நிபுணிகையின் உடம்பு சேற்றில் புதைந்திருக்க விடுத்து அப்பால் போக எனதுள்ளம் ஒருகாலும் ஒருப்படாது. மீண்டும் கூறினேன்: "நிவுனியா! ஏன் ஓடி வந்து விட்டாய்? இதுவரை எங்கு உறைந்தாய்? என்ன செய்து கொண்டிருந்தாய்? துன்பநிலையில் உன்னைக் காண்கின்றேன். உன்னைத் துயரில் மூழ்கவிட்டுச் செல்ல இயல்கிலேன். எதனால் வெகுண்டு என்னைவிட்டுப் பிரிந்தனை? ஆறு ஆண்டுகளாக நான் உன்னைத் தேடி வருந்தியவாறே உள்ளேன். உன் துயரத்திற்கெல்லாம் யானே வேர் என நினைக்கின்றேன். ஒருமுறை சொல்லுக இந்த என் கருத்துத் தவறென்று. குற்றமற்றவனா நான்? சொல் நிவுனியா, சொல்."

நெட்டுயிர்ப்போடும் நிபுணிகை நவின்றாள்: "ஆம் பட்ட, நான் ஓடிப்போனதற்கு நீயே காரணம்; ஆனால் குற்றம் உன்னுடையதன்று, என்னுடையதே. உன்மீது தவறாகக் காதல் பூண்டேன். நாடகம் நடந்த நள்ளிரவில் எனக்கு வெற்றி உறுதி என ஒரு நொடி நம்பினேன்; ஆனால் மற்ற நொடியிலேயே என் நம்பிக்கையைத் தூளாக்கிவிட்டனை, அன்ப! நீ பெண்ணுடம்பை இறைவன் கோயில்போல் தூயது எனக் கூறிப் பெருமிதம் கொண்டவன். ஆனால் அக் கோயில் எலும்பு சதைகளான் ஆக்கப்பெற்றது; செங்கல் பாறைக்கல் மண் சுண்ணும்புக்காரை இவற்றான் அன்று என்று ஒரு நொடியேனும் நீ நினைத்தாயில்லை. எனக்குரியன யாவற்றையும் நீ யேற்பாய் எனக் கருதி உனக்கு வழங்க நான் நினைத்த நேரத்திலே என் நம்பிக்கை யாவற்றையும் தூசியில் வீசியெறிந்தனை. நீ ஈரமற்றவன்; பற்றுச் சிறிதும் இல்லாதவன்; வெறும் பாறைத்துண்டு. உன்னுள்ளே மனிதத் தன்மையுமில்லை, விலங்கின் தன்மையுமில்லை. உயிரற்ற அசைவற்ற பிண்டந்தான் உள்ளது என அன்று தெளிவாயிற்று. ஆதலின் நான் அங்குத் தங்க உள்ளங்கொள்ளவில்லை. பிறகு பல இன்னல்களைப் பொறுத்தேன்; எனினும் அவ்விரவின் துயரம் போன்ற தொன்றை இதுவரை நான் துய்க்கவில்லை. ஆறு ஆண்டுகளாகப் பற்றுக்கோடற்றுத் திரிந்து வந்தேன். எனது ஆவல், கடவுள் தொழுகையாக மாறிவிட்டது. பட்ட! என் குரு

நீ! நீ எனக்கு மாதர் அறத்தை அறிவுறுத்திஞய். உனது சடத்தன்மையே நன்மையானதென்று என் வாழ்க்கையின் கொடிய அனுபவத்திஞல் அறிந்தேன். கொடிய விஜனயினேன், உன் அன்பை—நீ அளித்த புகலிடத்தைவிட்டு ஓடிப்போனேன்; தீவிஜனயேன் வாழ்க்கையில் நிகழ்ந்தனவற்றை அறிவதில் யாது பயன்? இப்போது வெற்றிலைச்சுருள் விற்று வருகின்றேன். மௌக்கரிக் குறுமன்னன் அரண்மனைக்குள் வெற்றிலைச்சுருள் சேர்ப்பிக்கிறேன். இப்போது எனக்கு யாதொரு துயரமுமில்லை. நீ என்னைப் பற்றிய கவலையை விடு. போகவேண்டிய இடத்திற்குப் போவாயாக. இந்நகரில் நீ உள்ளவரை உன் காட்சியை அவ்வப்போது எனக்கருள்வாயாக. ஆஞல் இக்கடையில் நெடு நேரம் தங்காதே. இங்கு வரும் பேதைகள் அரிவையர் அழகுடம்பை இறைவன் கோயில் என மதியாதவர்.'' இவ்வளவுங் கூறி அவள் என்னை நோக்கி ஒருமுறை முறுவலித்துப் பின் பேசாதிருந்தாள். அந்நோக்கில் ஓராவல் வேட்கை நிறைந்திருந்தது; ஆஞல் அதில் கழிவிரக்கமோ வருத்தமோ சிறிது மில்லை. மீண்டும் சற்று நேரங் கழித்துக் கூறிஞள்: ''பட்ட! எனக்குக் கழிவிரக்கமோ வருத்தமோ சிறிதும் இல்லை. இப்போதைய நிலையினும் வேறு சிறந்ததை நான் பெறமுடியாது. ஆஞல் நீயோ இதனினும் சிறந்த நிலையை எய்த முடியும். ஆதலின் நீ இங்குத் தங்காதே. கழிவிரக்கங் கொள்வேஞகில் இப்போது நானுறையும் நரகத்திலும் தங்க எனக்கிடம் கிடைக்காது. உனது நல்வழியில் விழிப்புடன் நீ செல்க. உனக்கெய்தும் சொர்க்கநிலையை நான் கற்பனையிலும் எய்த முடியாது. எனதுலகம் சிறிது. இவ்வுலகில் உன்னைப்போன்ற செம்மலுக்கு இடமே இல்லை.'' அவள் கண்கள் கீழே நோக்கத் தொடங்கின. சொல்லத் தகாதன சொல்லிவிட்டாள் எனும் பொருளைக் கீழ் நோக்கிய பார்வை தெரிவித்தது. அவள் விரல்கள் கதிரம் எனும் பிசின் நிறத்தை வெற்றிலையில் பூசுவதில் முனைந்திருந்தன.

நிபுணிகையின் கடைசி சொற்கள் என்னுள்ளத்தில் தைத்தன. கழிவிரக்கங்கொண்டால் அவள் இப்போது உறையும் இந்நரகத்திலும் இடம் பெற முடியாது. இனத்திலிருந்து விலகிய மாது நிபுணிகை ஆதலின் அவளது நல்லொழுக்கத்தினைச் சமூகம் மதிக்குமா? தீயொழுக்கமிருப்பின் கவனிக்கும். அவள் குழிந்த கண்களை மீண்டும் நோக்கினேன். நீர் ததும்பிற்று. சொன்னேன்: ''நிவுனியா; நீ பொய் சொல்லுகிருய். நீ

கழிவிரக்கத்தில் உருகிக்கொண்டிருக்கின்ருய். துன்பத்தில் அகப் பட்டுள்ளாய். புகலிடம் வேண்டுகின்ருய். இவ்விடமிருந்து நீ போகவேண்டாம் என உள்ளுக்குள்ளேயே நினைக்கின்ருய். நான் முன்னைய பண்பிலேயே இன்றும் உள்ளேன். உனக்குப் புகலி டம் தருகின்றேன். முழுவையமும் உன்னை என் புகலிடத்தி னின்றும் பிரிக்க முடியாது. இக்கடையை இப்போதே மூடி விடு. வேறிடத்தில் அமைதியாக வாழ்க. நீ சேற்றில் ஆழ்ந் திருக்க உன்னை விட்டுப் பிரியேன். என்பால் தகாத ஆவலை விட்டுவிட்டனை; உண்மையே, தக்கதே. கறைபடிந்த இந்த அரசத் தெருவை விட்டுவிடு. அந்தோ! உன் கண்கள் எப்படிக் குழிந்துள்ளன; நற்பேறற்றவளே! என்னிடம் ஏதோ மறைத் துள்ளாய்.'' இப்போது என் சொற்கள் அவள் உள்ளத்தில் தைத்துவிட்டன; கொடிய புண்ணுண்டாக்கிவிட்டன. விக்கி விக்கி அழலானுள். இருமூன்று ஆட்கள் வெற்றிலை வாங்குவோர் கடையை அணுகினர். உடனே நிபுணிகை தன்னைச் செம்மைப் படுத்திக் கொண்டு கடையை ஒரு நொடியில் சார்த்திவிட்டு என்னை உள்ளே வருமாறு குறித்து விட்டு உள்ளே சென்ருள். கடைக்குப் புறமுற்றத்தை அடைந்தேன். அதனருகே ஒரு துளவச்செடி இருந்தது. அதன் மருங்கே சிறியதொரு மேடை, அதன்மீது ஓரழகிய மாவராகப் படிமம் இருந்தது. அச்சிறிய படிமத்தை அமைத்தவன் ஒப்பற்ற ஒட்ப நூலானெனக் கண்டேன். மாவராகன் கோடுகளிடையே காப்பாற்றப்பெற்று அமர்ந்திருக்கும் நிலமடந்தையது முகத்தே மகிழ்ச்சியும் ஒளியும் பொழிவதைக் கண்டேன். கண்டதும் நம்பிக்கையூட்டும் பான்மையில் மாவராகனின் திருக்கைகள் பெருமிதத்தோடும் அதன் இடையில் அமைந்திருந்தன. கட்டுடைய தோட்சதைகள்; உடனே நினைத்தேன். மாவராகனே நிபுணிகையின் வழிபடு கடவுள். தனது பாதுகாப்பிற்கு அவனையே உறுதியோடும் நம்பி இருக்கின்ருள். ஒரு முறை அப்படிமத்தை வேட்கை நிறைந்த கண்களால் கண்டு தழுதழுத்த குரலால் விண்டு சிறு மனைக்குள் மணைமீது அமருமாறு என்னை வேண்டினுள். அமர்ந் தேன். என்னை ஒரு முறை பார்த்து வெளியேறி விரைவில் நீராடி மீண்டும், 'சற்றுப் பொறு' என்று கூறிப் புற்பாயலில் அமர்ந்து மாவராகனை வணங்கித் தழுதழுத்த குரலால் தொழுகைப் பாவைப் பாடினுள். கண்களில் நீர் பொழிந்தது. அதனுல் அவளது முன்ருனை நனைந்தது. இதனை இமையாது கண்டுகொண்டிருந்தேன். நிபுணிகை வாழ்க! மாவராகன்

வாழ்க! துளசி வாழ்க! இக்கெடு வினையேன் பாணபட்டனும் வாழ்க! ஒரு நொடியில் எனது செருக்கின் சிறுமைக்காகக் கழி விரக்கங் கொண்டேன். எத்தகையாளுக்குப் புகலிடம் தருவ தாகச் சொன்னேன், பெருமிதம் கொண்டேன்! அவளுக்கு மாவராகன் அருளிய புகலிடத்தின் முன்னர் நான் தரும் புகலிடம் எத்துணை நொய்யது; என் ஆண்மை, உயர்வு, பேரறிவு இவற்றைப் பற்றிய எனது செருக்கு இமைப்போதில் மண்ணோடு மண்ணாயிற்று. நிபுணிகையைப் புரிந்துகொள்வதில் எத்துணைத் தவறு செய்துவிட்டேன். அவளைப் பற்றிய மதிப்பீடும் தவறே. பத்தி நிறைந்த குரலில் தொழுகைப் பாட்டுப் பாடிக்கொண்டிருந் தாள். இமையாது பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது அவள் ஒரு தெய்விகத் தோற்றங்கொண்டிருந்தாள். நெடிய கண்களில் நீர் பொழிந்தது. மலர்ந்த தாமரையை யெள்ளும் மாவராகன் அடிகளைச் சேரத் துடிப்பனபோன்று தளர்ந்தலைந்த கருங்குழற் பகுதிகள் காணப்பெற்றன. நாடகக் குழுவின் நிபுணிகையா இவள்; விண்ணுலக மாதன்றோ! அழுக்கில் முழுகிய சிறிய உலகினின்றும் கிளம்பி வானுலகத்திற்குப் பறந்து விடுவாளோ? இவளது உள்ளத் தாமரையில் வீற்றிருக் கும் பேரன்பனும் மாவராகனை உள்ளங்கனிந்து தொழுதேன். முதற் காட்சியில் என திரக்கத்திற்குரியவள் இவள் எனக் கருதிப் பரந்தவுள்ளம் படைத்தவன் நான் எனப்பெருமிதம் கொண்டேன். அது எள்ளற்குரிய என் சிறுமைப்பாடே! எனது சிறுமைக்கு வருந்தினேன். என்னையே தூற்றினேன். இந்த நேரத்தில் அவள் எழுந்தாள். கூடவே அமைதியெனும் பொறையும் எழுந்தது போன்றிருந்தது. அவளது நடையில் ஒருவகையான கருத்துருக்கம் இருந்தது. கருத்துருகிய பத்தியே பெண் வடிவம் கொண்டதோ என்று தோன்றியது. அவள் முகத்தில் மீண்டு மொரு முறுவல்வரி தோன்றியது. முதன்முதல் இன்று அவளைக் கண்டபோது எத்துணைத் தவருன கருத்துக்கொண்டேன்; அருள் நிறைந்த திருமுகத்தை இரங்குதற்குரியதென நினைத் தேன். வந்து சற்று அமைதியாக அமர்ந்திருந்தாள். யானும் ஒரு சொல்லும் சொல்லவில்லை. சிறிது அமைதிக்குப்பின் அவள் கூறினாள்: "பட்ட, நீ உண்மையில் எனக்குத் துணைபுரிவாயா?"

"உனக்கேன் ஐயம் தோன்ற வேண்டும்? சொல்வழங்கிய பின் நிறைவேற்றாது விடுத்தேனா எப்பொழுதாவது?"

"எனக்கு உதவி செய்யும்பொழுது தகுதியற்றன செய்ய வேண்டியிருப்பின்?"

“பார், நிவுனியா, நீ மாவராகன் திருவடிகளைத் துணையாகப் பெற்றனை, புணையாகப் பெற்றனை. எத்துயர்க் கடலையும் கடந்து விடுவாய். எனவே மற்றவர் துணை உனக்கு வேண்டியதில்லை. எனினும் என்னை ஆழம் பார்க்கக் கூறினைபோலும். ஒன்று தெளிவாகக் கூறுகின்றேன். தகுதி தகுதியின்மை என வகை பிரிப்பதில் தயங்கும் மாந்தரைப் போலல்லாது அறிவின் பற்றுக் கோடு கொண்டு துணிபவன் நான். தனக்காகத் தீய அவா, தகாத நசை—அடிப்படையில் செய்வன யாவும் தகாதனவே. தீய அவாவினின்றும் தப்பியவாறு வந்துள்ளேன். இன்றே மாபெரும் துணிவுபூண்டேன். எத்தகைய வெற்றி வாய்க்குமோ அறியேன். தகாதனவற்றினின்றும் தப்பியதோடல்லாமல் தக்கன நிறைவேற்றுவதில் உயிரையும் பொருட்படுத்திய தில்லை. உனக்கு நான் துணையாக நிற்கும் அக்கடமை யாது? நீ என்னை அறிவாய். என்னைத் தீமையில் சொருகிவிடமாட்டாய் என்று நம்புகிறேன்.”

நிபுணிகை நகைத்து நவின்ருள்: “தப்பித்துக்கொள்ள வழி தேடுகின்ருய், தெரிகிறது; என்னைப் போன்றவளிடம் தகுதிக்குத் துணை நிற்கும் வாய்ப்பு இருக்கும் என நம்புகின்ருயா? நீ எளியவன்.” இம்முறை என்னுள்ளம் சற்று ஐயங் கொண்டது. எனினும் உறுதியுடன் உரைத்தேன்: “பணி என்ன, உடனே உரைப்பாயாக.”

நிபுணிகை இம்முறை உரக்க நகைத்து உரைத்தாள்: “கடவுள் கோயில் ஒன்றை விடுவிக்க வேண்டும்.”

“புலனுயிற்று; கடவுள் கோயில் என்ருல் மாது. இது தகாத செயலல்ல” எனச் சிரித்து மீண்டும் கூறித் தொடர்ந் தேன்: “உன்னை மாவராகன் காத்தருளினுர். உன்னைப் பற்றிய கவலை எனக்கில்லை. வேறு எந்தத் திருமாது கேட்டில் அகப்பட்டுள்ளனள்? சொல்; அவளை விடுதலை செய்யக் காத் திருக்கின்றேன்.” நிபுணிகை கூறினுள்: “பட்ட! இதுவரை நீ கண்ட மாதரைக் கடவுள் கோயிலெனக் கருதினுய்; அது வெறும் மனக்கோட்டையே. இன்று உண்மையான கடவுள் கோயிலை உனக்குக் காட்டுகிறேன். ஆனுல் மௌக்கரி அரண் மனைக்குள் என் தோழியாக நீ வரவேண்டும். சேற்றில் சிக்கிய சிறந்த கோயிலைக் கைகொடுத்துக் கரையேற்றவேண்டும். இன்றே அதற்கேற்ற வாய்ப்பு. மாவராகனே என் உண்மைத் துணைவன்; அவனே உன்னை என்னிடம் அனுப்பினுன். நீ என்னிடம் வராவிட்டாலும் இன்றே விடுதலை முயற்சியை நிறை

வேற்றி இருப்பேன். பட்ட! நீ இதைச் செய்வாயா ? அரக்கர் தம் மனையினின்றும் துன்பப்பட்டு வருந்தும் திருமகளைக் காப்பாற்றத் துணிவு கொள்வாயா ? சொல், இப்பொழுதே நான் புறப்பட்டாக வேண்டும். மாவராகன் இன்றே கட்டளை அருளி ஞன். சீதையைப் பாதுகாக்கும்போது சடாயுவைப் போன்று உயிரையும் பறிகொடுக்க நேரிடலாம் ; துணிவுண்டோ ?''

புன்னகை பூத்தேன் : "இதனைக் கட்டாயம் நான் செய்ய முடியும். இது செயற்கரிய செயலும் செயற்குரிய செயலுமாகும்.'' துறக்கம் சேர்ந்த என் தந்தையை ஒருமுறை உளமாரப் பணிந் தேன்: "தந்தையே! என்னைக் கடைத்தேற்றும் பணியில் இருந் தும் விலக நேர்ந்தது. வாய்ப்பு நேர்ந்தபோது அதனை நிறை வேற்றுவேன். இன்றே செயற்கரிய பணியாற்ற வாய்ப்பு நேர்ந்தது. இன்று துன்பில் சிக்கிய எந்தப் பாவையின் விடுதலை என்னும் வேள்வியில் நெய்யுணவாக அமைய உள் ளேனே அறியேன். இம்மாபெரும் பணியாற்றக் காப்புக்கட்டும் துணிவெனக்கு அருள்வீராக.'' இவ்விதம் தொழுது எழுந்து நிபுணிகையிடம் கூறினேன்: "நிபுனியா ! உடன்பாடே ; புனை தற்குப் புடவை முதலியன கொணர்க.''

## உயிர்ப்பு மூன்று

முற்றத்திற்கு வெளியே நிபுணிகை என்னை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். அவள் தோழியாக மாறு வேடம் புனைந்து கொண்டு வெளியேறி, அன்னத்தின் இறக்கைபோல வெண் ணிலவு குலவுதல் கண்டு உள்ளங்கரைகாணுத மகிழ்ச்சியுற்றேன். எனது வேடம் கண்டு நிபுணிகையும் மகிழ்ச்சியுற்ருள் ; ஏனெ னில் என்னிடம் முற்றிலும் பெண்மைத் தோற்றமே பொலிந்தது. முக்கண்ணன் தலைமுடியினின்றும் இழிந்த வானதி பொழிந்து கடலை நிரப்பும்போது இதைப்போன்றதோர் வெள்ளிய அழகு கெழுமி இருந்திருக்கும். நிலாவானது தரைமீது மிக்கநேரம் ஒளி செய்தவண்ணம் இருந்தது. ஏனெனில் வைகறையின் செம்மை இன்னும் வரவில்லை. இந்திரனது வெள்ளையானை வானதியில் முழுகி எழுந்ததும் அதன் நெற்றி இடத்துச் சிந்துரம் கழுவப்

பெற்றுத் தூயவெண்மை பொலியுமல்லவா? அதைப்போன்ற அழகையே அன்று தரைமீது நிலாவொளி கொண்டு விளங்கியது. எவனோ ஒரு மாபெரும் சிற்பி திரட்டிவைத்த சுண்ணத்திரட்சி கவிழ்ந்து கொட்டப் பெற்றதுபோல வானவெளியில் நிலவு அலர்ந்தது. எந்த நொடியிலும் உருண்டு ஆழ்ந்த உறக்கத்தில் வீழும் என்றெண்ணுமாறு விண்மீன்கள் மின்னின. மென்னடை பயிலும் மாலைக் காற்று வீட்டுப் பசுக்களின்மீது தனது வல்லமை யைக் காட்டியுள்ளது; ஏனெனில் காற்றுனது தொட்டதும் அவை உறக்க நிலை எய்தின. அசை போட்டுக்கொண்டிருந்த அவற் றின் தவடைகள் ஒய்வு கொண்டு தளர்ந்தன. நிலா நடுவே காணும் மான்மீது இரக்கங் கொண்டேன். தீவினையுழக்கும் அந்த மான் நீர் வேட்கையுற்று நிலாவை அமுதக்குளம் என்று கருதி முந்தி அருந்த அணுகிற்றுப்போலும்; அமுதச் சேற்றில் புதை யுண்டு அங்கேயே தங்கிக் கிடப்பதுபோலும்.[1] நானும் ஏதோ அமுதச்சேற்றில் அகப்பட்டுக்கொள்ளத்தான் போய்க் கொண்டி ருக்கின்றேனே அறியேன். இப்போது எண்ணுவதால் பய னில்லை. நிபுணிகையின் ஒரு குறிப்பினுல் அவள் தோழியாகி அவள் பின் சென்றுகொண்டிருந்தேன். மண்ணில் இருந்தும் உயர விசும்புவரை தவிர்க்கமுடியாததொரு துயரமயமான சடத் தன்மை பரவியிருந்ததெனக் காணப்பெற்றது. காரணம் அறி யேன். நிபுணிகை எனது பணியினைச் சுருங்கக் கூறினுள். அவள் தகுதியின்மை பற்றிக் கவலை கொள்ளவில்லை. அவளது பேச்சில் என்னுதவி தேவையில்லை என்பது பற்றிக் குறிக்க வில்லை. ஆனுல் இத்திட்டத்தின் தலைமைத் துணைவன் நானல்ல; மாவராகனே. நான் வெறும் கருவிமட்டுந்தான் என்பதனை உணர்ந்தேன். தன் கண்களில் ததும்பிய நீரால் தான்கொண்ட துணிவின் உண்மையை விளக்கினுள். மௌக்கரி மன்னர்களின் கடைசி அடையாளமாகச் சிறிய அரண்மனையுள்ளது. மன்னர் மன்னன் ஹர்ஷவர்த்தனன் தன் உடன்பிறந்தாளின் கணவன் நாட்டையும் தன் வெண்கொற்றக் குடையின்கீழ்க் கொண்டுவந்த நாள் முதற்கொண்டு ஹர்ஷதேவனின் உடன்பிறந்தாள் கணவன் தன் ஒரு தொலைவுறவினனுக மௌக்கரித் தவிசிற்கு உரிமை யாளன் இந் நகரைப் புகலிடமாகக் கொண்டான். இவ்விடத்தில் பொதுமக்கள் இன்னும் மௌக்கரி வழிவந்தவர்மீது பற்றுக் கொண்டுள்ளனர். மௌக்கரிகளின் உறவினன் சின்னுட்களாகத் தாணேசர்புரியில் குடி இருக்கின்றுன். அவன் சின்ன அரண்

[1] காதம்பரிமாலை வருணனை

மனையில் வாழ்ந்து வருகின்றான். அதனுள் தலைவியரில்லத்தி லேயே எண்ணற்கரிய திருவிளையாடல்கள் நடைபெற்றுள்ளன. நிபுணிகை சின்ன அரண்மனையது செல்வப் பெருமிதத்தைச் சற்று விரிவாக விளக்கியவாறு வந்தாள். கன்னோசியில் மௌக் கரி மரபின்மீது பெருங்குடி மக்கள் பற்றுக்கொண்டிருந்தனர். மதிநுட்பம் பொருந்திய ஹர்ஷதேவன் இச்செய்தியை அறிந்தி ருந்தான். இதனாலேயே தடையற்ற குற்றங்கள் மௌக்கரி மனை யில் நடைபெற்றபோதிலும் எதிர்விளைவு ஒன்றும் ஏற்படாமல் இருந்தது. பொதுமக்கள் அக்குறுமன்னனை மாமன்னன் என்று விளித்தனர். ஆனால் அவனுக்கு ஆட்சியுரிமையில்லை; செல்வ நுகர்ச்சிமட்டுமே வாய்த்திருந்தது. ஆங்குத் தகுதியற்ற பொறுப்பற்ற இன்ப வேட்கை பெருகிவிட்டது; ஒறுத்தற்குரிய தாகிவிட்டது. ஆனால் பொதுமக்கள் மௌக்கரி மரபின்மீது அன்புகொண்டிருந்ததால் ஹர்ஷதேவன் துணிவுடன் அக் குறு மன்னனை அடக்க முடியவில்லை. இதே மனைக்குள் ஒரு திங்க ளாகக் கற்பும் விழுமிய ஒழுக்கமும் கெழுமிய ஓரிளவரசி சிறை வைக்கப் பெற்றிருந்தாள். நிபுணிகை எனக்கிந்த வரலாற்றைச் சுருங்கக் கூறி வந்தபோதிலும் இளவரசியது வரலாற்றுப் பகுதி யைத் தொட்டதும் அவளுக்குத் சொல்லொணாத் துயரம் பொங் கிற்று; உள்ளம் படபடத்தாள். இளவரசியது ஒவ்வொரு செயலையும் விடாது கூறி வந்தாள்; "பட்ட! அவள் அசோக வனத்துச் சீதை; அவளை விடுதலை செய்து உனது வாழ்க்கை யைப் பொருளுடையதாக்குக." எனது வாழ்க்கை பயனடைய ஒரு பயனுடைய கருவியை விளக்கித் தந்தாள். அது ஒரு சிறு கத்தி, நஞ்சு தடவப்பெற்றது. அதனைச் சட்டைக்குள் எளிதில் மறைத்துவிடலாம். சற்றே முறுவல் பூத்து மொழிந்தாள். "இதனைப் பயன்படுத்தும் வாய்ப்பே இருக்காது. தற்காப்புக் காகக் கையில் வைத்திருப்பதால் தவறென்றுமில்லை." எவன் உயிரையும் வாங்கவோ எனதுயிரையும் வழங்கவோ தேவை யில்லை என்பதனை உணர்ந்தேன். எனில் அதனை வைத்திருப் பதில் ஊறில்லை. புன்னகையோடும் அவளைப் பார்த்தேன்; அவளும் என்னை நோக்கி முறுவலித்தாள். நாங்கள் இருவரும் பேசாமல் போய்க்கொண்டிருந்தோம். பெண் வேடத்தில் நான் சற்று மாறிவிட்டேன்போல உணர்ந்தேன்; ஏனெனில் இனந் தெரியாத ஓரச்சம் என்னை நின்று நின்று துன்புறுத்தியது; இறுகக் கட்டிய சட்டையின் கட்டு ஏதோ அறியவராத மாபெரும் கௌரவத்தைத் தடுக்கும் எந்திரமாக காட்சி அளித்தது. உள்

ளங்காலில் இருந்து உச்சிவரை ஆடையானது அழகுத்திருவை முழுவெளியுலகினின்றும் தடுத்துத் தனியாக வைத்ததுபோல வுள்ளது என்றும் காணப்பெற்றது. அவள் பின்னுகப் போய்க் கொண்டிருந்தேன்.

அரசத்தெரு அமைதியாக இருந்தது. தொலைவில் மக்கள் குழுமி இருந்ததால் ஓசை மட்டும் வந்துகொண்டிருந்தது. நிபுணிகை திரும்பி நகையரும்ப விளித்தாள்: "சுதட்சிணு!" திடுக்கிட்டேன்; எனது உண்மைப் பெயர் இன்று முதன் முதலாக நிபுணிகை வாயிலாக வெளிவந்தது. நானும் சிரித்து விளித்தேன்: "தோழீ!" எல்லையற்ற மகிழ்ச்சியால் தாமரை போல அவள் முகம் மலர்ந்தது. முகத்தில் பரவிய மகிழ்ச்சி மலர்ச்சிப் பொறையால் அவள் கழுத்து அழகாகச் சற்று வளைந் திருந்ததைக் கண்டேன். தழுதழுத்த குரலில் "நன்று நன்று! அவிநயம் உயர்தரத்தது" எனப் பாராட்டினுள். நான் நாணம் நண்ணினேனென நடந்து நகைத்தேன். இக்கலையில் நான் கை தேர்ந்தவன். பறப்பவள்போல நிபுணிகை விரைந்தாள். வழியில் மொழிந்தாள்: "சுதட்சிணு! இக்கூச்சல் காமவனத்தி னின்றும் வருகிறது. இன்று சித்திரைத் திங்கள் வளர்பிறை பதின்மூன்ரும் நாள். இன்று காமபூசை நாள். இன்று இள நங்கையர் நோன்பு நோற்றுக் காமனைப் போற்றித் தாம் விரும் பிய வரம் கேட்டிருப்பார்கள். கன்னேசியில் இக் காமவிழா பேரூக்கத்தோடும் கொண்டாடப் பெறுகிறது. இன்று காமவனத் தில் காரிகையார் மலரெடுத்து மாலை தொடுத்துக் குங்கும அபிர கப் பொடிகளான் பொட்டிட்டுப் புருச இலையில் தாம் விரும்பிய வரங்களை எழுதி மலரம்புக் கடவுள் அடிகளில் இட்டு இருப்பார் கள்.[1] இன்று மௌக்கரிமனையில் தேவியரில்லத்தே விழாவணி பெரிய அளவில் கொண்டாடப்பெறும். தேவியரில்லத்தழகிகள் காமவனத்தே சிலம்பு அணிந்த கால் கொண்டு மிதித்து அசோக மரத்தை முதன் மலர் அரும்பச் செய்யப் புறப்பட்டிருப்பார்கள். ஆங்குக் கள்தேறலும் இறைச்சியும் களிநடம் புரியும். பட்ட! இல்லை இல்லை, சுதட்சிணு! இன்று இளநங்கையர் மகிழும் மகிழ்ச்சி விழா. அந்த இளவரசியை விடுதலை செய்ய இதனினும் சிறந்த வாய்ப்பினைப் பெறமுடியாது. உனதுள்ளத்தில் சிறிது

---

[1] இது போன்றதோர் வருணனை பவபூதியின் மாலதீ - மாதவம் என்ற நூலில் உள்ளது.

நாணம் குடிகொண்டு இருப்பதாகக் காண்கின்றேன். இது தக்கதன்று தோழீ !''

உண்மையில் உள்ளத்தில் நாணமில்லை; என்னைக் கண்டு பிடித்துவிட்டால், என்ன செய்வது என்ற ஐயப்பாடே இருந்தது. மென்குரலில் சொன்னேன் : '' நாணம் நங்கையர்க்கு இயல்பான அணி தோழீ !'' சுவை துகர்ந்தவளாய் மறுமொழி கூறினாள் : '' இருக்கலாம், பொதுவாக மாதர் நாணநலத்தை நலிவித்தல் நல்லதன்று. ஆனால் இன்று நீ உள்ளச் சுணக்கமும் நாணமும் விட்டுவிடு ; ஏனெனில் இன்று இளநங்கையர்க்கு வெறி நிறைந்த இன்ப நாள்.'' உணர்ந்தேன். இங்கு நாணத்திற்கு மாறாக வெறியே தலைவிரித்தாடுகிறது. நிலா உலாவி உலாவி நடுவானத்தை அடைந்தது. எம்மருங்குமுள்ள இருளைத் துரத்தத் திங்கள் முனைந்தது. நாங்கள் மௌக்கரிமனையை அடைந்துவிட்டோம்.

அதனைச் சிற்றரசகுலம் என்று மக்கள் விளித்தனர் எனில் அதனில் ஒரு சிறு மாதரில்லம் இருக்குமென்று எண்ணினேன். அரண்மனை வாயிலை அணுகியதும் எனது கருத்துத் தவறென உணர்ந்தேன். முன்னிடத்தில் ஒரு பரந்த மரத்தோப்பு இருந்தது. அசோகு, நுரைபுன்கம், வேம்பு, வாகை முதலிய நிழல் தரு மரங்கள் அங்கே வளர்ந்திருந்தன. அம்மரங்களின் நெருங் கிய இலைப் பரப்பின்மீது நிலவு சிறந்து பொலிந்தது. வாயிலும், மாபெரும் கதவும், படை தாங்கிய வீரரும் இல்லாமல் இருந்திருப் பின் நிலவு பரவிய கங்குலில் இதனை மாபெருங்காடு என்றே எண்ணி இருப்பேன். வாயில் காப்போன் நிபுணிகையைப் புன்முறுவலோடு பார்த்தான். அவள் அவனுக்கு ஒரு வெற்றிலைச் சுருள் கொடுத்தவளாய்க் கூறினாள் : '' நாகா ! செய்தி ஏதேனும் உண்டோ!'' நாகன் திகைத்து நவின்றான்: ''ஒரே குழப்பந்தான், வேறென்ன ?'' இருவரும் உள்ளே நழுவிவிட்டோம். பூங்காவின் கொடிமனைவழி மிக அகலம். இருமருங்கிலும் மர வரிசை கொண்ட அவ்வழி இருட்டாக இருந்தது. சுற்றிச்சுற்றிச் சென்று தலைவியரில்லம் சார்ந்தோம். ஆங்கு வாயிலில் வாயிற் காப்பவள் அமர்ந்திருந்தாள். அவளது கையில் உருவிய வாளிருந்தது. ஆனால் காவல் மாது மிகுந்த உடல் வலிமை படைத்தவளல்லள். அவளைக் கண்டபோது, பாம்பினால் சுற்றப்பெற்ற ஒரு சந்தனக்கொம்பெனக் காட்சியளித்தாள். எனதுள்ளம் படபடத்தது. சற்று அணுகியதும் மறை வெளிப் பட்டது. அச்சம் விளைவிக்கும் புனைவு அவளது இயல்பான

மென்மைக்கு உயர்வைக்கொடுத்தது. கரியளாயினும் அவளிடம் கவர்ச்சியொளி ஒன்று மிளிர்ந்தது. நீலமணி உயிர்ப்படிமம் பெற்றதோ? கணுக்கால் வரை நீண்ட அங்கி அணிந்திருந்தாள். தலையில் செந்துகிலை அழகாகக் கட்டியிருந்தாள். அவளழகை இது சற்றுங் குறைக்கவில்லை. மாலைநேரத்திலே கதிரவன் செங்கதிர்களான் தழுவப்பெற்ற கருநெய்தற் காடுபோலப் பொலிவுற்றுள். வெள்ளிவெள்ளமாகிய நிலாக் கதிர்களான் செருகிய மல்லிகைமலர் கன்னங்களுக்கு ஒளிவழங்கின. அவள் உடம்பின் நீலநிறம் இன்னும் தெளிவாயிற்று. காவல் மகள் காதில் மலரடிகளில் பூசிய செம்பஞ்சுக்குழம்பு மிகுதொலைவிலேயே நன்றுகத் தெரிந்தது. மகிடாசுரனை வீழ்த்தி அவன் மார்பில் நடனமாடிய துர்க்கையே அச்சம் விளைவிக்கும் வாளேந்தி என்முன் வந்து காட்சியளிக் கின்றுளோ? அச்சமும் கவர்ச்சியும் உண்டாக்கும் அவளழகு எனக்கு அச்சத்திலும் மகிழ்ச்சியையே தூண்டியது. எனினும் அஞ்சியவன் போலத் தலைவகிடு மறைய மேலாடையை இழுத்துவிட்டுக்கொண்டு மருண்ட பார்வையோடும் நிபுணிகை யின் பின்னுல் நின்றுகொண்டேன். காவல்மாது குடித்திருந் தாள். முக்கண்ணப்பெருமான் நெற்றிக்கண் தீயால் சாம்பராகிய காமனின் உடற்புகையான் நிறமங்கிய இரதிதேவியை அவள் நினைவூட்டினுள். அவள் செங்கண்கடையும் சோம்பலால் சடத் தன்மை எய்திய புருவக் கொடியும் அவளது குடி வெறியைக் குறித்தன. தொடர்ச்சியும் ஒழுங்குமற்ற வகையில் நிபுணிகை யிடம் ஏதோ வினுவி வாளா இருந்தாள். பின்னர் அவளைவிட் டகன்று நாங்கள் இருவரும் தலைவியரில்லம் நோக்கிச் சென்றோம். ஆங்கும் சற்றுத் தொலைவுவரை நந்தியாவட்டம் பசியமலர் மரு தோன்றி சாதிமல்லி நவமல்லிகை முதலிய இன்மணச் செடிகளைக் கண்டேன். மணத்தால் மகிழமரவரிசை வெண்ஞெச்சி வரிசை சண்பக வரிசை எங்கெங்குள்ளன என்று உணர்ந்தேன். வெவ் வேறு வகை மணங்களின் கலப்பினுல் ஒருணர்ச்சி யுற்றெழ உள்ளங் கிளர்ந்தது. தொலைவிலிருந்தும் மிருதங்கம் சங்கு முதலிய கருவிகளின் ஓசை வந்துகொண்டிருந்தது. மாதர் களிப்பொடும் ஆடும் ஊஞ்சல் மணியோசையைத் தெளிவாகக் கேட்டேன். காமவிழா முழுமூச்சுடன் நடந்தேறுகிறது போலும்.

நாங்கள் இன்னும் மலர்ச்செடி வழியில் இருந்தோம். இசை முனகியவராய் இரு பணிப்பெண்டிர் எம்மை நோக்கி வருதல் கண்டேன். அவர்கள் கையில் மாம்பூங் கொத்து இருந்தது.

தம்மை மறந்து நடனமாடிக்கொண்டே வந்தனர். மாதர் நாண நலத்தைக் கைவிட்டனர். நடனத்தான் கருங்குழல் தளர்ந்தது. குழலில் செருகியிருந்த மல்லிகை மாலைகள் எங்கோ நழுவி விழுந்துவிட்டன. மகிழ்ச்சி வெறியாம் புயல் அவர் உள்ளத்தையும் புறத்தையும் சூழ்ந்துகொண்டது[1]. ஒருத்தி நிபுணிகையை அணுகினள். இருவருக்கும் பெயர் ஒன்றுபோலும். 'பேர் கொண்டவளே!' என விளித்தாள் குடித்த பணிப்பெண். அவள் தொடர்ந்து கூறினள்: "தோழீ! இன்றுனக்கே வெற்றி! புதிய மணமகளைக் காமவனத்திற்கு அழைத்துச் செல்லும் பணிப் பெண்ணுக்குத்தான் மணிமாலையைப் பரிசாக வழங்குவதாக மௌக்கரி குறுமன்னன் அறைவித்தான். விரைக தோழீ! உன்னையன்றிப் புது மணமகளைத் தலைவியரில்லத்திருந்தும் வெளிக் கொணரும் நற்பேறு பெற்றவள் வேறு யார்? நிறையப் பார்த்திருக்கின்றேன் இந்த இல்லத்தில். இவளினும் மிக்க பக்தி பூண்டார் எண்ணிறந்தோர் வந்துள்ளனர்! அடி தோழீ! இந்தப் புதிய பறவை எப்படி மாட்டிக்கொண்டது?" தோழி மகள் என்னை உற்று நோக்கத் தொடங்கினள். நிபுணிகை என் காதில் ஓதினள்: "இவள் குடிகாரி." அவள் என்னை அணுகினள். என் குட்டு வெளிப்படும் என்றஞ்சினேன். அவளது ஆம்பல்வாயினின்றும் தேறல்நாற்றம் வீசியதால் விரைவில் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டேன். நிபுணிகை கூறினள்: "பேர் கொண்டவளே! அவளைச் சீண்டாதே! ஊரில் இருந்து வந்த புதியவள்; தலைவியரில்லத்துப் பழக்கமில்லாதவள்." தோழி மகள் கக்கட கக்கட வெனச் சிரித்து உரைத்தாள்: "இருமூன்று நாட்களில் கற்றுக் கொள்வாய் கண்ணே! எத்தனை பேர் கண்முன் நடனமிடப்போகிருயோ யார் அறிவார்?" இதற்குமேல் உரையாட நேரமில்லை. தன் தோழியுடன் நடனமாடியவளாய் அப்பாற்போனுள் அவள். தப்பினேன் என நெட்டுயிர்ப்புயிர்த்தேன். ஆறுதல் செய்ய "எல்லாரும் குடிகாரர் தோழீ" என்ருள் நிபுணிகை.

அந்நேரம் தென்றல் மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. மரம் செடி கொடிகள் எல்லாம் மகிழ்ச்சி வெறியில் மெல்ல அசைந்து சாய்ந்தாடிய வண்ணம் இருந்தன. பவழ மொத்த தளிர்கள் செறிவால் அவற்றின் செம்மையழகு இன்னும் மிகுந்தது. மலர்கள்மீது மொய்க்கும் வண்டுகள் இசை இளங்

---

1. இரத்திஞவளி நாடகம் முதல் அங்கம் ஒப்பிடுக.

குழந்தைகள் மழலைச் சொல்லென இனிமை கொண்டிருந்தது. மாலைக்காற்றில் அசைவதால், அவ்வண்டுகள் தாமும் தேந்தேறல் வெறியுற்றனவாய்ச் சாய்ந்தாடுவனபோலக் காட்சி அளித்தன. சித்திரைத் திங்களின் கள்தேறல் வெறி மிகவூட்டுமன்றோ? மாதரில்லப் பணிப்பெண்டிர்மட்டுமல்லாது முன்றிலில் வளரும் மல்லிகையுள்ளிட்ட செடிகளெல்லாம் குடிப்பழக்கத்தன போலும். யானும் நிபுணிகையின் கூற்றை ஒப்புக்கொண்டு உரைத்தேன். "அனைவரும் குடிவெறியர்கள் நிவுனியா!" கோவையிதழ் மேல் செங்காந்தள் விரல் வைத்துக் குறித்தாள் வாய்திறவாதே என்று. குனிந்து ஒரு முதியவனை வணங்கினாள். ஆழ்ந்த உள்ளத்தவனாய்ப் பொறிகளைந்துந் தளர்ந்தவனாய் நின்றிருந்த அவன் உடம்பு முழுவதும் வெள்ளங்கியால் மூடப் பெற்றி ருந்தான். அவன் கஞ்சுகி ஊழியன், தலைவியரில்லத்து முதலூ ழியன். அவனது தலைமுடி முழுதும் வெள்ளிபோல வெளுத்து விட்டது. அவனைக் குறித்துத்தான் என்னைப் பேசாதே எனக் குறித்தாள். முதியவனுக்கு வினவும் வாய்ப்பளிக்காமல் என்னைப் பற்றி அவனிடம் குறிப்பிட்டாள்: "தலைவ, சிற்றூரில் இருந்தும் வந்த புதியவள்; இவ்விடத்திய பழக்க வழக்கம் அறியாதவள்." என்னை அதட்டி "சுதட்சிணா! பெருமான் வாப்பிரவ்வியர், தலைவியரில்லத்துப் பணிமகளிர்க்கெல்லாம் தந்தைபோன்று தொழுகைக் குரியவர்; வணங்குக." நான் மண்டியிட்டு முதியவனை வணங்கினேன். "நற்பேறு பெறுக! நிலைத்த மங்கலமும் உண்டாகுக" என்று வாழ்த்தினான். வாழ்த்தினைப் பெற்று இருவரும் மாபெரும் இல்லத்திற்குள் நுழைந்தோம்.

யாரை விடுதலை செய்யப் போந்தேன்? அவள் ஓரிளவரசி, அவளைக் காமவனத்திற்கு அழைத்துப்போகும் பணிப் பெண்ணுக்கே மணிமாலை பரிசளிப்பதாக மௌக்கரி குறு மன்னன் அறைவித்தான். அவளை விடுதலை செய்யும் பணிக்கே நிபுணிகை என்னை இவ்வாறு திருட்டுத்தனமாகத் தலைவியரில்லத் திற்குக் கொண்டு வந்தாள். மெல்லக் காதில் ஓதினாள்: "மாவ ராகன் இன்று உண்மையில் மிக்க மகிழ்ச்சி கொண்டுள்ளான். இல்லையெனில் குறுமன்னன் இச்செய்தியை அறைவித்திருக்க மாட்டான்." பின்னர் இல்லத்திற்குள்ளே மேடை வரிசைகள் தளமிட்ட தரை வழிகள் வழியாகக் கடந்து சிறைப்பட்ட இளவரசி யிடம் சென்றோம். அவள் தொழுகை கலையாதிருக்குமாறு ஒரு மருங்கில் பேசாது அமருமாறு குறிப்பினால் நிபுணிகை எனக்கு உணர்த்தினாள். நானும் கட்டளைப்படி அமர்ந்து ஒருமுறை

எனது பார்வையைச் சுற்றுமுற்றுஞ் செலுத்தினேன். ஒரு புறம் ஒரு சிறுகட்டில் இருந்தது. அதன் இரண்டு ஓரங்களிலும் தலையணைகள் இடப்பெற்றிருந்தன. கட்டில் தலைமாட்டின் அருகே மேடைமீது மாலையணிந்ததும் உணர்ச்சி ஊட்டக்கூடியதும் ஆகியதோர் மாவராகப்படிமம் அணிபெற வீற்றிருந்தது. அதன் நெடிய வெண்கோடுகள் இப்போதுதான் மாகடல் அடியிலிருந்தும் கிளம்பினபோல வானத்தை நோக்கிய வண்ணம் இருந்தன; அவ்விரு கோடுகள் இடையே மிக அஞ்சியவளாகத் தோன்றிய நில மகளது படிமம் உள்ளங் கவரத்தக்கதாக இருந்தது. மாவராகன் கண்கள் அன்று மலர்ந்த தாமரைபோன்று பொலிவுற்றிருந்தன. உடம்பு முழுவதும் அன்று அலர்ந்த கருநீல மலர்க்குழு போன்றிருந்தது. உண்மையில் மாவராகப் படிமம் ஒரே நீலக்கல்லில் செதுக்கப்பெற்றது. நீல மலையே உயிர் பெற்றதுபோன்ற வடிவழகுடைய மாவராகனை உள்ளத்திற்குள்ளேயே மந்திரஞ் சொல்லி அஞ்சலி செய்தேன்.[1]

ததஃ சமுத்க்ஷிப்யதராம் ஸ்வதம்ஷ்ட்ரயா
மஹாவராஹஃ ஸ்புட பத்ம லோசனஃ
ரஸாதலாதுத்பல பத்ர ஸந்நிபஃ
ஸமுத்திதோ நீல இவாசலோ மஹாந்.

[மாகடலின் ஆழத்திருந்தும் தன் கோடுகளால் நிலமடந்தையை மேலே தூக்கியவனாகிய மாவராகன் அன்றலர்ந்த தாமரை போன்ற பொலிவுடைய கண்ணினன்; கருநீல மலர்க்குழு போன்றதும் நீல மலை போன்றதும் ஆகிய அழகிய உடம்பினன்.]

இம்மாவராகப் படிமத்தின்கீழ் மாதரில்லத்துப் புதிய மணமகளும் எங்கள் அசோகவனச் சீதையும் ஆகிய இளவரசி அமர்ந்திருந்தாள். அவளுக்கொருபுறத்தே சிறுமேடை மீது மலர்த் தொடையல்கள் சந்தனம் இன்னோரன்னபிற தொழுகைக்கு வேண்டிய பொருட்கள் வைக்கப்பெற்றிருந்தன. ஒரு படிகத் தண்டில் நறுமணமூட்டப்பெற்ற மெழுகுவத்தி எரிந்து கொண்டிருந்தது. மற்றொரு படிகச் சிமிழில் நறுமணத்தைலம் இருந்தது. அருகிலேயே ஒரு பொற்றட்டில் மாதுளைத் தோலுடன் வெற்றிலைப்பாக்குக்கு வேண்டிய மற்ற துணைப்பொருட்களும் இருந்தன. கட்டிலின் கால்மாட்டினருகே வெள்ளியால் இயன்ற எச்சில்உமிழ் வட்டில் வைக்கப்பட்டிருந்தது. மேலே யானைக்

[1] மாவராகத் தியான மந்திரம்

கோட்டு முளைகள் செந்துகிலால் கவியப்பெற்ற வீணையைத் தாங்க இருந்தன. இப்போது வீணை, தொழுகையில் முழுகிய அரசிள மங்கையின் மடிமீதிருந்தது. சுவரின் மறுபுறத்திலே யானைக்கோட்டு முளைகள்மீது படிகப்பலகை இருந்தது. அதன் மீது ஓவியப்பலகை, தீட்டு கோல், நிறப்பெட்டகம், புருச இலைப் புத்தகம் முதலியன வைக்கப்பெற்றிருந்தன. புத்தக இரு அட்டைகளும் கட்டப் பெற்றிருந்தன. ஒரு யானைக் கோட்டில் பசிய மருதோன்றி மலர்மாலை தொங்கிக் கொண்டிருந்தது.[1] அது விரைவில் வாடாது. இல்லத்தே நுகர்வுப் பொருட்கள் ஏராளமாக இல்லை; எனினும் போதியன இருந்தன.[1]

இதே நேரம் இளவரசி வீணை மீட்டி இசை எழுப்பினாள். மெதுவாக இசையில் அவள் ஒருமுகமாகிவிட்டாள். நான் இயல்பான வெட்கம் துறந்து அவ்வழகின் வடிவத்தைக் கண்களாரப் பருகலானேன். அவளைக் காணும் எந்த இழிமகனும் உள்ளத்தில் பத்திப்பெருக்கினைக் கொள்ளாதிரான். அவளது உடம்படங்கலும் தூய ஒளி பொங்கிக்கொண்டிருந்தது. படிக இல்லத்திற்குள் இருப்பவளென, அமுத நீரில் படிந்து எழுந்தவளென, மிக்க வெள்ளொளியால் சூழப்பெற்றவளெனத் தோன்றினாள். தூய சீன வெண்பட்டினால் மூடப்பெற்ற பாவைபோலக் கண்ணாடியில் தோன்றிய நிறப்படிமம்போலக் குளிர்காலப் புயற்குழுவுக்குள் நுழைந்த திங்களைப்போலக் காட்சியளித்தாள். வானயாற்றின் வெள்ளொழுக்கு நிலத்தழுக்கையே அகற்றி வெண்ணிறம் ஏற்றுவது போல இளவரசியின் தூய ஒளி எதிரில் இருப்போரது உள்ளத்துள் புகுந்து ஆங்குள்ள குற்றம் யாவற்றையும் கழுவி அகற்றா நின்றது. அழுக்கு நிறைந்த இந் நிலத்தே இத்தகைய தூய வடிவத்திரட்சி எப்படித்தான் திரண்டதோ என்ற வினா எழுந்தது. அறத்தின் கருவில் இவள் தோன்றினாள் என்பனோ? படைப்பாளன் சங்கினால் தோண்டி முத்தால் இழுத்துத் தாமரைத் தண்டினால் உருட்டி நிலாக் கதிரெனும் தீட்டுகோலால் வரைந்து நிறந்தீட்டி அமுதப்பொடியால் கழுவி வெள்ளித் திரவத்தால் துடைத்து மலை மல்லிகை, குந்தம், வெண்ணொச்சி இன்னபிற வெண்மலர்களின் வெள்ளை ஒளியால் அணிபெறச் செய்து இவ்விளவரசியின் உடம்பைப் படைத்தான் என்பனோ? ஆகா! கிடைத்தற்கரிய எத்துணைத் தூய்மை!

---

[1] வாத்தியாயனனின் காமசூத்திர நூலில் நகர மக்களின் இல்லங்களின் வருணனை.

பற்றற நோற்ற முனிவரது தவச் செல்வமே இம்மாதர்க் கணி கலம் வடிவெடுத்த தென்கோ! இராவணன் தொட்டுவிடுவான் என்றஞ்சிக் கைலை மலையின் வெற்றழகே இம்மாதின் உருவ மெடுத்ததென்கோ! வானக் கங்கையே இந்த மாதாக உரு வெடுத்த தென்கோ! வெறிநிலையில் இருந்த பலதேவரின் பால் வெண்மை அவரை விட்டோடிவந்து இங்குப் பெண் வடிவமாக மாறிவிட்டதென்கோ? இவள் தூய வெள்ளிய ஒளியை யாதென உரைப்பாம்? பத்தி நிறைந்த குரலால் பாடியவாறு வீணை வாசித் துக் கொண்டிருந்தாள்; நான் அத்தகைய இனிய யாழிசையை இதுவரை கேட்டதே இல்லை. இளமை முதலாக அவிநயம் செய்து வந்தேன். உண்மைப் பத்தியை நான் இதுவரை கண்ட தில்லை. சூத்திரகக் கவிஞன் இயற்றிய மிருச்சகடிக நாடகத்தை ஒருமுறை நடத்திவைத்தேன். அதனில் அவன் யாழைக் கடலில் பிறவா மணி எனக் குறித்திருந்தான் என்பதுண்மை.[1] அந்தச் சுலோகத்தை நான் நண்பர்களுடன் கூடி எள்ளிநகையாடினேன். அதனில் தலைமகள் பற்றியதொரு செய்தி உள்ளது. தலைமகன் சொன்னபடி வராததால் பிரிவாற்ருது யாழையெடுத்துத் தனக்கு ஆறுதல் அளிக்கவும் காதலைப் பெருக்கவும் பாட்டுப் பாடுகின் ருள் தலைவி; அதற்கேற்ப வீணையும் வாசிக்கின்ருள். பிரிவுத்துயர் பொறுக்க முடியாதது. யாழ்நலம் தலைமகளின் காதற் பெருக்கத் தில் சென்று முடிகிறது. இதனைத் தவிர வீணையானது காத லூக்கங் கொண்ட தலைமகளின் தோழியாதற்கு அதனிடம் என்ன உள்ளது? நான் அன்று அதன் பொருளைப் புரிந்துகொள்ள முடியவில்லை. தலைமகன் வாராமையால் காதலியின் பொருத வுணர்ச்சி எத்தகைய தென்பதை இன்றே உணர்ந்தேன். யாழ் இசையும் வாய்ப்பாட்டும் பிரிவுத்துயரத்தை வளர்க்கின்றன என்னும் உண்மையை இன்றே அறிந்தேன். தலைமகன்

---

[1] மிருச்சடிகை 3–5

உத்கண்டி தஸ்ய ஹ்ருதயாநுகுணு வயஸ்யா ஸங்கேதகே
சிரயதிப்ரவரோ விநோத:।
ஸம்ஸ்தாபநா ப்ரியதமா விரஹாதுராணும் ரக்தஸ்ய
ராக பரிவ்ருத்திகர: ப்ரமோத:॥

[காதல் வேதனையுடைய தலைமகளுக்கு இதய வொற்றுமையுடைய தோழி போல வீணை இருக்கிறது. தலைமகன் பிரிவினுல் ஏற்பட்ட துயரினை, காதலை, மேன்மேலும் அது வளர்க்கின்றது.]

மாவராகனது அருள் பெறுததால் இளவரசி யாழின் இசையொடு இயைந்த பத்திப் பாட்டுப் பாடினுள். யாழிசை பத்தியை மேன் மேலும் பெருக்குகின்றது. ஆதலின் சூத்திரகப் புலவன் யாழ் கடலிடை பிறவாதமணி என்று கூறியது முற்றிலும் உண்மை.

மெதுவாக யாழ்க்குரல் ஓய்ந்தது. சாளரம் வழியாகக் காம வனக் காமவிழா காணப்பெற்றது. நடிகையர் தம் ஒரு கூட்டத் தினர் கைத்தாளம் இட்டவராய்ப் பாடியவராய் இல்லம் நோக்கி வந்துகொண்டிருந்தனர். கூட்டமுதப் பாட்டிலே எத்தகைய பசிவேட்கை செறிந்திருந்தது ! ஆருத்துடிப்பிருந்தது !

**[1]இஹ படமம் மஹூமாஸோ ஜணஸ்ய ஹிஅஆயிகுணகமிதுலாயி பச்சா பித்தஇ காமோ லத்தப் பஸரேஹிகுஸமபணேஹி**

இந்த இனிய பாட்டுத் துணையாகவும் அடிப்படையாகவும் முழங்கப் பத்தி முதிர்ச்சியுடன் எம் அசோகவனச் சீதை மாவராகத் தொழுகைப் பாடலைத் பாடத் தொடங்கினுள் :

**ஜலௌகமக்நா ஸசராசரா தரா விஷாணகோட்யாகில**
**விஸ்வமூர்த்திநா**
**ஸமுத்ருதா யேந வராஹரூபிணு ஸமே ஸ்வயம்பூர்பகவான் ப்ரஸீதது.**

[நீரில் முழுகியவளும் அசைவன அசையாதனவற்றைத் தன்னுட் கொண்டவளும் ஆகிய நிலமடந்தையைத் தன் கோட்டினுல் தூக்கி எடுத்த விசும்பே வடிவமாகிய கடவுள் எனக் கருள்வாராக.]

இந்தப் பாவினைப் பாடிக் கண்ணீர் பொழிய மாவராகப் படிமத்தைக் காணலானுள். மிக அமைதியாக மாவராகனை வலம் வந்தாள் ; பின்னர்க் கட்டிலை நோக்கி நடந்தாள். ஆங்கு அமர்ந்திருந்த அவளுக்கு நெடுநேரம்வரை பத்தி மயக்கம் நீங்கவில்லை. கண்களில் மிகுந்த தூய்மை பொழியாநின்றது. அப்பொழிவு பார்ப்போரை ஒளிபெறச் செய்தது. அவளது தவ மெனும் ஒளி அருகிருந்தோரின் பாவ இருளைப் போக்கியது ; அவள் உள்ளத்தே எரிந்த உண்மையெனும் நெருப்பினுல் ஆங்கிருந்தவர் மனக்குற்றங்களனைத்தையும் எரித்துக் கொண் டிருந்தது. மறைகளின் சொற்களே பெண் வடிவமெடுத்தனவோ?

---

[1] சித்திரைத் திங்கள் வருகிறது ; அதில் மலரும் மலர்களை எடுத்து மன்மதன் பாணங்களை எறிந்து காமத்தை உண்டுபண்ணு கின்ருன் — இரத்தினுவளி முதல் அங்கம்.

வடிவெடுத்து வந்து அந்தணப் பண்புக்கு என்னைத் தகுதியாகு மாறு செய்தனவோ? இன்றென் உறுதி வெற்றியுறுமோ?

நிபுணிகை பத்தி நிறைந்த வணக்கம் செய்தாள்; யானும் அங்ஙனமே செய்தேன். நம்பிக்கையொடும் இளவரசி நிபுணி கையைப் பார்த்தாள். நிபுணிகைக்குப் பார்வதிபோன்று தொழு தற்குரியவள் இளவரசி. ஒரே வயதினள். அரசியின் துயரத்தின் பங்கு பூண்ட உயிர்த்தோழி நிபுணிகை. நட்பு நிறைந்த பெரிய கண்களால் அரசி என்னை ஒருமுறை காணலானாள். அத் தோற்றத்தில் நடக்க வேண்டியதை அறியும் ஆவல் நிரம்பி இருந்தது. நிபுணிகை மெதுவாக அவளருகே சென்று காதில் ஏதோ உரைத்தாள். என்னைப் பற்றிய செய்தியை அவள் மறைக்காமல் உரைத்தாள்போலும்; ஏனெனில் செய்தி கேட் டதும் இளவரசியின் திருமுகத்தில் நாணநிழல் பரவிவிட்டது. வெள்ளிய கன்னத்தில் செம்மை விரைந்தேறியது. முகம் சற்று ஒளிமங்கியது. உரிமை இல்லாது இல்லத்தின்கண் புகுந்தமைக் காக வருந்தினேன்; ஆனால் நிபுணிகை தொடர்ந்து சில மொழி கள் பகர்ந்தமையால் இளவரசிக்கு ஆறுதல் ஏற்பட்டது. அவள் கடைக்கண்ணினால் என்னை ஒருமுறை நோக்கிப் பின் மாவராகப் படிமத்தை நீர் ததும்பப் பார்த்தாள். கண்ணில் இரக்க நீர் பொழிந்தவாறிருந்தது. அவளது இரக்கப் பார்வை, 'ஓ மாவராக! எனக்கியைந்த கடவுளே! இன்னும் என்னென்ன திருவிளையாடலை என் திறத்து நடத்துவையோ' என்று கூறு வது போலிருந்தது. நிபுணிகை இன்னும் அவள் காதில் ஓதிய வாறிருந்தாள். நான் நாணமும் துயரமும் பூண்டவனாய் அமர்ந் திருந்தேன். இறுதியில் எழுந்திருந்தாள் அமைதியாக. நிபுணிகை வெளியே வந்து சாமரப்பெண்ணை அழைத்து உரைத்தாள்: "தோழி! புதிய மணப்பெண்ணை நிபுணிகை காம வனத்திற்கு அழைத்துப்போக ஒப்புக்கொண்டாள் எனப் பெருமான் வாப்பிரவ்வியரிடம் கூறுக. அரசி வந்துகொண்டிருக் கின்றாள் எனக் கூறு!"

சாமர அரிவை திடுக்கிட்டுப் போனாள்; ஒரு நொடிவரை அவள் இச்செய்தியை வெறும் வேடிக்கையென நினைத்தாள்; ஆனால் நிபுணிகை இரண்டாம் முறையும் அதே செய்தியைச் செப்பியதால் மகிழ்ச்சி மீறியவளாய்த் துள்ளிக் குதித்து ஓடி னாள். விரைவில் இல்லம் முழுவதிலும் இச்செய்தி பரவிவிட்டது. காமவனத்தில் இனவினமாக முழங்கிக்கொண்டிருந்த வாத்தியங் கள் அனைத்தும் வாயடங்கின. வெறும் மங்கலச் சங்குமட்டும்

நின்றுநின்று முழங்கிற்று. கஞ்சுகியாகிய வாப்பிரவ்வியன் சற்று அஞ்சியவனாய் முன்வந்து வெற்றியோசை முழக்கினான்: 'எதிர்கால மாதேவி வெல்க! நிபுணிகை வாழ்க!!' பின்னர் அரசியும் நிபுணிகையும் நானும் காமவனம் நோக்கி மெதுவாக நடக்கலானோம். அரசி மிகுந்த பத்தியுடன் மாவராகப் படிமத்தின் அடிகளைக் கண்களில் ஒற்றி அவற்றின் துகிலை இழுத்து நிபுணிகையிடம் தந்தாள். நிபுணிகை அதனை எனக்களித்து "உயிர்போல இதனைக் காக்கக் கடவாய்" என்றாள். மாவராகனது அருட்பரிசென அதனை விழிப்போடும் வைத்துக்கொண்டேன்.

காமவனத்தின் வாயிலருகே நாங்கள் வந்ததும் பணிப் பெண்டிர் தம் கூட்டத்தினர் மகிழ்ச்சிக் குழப்பம் செய்தவராய் எம்மை நோக்கி வந்துகொண்டிருந்தனர். 'எதிர்கால மாதேவி வாழ்க' என முழங்கினர். அவராடைகள் அமையாமல் கழன்று சிதறிவிழும் நிலையில் பலவாறு அலங்கோல முற்றிருந்தனர். இளவரசி முகத்தே வருத்தம் நிறைந்திருந்தது. அவள் என்னை ஒருமுறை நோக்கியபடியே நின்றுவிட்டாள். நிபுணிகையுடன் தனியாக உரைத்த போதிலும் என் செவிகளில் படுமாறு சில மொழிந்தாள்: "நிபுணிகை! தலைவியரில்லத்தின் விதிப்படி நடக்கவேண்டும். பணிப்பெண்டிர் இன்று ஒழுங்கீனமாக நடக்கின்றனர்!" பின்னர் என்னிடம் இயம்பினாள்: "செம்மல்! தவறாக நினைக்கவேண்டாம்." நான் தலைவணங்கிக் கட்டளைகளை நிறைவேற்றக் காத்திருக்கின்றேன் என்று பேசாமலேயே உணர்த்தினேன். திறமையுடன் நிபுணிகை சென்று வாப்பிரவ்வியனை அழைத்து வந்துவிட்டாள். வந்த தொழும்பன் பணிப்பெண்டிரின் தலையானவளை அழைத்துப் பணித்தான்: "எதிர்கால மாதேவி இன்று இவ்விரு தோழியர்களுடன்தான் காமவனத்திற்குச் செல்ல விரும்புகின்றாள். நீங்கள் யாரும் குறுக்கே தலையிடக் கூடாதென்பது அவளது கட்டளை." இதனைப் பணிப்பெண்டிர் மிகுந்த வருத்தத்துடன் கேட்டு ஒரே குரலில் "எதிர்கால மாதேவி வெல்க!" என்று முழங்கி அப்பாற் போயினர்.

இளவரசியோ எங்களோடும் நடந்து கடந்து மரத்தோப்பை அடைந்தாள். ஆங்கொரு குளம் இருந்தது. குளத்தின் தூய்மை நிலவினால் பதின் மடங்காயிற்று. நிபுணிகையை நோக்கி நங்கை நவின்றாள்: "மேற்கொண்டு என்ன?" களைத்தவள்போலக் குளத்தின் படிமேல் அமர்ந்துவிட்டாள். நிபுணிகை வேண்டினாள்: "தேவீ! மாவராகனே நமக்குத் துணை; அவனைப் பாராட்டு. ஏனெனில் தட்சபட்டன் ஆகிய செம்மல்—வீரன்—உனக்குக்

காப்பளிக்க வந்திருக்கிறான். அச்சந்தவிர்; எழுக!'' இளவரசி என்னை வினநிறைந்த பார்வையோடும் பார்த்தாள். நான் மெதுவாக—ஆனால் உறுதியாக—உரைத்தேன்: "தலைவீ! இந்தத் தீவினையாளனுக்கு ஒரு தூய பணி புரிய வாய்த்தது. உறுதி கொள்க. துணிவுகொள்க. எமனும் உனக்கு ஒரு தீங்கும் இழைக்க முடியாது.'' நிபுணிகை என்னை ஒரு முறை பார்த்து அரசியிடமிருந்து ஒருவிடையும் எதிர்நோக்காமலேயே என்னிடம் இயம்பினாள்: ''செம்மல்! இப்புனைவு தன்னைக் கலைத்துவிடு. மாவராகனது அருள் ஆடையை அணிந்துகொள். முற்றத்து மரங்களின் கிளைகளைப்பற்றி மதில்சுவரைத் தாண்டி வெளியே குதித்துக் கதவருகே எங்களை எதிர்நோக்கிக்கொண்டிரு.'' நான் என்ன நடக்கவிருக்கிறது என்பதை முற்றிலும் உணர்ந்தேன். உடனே பெண் ஆடையை மறைவிடம் சென்று கழற்றி எனதாடையை யுடுத்தி மாவராகனது துகிலைத் தலைக்கணிந்துகொண்டு தோழியாடையை நிபுணிகையது கையில் வைத்துவிட்டு வாகைமரம் ஒன்றின் மீதேறி மதிற்புறத்தே அரசத் தெருவில் குதித்துவிட்டேன். கதவருகே நாகன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். அப்போது நிலா நடுவானத்தை நண்ணியது. வெண்பட்டாடை அணிந்த நிலமடந்தையின் நெற்றிப்பொட்டுப்போல நிலாவானது விளங்கியது. இன்று நிலமகளும் மாவராகனைத் தொழுதாள் எனத் தோன்றியது. ஆழத்தே அமிழ்ந்த தன்னைத் தூக்கிக் காத்த மாவராகனைத் தொழாமல் நிலமகள் வாளாவிருப்பாளோ?

## உயிர்ப்பு நான்கு

நிபுணிகை தன் தலைவிக்காகத் தேர்ந்தெடுத்த இடத்தை நான் கண்டபோது உள்ளந் திடுக்கிட்டது. அஃது கொற்றவைக் கோயிலை அடுத்துள்ளதோர் இடிந்த இல்லம். நிபுணிகையின் வீட்டில் இருந்தும் எடுக்க முடிந்த பொருட்களை எடுத்துக் கொண்டு திருடன்போல இடிந்த இல்லத்தை அடைந்தபொழுது திங்கள் மேல் வானத்தே தொங்கிக்கொண்டிருந்தது. சப்த இருடியர் என்னும் விண்மீன் குழு இமயத்தே மானசமடுவில் குளிப்பதற்கு இறங்கிக்கொண்டிருந்தது. திங்கள் மேற்கே வந்து

நின்றது. நிலாவொளி இப்போது பால்வெண்மை நிறைந்த நில முழுவதும் பரவி இருந்தது. கொற்றவை மன்றத்து வெளியே இரும்புக் கம்பிகளால் இயன்ற ஒரு பெரிய கதவு இருந்தது. கம்பிகளின் ஊடே தேவியின் படிமத்தைச் செவ்வனே பார்க்க முடியும். தேவியின் முன்னே கண் மையின் திரட்சியால் பிடித்து வைத்ததுபோலக் கரிய எருமைக்கிடாவின் படிவம் இரும்புமேடை மீது வைக்கப்பெற்றிருந்தது. அதன்மீது—அடியார்கள் குங்குமச் செம்பதிவுகள் ஒட்டிக்கொண்டிருந்தன. அதைப் பார்த்தால் கூற்றுவனே இரத்தம் படிந்த கைகளால் எருமைக்கிடாவின் முதுகில் அதனைத் தட்டிக் கொடுத்ததுபோன்ற காட்சி என் முன் தோன்றியது. தேவியின் திருவடிக்கு அருகே ஒரு சிறுமேடை இருந்தது; அதன்மீது செந்நிறப் பொருள் காணப்பெற்றது; உற்று நோக்கியபோது கட்டைமணிமீது அரக்கு நிறம் தோயப் பெற்ற துணிமூடியிருந்தது. கோயிலுக்கு முன்னுல் ஒரு திறந்த முற்றம் இருந்தது; அதன் காறைத்தளம் ஆங்காங்கே பிளவுற் றிருந்தது; பிளப்புக்களின் இடையே உயிர்வல்லமை தடுக்க முடியாதது என்ற உண்மையை உரைப்பதுபோலப் புல் முளைத் தெழுத்துகொண்டிருந்தது. இந்த முற்றத்திற்குச் சற்றுத் தொலைவில்தான் அந்த இடிந்த இல்லம் இருந்தது கண்டேன்; அது குகை போன்றிருந்தது. அதன் எதிரே ஒரலரிச் செடிப் புதர் இருந்தது; அதன்மீது இரவு நேரங்களில் காட்டுக்கோழிகள் புகலிடம் பெற்று வந்தன. நிபுணிகை மிகுந்த விழிப்போடு பூட்டைத்திறந்து எங்களிருவரையும் உள்ளே கொண்டு சென்று எச்சரிக்கையுடன் உட்புறம் தாழிட்டாள். உள்ளே இரு மூன்று சிற்றறைகள் இருந்தன. இடிந்ததோர் கிணறும் இருந்தது. இடிந்த இல்லத்தை நிலவு இன்னும் அச்சந்தரத் தக்கதாக்கி விட்டது. சுவர்கள்மீது செந்நிறத்தால் பல ஓவியங்கள் வரையப் பெற்றிருந்தன. இங்கு ஒரு பைரவனும் பைரவியும் தாந்திரிக வழிபாடு செய்திருப்பார்கள். அவ்வழிபாட்டினர் வாம மார்க்கத் தினர் என்று கூறப்பெற்றனர். ஓவியங்கள் வாமமார்க்கக் குறி களாகும். பூவினும் மெல்லிய பூவையாம் இளவரசிக்கு இத்தகைய கொடிய உறைவிடத்தைத் தேடிப் பிடித்தனளே! அறிவற்றவள்! இரக்கமற்றவள்! கொடியள்! கொடியள்!! எனினும் வேறு வழி இல்லை அவளுக்கு. இத்தகைய பணிப்பெண்ணுக்கு இதனினும் வேறிடம் தேடிப் பிடிக்க முடியாது. நிபுணிகை ஒரு முறை துயர் நிறைந்த கண்களால் என்னை நோக்கினுள். அப் பார்வையின் பொருள் ‘இதனினும் சிறந்தது என்னுல் முடியாது’ என்பது

போல இருந்தது. அவள் வருத்தத்துடன் காணப்பெற்ருள். எனதாண்மைச் செருக்கு முறிந்தது. ஒரு நெட்டுயிர்ப்பின் வாயிலாக எனது மகிழ்ச்சியின்மையைத் தெரிவித்தேன். எனதுள்ளம் துடித்தது. இயல்பான அழகு வாய்ந்த இளவரசியைக் கண்ணெடுத்தும் பார்க்க எனக்குத் துணிவில்லை. நான் களைத்துக் கீழே அமர இருந்தேனுக, இளவரசி களைத்த குரலில் சொன்னுள்: "செம்மல்! நேரமாகிக்கொண்டிருக்கின்றது. ஆவன விரைவில் செய்க!" அவள் சொற்களின் தூண்டுதல் என்னைக் குலுக்கிவிட்டன. ஒருவகை அமுதமருந்து எனக்குப் புத்துயிரளித்தது. அடக்கத்தோடும் அறிவித்தேன்: "பெருமாட்டி! இன்று இங்கே இருப்பீராக. நாளையே தக்க ஏற்பாடு செய்கின்றேன். தங்களை இக்கோலத்தில் காணப் பொறுக்கிலேன். என் செய்வது." நிபுணிகை விடை பகர்ந்தாள்: "எனக்கு ஒரு தொல்லையுமில்லை. தக்கதைத் தொடங்குவாயாக." நிபுணிகை என்னை மற்ற அறைக்குள் போகப் பணித்தாள். அவள் குரல் அடங்கிவிட்டது. உள்ளுக்குள்ளே அழுதுகொண்டிருந்தாள். நான் நுழைந்த அறை மற்றையதிலும் தூயதாக இருந்தது. ஆங்கு ஒரு கம்பளி விரித்திருந்தது. இளவரசி இருட்டில் அங்கே தங்குமாறு ஏற்பாடு செய்தோம். அவள் அமர்ந்த பிறகு நாங்கள் இருவரும் செய்யவேண்டியவற்றை ஆராய முனைந்தோம்.

நிபுணிகை சிறிது நேரம் வேலை செய்தவாறிருந்தாள். அவளது ஒவ்வோர் அசைவிலும் கடுந்துயர் செறிந்திருப்பதாகத் தோன்றியது. செய்தியறிய வினவினேன். உலர்ந்த மரம்போல உணர்ச்சியற்று நின்ருள். அவள் அக்கோயில் பூசாரியை வயப்படுத்திக் கொண்டு தங்க இந்த இல்லத்தை அமர்த்தியதைக் கூறினுள். கோயிலுக்கு ஏராளமான மக்கள் வருவதில்லை; எனினும் அது காவலான இடமில்லை என்பதை நிபுணிகை ஐயமற உணர்ந்திருந்தாள்.

பகலில் வீட்டைத் தாழிட்டபடியே வைத்திருக்கவேண்டும். நான் பகல் முழுவதும் வெளியேதான் இருத்தல் வேண்டும். இரவில் பூசாரி உறங்கின பின்னரே நான் அவளைக்காண முடியுமென்றும் கூறினுள். ஆனல் அவள் வாய்விட்டுச் கூருத தலையான செய்தி உண்டு என்பதையும் உணர்ந்தேன். அவள் மிகவும் அஞ்சியிருந்தாள். முதலில் அவ்வீட்டிற்கு வருவதும் அதனுள் மறைந்திருப்பதும் எளிதென நினைத்தவள் இப்போது அதனில் உள்ள கேடுகளை உணர்ந்துகொண்டாள். மாதர்க்கியல்பான அச்சம் அவளை அமிழ்த்திவிட்டது. "பாணபட்ட

னுடன் இருந்தும் அச்சம் எதற்காக?'' கீழே நோக்கியவளாய்த் தளர்ந்த குரலில் கூறினாள்: ''இல்லை.'' பின்னர் மெதுவாக இளவரசியது அறைக்குள் போனாள். விடிவதற்கு இன்னும் மிக்க நேரமில்லை. நான் வெளியேறினேன். நிபுணிகை தாழிட்டுக் கொண்டாள்.

நான் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே தாமரைத் தேன் பூசிய அன்னம்போலத் திங்கள் வானயாற்றங்கரையினின்றும் வருத்தத்துடன் மேலைக் கடற்கரையில் இறங்கிற்று. திசையிடங்களெல்லாம் வெண்மானின் மயிர்ச்செறிவுபோல மங்கிய வெண்ணிறங்கொண்டன. யானையின் பிடர்த்தலையைப் பிளந்த சிங்கத்தின் பிடரிமயிர்போல அல்லது சிவந்த அரக்கு நிறத்தில் தோயப்பெற்ற நூலிழைகள் போலக் கதிரவன் செங்கதிர்கள் வானமெனும் பூங்காவிடையே சிதறி வீழ்ந்த விண்மீனும் உதிர்மலர்களைத் துடைத்துப் பெருக்கிக் கொண்டிருந்தன; அப்போது செங்கதிர்க் கற்றைகள் பதுமராகத்துடைப்ப ஈர்க்குகள்போலக் காட்சியளித்தன. விண்மீன்கள் மறையத் தொடங்கின. ஒன்றிரண்டு இன்னும் காட்சிக்கிருந்தன. அவை மேல்வான மென்னும் கடற்கரையிலே சிப்பிகளின் திறந்த வாய்களினின்றும் வெளியேறிய முத்துக்கள்போல இருந்தன. கீழ்ப்பால் கதிரவன்தன் ஒளி மெல்ல அரும்பத் தொடங்கிற்று. முன்பனிக்காலப் பனித்துளிகளைத் தாங்கித் தாமரைக் காட்டினை அசையத் தூண்டி, நகர மகளிர்தம் கலவிப்போர் விளைவாக முகத்தில் தோன்றிய வேர்வைத் துளிகளை வாங்கிக்கொண்டு, காட்டு எருமைக்கிடாக்கள் வாய் நுரைத்துளிகளால் நனைந்து அசையுந் தளிர்களுக்கும் கொடிகளுக்கும் நாட்டியக்கலை அளித்து விரிதரும் தாமரைமலர்கள் தேன்துளிகளை வாரிக்கொண்டு மலர் மணத்தால் வண்டுகளுக்கு மகிழ்ச்சியூட்டி வைகறைக் காற்று மெல்ல வீசா நின்றது. இந்நேரத்தில் மௌக்கரிமனைக்குள் என்னென்ன நிகழ்ந்து கொண்டிருக்கின்றனவோ? முதலடி கஞ்சுகி வாப்பிரவியன்மீது விழுந்திருக்கலாம். இதற்குள் நிபுணிகையது சிற்றில் தரையோடு தரையாகிவிட்டிருக்கும். கேடு நிறைந்த இந்த நேரத்தில் நான் நிபுணிகையுடன் இருப்பதால் மகிழ்ந்தேன்; இந்நகரில் யாரும் என்னை அறியாதிருத்தல் நற்பேறுதான். வேண்டிய பொருட்களை எடுக்க நாங்கள் நிபுணிகை இல்லம் சென்றபோதுதான் வெள்ளாடை உடுத்திக்கொண்டேன். இப்போது நான் கருத்தறியாத அந்தணன்போல ஊரான் எவனுக்கும் காணப்பட்டேன். கங்குல் முழுவதன் துன்பத்தாலே நான் களைத்தவனாக இருந்தபோதி

லும் ஓய்வெடுக்க எண்ணங்கொண்டிலேன். நல்ல காப்பான இடத்திற்கு மூவரும் போய்ச் சேருவதெங்ஙனம் என்ற கவலையே உட்கொண்டிருந்தேன். அருகில் இருந்த இடிந்த குளத்தில் முகம் கைகால் கழுவித் தேவி முன்னர்ச்சென்று தொழலானேன். சற்று நேரங்கழித்துக் கொற்றவை மன்றம் நோக்கி ஒரு முதிய அந்தணன் வருவதைக் கண்டேன். வந்தவன் கொற்றவையைப் பத்தியுடன் தொழுதான். வலம் வந்து படிமத்தின் எதிரே நின்று கொண்டான். நானும் வலம் வந்து அதன் எதிரே நின்றேன். என்னைப் பற்றி அறிய ஆவலுற்றான்போல முதியவன் பார்த்தான். அருகு சென்று வணங்கினேன். வாழ்த்துக் கூறி, இதற்கு முன் 'எப்பொழுதும் என்னை அவன் பார்த்ததில்லை, எப்படி இவ்விடம் சேர்ந்தேன்' என்பதை அறிய வினவினான். 'வெளியூரான் வந்து இரவு இங்குத் தங்கிவிட்டேன்' என விடை இறுத்தேன். சிறிது நேரம் சிரித்தவண்ணம் இருந்த பின்னர்ச்சொன்னான்: "எனில் நீங்கள் பேறு பெற்றவரே, பூசாரியின் காட்சி இன்னும் பெறவில்லைபோலும்."

அடக்கமொடும் அறிவித்தேன்: "பூசாரியை அறியேன்." விடை சொன்னான்: 'அறிந்தால் இங்கொரு நொடியும் இருக்க மாட்டீர்." இதற்குக் காரணம் கேட்டேன். சிரித்தவனாய் முதிய வன் பூசாரியனைப்பற்றி அறிமுகம் செய்யத் தொடங்கினான்: அந்தணன் நகைச்சுவை மிக்கவனாகக் காணப்பெற்றான். சுவை மிகுந்த மொழிகளால் கிழவன் பூசாரியை வருணிக்கத் தொடங் கினான்: "பூசாரி ஒரு தென்னகத்துச் சாது. எரிந்து தணிந்து அரையளவு நின்றுவிட்ட தூணென மயங்கி ஓணான்கள் ஏறின போல அவனது உடம்புச் சிரைகள், பருத்துக் காணப்பெற்றன. ஏழ்மையெனும் தேவி தனது பசியைத் தணிப்பான் வேண்டி அவனுடம்புச் சதைகளை அறுத்தறுத்துவிட்டாளோ எனுமாறு புண்கள் எண்ணிறந்தன இருந்தன. சுடுகாடு போகும் நிலை யினன் ஆயினும் அவன் காதில் எப்பொழுதும் அலரி மலர் செருகி இருக்கும். அவன் பத்தன்கூட, அடிக்கடித் துர்க்கை மன்றக் கல்சுவர்களில் தலையை மோதிக்கொள்வதால் ஆங்கே தழும்புகள் பல எழும்பிவிட்டன; அவை பத்தித் தழும்புகள்! அவன் மந்திரவாதி; ஏனெனில் தீர்த்தயாத்திரைக்காக வரும் மாதர்மீது வசியப்பொடி தூவி வருகின்றான். மைபோடுவதிலும் கைதேர்ந்தவன்; ஏனெனில் புதையல்களைக் கண்டுபிடிக்க வேண் டித் தன் கண்களிலேயே மையிட்டுவந்ததால் ஒரு கண் கெட்டு விட்டது. வைத்தியத்திலும் சிறந்த அறிவுடையவன்; ஒருமுறை

தன்வாயில் முன்னெடுப்பாக நீண்டிருக்கும் இரு பற்களை .மற்ற வற்றுடன் ஒருமட்ட நிலையில் கொண்டுவரு முயற்சியில் மற்றைப் பற்களை இழந்துவிட்டான். முன்னிரு பற்கள்மட்டும் நிலைத்துவிட்டன. நகைவேழம்பன்கூட; ஒருமுறை இவனது புகழ் பாடவந்த சிறுவர்கள்மீது செங்கல் எடுத்துத் துரத்திக் கொண்டுபோனபோது கீழே விழுந்து உருள உதடுகள் கிழிந்து விட்டன. அவனைச் செல்வச் சுரங்கம் என்பர்; ஏனெனில் தென்னாட்டு முழுச் செல்வமும் பெறுவதற்காக மனித மண்டை ஓட்டிற்குக் குங்குமப் பொட்டுகள் இட்டு வைத்திருக்கின்றான். மேலும் கருநொச்சிச் சாற்றில் சுடுகாட்டுக் கரித்தூளைக் குழைத்து ஒரு சிப்பியில், பூசிவைத்திருக்கின்றான். இவற்றைக் காணும் எந்தச் செல்வந்தனது உள்ளத்திலும் உச்சாடன விளைவு தவறாமல் ஏற்படுமென்றும் செல்வந்தன் தானாகவே தன் செல்வத்தை அளித்துவிட்டுப் போய்விடுவான் என்றும் நம்பி இருந்தான். வசியமந்திரமும் தெரியும்; பனையோலைச்சுவடியில் ஓரிலட்சம் முறை 'ஊங்பட்' எனுமந்திரத்தை எழுதிக் குங்கிலியப் புகை ஊட்டி வைத்திருக்கின்றான். அச்சுவடியைப் பார்க்கும் பாவையர் யாவரும் அவன் பணிப்பெண்டிராகி அவனைச் சூழ்ந்திருப்பார்கள் என்று நம்பினான். அவனுக்கு ஒரே கண் இருப்பினும் அதனில் நாள்தோறும் தவறாமல் அழகிய வழவழப்பான ஈர்க்கினால் மை இட்டுக்கொள்வான். இராப்பார்வை இல்லாதுபோயினும் இரவில் திடீரென வானமாதரது காட்சிகிட்டும் என்ற ஆவலால் இரவு முழுவதும் விளக்கேற்றி வைப்பான். உறக்கத்தில் கும்பகருணனுக்கு அண்ணனாக இருப்பினும் கனவில் கட்டாயம் கட்டழகிகளின் இனிய சிலம்போசை கேட்பானாம். குரங்குகளுடன் போட்டியிட்டு மரத்திலிருந்து குதித்து ஒரு காலை இழந்துவிட்டிருந்தாலும் கோவில் படிம இல்லத்தே மக்கள் மறந்துவிட்டுச் சென்றிருந்த செருப்புக்களைத் திரட்டிவைத்திருந்தான். அந்தணர்களிடம் பகை கொண்டிருப்பவன்; இங்கிருந்தும் நீர் விலகவில்லையெனில் கட்டாயம் ஒரு கலகத்தை மூட்டி விடுவான். கடவுளுக்கு மாந்தரிடம் மிகுந்த இரக்கமுண்டாதலின் இப்பூசாரியைக் கண் குருடு, காது செவிடு, கால் நொண்டியாக ஆக்கிவைத்தார்.[1] இம் முதியவனது வருணனை கொண்டு நிபுணிகை எவ்விதம் இப்பூசாரியை வயப்படுத்தினாள் என்பதை

---

1 காதம்பரியில் ஜரத்திராவிட தார்மிகன் வருணனையில் ஒப்பு நோக்குக.

அறிந்தேன். இப்போதவள் அஞ்சும் காரணமும் கண்டேன். ஆனால் அச்சத்திற்கு மாறாக ஊக்கங்கொண்டேன். சிரித்தவாறு அந்தணனிடம் சொன்னேன்: "உலகியலுக்கும் அப்பாற்பட்ட இப்பெரியாரது காட்சியைக் கண்டாலன்றி எனதுள்ளம் தணியாது." கிழவரும் சிரித்துச் சொன்னார்: "தவறாமல் காண்க. ஆனால் விழிப்பாக இருங்கள். எப்பொழுது உங்கள் தலைமேல் தடியடி விழுமோ சொல்ல முடியாது." இவ்விதம் எச்சரிக்கை செய்துவிட்டுக் கிழவர் அங்கிருந்தும் கிளம்பிவிட்டார். நானும் உள்முற்றத்தினின்றும் சற்று விலகிப் பூசாரியின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரம் பொறுத்துப் பூசாரி வந்தான். துர்க்கைக் கோயில் படிம இல்லத்திலேயே தூங்கிக்கொண்டிருந்தான். முதிய அந்தணன் வருணித்த வடிவத்தையே பூசாரியிடம் கண்டேன். துர்க்கை மன்றத்திலிருந்தும் வெளிப்போந்ததும் சில மந்திரம் ஓதினான். கையில் இருந்த சிமிழில் இருந்து கரும்பொடி எடுத்து நிபுணிகையும் அரசியும் இருந்த இல்லத்தினை நோக்கித் தூவினான். விரைவினால் இருமூன்று முறை கால் தடுமாறி விழுந்தான். எழுந்து சென்று கதவின்மீது கரும்பொடி பூசி ஓலைச்சுவடியைக் கதவிற்குக் காட்டிப் பின் தடதடவெனக் கதவை முட்டினான். திறந்துகொண்டு நிபுணிகை வெளிவந்து உள்ளங்கவரும் ஒரு கடைக்கண் பார்வையை அவன் மீது செலுத்தினாள். அதைக் கண்டதும் அவன் முன்பற்கள் வெளியே தோன்றின. உலர்ந்த கன்னத்தில் காதற்பசுமை தோன்றியது. பன்னாட்களுக்குப்பின் பூசாரி தன் மந்திரம் பலித்ததுபோல நினைத்தான். அரக்கு நிறத்தில் எழுதிய ஓலைச்சுவடியை இடைவிடாது நிபுணிகை முன்னால் காட்டியவாறிருந்தான். அவள் அதனைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. எனினும் தனது வெற்றிக்குச் சுவடியே காரணம் என நம்பினான். சுவடி அகன்றால் வசிகரண ஆற்றல் அகன்றுவிடும் என ஐயமுற்றான். நான் தொலைவில் அமர்ந்தவனாய் இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தேன். நிபுணிகை பூசாரியிடம் சொன்னதென்னவென்று தெரியாது. ஒரு முறை அவள் தனது விரலால் என்னைச் சுட்டிக் காட்டினாள். என்னைப் பரர்த்ததும் பூசாரி கொண்ட சினத்திற்கு அளவேயில்லை. நிபுணிகை கதவைத் தாழிட்டுக்கொண்டாள். 'பூசாரி என்னை நோக்கி விரைந்தோடி வந்தான். 'இப்போது நாம் தனிமையில் இல்லை; அதோ ஓராள் இருக்கின்றான். என்னிடம் இப்போது வருதல்

தக்கதன்று' என நிபுணிகை கூறியிருப்பாள். என்னை அன்ன வன் என்னஎன்ன கூறினனோ அறியேன்; அவன் கூறியன சான்றோர் செவிசாரத் தகாதன. சினமே வடிவெடுத்தான்போல இருந்தான் பூசாரி. ஒரு கால் நொண்டியானாலும் ஓடி வரு வதில் குறைவில்லை. தலைதெறிக்க ஓடிவந்ததால் கையிலிருந்த கரிப்பொடிச் சிமிழ் கீழே உருண்டு விழுந்து தன்னுட்கிடந்ததை எல்லாம் நிலத்திற்கு வழங்கிவிட்டது. அவ்விடத்தில் அமர்ந்த குற்றத்திற்காகக் கழுவாய் செய்யவேண்டி வருமென முடிவு செய் தேன். ஒரு பெரிய கல் எடுத்துப் பூசாரி என்மீது விட்டெறிந் தான். ஆனால் கற்களும் பூசாரியை எள்ளி நகையாடக் கற் றிருந்தனபோலும்; என்மீது குறிவைத்தெறிந்த கல் அவனுடை யில் பட்டுச் சிக்கி வன்மையாக அவன் முதுகில் விழுந்தது. பூசாரியின் சினம் இன்னும் பொங்கிற்று. அவனுக்கு அமைதி உண்டாக்கும் வழியை நினைத்துக் கொண்டிருந்த பொழுதே அவன் கல்லே அவன்மீது விழுந்தது. அவன் மார்பு திறந்து காணப்பெற்றது. உலர்ந்த கொடிப் பூமாலை வெளியே கிளம் பிற்று; கருப்புக் கயிற்றால் கட்டி மந்திரமேற்றப் பெற்ற சிப்பி ஒன்று காணப்பெற்றது. உடனே ஒரு வழி என் மூளையில் தோன்றியது. பணிவு கொண்டு வணங்கிக் கைகூப்பிக் கூறி னேன்: "வாழ்க! அறம் வளர்ப்போரே! அரிது உங்கள் மந்திர வாற்றல் நிறைந்த சிப்பி. இதன் வல்லமை சொல்லத் தரமோ! நகரத் தலைவணிகர் தனதத்தர் என்னை உங்கள்பால் அனுப்பி வைத்தார். உங்களது பேராற்றலை உணர்ந்து அவரது பணத் தாசை சிதைந்துவிட்டது. தாமரை இலையில் உள்ள நீர்த்துளி போலத் தனதத்தரின் செல்வச் செழுமையானது பற்றுவிட்டது. இன்றே தமது செல்வ முழுவதையும் தங்கள் திருவடிகளில் சேர்த்துவிட விரும்பினர். அவரைத் தாங்கள் அடியவனாக ஏற் றுக்கொள்வீராகில் இந்நொடியே தங்கள் அடிகளுக்கு அடிமைத் தொழும்பு பூணக் காத்திருக்கின்றார். தாங்கள் ஒப்புக்கொண்ட செய்தியை நான் கொண்டுபோகும்வரை சோறும் நீரும் தொட மாட்டேன் என்ற நோன்பு பூண்டுள்ளார்!" பூசாரி வெற்றி பொருந்திய மந்திரச் சிப்பியைச் செருக்கோடும் பார்த்தான். படிப்படியாகச் சினம் குறைந்தது. "தனதத்தன் வாழ்க. அவன் மிக்க அறக்காதல் உடையவன். இசைந்தேன் என அவ னுக்குரைப்பாயாக. செல்வம் எனக்கு வழங்கட்டும். அடியவ னாக வேண்டுமானால் பௌத்த சௌகத சுகத பத்திரனிடம் போகட்டும். நான் யாரையும் அடியவனாக்குவதில்லை" என்று

கூறினுன். செருக்கோடும் அவன் சிப்பியைப் பார்த்தான். ‘குழந்தாய்! தனதத்தா! இப்போது அகப்பட்டுக் கொண்டாய். எங்கே போகப் போகின்ருய்’ என்ற பொருள் அவன் பார்வையில் செறிந்திருந்தது. புதிய சூழ்ச்சி ஒன்று தோன்றியது. கைகூப்பிக் கூறினேன்: “தனதத்தர் தமது செல்வத்தை வேறு யாருக்கும் அளிக்க விரும்பவில்லே. தங்கள் திருவடிகளுக்கே ஒப்படைக்க விரும்புகின்ருர். தங்கள் உடன்பாடு பெற்றுச் சுகத பத்திரரின் அடியவனுக இணங்கலாம். தங்கள் கட்டளே என்ன?” பூசாரி புகன்ருன்: “அம்ம. போவாயாக. இப்போதே போவாயாக. நாளே எவரிடத்தும் எதுவும் ஏற்பதில்லே. நான் இன்றே கன்ஞேசிக்குப் போய்விடுவேன். தாணேசர்புரியின் மாந்தர் பண்பாடற்றவர்; தீவினேயாளர்; குறுகிய பான்மையர். நான் அவர்கள் முகத்தில் இப்படித் துப்புகின்றேன்.” உண்மையில் பூசாரி துப்பிவிட்டான். அவன் கூறினுன்: “நகையாட வேண்டுமாயின் அம்மடையர்கள் இன்றே வரட்டும். நிறைமதி நாளில் அவர்கள் செய்யும் தொல்லேயை என்னுல் பொறுக்க முடியாது.” இந்தச் சொற்களில் செறிந்தமறை பின்னரே அறிந்தேன். பங்குனி நிறைமதியன்று நகரமாந்தர் எத்தனேயோ முறை கிழட்டுவிலேமகளிர்களேப் பூசாரிக்கு மணம் செய்வித்தனர். இவ்விடத்திய மாந்தர் இந்தக் குறும்பில் கைதேர்ந்தவர். இப்போது இந்த விளேயாட்டைப் பூசாரி அறிந்திருந்தான். இன்றே பணத்தோடும் நிபுணிகையோடும் தாணேசர்புரியை விட்டுக் கன்ஞேசிக்குப் போய்விட விரும்பினுன். நான் இந்த நல்ல வாய்ப்பைக் கைநழுவவிடாது கூறினேன்: “எனில் தாங்கள் வணிக தனதத்தர் இல்லம் வரை எழுந்தருளலாமே. நகர முனேயில் உள்ள மாளிகையே அவர்தம் இல்லம் ஆகும்.” இன்று பூசாரி தனக்கேற்பட்ட வெற்றிமேல் வெற்றியால் களிமயக்குற்றிருந்தான்: “நான் எவனில்லத்தையும் நோக்கிச் செல்லமாட்டேன். தனதத்தனுக்கு விருப்பமிருந்தால் நூறு முறையும் இங்கு வருவான். நீ இங்கிருந்து போய்விடு. சௌகத சுகத பத்திரனிடம் செல்வாயாக. அவன் வீடுதோறும் பிச்சையெடுத்து வருகின்ருன். நான் துர்க்கை மன்றத்தை விடுத்து வேறெங்கும் போவதில்லே.” நான் இருகை கூப்பித் தொழுது மொழிந்தேன்: “புகழுடைய அடிகளே! பேரன்பரே! இதுவே நோன்பு, இதுவே அறவழிபாடு. இந்தச் சுகதபத்திரன் தங்கள் முன் எம்மட்டு? அவன் எங்கே இருக்கிருன்?” அண்மையில் இருக்கும் பௌத்தப் பள்ளியை வெறுப்பாகச் சுட்டிக் காட்டி

'ஆங்கு' என்று சொல்லி என்னை நோக்காமலேயே துர்க்கை மன்றத்தை நோக்கிச் சென்றுவிட்டான். ஒருமுறை அந்தப் பௌத்த பள்ளியையும் பார்த்துவிடலாம் என்று நினைத்தேன். பூசாரி இசைந்துவிட்டான் என்ற செய்தி தனதத்தனுக்குக் கொண்டுபோகும் தொழிலையே மறந்துவிட்டேன். பூசாரி என்னை ஒருமுறை விறைத்துப் பார்த்து விரைந்து என்னிடம் வந்து "விரைவில் புறப்பட்டுப் போ. தனதத்தனைக் கொன்று விடுவாய் போலிருக்கிறது. மாபாவி நீயும் ஒரு பணியாளனா? சோறும் நீரும் தொடாமல் அவனங்கே காத்திருக்கின்றான்; நீ இங்கே கதை பேசிக்கொண்டிருக்கிறாய்." உண்மையில் பாண பட்டன் கெட்ட பணியாளனே.

கைகூப்பிக் கூறினேன்: "அறத்தவரே! தனதத்தர் மாளிகை வரை தாங்கள் எழுந்தருளுவது மிக நல்லது. அங்கிருந்து அவர் அரன் தலையில் வீற்றிருக்கும் நங்கையாம் கங்கை வரை வருவார். மாலையிலே நன்முழுத்தத்திலே கங்கை யின் தூயநீரிலே சங்கற்பம் செய்து தமது முழுச்செல்வத்தையும் தங்கள் திருவடிகளுக்கு ஒப்படைப்பார். தாங்கள் இந்த இசைவு தராதிருக்கும்வரை நான் இங்கிருந்தும் அடிபெயரமாட்டேன்." பூசாரி அடங்கிவிட்டான். என்னிடம் சொன்னான்: "நீ மிகுந்த பிடிவாதக்காரன். அன்பன் எதையும் செய்விப்பான் அல்லவா? நான் போகிறேன்; ஆனால் உன்னோடு வரமாட்டேன். இங்கிருந்து நீ ஓடு." வரும் செல்வத்தில் நான் ஒரு பங்கு கேட் பேன் என்று பூசாரி நினைத்தான் போலும். நான் கும்பிட்டுக் கூறினேன்: "உங்களால் அஃதெப்படி இயலும்? தாங்கள் வணிகர் தனதத்தரின் மாளிகையைப் பார்த்திருக்கின்றீரா?" நான் வணிகத் தனத்தத்தனை மூளையில் படைத்தேன். அவனது மாளிகையையும் அப்படியே படைத்து விட்டேன். வியப்பு என்னவெனில் வணிக தனதத்தனும் உண்மையில் இருக்கின்றான். அவன் மாளிகையும் நகர முனையில் இருக்கிறது போலும். அதனைப் பூசாரி பார்த்து வைத்திருக்கின்றான். "ஆம் ஆம்! பார்த்திருக்கிறேன். மாளிகை முன்னர் உயர்ந்த அரச மரம் உள்ளதே!" என்றான். நான் உவகையோடும் உரைத்தேன்: "வாழ்க பேரறத்தவர்! அதே அரச மரத்தின் முன் இருக்கும் பெருமாளிகையில்தான் வணிகர் தனத்தத்தர் உறைகின்றார். தனதத்தர் மாளிகைக்குப் போக விருப்பமில்லையாகில் அரசமரத் தின்கீழே தனதத்தரை எதிர்பாருங்கள்." பூசாரி பூரித்துப் புகன்றான்: "நான் அரசமரத்தருகேதான் எதிர்நோக்கி நிற்

பேன்.'' தலைவணங்கி ஒரு மருங்கே சென்றேன். சிறிது நேரத்தே பூசாரி அரக்கு நிறந்தோய்ந்த துகிலுடுத்திக் கொண்டு தோளாடையைச் செம்மைப்படுத்திக் கொண்டு கரிப்பொடிச் சிமிழ் கைக்கொண்டு புறப்பட்டுவிட்டான். அவன் நொண்டி நகர முனை மாளிகை சேர இரண்டு நாழிகையும், எதிர்நோக்கு தலுக்கு இரண்டும், திரும்பிவர இரண்டும் ஆக மொத்தம் ஆறு நாழிகை நேரம் பிடிக்கும். இதற்குள் வேறு காப்புள்ள இடம் கண்டுபிடித்தற்கு வேண்டிய நேரம் இருக்கும். நான் வெளி முற்றத்து இல்லத்திற்குச்சென்று நிபுணிகையைக் கூப்பிட்டேன். அவளும் மெல்லிய குரலில் விடை பகர்ந்தாள். முன்னரே என்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் சிரித்துச் சிரித்துச் சொன்னாள்: ''அவிநயம் மிகத் திறமையாக இருந்தது. பட்ட! பூசாரி இங்கு வந்து ஏராளமான உணவுப் பண்டங்கள் வழங்கிச் சென்றான். மாலைவரை அவன் அரசமரத் தின்கீழே எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். நீ படைத்த அரச மரம் உண்மையிலேயே இருக்கின்றது. இங்கிருந்து அது ஒரு கல் தொலைவில் உள்ளது. இரவு மிகுநேரம் வரை அவன் திரும்பி வரமாட்டான். அவன் இராக் குருடன். இதற்குள் ஏதேனும் ஏற்பாடு செய்வதானால் செய்க. பட்டம் பெருமாட்டியவர்கள் வருத்தமுடன் இருக்கின்றார்கள்.'' அரண்மனையில் அரசியைப் பணிப்பெண்டிர் பட்டம் பெருமாட்டி (பட்டினி) என்றழைப்பர். இனி இளவரசியை நான் பட்டம் பெருமாட்டி என்றே அழைப்பேன்.

பட்டம் பெருமாட்டியின் துயரம் கேட்டு எனக்கு மிகுந்த வருத்தமுண்டாயிற்று. ஆறுதல் செய்யும் நோக்கத்துடன் உரக்க உரைத்தேன்: ''பட்டம் பெருமாட்டி, வருத்தப்படவேண் டாம். இப்போதே சென்று ஏதேனும் ஏற்பாடு செய்கின்றேன். அக்கம்பக்கம் என்ன இருக்கிறது என்ற புலன் இன்னும் விளங்க வில்லை. பூசாரி பேச்சுவாக்கில் தெரிவித்தான்: ''சற்றுத் தொலைவில் பௌத்த அறப்பள்ளி ஒன்றுள்ளது. ஆங்குச் சுகத பத்திரர் இருக்கின்றாராம். அவர் பௌத்த துறவியாக இருக்க லாம். ஒருமுறை ஆங்குச் சென்று ஏதேனும் வழி பிறக்குமா என்று நோக்குகின்றேன். பௌத்த துறவிகளுக்கு இடங்களின் விவரம் நன்றாகத் தெரிந்திருக்கும்.''

எனது மொழியைப் பட்டம்மை கேட்டுவிட்டாள்; உண்மை யில் அவள் காதில் விழவேண்டும் என்றே அம்மொழிகள் மொழிந் தேன். என்னை அழைத்து மொழிந்தாள்: ''என்ன சொன்னாய்

பட்ட? தட்ச சீலக்கு அறம் பரப்பச் சென்ற சுகதபத்திரரா? நாலந்தாவின் ஆசாரியர் சீலபத்திரருடன் கல்வி பயின்றவரா என்ன?''

''பெருமாட்டி! எனக்கொன்றும் தெரியாது. அருகிலுள்ள பௌத்தப் பள்ளியின்கண் சுகதபத்திரர் என்ற துறவி உறைகின்ருர் என்றே கேள்வியுற்றேன்.''

''உசாவி அறிந்துகொள், செம்மல்! நாலந்தாப் பல்கலைக் கழகச் சீலபத்திரரின் கூடப் பயின்றவர் சுகதபத்திரர் என்ருல் என் ஊழ் நன்மையுடைத்தாகவே ஆகும். அவர் என் தந்தைக்கு ஒப்பாவார். அவருக்கு ஒரு செய்தி.'' ''திருநிறை செல்வீ! உடனே புலன் ஆராய்கின்றேன். அவரே ஆயின் செய்தி என்ன, கூறுக'' என்றேன் நான்.

பெருமாட்டி கூறினுள்: ''சொல்லுக, கடவுள் மகன் துவரமிலிந்திரன் மகள் உங்களுக்கு உள்ளங்கனிந்த வணக்கஞ் செய்கின்ருள்; அருள் உண்டேல் தங்கள் காட்சி பெறக் காத்திருக்கின்ருள் என்று.''

இந்தச் செய்தி கேட்டுத் திடுக்கிட்டு ஒரு நொடிக்கு உணர்வற்று மரம்போல நின்றேன். ''என்ன, தாங்கள் வீரர்தம் செம்மல்—பகைவர்தம் மடங்கல்—வாலீகம் ஒடுக்கியவர்—எல்லைப் புறக் காட்டு மாந்தருக்கு வடவைக்கனல் போன்றவர் துவரமிலிந்திரரின் திருமகளா?''

இளவரசியின் கண்கள் கீழே நோக்கின. மிகப் பரந்த தாமரைக் கண்களில் நீர் ததும்பிற்று. கட்டிய குரலால் கூறினுள்: ''ஆம் செல்வ!''

சிறிது நேரம்வரை நான் கொண்ட இறும்பூதிற்கு அளவே இல்லை. இத்துணைப் பேரழகு, எம்மாதரிடமும் காணமுடியாத வீரம், கற்பு, உள்ளத் தூய்மை சிறந்த பண்பு—எல்லாம் இவளிடத்தன்றி பின்னர் வேறு யாரிடத்தில் அமையும்? துவரமிலிந்திரருக்கு வேறு எவ்வகை மகள் எப்படிப் பிறக்க முடியும்? இமய மலை தவிர வேறு மலையில் கங்கை பிறக்க முடியுமா? பாற்கடல் தவிர்த்து வேறு கடலில் கௌத்துபமணி தோன்ற முடியுமா? நிலமகள் தவிர வேறு யார் சீதையைப் பெற்றெடுக்க முடியும்? படைப்புக் கடவுள் ஓரவுள்ளம் கொண்டவனல்ல; தக்க இடத்தில் தக்கதையே படைத்துள்ளான். நான் உண்மையில் பேறு பெற்றவனே. நற்பண்புகளின் வடிவம் போன்ற இம்மாதர் திலகத்திற்குத் தொழும்பு பூணும் பேறு பெற்றவனே. ஆகா! இப்பூவரும்பைப் பறித்தெடுத்த மாபாவி யார்? தனது தகாத

ஆவலை நிரப்புதற் பொருட்டு இந்தத் தூய உடம்பைக் கெடுக்க நினைத்த தீயோன் யாவன்? வெண்ணிலா ஒளியை மங்கச் செய்ய எந்தத் தீய கருத்து முற்பட்டது? இளவரசிபால் என் உள்ளத்தில் பத்தி பதின்மடங்கு பெருகிற்று. மிகுந்த பத்தியோடும் கைகூப்பிக் கூறினேன்: "ஓ அரசி! தாங்கள் இடுங் கட்டளையைத் தவருமல் தலைமேல் தாங்குவேன். ஆனல் இன்றே இச்செய்தி எடுத்துச் செல்லுதல் ஏற்றதா இயம்புக. நாம் எத்தகைய நிலையில் இருக்கின்ருேம் என்பதை நினைத்துப் பாருங்கள்."

பெருமாட்டி புகன்ருள்: "செம்மல்! எனக்கொன்றுந் தெரியாது. தக்கதைச் செய்க. அந்தப் பௌத்த துறவி சுகத பத்திரராக இருப்பாராகில் நம் நிலைமையை அவரிடம் உரைப்பதில் கேடொன்றும் இல்லை." இவ்விதம் இயம்பிக் கொண்டே கண்ணீர் பொழியலானுள்.

நிபுணிகையும் நிறைந்த துயரத்தோடும் சொன்னுள்: "பட்டம் பெருமாட்டீ! அழாதீர்" அவள் அரசியின் கழுத்தினைக் கட்டிக் கொண்டாள். ஒன்றும் செய்யத் தோன்ருது கட்டை போல நின்றிருந்தேன். நிபுணிகை உடனே நினைவூட்டினுள்: "பட்ட, போய் வருக."

உடனே வெளியே புறப்பட்டேன். என் பின்னுல் பெருமாட்டியார் விக்கி விக்கி அழும் ஓசை கேட்டேன். உண்மையிலே அப்போது எனது உள்ளம் கட்டைபோல உணர்வு ஊற்றம் இல்லாதிருந்தது; இல்லையெனில் இத்துணைப் பெரிய வருத்த மதனை எங்ஙனந் தாங்க முடியும்? நிபுணிகை உள்ளே தாழிட்டுக் கொண்டாள். தடுக்க முடியாத விரைவோடும் பௌத்தப் பள்ளியை நோக்கி நடந்தேன். காலில் சுறுசுறுப்பில்லை எனினும் ஏதோ ஒன்று என்னை நெட்டித் தள்ளிக் கொண்டிருந்தது போலிருந்தது. என்ன, கடவுள் திருமகன் துவரமிலிந்திரனின் திருமகளுக்கு ஏற்றதொரு இல்லம், புகலிடம் கண்டுபிடிக்க முடியுமா? குணமலை சுகதபத்திரர் சீலபத்திரருடன் பயின்றவரா? இன்னேரன்ன பிற எண்ணக் கடலில் மூழ்கியவனுய் நடந்தேன்—பௌத்த இல்லத்தை நோக்கி நடந்தேன். பௌத்த இல்லம் இரண்டு மாடி கொண்டது. பௌத்தர்கள் இல்லம் வகுப்பதில் கையாளும் புதிய வழி இந்த இல்லத்திலும் காணப்பெற்றது. புறத்தில் இருந்தும் இரண்டாமாடிக்கு ஏறப் படிக்கட்டுக்கள் இருந்தன. மேன்மாடியில் இருந்தும் கீழ்மாடிக்கு வர உள்ளேயே படிகள் கட்டப்பெற்றிருந்தன. இரண்டாமாடிக்குப்

போகாமல் கீழ் மாடிக்கு வரவே முடியாது. இவ்வாறு இல்லம் இயற்றுவதால் என்ன பயன் பௌத்த நல்லறத்திற்கு ஏற்படு கிறதோ அறியேன். இந்நாட்களில் பௌத்தர் எல்லாப் பொருட் களையும் மறைபொருட்களாக்கிவிடுகின்றனர். நல்லது; இந்தச் செய்திகளால் அடியேனுக்கு என்ன நன்மை? பௌத்த மடத் திற்கு எதிரே வந்துவிட்டேன். சுகதபத்திரர் யார்? இதை முதலில் அறிந்தாக வேண்டும். எடுத்த வினைக்குத் துணை கிடைத்தாற்போதும். இல்லையெனில் வீணாக நேரத்தைக் கொல் வதில் பயனில்லை. இல்லத்தின் வாயிற்படியிலே ஒரு காவல் துறவி கையில் ஏதோ ஏட்டுச் சுவடி எடுத்து ஏதோ வரப்படுத்திக் கொண்டிருந்தான். அவனிடம் வினவினேன்: "அன்புடையீர்! குணமலை சுகதபத்திரர் இருக்கின்றாரா?" தலை எடுக்காமலேயே விடையளித்தான் 'ஆம்' என்று.

"நான் தங்களிடம் ஒரு செய்தி வினவலாமா?"

சிரித்தவாறு தலை நிமிர்ந்துச் செப்பினான்: "ஏன் ஒன்று? இரண்டு வினவுக."

"இந்தச் சுகதபத்திரர் யாவர்?"

துறவியின் கண்களில் சற்றுச் சினம் பொலிந்தது; அவன் உரைத்தான்: "தங்களுக்கு அடிகள் சுகதபத்திரரைத் தெரியாது? மன்னர் மன்னன் ஹர்ஷதேவன் அவரைத் தட்சசீலையினின்றும் இங்கு வரவழைத்துள்ளான். அடிகளின் திருவடித் துகளை ஏற்க நாளும் மன்னர் மன்னன் காத்திருக்கின்றான். அத்தகைய அடிகள் பெருமான் சுகதபத்திரரையும் தாங்கள் அறியாதிருக் கின்றீர்! வெட்கம்."

"இடியுண்டவன் போலாகிச் சொன்னேன்: "செம்மல்! நான் வெளியூரான்."

"எங்கிருந்து வருகின்றீர்?"

"மகத நாட்டிலிருந்து."

"செம்மல்! தாங்கள் மகதநாட்டு நற்பெயருக்கே கறையாக இருக்கின்றீர். உலகமெங்கும் தம் புகழ் பரப்பியவரும் நாலந்தா வின் சிறந்த ஆசாரியரும் ஆகிய சீலபத்திரருடன் எம் குணக் குன்று சுகதபத்திரர் பயின்றார். இத்தகையோரை நீர் அறிய வில்லை; எனினும் தாங்கள் மகதநாட்டினர் என்று மொழி கின்றீர்!"

எனதறியாமையை ஒப்புக்கொண்டு உரைத்தேன்: "அன் புடையீர்! அறியா மக்கள்மீது அருள் கூரவேண்டும். தங்களு டன் பேசியதால் நல்ல செய்தி அறியப் பெற்றேன். மிகவும்

தங்களுக்குக் கடன்பட்டுள்ளேன் நான். அடிகளைக் காண முடியுமா! தாங்கள் வழி செய்வீரா?''

"அடிகள் இப்போது ஓய்வில்லத்தில் இல்லை. தாங்கள் விரும்புவதென்ன? அவரது இசைவு பெற்று வருகிறேன்.''

"மகத நாட்டினின்றும் தட்சபட்டன், அல்லது பாணபட்டன் அடிகள் திருவடிகளை வணங்க விரும்புகின்றான். அவரிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கவும் விரும்புகின்றான் என்று கூறுக.''

"தாங்கள் அறநூற் போர் விரும்புகின்றீரா?''

"இல்லை, அடிகளிடம் இன்றியமையாததொரு வேண்டுகோள் விடுக்கவே விரும்புகின்றேன்.''

"உசாவி வருகின்றேன். சற்று அமர்க.''

சிறிது நேரத்திற்கெல்லாம் காவல் துறவி வந்தான். இப்போது என் திறத்து அவனுக்கு அக்கரை உண்டாகி உள்ளது கண்டேன். வந்ததும் வினவினான்: "தாங்கள் காலம் சென்ற மாபண்டிதர் சயந்தபட்டரின் கடைசிப் பேரப் பிள்ளையா? இதனை வினவுமாறு அடிகள் பணித்தார்.'' கேட்டதும் திடுக்கிட்டேன். எனில் அடிகள் என்னை முன்னரே அறிந்துள்ளார் போலும். கறைபடிந்த எனது வாழ்வு முழுவரலாற்றையும் கேட்டிருப்பார். நொடிப்பொழுதில் என் தலை சுழல்வதுபோல் காணப்பட்டது. வலிய முயன்று செம்மைப்படுத்திக் கொண்டு கூறினேன்: "ஆம் ஐய, காலஞ்சென்ற மாபண்டிதர் சயந்தபட்டர் பேரனே, இந்தத் தீவினையேன்.'' மறுமாற்றம் இல்லாமலேயே துறவி உள்ளே நழுவிவிட்டான். விரைவிலேயே திரும்பி வந்து செப்பினான்: "வருக. இதே நேரம் அடிகள் உங்களுக்குக் காட்சி தர அருள்பூண்டார். தாங்கள் பேறுபெற்றவர்.'' நான் காவல் துறவியைப் பின்பற்றினேன். 'கழுவில் கடிதில் தாமதமின்றித் தொங்குவதற்குச் சென்றேன்' என நினைத்தேன்.

இரண்டாமாடிக்கு நேரடியாக ஏறிக் கீழ் மாடியில் இறங்கி இருமருங்கும் திண்ணை பொருந்திய நெருங்கிய வழியூடே சென்று தரையில் காரைத்தளமிட்ட முற்றம் ஒன்றினை யடைந்தோம். இம்முற்றம் நடுவே ஒரு பரந்த உயர்ந்த அரசமரமிருந்தது. அதன் இருண்ட நிழலின்கீழ் அடிகள் அமர்ந்திருந்தார். அவர் அருகே இரண்டொரு மாணக்கர் இருந்தனர். நான் அணுகியபொழுது அடிகள் ஒரு மாணக்கனுக்கு ஏதோ அறிவுறுத்திக் கொண்டிருந்தார். நான் வந்ததை அவர் நோக்கவில்லை. இது நல்லதாயிற்று; ஏனெனில் என்னைச் செம்மைப் படுத்திக் கொள்ள நேரம் வேண்டியிருந்தது. அடிகள் மிகவும் முதியவர்.

தலை மழுங்கச் சிரைக்கப் பெற்றிருந்தது; எனினும் செவித் துளைக்குள் ஒன்றிரண்டு நரை மயிர் காணப்பெற்றன. முதுமை, அடிகளின் அழியாப் பெருமையை எவ்விதம் மிகுதிப்படுத்திய தென்ற உண்மையை அந்நரைமயிர் காட்டா நின்றன. அவர் கண்களில் நட்பும் அருளும் ததும்பின. அவர் சொல் உறுதியும் இனிமையும் நிறைந்திருந்தன. அவர் வகுக்கும் வரையறுப்பு முறை அறிவுக் கூர்மை பொருந்தியது; நம்பிக்கை ஊட்டக்கூடியது. சிறிது நேரம் அவரை உற்று நோக்கியவாறு இருந்தேன். தவம் எத்துணை வலிமையது! அஃதவர் உடம்பைப் புடம்போட்ட பொன்னுக்கிவிட்டது. அவ்வொளியில் ஒருவகை அமைதியும் பொழிந்து கொண்டிருந்தது. சிறிது நேரங்கழித்து அடிகள் என்னைப் பார்த்தார். அரன் தலைமுடியினின்றும் ஆயிரம் ஒழுக்குக்களாகத் தொடங்கிய தூயவானநதியின் மாபெரும்வெள்ளம் முற்றிலும் வெப்பத்தால் வெந்த நிலத்தைக் குளிரச் செய்தல் போல அடிகளின் கண்களினின்றும் எல்லையில்லாத அருள்வெள்ளம் பொழிந்து கொண்டிருந்தது. கழுத்தை என்பால் திருப்ப அவருக்குச் சற்றுக் களைப்பாகத்தான் இருந்தது. என்னைப் பார்த்துப் புகன்றார்: "செல்வ! வருக; நீ சயந்தபட்டரின் கடைசிப் பேரனல்லவா? சற்றுப் பார்க்கிறேன். ஆகா! முற்றிலும் சயந்தன் போலவே; அவன் என்னோடும் பயின்றவன் செல்வ! எங்கள் இருவரிடையே அளவற்ற அன்பு தவழ்ந்தது. முடிவு வரை அவன் என்னை உடன்பிறந்தான் என்றே கருதி இருந்தான். நான் தட்சசீலைப் பல்கலைக்கழகத்திற்குப் போனதிலிருந்து நான் அவனைக் காணவே இல்லை. நாற்பதாண்டுகள் பின்னர் அங்கிருந்து நாலந்தாப் பல்கலைக் கழகத்திற்குப் போந்த போழ்து முதன் முதல் சயந்தனைப் பற்றி உசாவினேன். அப்போது சயந்தன் வான் எய்தினன் என்று கேட்டு ஆற்றுத்துயருற்றேன். அதே நேரத்தில் நீயும் வீட்டைவிட்டு எங்கெங்கோ சுற்றித் திரிந்துகொண்டிருந்தனை என்றும் கேள்விப்பட்டேன். மிக நல்லது. நீ என்னைக் காண வந்தனை. என்ன செல்வ! வீடு திரும்பும் விருப்பமில்லை?"

அடிகள் கண்களில் நீர் ததும்பிற்று. பெரியாரன்பு, சிறிது வருத்தம் சிறிது ஆறுதல்—சிறிது பெருமை இத்தனையும் ஒரே நேரத்தில் நுகரத் தொடங்கினேன். முதியவர் என்னை நட்பு என்னும் சுவை வெள்ளத்தில் மூழ்கச் செய்துவிட்டார். நான் தழுதழுத்த குரலில் விடை இறுத்தேன்: "வீடு செல்ல விருப்பந்தான் அடிகளே! ஒரு தனித் தொழிலில் பிடிபட்டேன். அடிகளே!

என் பாட்டனர் பெயரைக் கேட்டு மகிழ்ந்தீர். இப்போது நான் ஒரு தொல்லைக்குள் அகப்பட்டுக் கொண்டேன்; அஃது பெருமைக்குரியதாயினும் எனது உயர் மரபு மேன்மைக்கு ஏற்றதல்ல; ஆதலின் அதைப்பற்றித் தங்கள் துணை பெறலாமென வந்தேன். அது தங்களுக்குத் தொல்லைதான் தரும். நற்பேறிழந்த நான், துணை தேடிவந்த அந்தத் தொழில் அருவருக்கத் தக்கதன்று. தாங்கள் மாருக நினைக்கவேண்டா.'' அடிகள் கண்கள் தாமரை போல மலர்ந்தன. ''சொல்க செல்வ! என்ன தொழில்?''

சிறிது நேரம் இங்குமங்கும் பார்த்துப் புகன்றேன். ''அதனை வெளியிடத் தனியிடம் வேண்டும்.''

அடிகள் தம் மாணுக்கரைப் பார்த்தார். பொருள் தெரிந்து கொண்டு ஒருவன் தவிர அனைவரும் அப்பால் போயினர். ஒரு வேளை அவனது பாடம் முடியவில்லைபோலும்! அடிகள் என்னைப் பார்த்துக் கூறினர்: ''சற்றுப் பொறுப்பாயாக. நீடுழியன் என்ற இவனது ஐயத்தீர்ப்பு நடுவில் நின்றுவிட்டது.'' பின்னர் அச்சிறுவனை நோக்கி நுவன்ருர்: ''ஆம், செல்வ! பெருமான் அசங்கன் பாழ்மைக்கு ஏன் இத்தனை சிறப்பு அளித்தனன் எனக் கேட்டுக் கொண்டிருந்தனை. எந்தப் பொருளுக்கு இருப்பு என்பது இல்லையோ, இல்லாமலும் இல்லையோ அதற்குப் பாழ்மை என்றேன் பெயரிட்டார்? உண்டு என்பதும் இல்லையென்பதும் இரண்டும் இல்லை. இந்த இரண்டுக்கும் குறைபாடில்லை; அதனைப் பாழ்மை என்று ஏன் அழைத்தனன் என்று கேட்டனையா?''

''ஆம் பெருமான்.''

''எனில் நெடியவ, நீ வேறேதேனும் தக்க சொல் பொறுக்கி எடுக்க முடியுமா? ஐயப்பட வேண்டாம். தக்க சொல் ஒன்று கூறு.'' ''ஆம் பெருமான்; பற்றுக்கோடின்மை உயர் பொருண்மை இவை போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்று உரைத்தால் தவருகுமா?''

''நல்லது நீடுழிய. இன்று பௌத்தப் புலவரில் ஒரு கூட்டம் பற்றுக் கோடின்மை என்ற சொல்லுக்கு மிகுந்த சிறப்புத் தருகின்றது. இல்லாமலும் இல்லை என்ற பொருளைப் பற்றுக் கோடின்மை எனும் சொல்வாயிலாகத் தெரிவிக்க இயலுமா?''

''இயலாது பெருமான்.''

''பின்னர், நெடியவா! நீ சொன்ன இரண்டாம் சொல் உயர்பொருண்மை ஆகும். இத்தொடர் மொழியில் பொருண்மை எனும் சொல்லால் பொருளின் இருப்பை ஒப்புக்கொள்ள வேண்டி

யுள்ளது ; உயர் பொருளுண்மை என்ற தொடரில் இருப்பதும் இல்லை என்ற பொருள் அடங்கி உள்ளதா?''

"இல்லை தலைவ !''

"எனில் நெடியவா ! நீ சொன்ன இரண்டு சொற்களும் பொருளற்றுப் போயின அல்லவா ?''

"அப்படித்தான் தென்படுகிறது ஐயன்மீர் !''

"நல்லது குழந்தாய் ; பாழ்மை, பற்றுக்கோடின்மை, முழுத் துறவு இவை உள்ளத்துக் காட்சியில் உறையும் கருத்து வடிவங்களாம். அப்பொருளை விளக்கமாகச் சொல்லாதது மொழியின் குறைபாடாகும். அறிவுறுத்த வழக்கில் எடுத்துக் கொண்ட சொல்மட்டும்தான் இவை யாவும். நீ வெறும் சொற்பொருளில் இறங்காதே ; ஆழ்ந்து நினைப்பாயாக ; இது ஆழ்ந்த மறையாம். வெறும் நூல்களைப் பயில்வதால் மட்டும் புரிந்துகொள்ள உன்னால் முடியாது.''

"எனில் இத்தனை ஆசிரியப் பெருமக்கள் இயற்றிய இந்நூல்கள் எல்லாம் பொருளற்றனவா, பெருமான் ?''

"இல்லை, நீடுழிய ! ஆசிரியப் பெருமக்கள் அறிவுச்சுடர் ஆகிய விளக்கேற்றி வைத்தனர். 'விளக்கு என்பதென்ன ?' என்று வினவப் புகுந்தால் விளக்கின் உதவியான் ஒளிபெறும் பொருட்களை நீ பார்க்க முடியாது. நீ விளக்கை ஆராய்ந்து கொண்டிருக்கின்றாய் ; அது விளக்கம் செய்யும் உண்மையைக் காணவில்லை.''

"விளக்கின் குறைபாட்டினால் ஒளிக்குறைவு ஏற்படுவதில்லையா பெருமான் ?''

"வீண் சொற்போர் புரிகின்றாய் நீடுழிய ! உவமை ஒரு சார்பானதே. அச் சொல்லுக்குள் அடங்கியிருக்கும் அறத்தினது உண்மையைக் கண்டுகொள். அறத்தின் பொதுமையை நோக்குக ; அப்போது உண்மையின் பொருள் அறிவுக்குப் புலனாகும். நெடியவ ! இன்று புத்தர் பெருமானது நல்லறத்தே வீண் சொற்போர் மிகுந்தவாறுள்ளது. அடக்கங்கொண்டு ஆசிரியப் பெருமக்கள் மொழிந்தனவற்றின் குறிக்கோளைக் கடைப்பிடி. செல்வ, வெற்றுச் சொற்போர் நல்லொழுக்கத்திற்கு நெருப்புப்போன்றது. இப்பொழுது போ ; இன்றியமையாததொரு செயல் உள்ளது. பின்னர் வா ; துறவிகளிடம் கூறுக, நான் தட்சபட்டனொடும் பேசும்வரை இங்கு வரக்கூடாது என்று.''

கட்டளைபெற்று மாணவன் அப்பாற் சென்றான். அடிகள் என்னை ஆவலுடன் பார்த்தார். அடிகள் கற்பிக்கும் முறையின்

சிறப்பை, அன்பு கனிந்த வழியைக் கண்டு மிக வியந்தேனுதலின் எனது குறிக்கோளேயே மறந்துவிட்டேன். முன்னுரை இன்றியே நேரடியாகக் கூறினேன்: "பெருமான், போர்த்திருவை மணந்தவன், வாலீகம் வென்றவன்—எல்லைப்புற எதிரிகளுக்குக் கூற்றுவன்—வடவைக் கனல் போன்றவன்—கடவுள் மகன் துவரமிலிந்திரன்—திருமகள் தங்களது காட்சி பெற விரும்புகின்ருள்."

வியப்பினுல் நெட்டித் தள்ளப்பெற்றவர் போன்று, எனது செய்தி கேட்ட அடிகள் வாயடங்கிப்போனுர். முன்னுல் சற்றுக் குனிந்தவராய் விரிந்த கண்கள் மூடாமல் என்னைப் பார்த்துப் புகன்ருர்: "என்ன சொன்னுய் செல்வ! சந்திர தீதிதி அம்மையார் கடவுள் மகன் துவரமிலிந்திரன் ஒரே மகள் இன்னும் உயிரோடிருக்கின்றனளா? அவள் எங்கே? எந்நிலையில் இருக்கின்ருள்? அவள் நலமா? எல்லைப்புறக் காட்டுமிருண்டிகள் அவளைக் கைப்பற்றித் தூக்கிச்சென்றனர் என்று கேள்விப்பட்டேன். நீ தவறில்லாமல் பார்த்தாயா செல்வ? அவள் இளமையின் இனிமை—தூய்மையின் துளங்காத ஊற்று—அழகின் அழியாத களஞ்சியம்—உள்ளத் தூய்மைக்கு உற்ற புகலிடம்—பத்தியின் படிவம்—அருளின் ஒளி வடிவம்! ஆகா! துவரமிலிந்திரன் கண்ணுள்மணி இன்னும் உயிர்த்திருக்கின்ருளா? அவளை உடனே காண விழைகின்றேன்."

சந்திர தீதிதி என்ற பெயரை முதன்முதலாகக் கேட்டேன்; கை குவித்துக் கூறினேன்: "பெருமான்! அருகிலேயே அரிவை இருக்கின்ருள். ஆனுல் முழு நிகழ்ச்சிகளையும் கேட்டருளிப் பின்னர்த் தக்கது செய்க!" என்று தொடங்கி நேற்று இரவு தொட்டு இதுவரை நடந்தன யாவும் ஒன்றுவிடாமல் விவரித்தேன். இயல்பான அமைதிகொண்ட அடிகளின் தாமரை முகத்தே மடிப்பு வரி தோன்றியது. சிறிது நேரம் வரை எனது முகத்தை உற்றுநோக்கியவாறிருந்தார். பின்னர் சொன்னுர்: "செல்வ! நீ சயந்தன் பேரனுக இருக்கத்தக்கவனே." பிறகு சற்றுப் புருவம் வளைத்துப் புகன்ருர்: "மௌக்கரி மரபு பெருகுவதாக! இந்த மௌக்கரி சிற்றரசு முழுமௌக்கரி மரபின் நற்பெயரிலே அழியாக் கறையை உண்டாக்கிவிட்டது. கேடு கெடுக! கேடு கெடுக!!" அடிகளது முகத்தைப்பார்த்தவாறிருந்தேன். அதனில் எத்தனையோ கருத்துக்கள் அரும்பி மறைந்தவாறிருந்தன. உள்ளத்திற்குள்ளேயே யாரோடோ பேசிக்கொண்டிருந்தார் போலக் காணப்பெற்ருர். வாய்விட்டொன்றும் விள்ள

வில்லை. சிறிது நேரம் இருவரும் ஒன்றும் இயம்பாது அமர்ந் திருந்தோம். பிறகு ஒரு மாணவனை அழைத்து ''விரைவிலேயே குமரன் கிருஷ்ணவர்த்தனன்பால் செல்க; அடிகள் மிகமிக இன்றியமையாத செய்தியின் பொருட்டாக உன்னைப் பார்க்க விழைகின்ருர் எனக் கூறுக'' என்று பணித்தார்.

மாணவன் சென்ற பின்னர் என்னை முன்னிச் சொன்னுர்: ''அரச தண்டனை மிகக் கடுமையானது. நீ துணிவுள்ள செயலைப் புரிந்தனை. உன் திறனைப் பாராட்டுகின்றேன். ஆனல் குறுமன்னனது மாதரில்லத்துள் இரவு நேரத்தே புகுதல் சட்டத் திற்கு எதிரானது. நீ இங்கிருப்பாயாகில் அரச தண்டனைக்குட் படுவாய். விரைவிலேயே சந்திரதீதியையும் நிபுணிகையையும் அழைத்துக்கொண்டு மகத நாட்டை நோக்கிச் சென்றுவிடு. நான் ஏற்பாடு செய்து தருகின்றேன். அவளுக்கு ஒரு கேடும் நிகழாமல் இவ்விடத்தை விட்டேக ஏற்பாடு செய்ய முயல் கின்றேன். எனது சார்பில் சந்திரதீதிக்கு எனது வாழ்த்துக் கூறுக. தக்க ஏற்பாடுகள் நிறைவேரு முன்னர் இளவரசியைப் பார்க்கும் ஆவலை அடக்கிவைக்கின்றேன். நீ சென்று அச் செல்விக்கு ஆறுதல் கூறுக. அங்கு அவளுக்கு யாரும் இனி ஒரு கேடும் செய்ய முடியாது என்ற நம்பிக்கை ஊட்டுவாயாக. பூசாரியிடம் எச்சரிக்கையாக இருப்பாயாக. அவன் அறிவிலியும் இழிவானவனும் ஆவான்.''

நான் பத்தியொடும் பணிந்து விரைவாகக் கொற்றவை மன்றம் நோக்கிச் சென்றேன்.

## உயிர்ப்பு ஐந்து

பௌத்தப்பள்ளியை விடுத்து வெளிப்போந்தபோது உள்ளம் உவகை யுற்றிருந்தது. போம்பொழுது வழிமீது அக்கரை செலுத்தவில்லை. எண்ணங்களில் முழுகியவன் குருடனுகின்ருன். இந்நேரம் மரங்கள்மீதும் கொடிகள்மீதும் இளவேனில் முழுச்செல்வாக்குக் கொண்டிருப்பதைக் கண்டேன். பூங்கொத்துக்களின் இனிய மணம் தம்மை இழுக்கச் சுரும் பினம் மாமரங்களைச் சூழ்ந்துகொண்டது. மலர்களினின்றும்

பொழிந்த மஞ்சள் நிறத் தாதுப்பொடி பூங்காவின் இடங்களைக் கவிந்து மணல்திடல்களையே மஞ்சள் நிறமாக்கிவிட்டது. வண்டுகள் மலர்த்தேனைப் பருகி வெறிமிகுந்து கொடிகளாகிய ஊஞ்சலில் அமர்ந்து ஊஞ்சலாடத் தொடங்கின. குயில்கள் இளந்தளிரும் பூங்கொத்துக்களும் நிறைந்த மாமரக்கிளைகளில் அமர்ந்து பொன்தளிர்களிடையே மறைந்து பூந்தேனை உண்டு வெறிகொண்டு மாம்பூவை மென்றதால் குரல் இனிமை மிகக் கொண்டு பாடத் தொடங்கியதால் அவற்றின் இசை இனிமை இன்னும் பதின்மடங்காகப்பெருகியது. அவை தேனைப் பருகிய தால் மரத்தின்கீழ் தேன் துளிகள் பொழிந்தன. சில மரங் களினின்றும் சில கொடிகளினின்றும் மலர்கள் உதிர்ந்துகொண் டிருந்தன. சுரும்பினங்களது பொறையைத் தாங்க முடியாது மலரிழைகள் உதிர்ந்தமையால் கொடிமனைகள் அழகில் மிளிர்ந் தன. பற்பல இனப்பறவைகள் அமர்ந்து இசைபாடுவதால் மரச் செறிவுகள் மிக அழகாகக் காணப்பெற்றன. வாதநாராயண மரங்கள் அடிமுடிவரை சிவந்த மலர் செறிந்திருத்தல் மேருமலையில் திடீரெனப் பதுமராகக் கற்கள் தோன்றினபோலக் காட்சியளித்தன. நன்றாக மலர்ந்த சண்பக மலர்களால் நகரமுற் பகுதி மணத்தில் முழுகியது. தாமே தோன்றி வளரும் ஆலமரங் களது ஆழ்ந்த குளிர்ந்த நிழலால் வழிப்போக்கர் களைப்பின்றி உள்ளமும் மெய்யுங் குளிர்ந்தவராய்ச் சென்றனர். கன்னேசி மக்களுக்கு மிகவும் விருப்பந் தருவன மாமரங்கள். இந்நேரம் மாமரங்களின் மணவெறி முழுக்கன்னேசிக்கும் பெருமையின் வெறியறிகுறியாகும். பங்குனித் திங்களின் நடுவாக இருக்கும் மாங்கனிக்குக் காலம் தொடங்கிவிட்டது.

பறந்து சென்றனன் போல விரைந்தேன். எனது குறிக் கோள் நிறைவேறிற்று. அடிகளை அணுகியதால் உள்ளத்துச் சுமை சிறிது நொய்தாயிற்று. இப்போது இளவரசியை வேறு சிறந்த இல்லத்திற்கு அழைத்தேகும் கவலை மிகுந்தது. மறந்தே போனேன்; அம்மையாருக்கு உணவும் ஓய்வும் ஏற்படுத்த மறந்தேபோனேன். நேற்றிரவிலிருந்து இதுவரை அரசியும் நிபுணிகையும் பட்டினியாகவுள்ளதை மறந்துவிட்டேன். நானும் அப்படியே. அப்போது ஒரு யாமப்போது கழிந்துவிட்டது. கடைத்தெரு வழியாகச் சென்று சில பழங்கள் திரட்டிக்கொண்டு போகலாம் என்று நினைத்தேன்; ஆனால் அதனினும் அரசிக்கு ஆறுதல் அளிப்பதே மிக இன்றியமையாததென நினைத்தேன். கொற்றவை மன்றத்தருகே அந்நேரம் யாருமில்லை. முற்றத்து

இல்லத்தின் கதவைத் தட்டியதும் நிபுணிகை கதவு திறந்தாள்; நான் உள்ளே புகுந்ததும் எச்சரிக்கையாகத் தாழிட்டாள். எனதுள்ளத்தில் இப்போது உவகை பொங்கிற்று. அது செருக்கும் மிடுக்கும் கொண்டிருந்தது. நான் இல்லாமல் இருந்திருந்தால் இவ்விரு பேதைகள் நிலே என்ஞகும்? ஆனல் அதே நேரம் எனது செருக்கு உருக்குலேந்து போனது நல்லதாயிற்று. பட்டம்மையார் எங்கேயென நிபுணிகையை வினவினேன். விரலால் பேசாமல் இருக்குமாறு குறித்து இல்லத்தின் ஓரத்தே பார்க்குமாறு சுட்டிக் காட்டினுள். பட்டம்மை குளித்து ஆடை மாற்றித் தொழுகையில் முழுகியிருந்தாள். அவள் எதிரே ஈர மண்மேடை—அதன்மீது நிபுணிகையின் தொழுகைக்கடவுளான மாவராகப்படிமம் அமர்ந்திருந்தது. எளிய ஆடையால் பட்டம்மையின் அழகு பதின்மடங்காகப் பெருகியது. நிறையமைதி பூண்டு படிவத்தின் எதிரே தொழுகையில் முழுகியவளாய்க் கூம்பிய தாமரைக் கைகளோடும் அமர்ந்திருத்தல் உச்சி முடி வரை மலர்ந்த மல்லிகைக் கொடியினுல் கவியப்பெற்ற இளம் அசோகம் கொழுந்தளிரோடும் பொலிவுறும் காட்சியை நினே வூட்டியது. தொழுகையில் ஊன்றிய இமையாத இரு கண்கள் மாவராகனின் எல்லேயற்ற அழகொளியால் கவ்வப்பெற்ற துறுதுறுவென்ற இரு கரிக்குருவிகள் ஓவியத்தில் தீட்டப்பெற்றன என அசையாமலிருந்தன. பட்டம்மையின் நாற்பாலும் பத்தியலேகள் பொழிந்தவாறிருந்தன. சிறிது நேரம் வரை பேசாது அவளேப் பார்த்தவாறிருந்தேன். எத்துணே வியப்புத்தரு காட்சி! படைப்புக் கடவுளின் இயல்புகெட்ட பான்மை எத்தகைத்து! எத்துணே மெல்லிய உள்ளம்! எத்துணேகொடிய தவம்! எத்தகைய இளங்கொடிபோன்ற உடம்பு! எத்துணேப் பொறைநிறை கருத்து! இத்தகைய வடிவத்தைக் கண்டு தான் மாகவிஞன் காளிதாசன் பொன், தாமரை இரண்டின் அழகுகள் நிறைந்த உடம்பு பற்றிக் கற்பனே செய்தார்:

த்ருவம் வபுः காஞ்சன—பத்ம தர்மி ம்ருதுப்ரக்ருத்யாச
ஸ ஸாரமேவ ச

[உண்மையில் இவள் பொன் தாமரைகளின் பண்புகளே உடையாள். பொன்னின் மென்மை ஒளியும் தாமரையின் சுவை இனிமையும் கொண்டிருக்கின்றுள்.]

இந்த எண்ணவூற்றினுல் நான் தகாதவாறு அம்மையை மிகுந்த நேரம் பார்த்துக் கொண்டிருந்தேனுக நிபுணிகை வேறு

இடத்திற்கு அகலுமாறு குறிப்பினுல் கூறினுள். இந்நடத்தையால் எனக்குக் கழிவிரக்கம் தோன்றியது. இது காரணமில்லாக் கழி விரக்கந்தான். நிபுணிகையுடன் கதவருகே வந்தேன் ; அவளுக் குப் பௌத்தப் பள்ளியில் நடந்தன யாவையும் மெதுவாகச் சொல் லத் தொடங்கினேன். கதையைத் தொடங்குவதன் முன்னம் சற்று நீளமாக முகவுரை இயற்றலானேன். நிபுணிகை இப்போது சிறிது மகிழ்வுற்றிருந்தாள். அவளும் குளித்து முடித்து விட்டிருந்தாள்; அதனுல் இரவு விழித்த பெரும்பாகக் களைப்பை நீக்கிவிட்டாள் ; எனினும் அவள் கண்களில் சிறிது களைப்புத் தோன்றியது ; ஆனுல் உள்ளத்துறுதி விழிப்புக் களைப்பை அழகின் தோற்றமாக மாற்றிவிட்டது. அவள் கண்களைக் கண்டபோது மலர்ந்த கருங்குவளைமீது நிலாபடிந்ததுபோன்ற காட்சியைக் கண்டேன். நிபுணிகையின் உவகையைக் கண்டு மகிழ்ச்சியுற்றேன். என் மனத்துள் பதுங்கிய செருக்கு வெளிப்பட்டது. எனது பெரு மையைத் தெரிவிக்கவே நான் பேச்சைத் தொடங்கினேன்: "நேற்று உன் நற்பேற்றினுல் என்னைக்காண நேர்ந்தது."

"ஆம் பட்ட."

"நீ தனியாகவே பட்டம்மையை இங்கு அழைத்து வந்திருந் தால் உனக்கு எல்லையற்ற தொல்லை ஏற்பட்டிருக்கும்."

"ஏற்பட்டிருக்கும்."

"இப்போது நான் செய்துகொண்டிருப்பவை நீ தனியாக இருந்திருந்தால் நிறைவேறி இரா."

"இவ்வளவும் நிறைவேறி இருக்கும்."

"உனக்காக யார் செய்திருப்பார்கள்."

"பூசாரி."

"பூசாரியா ? நீ பூசாரியிடம் அஞ்சி இருந்தனை !"

"பூசாரியைப் போன்ற ஒரு முட்டாளுக்கு அஞ்சுவேனுயின் இந்த ஆறு ஆண்டுகளாகப் பிழைத்திருக்கமாட்டேன், 'முன் னமே முடிந்துவிட்டிருப்பேன், பட்ட !"

"ஆனுல் இன்று வைகறையில் அச்சங்கொண்டிருந்தாயே."

"ஆம், அச்சந்தான் கொண்டிருந்தேன்."

"எனில் நீ யாருக்கு அஞ்சினை."

"உனக்கு !"

"எனக்கா அஞ்சினை ?"

"ஆம் !"

"நீ எனக்காக ஏன் அஞ்சினை, நிவுனியா !"

"என்ன சொல்வது பட்ட ! என்னைப்போன்ற மாது உன்

னைப்போன்ற ஆடவனுக்காக அஞ்சுகின்ருள் என்ற உண்மையை இன்றுவரை நீ புரிந்துகொள்ள முடியவில்லை என்ருல் இப்போது உன்னுல் புரிந்துகொள்ள முடியாது.''

நான் உண்மையில் கலவரமுற்றேன். நிபுணிகை எனக்காக ஏன் அஞ்சவேண்டும்? என்னிடம் என்ன தகாத நடத்தை கண்டாள்? நிபுணிகை உண்மையைத்தான் உரைத்தாள். நான் இதுவரை அந்த அறியாத காரணத்தைச் செம்மையாகப் புரிந்துகொள்ளவில்லை. சிறிது உய்த்துணர்ந்தேன்; ஆனுல் எனது தெளிவு மீது எனக்கே நம்பிக்கை இல்லை. நான் வியப் போடும் நிபுணிகையைப் பார்த்தவாறு இருந்தேன்; பின்னர் தோற்றவன் எனச் சொன்னேன்: "எனில் நிவுனியா, நான் போகட்டுமா?''

நிபுணிகை சிரித்தாள். அவள் கண்களில் ஒரு குறும்பு செறிந்திருப்பதைக் கண்ணுற்றேன். கூறினுள்: "நான் நின் திறத்தே அஞ்சுதற்கு இதுவே காரணம். எந்தச் சொல்லிற் காக வெகுண்டு போகின்றேன் என்று கூறி விடுவாயோ என அஞ்சி வந்தேன்.'' வியப்பான பிதிர் இது. சிறிது நேரம் ஒன்றும் விள்ளாதிருந்து சொன்னேன்: "நிவுனியா! தோல்வி ஒப்புக்கொள்கின்றேன். உன் தொழிலுக்கு நான் தேவை யில்லை; என்னிடம் அஞ்சுகின்றனை; நான் போய்விடுவதும் சரியன்று; எனக்கொன்றும் புரியவில்லை.'' நிபுணிகையின் நிமிர்ந்த கண்களில் சொல்லற்கரிய மகிழ்ச்சி பொலிந்தது. கூறினுள்: "யார் தோற்றனர் என்பதை நீ புரிந்துகொள்ள வில்லை. தோற்பது யாரென அறிந்தாயாகில் யார் அஞ்சுகின் ருர் என்பதையும் அறிந்துகொள்வாய். பட்ட! நீ எளியன்; கள்ளங்கபடம் அற்றவன். இவ்வையத்தில் உடம்பொடு கூடிய தேவதை நீ.''

நான் இன்னும் குழப்ப முற்றேன். நான் கள்ளங்கபடமற்ற வன், இருக்கலாம்; நான் தேவதை, இருக்கலாம்; இதில் அஞ்சு தற்கு என்ன உள்ளது? நினைத்து இன்னும் ஏதேனும் கூறுவேனு கில் ஆடவர் உள்ளத்தை ஒரு பார்வையிலேயே வீழ்த்தும் பார்வை பெற்ற நிபுணிகை குறுக்கு வழியில் சொல்லாடி என்னை மீண் டும் வாய் திறவாதபடி செய்து விடுவாள் என்று அஞ்சினேன். பேசாதிருப்பதே அறிவுடைமை. முறுவலித்துப் பேசாதிருந்து விட்டேன். நிபுணிகை சிரித்தவாறே இருந்தாள். நானும் நகைக்கத் தொடங்கினேன். பொருளை மாற்றக் கூறினேன்: "கேள் நிவுனியா, பட்டம்மைக்கு இன்றே வேறு நல்ல இல்லம்

ஏற்பாடாகிவிடும். இப்போது அவள் உணவுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். நேற்று அவள் அரண்மனைக்குள் அரசவுணவு உண்டிருப்பாள். இன்று சுவையற்ற உணவு கொடுக்கலாகாது.''

நிபுணிகை மகிழ்ந்தாள். என் சொல்லுக்கு ஒரு மதிப்பும் கொடுக்காதவள்போலக் காணப்பெற்ருள். பட்டம்மைக்கு நல்ல இல்லம் கிடைக்கும் என்பதனை அறிந்திருந்தாள். அவள் தெரிவித்தாள்: ''இல்லம் ஏற்படாகிவிடும். அக் கவலையை விட்டொழிக. உணவுக்கு ஏற்பாடு செய்துவிட்டேன். பட்டம்மைக்குச் சிறிது பாலும் தேனும் வாய்த்தால் போதும்; ஆனல் இப்போது நேரங்கடத்துவாயாகில் கேடாகிவிடும். விரைவில் நீராடி வருக. உனக்கு உண்டி அளித்த பின்னரே அவள் உண்ணவிருக்கின்ருள்.''

வானத்தினின்றும் விழுந்தவன்போலானேன். சொன்னேன்: ''பட்டம்மை உணவு உட்கொள்ளாதிருக்கும்வரை நானெப்படி உணவு அருந்த முடியும்? நான் ஒரு குற்றேவலாளன்...''

உரக்கப் பேசாதே என்று நிபுணிகை குறிப்பினுல் எச்சரிக்கை செய்தாள். அவள் மெல்லிய குரலில் உரைத்தாள்: ''பட்ட! இச்சிறிய குடும்பத்தில் சிறந்த ஆடவன் நீயே. நீ ஆண் மகன், அந்தணன், புலவன், தேவதை. நீ உண்ணுமல் பட்டம்மை நீரும் பருகமாட்டாள். செல்க, காலத்தொழுகைகள் முதலியன வழக்கில் உள்ளனவா? யாவற்றையும் விரைவில் முடித்துவிடு. எழுந்திரு.'' மரக்கட்டைபோல மண்மீது அமர்ந்திருந்தேன் உணர்வற்று. ''எழுந்திரு பட்ட! அப்பா! நேரங்கடத்துகின்றனையே! பட்டம்மைக்கு நேரமாகிக்கொண்டிருக்கின்றது.''

எழுந்திருக்க வேண்டியிருந்தது. நீராடல், தொழுகை யாவற்றையும் விரைவில் முடித்துக்கொண்டேன். திரும்பி வந்தபொழுது பட்டம்மை எனக்கு உணவு படைக்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தாள். மகிழ்ச்சியால் மணிக்கண்கள் ஒளிசெய்தன. உடம்பு சுறுசுறுப்பாகக் காணப்பெற்றது. உள்ள உணவுப் பண்டங்களை ஊக்கமொடு அடுக்கிவைத்துக் கொண்டிருந்தாள். நிபுணிகை என்னை உட்காருமாறு குறி செய்தாள். நாணத்தால் சுருக்கமுற்றுப் பேசாதமர்ந்தேன். எனது இருப்பு நிலை முழுதும் சுருங்கி ஒரு சிறு முடிச்சுப் போன்றவனுனேன். உணவுக்கு இவ்வளவு பெரியதொகை இதன் முன்னர் நான் கட்

டித் தீர்க்கவில்லே. கண்கள் கீழே நோக்க, சிறியதொரு முறுவல் பூத்தவளாய்ப் பட்டம்மை பகர்ந்தாள் : "வெட்கமா, பட்ட ?"

இப்போது வேறு வழி இல்லே. தலேவணங்கிக் கைகுவித்துக் கூறினேன் : "தேவீ ! குற்றேவலாளன் நான். எனக்குத் தகாத பெருமை தருகின்றீர் ; தங்கள் கட்டளேயைத் தலேமேல் தாங்குதற்குரியவன் ; வேண்டுகின்றேன் ; எதிர்காலத்தில் இத் துணேப் பெருமை அடியேற்குத் தாங்கள் அளிக்கலாகாது."

பட்டம்மை முறுவலித்தாள். அருளால் நனேந்த அவள் திருமுகம் வைகறையில் பெய்த மழையில் நனேந்த தாமரை மொட்டுப் போலத் திடீரென மலர்ந்தது. சொன்னுள் : "எத் தகைய பெருமை யாருக்குத் தருதல் வேண்டும் என்று முடிவு செய்யும் அவ்வளவு உரிமையாவது எனக்கு வேண்டும், பட்ட !"

நிபுணிகை சற்றுத் தொலேவில் உட்கார்ந்திருந்தவள் சடக் கெனச் சாற்றினுள் : "உணவின் பெருமை பட்டருக்குக் கிடைக்கத்தான் வேண்டும்."

அவள் மொழிகேட்டு எனக்குச் சிரிப்பு வந்தது ; அச்சிரிப்பு என்னேக் கவர்ந்திருந்த வெட்கத்திரையை அகற்றிவிட்டது. எளிய உணவுப் பண்டங்களேப் பட்டம்மை எனக்கு இலேயில் பரிமாறினுள். ஆனல் அப்பண்டங்களில் அரிய சுவை இருக்கக் கண்டேன். எனதுள்ளத்தில் மகிழ்ச்சியும் வருத்தமும் ஒருங்கே தோன்றின. கிடைத்த பெருமைக்கு மகிழ்ச்சி, பட்டம்மைக்கு இத்தகைய உணவு கிடைத்ததால் வருத்தம். ஆனல் நிபுணிகை கவலேயற்றிருந்தாள். நான் வெறும் சோறு என்று கருதியதைப் பட்டம்மை மாவராகனது அருட்பேறு எனக் கருதினுள். மாவராகன் அருளியதை நல்லது கெட்டது எனப் பாகுபடுத்தல் அறியாமையாகும் ; பத்தியற்ற பான்மையாகும். பத்தனுக்கு மாவராகனது அருளால் கிடைத்த சிற்றுண்டியும் அமிழ்தமாகும். இந்த எளிய உணவைப் பரிமாறுவதில் பட்டம்மை ஒரு மேன் மையைக் கலந்து பரிமாறிவிட்டாள். அருட்பேறு என்ன என் பதை இன்றே அறிந்தேன். பறிமாறிக்கொண்டே பட்டம்மை உசாவினுள் : "சுகதபத்திரர் அவர்தானே, பட்ட ?"

"ஆம் தேவீ ; அவரே ! தங்களேக் காணத் தமது ஆவலேத் தெரிவித்தார். மேலும் தங்கள் நிலேமைக்கேற்ற இல்லம் ஏற் பாடு செய்த பின்னர் காட்சியருள்வதாகச் சொல் வழங்கினுர். அவர் தங்கள்மீது மிக்க அன்பு பூண்டுள்ளார்."

பட்டம்மையின் பரந்த கண்கள் மகிழ்ச்சி நீரால் கலங்கின. சுருக்கமாக விடை பகர்ந்தாள்: "ஆம், செம்மல் !" நான் மேலும்

சொன்னேன் : "பெருமாட்டி ! அவர் என் பாட்டனருடன் கல்வி பயின்றவர் என்ற செய்தி கேட்டுத் தாங்கள் மகிழ்வீர். என்னையும் பிள்ளைபோல அன்பு பாராட்டினர். இந்தச் செய்தியே முன்னர் எனக்குத் தெரியாது."

வியப்போடும் உரைத்தாள் : "தங்களுக்கு முற்றிலும் தெரியாதா ?"

"முற்றிலும் தெரியாது !"

"வியப்பினும் வியப்பே !"

நான் சற்று வெட்கமடைந்தேன். பட்டம்மையின் எளிய பான்மை கண்டு எனக்கும் மிகுந்த வியப்பு ஏற்பட்டது. செய்தியை மாற்றுவான் வேண்டிக் கூறினேன் : "அடிகள் குமார கிருஷ்ணவர்த்தனனை அழைத்தார் ; அவனைக் கொண்டே ஒரு வேளை ஏற்பாடுகள் செய்விப்பார் போலும்." இச்செய்தி கேட்டதும் அரசி உணர்வற்ற மரம்போலானள் ; துண்ணென்ருள். நொடிக்குள் படிகமணிபோன்ற உடம்பு செயலற்றுவிட்டது. நிபுணிகை அஞ்சினுள். நானும் திடுக்கிட்டேன் ; "ஏதேனும் தகாதது நடந்துவிட்டதா தேவீ !"

பட்டம்மை தன்னைச் செம்மைப்படுத்திக்கொண்டு கூறினுள் : "நான் தாணேசர்புரி அரசமரபை மிகமிக வெறுக்கின்றேன். அரசமரபைச் சார்ந்த எவனது புகலிடமும் நாடுதற்கு முன்னே கூற்றுவனது புகலிடத்தைச் சாரவே விரும்புவேன். செல்வ, அடிகள் எனது நன்மைகோரும் மயக்கத்தில் என்னை அடியோடு அழித்துவிட்டார்."

இடியுண்ட பாம்புபோலானேன். நிலைமை எக்கச்சக்கமாக இருந்தது. சிறிய தவருனலும் மேன்மை தங்கிய இச்சீமாட்டியின் வாழ்க்கை அழிந்துவிடும். உறுதியொடும் உரைத்தேன் : "செல்வீ ! இப் பாணபட்டன்மீது நம்பிக்கை வையுங்கள். கன்னேசி முழுப்படை வலிமையும் தங்களைத் தங்களது விருப்பத்திற்கு மாருக எடுத்துச் செல்ல முடியாது. நேற்றுவரை நான் ஒருபொருட்கும் தகுதியற்றவன், வழி தவறியவன் ஆக இருந்தேன். இன்று முதல் கொடிய போர் வென்றவன் வாலிகம் அடக்கியவன் எல்லைப்புறக் காட்டுமிராண்டிகளுக்கு வடவைக் கனல் போன்றவன் கடவுள் மகன் துவரமிலிந்திரன் திருமகள் தன் ஊழியனும் அரும்பேறு பெற்றேன். குமாரகிருஷ்ணவர்த்தனனை எல்லைக்குள் வைக்கும் வழியறிவேன். பெண்ணிளஞ் சிங்கம் அஞ்சுதல் நல்லதல்ல. இங்குப் பாருங்கள், இந்தப் பணியாளனை நம்புக."

பட்டம்மைக்கு நான் கூறியது விருப்பமில்லை. "பணியாள னல்ல பட்ட! காப்புத் தந்தை என்று கூறுக" என்ருள். "நான் கடவுள்மகன் துவரமிலிந்திரன் உயிரினும் இனிய திருமகள் மானம் காக்கக் கடமைப்பட்டுள்ளேன்; காத்துவைக்கவும் அறி வேன். தங்களது ஒரு குறிப்பினுல் பாணபட்டன் மன்னர் மன்னர்கள் தலைகளையும் உருட்டித் தள்ள முடியும் என்று உறுதி யாக நம்புங்கள். மடங்கலின் பிடரிமயிரைக் காலால் மிதிக்க விரும்புவோர் அதன் பயனையும் அடையத்தான் செய்வர்."

பட்டம்பெருமாட்டி முற்றத்து ஓரத்தே அமர்ந்திருக்கும் மாவராகப் படிமத்தை நம்பிக்கையுடன் பார்த்துக்கொண்டிருந் தாள். ஆழ்குரலுடன் ஆனுல் மென்மையாகக் கூறினுள்: "உள்ளத்தில் சினவெழுச்சி கொள்ளற்க, செல்வ! உன்மீது முற்றிலும் நம்பிக்கை உண்டு. தக்கதைச் செய்க. அரச மரபிற் குரிய எந்த அரண்மனை மாதரில்லத்திலும் அருகில் அமைந்த அகம் எதிலும் நான் தங்க முடியாது என்பதை மட்டும் நினைவில் வைப்பாயாக."

நானும் கொதிப்படங்கினேன். இதுமட்டும் இயம்பினேன்: "பாணபட்டன் தங்களது இவ்விருப்பத்தை மறவான்." உணவு அருந்திப்பின் இல்லத்திற்கு வெளியே போந்து கொற்றவை மன்ற வெளிமுற்றத்தே ஓரிடத்தில் இன்பத்தவிசாகக் கால் மடக்கி உட்கார்ந்துகொண்டேன். எப்போது என்னிமைகள் மூடின அறியேன். சிறிது நேரத்திற்கெல்லாம் யாரோ அணுகும் காலடியோசை கேட்டு விழித்துக் கொண்டேன். அவன் என் அருகில் அணுகி அடங்கிய குரலால் கூறினுன்: "நலம் உண் டாகுக, செல்வ! அடிகள் சுகதபத்திரர் தங்களை நினைவு கொண் டார்; குமாரகிருஷ்ணவர்த்தனன் பள்ளிக்கு வந்துள்ளான்; உங்களைப் பார்க்க விரும்பி உள்ளான்."

இச்செய்திக்காகவே காத்திருந்தேன். போவதன் முன்னம் பட்டம்மையிடம் விடைபெறலாம் எனக் கருதினேன். அது முடியவில்லை; ஏனெனில் துறவியுடன் நான்கைந்து கட்டமைந்த ஆட்கள் வந்து கோயில் வெளிமுற்ற இல்லத்தின் நாற்பாலும் காவலுக்கு நின்றனர். அவர் தோற்றத்தைக் கண்டு ஐய முற்றேன்; அவர்களில் அரசகுறி எதுவும் கண்டிலேன்; பொது மக்களைச் சேர்ந்தவர் என்பதை உணர்ந்தேன். கதவைத் திறக்க வைக்க முற்படாது பௌத்தத் துறவிக்கு உரக்கச் சொன்னேன்: "குமாரகிருஷ்ணவர்த்தனனைக் காணச் செல்கிறேன்." உள்ளே நிபுணிகையும் பெருமாட்டியும் எனது சொல்லைக் கேட்டு விழிப்

படைவர் என்பதே என் குறிக்கோள். குளத்தில் கைகால் முகம் கழுவித் தோளாடை திருத்தி உள்ளத்தில் பற்பல எண்ணங்களில் சிக்குண்டவனுய்ச் சென்றேன். காவல் துறவி பேச்சு விருப்பங் கொண்டவன். சிறிது நேரங் கழித்து அவனே பேச்சுத் தொடங்கினுன்: "குமாரன் மிகுந்த பரந்த உள்ளத்தினன்; புலவரையும் சான்றோரையும் பேணும் இயல்பினன்; இளையவ ஞயினும் ஒழுக்க விழுப்பத்தினன்; கூரிய அறிவினன்; அடி களின் பத்தன்; மன்னர்மன்னவன் ஹர்ஷ பெருமானுக்குப் பின்பிறந்தான்; மிக நெருங்கிய ஆட்சித்துணைவன்; பல புலவரை அரச சீற்றத்தினின்றும் பாதுகாத்தவன்; பல பெரி யாரைக் கேடென்னும் நெருப்புத் தழலினின்றுங் காத்தவன். இவன் நற்செய்கைகள் எண்ணிறந்தன." பௌத்ததுறவியின் சொற்களைச் செவி வாங்கினேன்; ஆனுல் விடையொன்றும் பகர வில்லை. ஊக்கமொடு துறவி பேசிக்கொண்டே போனுன்: "கன்னேசி ஒரு வியப்பான நாடு செல்வ! புறவொழுக்கத்திற்கு மிகுந்த பெருமை அளிக்கப் பெறுகிறது; உள்ளொழுக்கம்—ஆழ்ந்த—அறிவியல் இவற்றிற்கு முதன்மை அளிப்பதில்லை. அந்தணராயினும் சமணராயினும் பௌத்தராயினும் புற வொழுக்கத்திலேயே முழுகி உள்ளனர். இந்நோய் மன்னர் மன்னவன் ஹர்ஷ பெருமான் தன்னையும் தொட்டுவிட்டது. பௌத்ததுறவி—சொற்போர் விழைபவன்—வசுபூதிக்கு மன்னர் மன்னவன் மிகவும் பெருமை அளித்துள்ளனன். ஆனுல் அடிகள் சுகதபத்திரருடன் ஒப்புநோக்குங்கால் வசுபூதி ஆழ்கருத்தில்லா தவர் என்பதை அறிஞர் அறிந்து கொள்வார்கள். ஆனுல் குமார கிருஷ்ணதேவன் கன்னேசியின் இரத்தின மணி; அவன், 'நன்மை இது தீமை இது' என்று பாகுபடுத்தும் வல்லமை உடையவன்."

நான் வினவினேன்: "நீங்கள் எங்கிருந்து வந்தீர் இளந் துறவீ?"

"நான் சௌவீரபுரியினின்றும் அடிகளோடே வந்து சேர்ந் தேன்; அவ்விடத்திய மாந்தர் புறவொழுக்கத்தைப் பாராட்டுபவ ரல்லர்; ஆங்கு மாந்தர் தத்துவம் அறியும் ஆவலுள்ளவர்."

"கன்னேசியில் மாந்தர் தத்துவ அறிவில் ஆவலுடையவ ரல்லர் என்ருல் குமாரகிருஷ்ணதேவன்மட்டும் தத்துவ ஆவ லுடையவனுக எங்ஙனம் இருக்க முடியும்?"

"குமாரனின் நிலை வேறு செல்வ, இவ்வளவு இளமையில் இவ்வளவு ஆழமுடைமை அரிது."

"வசுபூதி யார், அன்புடையீர்?"

"வசுபூதி என்பவர் இந்நாட்டிலே சொற்போர்த் திறம்பெற்ற பௌத்த அறத்தினர். சொற்போர் வாயிலாக நல்லறமான பௌத்தத்தைப் பரப்ப விரும்புகின்றார். இந்நாடு சொற்போரி லேயே ஆர்வம் கொண்டுள்ளது. சொற்போர் செய்து புத்தர் பிரானது அருளைப் பரப்ப விரும்புகின்றார்! சீச்சீ!

"அடிகள் அறைகின்றார் சொற்போர் முறையே தவறு. புத்தர் பெருமான் தமது வாழ்வில் அருளைப் பரப்ப முயன்றார். அரு ளறத்தில் புத்தர் உறைகின்றார்; அருளற்றதில் அவரில்லை. அருளற்ற வழியில் பௌத்த நல்லறத்திற்குப் பேரழிவுதான் ஏற் படும். சொற்போரினால், நூல் போரினால் பகைமை வளர்கிறது; பகைமையால் கொலையாவலும் துன்புறுத்த ஆவலும் செழிப்புறு கின்றன. கொலை நசையால் மாந்தரது பண்பே அழிகிறது. வசுபூதியின் முன்னர் அருள்நெறி பயனற்றதாகக் காண்கிறது. தன்னுடன் அறப்போரை நிகழ்த்துமாறு வசுபூதி நாள்தோறும் அடிகளை அறைகூவுகின்றார். ஆனால் அடிகள் முன் வசுபூதியார் நிற்க முடியாது என்பதை உலகறியும். மன்னர்மன்னனும் அறி வான். சுகதபத்திரர் சிங்கமெனில் வசுபூதியார் நரியாவார். வசுபூதியார் தம்மைப் புத்த பெருமானினும் மேலானவர் எனச் செருக்குங் கொண்டுள்ளார். பௌத்தப் பள்ளியின் எத் துணையோ பண்டிதர்கள் வசுபூதிக்கு அறைகூவல் விடுத்த போதினும் அவர் அடிகளுடன்மட்டுமே சொற்போர் நிகழ்த்த முடியும் என்று கூறிவிட்டார்." என்னை மகிழ்விக்க வேண்டித் துறவி பேசிக்கொண்டே சென்றான். செய்திகள் இன்னும் அறிய வேண்டி அவனை வினவால் தூண்டினேன்: "இவ்வுண்மை மன்னர் மன்னனுக்குச் செம்மையாகத் தெரிந்திருக்குமே; ஏன் அத்தகைய மனிதனுக்குத் தம்மிடம் புகலிடம் தந்தார்?" துறவி உரைத்தான்: "கன்னோசி பிராம்மண பண்டிதர்களின் கோட்டை; இத்தகைய நரிகளை அறைகூவியே இவ்விடத்தில் மன்னன் பௌத்த அறத்தை நீடிக்க விரும்புகின்றான்."

"இது வேண்டற்பாலதே, குற்றமில்லையே."

"அடிகள் அறைகின்றார்: நூல்போர் முறையால் கேடான விளைவுகள் உண்டாகும்; ஏதாவதொரு நாளில் பௌத்த நல் லறம் சீரழிவதாக இருந்தால் அந்த நாளின் தொடக்கம் கன்னோசியில்தானேற்படும்." இவ்விதம் பேசிக் கொண்டே நாங்கள் பௌத்தப்பள்ளி வாயிலருகே வந்து சேர்ந்தோம். நேராக என்னைக் காவல் துறவி அடிகளில்லத்தை நோக்கி

அழைத்துச் சென்றான். அடிகள் புல்தவிசில் அமர்ந்திருந்தார். ஒருவேளை என்னை எதிர்நோக்கி இருந்தார் போலும். என்னை நோக்கி முறுவலித்து மொழிந்தார்: "குழந்தாய்! செல்க; குமார கிருஷ்ணன் உன்னைப் பார்க்க ஆவலோடும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றான். சென்று அவனுடன் கலந்தாராய்ந்து நீடூழியள் சந்திரதீதிக்குத் தக்க ஏற்பாடு செய்க. குமாரன் என் நம்பிக்கை நிறைந்த மாணவன். அவனுடன் எதையும் மறைத்துப் பேசவேண்டியதில்லை. யாவற்றையும் விடாது அவனிடம் கூறுக." காவல் துறவிக்குக் கட்டளையிட்டார்: "சிறந்த புலவன்; இவனை அமைதிக் காப்பாளன் குமாரகிருஷ்ணவர்த்தனன்பால் அழைத்துச் செல்க. அண்மையில் உள்ள அறநிலையத்தில் இவனுக்காக காத்திருக்கின்றான்."

நான் ஆர்வமுடன் வணக்கஞ் செய்து காவல் துறவியுடன் தொடர்ந்தேன். அருகில் உள்ளதோர் இல்லத்திற்கு அவன் அழைத்துச் சென்றான். புல்தவிசில் அமர்ந்து எனக்காகக் காத்திருந்தான் கிருஷ்ணவர்த்தனன். அமைதிக்காப்பாளன் மாபெரும் ஆட்சிப் பொறுப்பேற்றவன் என முன்னரே அடிகள் வாயிலாக அறிந்துள்ளேன். என்னைக் கண்டதும் எழுந்திருந்து மிகுந்த அன்புடன் தனது புல்தவிசின் பாதிப் பகுதியில் என்னை அமரச்செய்தான். குமாரனின் பரந்த மனப்பான்மை அடக்கம் ஒழுக்கம் கண்டு வியப்புற்றேன். உண்மையில் இப்பண்புகள் அவனிடம் இருந்தன. தக்கோரின் புகலிடம், நற்பண்புகளின் பிறப்பிடம்—புலவர்கள்தம் காப்பாளன்—கல்விக்குக் களஞ்சியம் ஆகத் திகழ்ந்தனன். அவன் கண்கள் அன்புநிறைந்து ஒளி வீசின; அவன் புருவங்கள் அச்சுறுத்துந் தோற்றங்கொண்டிருந்தன. பௌத்தப் பள்ளிக்கேற்ற ஆடை அணிந்திருந்த போதினும் உள்ளுக்குள்ளேயே மதங்குமுறும் இளங்களிறு போன்றான். அவன் முகத்தினின்றும் அரச ஒளி பொங்கிற்று. கையில் யாதொரு படையும் இல்லை. ஒரியல்பான ஒளிவட்டத்தினால் சூழப்பெற்றிருந்தான். பாம்பு சுற்றிய இளஞ்சந்தன மரம் போல அச்சம் விளைக்கும் தோற்றமும் அழகும் பொருந்தியவனைக் காணப்பெற்றான். வயது மிகவும் குறைவு. ஆனால் முகத்தே வெள்ளியின் (சுக்கிரன்) அறிவும் கூரிய ஆராய்வு வலிமையும் செறிந்திருந்தன. அவனது பேரொளியால் வீழ்த்தப் பெற்றவன்போல அசைவற்றவனானேன். ஆனால் பட்டம்மையின் நினைவு வந்ததும் தன்னுணர்வு பெற்றவனானேன். தக்க முகமன் கூறிக் கடவுள் மகன் துவரமிலிந்திரன் திருமகளைப்

பற்றி வினவினுன். நான் தொடக்கத்திலிருந்து இறுதிவரை வரலாற்றினைச் சுருக்கமாக உரைத்தேன். மேலும் கிருஷ்ண வர்த்தனனைக் காணவே நான் புறப்பட்டதும், இதற்கிடையே இந்நிகழ்ச்சி நிகழ்ந்ததையும் கூறினேன். பொறுமையுடன் யான் கூறியன கேட்டான். ஒருமுறையாவது அவனது முகத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை; ஆதலின் எனது நடவடிக்கைகளில் அவனுக்கு விருப்பமுள்ளது எது மாறுனது எது என்பதை உணரமுடியவில்லை. யாவற்றையும் விவரித்த பின்னர் ஆர்வமுடன் அவன் முகத்தை நோக்கினேன். அவன் அமைதியாக இருந்தான். எந்தக் கருத்தினைப் பற்றியும் குற்றங்குறை கூறுமல் விடை பகர்ந்தான்: "கடவுள் மகன் திருமகளுக்கு எமதில்லம் காத்துக் கொண்டுள்ளது."

அடக்கத்துடன் உரைத்தேன்: "கடவுள் மகன் திருமகள் தாணேசர்புரி அரச இனத்தைச் சேர்ந்த எவரது இல்லத்திற்கும் போக முடியாது. எனது கருத்துப்படி பெரியாருக்குப் பெருமை யளிக்கும் பெருமையை, உரிமையைத் தாணேசர்புரி இழந்துவிட்டது."

எனது சொல் குமாரனைத் தைத்தது. புருவம் நெற்றிமுற்றச் சென்றது. முரட்டுக் குரலில் உரைத்தான்: "என்ன சொல்கின்றனை பட்ட! ஆர தீர நினைத்துச் சொல்லு."

"நினைத்தே கூறினேன் குமர!"

குமாரனின் சினம் நிறைந்த கண்களில் சிவப்பேறியது, தீப்பொறி பறப்பது போல இருந்தது. சொன்னுன்: "நீ யாரிடம் பேசிக் கொண்டிருக்கின்றுய், தெரியுமா உனக்கு?"

சற்றும் அஞ்சாது சாற்றிடுவேன்: "கன்னேசி வல்லரசின் அமைதி மாகாப்பாளன் குமாரகிருஷ்ணவர்த்தனனுடன் பேசிக் கொண்டிருக்கிறேன்."

"முரட்டுப் போக்கிலி நீ பட்ட!"

"குமாரனிடமிருந்து இத்தகைய சொல் கேட்பேன் என்று நினைக்கவில்லை."

"அத்தகைய சொல் சொல்வதற்கு நீ வெட்கப்படுதல் வேண்டும்."

"எதைப்பற்றி வெட்கப்படவேண்டும் குமர?"

"உனக்கு வெட்கம் ஏற்படாதெனில் பின்னை யாருக்கு?"

"மௌக்கரி குறுமன்னன் போன்ற கொடியவர்களுக்குப் புகலிடம் தந்த அந்த அரச மரபுக்குத்தான் வெட்கம் வரவேண்டும். குற்றவாளிகளுக்கு இடங்கொடுத்துத் தன்னைக் கறையுறுத்திக்

கொண்ட அந்தப் பேரரச மரபுக்குத்தான் வெட்கம் வர வேண்டும்.''

குமாரன் புருவங்கள் நெறிந்தன:...'' அடக்கமற்ற துடுக்குப் பிரம்மசாரி! நேற்றுப் பிச்சை எடுக்க எவனிடம் போக இருந் தாயோ அவனிடம் பேசத் தக்கமுறை இஃதல்ல.''

'' நேற்று நான் தெருப் பிச்சைக்காரனுகத்தான் இருந்தேன்; ஆனுல் நேற்றுத் தாணேசர்புரியை அரசாளும் அரசமரபினது கருங்கறை அறியாதிருந்தேன்.''

'' இன்று நீ எத்தகையவன்? எந்த நிலேயினன்,?''

'' இன்று நான் கொடிய போர்வென்றவன் வாலீகம் அடக்கிய வன் எல்லேப்புறக் காட்டுமிருண்டிகளுக்கு வடவைக்கனல்—கட வுள் மகன் துவரமிலிந்திரன் திருமகள் தன் காப்புத் தந்தை.''

'' காப்புத் தந்தை? எனது ஒரு குறிப்பினுல் நீ காக்கும் கடவுள் மகன்தன் திருமகளது நிலேயும் உனது நிலேயும் என்ன ஆகும் தெரியுமா?''

'' தெரியும் எனக்கு; ஆனுல் பாணபட்டனேப்பற்றி முழு அறி முகமும் குமாரனுக்குத் தெரியாது. கேட்டிற்குக் குறி காட்டும் முன்னர் குறி காட்டுபவன் கண்கள் நில்லா!''

குமாரன் சினங்கிளரக் கூறினுன்: '' அடக்க ஒழுக்கமற்ற குறும்பன், முருடன், போக்கிலிப் பிராம்மண பிரம்மசாரி, ஐயம் புகுந்து வாழ்பவன், செருக்குற்றவன்!''

இது கேட்டுச் சிரித்தேன், ஒன்றுங் கூறவில்லே. குமாரன் இன்னும் வெகுண்டு விண்டான்: '' அரண்மனே இல்லத்தில் திருடன்போல நுழைந்த நெறிபிறழ்ந்தவனே! உனக்கு வெட்க மில்லே?''

'' தாணேசர்புரியில் வாழ்கின்ற பிறர் மனேவியரைக் கவர்கின் றவனும் விருப்பமில்லாத நங்கையரைக் கெடுப்பவனும் ஆகிய குறுமன்னனின் மாதரில்லத்தில் எனக்கு எள்ளளவும் அக் கறையே கிடையாது. ஆங்குத் திருட்டுத்தனமாகக் கவரப்பெற்ற மணப்பெண்டிர் உறைகின்றனர்; அத்தகைய இல்லத்திற்கு ஒரு வரம்பும் பெருமையும் தூய்மையும் இருக்க முடியாது. அத் தகைய இல்லங்களுக்கு இடம் கொடுத்தவர் வேண்டுமானுல் வெட்கப்படட்டும், அவர்களுக்கு அது பெருமை அளிக்கும். குமார, வல்லரசுச் செருக்கினுல் வாய்வந்தன பேசாதே; குருட்டுத் தன்மை யடையாதே. தாணேசர்புரியானது என் அரசித் திருவை இழிவு செய்தது. ஆதலின் ஒரு அந்தணனே வைவதும் சினப்பதும் பொருத்தமல்ல. அவன் பிச்சைக்காரனுமல்ல; மாவ

மைதிக் காப்பாளனுமல்ல. அவன் அறம் நிறுவுபவன். நான் செய்தனவற்றிற்கு வெட்கப்படவேண்டிய பகுதி எதுவுமில்லை; எனது அந்தண' இயல்பு கறைபடவில்லை. நான் கடவுள் மகன் பெருமையைத் தக்கபடி அறிந்துள்ளேன். தொழத்தக்கவரைத் தொழும் தகுதியைத் தாணேசர்புரி இழந்துவிட்டதைச் சிறிதும் அச்சமின்றி அறைகின்றேன். கடவுள் மகன் திருமகள் இந்த அரச இனத்தை முற்றிலும் வெறுக்கின்ருள்.''

குமாரன் இப்போது கவலையில் ஆழ்ந்தான். அவனுக்கு என் மொழிகளின் சாரம் தெளிவானது போலும். சிறிது நேரம் என்னைக்கூரிய பார்வையால் பார்த்துக் கொண்டிருந்தான். இதே நேரத்தில் குமாரன் கிருஷ்ணவர்த்தனனது சினக்குரல் கேட்டு அடிகள் ஆங்கெழுந்தருளினர். அவரைக்கண்டு இருவரும்எழுந்து நின்ருேம். சண்டையிடும் நேரத்தில் அடிகளது கட்டளையை நிறைவேற்றக்கூடி இருந்தோம் என்ற உண்மையை மறந்துவிட்டிருந்தோம். அடிகள் வந்ததும் என்னிடம் கூறினர். ''செல்வ, என்ன ஏதேனும் தகாதமொழி மொழிந்தனைபோலும். குமாரன் போன்ற நன்மக்களுக்கு நீயேன் சினமூட்டினுய்? இப்படியும் செய்யத் தகுமா?'' இவ்விதம் இயம்பி என் நெற்றியை அன்போடும் தடவிக் குமாரனிடம் கூறினர்: ''குமர! ஏன் சினமுற்றனை? செல்வ, பாணபட்டன் அறியாதவன், அரசபெருமை தெரியாதவன்; அவன் கூறிய மொழிகளின் பொருளைமட்டும் ஏற்றுக் கொள். சொல் இயல்பைக் கவனியாதே.'' பின்னர் மிக்க அன்போடு குமார கிருஷ்ணவர்த்தனன் முதுகின்மீது அடிகள் தட்டிக் கொடுத்தார். ''உட்கார் செல்வ!'' என்று கூறிப் புல்தவிசில் அமர்ந்து கொண்டார். நாங்கள் இருவரும் அவர்முன் தளமிட்ட தரையில் அமர்ந்து கொண்டோம். குமாரனே முதலில் பேச்சுத் தொடங்கினுன்: ''அடிகள் பெரும! பாணபட்டன் தாணேச்சர்புரி அரசமரபினையே வெறுக்கின்ருன்!''

அடிகள் வியப்புடன் கூடிய பார்வை என்மீது செலுத்திச் செப்பினர்: ''கெடுக! நன்மை உண்டாகுக! செல்வ, நீ அவ் விதம் கூறினுயா?''

நான் அமைதியோடும் கூறினேன்: ''பெருமான்! கடவுள் மகன் துவரமிலிந்திரன் திருமகளை இழிவு செய்த சிற்றரச இனத்திற்குப் புகலிடம் தந்த பேரரச இனம் தொழத்தக்கவரைத் தொழும் வாய்ப்பை இழந்துவிட்டது. கடவுள் மகன் திருமகளை அந்த அரசமரபின் எந்த மாந்தர் இல்லத்தையும் புகலிடமாகக் கொள்ளவிடமாட்டேன். அம்மையின் இசைவுபெற்றே இவ்வாறு

கூறுகின்றேன். எனது பதட்டத்தைப் பொறுப்பீராக! நான் இப்போது ஒன்றுக்கும் உதவாத பாணபட்டன் அல்ல; கடவுள் மகன் துவரமிலிந்திரன் உயிரினும் உயரிய திருமகள் தன் நற்பெயரையும் மானத்தையும் காக்கும் காப்புத் தந்தை என்ற நிலையில் பேசிக்கொண்டிருக்கின்றேன். குமாரகிருஷ்ணவர்த்தனன் தன் காலால் இட்ட கட்டளையை நிறைவேற்றும் ஆளாகப் பாணபட்டன் இருப்பினும் கடவுள் மகன் திருமகள் தன் புண்பட்ட நெஞ்சத்தின் பிரதிநிதி என்ற நிலையில் குமாரனுக்குத் தலைவணங்க விருப்பமில்லேன்.''

''நல்லது செல்வ, நீ கடவுள் மகன் பெருமை வரம்புக்குத் தகச் சொன்னாய். குமர! நீ உறுதியுடையவன், அறிவுள்ளவன்; தாணேசர்புரியின் கறையை நீக்க நீதான் இத்தூய வினையாற்ற வேண்டும்; செய்யத் தக்கவன் நீயே. சுடுகின்ற பாலை ஆற்றித் தான் பருகுகின்றனர். நீடூழியள் திருமதி சந்திரதீதிதி தன் பெருமையைக் கவனத்தில் நீ கொள்ளத்தான் வேண்டும். ஒரு முறை எல்லைப்புறங்களை நினைத்துப் பார். போர் வெறியர், பண்பாடில்லாதவர் சௌவீர நாட்டினின்றும் காந்தாரம் வரை கொடுமை செய்து வருகின்றனர். நிலவுக்கதிர்போலச் சந்திரகுப்தனது புகழொளி இன்றும் மங்காதுள்ளது. போர்வெறி கொண்ட எல்லைப்புறக் காட்டுமிராண்டிகள் அடக்கப்படவில்லையெனில் பௌத்த நல்லறம் அழிவதை யாராலும் தடுக்கமுடியாது. இந் நற்பணியில் கடவுள் மகன் துவரமிலிந்திரனது நட்பை நீ பெற்றாக வேண்டும். அந் நட்புப் பெறுவதற்காக நீ நீடூழியள் சந்திரதீதிதியின் வேண்டுகோளை நிறைவேற்றியாகவேண்டும். அவளுக்கேற்பட்ட கேட்டில் அழைப்பின்றியே வந்து பங்கு கொண்ட பாணபட்டனது சொல்லுக்குத் தக்க மதிப்பு அளிப்பாயாக்.''

குமாரன் அசையாது அமர்ந்திருந்தான். அமைதியாகச் சொன்னான்: ''எனில் அடிகளது கட்டளைதான் என்ன?'' அடிகள் சாற்றினார்: ''நீடூழியளைத் தக்கதோரிடத்திற்குக் கொண்டு செல்லுதல் வேண்டும்; தாணேசர்புரியின் கறையினைக் கழுவி அவளது நம்பிக்கையைப் பெறுதல் வேண்டும்; கடவுள் மகன்—துவரமிலிந்திரனுக்குச் செய்தி அனுப்புதல் வேண்டும். செல்வ! கொற்றவை மன்றத்து மூடப் பூசாரிக்கு அஞ்சுகின்றேன். எப்பொழுது என்ன செய்து விடுவானோ என்று அஞ்சுகின்றேன். ஏதேனும் ஏற்பாடு செய்தனையா குமர?''

குமாரன் அமைதியாக அடங்கிய குரலில் உரைத்தான்:—

"பொதுமக்கள் வேடத்தில் படையேந்தியவராய் நான்கைந்து போர்வீரர்கள், துர்க்கை மன்றத்து முற்றத்து இல்லத்தைக் காவல் புரிந்து கொண்டிருக்கின்றனர்." அடிகள் மகிழ்ந்து கூறினர்: "நல்லது! நல்லது!! செல்வ, என்ன உன்னுகின்றனை? உனது சினம் இன்னும் தணிந்தபாடில்லை?"

வாய்ப்பு நோக்கி அடக்கமுடன் புகன்றேன்: "பெருமான்! குமாரனுக்குச் சினமூளத் தூண்டிய குற்றத்தைச் செய்தேன். அதற்குத் தண்டனையும் நான் பெறவேண்டியவன். எனது முரட்டுத்தனத்தால் கடவுள் மகன் திருமகளின் பாதுகாப்புக் கெடலாகாது."

குமாரன் எனது முகத்தை நோக்கி நுவன்றனன்: "பட்ட! உனது துணிவைப் பாராட்டுகின்றேன். இதற்கு முன்னர் உன்னைப்போன்ற ஓரந்தணனை ஏன் தேடிப் பிடிக்கவில்லை என்று நினைத்துக்கொண்டிருக்கின்றேன்." அடிகள் அன்போடும் முக மலர்ந்து வினவினர்: "செல்வ, எப்போதேனும் தேடினயா?"

"இல்லை பெருமான்."

அடிகள் மயிர்க் கூச்செறிந்து இயம்பினர்: "அந்தணனயினும் என்? சமணனயினுமென்? பௌத்தனயினுமென்? மாந்தரியல்பு ஒன்றே. எக்கூட்டத்திலும் நன்மக்கள் வாய்ப்பதரிது." இவ்விதம் கூறி முறுவலித்தவாறு குமாரன் முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

சிறிது நேரம் பேசாமல் இருந்துபின் குமாரன் அடிகள் பக்கம் திரும்பிக் கூறினன்: "அரச குடும்பத்தோடு ஏதேனும் ஒரு தொடர்புமில்லாத எந்த இல்லத்தையும் தாணேசர்புரியில் நான் காணமுடியவில்லை. எனக்குத் தெரிந்தனவற்றைத் தக்க நேரத்தில் அரசர் பெருமானிடம் உரைத்தாகவேண்டும். ஆதலில் பாணபட்டன் கடவுள் மகன் திருமகளை நாளை மாலை படகில் ஏற்றி மகதநாட்டை நோக்கி அழைத்துச் செல்லுதல் வேண்டும். இப்போது பாணபட்டனும் பேறிழந்த நிபுணிகையும் அரச சினத்திற்குள்ளாகி உள்ளனர்; அவர்கள் முற்றிலும் அழிந்து விடுவார்கள். ஆதலினே மூவரும் நாளை மாலை மகதத்திற்குப் புறப்படுதல் வேண்டும். இன்றே பெரிய படகு ஏற்பாடு செய்கின்றேன். இன்றிரவு சந்திரதீதிதிகை படகிலேயே ஓய்வு கொள்ளட்டும். நாளை புறப்படு முன்னர்ப் பாணபட்டன் என்னைக் காணவேண்டும். நாளை ஒலி விழா. ஆதலின் அரச அலுவலகங்களுக்கும் அறநிலையங்களுக்கும் விடுமுறையாகும். நான் நாளை மறுநாள் நடுப்பகல் மன்னர்மன்னனுக்கு நடந்தன யாவும்

தெரிவிப்பேன். அரசிக்கு யாதொரு தொல்லேயும் இல்லாதவாறு பார்த்துக்கொள்கின்றேன் ; அத்துடன் அம்மையின் அன்புபெற ஆனமட்டும் முயல்கின்றேன்.''

அடிகள் ஊக்கமூட்டியவராய்க் கூறினர் : '' நல்லது ! நல்லது ! செல்வ, இதுவே குமாரனுக்கு ஏற்ற செயல் !'' குமாரன் குறுக்கிட்டுக் கூறினன் : '' ஆனல் பெருமான், என் உள்ளத்தில் தைத்த முள் அப்படியே செருகியுள்ளது. கடவுள் மகன் திருமகள் விருப்பத்திற்குத் தடைகள் உண்டாக்க ஒரு சிறிதும் விருப்பமில்லேன். குமாரகிருஷ்ணவர்த்தனன் இன்றுபோல என்றும் இத்துணே வெட்கமுற்றதில்லே. இப்போது மன்ற முற்றத்தில்லத்திலே பூவினும் மெல்லிய அரசி கொற்றவை மன்றத்தில் சுவையற்ற உணவு உட்கொண்டு அல்லது உணவின்றி உணங்கியவளாக இருக்கின்ருள். இதை நினேத்ததும் எனதுள்ளத்தின்கண் அரசினப்பான்மை கொதித்தெழுகிறது. முயன்று என்னேயே அடக்கிக்கொண்டுள்ளேன். எனது ஒவ்வொரு செயலும் அரசிக்கு ஐயத்தைத் தூண்டுகின்றது. அந்த அரசமகள் யார்? கடவுள் மகன் தன் திருமகள்—அவனுட்சிக்கோல் புகழ் கேட்டு எல்லேப்புறமே நடுங்குகின்றது. அவனது கூரிய வாள் வீச்சினுல் சாக மன்னன் போன்ருர் நுரைக்குமிழிகள்போல மறைந்துவிட்டனர். விளேயாட்டுக் குழந்தைகள் நாய்க்குடைச் செடிகளே உடைத்தெறிவதுபோலக் கடவுள்மகன் புகழானது வாலீகத்தை உடைத்தெறிந்துவிட்டது. அவனது புகழ் நெருப்பினுல் எல்லேப்புறக் காட்டுமிராண்டிகள் விட்டில்கள்போலப் பொசுங்கிப் போயினர் ; அத்தகைய மறக்குடிப் பெருமகன் திருமகளுக்கா இந்நிலே நேர வேண்டும் என்று நினேத்தபொழுதே எனது கொதிப்பு இன்னும் பதின்மடங்கு பொங்குகின்றது. கொடிய போர்களே வென்றவனும் எதிர்ப்பார் யாருமற்ற மறப்பெருமிதங்கொண்டவனும் ஆகிய கடவுள் மகன் துவரமிலிந்திரன் திருமகள் கேட்டில் அகப்பட்டுக்கொண்டுள்ளபொழுது அவருக்கு ஒருதவியும் செய்ய முடியாத நிலேமையில் உள்ளேன் என்று கருதும்பொழுது ஒரு கூரிய வேல் நெஞ்சில் நுழைந்ததுபோன்ற நோய் உண்டாகியுள்ளது. அடிகளே ! கங்கைக் கரைவரை அம்மையார் காலால் நடந்து போகாமல் யான் அனுப்பும் பல்லக்கில் ஊர்ந்து செல்லவேண்டுமென்ற எனது வேண்டுகோள் நிறைவேறுமாறு பார்த்துக் கொள்க. குமாரகிருஷ்ணவர்த்தனன் சந்திரதீதிகையின் அண்ணன் என்ற உரிமை பாராட்ட விரும்புகின்ருன்.''

குமாரன் ஒளிகுலவு முகத்தின்கண் ஒரு பொழுதில் சினமும்

ஒருபொழுதில் கொந்தளிப்பும் ஒருபொழுதில் துயரமும் ததும்பின. மாலைப்பொழுதின் வானம்போல நொடிதோறும் நிறமாற்றங்கள் ஏற்பட்டன. அடிகள் என் முகம் நோக்கி நவின்றார் : "அவ்வாறே செய்ய அரசியிடம் வேண்டிக்கொள்க. நான் கங்கைக் கரையில் அவருக்குக் காட்சி அளிப்பேன். இப்பொழுது நீ சென்று வருக."

அடிகள் குறிப்புக் கண்டு இருவரும் எழுந்தோம். வெளியே பார்த்தபொழுது பகலவன் பகரொணுப் பல் கதிர் பரப்பி நெருப்பு பொறிகளைத் தூவிக் கொண்டிருந்தான். காற்றெழுப்பிய புழுதி யின் கூட்டம் வானத்தைக் கவிந்த வண்ணமிருந்தது. பௌத் தப்பள்ளியின் தளமிட்ட தரை வெய்யிலால் காய்ந்து நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்தது. நிலத்தடியினின்றும் ஏதோ எரிமலை நிலக் கருவினது நெருப்பை எரிதழல்மாலை வடிவத்தில் கொப்பு ளித்தாலெனத் தளமிட்ட தரை நடுவின்கண் உள்ள அரசமரம் அடிநுனி வரை சிவந்த தளிர் நிறைந்து காணப்பெற்றது. உண்மையில் நிலத்தின் இதய தண்ணிய நீர்த்திரளே கொடிய வெப்பத்தின் நடுவே தண்மையின் இருப்பைப் பறைசாற்றுவது போலிருந்தது. குமாரகிருஷ்ணவர்த்தனனது உள்ளத்துள் பொதிந்திருந்த தண்ணிய வெள்ளத்தைக் கொடிய வெப்ப ஒழுக்கென நினைத்தது எனது குறுகிய அறிவு. அண்மையில் நின்றிருந்த கிருஷ்ணவர்த்தனனைப் பொறுத்தருளுக என்ற பொருளுடைய பார்வையால் ஒருமுறை பார்த்தேன். அவன் முகம் எல்லையற்ற அமைதியுடன் இருந்தது. பார்ப்போருக்கு அச்சம் நீக்கும் அருள்நோக்கம் அம்முகத்தே பொலிந்தது. அதி லிருந்து எல்லையற்ற நட்பொளி பெருக்கெடுத்தது. என் பார்வைப் பொருளைக் குமாரன் அறிந்துகொண்டனன். புன்னகை புரிந்தவனாய்ப் புகன்றான் : "கடவுள் மகன் திருமகளது பெருமை யைத் தக்கவாறு உணர்ந்தவன் நீ; உன்பால் மகிழ்ச்சியுறு கின்றேன்."

குமாரன் அருளைக் கைகூப்பிப் பேசாது ஏற்றுக் கொண்டேன்.

நல்ல உள்ளம் படைத்த குமாரகிருஷ்ணவர்த்தனனது நன்றி யறிவு பெருகுவது கண்டு நான் வாயடங்கிப் போனேன் என்பதை உணர்ந்து கொண்டான். அவன் எல்லையற்ற உவகையுற்றான்.

## உயிர்ப்பு ஆறு

சிவிகைகள் மாலையில் புறப்பட்டன. நேரமானதற்கு நானே பொறுப்பாளி. கங்கைக் கரையில் தக்க ஏற்பாடுகள் முடியா முன்னம் பட்டம்மையை ஆங்கனுப்ப விருப்பமுறவில்லை. கங்கைக்கரையை விட்டுத் திரும்பியபொழுது மாலை நேரமாயிற்று. மேற்கே முழுக இருக்கும் கதிரவன் வட்டம் கடுகு மலரிழைபோலப் பொன்னிறமாகக் காட்சியளித்தது. கதிரவன் மறையும் நேரத்தே கதிரொளி, திசை மணமகளிர் திருமுகத்தே மெல்லிய பொன்னுடை போர்த்தியதுபோலக் காணப்பெற்றது. குங்குமப்பூச் செஞ்சாறு இடையருது பொழிந்ததால் அவ்வாடைகள் மிகுந்த மென்மையும் செம்மையும் பெற்றனபோலும். வான நீலம் பெரும்பாலும் மறைந்தது. நிலா முகப்புள்ளின் கண்ணொளி போல எங்கும் பொன்னிறம் பரவிவிட்டது. குயில்கள்போல் பழுப்பு நிறக் கதிர்கள் நிலமுழுவதையும் சிவப்பாக்கிக்கொண்டிருந்தன. மிகுந்த ஒளியுடைய சில விண்மீன்கள் வானத்தின் கண் கீழ்ப்பால் காணப்பெற்றன. முழு காவிநிற ஆடை அணிந்தவளும் உள்ளங் கவர் அழகுடையவளும் ஆகிய பைரவி ஒருத்தி கொற்றவை மன்றத்தின்கண் இறங்குவதுபோல 'மாலை நேரம் காட்சியளித்தது. சிவிகைகள் முன்னரே வந்து காத்திருந்தன. நிபுணிகையும் இளவரசியும் அவற்றுள் அமர்ந்து என் வழியை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். நான் வந்ததும் சிவிகைகள் கங்கைக்கரைக்குப் புறப்பட்டன.

கோவில் முற்றத்து இல்லத்திலிருந்து வெளிவந்து நாற்பாலும் பார்த்தேன். வானச்செம்மை கழுவப்பெற்றதுபோல இருந்தது. ஆழ்ந்த கருநீலப்பட்டினை வானமெங்கும் போர்த்தியதுபோலிருந்தது. நண்பகலில் இருந்த நீலம் இப்போது இருட்டாகக் காணப்பெற்றது. அக்கம்பக்க மரங்களின் பசுமை அக்கருமையில் மறைந்துவிட்டது. மரங்கள் யாவும் அழுக்குப்படிந்த காட்டெருமைக் கருமையைப் பெற்றன. அவற்றின்மீது இதுவரை முழங்கிக்கொண்டிருந்த பறவைகளது ஓசை இப்போதடங்கிவிட்டது. இல்லத்திற்கு முன் இருந்த சிதைந்ததொரு 'குளம் தன் மார்

பகத்தே வானமுழுச் செல்வத்தையும் அடக்கிக்கொண்டு சிரித்த வாறிருந்தது. யாவும் ஓசையின்றிப் பெருமை பூண்டு அமைதியாக இருந்தன. இந்நேரம் பூசாரி வந்தானெனில்? நன்ருக உள்ளத்தைத் தடவிப் பார்த்தேன். எனக்கெல்லாப் பூசைகளையும் கொடுத்திருப்பான். ஆனல் ஏனே இன்னும் வரவில்லை? இப்பொழு தெங்கிருக்கின்ருனே? விட்டுநீங்கு முன்னர் ஒருமுறை இல்லத்திற்குள் நுழைந்தேன்; எதையோ தேடுபவன்போல உள் சென்றேன். ஏன் இந்தப் பற்று? சிறைக் கூடத்தை விட்டுப் போகும்பொழுது சிறை வாழ்ந்தான்திறத்தும் சிறைக்கூடத்தை விட்டகல உள்ளம் ஒருப்படுவதில்லை. பற்று மிக்கவலிவுடையது. ஒரு 'பொருளின்மீது ஆசை பிறந்துவிட்டால் அதனை விட்டு நீங்கவே உள்ளம் இசைவதில்லை. இந்தச் சிதைந்த இல்லம் ஏன் என்னை இப்படிக் கவர்கிறது? எப்போதும் அது பாழ்மை கொண்டிருந்தது. ஆனல் பட்டம் பெருமாட்டி அகன்ற பிறகு அவ்வில்லம் இன்னும் கொடிய பாழ்மையுற்றது. நாங்கள் உண்மையிலேயே பாழ்மையில் ஆழ்ந்துள்ளோம் எனச் சுவர்கள் கூச்சலிட்டுக் கூறுவனபோலத் தோன்றின. சிறிது நேரம் வரை ஒரு பொருட்டுமின்றி மரம்போல நின்றுகொண்டிருந்தேன். பட்டம் பெருமாட்டியின் ஒரு நாளைய தொழுகை மேடை இன்னும் ஈரமாகவே இருந்தது. அதன்மீது அமர்ந்திருந்த மாவராகப்படிமம் அகன்றது. ஆனல் தூக்கிக் காக்கும் பெருமைக்குறியை ஆங்கு விட்டுச் சென்றுவிட்டது. சிறிது நேரம் அக்குறியைப் பார்த்தவாறிருந்தேன். பின்னர் ஒருமுறை தாந்திரிகக் குறிகளையுங் கண்டேன். வாமமார்க்கத்தினர் தங்கள் மந்திரக்குறிகளைச் சுவர்மீது பொறித்து வைத்திருந்தனர்; அவற்றின் சுற்றுச் சார்பிலே மாவராகனது தவிசு பொருத்தமற்றதாக வியப்பூட்டுவதாகக் காணப்பெற்றது. எதிர்கால விளைவுகளை அது சுட்டுவதுபோல இருந்தது. ஒன்றுக்கொன்று எதிராகவுள்ள இரு குறிகளின் கூட்டுறவு இன்று ஏற்பட்டது. எதிர்பாராத நிகழ்ச்சியாக இருக்கலாம்; ஆனல் காரணமின்றி ஏற்பட்டது என்று கூறமுடியாது. தாந்திரிகக் குறிகளும் மாவராகக் குறியும் ஒன்று கூடின. ஏதேனும் எதிர்காலப் பெரிய நிகழ்ச்சிக்கு முன்னேடியாக இருக்கலாம். உடனே வன்மையாக நான் முன்னே இயற்றிய ஆரியை எனும் விருத்தம் பாடினேன்.

அந்த விருத்தத்தை இயற்றிய நாள் சில ஆண்டுகளுக்கு முன்னராகும். அந்நாட்களில் நான் காசிக்கண்மை ஊர்களின்கண் புராணச் சொற்பொழிவாளனுக ஏமாற்றி வந்தேன்.

என் உள்ளத்தின்கண் கடவுள்பால் அன்புநெகிழ்ச்சி கடுகளவும் கிடையாது. ஆனால் புராணம் படிக்கும்பொழுது வேர்வை, கண்ணீர், மயிர்க் கூச்செறிவு முதலியனவற்றை மிகத் திறமை யாக ஈடுபடுத்தினேன். ஒன்பான் சுவைகளையும் பொருத்தமான மெய்ப்பாடுகளால் தூண்டினேன். ஆதலின் ஊர் மாதரையும் முதியவரையும் நான் கூறும் சொற்களில் கவர்ந்தேன். ஒரு நாள் மாலை புராணச் சொற்பொழிவை முடித்துக்கொண்டு தவிசி லிருந்து எழுந்திருக்க முயன்றபோது, முதியவளொருத்தி அணுகி என் அடிகளைத் தொட்டுக் கும்பிட்டாள். நான் அவளை நோக்கி னேன் ; அவள் முகம் வாடிய தாமரை போன்றிருந்தது. குழல் பிரிந்து சிதைந்திருந்தது. கண்களில் வெள்ள நீர் பொங்கிற்று ; அது ஊழிக்காலத்தை வரவழைப்பது போலிருந்தது. ஆகா ! அவளது கடவுள் பற்றுத்தான் என்னே ! எத்துணை நம்பிக்கை ! எத்துணை தூயவுள்ளம் ! வினவினேன் : "என்ன நேர்ந்தது ? நன்மையுண்டாகுக அன்னையே ! உன் துயரம் என்னிடம் கூறுக, நான் தங்களுக்குச் செய்யவேண்டிய உதவி ஏதேனும் உண்டா ?" முதியவள் தழுதழுத்த குரலில் உரைத்தாள் : "நீர் அந்தணர் பெருமான் ! நிலத்தே வானவர் தோன்றல் ! உமது வாழ்த்துப் பெற்றால் நற்பேறு எனக்குண்டாகும். என் ஒரேமகன் வீடுவாயில் மனைவி தாய்தந்தையர் அனைவோரையும் விட்டுவிட்டு எங்குச் சென்றானோ அறியேன். அவனை மீண்டும் பெற வழி கூறுக, வழிபாடு ஏதேனும்—நன்னோம்பு ஏதேனும்—வேள்வி, நெருப்புக் கடன் ஏதேனும். என் மைந்தன் வந்துசேரும் வகையைச் சொல்லுக. அவன் மனைவி இவள். இளமை ததும்பும் இப் பெண்ணுக்கு என்ன சொல்லி ஆறுதல் கூறுவேன் !" அம்முதிய வளின். சொற்கள் என்னுள்ளத்தைக் கலக்கிவிட்டன. நானும் வீட்டைவிட்டு ஓடிப்போனவனே. ஆனால் இரண்டொரு நொடி கள் குழப்பத்தை அகற்றி என்னைச் செம்மைப்படுத்திக்கொண் டேன். விக்கிவிக்கி யழுது அறவாணர்போல நடிப்பவரை அடுத்து வழிபாட்டு நெறிகளை வினவுதற்கு என் அன்னையோ இல்லை ! இளஞ் சிறுமி மனைவியோ இல்லை ! அவளைக் குறித்து வருந்தி ஆறுதல் கூற எந்த உறவினரும் இல்லை. இந்தப் பேறிழந்த முதிய மாது யார் ? இத்தகைய அன்பு நிறைந்த அன்னை யையும் அழகு கனிந்த மனைவியையும் விட்டோடிப்போன தீவினை யோன் யாவன் ? எங்கு ஓடிப்போய் இருப்பான் ? கிழவிக்கு ஆறுதல் அளிக்கும் முகத்தான் "வருந்தற்க அம்மா ! உன் செல்வன் கட்டாயம் வந்து சேர்வான்." பின்னர் சில நோன்பு

நெறிகள் தெரிவித்துத் தப்பித்துக் கொண்டேன். கிழவி தன் மருமகள் கையை எனக்குக் காட்டினுள். ஆகா! கள்ளங்கபடும் சூதும் வாதும் அற்ற எத்துணை தூய முகம்! வியந்தவனுய் அப்பெண் முகத்தைக் காணலானேன். சற்றும் நம்பிக்கை யில்லாதவளாகக் காணப்பெற்றுள். இருவரும் என்னைவிட்டுப் போய்விட்டனர். எனக்குரியார் யாரும் இல்லை. அழுபவளும் இல்லை. ஆறுதல் பெற மனைவியும் இல்லை. தனியாக இருக் கிறேன். பேறிழந்தவன், இஃது என்னை இருந்திருந்து துன் புறுத்தத் தொடங்கிற்று. இது கெடுதலைத் தெரிவிக்கும் அறிகுறி போலக் காணப்பெற்றது. இதுவரை வையத்திலே எனக்குச் சிரிப்பும் அழுகையும் தாமரை இலைமேல் நீர்த்துளிபோலிருந்தன. ஆனல் இன்றெனது நிலைமைதான் என்னே? காலைச்செம்மை யைக் கண்டு கதிரவன் தோன்றுவதை முற்கூட்டி உரைக்கலா மல்லவா? காற்றின் நிலை கண்டு மழையின் வருகையை உணர முடியுமல்லவா? எனது மனநிலை கண்டு பின் நிகழும் நிகழ்ச்சி களை முற்கூட்டி யுரைக்கும், என்று முடிவு செய்யலாமா? பெரு மூச்சு விட்டுப் பாடினேன்:

[1] அருண இவ புரஸ்ஸரோ ரவிம் பவனஇவாதி ஜவோஜலாகமம்
சுபமசுபமதவிவா நீருணும் கதயதி பூர்வ நிதர்ஸனேதய:

செந்நிறங்கண்டு கதிரவன் வருகையையும் காற்றுவேகத்தை உணர்ந்து மழை வருகையையும் முற்கூட்டி உணரலாம். அது போல முன்னதாக ஏற்படும் குறிகளைக் கண்டு பின்னர் ஏற்படும் நன்மைதீமைகளையும் முற்கூட்டி உணரமுடியும். நான் பன் னட்களுக்கு முன்னரே காசிக்கிழவியின் நிகழ்ச்சியை மறந்து விட்டிருந்தேன். இன்று இந்த ஆரியவிருத்தம் வன்மையாக என் வாயினின்றும் கிளம்பிற்று. நேற்று மாலையில் இருந்தும் இன்று மாலைவரை எண்ணிறந்த நிகழ்ச்சிகள் என்னும் நீர்ச்சுழி யில் தப்ப முடியாதபடி மாட்டிக்கொண்டேன். என்ன, ஏதே னும் கேடான ஆற்றல் என்னை நினைத்திராததொரு பகையிடத் திற்கு இழுத்துக்கொண்டு போகின்றதோ? இன்று முதல் பாண பட்டன் தாமரை இலைநீர்த் துளிபோலப் பற்றற்று இயங்கமுடி யாதா? யாவரே அறிவார்?

இதே நேரத்தில் காட்டுக்கோழிகள் பறந்து செல்வதால் 'பர் பர்' என்றெழுந்த ஓசையைக் கேட்டேன். இல்லத்தின் வாயிலின் ஒருபக்கம் மாந்தர் முயற்சியாலல்லாமல் தானே

---

[1] ஹர்ஷ சரிதம் நான்காம் உயிர்ப்பு.

வளர்ந்திருக்கும் அலரிப்புதர் ஒன்றிருந்தது. மாலையானதும் காட்டுக்கோழிகள் அப்புதரை உறைவிடமாகக் கொண்டிருந்தன. அவை இப்பொழுது திடீரெனப் பறந்தமையால் யாரோ வருகின்ருன் என்ற ஐயம் கொண்டேன். ஒருவேளை பூசாரியாக இருக்கலாம். விரைவாக இல்லத்தை விட்டு வெளிப்போந்தேன். வெளிப்போந்து நான் கண்ட காட்சி எதிர்பாராதது; வல்வினை பயப்பது. மின்சார அதிர்ச்சியுற்றவன்போல் துண்ணென்றேன். எதிரே ஆழ்ந்த காவிநிறப் புடவை உடுத்திய மாதொருத்தி நின்றிருந்தாள். ஒரு கையில் முச்சூலமும் மற்ரென்றில் ஒரு மண்குடமும் கொண்டிருந்தாள். செம்பட்டை நிறக்குழல் அவிழ்ந்திருந்தது; அது குதிகால்வரை நீண்டிருந்தது. மாலைச்செக்கர் நிறப்புயலில் மின்கதிர்கள் தோன்றி அசைந்து பின் அசையாமல் நின்றுவிட்டனபோலக் காட்சியளித்தது. தாதுக்கள் நிறைந்த மலைச் சமநிலத்தின்மேலே கொன்றைப்புதர் மலர்ந்ததுபோல அவள் பொன்னிறமுகம் சுற்றிலும் காவியாடை படிந்திருந்தது. அவள் கண்கள் மலர்ந்த செம்முருக்க மலர்போலச் சிவந்து பரந்திருந்தன; அக்கண்களினின்றும் மெல்லிய ஒளிக்கதிர் புறப்படுவது போன்றிருந்தது. அவள் வடிவம் உள்ளங்கவரத் தக்கதன்று; ஆனால் அச்சுறுத்தத் தக்கதுமன்று. இடிபோல முழங்கி முதன்முதல் என்னை அதட்டிஇராமல் இருந்தால் ஐயமின்றி அவள் ஒரு வடிவெடுத்து நின்ற கொற்றவை என்றே நினைத்திருப்பேன். அவளும் என்னை ஆங்குக் கண்டு வியப்புற்றனள் என நின்ருள். ஒரு நொடியில் அவள் வாயிதழ்கள் துடிக்கத் தொடங்கின. பரந்த செங்கண்கள் இன்னும் அகலமாகிவிட்டன. மூக்கு நுனியில் ஒரு துடிப்பு மூண்டது; புருவக்கொடிகள் இன்னும் கோணலாயின. நெற்றிக் கோடுகள் தெளிவாகத் தோன்றின. அவள் இடியென முழங்கி மொழிந்தாள்: "இந்த வழிபாட்டு இல்லத்தில் திருடன்போல வந்த நீ யார்?"

என்னுல் தாங்க முடியவில்லை. என்ன விடை கூறுவது, என்ன கூறக்கூடாது எதுவும் தோன்றவில்லை. மரத்துப்போன கண்களால் அவளைப் பார்த்தவாறு இருந்தேன். அவள்கோலம் நோக்கி அவளொரு பைரவி என்பர், ஆணைப்பைரவன் என்பர். கோயில் இல்லத்து உட்புறத்து ஓவியங்கள் என் நினைவுக்கு வந்தன. அவை அறிமுகமில்லாக் குறிகள். சில நொடிகள் முன்னர் என் உள்ளத்தில் ஏதோ துன்பத்தினது அச்சம் தோன்றியது, அன்ருே, அதுதான் இப்பொழுது என் முன்னுக வந்து

நின்றுவிட்டதோ? இப்பொழுது இவ்வில்லத்திலிருந்தும் பட்டம் பெருமாட்டி சென்றுவிட்டாளாதலின் என் நெஞ்சங் குளிர்ந்தது. என் இயல்பு நிலையுற்றதும் கைகுவித்துக் கூறினேன்: "அன்னாய்! வெளியூரான், குற்றம் பொறுத்தருள்க."

அப்பைரவி என்னைத் தலையிலிருந்து கால்வரை உற்று நோக்கி வினவினாள்: "நீ பார்ப்பனனா?"

"நான் பார்ப்பன இனத்தே பிறந்தவன் தான்."

"நான்மறைக்கடன்கள் பழக்கத்தில் கொண்டுள்ளாயா?"

"சிறிதளவு."

"இத் தொழுகை இல்லத்தின்கண் நீ என்ன செய்தனை?"

என்னிடம் என்ன அறிய அப்பைரவி ஆவலுடையாள் அறியேன். அவ்வில்லத்திற்குள் யான் யாதொன்றும் நான்மறைக் கடன்புரிந்தேனில்லை. ஆங்கே இப்போது இன்னும் ஈரமண் தவிசு காணக்கிடக்கின்றது. நான் அதை முன்னரே அகற்றிவிட்டிருக்க வேண்டும். இந்த நினைவுத் தொடர்பில் பட்டம்பெருமாட்டியின் நினைவு தோன்றியது. உடனே அவளது செய்தியையும் பைரவியிடம் கூறியிருக்கலாம். பைரவர்களிடத்தில் எனக்கு நல்ல கருத்தும் நம்பிக்கையும் அக்கரையும் கிடையாது. பைரவி பற்றி நான் வெறுப்புக்கொள்ளும் வகையில் பல செய்திகள் கேட்டிருக்கின்றேன். அதனால் பட்டம்பெருமாட்டி பற்றிய செய்தியை அமிழ்த்திவிட்டேன். எச்சரிக்கையொடும் இயம்பினேன்: "இவ்வில்லத்திற்குள் சிறிது நேரமே தங்கினேன் அன்னாய்! நான்மறைக்கடனோ மற்ற மாறுபட்ட செயலோ ஒன்றும் செய்யவில்லை." என்முகம் உற்றுநோக்கி ஏதோ செய்தியை அமிழ்த்திவிட்டேன் என அறிந்துகொண்டு கூறினாள்: "உண்மை உரை; இல்லையெனில் துன்பம் வந்துகூடும்." இப்போது அஞ்சினேன். இந்தப் பைரவியரால் நன்மை யுண்டாகாது, ஆனால் தவறாமல் துன்பம் உண்டாகும். இது எனது நம்பிக்கை. கைகூப்பிச் சொன்னேன்: "அறியா மக்கள்மீது அருள்புரிய வேண்டும் தாயே!" பைரவி புன்முறுவல் செய்தாள். இம்முறுவலிப்பில் வாதுக்குரிய குறியில்லை. மேன்மை அடக்கம் நாணம் இனிமை முதலிய பண்புகள் ஒன்றும் அவளது சிரிப்பின்கண் இல்லை; அது வற்றியதல்ல; மறைவு சான்றது. விண்ணின் வீழ் எரிகொள்ளியின் ஒளியுருவம் சில நொடிவரை நிலவுவது போல அவள் சிரிப்பு உடனே சற்றே இயங்கிற்று. ஏதோ அச்சந்தரும் ஐயப்பாட்டினைக் கிளப்பிற்று. மீண்டும் அஞ்சிக் கழறினேன்: "தவறு பொறுத்தருள்க தாயே!" "இங்கு வா"

என்று கூறிக் கூச்சலிட்டு உரைத்தாள். "பெருமான்! இங்குப் பாருங்கள் இவன் யாரென?" பைரவி என்னை உடைந்த குளத் துப் படித்துறைக்கு அழைத்துச் சென்றாள். ஆங்கு மூவர் அமர்ந்திருந்தனர். இரு பைரவரும் ஒரு பைரவியும் இருந்த னர். இரு ஆண்களில் ஒருவர் பெரியார்; சிறப்பாகக் காணப் பெற்றார். புலித்தோல்மீது பாதி படுத்திருந்தார். அவர் உடம்பி னின்றும் ஒளிப்பிழம்பு எழும்பிக்கொண்டிருந்தது. தலையின் கண் மயிர்முடி அவ்வளவாக இல்லை. செவிப்புழைகள் நரை மயிர்களான் கவியப்பெற்றிருந்தன. நெற்றி வரிக்கோடுகள் மயிர்த்தொடக்கம் வரை நீண்டிருந்தன. புருவக்கொடிகள் ஒன் றின போன்றிருந்தன. தாடி மயிர் சிறிது வளர்ந்திருந்தது. கண்களில் கவர்ச்சி இருந்தது. அவை பலகறை போன்றிருந் தன. கண்மலர்கள் எஞ்ஞான்றும் முற்றிலும் மலர்ந்தனவாகக் காணவில்லை. என்றும் ஒரு பகுதியே திறந்திருத்தலான் கீழ்ச் சதை சற்றுப் பருத்திருந்தது. அச்சதையின் கடைப்பகுதி களில் நிலைபெற்ற மடிப்புக்கள் உண்டாகிவிட்டன. அவரது கோலத்தில் குறிப்பிடத்தக்க தனி மத மரபுக்குறி எதுவும் காண வில்லை; ஆனால் வலதுபால்இருக்கும் குடிபாண்டம் கண்டு அவரைப் பைரவர் என்று முடிவு செய்யலாம். அவரது இடுப்பு ஆடை சிறிய துணித்துண்டே. ஆனால் அது செந்நிறத்ததன்று; உடம்புக்கு போர்வை ஏதுமில்லை. அவரது தொந்தி சற்று முந்தி வந்தது. அவரை அணுகி அப்பைரவியம்மை அறிவித் தாள்: "பெருமான்! பாருங்கள். இந்த ஆள் தொழுகையில்லத் தைத் தீட்டுப்படுத்திவிட்டான்." துறவியின் கண்கள் மூடியிருந் தன. கண் திறந்தென்னைப் பார்த்து மீண்டும் மூடிக்கொண் டார். .சிறிதுநேரம் கழித்துக் கூறினார்: "மாயாவினீ! மாயா வினீ!! மாயாவினீ!!!" யாவற்றையும் தம் கண்ணெதிரே பார்ப்ப வர் போலத் தென்பட்டார்! முக்காலங்களும் அவரது உள்ளங்கை நெல்லிக்கனிபோலும். பைரவி என்மீது மீண்டும் குறை சொன் னாள். துறவி குழந்தைபோலச் சிரித்து உரைத்தார்: "என்ன சிறுவ! அங்கேன் சென்றாய்? பைத்தியக்காரா, அவள் மாயா வினீ, அவள் வலையில் சிக்கிக் கொண்டனை!" கூறும்பொழுது அவரது ஆள்காட்டிவிரல் துர்க்கை மன்றத்தைச் சுட்டிக்கொண் டிருந்தது. பிறகு வினவினார்: "தனியாகவா இருந்தாய்?" துறவி யாவும் அறிந்துவிட்டார்போலும். ஆதலின் எதையும் ஒளிப்பது நல்லதல்ல என முடிவு செய்தேன். நான் நடுநடுங்கி நவின் றேன்:,"நேற்றுக் கங்குல் துயர்மூண்ட இரு மாதருடன் இவ்வில்

லத்தைப் புகலிடமாகக் கொண்டு உணவு உட்கொண்டு தீட்டாக்கினேன். நான் கொணர்ந்த துயர்உற்ற இளநங்கை ஆங்கு மாவராகத் தொழுகையும் நடாத்தினுள். யாவும் தெரியாமல் நடந்தேறிவிட்டன. குற்றம் பொறுத்தருள்க பெருமான்!'' இவ்வாறிசைத்து நடுங்கியவாறு துறவியை வணங்கினேன். துறவி அறைந்தார்: ''அஞ்சுகின்றுயா?'' நான் சுருங்கச் சொன்னேன்: ''ஆம் தந்தையே.''

குழந்தைக்கு விளையாடப் பொம்மை கிடைத்துவிட்டதெனத் துறவி ஊக்கமுற்றுர். நேராக நிமிர்ந்து அமர்ந்து ''இங்கு வா'' என அழைத்தார். நான் அருகே போனதும் எனது நெற்றியைத் தடவிக் கொடுத்தார். எனது புருவ நடுவிடத்தைத் தம் கட்டைவிரலான் அழுத்திஞர். உடனே தலை சுழன்றது. ஒரே நொடியில் என் முன்னே பேரச்சம் விளைவிக்கும் காட்சி ஒன்று தோன்றியது. பட்டம்மையும் நிபுணிகையும் படகில் ஏறிக் கிழக்கு நோக்கிப் போதல் கண்டேன். அங்குக் கீழ்ப்பால் கரிய இருண்ட புயல் விண்ணினைக் 'கவிந்திருந்தது. மேகத்தின் முன்னர் மஞ்சள் நிறத்தூசு பறந்துகொண்டிருந்தது; தூசுக்கு முன்னர் நாரைக்கூட்டம் விளையாடிப் பறந்து கொண்டிருந்தது. நான் கரைமீது நின்றுகொண்டிருந்தேன். புயல்குழு இன்னும் இருண்டது. காற்றுச் சற்றுத் தண்ணிதாகத் தொடங்கிற்று. பேரோசையொடும் இடி இடித்தது. கங்கையலைகள் வெகுண்டு ஒன்றையொன்று தாக்கத் தொடங்கின. வானம் தூசியாலும் திசைகள் இருட்டாலும் கங்கை வெள்ளிய நுரை அடுக்கங்களாலும் கவியப்பெற்றன. நான் பார்த்துக் 'கொண்டிருந்த பொழுதே பட்டம்மையது படகு இருட்டில் மறைந்துவிட்டது. எனது குலையும் மூளையும் அசைவற்றுப் போயின போன்று காணப்பெற்றன. வாயினின்றும் சொல் கிளம்பவில்லை. எனது காலின்கீழே நிலம், குயவன் மண்ணுருளைபோலச் சுழலத் தொடங்கிற்று. மின்னல் மின்னிற்று. படகு நீரொழுக்கில் முழுகத் தொடங்கிற்று. நிபுணிகையும் பட்டம்மையும் நீரில் குதித்துவிட்டனர். மீண்டும் இருள்! கர்ச்சனை ஓகோவெனும் ஓசை! எனது தலை சுழன்றது. இரத்த அழுத்தம் தாங்க முடியாமல் நாளங்கள் வீங்கிவிட்டன. புயல்கள் 'பரவியவாறிருந்தன; அவற்றின் வேகம் மிக்கவாறிருந்தது. கர்ச்சனை ஒலித்தவாறிருந்தது. ஊங்கார ஓசை திசைப் பரப்புக்களைக் கவர்ந்தவாறிருந்தது. நான் கூச்சலிட்டேன்: ''காப்பாற்றுக, பெருமான், காப்பாற்றுக.'' மீண்டும் புருவத்தினிடையே கட்டைவிரல்

அழுந்துதலை உணர்ந்தேன். கங்கை நீரொழுக்கு அமைதியுற்றது. வானம் தெளிவாயிற்று. படகில் நிபுணிகையும் பட்டம்மையும் ஓய்வெடுப்பதைக் கண்ணுற்றேன். நிபுணிகை பட்டம்மைதன் தாமரையடிகள் அருகே அமர்ந்து ஏதோ செய்து கொண்டிருந்தாள். பட்டம்மையின் முகம் மகிழ்ச்சியான் மலர்ந்திருந்தது. கண்களில் ஊக்கம் செறிந்திருந்தது; அவள் கன்னங்கள் கனிபோல ஒளி செய்துகொண்டிருந்தன. நான் துறவி முகம் கண்டேன்; அவர் பாதி திறந்த கண்களில் இனிய மலர்ச்சி கண்டேன். நான் நொடிதோறும் நடுங்கியவனாய் வினவினேன்: "பெருமான்! என்ன நான் பார்த்தது? இவை நிகழ்பவையா? தவிர்க்க முடியாதவையா? துறவி குழந்தைக் குறும்போடும் கூறினார்: "எனக்கெப்படித் தெரியும், நிகழலாம். என்ன செல்வ! அஞ்சுகின்றனையா?"

"எனது குற்றம் பொறுத்தருள்க பெருமான்!"

"நீ ஏதேனும் குற்றம் புரிந்தனையா செல்வ?"

"நானெளியன் பெருமான், குற்றம் புரிந்தவாறுதான் வருகின்றேன். ஆனால் தெரிந்து யார்க்கும் தீமை செய்யவில்லை. நான் துன்பத்திற்கு அஞ்சுகின்றேன்."

"நீ பார்ப்பானா?"

"ஆம், பெருமான்!"

"உனது இனமே துடைநடுங்குவது. என்ன செல்வ! உனக்கு மாவராகன் மீது நம்பிக்கை உண்டா?"

"ஆம் அடிகளே!"

"பொய், பொய். உனது இனமே பொய்யானது. நெஞ்சம் அழியாதது என்று ஒப்புக்கொள்ளுகின்றனையா?"

".ஒப்புக்கொள்ளுகின்றேன், பெருமான்!"

"பொய்யன், உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுபவன். உன் நூல்கள் யாவும் பொய்ம்மையையும் போலிப்பண்பினையுமே சொல்லித் தருகின்றன. என்ன, நீ ஊழ்வினையை ஒப்புக்கொள்கின்றாயா?"

துறவி விடுத்த இவ்வினாவுக்கு விடை உடனே கொடுக்க இசையவில்லை. விடை தந்தால் எனது இனத்தின்மீது இன்னும் என்ன அடைமொழி விழுமோ அறியேன். பேச்சை மாற்றும் எண்ணத்துடன் வினவினேன்: "எப்படி விடையளித்தல் பெருமான்?" துறவி சிரித்து உரைத்தார்: "சொல் ஊழ்வினையை ஒப்புக்கொள்கிறாயா?"

"ஒப்புக்கொள்கின்றேன் பெருமான்!"

"எனில் கேடு, இடும்பை, இடுக்கண், துன்பம் என் பவற்றிற்கு ஏன் அஞ்சுகின்ருய்? பொய்யொழுக்கத்தவன் நீ."

"ஆம் பெருமான், நான் அப்படிப்பட்டவனே."

"என்ருல் சில நல்லன தெரிந்துகொள்."

"அவை என்ன, பெருமான்!"

"அஞ்சுதல் ஒழி, நம்பிக்கை கொள்ளத்தக்க இடத்தில் முழுதும் நம்பிக்கை வை. விளைவு யாதாயினும் நம்புக. ஏற்றுக் கொள்ளத் தக்கதை ஏற்று இறுதிவரை கடைப்பிடி."

"மாயைச் சேற்றில் பற்றப்பெற்ற புழு நான்; பல தெரியும்; அவற்றின்படி நடக்க முடியவில்லை."

"கயவன்! பொய்யன்! உனதினமே பொய்யானது. நூறு தெரிந்துகொள்ள ஏன் திரிகின்றனே? ஒன்றைத் தெரிந்து ஒழுகுக, செல்வ! உனக்கந்தச் சிறுமிமீது பற்றுண்டா?"

இது வியப்பான வினு. "என்ன, விடை கூறுக!" பேசாதிருத்தலே நலம் என்றிருந்தேன். பேசாமை சண்டையை விலக்கு மன்ருே! இதே நேரம் துறவி அந்தப் பைரவியிடம் வினவினுர்: "மாமாயா! யாவும் அமைந்துவிட்டனவா?"

பைரவி பகர்ந்தனள்: "இப்போதே அமைந்துவிடும்."

இவ்விதம் இயம்பி அவளும் இரண்டு வழிபாட்டினர் ஆகிய ஆடவனும் அரிவையும் எழுந்துபோயினர். நான் துறவியொடும் தனியனுனேன். துறவி உரைத்தார்: "குழந்தாய்! ஏன் விடை கூருதிருக்கின்ருய்?" கைகுவித்துக் கூறினேன்: "அந்த இள நங்கைக்கு ஊழியனுகும் பெருமை பெறவே விரும்புகின்றேன். அவளது நன்மைக்காக எனதின்னுயிரையும் கொடையாக வழங்கக் காத்திருக்கின்றேன்."

துறவி முறுவலித்தவாறிருந்து சொன்னுர்: "இல்லை; பைத்தியமே, உனதுயிரை நான் வேண்டவில்லை. அந்தத் தங்கை மீது உனக்குப் பற்றுள்ளதா இல்லையா? இதனையே அறிய விரும்புகின்றேன். நேராக ஏன் விடை பகரவில்லை? உனதினமே கோணலானது. ஆம், செல்வ, உனக்கு மாவராகன்மீது பற்றுண்டா?"

"ஆம் அடிகளே!"

"நினைத்துக்கொள், ஓரசுரன் திடீரெனத் தோன்றுகின்ருன்; உன்னை அமிழ்த்திவிட்டுத் தன் இடதுகையில் உன் தலைவியையும் வலதுகையில் மாவராகப் படிமத்தையும் ஏந்தியவாறு உன்னிடம் கூறுகின்ருன்: இருவரில் யாரை உன் உயிர் கொடுத்துக் காப்பாற்றுவாய்? இப்பொழுது சொல் யாரை உன் உயிர் கொடுத்துக் காப்பாற்ற விரும்புவாய்?"

துறவி வியப்பான பிறவி. இப்படியா வினவுவது? நான் சிறிது நேரம் பேசாதிருந்து நினைத்துப்பின் விடை பகர்ந்தேன்: "இருவரையும் காப்பாற்ற விரும்புவேன்!" துறவி சினந்து துடித்துக் கூறினார்: "மீண்டும் பொய் பேசுகிறாய்! பிறவியிலேயே பாவி, தீவினையாளன், கயவன் பொய்யொழுக்கத்தினன், வஞ்சகன்! நீயா, மாவராகனைக் காப்பவன்? செருக்குடையானே!"

நான் உள்ள அறிவையும் பறிகொடுத்தேன்; சொல்லற்றேன்; அசைவற்றேன். துறவியது சினம் உண்மை அல்ல; என்னை ஆராயவே அவர் இவ்வடிவம் எடுத்தார். கலக்க முற்றேன். என் விருப்பத்திற்கு மாறாக யாரோ என்னை இந்த விடையை என் வாயினின்றும் வரவழைத்தாற்போலிருந்தது. சொன்னேன்; "உயிர் கொடுத்து இளவரசிப் பெருமாட்டியைக் காப்பேன்."

துறவி சிரித்தார். அரைதிறந்த கண்கள் ஒளி வீசின. சொன்னார்: "பேறு கெட்டவனே! உன் வாழ்வு முழுவதிலும் முதன்முறையாக உண்மை உரைத்தாய்போலும். வெட்கமுறுகின்றாயா? சீச்சீ! பைத்தியம்; அந்த மாயாவினியினது பிடியில் அகப்பட்டுக் கொண்டாயா? என்னடா முழுகிப்போயிற்று? ஒரு கேடுமில்லை. திரிபுரசுந்தரி உனதுள்ளத்தைக் கொள்ளை கொள்ள அந்த வடிவத்தில்வர, துணிவோடு ஏற்றுக்கொள்ள ஏன் மறுக்கின்றாய்? என்றும் நற்பேறு கெட்டவனாகவே இருக்கவிருப்பமா? எளியவன் நீ; மாவராகன் மீதினும் அந்நங்கைமீதே உனக்கு மிகுந்த பற்றுள்ளது; தொழ விருப்பம் உள்ளது. இல்லை? மீண்டும் பொய்யுரைக்கப் போகிறாயா? தீவினையாளனே!"

"இல்லை பெரும! வேண்டுமென்றே பொய் பேசுகின்றேனா? யாரோ என்னைச் சொல்ல வைக்கின்றான். பட்டம் பெருமாட்டியைத் தொழ ஆவல் உள்ளது; அவளுக்கெனது தொழும்பு பெறத் தகுதியும் உள்ளது. இஃதுண்மை."

"ஆம், இப்பொழுது நீ உண்மையையே பேசுகின்றாய். பைத்தியமே, புவன மோகினியைக் கண்டபின்னரும், நீ அலைந்து திரிந்துகொண்டிருக்கின்றாய்! பார், செல்வ! உன் மறைகள், நூல்கள் உன்னை ஏமாற்றுகின்றன; உன் உள்ளத்துள்ளே உறையும் உண்மையை அவை அமிழ்த்திவிடுகின்றன; உன் உள்ளத்தின்கண் தோன்றும் கவர்ச்சியைக் குற்றம் என்கின்றன; மறக்கடிக்கின்றன; நீ தொழுகின்ற மாதினைக் கைவிடக் கூறுகின்றன. இவள் மாயாவினி! இவள் மாயாவினி! நீ இவள் வலையில் அகப்படாதே. ஆடவர் குழாத்தையே மயக்குறுத்துகின்றாள்; மாதர்களுக்குத் தொல்லை தருகின்றாள்.

மாயைக் கண்ணுடியை நீட்டுகின்ருள். நீ அவளைப் பார்க்க முடியவில்லை. நான் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அவள் உன்னைப்பார்த்துச் சிரித்தவாறு இருக்கின்ருள்.''

நான் மயக்கமடைந்தவன்போலத் துறவியைப் பார்த்த வாறிருந்தேன். அவர் மொழிகள் ஒவ்வொன்றும் என் உள்ளத் தினூடே ஒரு குழப்பத்தை மூட்டுகின்றது; ஆண்டுகள் பலவாக என்னிடம் திரண்டிருக்கும் அழுக்குக் கழுவப்பெற்றது போல உணர்ந்தேன். துறவியின் மொழிகள் எனக்கு வியப்பூட்டின; மறைபொருந்தியன. சிறிது நேரம் வரை உள்ளத்தைத் தோற்ற வன் போலிருந்து கைகூப்பிச் சொன்னேன்: ''பெரும! சற்று முன், நான் கண்டன நிகழ உள்ளனவா?'' ஐயமின்றித் துறவி கூறினர்: ''அதனில் என்ன இடுக்கண் உள்ளது? மாயாவினி யின் வலையிலே நீ அகப்படுதல் எதற்காக? நிகழாமல் இருக்கச் செய்துதான் பார், அதனினும் எத்துணை இன்பம் அரும்பும்! நீ மறக்கின்ருய், பைத்தியம், இத்திருவிளையாட்டில் சுவைமிளிர் கின்றதல்லவா! நல்லது சொல்லுக. நீ அந்த நங்கையது பண் பினை அறிவாயா?''

''நான்...நான்...நான்...!''

''சீச்சி, அறிவில்லாதவனே, ஏதேனும் சொல்லுக! உள்ளத் தில் முதன் முதல் எழும் கருத்தினைத் தெரிவிப்பாயாக.''

''அவள் தூய்மையின் வடிவம், பெருமான்!''

''நீ விலங்கல்லவே?''

எனக்கொன்றும் விளங்கவில்லை. இதேநேரம் மாமாயை எனும் பைரவி அங்கு வந்தாள். இவளே என்னை முதலில் துறவி யிடம் கூட்டி வந்தவள். துறவி அவளிடம் கூறினர்: ''மாமாயா! இவனைப் பார்! இவன் விலங்காகக் காணவில்லை. ஆனல் துணி வுள்ளவனும் அல்ல. கேடு நிகழுமென அஞ்சுகின்ருன். இவ னுக்கு இன்றைய வழிபாட்டு எச்சம் அளிப்பாயாக. துன்பம் நிகழும் எனும் அச்சத்தினல் உள்ளம் முறிந்துள்ளான்.''

மாமாயை சிறிதுநேரம் நின்றபடி பேசாதிருந்தாள். ஒரு வேளை அவள் நெஞ்சம் இதற்கு ஒருப்படவில்லைபோலும். பின்னர் வேண்டுகோள் குரலில் கூறினள்: ''அதற்குத் தகுதி யுடையவன இவன்?'' துறவி சிரித்து உரைத்தார்: ''நீயும் பராசத்தியது வலையினின்றும் விடுபெறவில்லை, மாமாயா! சொல்லிவிட்டேன். இவன் விலங்கு அல்லன், தகுதியுடைய வனல்லன் எனில் பின்னர் எத்தகையவன்? உன்னைத் தூற்றிய

வாறு திரிவான் என்று ஐயமுறுகின்ருயா? அஞ்சுகின்றனே! சீ! பைத்தியம்! நீயும் அஞ்சுகின்றனே?''

மாமாயை மணிவாயின் மாற்றம் உரைத்தாள்: ''கட்டளைப் படி செய்கின்றேன் தலைவ!'' துறவி கூறினர்: ''நில் மாமாயா! உனக்கு நம்பிக்கையுண்டாம்படி செய்கின்றேன்.'' இங்ஙனம் கூறி என்னை அருகில் அழைத்து நிறுத்தினர். என்னிடம் என்ன ஆராய அழைத்தாரோ? அஞ்சியவாறு நின்றிருந்தேன். என் மேலாடையை அகற்றி என் முதுகெலும்பினைத் தொட்டுப் பார்க்கலானர். அரைமுதுகுவரை தடவி வந்து பின் கையை அகற்றினர். ''உண்மையையே கூறுகின்றேன், மாமாயா! பார் இவன் மூலாதாரக் குண்டலினி விழிப்போடும் இருக்கின்றது'' என்ருர். மாமாயையும் தன்விரல் கொண்டு என் முதுகெலும்பின் பிற்பகுதியைத் தொட்டுப் பார்த்தாள். தானே ஆறுதல் கொண்டு கூறினுள்: ''தங்கள் கட்டளைப்படி ஆகுக தலைவ.'' ''இவனைக் குளத்தருகே அமர்த்துக'' என்று அவளுக்குக் கட்டளையிட்டு என்னைக் குறித்துக் கூறினர்: ''கேடு அகன்றுவிடும். ஆனல் நீ ஏன் கேட்டினை நன்மையாக ஏற்கலாகாது? இன்று நிறைமதி தொடங்கியதும் இம்மாந்தர் தம் மறைவழிபாடு நடைபெறும். மாமாயை உனக்கு வழிபாட்டு மிச்சம் வழங்குவாள். அதனை உள்ளம் நிறைவோடும் ஏற்றுக்கொண்டு பார்; அலைந்து திரியாதே. இந்த மாபெரும் விசும்பின்கண் ஒவ்வோரணுவும் ஒரு கடவுளாகும். கடவுள் தனது எந்த வடிவத்தில் மிகுதியாக உன்னைக் கவர்ந்தானே அதனைத் தொழுவாயாக. வருக உனக்கு ஒரு மறைமொழி ஓதுகின்றேன்.'' இரும்பு காந்தத்தை நோக்கிக் கவரப்பெறுமாறுபோல நானும் துறவி அருகே ஈர்க்கப் பெற்றேன். அவர் என் செவியில் ஒரு மறைமொழி ஓதினர். பின்னர் உரைத்தார்: ''உனதுள்ளத்தை அச்சம் அவா பற்று முதலிய உட்பகைகள் குழப்பும்போது இம் மறைமொழியை இடைவிடாது உள்ளுக்குள்ளேயே ஓதுவாயாக.''

அக்கரையுடன் துறவியின் உரையினை ஏற்றுக்கொண்டேன். சிறிது நேரம் அவர் அசையாமல் அமர்ந்திருந்தார். பிறகு காலடியோசை கேட்டுக் கண் திறந்து வினவினர்: ''யார்?''

''விரதிவச்சிரன் யான் பெருமான்!''

''வருக'' என்ருர். வந்தவன் இருபத்தைந்து ஆண்டு நிறைவுடையவனுக இருக்கலாம். அவனது முகம் தூய்மையும் அழகும் கவர்ச்சியும் கொண்டிருந்தது. பௌத்த துறவிகள் போல அவன் ஆடை அணிந்திருந்தான்; ஆனல் ஆடை

மஞ்சளாக இல்லாமல் சிவப்பாக இருந்தது. நிலாவில் அந்நிறம் மிக்குப் பொலிந்தது. அவனது குரல் மென்மையும் மழலைத் தன்மையும் கொண்டிருந்தது. அவன் நிலத்தில் சென்னிபடிய வணங்கி ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்துகொண்டான். துறவி உறக்கத்தினர் போல அசைந்தாடியவாறு இருந்து பின்னர் உசாவினார்: "என்ன முடிவு செய்தனை, விரதி?"

"ஏதும் அறிய முடியவில்லை, பெருமான்! என் முதல்குரு அமோகவச்சிரர், அவ்வாறு செய்யக் கட்டளை அளிக்கவில்லை. நெஞ்சப்பாழ்மையில் (நெஞ்சத்தின்கண் ஒன்றும் நிலையாமை) உறுதியாக இருக்குமாறு ஓதினர். ஒருமுறை எனதுள்ளத்தே குழப்பமுற்றபொழுது குருபெருமானும் என்பால் கவலையுற்றார். என் உள்ளத்துக் குழப்பத்தை அவரிடம் முறையிட்டேன். ஒரு நாள் திடீரெனக் குருபெருமான் என்னை அழைத்துக் கூறினர்: 'நீடுழி! நான் இன்னும் நெடுநாள் உயிர்த்திருக்கமாட்டேன். நீ கௌலாசாரியர் அகோரவைரவர் இடம் செல்க. அவரே உனக்காவன செய்வார்.' அந்த நாளிலிருந்து நான் தங்களைத் தேடியவாறிருந்தேன். ஏன் குருபெருமான் என்னைத் தங்களிடம் அனுப்பினர் அறிகிலேன்."

"உள்ளப்பாழ்மை உன் அறிவிற்குப் புலனாயிற்று?"

"இல்லை பெருமான்!"

"உன்மீது ஒருவன் நம்பிக்கை வைக்கின்றான். அவனைக் கைவிட்டுவிட துணிவு கொள்வாயா?"

"கொள்வேன் பெருமான்!"

"நான், நீ என்ற வேற்றுமையை மறப்பதில் உனக்குச் சுவை ஏற்படுகிறதா?"

"ஆம், அடிகளே!"

"ஆடவன் அரிவை எனும் வேற்றுமையை நீ மறக்க முடியுமா?"

"முடியாது, பெரும!"

"அறிஞன், கட்டுண்டவன் என்ற இருவரது வேற்றுமை உனக்கு நல்லதாகத் தென்படுகிறதா?"

"நல்லதெனத் தென்படுகிறது, பெருமான்!"

"நல்லது நீடுழிய, நீ உண்மை உரைப்பவன். அமோகவச்சிரர் தெரிந்தே உன்னை என்னிடம் அனுப்பினர். பௌத்த அறம் மேற்கொள்ளும் உரிமை உனக்கில்லை. வாமவழியை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், நெடியவ, சத்தியை ஏற்காமல் இந்த

அறத்தில் வழிபாடு நடைபெற முடியாது. இதைப் பற்றி நீ முடிவு செய்தாகவேண்டும்.''

''இதைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை, பெருமான்!''

ஆடவன் அரிவை எனும் வேற்றுமையை அகற்ருமல் இருக்கும்வரை நீ அரைகுறையாகத்தான் இருக்க முடியும்; நிறைவற்றவனுகப் பற்றுள்ளவனுகத்தான் இருக்க முடியும்; அதுவரை நீ, நான் என்ற வேற்றுமை உன் உள்ளத்தில் ஒட்டிக்கொண்டு தானிருக்கும். உன்னிடம் உள்ளப்பாழ்மை குடிகொண்டிருந்தால், உள்ளத்தில் பாழ்மையைக் கொண்டிருந்தால் சத்திதேவி இன்றியே வழிபாடு நடந்தேறும். உன்னிடம் அஃதில்லை. ஆனுல் இந்த வாமவழிபாட்டை உன் தலைமேல் ஏற்ற நான் விரும்பவில்லை. விருப்பமாகில் ஏற்றுக்கொள். உள்ளத்தின் செயல்களை மறைப்பதும் தக்கதன்று; அவற்றுக்கு அஞ்சுவதும் அறிவுடைமை அன்று; அவற்றுக்கு நாணுறுவதும் கடமை அன்று. இக்கூற்றினை உறுதியுடன் பற்றுக; பின்னர் குரு பெருமான் கட்டளைப்படி நடப்பாயாக. இன்று எமது வழிபாட்டு வட்டத்தில் நீ அமரலாம்.''

நிலத்தில் சென்னிதோய வணங்கி விரதிவச்சிரன் ஆசாரியரது கட்டளை தலைமேற்கொண்டான். உள்ளத்தில் அமைதியில்லை. வன்மையொடும் அமைதியின்மையை அடக்குகின்ருன் என அவன்முகம் பளிங்கெனக் காட்டிற்று. துறவியை வணங்கியபின் அவன் என்பால் திரும்பினுன். இப்போது நிலாவொளி அவன் முகமீது தெளிவாகப்பட்டது. ஆகா! எத்துணை அழகுமுகம்! சிவந்த ஆடையுடுத்திய விரதியைக் கண்ணுற்றதும் முக்கண்ணனது மூன்ரும் கண் நெருப்பால் சூழப்பெற்ற காமதேவனது நினைவு கொண்டேன். தகாத இடத்தில் துறவு திணிக்கப்பெற்றது; மின்னல் கொடிக்குள் நிலவு சிக்கிக்கொண்டது. மாலைக்கதிர்களிடையே தாமரை அகப்பட்டது. வைகறை வானத்தே வெள்ளிமீன் அசையாது நின்றுவிட்டது. காமனைப் பிரிந்து வருந்தும் வேனில் துறவறம் வேட்டது. ஆகா! இப்படியும் நிகழுமா? விரதிவச்சிரன் என்னைச் செய்தியறியும் பார்வையொடும் பார்த்தான். இக்கட்டத்திலே எனது கோலம் புதியதாகவும் எனக்கவன் கோலம் புதியதாகவும் இருந்தன. துறவியே விரதிவச்சிரனது ஆவலைத் தணித்தார்! ''வெளியூர் பார்ப்பான் விரதி; வழிபாட்டில்லத்தினைப் புகலிடமாகக் கொண்டான். மாமாயைக்கு இதனுல் சினம் உண்டாயிற்று. அவள் இன்னும் பராசத்தியின் வலையினின்றும் விடுதலை

அடையவில்லை. கடக்க முடியாதது அந்த வலை. பராசக்தியின் திட்டம் மீற முடியாதது. இவன் கேட்டினுக்கு அஞ்சுகின்ருன்; இன்னும் இவன் உள்ளத்தில் பற்று நீங்கவில்லை. விரைவிலே அது நீங்கிவிடாது. பிறவிதோறும் ஊறிப்போன பழக்கம்; படிப்படியாகத்தான் விலகும்; பல ஆண்டுகள் பிடிக்கும். இவன் விலங்கல்ல; ஆதலின் பிறவிப் பழக்கமான பற்றுக்கள் விட்டகலும். மாமாயை இவனுக்கு வழிபாட்டு எச்சம் அளிப் பாள். அவளும் மகிழ்வாள், இவனும் அச்சம் தவிர்வான்.'' இவ்வளவுங்கூறித் துறவி வானத்தை அண்ணுந்து பார்த்தார். பிறகு விரதியிடம் சொன்னுர்: "நேரமாகிவிட்டது. சற்று அமுதக்குடம் இப்படிக் கொடு விரதி!'' விரதிவச்சிரன் குடத்தை நீட்டினன். துறவி மேல் நோக்கியவராய் உரைத்தார்: "மாயா வினீ! மாயாவினீ!'' பிறகு முடக்முடக்கெனக் குடித்துவிட்டார். சிறிது நேரம் வரை வெறியில் அசைந்தாடிக் கொண்டிருந்து எழுந்து நின்றுகொண்டார். நாங்கள் இருவரும் எழுந்திருந் தோம். விரதியோடும் அவர் வழிபாட்டில்லத்திற்குள் நுழைந்தார். "சிறிது நேரங்கழித்து நீ வருக'' என்று எனக்குக் கட்டளை பிறந்தது. மேலும் கூறினர்; 'யாரிடமும் அச்சந்தவிர்! குருவா யினும் நான்மறையாயினும் அஞ்சாதே! மந்திரம் நினைவிருக் கிறதா?''

"ஆம் பெருமான்!''

"சிறிது நேரம் கழித்து யாரும் அழைக்காமற்போயினும் அச்சமின்றி உள்ளே வா, தெரிகிறதா?'

"ஆம் தலைவ!''

துறவி போன பிறகு எனக்கு ஆர்ாய நேரங் கிடைத்தது. எங்கு வந்து அகப்பட்டுக் கொண்டேன்? துறவிதன் சொற் களுக்குப் பொருள்தானென்ன? மாமாயை என்ற மாதே ஒரு வலையில் அகப்பட்டவள் என்ருல் அவள் தரும் வழிபாட்டு மிச் சப்பொருளை ஆர்வமொடு ஏன் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்? ஆனல் துறவி அத்தகைய கட்டளையே தந்துள்ளார். துறவியின் ஆற்றலால் நான் கண்ட காட்சிகள் யாவும் உண்மைதாமோ? பட்டம்மை இப்போது இடுக்கண் இன்றிப் பாதுகாப்போடும் இருக்கின்ருள் அன்ரே? எத்துணை வியப்பு! நிபுணிகை நிலைமை தான் என்ன? பட்டம்மைக்குமட்டும் தொழும்பு பூணும் உரிமை உடையேனே? இத்தகைய எளிய நேர்மைச் சொற்களுக்காக என்னுள்ளத்தில் குழப்பம் ஏன் மூளவேண்டும்?

மயக்கம் வருவதுபோலத் தலைசுற்றுவதுபோல உணர்ச்சியுற்றேன். துறவி தெரிவித்த மறைமொழி பயின்றால் நலமுண்டாதல்போல இருந்தது. ஊன்றிய நினைப்போடும் அம்மறைச் சொல்லைப் பயிலலானேன். ஒரு முழுத்தம் கழிந்த பின்னர் ஒருபொருட்டுமின்றியேனும் துறவி என்னை அழைப்பதுபோலத் தோன்றியது. தோற்றவன்போலும் ஈர்க்கப்பெற்றவன்போலும் தொழுகையில்லம் நோக்கி நடக்கலானேன். கதவருகே சென்றதும் மிகுந்த அமைதியும் இனிமையும் பொருந்திய குரலில் பின்வரும் வடமொழிச் செய்யுள் பாடப்பெற்றதைக் கேட்க முடிந்தது.

**ஆதாய தக்ஷிணகரேண ஸுவர்ணதர்வீம்**
**துக்தாந்ந பூர்ண மிதரேண ச ரத்ந பாத்ரம்**
**பிக்ஷாந்ந நாத நிரதாம் நவஹேமவர்ணும்**
**அம்பாம் பஜே ஸகலபூஷண பூஷிதாங்கீம்.**

[வலதுகையில் பொன்னிறப் புல்லேந்தி இடதுகையில் பாற்சோறு நிறைந்த மணிக்குடம் தாங்கி ஐயம் ஏற்றார்க்குச் சோறு வழங்குவதில் ஈடுபட்டவளாகிய எண்ணிறந்த அணிகள் பூண்ட புதிய பொன்னிற உடம்பினள் எமது அன்னையைத் தொழுகின்றேன்.]

மாமாயையே இச்செய்யுளைப் பாடிக்கொண்டிருந்தாள். அவள் அன்னபூரணி நினைவு மறை ஓதுகின்றாள் என நினைத்தேன். ஆனால் உள்ளே சென்று நான் பார்த்தனவெல்லாம் வியப்புள்ளனவாக இருந்தன. உள்ளே உணவு உட்கொள்கின்றனர் என நினைத்தேன். பார்த்தபோது பசிதீர உட்கொள்ளும் உணவு அல்ல என்பது தெளிவாயிற்று. நிறைவட்டத்தில் ஐந்து மாந்தர் அமர்ந்திருந்தனர். கௌலாசாரியர் அகோர பைரவரும் மாமாயையும் சற்று ஒட்டினாற்போல அமர்ந்திருந்தனர். மற்ற ஒரு பைரவனும் ஒரு பைரவியும் அதேபோல அமர்ந்திருந்தனர். விரதிவச்சிரன் தனியாகப் பதுமாசனமிட்டு அமர்ந்திருந்தான். கிணற்றருகே எனக்குக் குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்துகொண்டேன். எனக்கெதிர்முகமாகத் துறவியும் மாமாயையும் இருந்தனர். ஆங்கு ஒவ்வொரு வழிபாட்டினன் முன்னர் ஒவ்வொரு குடிபாண்டம் இருந்தது. அனைவரும் சிவந்த ஆடை போர்த்திக்கொண்டிருந்தனர். ஆனால் உடம்பில் எவ்வித ஆடையும் இல்லை. முன்னே உடம்பில் இருந்த கந்தல் ஆடைகளும் இப்பொழுது எங்கு மறைந்தனவோ அறியேன். வட்டத்தின் நடுவிடத்தே கள் தேறல் நிறைந்த பெரிய குடம் இருந்தது. அதன் மீது ஒரு துணித்துண்டு இடப்பெற்றிருந்தது; அதன்மீது

எட்டிதழ்த் தாமரை வடிவில் மற்ருெரு சிறு குடம் வைத்திருந்தது. துறவி அசையாதிருந்தார். அனைவரும் தங்கள் இருப்பை முற்றிலும் மறந்தவரெனக் காணப்பெற்றனர். காற்று வீசாத இடத்தில் நின்று எரியும் அசையாத் தழல்போல ஐவரும் நிறையமைதியோடும் அமர்ந்திருந்தனர். நிலாவொளி அவர் முகங்கள்மீது பொழிந்தவாறிருந்தன. ஒருமுக நினைப்பில் அமர்ந்திருக்கும் முக்கண்ண பெருமான்மீது வானயாறு ஆயிரம் வெள்ளி ஒழுக்குகளில் பாய்வதுபோன்ற காட்சியை ஒத்திருந்தது. இம்முறை மாமாயை அம்மையைத் தெளிவாகக் கண்டேன். அவள் முகம் தாமரைமொட்டுப் போல நீண்டிருந்தது. நெற்றி எட்டாம் பிறையென அகன்றிருந்தது. நிலவின் பொழிவினுல் அவள் முக அழகு பொங்கிய வண்ணமிருந்தது. முன்னே பார்த்தபொழுது அவள் தோற்றம் எனக்குத் தெளிவாகத் தெரியாமல் இருந்தது. அப்போது சுழன்றுகொண்டிருந்த கண்களும் விறைத்த புருவங்களும் சேர்ந்து என்னுள்ளத்தில் அக்கரையின்மையைத் தாண்டின. இப்போதோவெனில் அவள் முகம் அன்னை உமை முகமெனப் பொலிந்தது. அகோர பைரவருக்கு அருகே அவள் அமர்ந்திருப்பது சிவபெருமான் அருகே உமையன்னை அமர்ந்திருப்பது போன்றிருந்தது. தொழுகை நெறிகளை நிறைவேற்றும் பொறுப்பு அவளுக்கிருந்தது. அகோர பைரவர் அசையாமல் இருந்தார். மாமாயை பெரிய பாண்டத்தினின்றும் சிறியவற்றில் கள்தேறலை நிரப்பிக்கொண்டிருந்தாள். அனைவோரின் குடிபாண்டங்களும் நிரம்பிவிட்டன. செம்மையாகக் காதில் விழாதவாறு ஏதோ மறைமொழி சொல்லிக்கொண்டிருந்தாள் மாமாயை. முதலில் அவள் பாண்டத்தை ஏந்தித் துறவிக்கு நீட்டினுள். அவர் வாங்கிக்கொண்டார். பின்னர் ஏதேதோ முத்திரைகள் அவிநயித்துப் பாண்டத்தின்மீது மாமாயை தொட்டாள். கொடுப்பதற்குமுன் ஒரு மந்திரச் செய்யுள் பாடினுள். அது ஒருவேளை அமுதத்தேவியை நினைக்கிற மறைமொழிகளாக இருக்கலாம். தனக்கு நாற்புறமும் தன்விரல்களால் சீழ்க்கையோசை கிளப்பினுள். அஃதென்ன வழிபாட்டு நெறியோ அறியேன்; ஒருவேளை அது திக்குக்கட்டாக இருக்கலாம். துறவி குடிபாண்டத்தைக் கையில் ஏந்தியதும் ஏனையோரும் தத்தம் பாண்டம் எடுத்துக்கொண்டனர். மிகுந்த இனிய குரலில் விரதிவச்சிரன் முதற்பாண்டத்திற்குத் தொழுகைச் செய்யுள் பாடினுன்.

[1] ஸ்ரீமத் பைரவ சேகர ப்ரவிசலச் சந்த்ராம்ருதா ப்லாவிதம்
க்ஷேத்ரா தீஸ்வரயோகிநீகண மஹாஸித்தைஃ ஸமாஸேவிதம்
ஆநந்தார்ணவகம் மஹாத்மகமிதம் ஸாக்ஷாத்ரி கண்டாம்ருதம்
வந்தேஸ்ரீ ப்ரதமம் கராம்புஜகதம் பாத்ரம் விஸுத்திப்ரதம்

[தமது தலையில் உறையும் திங்களின் அமுதக் கதிர்களால் நனைக்கப் பெற்றவரும், இடத்திற்குத் தலைமை தாங்கும் யோக மாதர்க் குழாங்களாலும் மாசித்தர்களாலும் தொழப்பெற்றவரும், மகிழ்ச்சிக் கடலில் முழுகி இருப்பவரும், உண்மையில் முப்பால் அமுத முடையவரும், தமது கைத் தாமரையில் தூய்மை அளிக்கக்கூடிய பாத்திரம் ஏந்தியவரும், பெருமை மிக்கவரும் ஆகிய பைரவருக்கு வணக்கம் செய்கிறோம்.]

மந்திரம் முடிந்ததும் குரவர் பெருமான் ஆகிய துறவி தமது பாண்டத்தைக் கொண்டு மாமாயை வாயிதழ்களைத் தொட்டுப் பின் ஓரோசையும் செய்யாமல் கள்தேறலைக் கடகடவென அருந்திவிட்டார் ஒரே மூச்சிலே! மற்றவரும் அப்படியே செய்து விட்டனர். சிறிது நேரம் வரை கள் நாற்றமும் கொன்றை மலர் மணமும் குங்கிலியப் புகை மணமும் சேர்ந்து என்னைப் படாத பாடு படுத்திவிட்டன. கள்ளைப் பருகிய ஐந்து வழிபாட்டினரும் கலங்கவில்லை; அசையாது அமர்ந்து விட்டனர். மறைமொழி முணுமுணுப்பு நடந்தவாறிருந்தது. கள் குடி நடந்தேறும்வரை வழிபாட்டினர் வலது கையால் ஏதோ முத்திரை காட்டியவாறு இருந்தனர். ஆனால் குருவாகிய துறவி அசையாதிருந்தார்; மறைமொழி சொல்லவில்லை. எம்முத்திரையும் காட்டவில்லை. எவ்வழிபாட்டுச் செயலும் புரியவில்லை. கைலாயமலை உச்சிமீது ஒருமுக நினைவு நிலையில் அமர்ந்திருக்கும் முக்கண் பெருமான் போல நிறையமைதியோடும் அமர்ந்திருந்தார். வழிபாட்டினர் கள்குடி—முத்திரை—மறையோதல்..... ...ஆக மொத்தம் ஏழு முறை இயற்றினர். துறவியும் மாமாயையும் மனவுறுதியோடும் அமர்ந்திருந்தனர். ஆனால் மற்ற மூவரிலே பைரவனும் பைரவியும் இணையாக இருந்தவர் சற்று அசைந்தாடத் தொடங்கினர். மாமாயையும் விரதிவச்சிரனும் வழிபாட்டு நெறிகளை இயற்றிய வாறிருந்தனர். என் தலைசுழலத் தொடங்கிற்று. இப்போது துறவி கண் திறந்தார். அவர் உள்ளத்தில் கலவரம் ஏற்படவே இல்லை. சில நொடிகளுக்குள் மீண்டும் ஒருமுக நிலையை

[1]. கௌலாவலி நிர்ணயம் எட்டாம் உல்லாசம் ஒப்பிடுக.

அடைந்தார். மற்ற இணையான பைரவர் இன்னும் மிக்குக் கலக்க முற்றனர். குருவாகிய துறவி அமைந்த குரலில் ‘அமைதி மறை பாடுக’ என்று கட்டளையிட்டார். மாமாயையும் விரதிவச்சிரனும் இனிய இசையில் அமைதிமறை பாடினர். எனக்கு அம்முழு மறையும் நினைவிலில்லை; ஆனால் அதனுள் அடங்கி இருந்த கருத்து மிக அழகுடையதாகக் காணப் பெற்றது. ஒவ்வொரு மறைப் பகுதிக்கு இறுதியில் பிரதிவச்சிரன் தனியாக ஒரு விருத்தம் பாடினான். அடிக்கடி அதனைக் கேட்டதால் எனக்கது இப்பொழுதும் முற்றிலும் நினைவிலுள்ளது.

[1] **சிவமஸ்து ஸர்வ ஜகதः பரஹித நிரதா பவந்து பூதகணு:**
**தோஷாப்ர யாந்து சாந்திம் ஸர்வேலோகா ஃ ஸுகீபவந்து**
**ஸர்வேலோகா ஸுகீபவந்து.**

[எல்லா வையங்களிலும் சிவபெருமான் வீற்றிருக்கின்றார்; உயிரினங்கள் பிறர் நன்மைக்காக ஈடுபடுக. குற்றம் விலகி, அமைதி யுறுக; உலகமெல்லாம் இன்பமுறக் கடவது, உலகமெல்லாம் இன்ப முறக்கடவது.]

இப்பொழுது கலக்கமுற்ற இணையான பைரவர் இயல்பு நிலை எய்தினர். பதினொன்றாவது முறை கட்குடி முடிந்தது. வழிபாட்டினர் தம் கைகளில் ஒரு தனிவகை முத்திரை காணப் பெற்றது. நிலாவொளி அகன்றது. முற்றத்தினது தளத்தை இருள் கவர்ந்தது. காற்றினையும் கள் தேறல் மணமும் கவர்ந்தது. வானவெளியை குங்கிலியப் புகை கவர்ந்தது. இக்காட்சிகளைப் பொறுக்கும் ஆற்றல் எனது மூளைக்கில்லை. வானத்திருந்தும் பேரச்சம் விளைவிக்கும் பூதங்களும் வேதாளங்களும் இறங்கிக் கொண்டிருந்தன. பாண்டத்தினைச் சுற்றி நாற்பாலும் நிற்பன போன்றுகாணப்பெற்றன. தொழுதவர் வட்டம் நிழலாகக் காட்சி யளித்தது. இருந்திருந்து அந்நிழல் வடிவங்களிடையே குழப்பம் ஏற்பட்டது. என்னால் மேற்கொண்டு பொறுக்க முடியவில்லை. தலை சுழன்றது. முற்றிலும் உணர்வற்றேன், உருண்டேன். எத்துணை நேரம் அந்நிலையில் இருந்தேன், நினைவில்லை.

சிறிது நேரங்கழித்து என் நினைவு திரும்பி இருக்கும். என் தலையில் ஏதோ தண்ணென்ற உணர்ச்சி தோன்றியது. கண்கள் மூடியவாறே இருந்தன. இருப்பினும் வானத்தினின்றும்

---

[1] நாகானந்தம் கடைசி சுலோகமும் ஏறக்குறைய இவ்வாறு இருக்கின்றது.

ஆனந்த பைரவர் இறங்கிக் கொண்டிருந்தார்; அவரதுடம்பில் கோடிகோடிக் கதிரவர் தம் ஒளி பீறிக்கொண்டிருந்தது. எனினும் அக்கதிர்கள் கோடிகோடித் திங்கள்களது தண்மையுடையனவாக இருந்தன. அமுதக் கடலின்கண் பிறந்த படைப்புக் கடவுளது தாமரையினின்றும் ஆனந்த பைரவர் கிளம்பிப் பால்நிற வெள்ளிக் காளைமீதேறிக் கொண்டார். அவர் கழுத்தில் இருக்கும் நீலநிறம் கருப்புர வெண்மலையில் நீலமணி பொலிவதே போன்றிருந்தது. பதினெண் கைகள், மணி, உடுக்கை, கயிறு, கோல், வாள், வில் முதலிய படைகள் ஏந்தி இருந்தன; ஒரு கை மட்டும் அஞ்சேல் எனும் முத்திரையைக் காட்டிக்கொண்டிருந்தது. ஆனந்த பைரவரோடு ஆனந்த பைரவி என்னும் கள்ளணங்கும் வந்தனள். ஆனந்த பைரவருக்குப் போல இவளுக்கும் ஐந்து முகங்களும் முக்கண்களும் பதினெண் கைகளும் இருந்தன. அவளது உடம்பு நிறம், பனிக்கட்டி மல்லிகை வெண்டாமரை திங்களொளிபோல வெண்மையாக இருந்தது. அவள் கண்கள் அசைந்தவாறிருக்கும் வலியான் குருவிபோல எஞ்ஞான்றும் குறும்பு கொண்டிருந்தன. பவழம்போலச் சிவந்த வாயிதழ்களிலே எப்போதும் புன்முறுவல் குடிகொண்டிருந்தது. அவள் மகிழ்ச்சிவடிவம், வெறிப்படிவம், அழகிற்குறைவிடம், ஒளிக்கிருப்பிடம், இளமை தன் ஊற்று எனக் காணப்பெற்ருள். ஆனந்த பைரவரது கட்டளைப்படி அவள் என் தலையைத் தொட்டாள். பூச்சுகோல் எடுத்து என்னுடம்பு முழுவதிலும் அமுதம் பூசியதுபோல உணர்ச்சியுற்றேன். ஆனந்தபைரவி மெதுவாக என்னைத் தன்மடியிலிருத்திக் கொண்டாள். எல்லாம் கற்பனையாகவே கனவாகவே இருந்தன. ஆனல் உண்மையில் என்னுடம்பு ஒருவர் மடிமீது இருந்தது என ஒருவாறு நினைத்தேன். ஆனந்த பைரவி மடியில் இருக்கலாம். அவள் அன்போடு முறுவலித்திருக்கலாம். என் கண்களையும் கன்னங்களையும் தடவிக்கொடுத்தாள். இன்னும் கண் திறக்கவில்லை. நான் வெல்லப்பட்டவன் போலக் கூறினேன்: "என் குற்றம் பொறுத்தருள்க அன்னையே! நான் இன்று பேறுபெற்றவனுனேன்." பைரவியின் முகத்தில் மகிழ்ச்சி என்னும் அமுத வொழுக்குப் பொழிந்தது. அவள் மீண்டும் ஒரு முறை, பைரவக் கடவுள் கள்ளணங்கு இவர்களைப் போற்றும் மறைமொழிகளைக் கூறினுள். அவள் குரல் இனிமையும் தெளிவும் பொருந்தியிருந்தன; அருளும் செறிந்திருந்தது. அவள் கண்களில் தாய்மை அன்பு தவழ்ந்தது. அவள் முகத்தினின்றும் நட்பொளி

பொழிந்து கொண்டிருந்தது. அரைகுறையாகக் கண் திறந்திருந்தேன். எதுவும் தெளிவாகக் காணவில்லை. அவள் முன்னைய மாமாயை தானோ? ஒரு மாறுதல் உள்ளதே! ஆடை இயல்பாக அணிந்திருந்தாள். நன்றி பாராட்டும் குரலிலே நவின்றேன்: " தாயே இன்றுதான் நற்பேறு பெற்றவனானேன். மிக்க இளமையிலேயே பெற்ற அன்னையை இழந்தேன். தந்தையின்பமும் பன்னாள்வரை கொடுத்து வைக்கவில்லை. தாயுந் தந்தையும் இழந்து நான் புகழ் வாய்ந்த வாத்தியாயனக் கால்வழிக்கு மாசுண்டாமாறு திரிந்துவந்துள்ளேன். இன்று நான் பிறவிப்பேறு வாய்க்கப்பெற்றேன். தீவினையேன் இன்று மீட்டும் தாயன்பினது இன்பத்தை நுகர்ந்து கொண்டிருக்கின்றேன்." ஆனந்த பைரவி அமுதந் தோய்ந்த நட்பினோடும் என்னைத் தொட்டுக் கொண்டிருக்கின்றாள். " தாயே என் குற்றம் பொறுத்தருள்க. கேடு அகல்வதாக! நன்மை உண்டாகுக! தாங்கள் எனக்கிவ்வருள் செயல் புரியக் கூடாது!" என்றேன். பைரவி முறுவலித்தவாறு மொழிந்தாள்: " நன்மை உண்டாகுக, குழந்தாய்! பராசத்தியது அருட்பேறு ஏற்றுக்கொள்." இப்போது நான் முழுதும் கண் திறந்தேன். மாமாயை அம்மையே என்று முழுதும் உணர்ந்தேன். யானைத் தும்பிக்கைபோலப் பெருமழை பெய்த பிறகு தளர்ந்த காம்புடைய அசோக மலர்போல அவள் கண்கள் சிவந்திருந்தன. எனினும் அவற்றின்மீது அருள்நீர் நிரம்பியிருந்தது. கருநொச்சி மலர்க்காம்புபோல மூக்குத்தண்டு மை நிறத்ததாக இருப்பினும் உள்ளங்கவர்ந்தது. மீன்கொடி பரவிய புயற்குழுவால் சூழப்பெற்ற திங்கள்போல அவள் செம்பழுப்பு நிறமும் தளர்ந்த குழலும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. புயற்காற்று, அதனோடும் எழும்பிவரும் தண்ணீர் இரண்டினாலும் அலையப்பெற்ற மலர்ந்த காட்டாத்திச்செடிபோல அவள் ஆடை அலைந்து கொண்டிருப்பினும் அழகுடையதாக இருந்தது. கட்குடம் மீது வைக்கப் பெற்றிருந்த முட்செவ்வந்தி மலர்போல அவள் நெற்றிப் பொட்டுக் கலைந்தும் கலையாதிருப்பினும் அழகாகவே இருந்தது. அவள் கட்டளைப்படி நான் எழுந்து அமர்ந்தேன். அன்புடனும் அக்கரையுடனும் அவள் பிரசாதம் அளித்தாள். அதனில் கள்தேறலும் இஞ்சியும் வறுத்த கிழங்கும் விட்டுணுக்கிரந்தி மலரிதழ்களும் அடங்கியிருந்தன. ஏதோ அறியும் ஆவலோடு பைரவி அம்மை என்னை உற்றுநோக்கினாள். நான் என்னைச் சுற்றிலும் ஒருமுறை உற்றுப் பார்த்தேன். மாமாயை அம்மையைத் தவிர்த்து ஆங்கு எவரும் இல்லை. ஆங்குக் கள்

குடந்தானென்ன அலரிமலர் இதழ்த்துண்டுகளும் காணேம். வேண்டுகோள் குரலில் வினவினேன்: "அம்மா! பெருமான் அகோர பைரவர் எங்குள்ளார்? மற்ற இணையான பைரவர் எங்கே? விரதிவச்சிரப் பெருமான் எங்கே?"

மாமாயை சுருக்கமாக விடை பகர்ந்தாள்: "அவர் அனை வோரும் தத்தம் உறைவிடம் போய்விட்டனர். நானும் போக விருக்கின்றேன். துறவி உனக்கு வழிபாட்டெச்சம் வழங்கக் கட்டளை இட்டருளினர். ஆதலின் இதுவரை இங்குத் தங்கினேன்."

"அவர்கள் இங்கு வரமாட்டார்களா?"

"வைகாசி அமாவாசைக்கு முன்னர் இங்கு வரமாட்டார்கள்."

"அகோரபைரவரும் வரமாட்டாரா?"

"துறவி, சித்தர், அவதூதர் அவருக்குக் குறித்த எந்த உறை விடமும் இல்லை. அவர் பிரசாதம் செய்தவற்கு நீ மிகுந்த நல்வினை செய்திருக்க வேண்டும்."

"அம்மா! ஒரு வினு."

"வினவுக"

"துறவி நேற்று என்னிடம் சில மொழிகள் மொழிந்தார். அவற்றின் பொருளென்ன?"

"துறவினும் மிக்க நானென்ன தெரிவிக்கப் போகின்றேன்?"

"உள்ளத்து நிகழும் அவாக்களைத் தொழுக என்ருரே; அதன் பொருள் என்னவாக இருக்க முடியும்?"

"துறவி மேற்கொண்டு என்ன சொன்ஞர்?"

"உள்ளத்தாவல்களைக் கண்டு அஞ்சுவதுந் தவறு, அவற்றை மறைப்பதுந் தவறு, பராசக்தி உன்னை எவ் வடிவத்தில் ஆட்கொண்டாளோ, கவர்ந்தாளோ அதனைத் தொழுவாயாக; அதுவே உனது வழிபடு கடவுள்' என்று எனக்குப் பணித்து விரதியுடன் கூறினர். 'இவ்வறவழியில் சத்தி இன்றி வழிபாடு புரிதல் அரிது.' இது போன்று நான் முன் கேட்டிராத கருத்துக் கள் வெளியிட்டார். என்ன அன்னையே! சத்தி என்ற சொல் மாதினைக் குறிக்கின்றதா? மாதரில் உண்மையிலே திரிபுவன மோகினியின் இருப்பு உள்ளதா?"

"பார், செல்வ, நீ வீணகச் சொற்போர் தொடங்குகின்ருய். துறவி கூறியவெல்லாம் ஆண்மையின் வாய்மையையும் குறிக் கோளையும் குறிக்கின்றன. பெண்மையின் வாய்மையும் குறிக் கோளும் ஆங்கில்லை. ஆண்மைக்குப் பெண்மை பற்றுக் கோடாக இருத்தல்வேண்டும் என்பதும் குரவர் குருபெருமானது கருத்து.

பெண்மைக்கு ஆண்மையும் பற்றுக் கோடாக இருக்கவேண்டி யுள்ளது. அதனைக் குரவர் பெருமான் குறிப்பிடவில்லை. ஏனெனில் அஃது பெண்மைக்குரிய பொருள்.''

''பெண்மையின் வாய்மை ஆண்மைக்குப் பகையா என்ன?''

''பகையன்று செல்வ, ஆண்மையின் குறை நிரப்பாகும். குறை நிறைக்கும் பொருள் பகைமையின் பாற்படாது.''

''எனக்கு விளங்கவில்லை அன்னையே!''

''உனக்கு விரைவில் புரியும், செல்வ! உன் குரவர் பெருமான் உன் திறத்து மகிழ்ச்சி கொண்டுள்ளார்; உனது மூலாதாரம் விருப்புற்றுள்ளது. உனக்கு வாம அறத்தவர் அவதூதரது அருட்பேறு கிடைத்துள்ளது. விரைவு கொள்ளற்க. பொருட் களைப் பிரிக்கும் கருத்திலே ஆண்மை மகிழ்ச்சியுறுகிறது. பிரிந்த பொருட்துண்டுகளை ஒன்றுபடுத்திப் பெறுகிற கருத்தில் பெண்மை மகிழ்ச்சியுறுகின்றது. ஆண்மை உறவு அற்றது; பற்று அற்றது. பெண்மை பற்றுக்கொண்டது. ஆண்மை ஈடற்றது; இரண்டற்றது. பெண்மைக்கு ஈண்டு ஆண்மை கட்டுக்குள்படாதது; விடுதலை பெற்றது. பெண்மை கட்டுக்குள் பட்டது. ஆண்மை தன் குறையை நிறைக்கப் பெண்மையைச் சத்தி வடிவத்தில் பற்றுக் கோடாக ஏற்றால்தான் நிறைவு பெறும். ஆனால் மாது தன்னைச் சத்தியாகக் கருதி நிறைவற்ற நிலையில் நின்றுவிடுகின்றாள்.''

''மாதின் நிறைவுக்காக ஆண்மையைச் சத்திமான் எனக் கருதுவது இன்றியமையாததன்றோ, அம்மா?''

''இல்லை, செல்வ! அப்படிக் கருதுவதால் மாதுக்கு நலம் பயவாது. மாது இயற்கை வடிவினள்; ஆணைக்கட்டுக்குள் அகப்படுத்துவதில் மாதிற்கு வெற்றியேற்படுகிறது; அவளது வாழ்க்கைப் பயன் அவளைக் கட்டினின்றும் விடுதலை செய்வதில் உள்ளது.''

எனக்கொன்றும் புரிந்தபாடில்லை. கண்கள் பெரிதும் மலர விழித்துப் பார்த்தவாறிருந்தேன். மாமாயை மீட்டும் உரைத் தாள்: ''விளங்கவில்லை? நீ எளியவன். அடிப்படையிலேயே தவறான கருத்துட்கொண்டுள்ளனை. நீ உன்னை ஆணாகவும் என்னை மாதாகவும் கருதுகின்றனை. இதுவே தவறு. என்னிடம் ஆண்மையினும் இயற்கை வடிவமே மிக்க அளவில் செறிந் துளது; ஆதலின் நான் மாது. உன்னிடம் இயற்கைப் பகுதி யினும் ஆண்மையின் செறிவு மிக்குள்ளது; ஆதலின் நீ ஆண்.

இது வையம் அறிந்த அறிவு. ஆனல் அஃது வாய்மையன்று. இயற்கையுடன் ஏறக்குறைய ஒத்திருக்கும் பிரதிநிதி மாது அல்லள். இயற்கையினின்றும் தொலைவில் உள்ள ஆண்மை யுடையவனும் ஆண் அல்லன். உனதகத்தே இயற்கையியலினும் ஆண்மை மிக்கிருந்தாலும் அது எனதகத்தே இருக்கும் ஆண்மையினும் குறைவானது; என்னவெனில் நான் உன்னினும் மிக்குப் பற்றற்றவள், இரண்டற்றவள், தானே இயங்குபவள், கட்டுடைத்தவள். என்னுள்ளே குடிகொண்டிருக்கும் மிக்குள்ள இயற்கைப்பகுதியை என்னுள்ளேயே வாழும் ஆண்மையியலைக் கொண்டு அடக்க முடியவில்லை. ஆதலின் எனக்கு அகோர பைரவரது தேவை ஏற்பட்டது; வேறு ஆடவன் எனது மலர்ச் சிக்குத் துணைபுரிய முடியாது.''

"அன்னையே, அகோர பைரவருக்குத் தங்களது தேவை உண்டா? தங்கள் உதவி அவருக்கு இன்றியமையாததா?''

"செல்வ, எனக்குத்தான் அவரது உதவி வேண்டியுள்ளது; என்னகத்து இயற்கை யியலுக்கு வெற்றியளிக்க அவரது உதவி வேண்டியுள்ளது. அவரோ குரவர் பெருமான், சிவபெருமானுக் கொப்பானவர். அவர் செயற்கரிய செய்யும் பெரியார். தாமே இயங்குபவர், சித்தர், பற்றற்றவர்; கட்டுக்குட்படாதவர். அவருக்கு எவர்துணையும் வேண்டியதில்லை.''

"அம்மையே! கள்தேறல் இந்த வழிபாட்டிற்கு என்ன துணைபுரிய முடியும்?''

"உனக்கு இது புரியாது. இயற்கையது தோற்றத்தான் வருவது கள்தேறல். இஃது உன்னைப்போன்றவர்க்கு விளங்க முடியாத மறை. அது வாமவழிபாட்டிற்கு இன்றியமையாத தொரு.கருவியாகும்.''

இருக்கலாம். மாமாயையின் பரந்த அறிவும் நுண்மையும் எனக்கு வியப்பூட்டின. ஏதோ நிலையில் கொண்டு வருபவள் போல் என்முன்னே நின்றவாறிருந்தாள். அவள் தம் சிவந்த கண்கள் ஆகிய தாமரைமொட்டு முனைகள் நின்றும் நீர்த்துளிகள் ததும்பின. ஏதோ துயர் அவளை நெருக்கும்போலும். சொன்னாள்: "மைந்தா! விரும்பிய இடத்திற்குப் போவாயாக; நான் மிகு தொலைவு கடந்து செல்லவேண்டும்.'' மறுமாற்றம் எதிர் நோக்காமல் புறப்படவிருந்தாள். நான் விரைந்து பணிந்து ஆர்வமோடு வினவினேன்: "அம்மா, அந்த விரதிவச்சிரன் யாவன்?''

"செல்வ, அவனது உறைவிடம் எங்கோ இமயமலை



107869
015 1 DBBW

அடிவாரத்தின்கண் உள்ளது. அவன் பௌத்த அவதூத அகோரவச்சிரர் மாணுக்கன். ஆனல் பௌத்த அறத்தை மேற் கொள்ளும் உரிமை இழந்தானென அகோரவச்சிரர் எமது வாம வழிபாட்டிற்கு அனுப்பிவிட்டார்.''

'' தாயே! விரதி ஏன் பௌத்த அற உரிமையை இழந்தான்?''

'' அது பராசக்தி, திரிபுவன மோகினியது திருவிளையாடல். விரதிவச்சிரன் சக்தியைக் கைவிட்டவன். அவனது சத்திதேவி அவனை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ருள். காசிக்கடுத்த ஊரிலே பிறந்தவன். அவன் திருமணம் செய்த சத்திதேவி இங்கே எங்கோ இருக்கின்ருள்.''

மாமாயை பைரவி சொல் கேட்டதும் எனக்கு அந்தக் காசி நகரத்துக் கிழவி நினைவு உண்டாயிற்று. இந்த விரதிதானு அக்கிழவிதன் உயிரனைய மகன்? அவனை மீண்டும் நான் காண முடியுமா? நினைவெனும் கடலில் மூழ்கியவனுய்ச் சிறிது நேரம் நின்றவாறிருந்தேன். இதற்குள் மாமாயை போய் விட்டாள். நானும் விரைவாக வெளியே சென்றுவிட்டேன். அப்போது கிழப்புருவின் இறக்கைபோல வானம் புகை நிறம் கொண்டிருந்தது. இறக்கை அறுபட்ட பறவைபோலத் திங்களஞ் செல்வன் மேற்குமலை மேலே விழுந்தான். இளமை கொண்ட வைகறைச் செந்நிறம் அரும்பத்தொடங்கிற்று. கதிரவன் தோன்ரு முன்னம் அவன் முன்னேடிக் கதிர்கள் பொன்னீர்க்குத் துடைப்பத்தின் வேலை செய்து உதிர்மலர் விண்மீன்களைப் பெருக்கி அகற்றிவிட்டன. மேலை வான வெளியிலே சிவபெருமானது பிநாக வில்போலத் தனுரிராசியாகிய விண்மீன் மண்டலம் நாணேற்றப் பெற்றதுபோலக் காட்சியளித் தது. கங்குலென்னும் மாது துறவு பூணுதற்காகத் தன் விண்மீன் களாகிய பூண்களை ஒவ்வொன்ருக அகற்றியவாறிருந்தாள். கொற்றவை மன்றம் பனித்துளிகளான் நனைந்திருந்தது. அதன் எதிரே உள்ளே அறுகம்புற்கூட்டங்கள் சோம்பல் தளர்ச்சியுள்ளனபோலக் கிடந்தன. நான் கங்கைக்கரை நோக்கிக் காரெனக் கடிது சென்றேன்.

## உயிர்ப்பு ஏழு

கங்கைக் கரை நெருங்கினேன்; பொழுது புலர்ந்தது. நான் நேரத்தில் வந்து சேராததால் பட்டம்மையும் நிபுணிகையும் கவலையுற்றவராய்க் கங்குல் முழுவதும் உறங்காமல் இருப்பாரென நான் நினைக்கவில்லை. விழிப்பினுல் வருத்தமுற்ற பட்டம்மையின் கண்கள் கடும்பனியால் நொந்த தாமரை மொட்டுப் போலிருந்தன. அவற்றைக் கண்ணுற்ற நான் அறியாமலேயே மிகு மகிழ்ச்சியுற்றேன். பேறிழந்த இந்தப் பாணபட்டனுக்கு யார்மீதும் அக்கரையும் கவலையும் எப்போதும் ஏற்பட்டதில்லை. இருமூன்று நாட்களாக இந்த இருமாதர் மீதும் ஏன் எனக்கு இவ்வளவு கவலை? என்னைக் கண்டதும் அக்கண்களில் நீர்த்துளி ததும்பினவே. இஃது எனக்கு எல்லையற்ற இன்பந் தந்தது. இதுவரை என்மீது இத்துணைக் கவலையை யாரும் கொண்டதில்லையே! இன்று இம்மாதர்தம் அக்கரைக்கும் கவலைக்கும் உரியவனுனேன். என்னைப் பற்றியும் கவலை கொள்வார் உள்ளனரே! இது கிடைத்தற்கரிய பேறுதான். வருத்தத்தோடு என்னைக்கண்டு பின்னர் ஒன்றும் பேசாமல் பட்டம்மை படகுக்குள் சென்றுவிட்டாள். படகு பெரியதாகத் தான் இருந்தது. குமாரகிருஷ்ணவர்த்தனனது கட்டளைப்படி வேண்டிய பொருட்கள் அதனில் இருந்தன. குடிமக்கள் வேடத்தில் சில போர்வீரர்கள் மற்ருெரு படகில் அமர்ந்திருந்தனர். பட்டம்மை என்மீது ஏன் வெகுண்டாள்? நான் குற்றவாளி போலத் தலை தொங்க நின்றிருந்தேன். நிபுணிகை என்னை இந்நிலையில் கண்டவளாய் நின்றிருந்தாள். ஒருவேளை நான் இப்படிக் கழிவிரக்கங்கொள்ளுதல் அவளுக்கு நல்லதாகப் பட்டதுபோலும். என்னுள்ளத்துள்ளே நூற்றுக்கணக்கான எண்ணங்கள் எழுந்துமோதின. பொறுப்பற்றவன் என இருவரும் என்னைக் கருதினர் போலும். வாழ்க்கை முழுதும் பொறுப்பற்றவனுகவே இயங்கி வந்தேன். எத்தனை எத்தனை பகல்கள், எத்தனை எத்தனை இரவுகள் எங்கெங்குத் திரிந்தேனே?

ஆனுல் இன்றே குற்றவாளியானேன். எனது விருப்பத்தாலேயே என் வாழ்க்கையிலே ஏன் இந்தக் கட்டு ஏற்படுத்திக்கொண் டேன்? நேற்றுவரை தன்னுரிமையுடையவனுக இருந்தேன். இன்று என்னைப் பிறரிடம் ஒப்படைத்து விட்டேன். நானே எனக்குச் சொந்தமில்லை. எனது பகல் எனது கங்குல் என ஒன்றுமில்லை; எனதியக்கமும் எனக்குச் சொந்தமில்லை. என துள்ளமும் எனதல்ல. ஏன் இப்படியாயிற்று? வாழ்க்கை முழு தும் ஏழையாகத் திரிந்தும் என் உரிமையில் செறுக்குற்றுத் திரிந்து வந்தேன். ஏனெனில் வினவுவாருமில்லை; விடை சொல் லும் வாய்ப்புமில்லை. அத்தகைய பாணபட்டன் மற்றவருக்கு விடை பகரும் நிலைக்கேன் வந்துவிட்டான்? "நீ ஊழியம் புரி கின்றனை; ஊழியன் போலத்தான் இயங்க வேண்டும்" என்று எவனும் சொல்லவில்லையே. இந்த அடிமைத்தனத்தை நானே விலைகொடுத்து வாங்கிவிட்டேன். எனினும் ஒரு முறையும் என்னுள்ளம் எதிர்த்துப் போர் செய்யாததுதான் வியப்பிலும் வியப்பாகும். 'இனி என்னுல் முடியாது' என என் உள்ளம் என்னிடம் ஒரு முறையும் சொல்லவில்லை. இதற்குமாருக எனது நெஞ்சம் என்னிடம் கூரு நின்றது. 'நீ குற்றவாளி, கொடிய தவறு செய்துவிட்டாய். ஒறுத்தலுக்கு உரியவனுகிவிட்டாய்.' இப்படி என் நெஞ்சம் கூறியதால் எனக்கின்பமே உண்டாயிற்று. இவ்வாருக நினைவுகள் என்னும் ஒழுக்கினை மிக்க நேரம் பொழிய விடாமல் நிபுணிகை இடையிலேயே குறுக்கிட்டுக் கூறினுள்: "பட்ட! நீ இவ்வாறு பட்டம்மையைக் கைவிட்டு இவ்வளவு நேரங் கடத்தி இருக்கக்கூடாது." இப்போது என் குற்றம் ஓரளவு விளங்கிற்று; நானே, பட்டம்மைதன் நன்மைக்காகவே தொலை வில் இவ்வளவு நேரம் இருந்தேன். நான் இரவு நேர்ந்த நிகழ்ச்சி களைச் சுருக்கமாக நிபுணிகைக்கு உரைத்தேன். கேட்டு அவ ளுக்கு வியப்பும் ஏற்படவில்லை, வருத்தமும் உண்டாகவில்லை. நெட்டுயிர்ப்பு உயிர்த்தவளாய்ச் சிறிது நேரம் கால்கட்டைவிரல் கொண்டு படகினது பலகையைக் கீறியவண்ணம் இருந்தாள். பின்னர் தலைநிமிர்ந்த பொழுது அவள் முகத்தே வியப்புறத்தக்க தோர் துயர நிழல் தவழ்ந்தது கண்டேன்; அதனுல் கவலை கொண்டேன். தளர்ந்த குரலில் வினவினேன்: "நீயும் வருத்த முறுகின்றுய்?"

நிபுணிகை தன் உணர்வுச் செப்பமுற்றுள். முகத்தில் மகிழ்ச்சிக்குறி கொண்டுவர முயன்றுள்; அம்முயற்சியில் அவள் உள்ளத்தின் பள்ளத்திலே குமுறிக் கொண்டிருக்கும் துன்பத்தை

அவளால் மறைக்க முடியவே இல்லை. ஆவலோடு அவளை வினவினேன்: "நீ ஏன் வருத்தமுறுகின்றாய்?" அவள் இயல்பாக விடை பகர்ந்தாள்: "ஒன்றுமில்லை பட்டனே, மாமாயை உன்னிடம் கூறியவற்றுள் எத்துணை ஆழ்ந்த உண்மை செறிந்துள்ளது என்பதை உன்னுகின்றேன். ஆணினது உண்மை வேறு பெண்ணினது உண்மை வேறு. நான் பெண் உடம்பைப் பெற்றேன். ஆனால் அதை வெற்றிபெறச் செய்யவில்லை, பயனுடையதாகவும் செய்யவில்லை. பெண்பிறவியைப் பயனுடையதாக்கும் வழியை மாமாயை அன்னை கூறினளா பட்ட?" நான் சிறிது எண்ணிக் கூறினேன்: "சில குறித்த வினாக்களை விடுக்கவே மாமாயை எனக்கிசைவு தரவில்லை. அவதூதர் சொற்கள் உன் வினாவிற்கு விடை அளிக்க முடியுமாவெனப் பார். 'உள்ளத்தின்கண் நிகழும் எழுச்சிகளை அடக்கவுங்கூடாது, அவற்றால் அமிழ்த்தப்பெறவுங்கூடாது. தனித்தனி ஆளின் வழிபாட்டிற்குரியவன் வெவ்வேறு ஆளாகும். அத்தகைய தொழுதற்குரியவனை உள்ளத்தின் போக்குகளே அறிமுகம் செய்துவைக்கின்றன. பலமுறைகளில் நமதுள்ளத்தின்கண் எழுந்தருளுகிறான் நாம் தேர்தெடுக்கும் ஆள். அவ்வழிபாட்டிற்குரியானைத் தொழுதவாறுதான் இருக்கின்றோம். ஆனால் அதைப் பற்றிய உணர்வு நமக்கிருப்பதில்லை என...........' நிவுனியா, நான் இக்கருத்துக்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் எனதுள்ளத்தினது ஒரு மூலையில் அவதூதர் தம் கருத்துக்கள் உண்மை என முழங்கியவாறுள்ளன." நான் நவின்றதை நிபுணிகை உன்னிக் கேட்டாள். ஒவ்வொரு எழுத்தையும் புரிந்துகொள்ள முயற்சி செய்தனள்போலும். மீண்டும் பெருமூச்சு விட்டுக் கூறினாள்: "பட்ட! விரைவில் குளித்துவிடு. நீ குமாரகிருஷ்ணவர்த்தனனைப் போய்ப் பார்க்க வேண்டுமெனப் பௌத்த அடிகள் பணித்தார். அவர் மாலைநேரம் இங்கு எழுந்தருளினார்". இவ்விதம் கூறி உள்ளே போய்விட்டாள். நடந்தவற்றில் சிறப்பானவை எவையும் கூறவில்லை. பட்டம்மைக்கும் அடிகளுக்கும் இடையே என்ன பேச்சு வார்த்தை நடந்திருக்கும்? அறிய ஆவல் கொண்டேன். அதனை அறிந்தேன் பின்னர்; மற்றொரு நேரத்தில் பொருத்தமான இடத்தில் குறிப்பிடுகின்றேன்.

குளித்துப்பின் கிருஷ்ணவர்த்தனன் இல்லம் நோக்கிப் புறப்பட்டேன். படகினின்றும் இறங்கியதும் திரும்பினேன். பட்டம்மை நின்றிருப்பதைப் பார்த்தேன். அவளது முகம் கருமுகில்

களால் சுற்றப்பெற்ற சரத்கால நிலவுபோல மகிழ்ச்சியும் அழகுங் கொண்டிருந்தது. அப்போதுதான் குளித்துவிட்டுக் குங்குமச் சேலே அணிந்திருந்தாள். சற்று முன்னர்தான் குளித்ததால் அவள் உடம்பினது செம்மையுடன்கூடிய வெண்ணிறம் இன்னும் விளங்கிற்று. காற்று அன்போடு மெல்ல அணைந்ததால் அவள் சேலே முன்ருனே அழகாக அலைந்து கொண்டிருந்தது. கட்டைப் படகின்மீது அவள் நின்ற காட்சி! அப்போதுதான் அழகிய தளிர்விட்ட இனிய குருக்கத்திக் கொடிபோல உடம்பு மயிர்க்கூச்செறிவும் உவகையும் பூத்திருந்தன. அவளது திறந்த இனிய நீலக்கூந்தல் சிவந்த சேலேயின்ஒளியொடு சேர்ந்த தாலே நன்னிற வாகை மலரின் நுண்ணிய இழைகளது வலே போலக் காட்சியளித்தது. அம்மையார் மகிழ்ச்சி யொளியால் கவியப்பெற்றவள்போலக் காணப்பெற்ருள். அவளது உவகையை உணர்ந்ததும் எனக்குற்ற மகிழ்ச்சிக்கு எல்லேயில்லே; பேசவும் நா வெழவில்லே. ஒன்றும் மாற்றம் உரைக்காமலேயே அவள் ஆணையை எதிர்பார்த்தவாறு ஆங்கு நின்றுகொண்டிருந்தேன். அவள் மெதுவாகச் சொன்னுள்: "விரைவில் திரும்புக, பட்ட." நான் தலேவணங்கி அஞ்சிய குரலில் கூறினேன்: "விரை விலேயே திரும்பிவந்து விடுகிறேன்." நான் சொன்னதற்கு பொருள்: 'பெருமாட்டீ! குற்றம் பொறுத்தருள்க; எதிர் காலத்தில் இத்தகைய தவறு நிகழாதவாறு பார்த்துக்கொள் கிறேன்.' பட்டம்மையிடம் சொன்ன மொழிகளின் குறிப்புப் பொருள் இங்ஙனமாக, அது குறித்து மிகவும் நாணமுற்றேன். அன்பு கனிந்த குரலில் அம்மையும் 'நன்று' என மறுமாற்றம் அளித்துத் திரும்பிவிட்டாள். நான் நகரம் நோக்கி நடந்தேன்.

இன்று பங்குனி நிறைமதி. இன்று கன்னேசியிலே காம விழாவணியானது வெறிகொண்ட நாளாகும். இன்று நகருக்குள் நுழைதற்கு நல்ல துணிவு வேண்டும் என்பதை மறந்தே போனேன். நகர முழுவதும் மக்களின் கைத்தட்டலும் இன் னிசையும் முழவு முழக்கமும் ஒலித்தவண்ணமிருந்தன. எந்த ஆடவன்தான் போகட்டுமே, அவன்மீது பீச்சாங்குழல்வாயி லாக மகிழ்ச்சிவெறி செறிந்த இளநங்கையர் நிறநீர் தெளித்து வந்தனர். நகரத்து நாற்சந்திகளிலெல்லாம் முழவுகளது ஆழ் முழக்கத்தாலும் கைகள் தட்டுதலாலும் செவிடுபடும் ஓசை கிளம் பிக் கொண்டிருந்தது. எட்டுத் திசைகளிலும் குவியல் குவியலாக நறுமணப்பொடிகளும் நிறப்பொடிகளும் கவிந்தன. பொற் சுண்ண எழுச்சிமீது வைகறைச் செங்கதிர்கள் மொய்த்தன

போன்ற அழகைக் கண்டேன். இந்தச் செம்மை பசுமை அழகு களை நகரமாந்தர்தம் உடம்பு அணிகளும் அவர் தலைகளில் அணிந்த சிவந்த அசோக மலர்களும் மிகும்படி செய்தன. நகர மாந்தரனைவரும் பொற்சுண்ணத்திலே முழுகி எழுந்தனர் என்பனோ! அல்லது வைகறைக்கதிர்களே மாந்தர் வடிவு கொண்டன என்கோ! அல்லது அவர்களை உயிரோடு நடமாடும் பொற்படிமங்கள் என்கோ! யாதென உரைப்பாம்! செல்வந்தர் தம் மாபெரும் அரண்மனை வாயில்கள் தோறும் நிறநீர் இறைக் கும் பீச்சுப்பொறிகள் இடையறாது இயங்கியவாறிருந்தன. பீச்சுப் பொறிகளை நிரப்புதலில் கடும் போட்டி நிகழ்ந்துகொண் டிருந்தது. இவ்விடங்கள்தோறும் இளநங்கையர் கூட்டங்கூட்ட மாக நடமாடுவதால் அவர்தம் தலைவகிட்டில் நின்றும் வழிந்த செம்பொடியும் கன்னத்து அபிரகப் பொடியும் கீழே தளத்தில் விழுந்து படிந்திருப்பதால் எப்போதும் செஞ்சேறு நிறைந்திருந் தது.[1] இந்த நிறத்தெளிப்பு வெறியாட்டத்தினின்றும் தப்புதற் குப் பல சூழ்ச்சிகள் கையாண்டேன். பெருந் தெருக்களைவிட்டுக் குறுகிய மறுகுகள் வழியே ஏகினேன். அரசத் தெருவை விடுத்துக் கோணல் மாணல் வழியாகச் சற்றுத் தொலைவில் போய்க்கொண் டிருந்தேன். இவ்விழா எத்துணை வெறிசெறிந்திருப்பினும் அத்துணை உள்ளக் கவர்ச்சியும் கொண்டதாக இருந்தது. இடந் தோறும் கூத்தே தொழிலாக உடைய நங்கையர் நாட்டியம் ஆடிக் கொண்டிருந்தனர். கோலுராய்வினால், இனிய ஓசை கிளர்த்தும் பம்பைக் கருவியால், இனிமை பொழியும் குழலால், வெண்கலக் கலங்களால் சன்சன்னெனும் உடுக்கைகளால், பொருந்திய தாளங்களால், விரல் கொண்டு தெறிக்கும் நரம்புக் கருவிகளால் பலவகை இனிய ஒலிகள் முழங்க நாட்டியங்கள் நடந்தேறிக் கொண்டிருந்தன. அவை மிகவும் உள்ளக் கவர்ச்சியுடையன வாக இருப்பினும் குரவைக் கூத்துப் பாக்களில் இளிவந்த சுவை பொருந்தி இருந்தமையால் சற்று வெறுப்புத் தட்டிற்று. ஆனால் அந்த இழிந்த சுவை தூண்டும் பாக்கள் பெண் வழி ஓடுபவர் செவிகளில் அமுதம் பொழிந்தாலென இருந்தமையால் அவர் கொண்ட வெறிக்கு அளவு கூற முடியாது. எத்துணை வியப்பு! ஒரே பாட்டினது பொருள் ஒருவனுக்கு உவகையும் மற்றவனுக்கு வெறுப்பும் உண்டாக்குகின்றது. ஒருவனது உணவு மற்றவனுக்கு நஞ்சு! படைப்புக் கடவுள், அழகை இப்படி இவ்விடத்தே கீழே

---

[1] இரத்திநாவளி நாடகம், முதல் அங்கம்.

வாரி இறைக்கலாமா? இந்த இளமங்கையர் தம் செவிகளிலே புதுச் சண்பக மலர்கள் ஊசலாடிக் கொண்டிருந்தன; அழகிய கருங்குழல்களிலே அசோக மலர்க்கொத்துக்கள் நிரம்பி இருந்தன; அவர்தம் செங்கன்னங்களிலே சிவந்த விரல்களால் ஒட்டப்பட்ட விடுபூ இதழ்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. அவர்தம் நெற்றிச் செம்பொட்டு ஒளிவிளங்கக் காஷ்மீர இளமாதரெனப் பொலிவு கொண்டிருந்தனர். நடனமாடிக் கொண்டே பலவகை முத்திரைகள் இயற்றும் போதும் கரணங்கள் செய்யும்போதும் உயர்ந்து அவர் கைவளையல்கள் கதிரவனைச் சிறைபடுத்துவன போலக் காட்சியளித்தன. அவாவென்ற ஒளி நெருப்புச் சூழ்ந்து கொண்டதுபோல நறுமணமுல்லைமலர் மாலை, பொன்மேகலை ஓசை செய்யும் மாதர் மெல்லிடைகளைச் சுற்றிக்கொண்டிருந்தன. அவர் முகத்திங்களினின்றும் செம்பொட்டொளியும் நிறப்பொடி ஒளியும் மிளிரத் தொடங்கின. அந்தச் சிவந்த ஒளியால் செவிக் குழைகள் செம்மையாகிக் கவின் சந்தன மரக்கிளைகள் செந்தளிர் தளிர்த்தனவெனப் பொலிவு கொண்டன. நடனமாடும்போது அவரணிந்திருந்த சிவந்த நீல, குங்கும நிற மேலாடைகள் விரைந்த கூத்துத் திருப்பங்களான் காற்றில் மிதந்தவண்ணம் அலைந்தன; அந்த ஆடை அலைகளானவை அகச்சுவையின் விரைந்த அலைகள் போன்று உள்ளங்களைக் கவர்ந்தன. முழவம் முழங்கச் சாந்திக் கூத்து எனும் ஆட்டம் காண்போரின் உள்ளத்தே மகிழ்ச்சியும் உடம்பிலே மயிர்க்கூச்செறிவும் தூண்டப் பெற்றன. அஃது நல்லுள்ளம் படைத்தவனது நெஞ்சத்தே, கார்காலத்தில் இடிமுழக்கத்தோடு இயங்கும் கருமுகில் நிழலின் கண் மலர்ப்பொடி தூவுகிற தாழம்பூவை நினைவூட்டியது. இக் காட்சியானது வெறிக்கு வெறியை, அவாவுக்கு அவாவை, மகிழ்ச்சிக்கு மகிழ்வை ஊட்டியது; நாட்டியத்தை நடிக்க வைத்தது; விழாவுக்குக் களிப்பைத் தந்தது.[1] ஆங்குப் பெண்மைக்கு இயல்பான மென்மை காற்றில் பறந்து போய்விட்டது. பாழடைந்த கோயில் போலவும், வழிக்கண் வீசி எறிந்த பாவைபோலவும் சேற்றில் அழுந்திய குருக்கத்திக் கொடிபோலவும், அந்நடன மாதர் தம் பெருமையை இழந்துவிட்டனர்; தம் தூய்மையைக் கெடுத்துக் கொண்டனர். உலகில் யாவற்றினும் பெண்மையே மிக்க ஆற்றல் படைத்தது என்று கருதியவன் நான்; ஆனல் ஆங்கு எத்தகைய காட்சி கண்டவாறு போகின்றேன்? மாமாயை

---

[1] ஹர்ஷ சரிதம் நான்காம் உயிர்ப்பு.

அம்மை கூறினுள் : 'மாதுக்கு வெற்றி ஆடவனைக் கட்டுக்குள் பிணிப்பதில் உள்ளது; மாதின் வாழ்க்கை பயன்பெறுவது அவனை விடுதலை செய்வதில் உள்ளது.' நடன மாதரது ஒழுங்கீனத்தின்கண் வெற்றியும் இல்லை, பயனுமில்லை. இவர்கள் திறத்தே மாதரழகு மலடாகிவிட்டது, களர்நிலமாகிவிட்டது என்ற துயரம் எனதுள்ளத்தின்கண் நின்று முழங்கிற்று. ஏனிப்படி ஆயிற்று? எந்தக் கொடிய ஆற்றல் இத்துணை அழகிய மாதரை இழிதகைமையில் செருகிவிட்டது! அத்தகைய கொடிய ஆற்றல் உள்ளதா? ஆம், அதுதான் செல்வம்!

எத்தனையோ குறுகிய சந்துகள் ஊடே சுற்றிச் சுற்றிப் போந்தவனுய் அவ்விழிந்த குறுமன்னன் மௌக்கரிதன் அரண்மனை அருகே வந்தேன். வாயிற்கண் காவலாளி நாகனைக் காணேம். உள்ளந் துடித்தது. அக்கங்குலின்கண் விழிப்போடும் காவல் புரியத் தவறிவிட்டதால் அவன் சிறைப்பட்டிருப்பானு? கழுவில் ஏற்றப்பெற்றிருப்பானே? குறுமன்னனது அரண்மனையில் திருவிழாக் குறிகள் ஒன்றும் காணேம். சாவினது அமைதியைக் காற்றுப் பரப்பிக் கொண்டிருந்தது. இப்போது வெள்ளாடை உடுத்தி இருந்த மாதரில்லத்து ஊழியன் வாப்பிரவ்வியன் நினைவு எனக்கு வந்தது. அவனுக்கு என்ன இடுக்கண் நேர்ந்ததோ? பட்டம்மை தப்பிச் சென்றதற்கு அவன் துணைபுரிந்தான் என்ற குற்றம் சாட்டப்பெற்ருனு? குறுமன்னன் மௌக்கரி அவன் தோலை உரித்திருப்பான். எனதுள்ளம் துயரத்தான் பிளந்தது. நான் பறவையாக மாறும் ஆற்றல் கொண்டேனுகில் உடனே அரண்மனை மாதரில்லம் பறந்து சென்று அவ்விடத்திய நிலைமையை உணர்ந்துகொள்வேன். அரண்மனை முன்னர் தோட்டம் முடியுமிடத்தே சற்று நின்று உற்று நோக்கினேன். ஆங்கோர் உயர்ந்த பரந்த மகிழமரமிருந்தது. அதன் மெல்லிய மணம் எனதுள்ளத்தை உருக்கியது. தலைவியரில்லத்து உள்நிலை உணராது அப்பால் பெயர்தல் குற்றம் என எண்ணி நின்றேன். ஆனல் செய்தி பெறுதலோ ஆகாத செயல். சிறிது நேரம் தயங்கி நின்றேன். உள்ளம் தேக்க நிலை உற்றது. அப்போது இனிய மெல்லிய இசையொடும் ஒரு கிளி சொல்லத் தொடங்கிற்று. சிதைந்த ஓசையினவாகிய எழுத்துக்கள்; நிரம்பாதனவாகவும் தளர்ந்தனவும் ஆகிய தொடர்மொழிகளை மழலைக்குரலின வாயினும் விரைவில் புரிந்துகொள்வதற்குத் தடை ஏதுமில்லை. மிகுந்த இனிய குரலில் கிளி சொல்லிக்கொண்டிருந்தது: 'ஸ மே ஸ்வயம்பூர் பகவான் ப்ரஸீதது' பொருள்:

தன்னைத்தானே படைத்துக்கொண்ட கடவுள் காப்பாராக.[1] மின்னதிர்ச்சி உற்றதென் உள்ளம். ஒரு புத்துணர்ச்சி என் குருதி நாளங்களை ஊக்கப்படுத்திற்று. உண்மையாக இது பட்டம்மையின் கிளி என முடிவு செய்தேன். அம்மையார் பாடும் மாவராகனது தொழுகைப் பாவின் இறுதிப் பகுதியாகும். இங்குமங்கும் விழித்து நோக்கியவனாய் எனதறிவீனத்திற்குக் கழிவிரக்கங் கொண்டிருந்தேன். எவனாவது என்னைப் பார்த்துவிட்டால் என்ன செய்வானோ? கிளி சற்றுப் பேசாதிருந்து மீண்டும் கூறியது: 'பேறிழந்த பறவையே ஓடிப்போ, பாவம் நிறைந்த இந்த இல்லத்தினின்றும் ஓடிப்போ. உன் பட்டம்மை ஓடிப்போய்விட்டாள், நான் சாகப் போய்க்கொண்டிருக்கின்றேன்.' இது வாப்பிரவ்வியனது சொல்லாகக் காண்கிறதே. வாயாடிக் கிளி தனது விடுதலைச் செய்தியை இப்படிப் பறைசாற்றியதே! நான் மெதுவாக உயிர்த்தவாறு நின்றிருந்தேன். இன்னும் என்ன கேட்க உள்ளேனோ! கிளி சில நொடிகள்வரைப் பேசாதிருந்து மீண்டும் பட்டம்மை மாவராகத் தொழுகைப்பா இறுதிப்பகுதி 'ஸமே ஸ்வயம்பூர் பகவான் ப்ரசீதது' பாடிவிட்டுப் பறந்து அரண்மனைப் பூங்காவில் எங்கோ மறைந்துவிட்டது.[1] நூல்களை நான் பயின்று தெரிந்த ஒரு செய்தி: கிளி, குழந்தை, பூவை முதலியவற்றின் வாயிலாக மாதரில்லச் செய்திகளைப் பேறு பெற்றவரே அறியமுடியும்.[2] இந் நூல் செய்தி இங்கு எவ்வளவு கடுமையாக எள்ளப்பட்டது! மாதரில்லத்தினது துயர்நிகழ்ச்சியை அக் கிளி எனக்குத் தெரிவித்து எனது வினையை எவ்வளவு கொடிதாக எள்ளி நகையாடிச் சென்றது. வாப்பிரவ்வியன் குற்றமற்றவன்; அவனது இறுதிக்காலம் வந்துவிட்டது; ஆனால் குற்றவாளி பாணபட்டன் இப்போதும் தன்னுரிமையுடன் திரிந்துகொண்

---

[1] இரத்தினாவளி இரண்டாம் அங்கம் ஒப்பிடுக.

[2] இரத்தினாவளி 2–33.

துர்வாராம் குஸுமஸர-வ்யதாம் வஹந்த்யா,
காமிந்யா யதபிஹிதம் புர: ஸகீநாம்
தத்பூய: ஸுகசிசு ஸாரிகாபிருக்தம்,
தந்யாநாம் ஸ்ரவணபதாதித்வமேதி.

நகரத் தோழிகளான் விரும்பப்பெற்ற காதலிகள் மன்மதன் மலரம்புகளைப் பொறுக்க முடியாதவராக இருந்தனர். அந்த மிகுந்த செய்தியைக் கிளிகளும், குழந்தைகளும், நாகணவாய்களும் கூறக் கேட்டு வழிப்போக்கர் பேறுபெற்றவராய்ச் சென்றனர்.

டிருக்கின்றான். குற்றமொன்றுமில்லா இந்த மக்களைப் 'பட்டம் பெருமாட்டி நினைத்துப் பார்த்தாளா? தான் அகன்ற பின்னர் இவர்கள் நிலை என்னவாகும் என நினைத்துப் பார்க்கவில்லை. தலைவியரில்ல மாதர்களுக்குத் தந்தைபோன்று தொழுதற்குரிய முதியவன் வாப்பிரவ்வியன் எத்துணைத் துயரத்தோடும் அரண் மனைக்கண் பயில்கின்ற கிளி நாணவாய்ப் பறவை முதலிய வற்றை விடுதலை செய்தான் என்ற செய்தியைக் கேட்கும் பட் டம்மைதன் பூவினும் மெல்லிய இதயம் வாடி வதங்கிப் போகுமே?

இன்று மௌக்கரி அரண்மனை வாயடங்கி உள்ளது. இன்று அதனுள்ளே விளையாட்டுக் குன்றுகள்மீது அழகிகள் தம் காற் சிலம்புகளின் ஓசையால் மகிழ்ச்சி வெறிகொண்ட மயில்களை நடனமாடவைக்க மாட்டார்கள். இன்று அதன் விளையாட்டுக் குளத்தில் மிருதங்கங்கள் முழங்கித் துணைபிரிந்த அன்றில் பறவைகளுக்குப் பிரிவுத்துயரை மேலும் வளரச் செய்துகொண் டில்லை. இன்று மௌக்கரி அரண்மனையின் தலைவியரில்லத்தின் தளமட்ட தரையை மாதர் தம் மலரடிகளில் ஊட்டப்பெற்ற செம் பஞ்சுக்குழம்பு சிவப்பாக்கிக் கொண்டிருக்கவில்லை. இன்று ஒத்த தொழில்களைச் செய்யும் தோழியர் கூட்டம் மங்கலக் கலசங்களைப் புனைந்து விழாவை அழகுறச் செய்துகொண்டிருக்கவில்லை. நாள் முழுவதும் மருண்ட மான்கள் நிறைந்திருப்பது போன்ற காட்சியைக் குறும்பும் மருட்சியும் கொண்ட பார்வை உடைய மாதர்கள் விளைவிக்கவில்லை. தாமரை நாளங்களால் உலகம் சூழப்பெற்றது போன்ற காட்சியை அப்பெண்கள் தம் தோள் களை உயர்த்துவதால் உண்டாக்கவில்லை. தம் செவிகளில் அணிந்த வாகை மலர்க்கொத்துக்கள் தலைவியரில்லத்தில் காயும் வெய்யிலையும் கிளிப்பச்சை நிறமாக்கிக் கொண்டிருந்த நிலையும் இன்று இல்லை. தளர்ந்த குழலில் நின்றும் நழுவி விழுந்த பச் சிலை மர இலைகள் வானத்தை மை நிறமாக்கிக் கொண்டிருக்கவும் இல்லை. நகைகள் தம் ஓசையை எழுப்பிப் பத்துத் திசைகளை யும் கிண்கிணி மயமாகச் செய்துகொண்டிருக்கவில்லை. மௌக் கரி அரசமனையில் எத்தகைய அச்சமும் ஐயப்பாடும் புகுந்த னவோ அறியேன். பல நாடுகளிலிருந்தும் கைப்பற்றிக் கொணரப்பெற்ற மாதர்களும், மாசு ஏற்றப்பெற்ற துயரமங்கை யரும் ஆண்டிலோர் நாள் விழாக்கொண்டாடி மகிழ்வர்; அந்தோ! அதுவும் இன்று இங்கே நிகழாது நின்றுவிட்டது. நான் பட் டம்மையை விடுதலை செய்தேன், அது தக்கதே. இந்த மனைக்

குள் எத்தனை மாதர்கள் அவளைப் போன்ருர் விடுதலைக்கு ஏக்கற்று இருக்கின்றனரோ யாரே, அறிவர்? மாதரில்லத்திற்குள் சிறைவைக்கப்பெற்ற மாதர்கள் இங்குமட்டுமல்ல, உலகில் எத்தனை எத்தனை அரண்மனைகளில் எத்தனை எத்தனை மாதர்கள் விடுதலையை விரும்பியவராய்த் துயருழக்கின்றனரோ, யாரே உரைக்கவல்லார்? இப்போது அங்குத் தெருக்களிலே ஒழுங்கற்ற நடனமும் வெறுக்கத்தக்க களியாட்டமும் வெறியாட்டமுமே நடைபெறக் கண்டு வந்தேன்; இங்கு மௌனக்கரி மனைக்குள்ளே மாதர் வாயற்று மூச்சற்று மகிழ்ச்சியற்றுச் சொல்லொண்ணுத அச்சத்தில் மூழ்கி இருக்கின்றனர். எத்துணை அச்சமூட்டும் வேற்றுமை! உண்மை இது: ஓரிரண்டு இடங்களிலும் படைப்பிலே விலைமதிப்பரிய பொருள் இழிவு படுத்தப் பெற்றுள்ளது; பெண்மை அவமானப்படுத்தப் பெற்றுள்ளது. வெட்கம்! ஏன் இப்படி நடைபெறுகிறது? என்ன! மாதர்களே தம் கைகளாலேயே வலையைப் பின்னித் தாமே அவற்றுள் தம்மை அகப்படுத்திக்கொண்டார்களா? நான் போகும் வழியிலே விழாவணி அயரும் ஒரு வெறி பிடித்த மாந்தர்க் கூட்டம் என்னைக் கடந்து சென்றது. காளிதாசர் உச்சயினியில் கண்ட காட்சியை நான் தாணேசர்புரியில் நடுப்பகலிலே கண்ணுற்றேன். அவர் சொன்னதுபோலவே அழகிய மாதர் நடந்துசெல்கின்ற அசைவினுலே இவ்விடத்திலும் கருங்குழலிலிருந்தும் செம்பருத்தி மலர்கள் கீழே விழுந்தன; காதிற்குக் குழைபோல அணிந்த பொன்றிமலர்ச் செண்டுகள் சுழன்று நிலத்தின்மீது உருண்டன. மார்பின்கண் அடிக்கடி மோதுறுகின்ற சாதிமல்லி முதலான உயர்ந்த மணமலர் மாலைகள் அறுந்துவிழுந்துவிட்டன. எனினும் இன்று நான் கண்ட காட்சிகளைக் காதலனைத் தேடி அலையும் காதன் மகளிரது காதலின் இயற்கை எனக் கூற என்னுல் முடியாது.[1]

---

[1] மேக சந்தேசம் (2—11)

கத்யுத்கம்பா தலக பதிதைர் யத்ர மந்தார புஷ்பைஃ
பத்ரச்சேதைஃ கநககமலைர் கர்ண விப்ரம்சிபிஸ்ச
முக்தா ஜாலைஃ ஸ்தநபரிஸரச்சிந்ந ஸூத்ரைஸ்சஹாரைர்
நைசோ மார்கஃ ஸவிதுருதயே ஸூச்யதே காமிநீநாம்.

[கதிரவன் காலையில் எழுந்தனன்; காதலரை நாடிச் சென்ற காதலிகள் நடமாடிய கங்குல் வழிகளிலே அவர்கள் விரைவில் சென்றதால் கருங்குழலினது முன்பக்கச் சுருள்களினின்றும் செம்பரத்தை

இன்று தாணேசர்புரியின்கண் மகிழ்ச்சியும் வெறியும் உள்ளன ; ஆம் நான் ஒப்புக்கொள்கின்றேன் ; ஆனல் காதலும் அன்பும் ஊக்கமும் அக்கரையும் இங்கில்லை. காளிதாசன் குறித்த தலைவியரோ உள்ளத்தை உருக்கும் காதலோடு தம் தலைவர்களைத் தேடிச் சென்றனர். இங்கோ வெறும் புலவன் வெறியே காண்கின்றேன். இவ்வாறே தலைமுறை தோறும் நிகழ்ந்து வருகின்றது. அது அறத்தின்பாற்பட்டதா? நெறி முறைக்கு ஏற்றதா? மக்களது உலகத்தில் எங்கோ தவறுள்ளது என்று எனது நெஞ்சம் கூறுகின்றது. இவ்வெறி விழா–இந்த இளிவந்த அகச்சுவைப் பாக்கள்–ஆண் பெண்களின் தகாத கவர்ச்சிப் பார்வைகள்—குரல்கள்—அவிநயங்கள்—நிறப் பொடிகள்—கைகொட்டுக்கள் முழவு முழக்கம்—எல்லாம் உள்ளத்து இழிதகைமையை மறைக்கும் செயல்களே ஆம் ; ஓசைகளே ஆகும் ; துயரத்தை மறைக்கவேண்டி இடுகின்ற திரைகள் போன்றவையே. மேற்சொன்னவை 'மக்கள் மனம் நோய் வாய்ப்பட்டுள்ளது, அவர்கள் ஒருவருக்கொருவர் இடையே கொள்ளும் உறவில் கடுந்துயரம் உள்ளது' என்பதையே குறிக்கின்றன. இத்தகைய எண்ணத் தொடர்ச்சிகள் என் உள்ளத்தைப் பொறுக்க முடியாத சுமைக்குள்ளே சிக்கவைத்து அமிழ்த்தின. இந்தக் களியாட்டங்களின் இடையே இன்னும் சில நொடிகள் தங்கியிருந்தால் பொறுக்கமுடியாது கூச்சலிட்டிருப்பேன். எண்ணங்களது வேகம் என் கால்களைத் தள்ளாட வைத்துவிட்டது ; எனது நடையோ விரைவைத் தூண்டிவிட்டது ; தலைதெறிக்க ஓடினேன். அரசர் தெருவில் விழாவின் மும்முரம் குறையத் தொடங்கியது. அரண்மனைச் சாளரங்களினின்றும் களைப்படைந்த காற்றுப் புறப்படத் தொடங்கிற்று. இல்லத்துப் பணிப் பெண்கள் வீட்டுவேலைகளில் ஈடுபட்டிருந்தனர். ஓய்வு மனைகளின் நறுமணத்திரிகளிலிருந்தும் மணப் புகை திசைகளைச் சூழ்ந்து கொண்டிருந்தது. இப்போது நான் குமாரகிருஷ்ணவர்த்தனன் மனைவாயிலை அணுகிவிட்டேன். நடுப்பகலாகிவிட்டது ; கதிரவன் வெய்யில் கூடிய வெப்பமாகி விட்டது ; வானவெளியும் களைத்துத் தளர்ச்சியுற்றதுபோலக்

---

மலர்கள் உதிர்ந்துகிடக்கின்றன ; செவிகளினின்றும் பொற்றாமரை இதழ்த் துணுக்குகள் விழுந்துகிடக்கின்றன ; மார்பகத்தின்மீது அசைந்துகொண்டிருந்த முத்து மாலைகள் தம் இழைகள் அறுந்தமையால் அவற்றினின்றும் முத்துக்கள் சிதறிக் கிடந்தன.

காணப்பட்டது. குமாரன் என்னை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். நான் வந்த செய்தியைக் கிருஷ்ணவர்த்தனனுக்குச் சொல்லி யனுப்பினேன். தானே வெளிவந்து அன்பொடு உள்ளே என்னை அழைத்துக்கொண்டு போனான்.

குமாரனது அரண்மனை அழகியது; தூய்மையது. மேன் மாடியில் மிக்க கைபுனைந்தியற்றிய அழகு செழித்திருந்தது. மலர்ந்த தாமரை மலர்களது இடையறாத தொடர்ச்சி பொறிக்கப் பெற்றிருந்தது; அண்ணாந்து பார்க்கும்போது மேலே அன்னம், மீன், யானை, புலி இவற்றின் பாய்ச்சல்கள் உயிர்த்துடிப்போடும் சிற்பவேலைப்பாடுடனும் செய்யப்பெற்றிருந்தன. சிக்கலுற்ற தாமரைக்கொடிகளது வேலைப்பாடு மனத்தைக் கவர்ந்தது. ஒவ்வொரு இலையும் உயிர்விலங்கு ஒன்றின் வடிவத்தைக் கொண்டிருந்தது. கதவுக்கு எதிரே வேச்சந்திரசாதனனது வரலாறு உயிர் ஓவியமாக வரையப் பெற்றிருந்தது. அந்தணன் ஒருவன் அரசனிடம் இளவரசனைக் கொடையாக வழங்குமாறு வேண்டுகின்றான். அந்தணனது முகத்திலே வேண்டுகோட் கருத்துச் செறிந்திருந்தது. அரசனது முகத்திலும் அவன் செல்வ மகனது முகத்திலும் கொடைவீரக் கருத்து முன்னையதினும், மிகச் சிறப்பாக அழகாக விளங்குமாறு வரையப்பட்டிருந்தது. அங்கேயே நின்று பல நாட்கள் அவரை, அந்த அழகைக் கண்டு நுகரலாமென ஆர்வம் கொண்டேன். நீண்ட நேரம் நின்று அக் கலைத் திறனைக் கண்டு வியப்பெய்தினேன். ஓவியம் தீட்டுவதன் முன்னம் சுவரைத் சுண்ணாக்காரையிட்டும் உலர்ந்த பின்னர் எருமைமாட்டுத் தோலால் நன்றாகத் தேய்த்தும் வச்சிரத்தால் மெழுகுகின்றனர். பின்னர் மூங்கில் மூளையில் தாமரைப் பூவிலே ஒரு விலங்கினத்தின் கன்றின் காது மயிர்க் குச்சம் செருகிய நிறப்பூச்சுக்கோலினால் ஓவியம் எழுதுகின்றனர்.[1] ஆனால் கிருஷ்ணவர்த்தனனது மனையிலே நான் பார்த்த அந்த ஓவியம் அவ்வாறு செப்பம் செய்த சுவர்த்திரைமீது எழுதப்பெறவில்லை; மயிர்க்கோல் கொண்டு எழுதப்பெறவில்லை. எனினும் கருத்தின் தெளிவு எவ்வளவு சிறப்பாகப் பொலிகின்றது! அரசன் மகன் முகத்திலே தன்னையே கொடையாக வழங்கும் தியாகம் விளங்கும் மெல்லிய இளமுகத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம் போன்ற உணர்ச்சி கொண்டேன். சோறும் மெழுகும் மையும் கலந்து அரைத்து உண்டாக்கிய நிறத்தினால் எத்துணைச் சிறந்த

---

[1] அபிலாஷிதார்த்த சிந்தாமணி ஒப்பிடுக.

உயிரோவியங்கள் வரையப்பெற்றுள்ளன என்று வியந்த வண்ணமே இருந்தேன். பத்தி நிறைந்த உள்ளம் என்ற கருவி கொண்டுதான் இத்தகைய உயிரோவியத்தைப் படைக்க முடியும் என்பது என் அசைக்க முடியாத துணிவு. இவ்வோவியந் தவிர வேறு ஒன்றும் அவ்வில்லத்தில் இல்லை. சந்தனக்கட்டைத் தவிசுகள், நாற்காலிகள், முக்காலிகள் முதலியன அழகாக வரிசைப் படுத்தி வைக்கப்பட்டிருந்தன. தலைமையிடத்தில் குமாரகிருஷ்ண வர்த்தனனது இருக்கை இருந்தது. அது ஒரு படிக நாற்காலி, அதன் மேல் அழகிய மெத்தையும் தலையணையும் வைக்கப்பெற்றிருந்தன. மற்ற இருக்கைகள் புலவர்களும் பெரியார்களும் அமர்வதற்காக வேயப்பெற்றிருந்தன. குமாரன் என்னை அன்போடு ஒரு சந்தனத் தவிசின்மீது அமரவைத்தான். நான் அமர்ந்த பின்னரே அவனும் அமர்ந்தான்.

அமர்ந்த பின்னர் இளவரசிப் பெருமாட்டியினது நலத்தைக் குறித்து உசாவினான். அவள் நலத்துடன் இருக்கின்றாள் எனச் சுருக்கமாக உரைத்தேன். ஆனால் எனது விடையைக் கேட்டு உள்ளங்குளிராமல் அவன் இன்னும் விரிவான செய்திகளை உரைக்குமாறு வேண்டினான். நேற்றிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு நிகழ்ச்சியின்போதும் இளவரசியின் உள்ளத்தசைவுகள் எப்பான்மையிலே அவள் முகத்தின் மீது விளங்கிக் கொண்டிருந்தன? உள்ளத்தில் நேரும் கருத்து நிகழ்ச்சிகளால் எவ்விதம் அவள் முகம் மாறுதலை யடைந்தது? முகத்தில் வியப்புக்குறி இருந்ததா? துயரக்குறி இருந்ததா? வெறுப்புக்குறி இருந்ததா? மகிழ்ச்சிக்குறி இருந்ததா?—இந்தச் செய்திக்கோவை எல்லாம் விடாமல் உரைக்க வேண்டுமென வற்புறுத்தினான். எனக்கு இளவரசியைக் குறித்து மிகக் குறைவாகவே தெரியும் என்பதை அவன் அறியான். ஆனால் அவளைக் குறித்த செய்திகளை அறிய வேண்டுமானால் என்னையே வினவவேண்டும் என்று கிருஷ்ண வர்த்தனன் கருதியதால் நான் மிகவும் இறுமாப்புற்றேன். அவளைப் பற்றிய செய்திகள் எனக்குத் தெரியவந்தனவற்றை எல்லாம் ஒன்றும் மறைக்காமல் உரைத்தேன். ஏனெனில் குமாரன் எம் இயல்பான நண்பன் என்பதுறுதியாகிவிட்டது; கள்ளங் கபடம் அவன் நட்பில் கடுகளவும் இல்லை என்பதைக் கண்டிருந்தேன். குமாரனைப் பார்த்துவிட்டு இளவரசியிடம் நான் சென்ற பின்னர் நிகழ்ந்தவற்றைக் கூறினேன்: "மிகுந்த ஆவலோடு அவள் என்னை எதிர்நோக்கி இருந்தாள்; மிகுந்த கவலையுற்றிருந்தாள்., கிருஷ்ணவர்த்தனன், இளவரசிப்பெருமாட்டிக்கு உடன்

பிறந்தவன் நிலையில் கங்கைக் கரைக்குக் காலால் நடந்துபோகாமல் சிவிகையில் ஊர்ந்து செல்லவேண்டுமென வேண்டிக் கொண்டான்' என்ற செய்தியை நான் உரைத்ததும் அவள் கருங்குவளை போன்ற இருகண்களினின்றும் நீர்த்துளிகள் ததும்பின. அவள் உள்ளத்தூய்மையே கண்ணீர்த் துளிகளாகக் கிளம்பினபோலும்! அவள் பொறிகள்தோறும் செறிந்திருக்கும் அருளும் மகிழ்ச்சியும் வெளியே பொங்கிவழிந்தன போன்று கண்ணீர்த்துளிகள் பொலிவுற்றிருந்தன. அவை தவத்தினது சாரமெனத் திகழ்ந்தன. கண்ணில் உள்ள வெண்பகுதியின் ஒளிதான் நீர்வடிவம் கொண்டதோவென ஐயமுற்றேன்; செய்ந்நன்றி உணர்வு என்னும் முத்துமாலை அறுந்து ஒவ்வொன்றுக விழுகின்றதோ என்றும் எண்ணினேன்; தூய்மை என்னும் வெண்புயல் வரிசை மழைபொழிந்து கொண்டிருந்ததோ எனவுங் கருதினேன். பின்னர் தன்னை மறந்தவள்போன்று இளவரசி சிறிது நேரம் என்னைப் பார்த்தவாறு இருந்தாள். குமார கிருஷ்ணவர்த்தனன் சொற்களைக் கூருமல் யாரோ கடவுளர்தம் சொற்களையே கூறினேன் என ஐயப்பாட்டுடன் இளவரசி என்னைப் பார்த்தாள். பிறகு 'சிவிகை கொணர்க' என்று அமைதியுடன் பணித்தாள்'' என நான் கிருஷ்ணவர்த்தனன்முன் விவரித்தேன்.

என் சொற்களை ஆவலுடன் கேட்டு வந்தனன். நேற்று அவன் முகத்தே நான் கண்ட சூழ்ச்சித் திறனை இன்று நான் காணவில்லை. நேற்று அவன் மாவமைதிக்காப்பாளன் என்ற நிலையில் தோற்றமளித்தான். இன்று தான் காணுத உடன்பிறந்தவளின் அண்ணன்போலக் காட்சியளித்தான். இன்று அவன் தனதுள்ளத்தே ஏற்படும் எம்மாறுதலையும் அடக்கி மறைக்க முடியவில்லை. பாய்மீன்களென அவன் கண்கள் மிதப்பதிலேயே சுவையருந்தின. என்னிடம் செய்திகள் விரித்துரைக்கக் குறைவு. ஆனுல் இன்னும் ஏராளமானவை செவிமடுக்க விரும்பினுன். என்னைப் பார்த்துத் தனது ஆவலை அடக்கிக் கொண்டான். அவன் கூறினுன்: ''பட்ட! எனது வேண்டுகோளைக் கடவுள்மகன் துவரமிலிந்திரர் மகள் ஏற்றுக் கொண்டாள் ஆதலின் நான் பேறு பெற்றவனுனேன். அவள் உள்ளத்தினது ஆழம் உணர்ந்து மிக்க உவகை எய்துகின்றேன். ஆனுல் உண்மை கூறுகின்றேன். நீ மிகுந்த எளியவன்; வையத்தினது சூழ்ச்சி அறியாதவன். நீ கடவுள் மகன் துவரமிலிந்திரர் உயிர்போன்ற மகளது உள்ளங் குமுறும் துயரினை அறிந்தனையா? இல்லை. நிபுணிகை அறிந்திருக்கின்றுள். அவளிடம் உசாவி இளவரசியின்

உள்ளத்தை நீ அறிந்துகொள்ளலாம்!'' வியப்புற்றேன். நான் அறியாதது குமாரன் என்ன தெரிந்துகொண்டான்? கட்டாயம் நிபுணிகை என்னினும் இளவரசிபற்றி மிக்கு அறிந்திருக்கின்ருள். என்னை எளியன் என விளிக்கும் அளவு இவன் என்ன அறிந்து கொண்டான்? பிறவி முதற்கொண்டே நாடோடியாக இயங்கிவந்த நான் நேற்றிலிருந்து 'நீ எளியன்; உனக்கு உலகம் தெரியாது' எனும் சொல் கேட்டவாறு இருக்கின்றேன். சிலரை எளியர் என்று கருதுவதில், கூறுவதில் களிப்பெய்துகின்றனர் சிலர். குமாரனும் இத்தகையோரில் ஒருவனு? மிகுந்த வருத்த முற்று வினவினேன்: ''குமாரன் என்னிடம் என்ன எளிமை கண்டான்?'' குமாரன் சிரித்துக் கூறினுன்: ''நீ கவிதை இயற்றும் அளவுக்குப் பொருள் உண்மை கண்டவனல்லன். நீ எப்பொழுதாவது பட்டம்மை இதயமொழிகளை உசாவினுயா? என்ன, பட்ட! உள்ளத்தில் அடங்கியிருக்கும் துயரமொழிகள் எஞ்ஞான்றும் அவள் நாக்குமுனையிலிருந்தும் வெளிப்படும் என்று கருதினுயா? கருதினல் தவறு. கவிதை கெட்ட பொருளில்லை; ஆனல் மிகப் பளுவான சுமையைப் பொறுப்பைத் தாங்க முடிவு செய்தனையே; அதற்குப் பொருளுண்மை அறிவு, உலகறிவு நடைமுறையுணர்வு வேண்டும். வாப்பிரவ்வியனைப் பற்றிப் பட்டம் பெருமாட்டியது உள்ளத்தே எத்துணைத் துயரம் குடிகொண்டுள்ளது என்பது உனக்குத் தெரியுமா?'' குமாரன் வாயினின்றும் வாப்பிரவ்வியனது செய்தி கேட்டுத் திடுக்கிட்டேன்; எனக்கும் அவனைப் பற்றிய கவலையுண்டு. அவனைப் பற்றிப் பட்டம்மை எனக்குத் தெரிவிக்கவில்லை. அவளுக்கு அந்த முதிய அந்தணனைப் பற்றி மிகுந்த கவலையுண்டு என்ற செய்தி குமாரனுக்கு எப்படித் தெரியும்? அந்த அந்தணனைக் குறித்து எனது வருத்தத்தைத் தெரிவித்தபின்னர் 'பட்டம்பெருமாட்டியின் துயரச் செய்தியை எப்படி அறிந்துகொண்டாய்' என்று வினவினேன். குமாரன் புன்னகை புரிந்து உரைத்தான்: ''அவள் சுகதபத்திர அடிகளிடம் நேற்றுக் கூறினுள்; அவர் எனக்கு அச்செய்தியை அறிவித்தார்'' இந்த மறையை அறிந்ததும் என் வாயுலர்ந்தது; செவியின் இரத்த நாளங்கள் விம்மியதால் அவை கும்மென அடைத்துப்போயின. என்னைத் தாங்கும் நிலம் நழுவி அசைவது போலிருந்தது; திசைகள் குலாலன் திகிரியெனச் சுழன்றன. நான் அறிவிழிந்தவன், முட்டாள்; பட்டம் பெருமாட்டிக்கு என்மீது நம்பிக்கை இல்லை. அவள் ஏன் என்னிடம் இச்செய்தியை அறிவிக்கவில்லை? அவள் கட்டளைக்குறி கண்ட

துமே எனதுயிரையும் வழங்க ஒருப்பட்டவனுய் இருக்கின் றேனே, அத்தகையோனை நம்பவில்லையே! என்னை நம்பினுலும் மறைபொருட்களை என்னிடம் சொல்லத் துணிவு கொண்டாட வில்லையே. தீவினையேன் பாணபட்டன் இன்றும் பேறிழந்தவ ணுக இருக்கின்ருன். இப்போது எனதெளிமையைக் கண்டு குமாரன் மகிழ்ந்து கொண்டிருந்தான். எனதுள்ளத்தூடே எழுந்து விழுந்துகொண்டிருக்கும் எண்ணங்களைத் துருவிக் கொண்டிருந்தான். அவன் குறும்புக் கண்மணிகள் என்னை எள்ளி நகையாடின. புன்முறுவல்பூத்த அவனது முகம் நண்பகல் நவமல்லிகைபோல உறுதியும் மலர்ச்சியும் கொண்டிருந்தது. கடைக்கண் பார்வையால் சற்றுக்கோணிய கன்னத்தின் இடங்கள் மலர்ந்த தாமரை மலரைப்போல ஒளி பெற்றிருந்தன. அவனுக்கு என் துயரத்தால் உவகை ஏற்பட்டது. குமாரனது உள்ளப் பான்மை அறிந்தேனுதலின் மிகுநேரம் அங்கு உட்கார்ந்திருக்க விரும்பவில்லை.

அன்று ஆங்கு என்னகத்தே கிளர்ந்த எண்ணங்கள் இன்று என்னுள்ளத்தின்கண் வியப்பினைத் தூண்டின. குமாரன் சொன்ன சொற்கள் அத்துணை நாணம் உறுத்துவன அல்ல. குமாரனிடம் போக விடைவேண்ட, வெடுக்கென நகைத்துக் கூறினுன்: "அமர்க, பட்ட! நீ முற்றிலும் உணரவில்லை. நீ செய்த நன்றிக்காகக் கடவுள் மகன் திருமகள் மிகுந்த கடன்பட் டுள்ளாள். அதன் சுமையால் மிக அழுந்தியுள்ளாள். உனக்கு அவள் பட்ட ஒப்பற்ற கடனை கட்டித் தீர்க்க மாபெரும் செல்வம் உலகில் உள்ளதா என்று நாடியவாறு இருக்கின்ருள். நொடி தோறும் அவள் உனக்குக் கட்டளை இடமுடியுமா? நீயே திறமை யோடும் அவள் உள்ளத்துக் கருத்துக்களை உய்த்தறிதல் வேண் டும். இமயமலையினும் உயர்ந்த பண்பினள், எழு கடலினும் ஆழமுள்ளவள்; குமாரன் கிருஷ்ணவர்த்தனன் அத்தகைய சிறந்த மாது தன்னுடைய உடன்பிறப்பாளள் என்ற உரிமை பாராட்டுவதில் மிகுந்த செருக்குக் கொள்கின்ருன்." இந்தச் சொற்கள் செவிமடுத்ததால் எனதுள்ளம் சற்றுப் பொறை நீங் கப் பெற்றது; ஆனுல் தன்மதிப்பு என்ற ஒரு சுமைமட்டும் உள்ளத்தைவிட்டு இன்னும் விலகவில்லை. பட்டம்மையின் உயர்ச்சி, பெருமை, ஆழ்ந்த பண்பு முதலியவற்றினைப்பற்றி மற்ற வன் எனக்கு அறிவுறுத்துதல் வெறுக்கத் தக்கதாக இருந்தது. நான் மீண்டும், போக விடை வேண்டினேன்.

குமாரன் சற்று வருந்திக் கூறினுன்: "இன்று மாலை

நீங்கள், இந்நகரைவிட்டு விலகவேண்டும் பட்ட! அரசநெறி பாம்புப்போக்கினும் கோணல்மாணலானது; வாள் கூர்மையினும் தப்புதற்கரிது; மின்னல்கொடியினும் விரைவு கொண்டது. தக்க வாய்ப்பும் நேரமும் வந்தாலன்றி நீயும் இளவரசியும் இந் நகரில் இருக்க இயலாது. நீ நேற்றுக் கடவுள்மகன் திருமகளின் போடகன் பாதுகாப்பாளன் என்று உன்னை மதித்துக் கூறினை. உண்மையில் நீ இப்பொறுப்பேற்றுக் கொள்ளும் தகுதி வாய்ந்தவனே. ஆனல் இப்பொறுப்பேற்று நீ எத்தனையோ அரசநெறிகளென்னும் நீர்ச்சுழிகளைத் தூண்டிவிட்டனை. இதனை அறிவாயா? உன் அகப்பண்புகள் தெளிவானவை. உன்னிடம் இழிவான அரசியல் சூழ்ச்சிகள் கடுகளவும் இல்லை. எனினும் கடவுள் மகன் திருமகள் சிறந்த காவல் தந்தையாகுமாறு பயிற்சி பெற வேண்டும். நீ பொய்யை மிகவும் வெறுக்கின்ருய், அறிவேன். பொய் அறத்தின்பாற்பட்டதல்ல. நானும் அதனை வெறுக்கின்றேன். ஆனல் மாந்தர்க்குழாம் பொய்க்குப் புகலிடம் தந்துள்ளது; அடிதோறும் பொய்யை மக்கள்வையம் கையாள்கின்றது. இது உண்மை. இதனை ஒப்புக்கொண்டு ஏதேனும் நலம்பொருந்திய தொழிலை இயற்றி முடிக்க விரும்பினல் நீயும், வாய்ப்பு நேர்ந்தால் பொய்யைக் கையாளவேண்டியிருக்கும். உண்மையானது இம்மக்கள்வையத்தே பிரிவுபட்டுத் தனிமைப் பட்டு உறைகின்றது. அதனை உணர்வதில் தவறு செய்யற்க. பார்த்த—கேட்ட செய்திகளை அப்படியே உள்ளது உள்ளபடியே கூறிவிடுவதும் ஏற்றுக்கொள்வதும் உண்மையின் பாற்பட்டதல்ல என்பதை வரலாறு மெய்ப்பிக்கின்றது. நிலவுலகினுக்குப் பெரும்பாலான நன்மையை உண்டாக்குவதே உண்மையாகும். வெளிப்படையாகப் பார்ப்பதற்கு அது பொய்[1] போலத் தோற்றமளிக்கலாம்; ஆனல் மிக்க நன்மை பயப்பதே உண்மை. இளவரசியை நீ தொழுகின்றனை. அதனல் நீ அவளுக்கு ஊழியம் மட்டும் செய்யச் செல்லவில்லை. ஆனல் அவளுக்குத் தொண்டு புரிவதன் வாயிலாக நாட்டுமக்களுக்கு மிகுந்த நன்மை புரியப்

---

[1] ஸத்யஸ்ய வசநம் ஸ்ரேய: ஸத்யாதபி வதேத் ஹிதம்
யத்பூத ஹிதமத்யந்தமேதத் ஸத்யம் மதம் மம.
(மாபாரதம், சாந்தி 229-13)

[உண்மை சொல்லுதல் நன்மைத்தே; நன்மை பயக்கும் சொல் உண்மையினும் மேலானது; உயிர்களுக்கு நன்மை பயப்பதே உண்மையெனக் கருதுகின்றேன்.]

போகின்ருய். சூழ்நிலேவேண்டினுல் நீ பொய்யைக் கடியலாகாது. மக்களுக்குப் புரைதீர்ந்த நன்மை பயப்பதாயின் பொய் கூறவும் பின்வாங்காதே.'' இவ்வளவு நீண்ட அறவுரை கூறிய பின்னர் குமாரன் ஒருமுறை இருமிக் குரலேச் செம்மைப்படுத்திக் கொண்டான். தன்னே இவ்வளவு பெரிய அறிஞனெனக் காட்டிக் கொண்டதனுல் குமாரனுக்கே வெட்கம் மீறியது. தனது வெட்கத்தை விலக்க முயல்பவன்போலக் கூறினுன்: "நான் கூறியதைத் தெளிவாகப் புரிந்துகொண்டனேயா பட்ட? உலக நன்மையே யாவற்றினும் முதற்கண் கருதத்தக்கது. அது எதன் வாயிலாக நிறைவேற்றப் பெறுகிறதோ அதனேயே வாய்மையெனக்கொள்க. அடிகள் ஆரியதேவர் 'யாவற்றினும் மேன்மை பொருந்திய உண்மையைக் கண்டகண்ட இடங்களில் சொல்லக் கூடாது' எனக் கட்டளேயிட்டார். பொருத்தமற்ற இடத்தே மருந்தேபோல உண்மையும் நஞ்சாகின்றது. இன்று மாந்தர் சமூக அமைப்பிலே பல வாய்ப்புக்களிலே உண்மை நஞ்செனவிளேவு உண்டாக்குகின்றது.[1] நான் எனது உடன்பாட்டையும் உரைக்கவில்லே; மறுக்கவும் செய்யவில்லே. இறும்பூது கொண்டவனுய்க் குமாரனேப் பார்த்தவாறிருந்தேன். தான் சொல்வதை முற்றிலும் ஏற்றுக்கொள்ள என்னேத் தூண்டுவதில் தோல்வியுற்றதற்காக வருந்தினுன். வானப்பாம்பினுல் விழுங்கப்பெற்ற திங்கள்போல அவன்முகம் மங்கிற்று. அவன் உள்ளக்கருத்து அறிந்து வருந்தினேன். நான் பணிவோடும் விடை பகர்ந்தேன்: "குமாரனது கட்டளேயைக் கடைப்பிடிக்க முயல்கின்றேன்.''

குமாரன் எழுந்து ஒரு பெரிய சந்தனப்பேழையைத் திறந்து ஒரு படிமத்தை எடுத்தான். அது கருங்கல்லினுல் இயன்ற புத்த பெருமானது படிமம். பன்னிரண்டு அங்குல நீளமுள்ள கல்லில் சிற்பி தனது ஒட்பநூல் திறமையெல்லாம் பொழிந்திருக்கின்ருன். தமக்குள்ள பௌத்த அன்பினுல் சகமன்னர்கள் கங்கை யமுனேச் சேர்க்கைபோலப் பாரத சிற்பத்தையும் யவன சிற்பத்தையும் இழைத்து உருவாக்கிய படிமங்களே நான் முற்றிலும் விரும்புவ

---

1 ஸ-ந்யதா புண்யகாமேந வக்தவ்யா நைவ ஸர்வதா
ஔஷதம் யுக்தமஸ்தாநே கரலம் நநு ஜாயதே.
(சது: பாதகம் 8-18)

[நன்மை குறித்துச் சொல்லப்படும் சொல் எங்கும் எப்போதும் பயனுடைத்தாகவும் பயனற்றதாகவும் இருக்க முடியாது. மருந்து பொருந்தாத இடத்தே நஞ்சாகின்றது.]

தில்லை., அவற்றில் பொருளாழமும் இல்லை; வடிவத்தோற்றத் திறமையுமில்லை. அப்படிமங்களில் யவனர் சிற்ப முறைப்படி உடம்புப்பொறி விளக்கத்தில் மிகுந்த அக்கரை காட்டப்பெற்றிருந்தது. மற்றொருபால் கைகால்களில் நேர் பொருளினும் குறிப்புப் பொருளிலே மிகுந்த கவனம் செலுத்தப்பெற்றிருந்தது. கிருஷ்ணவர்த்தனனது கையில் இருந்த படிமத்தின் அழகு வேறிடத்தே காண்பதரிது. அடியின் மேல் நோக்க இயல்பான பதுமாசனத்தில் அமர்ந்திருக்கிற அத்தகைய படிமத்தை முதன் முதல் பார்த்தேன். பாரத சிற்பிகளைப் பின்பற்றியே குஷாண மன்னர்கள் அடியிடம் மேல்நோக்கும் பதுமாசன நிலையைப் படிமங்களில் இயற்றினார்கள். அந்த நிலையை யவனர்கள் தம் படிமங்களில் உண்டாக்கியது கம்பளி இழையால் சீனப்பட்டுத் தைத்ததுபோல வெறுப்பூட்டியது. சகமன்னர்கள் விரும்பிய சிற்பத்திலே வலதுபக்கம் குவிந்த மயிர்முடியுடன் கூடிய படிமம் அழகாக இல்லை. எனினும் கிருஷ்ணவர்த்தனன் கையிலேந்திய புத்தர் பெருமான் படிமத்தினது தலை வழுங்க இருந்தது. இதனைக் கண்டதும் புத்தர்பிரானே அமர்ந்திருக்கிறார் என்ற உணர்வை ஏற்படுத்திவிட்டான் அந்தச் சிற்பி. பாதி மலர்ந்த கண்களின் மேலே புருவக் கொடிகள் பீச்சாங்குழலால் மேலே பீச்சப்பெற்ற நீர் வரியினது வளைவுபோன்றிருக்கவில்லை. அப்புருவங்கள் மூக்கந்தண்டிற்கு விரிந்த குடைகள்போன்றிருந்தன. கை விரல்கள் இயல்பாக இருந்தன. குப்தர் காலத்தில் செய்யப்பெற்ற படிமங்களுக்கும் சிற்பக்கலைக்கும் மிகுந்த தொலை இருந்தது. ஒருமைப்பாட்டு நிலைக்கும் உறக்கநிலைக்கும் வேற்றுமை உண்டு. பெரும்பாலான குஷாணச் சிலைகளில் இவ்வேற்றுமை காட்டப் பெறவில்லை. ஆனால் கிருஷ்ணவர்த்தனனது கையிலிருந்த படிமம் மயிர்க்கால்தோறும் பொறிகள்தோறும் விழிப்பு நிலை ஊட்டப்பெற்றதுபோன்ற ஒளியைக் கொண்டிருந்தது. ''இதை இளவரசியிடம் தந்து கூறுக. இஃது உங்கள் உடன் பிறந்தானது உளங்கனிந்த பரிசு'' என்றான். மீண்டும் ஒரு படிமத்தை எடுத்தான். அதைப் பார்த்ததும் ஊக்கமும் மகிழ்ச்சியும் ஒருசேரப் பெற்றேன். இஃது இளவரசியின் தொழுதகைக் கடவுளான மாவராகப் படிமமாகும். அதைக் கையில் ஏந்தி ஆர்வமுடன் பார்த்தவாறு கூறினான்: ''இதனை நீ உன் சார்பில் கொடு.'' பின்னர் ஒரு சந்தனச் சிறுகட்டில் எடுத்தான். அது நான்கு வெள்ளை யானைப் படிமங்கள் முதுகின்மீது இயற்றப் பெற்றிருந்தது. ''இரண்டு ஆட்கள் உன்னுடன் இதனைத்

தாங்கி வருவார்கள். கங்கைக்கரையை அடைந்ததும் அவர்களைத் திருப்பி அனுப்பிவிடு. நீயே படிமங்களைப் படகிற்குள் ஏற்றி விடு'' என்று கூறி எதிரெதிராக அப்படிமங்களைக் கட்டிலின் மீது வைத்தான். மேலும் சொன்னான்: ''வாப்பிரவ்வியனைக் குறித்துப் பட்டம்மை சிறிதும் வருந்தவேண்டாம். அவன் என்னிடம் இருக்கின்றான் என்று கூறுக.'' இதைக் கேட்டதும் வியப்போடு நான் கிருஷ்ணவர்த்தனனைப் பார்த்தேன். வாப்பிரவ்வியன் எப்படித் தப்பினான்? மற்ற பணிப் பெண்டிர் என்ன வானார்கள்? நாகன் எனும் காவலாளி நிலை என்ன என்ற வினாக்கள் வரிசையாகக் கிளம்பின. என் அகநிகழ்ச்சிகளைக் குமரன் உணர்ந்து சொன்னான்: ''தக்க நேரத்தே யாவும் விளக்கமாகும் பட்ட! பொய் சொல்லுதல் எப்போதும் தவறெனக் கொள்ளாதே. அதற்கும் சில நேரங்களில் பயனுண்டு.''

நன்றியோடு தலைவணங்கி விடைபெற்றுக் கொண்டேன். அப்போது கதிர்க்கடவுள் நடுவானம்விட்டு மேல்வானத்தே தொங்கிக் கொண்டிருந்தான்; இயற்கை என்னும் அழகிதன் தலைவகிட்டுமணி, களைப்பின்பொருட்டால் இடம்பிறழ்ந்தது போன்ற காட்சியளித்தான். கீழ்த்திசைக்கு ஏதோ செய்தியை விரைவாகக் கொண்டுபோவதெனக் கீழ்ப்பால் நிழல் விரைவாக நீண்டவாறிருந்தது. குமாரன் அனுப்பிய இரண்டு ஆட்களோடு விரைந்தவாறிருந்தேன். வழியில் ஒரு கோயிலருகே தோரணங்கள் முதலிய அணிகள் பல நிரம்பியிருத்தலைக் கண்டு அவ்வாட்களிடம் கேட்டேன்: ''இங்கு இவ்விடம் என்ன விழாச் சிறப்பு நடைபெறவுள்ளது?'' அவர்கள் கூறினர்: ''இது நாமகள் கோயில். காம விழாத்தோறும் இங்குப் பேரவை திரளும். அதற்காக ஏற்பாடுகள் நடந்தவாறுள்ளன. பேரவையில் நகரத்திருமகளும், அழகின் இருப்பிடம் போன்றவளும், கலைகள் தன் அருவிபோன்றவளும், மிக்க பண்பாடுடையவளும் ஆகிய நகரநடிகை சாருசுமிதையானவள் மயில் நடனமும் தாமரை நடனமும் செய்யப் போகின்றாள். ஆண்டுதோறும் மௌக்கரி மன்னன் சார்பில் இப்பேரவை ஏற்பாடாகும். பன்னாடுகளிலிருந்தும் புலவர்களும் கலைஞர்களும் நடிகைகளும் பாடகர்களும் தத்தம் திறமையை இங்குப் புலப்படுத்துவார்கள். பலவகைக் காப்பிய வினாக்களும் புதிர்களும் நொடிக்கவிதையும் நூல்வாசிப்பும் படிக்க முடியாதவற்றைப் படித்தலும் விடுபட்ட எழுத்துக்களை ஈடுகட்டிக் கவிதை நிரப்புதலும் இன்னோரன்ன இலக்கியக்கலை நிகழ்ச்சிகளைக் கண்டு மக்கள் எல்லையற்ற மகிழ்ச்சியடைவார்கள்.

என்ன,பொருட்டாலோ நேற்று மௌக்கரிக் குறுமன்னன் கலை விழாவினை நிறுத்திவிட்டான். பல கலைஞர் வந்து ஏமாற்ற முற்றுத் திரும்ப இருந்தனர். தாணேசர்புரியின் புகழ் மங்கிவிடு மெனக் கருதிக் கிருஷ்ணவர்த்தனர் விழாவைத் தமது சார்பிலே நடாத்த ஏற்பாடு செய்யப் பணித்தார். இன்று இதன் பொருட்டா லேயே மிகமிக விரைவாக ஏற்பாடுகள் நடந்தேறி வருகின்றன. மாலையில் சாருசுமிதையின் மயில் நடனமும் தாமரை நடனமும் நடக்கும். இதுவரை அவள் அரசப் பெருமக்கள் முன்னரே நடித்து வந்தாள்; இன்றேனுனில் முதல் முதலாக நகரமாந்தர் அவள் அரிய நடனங்களைக் காண்பார்கள். கன்னேசியின்கண் புகழ்பெற்ற நடனமாதினுடைய நடனங்களைக் காண நகரமாந்தர் வெள்ளம்போலத் திரண்டு வருவார்கள்.'' அவன் இவ்விதம் கூறி முடித்ததும் காட்சிக்கூடத்தைக் கண்ணுற்றேன். மாபெரும் பந்தர் உயர்ந்த பன்னிரு ஆச்சாமரக் கம்பங்கள்மீது கட்டப் பெற்றிருந்தது. தலைவரது தவிசு மலர்ந்த நூற்றிதழ்த் தாமரை களால் அணிசெய்யப் பெற்றிருந்தது. தலைவர் தவிசுக்கு வலது புறத்தே வடமொழிப் புலவர்தம் இருக்கைகள் இடப்பெற்றிருந் தன. இடதுபுறத்தே பாகத மொழிப்புலவர்களுக்கும் பாகத வழிமொழிப் புலவர்களுக்கும் இருக்கைகள் இடப்பட்டிருந்தன. தலைவர் இருக்கை பின்னால் அரச அலுவல் தலைவர்கள் இருக்கை கள் வேயப்பெற்றிருந்தன. வலதுபுறத்தின் ஒரு பால் திரைக்குள் மாதர் பெருந்தகையார்களுக்கு இருக்கைகள் வைக்கப்பெற்றிருந் தன. தலைவர் எதிரே இடதுபுறப் பகுதியிலே நகரமாந்தர்தம் இருக்கைகள் இருந்தன. மேடை நடுவிடத்தே நடனமேடை அமைக்கப்பெற்றிருந்தது. அதன்மீது நிறத்தூள் தூவப்பெற் றிருந்தது. அதன் பொருளை அறிந்துகொண்டேன். மயில் தாமரை நடனங்களுக்கு அவை துணை செய்வனவாகும். கன்னேசி மாந்தர் பழையன விரும்புபவர், வளவுக்கதி நடனம் விடாது விழைபவர். இன்னும் மயில் நடனத்தையும் தாமரை நடனத்தையும் விடாப்பிடியாகக் காத்து வருகின்றனர். அவற்றை மிகவும் மதிக்கின்றனர். மகத நன்னாட்டில் மாந்தர் மயில் நடனத் திற்கு மதிப்பு இத்துணை தருவதில்லை. பன்னாள் முன்னரே அதனைக் கைவிட்டனர். நடனத்தில் மயில் நடனம் மிகவும் கீழ்த் தரமானது. தாள இயைவே இதில் சிறப்பானது. தாளத்திற் கேற்ப அடிகளை விரைவாக எடுத்துவைப்பதால் மேடையிடத்தே பரப்பிய நிறப்பொடியின்கண் மயில் அல்லது தாமரை வடிவம் பதிய வைப்பதில் அத்துணை இறும்பூது என்னவுள்ளது? நான்

சுவையையே நடனத்தில் பெரிதாக மதிப்பவன். ஆனால் கன்னேசி மாந்தர் தனி இயல்பு வாய்ந்தவர்கள். அவர் அகச் சுவையுடன் கூடிய அவிநயத்தினும் தாளம் சிறந்த ஆட்டத் தையே பெரிதும் மதித்தனர். உள்ளப்பான்மைகளினும் பொறித் திறனுக்கே மிக்க மதிப்புத் தந்தனர். நான் அவர் குறிக்கோளை-விருப்பத்தைச் செவ்வனே புரிந்துகொள்ள முடியவில்லை. நேரம் இருந்தால் இந்நடனங்களைத் தவருது காண்பேன். நான் சாரு சுமிதையின் நற்பேற்றினையும் நற்பெயரையும் நற்புகழையும் கேட்டிருக்கின்றேன்; அவள் நடனமாடும்பொழுது அவள் அடிகள் உள்ளங்கவரும் வகையில் அசைவதைப்பற்றிய இனிய கதைகள் வழங்கிவருகின்றன. அவ்வடிகளின் அசைவால் மேடையிடத்தின்கண் உருவாகும் தாமரை அல்லது மயில் வடிவத்தின்மீது எனக்கு விருப்பம் கிடையாது. அவள் அடிகள் தாள இயைவுக்கு ஏற்பப் பெயரும் அழகையே காண விரும்பினேன். ஆனல் நான் தாமதிக்க முடியாது. பேரவைப் பந்தர் இன்னும் முற்றுப்பெறவில்லை. தொழில் வல்லுநர் தத்தம் வேலையில் முழுகியிருந்தனர். புறத்தே இசை வல்லுநரின் கூட்டமொன்று தாமரை மலர் வடிவத்தில் வந்துகொண்டிருந்தது. தொழில் வல்லுநரது சிற்பநூல் திறன்கண்டு வியப்புற்றேன். மிகவும் முயன்று எனதுள்ளத்தே தோன்றிய ஆவலை அடக்கி விரைவாகக் கங்கைக்கரையை அடைந்தேன்.

கரையருகே வியப்புறத்தக்க அமைதி நிலவியது. தொலைவிலிருந்தே நீரலைகள் தெளித்த துளிகளைத் தாங்கிவந்த காற்றை நுகரத் தொடங்கினேன், உவகையுறத் தொடங்கினேன். மிகு தொலைவுவரை வெண்தாமரைக் குழுவெனப் பரவி இருந்த கங்கை நீரொழுக்குக் கண்டு கண்கள் குளிர்ந்தன. முழுவெள்ளி மலை வெண்மையைக் கழுவிக்கொண்டு கங்கை ஒழுக்காக நின்றது: சிவபெருமான் சடையை விட்டு இளம்பிறை வெண்ணமுதத்தை வாரிக்கொண்டு பொழியா நின்றது; பிரமனது கமண்டலத்திலிருந்து பொழிந்த வேத சாரவெள்ளமெனப் பொழியா நின்றது; பாரத மக்களுக்கு எண்ணிறந்த நாட்களாகத் தாயென, உயிரெனப் புகலிடமெனப் பாயா நின்றது. என்னெதிரே படிகம் போன்ற தூய புனற்பெருக்கம் அலையொடு பொழிகின்றது. எத்துணைத் தூய்மை! எத்துணைத் தண்மை! எத்துணைக் கவர்ச்சி! ஆகா! வானமே நீர்வடிவில் இறங்குகின்றதென்பனே! பனிமலை கரைந்து விரைகின்றதென்பனே! நிலாவொளியே நீராகி யாருகி வழிகின்றதென்பனே! மலைமகன் அருட்கடைக்கண் நோக்கந்

தான் கண்ணீராகி மண்மீது பொழிகின்றதென்பனோ! மூவுலகப் புண்ணியமே கரைந்து திரைந்து வருகின்ற தென்பனோ! குளிர் கால வெண்புயல் வந்து தங்கிய தென்பனோ! நாமகளது கருப்புர வெள்ளொளி உறைந்து தண்ணீராயிற்றென்பனோ! அழகுக் கணிகலன், தூய்மையின் வெள்ளம் என்பனோ! இந்தக் கங்கை யாற்றினை யாதென உரைப்பேன்! கரையிலோ கொக்குகளது கூவலும் அரச அன்னங்களது அரற்றலும் செவிக்குள் நுழைந் தன. கரைமரமலர் மணம் வாழுமிடத்தே பரவியது; மணல் திட்டுக்கள் கொக்குக் கூவலை எதிரொலி செய்தன. வெண்ணு ரைகளின் வரிசை மல்லிகைத் தொடையலாகக் காட்சியளித்தது. கதிரவன் ஒளிக்கதிர்கள் கங்கை நீரலைகளில் மோதி நூற்றுக் கணக்கான நிறங்களில் ஆடின. படகின் இடத்தை அணுகியதும் படிமங்களது பேழையை வாங்கிக்கொண்டு உடன்படர்ந் தோருக்கு அன்பொடும் விடைகொடுத்து வழியனுப்பினேன்.

## உயிர்ப்பு எட்டு

மாலையணுகியதும் படகோட்டிகள் படகை அவிழ்த்து விட்டனர். இதற்குச் சற்று முன்னர்தான் அடிகள் சுகதபத்திரர் நட்புடன் வாழ்த்துக்கள் கூறித் தந்தைபால் இளவரசியை அனுப்பிவைப்பதாக உறுதிமொழி அளித்துப் போந்தார். அடிகள் சென்ற வழியே துயர நோக்குடன் அவள் பார்த்தவாறு நின்றிருந்தாள். எண்ணெய்ப் பசுமை வாய்ந்த அவளது கருங்குழல் தளர்ந்த முகத்தின்மீது கவிந்திருந்தது; அதனைக் கண்டதும் பாசிக்குள் கவியப்பெற்ற தாமரை மலர் நினைவிற்கு வந்தது. மெதுவாகக் கங்கையாற்றொழுக்கில் செந்நிலா வட்டம் தோன்றியது. யாம் பார்த்துக்கொண்டிருந்த பொழுதே அது நூற்றுக்கணக்கான வடிவங்கள் பூண்டு தூயபுனலில் முழுகி யெழத் தொடங்கிற்று; பகல் முழுதும் ஒலி விழாவயர்ந்து தன் னுடலில் படிந்திருந்த நிறச்சுண்ணங்களைக் கழுவுவது போலிருந் தது. இரவின் கருமை பெருகியவாறிருந்தது. கடலே நிலவு வரவர மிக்க வெண்மைகொண்டு கங்கைக் கரையைப் பால்

வெள்ளையாக்கிக் கொண்டிருந்தது ; துள்ளியெழுந்து விளையாடும் அலைகள்மீது நிலாக் கதிர்களும் விண்மீன்களும் நடனமாடத் தொடங்கின. ஆனால் இளவரசி துயரமுற்றவளாய் அமர்ந் திருந்தாள். என்னால் அக்காட்சியைப் பொறுக்க முடியவில்லை. வருத்தமுடன் உரைத்தேன் : ''பெருமாட்டி ! கவலையை விடுக ; பாணபட்டன்மீது நம்பிக்கை கொள்க. அடிகளின் வாழ்த்துப் பயனளிக்கும். நான் எத்தகையவனாயினுமென் ? கொடிய போர் வென்றவனும் வாலீகம் வீழ்த்தியவனும் எல்லைப் புறக் கள்ளரை அடக்கியவனும் பகைவர்க்கு ஏறுபோன்றவனும் ஆகிய கடவுள் மகன் துவரமிலிந்திரன் பால் உம்மைக் கொண்டு சேர்ப்பது உறுதி. அடிகளது ஆணையை நிறைவேற்றவே இத்திசை வாயி லாக மகதம் நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றோம். உம்மை மகதத்திற்கு அழைத்துப் போமாறு ஏன் அடிகள் எனக்குப் பணித்தார் என்பது தெரியவில்லை ; நேரங்கடந்தாயினும் என், எனது மொழியைத் தவறாமல் காக்கின்றேன்.''

இளவரசி என் வேண்டுகோளைச் செவிமடுத்தாள். தாமரைத் தண்டு போன்ற இளம் விரல்கள் உதவிகொண்டு தளர்ந்த கருங் குழலைச் செம்மைப்படுத்தினாள் ; இளநகை மலர்ந்தவாறென்னைக் கண்டாள். ஒரு நொடிப் பொழுதிலேயே படகில் ஒரு தூய ஒளிப்பிழம்பு சூழ்ந்துகொண்டது. என் உள்ளத்தினுள்ளேயே அரிய கற்பனையாளர் காளிதாசக் கவிஞரது நினைவு வந்தது. அப்பொழுதுதான் எழும்பும் திங்கள் ஒளியால் இருள் அகல் வதைக் கண்டு கண்கவரும் [1]கருங்குழலைச் செப்பமுறுத்திய கீழ்த்திசை மாதினது கற்பனையைக் கண்டார். அவர் கீழ்த் திசையாம் மாதினது கற்பனை கண்டுசென்ற இருநூறு ஆண்டு கள் பின்னர் கங்கையது தூய பொழிவிலே வானவருலகிலும் மாந்தருலகிலும் ஒரே நேரத்திலே இந்த வியப்பான ஒளி மிளிரும் என்று கனவிலும் காளிதாசர் நினைத்திருப்பாரா ? 'ஒரு நாள்

---

[1] விக்கிரமோர்வசீயத்தில் ஒரு செய்யுள்.

உதயகூட—சசாங்க மரீசிபிஸ் தமஸி தூரதரே ப்ரதி சாரிதே
அலக சம்யம நாதிவலோசநே ஹரதி மே ஹரி வாஹநதிங் முகம்.

[திங்கள் புறப்பட அவன் கதிர்களான் இருட்குழாம் மிகு தொலை வுக்கு விலகிவிட்டது ; அது கண்டு கீழ்த்திசை மாது தனது கருங்குழல் செப்பம் செய்தவள் போலக் கண்கவரும் முகம்போலத் திங்கள் காணப் பெற்றது.]

திங்கள் தனது அமுதவெள்ளத்தினைப் புறவுலகின்கண் பொழி விப்பான்; சந்தனச் சுவை இடைவிடாது பொழிந்து உலக முழுவதையும் இனிய மணங்கமழ்விக்கும்; அமுதக் கடல் வெள்ளம் வையத்துள்ளிடங்கள் யாவற்றையும் நிரப்பும்; வெவ்விய கங்கையின் ஆயிரமாயிரம் ஒழுக்குக்கள் பொழியும்; மாவராகன் வெள்ளிய கோட்டு ஒளியைத் தோற்கடிக்கும் வகையில் கங்கை வெள்ளம் பாயும்; அப்பொழுது அக்கங்கையின்மீதே அதைப் போன்ற தூய்மையுற்றவளும் நிலவுபோன்ற பொலிவுற்றவளும் ஆகிய ஒரிளவரசி தனது இளமுறுவல் ஒளிகொண்டு உலக உள் ளத்தினைத் தூய்மையும் குற்றமின்மையும் உவகையும் பொருந்திய தாகச் செய்துகொண்டிருப்பாள் எனக் காளிதாசர் ஒரு நொடிக் காயினும் நினைத்திருப்பாரா? இளவரசி மகிழ்வுடன் இருப்பது கண்டு உள்ளத்தில் கரைகாணு உவகைக் கடல் கிளர்ந்தெழுந்தது. நான் ஊக்கத்தோடும் கூறினேன்: "பெருமாட்டி! மாவராகன் சான்றுக இருக்கின்றுன். தாங்கள் இவ்வூழியன்மீது நம்பிக்கை வையுங்கள். சிங்கத்தினது பிடரிமயிரைக் காலால் மிதித்த கயவர் துன்பப் பயனைத் தவருது துய்ப்பர். ஒரு பொருட்கும் உதவாதவன் இந்தச் சிறிய பாணபட்டன் என இழிவு செய்யற்க. இன்னும் பாரதத்தில் செய்ந்நன்றி மறவாமை இறந்துவிடவில்லை. எல்லைப்புற ஊர்களையும் வாலீகத்தையும் வீழ்த்திய கடவுள் பேரன்பனும் பேரறங் காப்பவனும் ஆகிய கடவுள்மகன் துவரலி லிந்திரன் பால் இங்கு அன்பு உலரவில்லை. தாங்கள் எங்கு எழுந்தருளி இருக்கின்றீர் என்று அறிந்ததும் கூற்றுவனுலும் அவன் வழியைத் தடுக்கமுடியாது. இன்று தீவினை பற்றப் பெற்ற கடவுள் மகன் எங்குத் துயரமிகுதியால் உணர்விழந்து கிடக்கின்றுனே? ஆனுல் என் சொல் நம்புக. ஒரு நாள் தவருமல், அந்தணர், பௌத்தர், சமணர் எனும் அறவோரையும் கோவில்கள் கடவுளர் படிமங்களையும் இளமங்கையர் மாதர் முதலானேரையும் பாதுகாக்கும் கடவுள்மகன் உமது செய்தியை அறிவான். அங்ஙனம் அறிந்ததும் அவன் வழியில் குறுக்கே ஏற்படும் தடைகள் காளான்கள் நாய்க்குடைகள் போல முறிந்து அகல்வது உறுதி; அச்சத்திற்கு அச்சம் விளைவிக்கும் மாபெரும் படைகள் சுடாப் பானைகள்போல உடைந்து தூளாவதும் உறுதி; அந்நாளில் புயலுந்திய கடல்போல் எல்லையற்ற கடவுள்மகன் படைகள் எழுச்சியால் நிலமே நடுநடுக்கும்; இன்று அஞ்சி யோடும் பாணபட்டன் நாளை ஓங்கிப் பொழியும் ஊழிவெள்ளத் தைத் தடுத்து நிறுத்தும் பேரணையாக ஓங்கி நிற்பான்.

பெருமாட்டி! பாணபட்டன் கடமையினின்றும் என்றும் தவற மாட்டான். ஆறுதல் உறுக; பொறுமை கொள்க.''

இளவரசியது கருத்த கண்ணிலிருந்தும் பனித்துளிகள் பாய்ந்தன. இதனை மறைக்க அவளது முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டாள். பின்னர் முன்றானை கொண்டு கண்ணைத் துடைத்துக்கொண்டு என்னைத் திரும்பிப் பார்த்தாள். இந்த நிலையிலும் அவள் முகத்தே நனைந்த முறுவல் காணப்பெற்றது. அம்முறுவல் பொருள் அறிந்துகொண்டேன். அதனில் நன்றி பாராட்டிருந்தது. ஆனால் நம்பிக்கையில்லை. அம்முறுவல் எனக்குப் பின்வரும் எச்சரிக்கையைத் தருவது போன்றிருந்தது; 'ஆறுதல் அளிக்கின்றனை அன்பார்ந்த பட்ட, இதற்கு நன்றி பாராட்டுகின்றேன். ஆனால் உனது உறுதிமொழி காத்தலரிது.' நான் ஒரு நொடிப்பொழுது வரை செயலற்றவனாயிருந்தேன்; இளவரசியது துயராழ்ந்த முகத்தோற்றத்தைப் பார்த்தவா றிருந்தேன். நான் அவள் அகத்தே குழம்பிய துயர நோயை அறிய ஆவலுற்றிருந்தேன். ஆனால் அவள் அகநிகழ்ச்சியது ஒரு பகுதி மெய்ப்பாடுற்ற முகத்தினை மறைத்தமையால் எல்லையை மீறி அவள் உள்ளத்தில் புகுந்து உண்மை நிலையை நான் அறிய முடியவில்லை. வினவி அறியுந் துணிவும் கொள்ள வில்லை. நிபுணிகை எனக்குத் துணைசெய்தாள். துயர்நடுங்கு குரலால் கூறினாள்: ''பட்ட! நீ மிக உயரப் பறக்கின்றாய். கவிதை கைவிடு. பட்டம் பெருமாட்டியின் அகத்தே குமுறும் நோய் ஆழமானது. ஊழியர் முன்னமும் இருந்தனர்; ஆனால் அவர்களால் அவரைக் காக்க முடியவில்லை. கடவுள்மகன் தன் எண்ணரிய படைஞர் இருந்தனர், இன்றும் உள்ளனர்; ஆனால் அவரைக் காக்க முடியவில்லை. நீ தனியாக என்ன செய்யப் போகிறாய்? ஆர தீர நினைந்து எண்ணித்துணிந்து சூளுரை உரைப்பாயாக.''

நிபுணிகை மற்றுமொருமுறை என் செருக்கைத் தாக்கினாள். நான் இதனை முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. துயருற்ற மாந்த ருக்கு ஆறுதல் செய்யும்போது சற்று உயர்வு நவிற்சி இருக்கத் தான் செய்யும். நானும் சற்று மிகைப்படுத்திக் கூறினேன், உண்மையே. நிபுணிகை இவ்விதம் என் மானத்தை வாங்கி யிருக்கக் கூடாது. ஒரு நொடிவரை உள்ளங் குமுறினேன். என் பார்வையிலும் நான் இழிந்தவனாகக் காணப் பெற்றேன். மாலைப்போதில் தூங்குமூஞ்சி மரத்திலைகள் போல எண் கண்கள் தாமே வெட்கத்தால் மூடிக்கொண்டன. மோதுண்ட நத்தை

போல் என் முகம் தன்னுள்ளேயே சுருங்கி ஒளிந்துவிட்டது போன்றிருந்தது. ஆனால் இந்நிலைமை நெடுநேரம் வரை இருக்கவில்லை. தாக்குண்ட செருக்குக் கொதித்தெழுந்தது. உணர்ச்சி மிகப்பெற்று ஏதோ கூற வாயெடுத்தேன். இளவரசி குறுக்கிட்டாள். இறங்கிய முகம் கண்டு இரக்கம் கொண்டனள் போலும். நிபுணிகையை அதட்டி மென்குரலில் உரைத்தாள்: "சீசீ! நிவுணியா! நீ ஏன் இவ்வாறு கடுஞ்சொல் கூறினை? பட்டன்மீது எனக்கு முழு நம்பிக்கை உண்டு. கவிதையாற்றல் உனக்கென்ன தெரியும்? பட்டன் பெருமை பட்டனுக்கே தெரியாது. அவன் பெருமை அறியாத நானும் அவனை இழிவு செய்வதா, நிவுணியா? முன்னரும் ஊழியர் எனக்கிருந்தனர்; ஆனால் பட்டனைப் போன்ற தெய்விகப் பாதுகாப்பாளன் போடகன் எனக்கு வாய்க்கவில்லை. நீ உறுதிமொழி வெற்றி யுறுவதையே பெரிதாக மதிக்கின்றனை; உறுதிமொழி எடுப்பதே செயற்கரிய செயல் என்பதை நீ உணரவில்லை. பட்ட, காண்க! மாவராகப் பெருமானே எனக்குற்ற துணை. அக்கடவுளே உன்னை என்னிடம் அனுப்பி வைத்தான். அவன் விரும்பினால் என்னை அன்னைதந்தையர்பால் கொண்டு சேர்க்க முடியும். எல்லாம் அவன் விருப்பத்தைச் சார்ந்ததே; நீயும் நானும் அவன் விருப்பத்துக்குக் கருவிகளாக இருக்கின்றோம். அவன் விருப்பமே நிறைவேறும். மகிழ்ச்சியும் துயரமும் நகையும் அழுகையும் எல்லாம் அவன் அருட்கொடைகள் தாம். மாந்தர் என்ன செய்யமுடியும்?"

ஒரு நொடிப்போதுவரை நின்று மீண்டும் பேச்சுத் தொடர்ந்தாள்: "பட்ட, நான் பன்னாள் முன்னரே முடிந்திருக்க வேண்டும். எல்லைப்புறக் காட்டுமிராண்டிகள் என்னைத் தாக்கிய போது என் பல்லக்கினைச் சுற்றிலும் பொறுக்கி யெடுத்த வீரப் போர் மறவர் இருந்தனர். நகரகாரம் என்ற ஊரில் இக் கொடிய நிகழ்ச்சி நேர்ந்தது. பாட்டனார் போலத் தொழுதற்குரியவரும் மறத்திறனில் நிகரற்றவரும் ஆகிய தீரநாபிதர் என்னருகே காத்தவாறிருந்தார். ஆறலைகளவர் என்மீது திடீரெனத் தாக்குதலை நடாத்தினர். இறுதிவரை தீரநாபிதர் குடைபோலக் காத்திருந்தார். படைஞர் அனைவரும் போர் செய்து செய்து என் தந்தை கடவுள்மகன் பெயரைக் கூவிக்கூவி நிலம்மீது சாய்ந்தவண்ணம் இருந்தனர். ஒரு முழுத்த நேரம்வரை போர் நடந்து கொண்டிருந்தது. கடைசி இரத்தத் துளி இருக் கும்வரை தீரநாபிதர் வழிப் பறிக் கள்ளரை என்னிடம் நெருங்க

விடவில்லை. நான் அச்சமுற்று உள்ளம் தாங்கிப் பிடித்து, 'உதவி! உதவி!' என்று கூக்குரல் இட்டவளாய் என் படைஞர் துண்டு துண்டாக வெட்டி வீழ்த்தப்பெறுவதைப் பார்த்தவா றிருந்தேன். அப்போதும் தீரநாபிதர் தம் முழுக் குரலோடும் 'கடவுள்மகனுக்கு வெற்றி வெற்றி' என் முழங்கிக் கொண்டே இருந்தார்: 'செல்வீ! அஞ்சற்க இத்தீயோர் உம் நிழலையும் தீண்ட இயலார்' என்று உறுதியளித்துக் கொண்டிருந்தார். நூற்றுக்கணக்கில் கள்ளர்தம் படைஞர்கள் வெல்லத்தின்மீது பாயும் எறும்புகள் போல அவர்மீது பாய்ந்தனர். அவர்தம் ஆடை களைக் கிழித்தெறிந்தனர். மயிர் முடி முழுவதையும் பிய்த்தெறிந் தனர். எனினும் பல்லக்கைவிட்டு அவர் அப்பால் அகலவில்லை. அவரது உடலின் இரத்தம் பல்லக்குமீது பீறியது. கடைசி முறையாக அவர் 'செல்வீ! அஞ்சற்க!' என்று கூறியபொழுது என்னால் பொறுக்க முடியவில்லை. பல்லக்கைவிட்டு வெளிவந்து அவரை அதனுள்ளே இழுத்துப் பாதுகாக்கலாமென விரும் பினேன். இதற்குள் அவர் மூன்று துண்டங்களாகப் பெற்றார். தீவினையேனாகிய எனக்கு அவர்தம் காலடிகளே வாய்த்தன. நான் வெட்டுண்ட மரம் போலக் கீழே விழுந்தேன்.''

சற்றுநேரம் பேசாமலிருந்த இளவரசி நிபுணிகையை நோக்கினாள். நிபுணிகை கண்களில் நீர் ததும்பிற்று. இளவரசி கூறினாள்: ''அழாதே நிவுணியா! நான் வாழ்க்கையில் மிக அழுது வந்துள்ளேன். நகரகாரத்திலிருந்தும் புருடபுரம், (பெஷாவர்) புருடபுரத்திலிருந்தும் சலந்திரம் வரை இன்னும் பல இடங்களுக்கு என்னைக் காட்டுமிராண்டிகள் கடத்திச் சென்ற னர். முடிவில் எனக்குத் தாணேசர்புரியில் புகலிடம் கிடைத்தது; அதுவும் மௌக்கரி அரண்மனையில் எனக்குப் . புகலிடம் கிடைத்தது. கள்ளர் என்னுடம்பைத் தொடுவதன்முன் கடவுள் மகன் செல்வி என இறுமாப்புற்றிருந்தேன்; பின்னர் அவ் விறுமாப்பு நான் எங்ஙனம் கொள்ளமுடியும்? ஒரு மாதம் வரை தந்தை பெயர் கூவிக் கூவி அழுது கொண்டிருந்தேன். என் பெருமிதம் தொலைந்தது. கடவுள் படைத்த ஆயிரக் கணக்கான மங்கையரில் நானும் ஒருத்தியே. அவரைப்போலும் நானும் துயரம் கொள்ளுகின்றவளே. அவர் வாழ்க்கை போலவே, என் வாழ்வும் என் நலத்திற்குப் பயன்படாததாயிற்று. 'நான்' எனும் பெருமிதம் அழியப்பெற்றேன். மானம் அகன்றது. பெருங் குடிப் பிறப்பின் பெருமையும் உருக் குலைந்தது. பழிமிகப் பெற்றேன், மானமொழியப் பெற்றேன். வாழ்வில் கறைபடியப்

பெற்றேன். ஆயிரக்கணக்கான ஊர்மங்கையர் போலவே நானுமோர் எளிய மங்கையே ; எனக்கென ஒரு தனிச் சிறப்பியல்பு இல்லை. வையகத்தே பொழிந்தவாறிருக்கும் துயர வெள்ளத்தே நுரையுடன் கூடிய நீர்க்குமிழி போல நானும் அறிவேன். அவ்வெள்ளம் தன் வெறிவிரைவுடன் பொழியா நிற்கும். அன்னையிடமிருந்து பௌத்தஅறத் துயர இயலைக் கற்றுக்கொண்டேன் ; வையமெல்லாம் துயரம் செறிந்துள்ளது, முடிவுகள் யாவும் துயரமாகவே முடியும் என்ற கருத்தைக் கற்றுக் கொண்டேன். தந்தையிடமிருந்து வைணவ வழிபாட்டுக் கருத்து ஆகிய பிறர் துயர்க்கிரங்குதலை அறிந்தேன். என்னிடம் மாவராகக் கடவுள் அருள் உள்ளது ; இஃதொன்றே எனக்கு நற்பேறும் இன்பமும் ஆம். அதே அருளால் அன்புடைய நிவுணியாவும் பட்டனும் கிடைத்தீர்கள். வேண்டாம் நிவுணியா ! அழுவதால் அரும்பாது பயன். ஆனால் இன்று அழுகையை நான் தடுக்கமுடியாதவளானேன் ; எனினும் அது தற்செயல் உள்ளக்கிளர்ச்சி என்றே கொள்வேன். யாவற்றையும் மறுத்தற்குப் பெருமுயற்சி செய்கின்றேன். தந்தைபால் சேர்வதென்ன? சேராததென்ன? யாவும் மாவராகனுக்கே தெரியும். நாம் ஏன் கவலையுறவேண்டும்?''

இனியும் என்னால் பொறுக்க முடியவில்லை. உள்ளக் கிளர்ச்சி கொண்டவனாய்க் கூறினேன்: ''நீங்கள் கறையுள்ள வாழ்க்கையினர் என்று எவன் கூறமுடியும்? உங்களிடம் பார்வதி போன்ற உள்ளத்தூய்மை உள்ளது. கங்கைபோன்று உம்மிடம் தூய கருத்தொழுக்குள்ளது. வெள்ளிமலை போன்று தூய ஒழுக்கம் உள்ளது. மானச மடுவைப்போன்ற தூய கடவுள் உள்ளம் . உள்ளது. உங்களைப் போன்ற உலகந் தொழும் மாதினைப் படைத்திருக்க, உங்களைப் பழிபடைத்த மாதர் என்று சொல்பவன் நரக அழுவத்துள் அழுந்துவது உறுதி. பெருமாட்டீ! நெருப்பருகே அழுக்கு அணுகாது ; விளக்குத் தழலை இருள் கருமை தொடாது ; நிலாவினை வானநீலம் அண்டாது ; கங்கையை நிலமாசு தொடாது. துயரம் பொருந்திய தங்கள் சொற்கள் தங்களுக்கு ஏற்றவையல்ல ; நரி வந்து தொடுவதால் இளம் பெண்சிங்கம் மாசுறாது. அரக்கர்தம் மனையில் வைக்கப்பெற்ற சீதையாம் திருமகளுக்குப் பழி ஏற்பட்டதா? இல்லை. எறும்புகள் தொடுவதால் காமதேனுதன் பெருமை அகலாது. ஒழுக்க இழிவுடையோர்க்கிடையே வாழும் நாமகள் பெருமை அழியாது. ஆறுதல் உறுக பெருமாட்டீ!

நீங்கள் தூய்மையின் வடிவம்; நலங்களின் சுரங்கம். பாரதத்து அந்தணர் சமணர் பௌத்த அடிகள் கோயில்கள் விளை நிலங்கள் துணைவரற்றோர் மங்கையர் பட்டினங்கள் பேரூர் சிற்றூர்கள் முதலியன காப்பாற்றும் கடவுள்மகன் துவரமிலிந்திரர், கண்ணுள் மணியாகிய தாங்கள் இருக்குமிடத்தைக் கட்டாயம் அறிந்து கொள்வார்; கண்டுபிடித்துவிடுவார்; அந்நாள் கோயில்களில் உங்கள் படிமத்தை நாட்டித் தொழுவார்கள். அப்போது மிகுந்த சினமுற்ற இந்நாட்டினர் உடலில் உயிர்ப்பொறி கடுகள வாயினும் எஞ்சி இருக்குமாகில் எல்லைப்புறக் காட்டுமிராண்டிகள் தாம் செய்த கொடுமைக்குக் கழிவிரக்கங் கொள்ளவேண்டி யிருக்கும். பெருமாட்டி! உண்மையில் நான் கவிஞன் என்ற உணர்வே எனக்கு இல்லை. ஒரு செய்யுள் இயற்ற மூளைக்கு மிகுந்த வேலை கொடுக்கவேண்டியுள்ளது. நான் உண்மையில் கவிஞனாக இருந்தால் என்ன இயற்றுவேன் உங்களுக்குத் தெரியுமா? நாட்டின் ஒரு முனையினின்றும் மற்றொரு முனைவரை கடவுள் மகன் கண்மணியாகிய உமது தூயபுகழ் எதிரொலிக்குமாறு சிறந்த பாட்டுக்களை இயற்றிவிடுவேன்; ஊழிதோறும் பாரத நாட்டில் மாதர்தம் அழகைத் தொழுமாறு அத்துணைச் சிறந்ததொரு காவியம் இயற்றிவிடுவேன். பின்னர் மாதர்தம் தூய அழகும் கடவுள் படிமமாகிய எந்த மாதும் எவராலும் இழிவு படுத்தப்பெறார். ஆனால் பெருமாட்டி! நான் கவிஞனல்லன்!''

இளவரசியின் முகம் வைகறை மல்லிகை மலர்போல மலர்ந்தது. புன்முறுவலோடு, கன்னம் மலர்ச்சியுற்றது. மின் கொடிபோல மகிழ்ச்சிக் கொடியின் வரிகள் கடைக்கண்களில் விளையாடின. நெற்றிவரிகள் மறைந்தன. அது எட்டாம் பிறைபோலப் பொலிவுற்றது. அசோக இளந்தளிரெனச் செவ்விதழ்கள் அழகாக அசையத் தொடங்கின. உறுதியுடன் கூடிய மகிழ்ச்சியுற்றவளாய்க் கூறினாள்: ''நீ கவிஞன் இல்லை என யார் கூறுகின்றான், பட்ட? செய்யுள் இயற்றுவதுதான் கவிதையோ? இடையறாத தூய எண்ணம் பூண்டுள்ளமையால் உனதுள்ளம் குற்றமற்றது; வழுவும் வடுவும் நீங்கியது; நல் லொழுக்கமுள்ள உன்னுள்ளம் நாமகள் உறைவிடமாக அமைந் துள்ளது. உன்னிதழ்களினின்றும் சொற்பொழிவு தூய்மை யாகிய கங்கைப் பொழிவுபோன்று பொழியாநின்றது. நீ கவிஞன் அல்ல என எவன் உரைத்தான்? ஆற்றல் பொருந்திய சொற்பொழிவு கறைநிறைந்த நிலத்தைத் தூயதாக்கும் நாளில்

மாந்தருக்கும் நிறை அமைதி பொருந்தும். செய்யுளே மட்டும் கவிதை எனக் கூருதே, பட்ட! எமது யவனர் இலக்கியத்தில் உரைநடை காவியத்திற்கு அன்னே எனக் கூறப்பெற் றுள்ளது. யாப்பும் அணியும் கவிதைக்கு உயிர்நிலேகள் இல்லே. கவிதைக்கு உண்மையான உயிர்நிலேகள் ஒன்பான் சுவையும், அமைந்த பொருட் சுவையுமாகும். என் சொல்லேக் கருத்தில் மறவாது இருத்துக. நீ இரண்டாம் காளிதாசன்.'' இவ்வளவு கூறியதும் இளவரசி வாயடங்கி நின்று விட்டாள்; கூற வேண்டிய அளவுக்கு மீறிக் கூறிவிட்டனள் போலும். பிறகு அவள் முகம் சற்றுச் செம்மை நிறம் ஏறப்பெற்றது. பெரிய பெரிய வலியான் குருவிக் குஞ்சுகள் வடிவம்பெற்ற கண்கள் கீழ்நோக்கத் தொடங்கின. இதழ்களில் முதலில் அரும்பிய முறுவலிப்பு மெதுவாக உள்நோக்கி ஓடத் தொடங்கிற்று. ஆனல் பட்டம்மையின் மகிழ்ச்சி மறைய முடியவில்லே. விட்டு விட்டுக் கன்னத்து இடங்கள் மலரத் தொடங்கின; கண் மலர்கள் பரந்து பூத்தன. இளவரசி தன் முகத்தில் மகிழ்ச்சியும் நாணமும் புன்முறுவலும் ஒருசேரப் பொலிந்ததால் மனங்கவரப் பெற்றேன்.

ஒரு முழுத்தம்வரை நான் தளர்ந்தவனுக நினேத்தவாறிருந் தேன். 'நீ பாரத நாட்டில் இரண்டாம் காளிதாசன்' எனக் கூறினுள். காளிதாசன் பாரத நாட்டுப் புகழ் வடிவம்போன்ற வன். ஒருமுறை எனக்கு நினேவு வந்தது; மாலினி நதிக் கரையில் கண்வமுனிவர் தவமனே இருந்தது. அவ்விடத்திய இலேகள் வேள்விப்புகையான் மங்கலாயின; மணல் செறிந்த கரையிலே ஆண் அன்னமும் பெண் அன்னமும் தன்னே மறந் திருந்தன. நீர்நிலேகளுக்குப் போகும் வழியெல்லாம் முனிவர் தம் மரவுரி சொட்டிய நீர்ச்சுவடுகள் வரிசையாகக் காணப் பெற்றன. ஆங்கு மானினங்கள் வில் நாண் ஓசையைக் கேட்டுப் பழக்கமில்லாதவை. அவ்விடத்தே இளநங்கையர் திருமுகத்தே காதல்நோக்குக் காண்டலரிது. அவர் பொம்மைத் திருமணம் செய்து இல்வாழ்க்கைச் சுவையை நுகர்ந்தனர். இவ்வமைதியான சூழ்நிலே நடுவே அழகின் படிமமும் இளமை யின் களஞ்சியமும் ஆகிய சகுந்தலே, பாசியால் சுற்றப்பெற்ற தாமரை மலர்போல மரவுரி அணிந்த சகுந்தலே வந்தது நினேவுக்கு வந்தது. இந்நினேவு காளிதாசரது சகுந்தலே எனும் நாடகத்தான் தூண்டப் பெற்றது. பின்னர் குமாரசம்பவத்தி னின்றும் சில காட்சிகள் நினேவுக்கு வந்தன. புதிதாக

வேனில் வந்தது. மலைகளுக்கு அரசு இமயமலை அழகுச்-செல்வமாகத் திகழ்கின்றது; அதன்மீது சிவபெருமான் தவம் நோற்கின்றார்; அந்நாள் கைலை மலையிடத்தே தேவதாருக் கட்டைத் தவிசின்மீது காற்றில்லாதபொழுது அசையாத தழலைப்போன்று உறுதியொடும் அசைவின்றியும் மாதேவர் அமர்ந்திருக்கின்றார்; அவர் முன்னர் தனது இளமை என்னும் பொறையால் அமிழ்த்தப்பெற்றவளாகிய பார்வதி வேனில்மலர் மாலை அணிந்திருந்தாள்; பூங்கொத்துக்களினது பொறையால் இளந்தளிர் செறிந்த கொடி வளைந்து அசைவதுபோல அவள் ஆங்குத் தோன்றினாள்; தனது கருங்குழலில் அழகுபெற அணிந்திருந்த கோங்கு மலரும் காதுகளில் செருகிய இளந்தளிர்களையும் கவனக் குறைவால் நழுவவிட்டவளாய்ச் சிவபெருமான் திருவடியிடங்கள்மீது குனிந்தாள்; அப்போது தவசியின் உள்ளம் ஒரு நொடிக்கு இளகியது; ஆதலின் அவரது பார்வை வன்மையாகப் பார்வதி முகம் நோக்கி இழுக்கப் பெற்றது. ஒரு நொடிவரை முழுவையமும் அமுதவெள்ளமாகக் காணப்பெற்றது. அழகிய மாதர்கள் சிலம்பொலி செய்யத் தம் அடிகளால் உதைக்கக் காத்திராமல் அசோகம் மலர்ந்து மலர்களைத் தூவத் தொடங்கிற்று. மகிழமரம் தன்மீது அழகிகள் தூநீர் கொப்புளித்தலுக்குக் காத்திராமல் சிலிர்ப்புற்றது. ஆனால் ஒரு நொடிக்குள்ளேயே சிவபெருமான் தம் உறுதிநிலை எய்தினார். ஆங்கு வேண்டாத தேவன் ஒருவன் தம் செயலில் உரிமையின்றித் தலையிட்டதைச் சிவபெருமான் உணர்ந்தார். காமதேவன் கரும்புவில் வளைத்து மலரம்பு பூட்டிவிடுவதற்கு இருப்பதைப் பார்த்துவிட்டார்; சினம் பொங்கிற்று; வானத்தே கடவுளர்கள் வாயெடுத்தலறி, "சினம் கொள்ளற்க, பெருமான்! சினம் கொள்ளற்க" என்று வேண்டியவாறிருக்கக் காமதேவன் வெந்து சாம்பரானான். இளம் பார்வதி தனது எல்லையற்ற அழகுச் செல்வம் பயனற்றுப் போனதை உணர்ந்து தன்மீது வெறுப்புற்றாள். தன் உடம்பழகில் இருக்கும் மலட்டுத்தன்மையைக் கொடிய தவத்தினால் உறுதியால் நோன்பினால் அவாவறுத்தலால் நீக்க முயன்றாள். காளிதாசரது குறிக்கோள்தான் என்னே! முதற்காட்சியில் காதல்மீது இடியை விழச் செய்தார்; புறவுடம்பழகின்மீது வயிரப்படையை விழச்செய்தார்; முழு இமயமலையின் சொல்லரிய அழகினைப் பயனற்றதாகச் செய்தார்; ஒன்றுமே நடைபெறவில்லை எனத் தோன்றுமாறு தன்னையே கொடையாக வழங்குதல், துறவு, நோன்பு முதலியவற்றிற்குத் திட்டமிட்டார்; குமாரசம்ப

வம் எனும் நூலின்கண் முதன் மூன்று சருக்கங்கள் வெறும் மயக்கங்களே. கவிஞருக்கும் அவற்றின்மீது பற்றேயில்லை, அவாவேயில்லை எனக் காட்டுகின்றார் போலும்; ஏனெனில் மாந்தரையும் அவர் வாழ்வையும் சிறிதும் மதிக்கவில்லை; ஒரு பொருட்டாகக் கொண்டாரில்லை. இன்னும் ஆழ்கருத்து உள்ளது; புறவழகுக்கும் அப்பால் ஒளி செய்யும் மற்றொருநலகில் ஒரு நிலைபெற்ற பண்பு உள்ளது; அஃது கவிஞரைத் தூயநலம் விளையும் நிலைக்கு அழைத்துப்போக முனைந்துள்ளது போலக் காண்கின்றது.

காளிதாசர் வையங்கவரும் பார்வதி அம்மையின் பெருமையை உள்ளத்தில் உணர்ந்துகொண்டார். கட்டுக் கடங்காத ஆடவர், எல்லைமீறிய பேராவலையும் ஆட்சிப் பேராவலையும் கொள்வது குற்றமெனக் கருதினர். பேரரசு அமைத்தல், மாபெரும் படைதிரட்டல், மடங்கள் நிருமித்தல் முதலியன ஆடவர்தம் ஒருமை நிறைவற்றனவும் எல்லை மீறியனவும் கட்டுக்கடங்காதனவும் ஆகிய பேராவல்களின் விளைவுகளே என்றார். இவற்றை ஒரு கட்டுக்குள் வைப்பவள் மாது. காளிதாசர் இம்மறையை அறிந்திருந்தார். பெருமை வாய்ந்த மாதரது ஆற்றலை இழிவுபடுத்திய பேரரசுகள் அழிவுற்றன; மடங்கள் உடைந்துபோயின; அறிவுத் திறனும் துறவுச் செருக்கும் நுரைக்குமிழி போன்று அகன்றன. இதனைக் காளிதாசர் செம்மையாக அறிந்திருந்தார். காளிதாசர் எங்கே? வாலறுந்த மாடுபோன்ற பாணபட்டன் எங்கே? இளவரசி என்னை ஆறுதல் செய்யவேண்டுமென்றே கூறினளா? அல்லது காளிதாசனை நன்றாக அறியவில்லையா? காளிதாசர் தாமறிந்த வாய்மையைத் தெளிவாகக் கூறும் வல்லமை பெற்றிருந்தார். நாமகள் அவர் நாவில் நாளும் வாழ்ந்தாள். அவர் நாமகள் தன் செல்வப்பிள்ளை. நானோ வழி தவறியவன்; தொழிலினின்றும் வழுக்கிவிழுந்தவன்; என்னை அவரோடு ஒப்பிடலாமா? எனினும் பட்டம்மை என்மீது அளவிறந்த அன்பு பூண்டிருந்தாள். என்னைப் பற்றிப் பரந்தவுள்ளம் கொண்டிருந்தாள். உள்ளத்து நினைவுகள் விடுத்துப் பட்டம்மைதன் உள்ளங்கவரும் திருமுகத்தைப் பார்க்கலானேன். அஃது பாதிரிமலர் போன்று செவ்வொளி வீசியது; அந்தச் செந்நிறம் அவரது முக அழகை ஆயிரமடங்காக்கியது. பட்டம்மை தன் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டாள். நிபுணிகை முகம் தொங்கிப் போயிற்று. ஏதோ அறிய முடியாத அச்சம் அவளை வெருட்டி

யது போலும். அவளது வெளிறிய முகம் முதுவேனில் இறுதியிலே வாடிய கொன்றைமலர்போல வாடிவிட்டது. அவள் கண்களின் கீழே நீலவரி இன்னும் கிரியதாகிவிட்டது. நான் அச்சமுற்று உசாவினேன்: "நிவுணியா! உனக்கென்ன நேர்ந்தது?" அவள் ஒன்றும் பேசாது பட்டம்மை விருப்பப்படி உள்ளே சென்ருள். அவள் பின்னுகப் பட்டம்மையும் சென்ருள்.

நிறைமதி நிலவில் கங்கைதன் தூய வெண்மணற்கரை பளபளவென ஒளி செய்தது. கங்கை ஒழுக்கு மிகு தொலைவு வரை வெள்ளிப்பொடியுடன் கூடிய பாதரசப்பொழிவெனக் காட்சியளித்தது. ஒரு திக்கின் தொடக்கத்தில் மெல்லிய நீலவரி போலக் கங்கையாறு தொடங்கி எதிரில் உள்ள திக்குமுனையிலே அதே நீலவரிபோலக் காட்சிக்கு மறைந்தவாறிருந்தது. நடுவே அசைந்தவண்ணம் இருக்கும் அலைகள் ஏணிப்படிகள்போல வரிசையாகக் காணப்பெற்றன. திங்கள் அவற்றின்மீது எதிர் நிழல் செய்து துண்டு துண்டாகிச் சிதறியது. யாவும் அமைதியாக இனிமையாக உள்ளங் கவர்வனவாகக் காணப் பட்டன. வானத்தே விண்மீன்களது சபைக்கு அரசனுகத் திகழ்ந்தது நிறை திங்கள். கீழே கங்கை நீர்ப்பரப்பில் திங்கள் நிழல் கைதேர்ந்த படகோட்டிகள் போலத் தங்கள் பற்பல உடற்பயிற்சிகளைச் செய்தவாறு இருந்தது. எனக்கெதிரே ஓசையற்ற இயற்கையகத்தே குழப்பம் செறிந்த போர் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இளவரசியின் முன்வரலாறு நினைவுக்கு வந்தது. அவள் ஊர்ந்து சென்ற பல்லக்குப் போய்க்கொண்டிருந்தது. யாவும் அமைதியுற்றிருந்தன. அவ்வமைதியின் ஆழமும் பெருமையும் அளவிடற்கரியன. திடீரென எல்லைப் புறக் காட்டுமிராண்டிகள் கூட்டம் பட்டம்மை தன் பல்லக்குமீது பாய்ந்தது. நம்பிக்கை வாய்ந்த இருநூறு போர்வீரர் ஒருவன் பின் ஒருவனுக மடிந்து விழுந்துகொண்டிருந்தனர். அப்போர் வீரர்கள் வேர்வைத் துளி நிறைந்த நெற்றியிடங்களில் பணியாமை எனும் உறுதி இருந்தது. அவர்தம் கைகளில் உருவிய வாட்கள் ஒளி செய்துகொண்டிருந்தன; தோட்கள்மீது கூரிய ஈட்டிகள் கூர்ந்தன; வெட்டி வீழ்த்திக்கொண்டு தாமே மடியும் பான்மை உள்ளத்தே இருந்தது; ஆனுல் பட்டம்மையைக் காக்க முடியவில்லையே எனும் கழிவிரக்கம் வாட்டியது. அவர் இரத்தக் குழாய்களினின்றும் செங்குருதி பீறிக்கொண்டிருந்தது. உடம்பினின்றும் சதைத் துண்டுகள் அறுந்து

விழுந்துகொண்டிருந்தன. எனினும் பாறைத் தூண்போல அகலாது தத்தம் இடங்களில் நின்றவாறு போர் செய்துகொண் டிருந்தனர். காவல் படைத்தலைவன் முதியவன் தீரநாபிதன் நம்பிக்கையிழந்த குரலினனாயினும், "மகளே! அஞ்சற்க!" என்று கூவியவாறிருந்தான். அவன் குரல் அடைபட்டிருந்தது; உள்ளம் கலவரமுற்றிருந்தது; அவன் கைகள் பகைவரை வெட்டி வீழ்த்துவதில் முனைந்திருந்தன; பேச்சுத் தழுதழுத் திருந்தது; எனினும் பட்டம்மையைப் பாதுகாக்க வேண்டு மென்ற அடங்காத அவாவிருந்தது. இளவரசிதன் தாமரை முகம் அச்சத்தினால் கருமையாகிவிட்டது. கண்கள் அச்சுறுத் துங் காட்சி காரணமாகக் கல் துண்டென அசைவற்று நின்று விட்டன; ஓசைப் பொறியாகிய செவி மந்தமாகிவிட்டது; அவள் இறுதியில் மூச்சற்று விழுந்துவிடுகின்றாள். மேற்கூறிய நினைவுகள் என் மூளையைக் கலக்கும்போது எனது ஒவ்வோர் இரத்தத் துளியும் ஒலித்தெழுந்தது. இரத்த நாளங்கள் ஒவ் வொன்றிலும் ஏதேனும் செய்துமுடித்தல் வேண்டுமென்ற துடிப்பு அலையொடும் இயங்கிற்று; ஆனால் செய்யத்தக்க தென்ன? உலகில் பட்டம்மைக்கு நேர்ந்த அதைப்போன்ற வெறுக்கக் கூடியதும் அச்சந் தரத்தக்கதும் ஆகிய காட்சி முதன் முதலில்தான் தோன்றியதெனக் கொள்ளற்க. பட்டம்மைக்கு நேர்ந்த இந்தத் துன்ப நிகழ்ச்சியோடும் இத்தகைய பழிவினைகள் நின்றுவிடும் என்று கொள்ளற்க. பாணபட்டன் எத்துணை வெறுப்புக் கொண்டால்தான் என்ன, இந்த இழிவான செயல்கள் உலகில் அடிக்கடி நிகழத்தான் செய்யும். செயற்கரிய செய்த பெரியார்கள் இடையறாது இரக்கம் அருள் நட்பு முதலியன வற்றைப் பற்றி அறிவுரை கூறி எழுதிப் போந்தனர். அவர்தம் முயற்சி வெற்றியுறவில்லை. நம்பிக்கை இழந்து குரல் தழு தழுத்தேன். என்ன, மாதர் தம்மை இழிவு செய்யும் இத்தீய ஆவல் என்றேனும் ஒழியுமா? வையத்தே விலைமதித்தற்கரிய மாதர் சமூகம் இழிவுறுத்தப்படுதல் நடந்தேறத்தான் செய்யுமா? அரசாங்கம் இருக்கும்வரை, நாடுகளைப் பிடிக்கும் ஆவல் இருக் கும்வரை, மாபெரும் படைகளைத் திரட்டும் குறிக்கோள் இருக் கும்வரை, செருக்கும் இறுமாப்பும் பொங்கும்வரை மாதரைப் பழிக்கும் இழிதகைமை நடந்தேறத்தான் செய்யும். மாந்தர் சமூ கத்தில் வன்மைபுரியும் அரசும், கொடுமை செய்யும் படைஞர்க் கூட்டமும், செல்வச் செருக்கும், ஆவலும் என்றாவது இல்லாத காலம் இருக்குமா? வருமா? இவ்வினாக்களுக்கு விடைதர

என்னுல் இயலவில்லே. இதே நேரம் சற்றுத் திரும்பிப் பார்த்தேன். நிபுணிகை ஆங்கு நின்றுகொண்டிருந்தாள். இப்போது அவள் இயல்பான நிலேயை அடைந்துவிட்டாள். புன்முறுவல் செய்தவளாய்ப் புகன்ருள் : "ஒரு செய்தி சொல்லட்டுமா, பட்ட ? நான் உன் நாடகக் குழுவை விடுத்து நடந்தேகிய நான்காம் நாளன்று உன்னே உச்சயினியிலே கண்டேன்." முகவுரையின்றியே முன் நிகழ்ந்தன பற்றிச் சுட்டினளே, இதன் பொருள் என்னவென அறியேன் ; ஆனுல் உச்சயினியில் அவன் என்னே மீண்டும் கண்டனள் என்பதுதான் வியப்புறத்தக்கதாக இருந்தது. நான் ஊக்கமுடன் வினவினேன் : "என்ன சொல்கின்றனே ? நிவுனியா, என்னே உச்சயினியில் மீண்டும் கண்டனேயா ?"

"ஆம், பட்ட ! நான் உன்னே உச்சயினியில் மீண்டும் கண்டேன். சாருவிலிகள் கள்தேறல் கடையில் கடைசியில் நீ என்னேத் தேடிச் சென்றனே."

சாருவிலிகள் கள்தேறற் கடையிலா ? உச்சயினியில் மண்ணகல் விளக்குகளால் மங்கிய ஒளி செய்யப்பெற்ற—மக்கள் நெருக்கமுள்ள அந்நகரப் பகுதியும், அதன் நடுவே இருந்த நாற்றக் கள்தேறல் குடிசையும் ஒரே நேரத்தில் நினைவுக்கு வந்தன ; ஆங்குக் குடியர், வெறியர், பிறர்மனே நயந்தோர், சூதாட்டயர்வோர், கள்ளர்கள், வட்டாட்டினர், இன்னேரன்ன பிற இழிதகைக் கயவர்களது புகலிடமாக அஃது இருந்தது. ஆங்கு மாதரை விற்றனர், வாங்கினர். நகரத்துக் கயவர்கள் நகைவேழம்பர்கள் விலேமகளிரை நச்சினவர் தங்குமிடமாக இருந்தது. நிபுணிகை இந்தத் தீயவர் பிடிக்குள் பட்டனளோ என ஐயமுற்றேன். தடிதாங்கிய சில ஆட்களுடன் அந்த நரகக் குழிக்குள் சென்று தேடினேன் ; அஃது தீநாற்றத்திற்கிருப்பிடம், தீ நடத்தைக்குப் புகலிடம், விலேமகளிரை நயத்தலுக்கு வாழிடம். அதே இடத்தில் நிபுணிகை என்னேக் கண்டாளாம் ! நான் வியப்போடு உசாவினேன் : "நீ ஆங்கு எப்படிச் சென்றனே ?"

"நான் குடியர்களுக்குக் கிண்ணம் நிரப்பும் வேலே செய்துகொண்டிருந்தேன்."

"இதே வடிவத்திலா ?"

'இல்லே, ஆண் வேடத்தில் !"

"உன் விருப்பப்படி சென்றனேயா நிவுனியா ?"

"ஆம் பட்ட ! என் விருப்பினுலேயே ஒரு நாளேக்கு

ஊழியம் புரியச் சென்றேன். கூலி பெருமலேயே அவ்விடத்தினின்றும் ஓடிப்போய்விட்டேன்.'' நான் வியப்போடும் அவள் முகத்தைப் பார்த்தவாறிருந்தேன். அவள் புன்னகை புரிந்து புகன்ருள்: ''உனக்குப் புரியாது பட்ட! புரியுமாறு புகல்கின்றேன், கேள்!'' எனத் தன் வரலாற்றைத் தொடங்கினுள்: ''பட்ட, உனக்குத் தெரியாது, உன் நாடக மாதர்கள் காப்பு இல்லத்திற்குள்ளேயே இருப்பார்கள் என நினைத்திருந்தனை; அவர்கள் நற்குடிநங்கையர் எனவும் எண்ணி இருந்தனை. ஆனுல் அவர்கள் சாருவிலிகள் தேறல்மனையை அறிந்திருந்தனர். உன்னைவிட்டுப் பிரிந்து நான் ஓடிவிட்ட கெட்ட நாள் அன்று சாருவிலிகளது கள்தேறல்மனை மூடப்பெற்றிருந்தது. அவர்கள் அனைவோரும் உனது நாடகம் பார்க்க வந்திருத்தனர். நான் நாடகப் புனைவோடேயே ஓடிவிட்டேன். மிகுநேரம்வரை நான் உச்சயினி நகரத் தெருக்களில் குறிக்கோளின்றித் திரிந்தவாறு இருந்தேன். அந்த இரவில் உச்சயினி நகர ஆடவர் அரிவையர் அனைவரும் உனது நாடகம் பார்க்க வந்திருந்தனர். சாளரங்கள், கதவுகள் சார்த்தப்பெற்றிருந்தன. மாடிகள் தம் நிலைப்படிகள் மக்கள் காலடிபடாமல் பாழ்பட்டிருந்தன. முற்றங்களில் மக்கள் நடமாட்டம் இல்லை. தெருவில் இங்குமங்கும் அரசாங்க விளக்குகள் இருளை அகற்றும் முயற்சியில் தோல்வியுற்றன. இரண்டொரு முழுத்தங்கள்வரை எங்குச் செல்வது என்ன செய்வது என முடிவு செய்வதில் உறுதியில்லாதவளாக இருந்தேன். என் உள்ளம் வன்மையாக வீழ்த்தப்பெற்றிருந்தது. நான் வெட்கத்தால், நம்பிக்கையில்லாமையால், துயரத்தால், குறிக்கோள் தோல்வியால் பைத்தியம் கொண்டவளானேன். எத்துணை அறிவற்ற செயலைச் செய்துவிட்டேன் என இன்று நினைக்கின்றேன். திரிந்துதிரிந்து பெரிதும் களைத்துப்போனேன்; திரும்பிவந்து உன்னையே புகலிடமாக அடையலாம் என நினைத்தேன். நீ கட்டாயம் பொறுத்தருள்வாய், எனது நடத்தையை மறந்துவிடுவாய், பரந்த உள்ளத்தால் எனக்கடைக்கலமும் அருள்வாய் எனவும் நினைத்தேன். ஆனுல் எனது ஊழ் என் திறத்துச் சினமுற்றிருந்தது. நான் மேலே நடந்தேன். எங்குப் போகின்றேன் என்ற உணர்வு இல்லாதிருந்தேன். இப்படியும் அப்படியுமாகத் திரிந்து ஓர் அரண்மனையை அடைந்தேன். அஃதொருவேளை மன்னர் மன்னன்தன் ஒரு பெரிய அலுவலாளனது இல்லமாக இருக்கலாம் எனக் கருதினேன். அதனுள்ளே விளக்கு வரிசைகள் ஒளி செய்துகொண்டிருந்தன.

உள்ளே நாலைந்து பணிப்பெண்கள் இருந்தனர். புறத்தே யாரும் இல்லை. என்ன இவ்விடத்தில் இவ்விரவு நான் தங்க இசைவார்களா என நினைத்துக்கொண்டிருந்தேன். இதே நேரம் நான் நின்றவிடத்தே ஒரு குழப்பமெழுந்தது. கரும்பூதங்கள் போன்ற இரு மனிதமாக்கள் சுவர்த்துளை நின்றும் கிளம்பக் கண்டேன். எண்ணெயும் மையும் குழைத்து உடம்பில் பூசி யிருந்தனர். கோவணமே உடுத்தியிருந்தனர். புறத்தே வந்ததும் ஏதோ பொருட்களை எடுத்துத் தாங்கலாயினர். அவர் களைக் கண்டதுமே வீறிட்டலறினேன், தடாமெனத் தரையில் விழுந்தேன். என் கூச்சலைக் கேட்டதும் அவர்கள் கைப்பொருட் களை அப்படியே போட்டுவிட்டு ஓடோடிவிட்டனர். ஓட்டத்தில் தம்மை யாரும் வெல்ல முடியாதென்பவர்போல ஒரு நொடிக்குள் இருட்டில் மறைந்துவிட்டனர். அப்போது உனது நாடகம் முடிந்துவிட்டிருக்கும். நான் கீழே விழுந்ததும், நகர நற்பெயர் பெற்றவளும் அழகிலும் அணியிலும் மிக்கவளும் ஆகிய விலை மகள் மதனச்செல்வியின் வண்டி அங்கு வந்து நின்றது. அவளுடன் வந்த பணிப்பெண்டிர் என்னைக் கண்டு அஞ்சிக் கூச்சலிட்டனர். அவள் வண்டியை விட்டிறங்கி என்னை அங்கையால் அணைத்தெடுத்தாள். தீவர்த்தியால் ஒரு பணிப் பெண் என்னைக் கண்டதும் வியப்பினால் அலறினாள். நான் அப்போது உணர்வு மீண்ட நிலையில்தான் இருந்தேன். ஆனால் எனது நாடி மெதுவாக இயங்கிக்கொண்டிருந்தது. வெட்கத்தால் அச்சத்தால் உடம்பு அசைவற்றிருந்தது. எனது வேடம் கண்டு மதனச்செல்வி அடையாளந் தெரிந்துகொண்டாள். வியப்பும் ஊக்கமும்கொண்டு கூறினாள்: "இவளே பாணபட்டன்தன் நடிகை!" பின்னர் மிகுந்த அன்போடும் என் தலையைத் தடவிக் கொடுத்து இகழ்ச்சிக் குறிப்புக்கொண்ட சொற்கள் சொன்னாள்: "எங்கு வந்தனை தோழீ? இதே வேடத்தில் காதலனைத் தேடி வந்தனையோ? இந்த ஆழிருட்டில் தேடிவந்த அந்தப் பேறு பெற்ற ஆள் ஆரடி? அவன் இரக்கமற்றவன் காண்! அவன் இரக்கமற்றவன்!" நான் அவளை மதனச்செல்வி என அறிந்து கொண்டேன். நகைத்து நவின்றேன்: "என் காதலன் எமனடி, தோழீ!" மதனச்செல்வி என் தவடைமீது மெல்லியதோர் அடி வைத்து "சீச்சீ! எளியை, இவ்விதம் நீ இயம்பலாமா? எழுந்திரு." நான் எழுந்ததும் என் ஆடையில் அகப்பட்டிருந்த தொரு முடிச்சு விழுந்தது. அதனுள் இருந்த பொருட்கள் தெருவிலேயே சிதறின. முடிச்சுக்குள் செம்பஞ்சுக் குழம்பு,

அரக்குநிறம், மனேசிலை, பொன்னரிதாரம் சாதிலிங்கச் செந்தூரம், இரத்தினச் சுண்ணம் வைக்கப்பெற்றிருந்தன. அவை யாவும் மதனச்செல்விதன் ஓவியத் தொழிற்பொருட்கள். பட்ட! மாகாலன் கோவிலிலே மனித உயரத்தில் சிவபெருமான் பார்வதி இவர்கள் நிறந்தீட்டிய ஓவியங்களை கண்டிருக்கின்றனை. அவை மனேசிலையும் இரத்தினச்சுண்ணமும் கலந்த நிறத்தால் தீட்டப்பெற்றவை; ஆதலின் அவை அற்புதக்கலைப் படைப்புக்களாகக் காட்சியளிக்கின்றன. இக்கலப்பு நிற மேன்மையை மதனச்செல்வி அறிந்திருந்தாள். மனேசிலைப்பொடியுடன் மெழுகுங்கலந்துவிட்டால் மிகமிகச் சிறந்த ஒளி உண்டாகின்றது. அந்த முடிச்சுக் கண்டு மதனச்செல்வி கண்ட வியப்புக்கு அளவேயில்லை. நான் அஞ்சி இருத்தலைக் கண்டு தன் ஊர்தியைப் பார்த்தே திடுக்கிட்டேன் என நினைத்தாள். நான் திருடர்கள் செய்தி உரைத்தபோது அஞ்சிச் சுவர்க் கன்னத் துளையை உடனே கவனித்தாள். ஓவியப்பொருள் முடிச்சோடும் அவள் தன் ஒப்பனைப் பேழையும் ஆங்கிருத்தலைக் கண்டு மிக வெருண்டு உருக்குலைத்து உரக்கக் கூச்சலிட்டாள்: "தோழீ! நான் முற்றிலும் கொள்ளைபோனேன்." ஆனல் கவனமாகப் பார்த்தபோது ஒரு பொருளும் திருடுபோகவில்லை என்றுணர்ந்து என்னைக் காதலோடும் அணைத்துக்கொண்டாள். மீண்டும் என்னிடம் கூறினள்: "நீங்களனைவரும் பாணபட்டன் குழுவிலே நற்குடி மாந்தர்கள் காப்பு இல்லத்தில் உறைபவர்கள். இங்கு ஓரிரவு தங்குவாயா நீ?" நான் என்ன சொல்லுவேன் பட்ட, அவள் உன் பெயரைக் குத்தலாக உச்சரித்தாள். அது கேட்டுச் சினம் பொங்கப்பெற்றேன்; நாணம் மிகக்கொண்டேன். அவள் கூறிய மொழிகளின் பொருள் நீ உணரமாட்டாய். அழுக்கு நிறைந்ததொரு மனம் உன்மீது பொய் நிறைந்த குற்றச்சாட்டுச் சாட்டியது. என்மீதே வெறுப்புற்றேன்; ஏனெனில் இன்னும் அவளென்னைக் காதலனைத் தேடியலையும் மாதெனவே நினைத்திருந்தாள்; எனக்குச் சினமூட்டவே இவ்வாறு கூறினள். நான் அமைதியோடும் சொன்னேன்: "என்னைப்போன்ற பேறிழந்தவர்களைக் கண்டு பாணபட்டனை இழிவுபடுத்தாதே. எனக்கு அங்கு மீண்டும் போகும் எண்ணமில்லை." அவள் என் சொல் கேட்டுத் திடுக்கிட்டாள். பின்னர் அவள் என் கைப்பற்றிச் சொன்னள்: "வா, உள்ளே போகலாம்." நான் மதனச்செல்விதன் மாளிகைக்குள் நுழைந்தேன். என்னை முதலில் பாணபட்டன் குழுவிலே நற்குடிமாது எனக் குத்தலாகக் கூறிய

விலைமகள் இல்லத்துள் புகுவதன் முன்னம் உயிர் விட்டிருக்க வேண்டும். பட்ட! நான் உன் தூய பெயரைக் கெடுத்தேன். நான் மாபெருங் குற்றவாளி.''

இவ்வளவுங்கூறி நிபுணிகை மண்டியிட்டு வணங்கினுள். நான் குழப்பமுற்று நின்றேன். நிபுணிகை விவரித்த சொற்களின் உட்கிடக்கை உணரமுடியவில்லை. அவள் அமைதியொடும் சொன்னுள்: ''அமர்க பட்ட, இன்னும் சற்றுக்கேள்.'' நான் அமர்ந்தேன். நிபுணிகை முகம் மலர்ந்தது. ஒரு நொடிப் பொழுதில் வான்புயலினின்றும் விடுபெற்ற திங்கள்போலவும், பாசியினின்றும் விடுபெற்ற தாமரைபோலவும், பாசி நீங்கப் பெற்ற பொய்கைபோலவும், மூடுபனி விலகிய திசையிடங்கள் போலவும் அவள் முகம் ஒளியும் உவகையும் பெற்று மிளிர்ந்தது. அவள் நெஞ்சத்தில் குத்தி நுழைந்த வேற்படை விலகியது போன்றும் மார்பில் சொருகப்பெற்ற ஆணி அகன்றது போலவும் தோன்றினுள். அவள் கூறினுள்: ''மதனச்செல்விதன் மாளிகை மிகப் பெரியது. அதன் வாயில்கள் பற்பல மலர் மாலைகள் கொண்டு ஒப்பனைசெய்யப்பெற்றிருந்தன. கிளிகளுக்கென நாகணங்களுக்கு எனப் பூவைகளுக்கென மைனுக்களுக்கென மயில்களுக்கெனத் தனித்தனி அறைகளும் கூடுகளும் இருந்தன. குதிரைகள் எருதுகள் ஆடுகள் முதலிய வீட்டு விலங்குகளுக்கெனத் தனித்தனித் தொழுவங்கள் இருந்தன. நகரமாந்தர் ஒய்வெடுக்கவும் இசை நாட்டியங்கள் கண்டு களிக்கவும் தனித்தனி அரங்குகள் இருந்தன; களிப்புப் பூங்காவில் நகரவணிகப் பெருமக்கள் பிள்ளைகள் பூவிரிப்பு இட்டு அமரும் பன்மேடைகள் இருந்தன. அவள் தம் விளையாட்டுப் பொய்கைகளில் வாழும் அன்னங்களுக்கும் சக்கரவாளங்களுக்கும் தாமரை நாளங்களை ஊட்டும் பேற்றினைப் பெற நகரப்பெருங்குடி மக்கள் போட்டியிட்டனர். மதனச்செல்வி தனது செல்வச் செருக்கால் அழகுப்பெருமிதத்தால் உன்னைப் பற்றித் தகாதன உரைத்தாள்; ஆனல் அவள் எளியவள்; அது அவள் குற்றமன்று. ஆடவனை அவள் கண்டறியாதவள். தன்னிடம் வரும் காமுகர்களை, விலைமகளிரை நச்சினுரை, பிறர்மனை நயந்தாரை, பெண் வழிச் சேர்ந்தாரை, புலன்களுக்கடிமையானவரைப் பார்த்திருக்கின்ருள். மனிதத் தன்மையை இழந்தவர்களையே அவள் அறிந்திருந்தாள்; அவர்களிடையே உயர் பண்பினனுகிய ஆடவனை அவள் எப்படிப் பார்க்க முடியும்? அவள் செருக்கோடும் உரைத்தாள்: ''உன் பாணபட்டனைப் போன்ருர்

நூற்றுக்கணக்கானவர் என் அடிகளை நக்குவதற்கு வருகின்றனர் தோழீ !'' அவள்மீது சற்றும் சினங்கொள்ள முடியவில்லை. பொருட்படுத்தாச் சிரிப்புச் சிரித்து அமைந்துவிட்டேன். மறு நாள் சீனப்பட்டாடை அணிந்து, கழுத்தில் இரத்தின மணிமாலை அணிந்து, கன்னத்தின்மீது மணச்சுண்ணம் பூசிக்கொண்டு, மலரடிகளுக்குச் செம்பஞ்சுக் குழம்பு தடவிக்கொண்டு, மலர்க் கொத்துப்போல மெல்லிய தோலாலியன்ற செருப்பணிந்து கொண்டு உன்னைக் காணப்புறப்பட்டாள். என் உள்ளம் சற்றே கலங்கிற்று. இவ்வளவு சொன்ன பிறகு நிபுணிகை நாண முற்ருள்; மீண்டும் செம்மையுற்றுக் கூறினுள்: "உனக்கு நினை விருக்கிறதா, பட்ட! மறுநாள் உன்னைக் காணவந்தாளே மதனச்செல்வி ?''

நான் அந்நிகழ்ச்சியை மறந்தேபோனேன். நிபுணிகை நினைவூட்டிய பின்னர் நகரத்துச் சிறந்த விலைமகள் மதனச் செல்விதன் மணிவடிவம் மனத்திரைக்கண் திடீரெனத் தோன்றி யது. அந்நாள் நிபுணிகையைப் பற்றிப் பெரிதும் கவலை கொண்டிருந்தேன். அந்நேரம் ஒரு தொழும்பன் என்னை அணுகி மதனச்செல்வி நேற்றைய நாடக வெற்றிக்காகப் பாராட்டுக் கூற வந்திருக்கின்ருள் என்ற செய்தி அறிவித்தான். அவளும் வந்தாள். அவளை வரவேற்றேன். அவளிடத்தே நற் குடி மகள் அழகைக் கண்டேன்; உடன் கவிதைபோன்ற பேரழ கொளியையும் கண்டேன். மலரடிகளுக்குச் செம்பஞ்சுக் குழம்பு பூசி இருந்தாள் என்று நன்ருக நினைவிருக்கிறது. ஏனெனில் தளமிட்ட தரையில் தாமரை அடிகள்வைத்தபோது அவற்றி னின்றும் பவழமணிதன் செவ்வொளி ஒழுக்குப் பொழிந்ததை வியப்பொடும் கண்டேன்; தரை முழுதும் செம்மணிச் செங் கதிர் ஒளி பரந்து படிந்ததுபோன்ற அழகு உண்டாயிற்று. சீனப்பட்டுப் புடவை ஓரமும் செவ்வொளியால் கவ்வப்பெற்றது. ஆங்குச் செவ்வலைகள் அலைந்தது கண்டு மகிழ்ந்தேன். அடிகள் தன் செங்கதிர் அழகை இனிய சிலம்பொலி மிகச் செய்தது. அவள் பூண்டிருந்த இரத்தின மாலையை நான் பொருட்படுத்த வில்லை. சீனப்பட்டுப் புடவையினின்றும் வெளிக்கிளம்பி அழகைப் பொழிந்துகொண்டிருந்த இருதோள்களும் இளங் கமுகமரங்களைத் தோற்கடித்தன. மெல்லிய சுறுசுறுப்பான விரல் களது நகவொளி கண்களுக்கு இனிமை தந்தது. அவள் கன்னம் இரத்தமேறிய சிவப்பொளி மாணிக்கக் கிண்ணவடிவத்தை நினை வூட்டியது. அவள் பரந்த இருகண்களும் நூற்றிதழ்த் தாமரையில்

சிக்குண்ட வண்டுகள்போலக் காணப்பெற்றன. மதஞ்செறிந்த இளங்களிற்றினது மதநீரொழுக்குப்போலப் புருவக்கொடிகள் சிற்றலைகளென அசைவது மனத்தைக் கவருங் காட்சியாக இருந்தது. எட்டாம் பிறைத் திங்கள் வடிவத்தை மங்கச் செய்யும் நெற்றி நடுவே மனோசிலைச் செம்பொட்டுக் காதல் தன் விளக்குப் போல எரிந்துகொண்டிருந்தது. அவள் தம் தோள்கள்மீது பூந்தாது மணப்பொடி பூசியிருந்தாள்; பூச்சின் சில பொடிகள் பறந்து மேலே சென்று மாணிக்கக் குழைகள்மீது படிந் திருந்தன; அஃது செவிக்குழைகளாகிய கருங்குவளை மலர்களி னின்றும் பொழியும் தேனொழுக்கின்மீது தாமரைப் பூந்தாது மிதந்த காட்சியை அளித்தது. அவள்தன் நெற்றி முனையில் எழும் மயிர்முடி நெற்றியாகிய மாணிக்க ஒளியால் கழுவப் பெற்று மாலைச்செக்கர் வானத்தை நினைவூட்டிக் காட்சியாளர் உள்ளத்தை வன்மையோடு கவர்ந்தது. ஒரு சிறந்த வெறி யொழுக்கமும் தோற்றப் பொருட்களைக் கலக்குவது போன் றிருந்தது. அவள் புன்னகையில் இளநகை எளிமையும் பிள்ளைமையும் தவழ்ந்தன. ஒரு நொடிப் பொழுதுவரை, துய ரான் அயர்ந்த என்னுள்ளமும் தாமரை நிறப்பாவையது காட்சி கண்டு சற்று அயர்வு அகற்றி ஆறுதலடைந்தது. அவளொடும் சிறிது நேரமே பேச்சு நிகழ்ந்திருக்கும். ஏதேதோ பேசினும் மீண்டும் நிபுணிகை தொலைந்துவிட்ட செய்தியே என் நாவில் வந்தவாறிருந்தது; ஆனால் அவளோ ஓவியம் சிற்பநூல் முதலிய அழகிய கலைகளைப்பற்றிப் பேசவிரும்பினாள். என்னுள் ளத்தே நிபுணிகை போனபின்னர் அழகுணர்ச்சியே ஒழிந்ததே. மதனச்செல்விதன் விருப்பத்தினை நிறைவுறச் செய்யமுடியுமா? அவள் எழுந்து வந்தவழியே போய்விட்டாள்; சில நொடிகளுக் குள் அவள் வந்த செய்தியே நினைவினின்றும் அகன்றது. ஒரு நொடிப்போதுவரைக்குமே மின்னி மறையும் மின்கொடிபோன்று, மறந்தும் எப்போதேனும் நினைத்துக்கொள்ளத்தக்க ஒரு சிற்றொளியைவிட்டு மதனச்செல்வி மறைந்தாள். அவள் எனது மனநிலையைப் பொருட்படுத்தவில்லை; நானோ அவளைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. காரணம் யாதெனில் உள்ளத்து நெருப்பைத் தணிக்கும் வழியை ஆராய்ந்து கொண்டிருந்தேன்.

நிபுணிகை கூறினாள்: "அவள் திரும்பி வந்தாள். என்ன சொல்லப் போகின்றேன்! திரும்பி வந்தவள் முகம் தொங்கி விட்டது. மாதர் தம்மை உயர்வு செய்து ஆனால் அவரடி

பணியாத அத்தகைய ஆடவனை மதனச்செல்வி தன் வாழ்க்கையில் முதன்முதலாகக் கண்டாள். அவள் உலர்ந்த நகைப்போடும் நவின்ருள் : "பாணபட்டன் மனிதன் இல்லையடி தோழீ!" நான் செருக்கோடும் செப்பினேன் : "அவன் தேவனடி தோழீ!" "பட்ட ! நானுன் பெயருக்கு மாசு கருதினேன் ; ஆனால் நீ என் மானம் காத்தனை. நான் அவள்முன் பெருமிதத்தோடும் தலைநிமிர்ந்து நடந்தேன். தீவினை கொண்ட அந்தக் கங்குலின் முழுத்துயரத்தையும் அடக்க என்னால் முடிந்தது. அன்று முதல் நான் எலும்பு இரத்தங்களிலும் உயர்ந்தவள் என்ற நம்பிக்கை பூண்டேன். பட்ட ! நீ என்னை விடுதலை செய்தனை. பேதைமை என்னும் அடிமைத்தளையினின்றும் விடுபெற உதவி செய்தனை உன்னையும் அறியாமல்."

வியப்போடும் நிபுணிகைதன் பேச்சுக் கேட்டுக்கொண்டிருந்தேன். மேலும் உறுதிபூணுதல் அரிதாயிற்று. "நான் தேவனுகை இருக்கலாம் ; அதனையறியும் தேவை இப்போதென்ன? உண்மைச் செய்தி என்ன அதனை அறிவிப்பாயாக. இத்துணை பெரிய வரலாற்றிற்கு இன்று பயனென்ன?" என்று வினவியதற்கு மனமுடைந்த பான்மையில் நிபுணிகை கூறினுள் : "இக்கதையினை நீ மதிக்காமலிருக்கலாம் ; ஆனால் இதை என் முழுவாழ்க்கைச் செல்வமாகக் கொண்டுள்ளேன். கழுத்துவரை பாவச் சேற்றில் முழுகியவளுக்கு வேறு என்ன செல்வம் இருக்கப் போகிறது?" நான் அன்போடும் விடையிறுத்தேன் : "இல்லை நிவுனியா, உன் வரலாற்றுக்கு மதிப்புத் தந்துள்ளேன் ; முழு விவரமும் அறிய விரும்புகின்றேன். நீ என்வயின் காணும் மேன்மைகளை நான் காணமுடியவில்லை. புரிந்துகொள்ளவும் முடியவில்லை. நீ கூறுவனவற்றிற்கு மதிப்பு ஏன் இல்லை? உண்டு, உண்மையே, ஆனால் பயனென்ன கூறுக."

ஆனால் நிபுணிகை யாவற்றையும் ஒன்றும் விடாமல் கூற விரும்பினாள் ; அவளைத் தடுத்தல் தக்கதல்லவெனத் தோன்றியது. அப்படித் தடுத்தலால் துயர உள்ளத்தில் ஏற்பட்ட புண்ணில் உப்புச் சொரிந்ததுபோலாகும். ஒருமுறை அவள் உள்ளத்தில் புண்ணுண்டாக்கியதால் எனக்கெத்துணை துயரமும் கவலையும் உண்டாயின ! அதனை மீண்டும் இயற்ற இயல்கிலேன். அவள் மீண்டும் தொடங்கினாள், நான் என்னைச் செம்மைப்படுத்தியவனாய் அமர்ந்திருந்தேன் : "நீ நம்ப மாட்டாய், பட்ட ! மதனச் செல்வி மீளமுடியாதபடி வீழ்த்தப் பெற்ருள் ; தோற்கடிக்கப் பெற்ருள்." இவ்வளவு கூறி நிபுணிகை

தம் கண்கள் கீழே நோக்கின; நின்று நின்று அவள் நகைத்தவா றிருந்தாள்: "சொல்லட்டுமா, பட்ட! ஒரு நாள் மதனக் செல்விதன் களிப்புப்பூங்காவில் உலாவப் போனேன். அப் பூங்காவினது கீழ்ப்பால் அசோக மரங்கள் மகிழ மரங்கள் நிழ லின் கீழே குருக்கத்திக்கொடி மனை யொன்றிருந்தது. அதன் நாற்பாலும் வாடாக்குறிஞ்சிச் செடிகள் இருந்தன. அந்தத் தனியிடத்தில் வியப்பூறக் கண்டேன். நகரவிலைமகளிரிற் சிறந்த மதனச்செல்வி அமைதியாக அமர்ந்து ஓவியம் தீட்டிக்கொண் டிருந்தாள். உள்ளம் ஒருமுகப்பட்டு ஓவியத்தில் ஈடுபட் டிருந்தது. மேலாடை உடம்பை விட்டகன்றிருந்தது. மூலைக் கச்சுத் தளர்ந்திருந்தது. இமைகள் அசையாமலிருந்தன; அவையும் கவலையுற்றிருந்தனபோலும். விரல்கள் தெளிவாக உணர்வோடு அசைந்தவாறிருந்தன. பவழ மணிபோன்ற இதழ் களில் மஞ்சேசிலைத்தூளும் இரத்தினப்பொடியும் படிந்திருந்தன. அப்போது மரஞ்செடிகொடிகளும் அமைதிகொண்டு ஏதோ ஆழ் நிலையில் ஆழ்ந்திருந்தன; என்ன துன்புற்றனவோ? பறவை களும் கிளைகளில் பாடாமல் இருந்தன; அவையும் காதலில் தோல்வியுற்றனபோலும். செந்தளிர்களும் அசையாமல் இருந் தன. நான் ஓசை செய்யாமல் அடிமேல் அடி வைத்துச் சென்று அவள் பின்னால் அண்மையில் நின்றுகொண்டேன்; மூச்சடக்கிக் கொண்டு பேசாமல் அவள்தன் ஓவியத்திறனைக் கண்டவண்ணம் இருந்தேன். முழு ஓவியத்தினையும் நீலத்திரையால் மூடியிருந் தாள். காலடிவிரல்கள்மட்டும் முற்றுப்பெறுமல் இருந்தன. அவற்றின்மீது மிகுந்த ஆழ்ந்த கவனத்தோடும் நிறமேற்றிக் கொண்டிருந்தாள். ஓவியம் நிறைவுற்றதும் அழகிய அவிநயத் துடன் திரையை அகற்றினுள். நான் வியப்பினுல் திடுக்கிட்டு நின்றுவிட்டேன். பட்ட! அது யார் ஓவியம் தெரியுமா உனக்கு? உன் ஓவியமே!"

நான் சிரித்து உரைத்தேன்: "நிவுனியா! துர்க்கை மன்றத்தே எள்ளி நகையாடப் பூசாரிக்கிழவன் கிடைத்தான். அதன் பிறகு இங்கு நான் உனக்குக் கிடைத்தேன்போலும்!" நிபுணிகை தலையை உயர்த்தினுள். அவள் சிரித்துக் கொண் டிருந்தாள். அவள் கண்கள் அடிக்கடிக் கீழ்நோக்கியவாறிருந் தன. அடிக்கடி மேலே நோக்க முயன்ருள். நகைப்பின் தூய்மை அவள் தலையை மேலே நோக்க வற்புறுத்தியது; ஆனுல் சுவைநுகர்ச்சி நாணத்தைத் தூண்டி அதனைக் கீழே நோக்கச் செய்தது. கடைக்கண்பார்வை செலுத்தியவுளாய்ச்

செப்பினள் : "ஆனல் உண்மையை இன்னும் விள்ளவில்லை !" இப்போது தலைகுனிந்தவாறு நெடுநேரம் சிரித்தவாறிருந்தாள். பின்னர் உறுதிபூண்டு உரைத்தாள் : "பட்ட, அவள் அங்கையில் வேர்வைத்துளிகள் அரும்பி இருந்தன. ஓவியத்தின் மீது இரண்டொரு கண்ணீர்த்துளிகள் விழவும் செய்தன!" இது இவள் புனைந்த கதை ; நிபுணிகை தம் கண்களே நீரைப்பொழிந்து என் ஐயத்திற்குச் சான்ருக இருந்தன. சொன்னேன் : "என்ன, அவை பொறப்பின் பண்பினல் தூண்டப்பெற்ற வேர்வைத் துளிகளாக இருக்குமா?" இப்பொழுது நிபுணிகை உரக்கச் சிரிக்கலானுள் ; அவள் கண்கள் என்னை நோக்கவில்லை ; முன்ருனை கண்களைத் துடைக்கச் சென்றது. சிறிது நேரம் பொறுத்துக் கூறினள் : "நான் பின்னல் இருந்தவாறு தும்மினேன். விலைமகள் என்னைப் பார்த்து வெட்கமுற்ருள். பட்ட ! நாணமேறிய அவள் முகம் மிக அழகாக இருந்தது. நீ பார்த்திருந்தால் கவிதை தீட்டிவிட்டிருப்பாய்." நானும் புன்னகை பூத்தவளாய் வினவினேன் : "தோழீ ! பேறுபெற்ற அந்த ஆடவன் ஆரடி? அவனது வடிவத்தை இவ்வளவு அழகாகத் தீட்டினை." வெட்கமும் காதலும் சேர்ந்து விட்டால் வரைவின் மகளிர் வாயடங்கார். அவள் முறுவலித்து மொழிந்தாள் : "உன் தேவனது ஓவியமடி!" ஓவியப்பலகையை என்னிடம் ஒப்படைத்தாள். நான் இரண்டாம் நாள் அதைத் திருடிக்கொண்டு வெளியேறி விட்டேன்."

சிறிது நேரம் பேசாமலிருந்து, "நான் இன்னும் பன்ஞட்கள்வரை உயிர்த்திருக்கமாட்டேன் ; சின்ஞட்களுக்கு விருந்தாளி. நீ என் இறுதி வேண்டுகோளைக் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும்." நிபுணிகை தன் வரலாற்றினை இவ்விதம் முடித்தல் கண்டு நடுநடுங்கிப் போனேன். "நிவுனியா, சீச்சீ, இப்படிச் சொல்லத் தகுமா?" என்றேன் ; மேற்கொண்டு என் உரையைக் கேட்க அவள் விரும்பவில்லை, அவள் கூறினள் : "ஓடும்பொழுது நான் ஓர் ஆண்பிள்ளை வேடம் புனைந்திருந்தேன். நீ தங்கியிருந்த இடத்திற்குச் சென்றபோது நீ என்னைத் தேடப் புறப்பட்டுவிட்டனை என்றும் தடிதாங்கியவருடன் சாருவிலிகன் கள்தேறல் கடையில் என்னைத் தேடும் கருத்துக்கொண்டிருந்தனை என்றும் கேட்டுணர்ந்தேன். ஒருமுறையாகிலும் உன்னைக் கண்ட பின்னர் உச்சயினி நகரத்தை விட்டகல முடிவு செய்தேன். கள்தேறல் மனையை நோக்கிப் போய்க்கொண்டிருந்த போழ்து சகதீபச் சோதிட அந்தணன் ஒருவன் என்னை இடை

மறித்துக் கூறினன்: "பிள்ளாய், வருக; வரும்பொருள் அறிந்துகொள்க!" என்னிடம் இருந்த எண்ணிறந்த பொற் காசுகளில் ஒன்று அவனுக்களித்தேன். பற்பல சக்கரங்கள் வரைந்து கணிதமிட்ட பின்னர் அவன் கூறினன்: "பிள்ளாய்! உன் எதிர்காலம் நன்ருகவுள்ளது, ஆனல் நீ துன்பம் நுகர்வாய்." நான் மேலும் வினவினேன்: "நான் தேடிச்செல்கிற ஆளைப் பற்றிச் சற்றுக் கூறுக." சிறிது நேரம் கணிதமிட்டுச் சொன்னன்: "அவன் பெயர்பெற்ற கவிஞனவான்; ஆனல் தானெடுத்த நூல் எதையும் முடிக்க வல்லமையற்றவன் அவன். கவிதை எழுதத் தொடங்கிய நாள் முதற்கொண்டு வாழ்நாள் குறையப் பெறுவான். கவிதை எழுதும் நாள் முதற்கொண்டு எண்ணி ஆயிரம் நாட்களே உயிரோடிருப்பான்." சோதிடன் உரை கேட்டு நடுநடுங்கிப்போனேன். கைகூப்பி வேண்டினேன்: "இந்தக் கேட்டில் இருந்தும் தப்பும் வழியுண்டோ பெரும?" அவன் தலையசைத்து இசைத்தான்: "உள்ளது." சற்று நேரம் அமைதியாக இருந்து பின்னர் சொன்னன்: "வாழ்கின்ற மனிதன் எவனைப் பற்றியும் கவிதை எழுதற்க என்று அவனிடம் சொல்லிவிடு." இதைக் கேட்டுச் சாருவிலிகன் கடையை உடனே நண்ணினேன். என் நற்பேற்றினல் கடைக்காரன் அன்று உவகை உற்றிருந்தான் ஆதலின் கிண்ணங்களில் தேறலை நிரப்பிக்கொடுக்கும் வேலையை எனக்குத் தந்தான். தடியேந்திய ஆட்களுடன் நீ அங்கு வந்தனை; உன்னைக் கண் களாரப் பருகினேன். நகர காவலன் அப்போதுதான் உன்னிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தான். 'நான் எழுதிய நாடகங்களைச் சிப்பிரை நதியில் எறிந்துவிட்டேன்; நிபுணிகையைக் காணும் வரை எந் நாடகமும் எழுதவுமாட்டேன், நடத்தவுமாட்டேன்' என்று அவனிடம் கூறியது நான் கேட்டு அடைந்த மகிழ்ச்சிக் களவேயில்லை. உன்னை என்றும் காணப்போவதில்லை என்று உறுதிபூண்டு நாட்கூலி பெருமலேயே அவ்விடத்தைவிட்டுப் போனேன். நீ இன்று இளவரசிப் பெருமாட்டியைக் குறித்து கவிதை எழுதப்போவதாகக் கூறினை; அது கேட்டு என் குலை நடுங்கிற்று. நீ இளவரசியைக் குறித்தும் வேறு எந்த ஆளைக் குறித்தும் கவிதை எழுதற்க! இதையே உன்னிடம் கூற வந்தேன். இதனை உள்ளத்திற் பதியவைத்துக்கொள்க; நான் எளியை, உனக்காகக் கடவுளைத் தொழத்தான் முடியும்."

நிபுணிகை மண்டியிட்டு என்முன் வணங்கினள். அவளுக்கு ஆறுதல் அளிக்கும் முகத்தான் மொழிந்தேன்:

"நான் உன் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு உன் விருப்பப் படியே நடக்கின்றேன், நிவுனியா! ஆனால் அந்தச் சோதிடன் கூற்றினை நம்ப முடியாது." நிபுணிகை கண்களைப் பரக்கத் திறந்தென்னைக் காணலானாள். சோதிடன் சொன்னதை நான் நம்பாதது அவளுக்குப் பிடிக்கவில்லை. நான் மீட்டும் ஒன்றும் கூறவில்லை. வானம் நோக்கி நெட்டுயிர்ப்புயிர்த்தேன். அண்மையில் இங்கு யவனர்தம் சன்மகுண்டலி நூலும் சோதிட வினாவிடை நூலும் வழக்கில் வந்துள்ளன. அவை யவனர்தம் புராணக் கதைகளென்னும் தூண்கள் மீது இயற்றப்பெற்றவை; அவை அனுமான முடிவு முறை கொண்டவை. பாரத நாட்டு ஊழ்வினைப் பயன் மறுபிறவிக்கொள்கைகளுடன் மேற்சொன்ன யவனர் சோதிட நூல் யாதொரு தொடர்பும் கொண்டதில்லை. பாரத புராணங்களில் கூறப்பெற்ற கிரகதேவதைகள் இனம், இயல்பு, பால் இவற்றிற்கு யவனர் சோதிடம் எதிராக உள்ளது. நம் புராணங்களில் புகழ்பெற்ற வெள்ளியும் திங்களும் யவனர் சோதிடத்தில் பெண்கிரகங்களாகக் கருதப்பெற்றுள்ளன; ஏனெனில் யவனக் கதைகளில் வீனசும் (வெள்ளி) டயனாவும் (திங்கள்) தேவிகளாவார். அச்சோதிடத்தில் கிரக நட்பு தலையான அமைப்பாகும். பாரதநாட்டுப் புராண நூல்களுக்கும் யவன சோதிடக் கிரக நட்புக்கோப்புக்கும் ஒரு தொடர்புமில்லை. யவன சோதிடம் இந்நாட்டிலே எழுத்தறியா மக்களிடையே ஒரு செல்வாக்குப் பெற்றிருக்கிறது; வரவர இது அரசர் இடையேயும் புலவரிடையேயும் தகாத பழக்க வடிவத்தில் பரவி வருகின்றது. யாவற்றினும் வியப்புறச் செய்யும் விளைவுயாதெனில் புத்தர் பெருமான் நிலைநாட்டிய பௌத்த அறத்தினரிடையேயும் இச் சோதிடம் செல்வாக்குப் பெற்றுவிட்டது. நான் இம்மறையை உணர்ந்திருக்கின்றேன்; ஆனால் இஃது நிபுணிகைக்குத் தெரியாது. எனினும் அவளை மகிழ்வுறச் செய்யவே இனி நான் உயிர்த்துள்ள எந்த ஆளைக் குறித்தும் கவிதை யியற்றமாட்டேன் என உறுதிமொழி கூறினேன். முடிவுவரை நான் கொண்ட உறுதிமொழியைக் காப்பாற்ற முடியவில்லை; நான் உறுதிமொழியை மீறிய நாள் முன்னதாகவே நிபுணிகை என்னை விட்டு மீளாப்பதம் எய்திவிட்டாள். நிற்க, நான் உறுதி கூறிய அந்த நேரத்தே நானும் நிபுணிகையும் அமைதியாகப் பேசாமல் அமர்ந்திருந்தோம். படகு உட்பகுதியிலிருந்தும் உவகை ததும்பிய குரலால் இந்தச் சுலோகம் பாடப்பெற்றதைத் கேட்டோம்.

ஜலௌகமக்ஞ ஸசராசராதராவிஷாண கோட்யாகில
மூர்த்திதாரிணு
சமுத்ருதா யேந வராஹரூபிணு ஸமேஸ்வயம்பூர் பகவான்ப்ரஸீதது

அஃது பட்டம்மைதன் குரல்! நிபுணிகை திடுக்கிட்டு எழுந்திருந்தாள். "பட்டம்மையின் தொழுகை முற்றுப்பெற்றது. வருக பட்ட! பிரசாதம் பெற்றுக் கொள்ளலாம்."

## உயிர்ப்பு ஒன்பது

திரிவேணி கடந்த பின்னர் எம் படகுகள் கயிறுகொண்டு இழுக்கப் பெருமலேயே மிகுந்த வேகத்தோடு போகத் தொடங்கின. இதன் முன்னர் படகோட்டிகள் பல இடங்களில் படகுகளே இழுத்தார்கள்; தள்ளிஞர்கள். ஆனுல் பிரயாகை கடந்ததும் நீர்ப்பெருக்கு மிகுதியான் அத்தொல்லே நீங்கிற்று. இப்போது கங்கை சிறிய பெரிய குன்றுகள் ஓரமாக அவற்றைத் தொட்டவாறு போகத் தொடங்கிற்று; இது என் நாடோடி உள்ளத்தைத் தொட்டுக்கிளறியது. விந்தியமலேக் காட்டின் கவர்ச்சியை—அழகை என் உள்ளம் எப்படி மறக்க முடியும்? கீழ்க்கடலில் இருந்தும் மேல்கடல் வரை பூமிதன் அழகிய மணி மேகலேபோல நீண்டிருக்கும் நடுநாட்டின் மிக அழகிய விந்திய மலேக் கானகம், உள்ளம் என்ற பாய்கிற குதிரைக்குக் கடிவாளமாக இருந்தது; பற்றெழித்தல் என்னும் மத யானேக்குக் கூரிய கோலாக அமைந்திருந்தது; ஊர்சுற்றும் அவாவென்ற மனப் போக்குக்குத் தடையாக இருந்தது. நான் அலேந்து திரிந்து விந்தியக் கானகத்திற்கே திரும்பிச் சேர்வது வழக்கம். ஈங்கு மரங்களது கவர்ச்சியைத் தட்டிக் கழிக்க முடியாது. அவை காட்டு யானேகளது மதநீரான் செழிப்புற்றேங்குகின்றன. அவற்றின் மலர்கள் யானேகளின் தலேகள்மீது விழும் விண் மீன்களெனப் பொலிவுகொண்டன. அம்மரங்களின் இருண்ட நிழல் ஒரே நேரத்தில் அமைதியையுங் குழப்பத்தையுந் தூண்டிற்று. குழந்தைப் பருவத்தில் இக்கானகத்து ஒரு பகுதியே நானும் என நினேத்திருந்தேன். பன்ளுடுகளேச் சுற்றி அறிவுத் திரட்சி சேரப்பேற்றேனுதலின் இக்கானகத்துப் பல்வகைச் சுவையை உணர்வொடு நுகர முடியும். இங்கு ஆங்காங்கே

நீர்க்காக்கை வெறிகொண்டு மிளகுத்தளிர்களை அலகுகளால் கொத்தித் தின்பதைப் பார்க்கலாம். யானைக்கன்றுகள் பச்சிலை மரத்தின்மீது தம் துதிக்கையது தினவுபோக்கச் சொரிவதால் காடு முழுவதும் மணத்தில் முழுகியது. தேறலை மாந்திய கேரள மாதர் தம் சிவந்த கன்னங்களைத் தோற்கடிக்கும் இள மரங்கள்தம் செந்தளிர்கள் விளையாட்டயரும் வனதேவதைகள் தம் திருவடிகளுக்குச் செம்பஞ்சுக் குழம்பாயினவோ என்ற ஐயத்தைத் தூண்டின. ஆங்காங்கே உள்ளத்திற்கு உவகை யூட்டும் அழகிய கொடி மனைகள்தம் தண்ணிழல் கீழே கிளிகள் கொத்திய மாதுளம்பழ மணிகளது சாற்றினால் நனைந்திருந்தன. அவற்றினுள்ளே, சும்மா இருக்க முடியாது குரங்குகள் உலுக்கிய விளாம்பழமும் இலைகளும் சிதறி விழுந்து கிடந்தன; அவற்றின் உள்ளிடங்கள் எப்போதும் பூந்தாதுக்களால் நிரம்பியிருந்தன; ஆங்குக் களைத்த வழிபோக்கர் இலவங்க இலைகளைப் பரப்பி இளைப்பாறினர்கள்.

எம் படகுகள் இந்தக் குன்றுகளிடையே போய்க்கொண் டிருந்தபொழுது எனதுள்ளம் கட்டவிழ்ந்த காளையெனப் பாய்ந்து செல்லத் தொடங்கிற்று. பாய்ந்து அது மதம் பொழியும் களிற்றுக் குழுக்களிடையே, அருவி முழங்கு மலைக்குகை களிடையே நீரில் முழுகிய பிரம்புக் காவிடையே ஏலம் இலவங்கம் பச்சிலை முதலிய இனிய மணங்கமழ் செடிப்புதர்களிடையே ஓடத் தொடங்கிற்று. விந்தியமலைக் கானகத்தால் சூழப்பெற்ற கங்கை யாறு சுனாரக்கோட்டையை மூவிடங்களிலும் சூழ்ந்துகொண்டு பாய்ந்தது. படகில் அமர்ந்திருந்தவாறே நெடுந்தொலைவுவரை இலந்தைமரத் தோப்புகள், காட்டுப் பலாமரக் கூட்டம், சீத்தாப் பழ மரங்கள் முதலியன கண்டு களித்தேன். உள்ளத்தில் அவா கிளர்ந்தது, குதிக்கலாமா? வனதேவதைகளது உறைவிடம், களிமயக்க மயில்களது தங்குமிடம், களிறுகள் களிப்பொடும் விளையாடும் அச்சமுறுத்தும் பொழில்கள் இசையொடு பெருகும் விந்தியமலை அருவிகள் இவற்றிடையேயோடியாடிப் பாடிக் களிக்கலாமா என்ற தீராக் காதல் உள்ளத்தின்கண் பெருகிற்று.

கோட்டைப்புறத்தே படித்துறை இருந்தது. படகுகள் ஆங்கு நிறுத்தப்பெற்றன. மிகுந்த வருத்தமொடு விந்தியக் கானகத்தைக் கண்டேன். என்செய்வது? அதில் நுழையும் உரிமை இப்போதெனக்கில்லை.

இதே நேரம் என் படகுடன் வந்த மற்றொரு படகில் உள்ள போர்,மறவன், காளையனையான் ஒருவன் என்னை அணுகி மண்டி

யிட்டு வணங்கிக் கூறினான். "பெருமான்! நுமது விருப்பம் உளதேல் இன்றியமையாததொரு பொருள்பற்றி நும்மிடம் கூற வுண்டு." அந்தக் காளையை உற்று நோக்கினேன். அங்கங்கள் சமவளர்ச்சியுடையவுடல், விரிந்த மார்பு, பெரிய பெரிய கண்கள், இயல்பான மகிழ்ச்சி ததும்பும் முகம். இத்தோற்றம் கண்டு அடைவின்றியே அடைந்தேன் உவகை. கூறினேன்: "செல்வ! என்ன இயம்ப வந்தனை? கேட்க அமைந்தேன்; சொல்லுக." இளைஞன் அடக்கமுடன் கூறினான்: "இது சுனாரக்கோட்டை; கன்னோசி மன்னர் மன்னன் இறுதிக்கோட்டை இதுவே. இதற்கப்பால் அரசின்றிக் குழப்பமுற்ற இடம் உள்ளது. வடக்கே காசியும் தெற்கே கரூடமும் கன்னோசி மன்னன் ஆட்சிக் கீழு மில்லை, மகதகுப்தர் ஆட்சிக் கீழும் இல்லை. மன்னர் மன்னவனின் மூத்தவர் ஈங்கு மிகுந்த திறம்பெற்ற அரசியல் நெறியைக் கையாண்டுள்ளார். அவர் வடபால் நிலத்தினைச் சில பார்ப்பாருக்குப் பரிசில் நிலம் வழங்கித் தம்பால் கவர்ந்து கொண்டார். ஈண்டுப் பரிசில் நிலத்தை ஆளும் அந்தணரது செல்வாக்கு ஓங்கியுள்ளது. அவரே ஈண்டுக் குறுமன்னர்கள். அவரிடையே இன்று நான்மறைநெறி மறைந்துபோயிற்று. அப்போது அவர்கள் பௌத்த மன்னன்பால் பற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் தென்பால் புலிப்பொய்கையில் ஆபீரக் குறுமன்னன் ஈசுவர சேனனது வலிமை தலை தூக்கி நிற்கின்றது. அவன் குப்த மன்னர் மன்னர்களின் நம்பிக்கை வாய்ந்த குறுமன்னன். நாம் நாவாய்களைத் தென்பால் செலுத்த வேண்டுமென்றும் நம்மை யாரும் கன்னோசியர் என ஐயங்கொள்ளாதவாறு நடக்க வேண்டும் என்றும் குமாரகிருஷ்ணரது கட்டளையாகும். தாங்களும் இவ்விடங்களில் விழிப்புடன் இருத்தல் வேண்டும்."

இச்செய்தி கேட்டுத் தூங்கியவன் திடீரென விழித்தெழுந்தவன்போலத் திடுக்கிட்டேன். எனக்குக் குமாரனது கட்டளை நினைவுக்கு வந்தது. உள்ளஞ் சுருங்கியவாறு அவன் பொய்யுரை எப்போதும் எல்லாவிடத்தும் குற்றமன்று எனவுரைத்திருந்தான். அவன் நல்லுரை இந்தச் சூழ்நிலைக்காக உரைக்கப் பெற்றது போலும்! அங்ஙனமாயின் இச்சூழ்நிலையில் நாம் கேடு நிறைந்த இடத்தை அணுகுகின்றோம் என்று நினைத்தேன். நான் ஒன்றும் சொல்லாதிருந்தேன். என் முகத்தே குழப்பக்குறி தோன்றியது; அந்த இளைஞன் களிப்பும் கவர்ச்சியும் ஒருங்கே கொண்ட இளைஞனாயினும் ஒளிர் நெற்றியின்கண் ஆழ்ந்த கருத்துப் பொலிந்தது. அவன் கன்னத்திடங்கள் துலங்கிய பொன் இழை

பொருந்திய கடம்பமலர்போல மங்கலாய்க் காணப்பெற்றன; அவன் செவ்விதழ்கள் ஏதோ சொல்ல வேண்டுமென்று துடிப்புக் கொண்டனவெனத் தோன்றின. ஆனல் அவன் கூற முடிய வில்லை. மெதுவாக வணங்கிவிட்டு அகன்ருன்; சிறிது நேரங் கழித்து ஒரு முதிய வீரனுடன் மீட்டும் வந்தான். நான் அப் போது ஆழ்ந்த கவலையில் மூழ்கியிருந்தேன். என்ன, மீட்டும் ஒருமுறை பெருமாட்டியைக் கேடு நிறை இடத்திற்கு அழைத் துப் போகின்றேனே? ஆனல் நானே கன்னேசி மன்னன் ஆட்சியிடத்தினை விட்டு வெளியேறவே முடிவு செய்தேன் அன்ருே? பின்னர் அஞ்சுதல் எதன் பொருட்டு?

முதிய வீரன் மண்டியிட்டு வணங்கித் தன் குறிக்கோளை வெளியிட்டான்: "தலைவ! இப்பிள்ளை தங்களிடம் கூறியன வெல்லாம் உண்மையே, இதனல் தாங்கள் கவலையில் ஆழ்தற்கோ சினங்கொள்ளுதற்கோ இடமில்லை. மற்ருெரு படகில் பத்து அரசர் மரபின் மறவர்கள் உங்கள் காப்புக்காக உள்ளனர். தலைவ! எங்கள் நாளங்களில் மௌக்கரி மரபினரின் வெப்பக் குருதி பாயா நின்றது. நான் நானிலம் போற்றும் புகழ் வர்ம னின் ஊழியன். மதம் பொழியும் போர்க் களிறுகளது மதப் பொழிவின்கண் எனது வாழ்நாள் கழித்தேன். படைகள் மோது தலிலே என் வாழ்நாளது இன்பம் நுகர்ந்து வந்தேன்; குதிரை யது முதுகின்மீதுதான் எனக்கு ஒய்வு நேரம் கிடைத்து வந்தது. இன்று மௌக்கரிகளது புகழ் நெருப்புத் தணிந்துவிட்டது. ஆனல் அந்த மரபில் இன்றும் உயிர் உள்ளது. இன்று எனது நல்வினைப் பயனுல் இந்தத் தூய கங்கைப்புனல் ஒழுக்கின்மீது அந்தணக் கொழுநமனைவியர் மானங்காக்கும் பொறுப்பு இத் தோள்மீது உள்ளது. தாங்கள் கவலையை ஒழிப்பீராக. இன்று வரை விக்கிரகவர்மனுக்குத் தோல்வியே ஏற்பட்டதில்லை. சாவி னது வாயிலில் நின்றபோதும் நான் எனது வாழ்க்கைப் புக ழினைக் கெடுப்பவனில்லை." இம்முதியவர்தன் செருக்கு மீறிய மொழிகளில் மிக்க எளிய கருத்துச் செறிந்திருந்தது. அவன் மயிர்க்கால் தொறும் தன்னம்பிக்கை வழிந்தது. ஆனல் கூறியன வற்றில் மௌக்கரி எனும் சொல் என்னைத் திடுக்கிடச் செய்தது. இளவரசிக்கு இது தெரியக்கூடாது. தெரிந்தும் குமார கிருஷ்ணன் மௌக்கரி மறவர்களை எமது பாதுகாவலுக்காக ஏன் ஏற்பாடு செய்தான்? பிறகு இந்த முதியவன் அந்தணக் கொழுந மனைவியர் என எந்த இருவரை குறித்தான்? உள்ளுக் குள்ளேயே மிகுந்த வருத்தமுற்றேன். இந்தச் சொல்லும் இள

வரசியின் காதில் எட்டக்கூடாது. சிச்சீ! எத்துணை நாண்மிக்க சொல்லிது! நான் பிற குறிப்புக்கு மாற்றவேண்டி வினவினேன்: "எனக்குத் தெரியும் செல்வ! புகழ்வர்மனது தூய பெயரை நன்ருக அறிவேன். பகைவரால் போர்கடத்தற்கரிய மறத்திறன் படைத்த புகழ்வர்மனை யார்தான் அறியாதார்? அவன் உறுதி யான கைப்பிடியில் உள்ள வாட்படை மதம் பொழியும் களிற்றின் மண்டைமீது விழும்போது அங்கிருந்து பெரும் பெரும் முத்துக் கள் ஒட்டிக்கொண்டுவிடும். அவற்றை நோக்குங்கால் கைப்பிடி யின் அழுத்தத்தால் வாட்படையது கூர்மையே வெண் முத்துக் கள் வடிவத்தில் பிதுங்கிப் பொலிகின்றனவோ எனக் காணும். அந்த யானை மத்தக முத்துப் பதித்த வாட்படை எத்தனைப் பகைவர் தம் வெற்றித் திருக்களைக் கவர்ந்தனவோ யாரறிவார்? எனக்குத் தெரியும், செல்வ! எண்ணிறந்த போர் மறவர்கள் தம் மார்பில் பூட்டப்பெற்ற இருப்புக் காப்புச் சட்டைகள் சிதைந்து மார்பு பிளந்து அவர் போர்க்களத்தே விழுந்தமையால் அவர்கள் முன்னம் மணந்திருந்த வெற்றித்திருக்கள் மதிப்பிடற்கரிய வீரம்படைத்த மௌக்கரிவீரன் புகழ்வர்மனைக் காதல், நாட்டத் துடன் அணுகினரே, அவனை நான் அறியேனு? எனக்கு தோள்வலிமைமீது முழு நம்பிக்கை உண்டு. நான் அச்சமற்றுக் கவலையற்றுள்ளேன். ஆனுல் ஓர் ஐயப்பாட்டினைத் தீர்ப்பாயாக. நீ மௌக்கரிக் குறுமன்னன் தொழும்பனே?"

முதியவன் கண்கள் சிவந்தன. அவற்றினின்றும் தீப்பொறி பறந்தன. சினத்தால் அடைபட்ட குரலோடு கூறினுன்: "இல்லை, இல்லை, தலைவ! குறுமன்னன் பெண்வழி சேர்ந்தவன், பிறர் மனை நயந்தவன், பரத்தையர் காலடி வருடுபவன்; தீய ஆவாக்களுக்கு அடிமைப்பட்டவன். அவன் மௌக்கரி மரபி னுக்கே கறையானவன். அவனுக்குப் புகலிடம் தந்து வளர்த்த நெறிவல்லவன் ஹர்ஷதேவன் மௌக்கரி மரபுமீது வெறுப்பைத் தூண்டிவிட்டான். நான் கோப்பெருந்தேவி, அரசித் திருவினது கட்டளைப்படிப் பௌத்த மன்னன் கீழ் ஊழியன். கோப்பெருந் தேவி காலஞ்சென்ற கிருகவர்மன் மனையாட்டி சிவபெருமான் மயிர் முடியினின்றும் பொழிந்த கங்கை நீர்போலத் தூயவள், தன்னேரில்லாக் கற்புடைய அருந்ததி வடிவமானவள், வழிதவறி நிலவுலகில் இறங்கிவிட்ட கற்பகக் கொடியானவள், பார்வதி யினது இயல்பான முறுவலிப்பே பெண் வடிவு கொண்டது போன்றவள், நாமகளது தூய கருப்புர வெள்ளை ஒளியே உயி ரொடு வடிவு கொண்டதெனப் பொலிபவள். அவளே மௌக்கரி

களின் 'தலைவி. "அந்தப் பெருமாட்டியினது வடிவத்தில்தான் மௌக்கரிகள் தன் அரசத்திரு இயங்கா நின்றது. அவளது ஒரு குறிப்பினால் உலகத்தையே குழப்புதற்கு மௌக்கரிகள் என்றுங் காத்திருக்கின்றனர். அவள் கட்டளைப்படியே நாங்களனைவரும் மன்னர் மன்னனது நம்பிக்கைக்குரிய ஊழியர்களாக அமைந் துள்ளோம். அவளது அருளாலேயே மௌக்கரி குறுமன்னன் இன்றும் உயிர்த்துள்ளான். இல்லையெனில் நிலமின்றி வெறும் மன்னன் பட்டம் வைத்திருப்பவனும் மௌக்கரி மரபிற்குக் கறையுண்டாக்கியவனும் மாந்தர் வடிவத்தில் ஓநாய் போன்ற வனும் ஆகிய இந்தக் குறும்புக் குறுமன்னன் என்றோ மடிந்து விட்டிருப்பான்." முதியவன் மொழியால் ஆறுதல் அடைந் தேன். மிகுந்த ஊக்கத்துடன் நன்று நன்றெனப் பாராட்டினேன். என் முகத்தே ததும்பிய மகிழ்ச்சியையே பெறற்கரிய பரிசு என்று முதிய மறவன் நம்பினான். என்னை வணங்கி அப்பாற் போனான். சிறிது நேரம் பொறுத்துப் படகுகள் மிதந்து படர்ந்தன.

ஆபீரக் குறுமன்னன் ஈசுரசேனனின் போர் மறவர்கள் எங்கள்மீது ஐயங்கொண்டனர். அவர்கள் எம் படகுகளைக் கைப்பற்றிக்கொள்ள விரும்பினர். போர் தவிர்க்க முடியாத தாயிற்று; அஃது நெருங்கியும் விட்டது. ஏறக்குறைய நள்ளிரவு கழிந்துவிட்டிருக்கும். எம் படகுகள் முடிந்தவரை ஓடித் தப்பித் துக்கொள்ள முயன்றன; ஆனால் அவை யாவும் ஓரிடத்தில் பகை வர்தம் படகுகளால் சுற்றிக்கொள்ளப்பெற்றன. தமசை நதி வந்து கலக்கும் இடத்தைக் கடந்துவிட்டோம். எம்முயிர்களையும் பொருட்படுத்தாமல் மகதநாட்டு எல்லைக்குள் நுழைந்துவிட முயன்றோம். எமது குறிக்கோள் நிறைவேறவில்லை. நேரக் கூடாதது நேர்ந்துவிட்டது. கடவுள் விதித்தது நிறைவேறி விட்டது. ஊழிற்பெருவலியாவுள, மற்றொன்று சூழினும் தான் முந்துறும். விக்கிரகவர்மனும் அவன் போர் மறவர்களும் நினைக்கவும் அரியதோர் வீரத்தொடும் பகைவர்மீது பாய்ந்தனர். எண்ணிக்கையில் பகைவரினும் பாதியே இருந்தனர்; ஓடித் தப்புதல் இயலாததாகிவிட்டது. பார்த்துக்கொண்டிருந்தபோதே போர் வீரர்களது முழக்கத்தால் திசைகள் அசைந்தன. நாணோசை வானத்திடத்தை இடித்தது. அம்பின் பொழிவால் கங்கைப் பொழிவு நிரம்பிவிட்டது. வீரர் தம் இரும்புச் சட்டையி லிருந்து நெருப்புப் பொறிகள் கிளம்பி அப்போதைய இருட் செறிவை முறியடித்தன. எம் படகுகள் மிக விரைவாகக் கீழ்பால் சென்றுவிட முயன்றன. பகைஞர்கள் விரைவோடு

எங்களைச்சுற்றி வளைத்துக்கொள்ள விரும்பினர். மெதுவாகப் பகைவர் எமக்கு மிக அருகே வந்துவிட்டமையால் இனியும் விற்போர் செய்தல் அருமையாகிவிட்டது. விக்கிரகவர்மன் மௌக்கரிகள் தன் குல இலக்குமியாகிய அரசித்திருவுக்கு வெற்றியுண்டாகுக என்ற வெற்றியோசை கிளப்பித் தன் போர் மறவரை ஈட்டிகள் நீட்டிப் போருக்கு ஒருப்படுக எனக் கட்டளையிட்டான். எனது பகுத்தறிவு பாழாயிற்று; போரைக் கண்டவாறு நின்றிருந்தேன். ஏதேனும் எதிர்பாராத வகையில் இந்தக் கேடு நீங்கிவிடுமென இன்னும் நம்பிக்கையோடும் இருந்தேன். ஆனால் கேடு தவிர்க்க முடியாததாயிற்று. உடனே முன்னே நகரகாரம் என்னும் ஊரில் இளவரசியின் துயர்நிறைந்த முகம் என் நினைவிற்கு வந்தது. அந்நிகழ்ச்சி மீண்டும் நிகழுமா? இப்போது நான் உறுதி இழந்தேன். கையில் ஏவத்தக்க படைகள் இல்லை; உள்ளத்தில் உறுதியும் இல்லை. நகரகாரத்தில் பட்டம்மையை வீரமுழக்கத்தோடும் காத்து நின்ற தீரநாபிதன்போன்று நானும் இன்று ஈண்டுக் கங்கையொழுக்கின் நடுவே பட்டம்மையருகே நின்று அவள் வெற்றியோசை கிளப்பியவண்ணம் உயிர்விடுவேன். மிக்க ஆராய்ச்சி வீணும். நானும் விக்கிரகவர்மன் தன் படகு நோக்கிப் போக உடன்பட்டேன். ஒரு நொடி வரை பட்டம்மை அவள் தன் மலர்ந்த முகம் உள்ளம் நிறைய நினைத்துக்கொண்டேன். உள்ளத்தில் எள்ளளவும் நம்பிக்கை எழவில்லை; எனினும் மாவராகன்மீது நம்பிக்கை வைத்து உள்ளத்தை ஆறுதல் செய்தேன். திக்கற்றேனுக்குத் தெய்வமே துணை. எழுந்திருந்தேன். திருமாலுக்கு வெற்றி! நரசிங்க ஏற்றுக்கு வெற்றி! ஒரு சினப்பார்வையால் இரணியன் பரந்த மார்பைக் கிழித்த நரசிங்கத்திற்கு வெற்றி. நிலாக்கதிர் முனையென ஒளி செய்யும் கோட்டுப்பற்கள் முனையால் அசுரர் தம் குலம் நிலைகுலையச்செய்த மாவராகனுக்கு வெற்றி! நான் எழுந்திருந்தேன். விக்கிரகவர்மன் அறைகூவினன்: "உயிர் போயினும் வீரம் இழக்காத மறவர்காள்! சாதற்குத் திருவிழா இன்றினும் வேறு நாள் கிடைக்காது. விழிப்பொடு வினையாற்றுக. அந்தணக் கொழுநமனைவியர் நிழலையும் பகைஞர் தொடக்கூடாது. மௌக்கரி மரபு அரசித்திருவுக்கு வெற்றியுண்டாகுக! மௌக்கரி மரபு வாழ்க!" வீரர்கள் ஒரே குரலில் வெற்றியோசை கிளப்பினர். கூரிய வாள், வேல், ஈட்டி முதலியன தாங்கிப் பகைவரோடும் போரில் மும்முரமாயினர். படகுகள் எதிரெதிர் நிலையில் கங்கை அன்னைமீது ஊசலாடின. படகோட்டிகளும்

வெற்றியோசை முழக்கினர், கங்கையின் வெள்ளொழுக்கு செங்குருதி ஒழுக்கமாக மாறியது.

இதே நேரத்தில் "தடாம்" என்ற பேரொலி எழும்பிற்று. நிபுணிகை அஞ்சிய குரலால் அலறினுள்: "பட்ட! பட்ட! காப்பாற்று! காப்பாற்று!" அவளே நீரில் குதித்துவிட்டாள். எனக்கொன்றும் புலப்படவில்லை. கீழே இறங்கி நடுத்தளத்தே வந்து நீரில் பார்வை செலுத்தினேன்; அந்தோ! அதோ! பட்டம்மையும் நிபுணிகையும் நீரில் முழுகிக்கொண்டிருக்கின்றனர். ஒரு நொடிக்குள் செய்யத்தக்கதை முடிவு செய்துவிட்டேன். நீரில் நானும் குதித்துவிட்டேன். நிபுணிகை கத்தினுள்: "என்னைவிட்டுவிடு, பட்டம்மையைக் காப்பாற்று, அதோ பார் அதோ!" நான் பட்டம்மைபால் தாவினேன். ஓரிமையும் கடந்திருந்தால் அவள் கடந்துபோயிருப்பாள் ஆழத்தே. என்னிடம் எங்கிருந்தோ வியப்புறத்தக்க வல்லமை வந்துவிட்டது. பட்டம்மையைப் பிடித்துவிட்டேன். என் முதுகின்மேல் வாரிவைத்துக்கொண்டேன். அவள் போதிய அளவு நீரை உட்கொண்டுவிட்டாள் எனத் தென்பட்டது. மயக்கமெய்தியிருந்தாள்; பளுவாக இருந்தாள். அவளைச் சுமந்தவனுய்ப் படகுநோக்கி விரைந்து நீந்தத் தொடங்கினேன்; ஆனுல் படகு பின்பக்கம் போய்விட்டது. படகோட்டிகளும் போர்மறவர்களும் பகைஞருடன் போரிட்டுக்கொண்டிருந்தார்கள். படகைக் கவனிக்க யாருக்கும் நேரமில்லை. நீரொழுக்குக் கெதிராக மிகு நேரம் என்னுல் போர்செய்ய முடியவில்லை. வேறு வழியின்றி நீரொழுக்குத் திக்கிலேயே மிதந்துபோக முடிவு செய்தேன்; மிகு நேரம்வரை பட்டம்மையை முதுகில் தாங்கும் வல்லமை நீடிக்காதென உணர்ந்தேன். என் உடம்பு மெதுவாகக் களைப்புறத் தொடங்கிற்று. மிகுந்த களைப்புற்றுப் பட்டம்மையை எங்கு நழுவவிட்டு விடுவேனே எனவும் அஞ்சினேன். என்மேல் துணி கொண்டு பட்டம்மையை என் முதுகோடும் பிணைத்துக் கொள்ளலாமென எண்ணினேன். என் துணி கொண்டு அவள் தம் தோள்களைக் கட்ட முயன்றபோது ஒரு கெட்டியான பொருள் உள்ளதாக உணர்ந்தேன்; உடனே அதை இழுத்துப் பார்த்தேன், அது மாவராகனது படிமம் ஆகா! நீரில் முழுகிய பூதேவியைக் காத்த மாவராகப் படிமமே தன்னைத் தொழுபவளை மூழ்கடித்துக்கொண்டிருந்தது. எள்ளுதற்குரிய எத்தனை எக்கச்சக்கமான நிலைமை! பட்டம்மையது உடல் இப்படிமத்தின் பொருட்டாகப் பருமனுகத் தென்பட்டது; என்றுமாக முழுகிவிட இருந்

தாள். அவதூதர் அறவுரையே ஒரு வடிவம் எடுத்து என்முன் தோன்றியதுபோன்று உணர்ந்தேன். யாரைக் காப்பது? பட்டம்மையையா? மாவராகனையா? அவதூதரின் வெகுண்ட முகம் நினைவுக்கு வந்தது. "அறிவிலி! நீயா மாவராகனைக் காப்பாற்றுபவன்?" உண்மையில் மிக்க பெருமை வாய்ந்தவனும் காப்புக்கடவுளும் ஆகிய மாவராகப்படிமத்தைக் காப்பது பொருமைப்படக்கூடிய செயற்கரிய செயல் அல்லவா? ஓ அற்புத மூர்த்தி! நீரில் முழுகிய அசைவன அசையாதன யாவற்றிற்கும் அன்னையாகிய பூதேவியைக் கைதூக்கிக் காத்த மாவராகப் பெருமானே! உன்னினும் உன்னைத் தொழுபவனைக் காக்குங் கவலையே மிகக் கொண்டுள்ளேன். உன்னை இப்போது பொருட்படுத்தாத நிலைமைக்குப் பொறுத்தருள்க. உன்னைக் கங்கைதன் தூய ஒழுக்கிலே விட்டுவிடுகின்றேன். உன்னைக் காக்கும் வல்லமை தான் எனக்குண்டோ? உன்னை நீயே காத்துக்கொள்வாய். என் முன்னே துறவி அவதூதரது வடிவம் திருவிளையாடல் புரியத் தொடங்கிற்று. அகோர பைரவர் மகிழ்ச்சி பொருந்திய முகம் என்முன் அன்புடன் அதட்டிக்கொண்டிருந்தது. "மீண்டும் பொய் பேசுகின்றனை, பிறவியிலேயே பாவி, தொழிலில் தீவினை யோன்; பொய்க்கொள்கையன் பாசாங்குக் காரன்! மாவராகனை, நீ காப்பாற்றப்போகின்றனை! செருக்குடையோனே!" நான் நாணமிகக் கொண்டேன். அவர்மீண்டும் அன்புடன் சொல்வ தாக நினைவில் தோன்றியது: "பார், செல்வ! இம்மாபெரும் விசும்பில் ஒவ்வோரணுவும் கடவுளாகும். திரிபுரசுந்தரி உன் முன்னர் எந்த வடிவத்தில் அருள் செய்தாளோ, ஆட்கொண் டாளோ அதே வடிவத்தினைத் தொழுவாயாக!" பின்னர் மாவராகப் படிமம் என் கைவிட்டு நழுவி விழுந்து ஒழுக்காழத்தே படிந்துவிட்டது. அகோரபைரவர் வடிவம் படிப்படியாகப் படியி னின்றும் உயரக் கிளம்பத் தொடங்கிற்று. தொலைவில் மிகு தொலைவில் சென்றுகொண்டிருந்தது. என் நாளங்களில் குருதி யருவி வல்லமை குறையத் தொடங்கிற்று; தோட்கள் தளரத் தொடங்கின; கண்கள்முன் இருள் பருத்துப்பரவி வெருட்டத் தொடங்கிற்று. மிகுதொலைவிலிருந்து ஒரு குரல் புயலைக் கிழித்து என் செவிகளில் நுழைந்தது. "எவனிடமும் அஞ்சாதே, மந்திரத்திற்கும் அஞ்சாதே, வையத்திற்கும் அஞ்சாதே, நான் மறைகளுக்கும் அஞ்சாதே!" எனது முழுச்செயலும் அசைவு வல்லமையும் ஓயத்தொடங்கின. என் உணர்வை மெல்லிதாகத் தட்டிக்கொடுக்கும் அந்தக் காணாத குரல் வானத்தில் மறைந்து

கொண்டிருப்பினும் என் செவிகளுக்குப் புலனாகியவண்ணம் இருந்தது. அவதூதர் வடிவம் இன்னும் மேலே உயர எழுந்தது; விண்மீன் குழுவுக்கும் மேலே இன்னும் மேலே இன்னும் மேலே........

நான் கீழே மணலில் மோதுண்டேன். பொறிதோறும் தளர்ந்துவிட்டிருந்தேன். ஆனால் பட்டம்மைதன் நினைவு வந்ததும் எங்கிருந்து வல்லமை எனக்கு வந்ததோ அறியேன். மணல் ஆற்றின் வேகத்தால் திரண்டு ஒரு மேடாக உருவாயிற்று; ஆதலின் கேடு அகன்றது. பட்டம்மையை மிகுந்த முயற்சியோடும் இழுத்து நீரில்லாத மணற்பாங்கான இடத்தில் கொண்டு சேர்த்தேன். அவள் குடித்த நீரை அகற்றிக் கீழே கிடத்தினேன். அவள் உணர்வற்றுக் கிடந்தாள். முகத்தில் துயரக்குறி எதுவும் காண்கிலேன். நனைந்த மயிர் முடி முன்னையினும் கருமைகொண்டது. கோணிய புருவம் இன்னும் வளைந்து காணப்பட்டது. கனமான நனைந்த ஆடையால் கவியப்பெற்றிருந்த அழகுத்திரு இன்னும் பதின்மடங்கு மிக்குப் பொலிந்தது. ஏதோ இனிய கனவில் முழுகி இருப்பவள்போலக் காணப்பெற்றாள். நீருக்குள் ஒளி செய்யும் விளக்குப்போல அவள் முழு உடலும் தனது இனிய தோற்றத்தால் என் கண்களுக்கு இன்பம் பயந்தவாறிருந்தது. பட்டம்மைக்கு இப்போது தக்க புகலிடம் தேடும் அளவுக்கு உடல் வலிமையற்றிருந்தேன். மிக்க களைப்பால் நானும் மணல்மீது கிடந்தவாறிருந்தேன். பையப்பையப் பொழுது புலர்ந்தது. கதிர்க்கடவுள் செங்கதிர்கள் நிலத்தைப் போர்த்திருந்த இருண்ட இருட்போர்வையைப் பிளந்தன. கதிர்மணி இப்போது சிறிது உயரக் கிளம்பிற்று. ஆனால் என் உடம்பில் சற்றுச் சூடு ஏறிற்று; எழுந்தமர்ந்தேன். அந்தோ! இப்பெருமாட்டியை எனதுயிர் கொடுத்தாயினும் காப்பேன் என்று சூளுரைத்தேனே! இவள் நிலை இப்படியா ஆகவேண்டும்; ஆடைநிலை குலைந்திருந்தது. தாமரை நாளங்கள் போல இளங்தோள் கொடிகள் தளர்ந்துவிட்டன. தாமரை மலர் வடிவத்தையும் புனமுருக்கமலர் நிறத்தையும் எள்ளுகின்ற இவள் அடிகளின் இடங்கள் இரத்தமின்றி வெளிறின. தாமரை மலர்த் தாதுபோல ஒளிப்பொழிவு செய்யும் நகங்களும் வெளிறின. வையத்தில் எங்கும் காண்டற்கரிய அழகிய பாவைக்கு இந்த மணற்படுக்கை தகுமா? கெடுக பாணபட்டனே! தீவினையோன் அன்றோ, வாலறுந்த காளைபோன்ற நாடோடி அல்லனோ நீ!

கதிரவன்தன் கதிர்கள் இமைதோறும் ஆற்றங்கரை மணலில் எதிரொளி செய்யத் தொடங்கின. அவை பார்ப்பதற்குக்

கதிரவன் தேர்க்குதிரைக் குளம்புகளால் மிதிபட்டு எண்ணிறந்த விண்மீன்கள் பொடிப்பொடியாகித் தரைமீது உதிர்ந்த பின்னர், உந்தக் கேடு கண்டு இரங்கி நிலாத்திரு அவற்றை மூடிமறைக்க இறங்கி வந்ததுபோன்ற காட்சியைத் தோற்றுவித்தன. அந்தோ! கொடியபோர் வென்றவன், எல்லைப்புறக் கள்ளர்களுக்கு வடவைக்கனல் போன்றவன், கொடிய பகைவருக்கு அரியேறு போன்றவன், துவரமிலிந்திரன் திருமகளுக்கு இத்தகைய தீவினை நாள்! ஆனல் துயரப்படுதல் அறிவின்மையாம். சற்று நேரத்திற்குள்ளாக மணல் நெருப்புப்பொறிகளெனக் காயத் தொடங்கும், அப்போது பட்டம்மைக்கு இன்னும் மிக்குத் துன்ப மிகும் என்ன செய்வேன், என்ன வழி? இந்நிலையில் இவளை இங்குத் தனியாக எப்படிவிட்டுச் செல்வேன்? ஆகா! இந்நேரம் நிபுணிகை இல்லாதிருப்பது எத்துணைத் துன்பம்! நிபுணிகை தப்பிப் பிழைத்திருப்பாளா? எனது நிலையே இங்ஙனமாக அவள் எப்படித் தப்பப் போகின்றுள்? ஐயமில்லை, அவள் முழுகி விட்டிருப்பாள். அடி நிவுனியாவோ! நீ எங்குள்ளனை? பார்! உன் இளவரசிக் கடவுள் எந்நிலையில் இருக்கின்ருள்? அந்தோ! இளவரசி தம் சிதறிய ஆடைகளைச் செம்மைப்படுத்த எந்த மாதும் ஈண்டில்லையே, நிவுனியாவோ! நீ எங்கு இருக்கின்ருய்? ஓடோடி வரமாட்டாயா? யார் எனக்குத் துணைபுரிவார்? மெது வாக மெதுவாக வானத்தே அவதூதர் அகோர பைரவரது உருவம் இறங்கி வருவதுபோலக் கண்டேன். நீர்பொழியும் கண் களால் திசை முனையிலிருந்தும் அவர் என்னை நோக்கி வருதல் கண்டேன். வானத்தே என்னை விளித்து உரைத்தவாறிருந் தார்: 'யாரிடத்தும் அஞ்சாதே, குருவுக்கும் அஞ்சாதே, மந்திரத் திற்கும் அஞ்சாதே வையத்திற்கும் அஞ்சாதே, நான்மறைகளுக் கும் அஞ்சாதே!' நான் எழுந்து அம்மையது ஆடையைத் திருத்தி நாடி தொட்டுப் பார்த்தேன்; தக்க நிலையில் இருந்தது. நான் மெதுவாக அவளது நெற்றியைத் தடவி அடிகளிடத்தே தேய்த்துச் சூடுண்டாக்கினேன்; உள்ளங்கைகளையும் தோட்களை யும் தேய்த்துவிட்டேன். மீண்டும் நெற்றியிடத்தை அமிழ்த்தி விட்டேன். அவளுக்குப் படிப்படியாக உணர்வு தோன்றியது. சேதாம்பல் மலர்போலக் கண்ணிமைகள் அசைந்தன; கண்கள் திறந்தன. அவை முதுவேனில் தாக்கிய தேவிமலர்போன்று சிவந்தும் மங்கியும் காணப்பெற்றன; புயலடித்தலால் கண்டபடி அசையப்பெற்ற ஊமத்தை மலர்போல மலர்ந்தும் துன்புழக்கக் கண்டேன். தூசி நிறையப் படியப்பெற்ற அசோகமலர் போன்று

உள்ளங்கவர்வனவாயினும் மணற்பொடி படிந்திருந்தது. அவள் என்னை நோக்கினுள்; அடையாளமும் தெரிந்துகொண்டனள் போலும். தவிர்க்க முடியாமையை உணர்ந்ததால் ஒருவகை நாணமும் அப்பார்வையில் அடங்கி இருக்கக்கண்டேன். ஓராடவன் தொட்டுப் பணிபுரியும் தவிர்க்க முடியாமை தன் திறத்தே ஏற்பட்டதே என்று நினைத்தனள்போலும். ஒன்றும் பேசவில்லை. எந்தக் குறியும் காட்டவில்லை. ஒருசில நிமிடங்களில் மீட்டும் கண்ணை மூடிக்கொண்டாள். எனது துயரவுள்ளம் ஆயிரம் ஆயிரம் அருவிகளாக வடிவெடுத்துப் பொழிய விரும்பிற்று. எனினும் கடும் முயற்சிகொண்டு என்னையே செம்மைப்படுத்திக் கொண்டேன். பட்டம்மையின் தலையைப் பிடித்துப் பிடித்து விட்டேன். சிறிது நேரம் வரை உடம்பில் வெப்பமேறும்வரை அவ்வாறு முயன்றுகொண்டிருந்தேன். அவள் தலையைச் சற்றுத் தூக்க முயன்றேன். அவள் கண்களில் இமைகள் அசையத் தொடங்கின. அவை மீண்டும் திறந்தன. எழுந்து அமர விரும்பினுள். நான் கைகொடுத்துதவினேன்.

எழுந்தமர்ந்தாள். ஒருமுறை என்னை நோக்கினுள். அப்பார்வை வெறிதாக இருந்தது; பாழ்மை குடிகொண்டிருந்தது; எக்கருத்தும் உட்கொண்டதாக இருக்கவில்லை; விருப்பம் தூண்டும் குறியும் இல்லை; வெறும் பார்வை. எதிரே கங்கையாறு கலகலவென ஒலி செய்தவாறு பொழிந்துகொண்டிருந்தது. ஆனல் கரையிலோவெனில் காண்டற்கரிய அழகின் செல்வம், செல்வத்தின் உயிர்ப்படிமம் ஆகிய இளவரசி மறந்தனளாய், மயங்கினளாய், உணர்வு இழந்தனளாய் அமர்ந்திருந்தாள். சிவபெருமானை இழிவுபடுத்துவதற்கு வேள்வி தொடங்கிய முதன் மாமனுர் த்ட்சனது வேள்வித்திருவினது மயிர்முடி பற்றிச் சிவபெருமான்தம் பூதக் குழுக்கள் இழுத்தபோது இப்படித்தான் அவள் மறதியும் மயக்கமும் கொண்டவளாய்க் கங்கைக் கரையைப் புகலிடமாகக் கொண்டாளோ? முக்கண்ண பெருமானது மூன்ரும் கண்ணினின்றும் நெருப்புப்பொறி பறப்பது கண்டு நடுநடுங்கி மூன்ரும் பிறை இந்தப் பட்டம்மைபோலக் களைப்புற்றுத் தளர்ச்சியுற்றுக் கங்கைக் கரையில் படிந்திருக்குமா? அசுரர்தம் கொடுமையால் துன்புழந்த வானுலகத்திரு என் இளவரசிப் பெருமாட்டியைப் போல யாவும் இழந்தனளாய் வானயாற்றங்கரையை நண்ணியிருப்பாளோ? ஆகா! முக்கண்ண பெருமான் மூன்ரும் கண் நெருப்பினுல் எரிந்துபொடியானுன் காமதேவன்; அவன் பக்கம் நின்றிருந்த இரதிதேவி அவன்

உடற்பொடி படிந்திருந்தாள். அவள் பட்டம்மைபோலத்தான் காணப்பெற்றிருப்பாள்போலும். அசுரன் கவர்ந்துசென்ற பூதேவியை மீட்டபோது அந்த அன்னை வராகமூர்த்தியினது வெண்கோட்டின்மீது பட்டம்மைபோலத்தான் காணப்பெற்றிருப்பாள். இராகுவென்னும் பாம்பினால் அச்சங்கொண்டு நிலவுக் கதிர்கள் திரண்டு ஒடுங்கி இவள்போலத் தோன்றியிருக்கும்; அசுரரால் அச்சமுற்ற அமுதச் செல்வம் இப்படித்தான் இருந்திருக்கும். மேற்புல் மேயும் சிற்றறிவுடையோருக்கு அஞ்சி நாமகள் இறங்கி வந்தனள்போன்றிருந்தாள் என் இளவரசி. வேண்டினோருக்கு ஈயாத கயவர்கள் சிறைக்கு அஞ்சி ஓடி வந்து விட்ட திருமகளோ இவளென ஐயங்கொண்டேன். துயரமும் மனக்கவர்ச்சியும் ஒருங்கே செறிந்த அவள் திருமுகம் இப்போதும் யாவர் உள்ளத்தையும் இனிமையால் உழக்கும் ஆற்றல் வாய்ந்ததாக இருந்தது. சிறிது நேரம் வரை இமைகொட்டாது கங்கைப் பொழிவைப் பார்த்தவாறிருந்தாள். இத்துணை தூய்மையும் பெருமையும் பொருந்திய பார்வை இதுவரை பார்த்ததுண்டா என்ற வினவுக்குக் கங்கையன்னையும் விடை கூற முடியாது. மிகுந்த நேரமாயிற்று. நானும் ஒன்றும் நவிலாது நகராது நிலத்தமர்ந்திருந்தேன். நொடிதோறும் நிலத்துமணல் சூடேறியவாறிருக்க ஆங்கு நெடுநேரம் அமர்ந்திருத்தல் அரிது. மிக்க அடக்கத்தோடு அரிவையிடம் கூறினேன்: "தேவி! உமது உடம்பு களைத்துள்ளது, கதிரவன் வெப்பம் மிக்கவாறுள்ளது, மணற்செறிவு கொளுத்துகிறது. கட்டளையாகில் ஒரு தங்குமிடம் தேடுவேன்."

பட்டம்மை மீண்டும் பார்த்தாள். இப்பார்வையிலும் பொருள் அறியும் ஆவல் இல்லை; முன்னைய வாழ்க்கை நினைவுகள் எல்லாம் கங்கையில் கரைந்துபோயினவோ என ஐயுறுமாறு தென்பட்டாள். 'அந்தோ, பேறு குலைந்த பாணனே!' நீ இளவரசியை எந்தத் துயர்நிலையில் வீழ்த்திவிட்டனை! அவள் ஒன்றும் பேசவில்லை. மீட்டுமொருமுறை கங்கையாற்றைக் கண்டாள். மிகுதொலைவு வரை ஏணிப்படிகள்போல நீரலைகள் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக அசைந்து கொண்டிருந்தன; இளவரசியின் இனிய பார்வை அவ்வலைகள்மீது அசையாத மீன்போல மிதந்தவாறிருந்தது. மீண்டும் என் கருத்தை உரைத்தேன்: "தேவீ! கட்டளை என்ன?" பட்டம்மை வலிமையற்ற மெல்லிய துயர்செறிந்த குரலால் கூறினாள்: "வருக!"

## உயிர்ப்புப் பத்து

ஒரு மாபெரும் இலவமரத்தின் கீழே பட்டம்மையை அழைத்துச் சென்றேன். அதன் பொந்துக்குள் ஒரு சிறிய செந்துகிற்கொடியும் சிறிது குங்குமப்பூச்சும் இரு மூன்று உலர்ந்த மலர்களும் கண்டேன். இது ஏதோ ஊர்த்தேவதை மன்றமாக இருக்கலாம் என நினைத்தேன். ஏனெனில் அக்கம் பக்கம் மேடுபள்ளங்களைக்கொண்ட தரையினும் ஈங்கு மரச் செறிவும் நேர்மட்டமான தரையும் மிக்கிருப்பது கண்டேன். ஊர்த்தேவதை மன்றம் இருக்கும்போது தவருமல் எங்கேனும் ஊர் இருக்கவேண்டும். ஆனுல் என் பார்வை படிந்த இடமெல் லாம் நாணற்காடும் நாய்க்கடுகுப் புதர்களும் முட்செடிகள் செறிவும் தவிர வேருென்றும் காணவில்லை. எப்போதேனும் கங்கை யொழுக்குநோக்கிப்பறந்து செல்லும் வெட்டுக்கிளிகள் இனம் மக்களற்ற இடத்தின் பாழ்மையை எதிர்ப்பதுபோலக் காணப்பெற்றன; வேறு பறவைகள் பறத்தலை நான் காண வில்லை. மிகு தொலைவுவரைப் பரந்திருக்கும் நாணற்காடு நடுப்பகல் வெப்பக்காற்றில் அசைந்தசைந்து குழலோசை எழுப்பியது. பட்டம்மை நெடுநேரம்வரை எல்லையற்ற களைப்பி ஞல் மூச்சடங்கியும் உணர்விழந்தும் கிடந்தவாறிருந்தாள். நானும் செய்யத்தக்கன செய்ய இயலாதவனுய்த் திசையிடங்களை என் பார்வையால் அளந்தவாறிருந்தேன். பட்டம்மை முழுவ மைதியின் வடிவமோ, முழுவையத்தின் துயர வடிவமோ எனக் காட்சியளித்தாள். சிறிது நேரம் இப்படியே கழிந்தது. பிறகு பட்டம்மையே வாய்திறந்து மொழியலுற்ருள். ஒரு வாக்கியம் பேசுதற்கு எத்துணை முயற்சி! எத்துணை உள்ளத் தயக்கம்! கழுத்துச் சற்றுத் தொங்கியவாறிருந்தது. கண்கள் கீழ் நோக்கிக்கொண்டிருந்தன; உலர்ந்த இலைகள் என இதழ்கள் அசைவற்றிருந்தன. உயர்குல மேன்மை என்னும் பொறையா லும் நாண அழுத்தத்தாலும் அமிழ்த்தப்பெற்றவளாகத் தென்பட்டாள்; அழகு மிகுதியான் உள்ளத்தின் சிறப்பியல்புகள் என்னும் அலைகளான் சிக்குண்டு கீழிறங்கிவந்த வானமாதோ என ஐயுறவேண்டியிருந்தது. அவள் கூறினுள்: "நிவுனி யாவும் இங்கே எங்கேயாவது கிடந்தவாறிருப்பாள் பட்ட!"

மிக்க அடக்கத்துடன் சொன்னேன்: "ஆம் பெருமாட்டி! நிவுனியாவைத் தேடவேண்டிய ஆவல் மிகுதியாகவுடையேன். ஆனால் உங்களைத் தக்க இடத்தில் சேர்ப்பித்தபின்னர் ....." பட்டம்மை என் சொல்லின் பொருள் உணர்ந்துகொண்டாள். இடைமறித்துக் கூறினாள்: "என் காவல் நினைப்பை விட்டொழி! நீ என்னைக் காக்க முடியாது. என்னைக் காக்கும் நிவுனியாவை நான் கைவிடவா? அழிவோடும் பிறந்தேன்; அழிவுறுத்தியே முடிவேன்போலும். என்னைப்பற்றிய கவலையை விட்டுவிடு. என்னை யாரும் காப்பாற்ற முடியாது. போய்ப்பார், இங்கு எங்கேயாவது நிவுனியா விழுந்து கிடப்பாள்." என் வாயினின்றும் சொல் எழவில்லை. பட்டம்மையிடத்தே உறுதி இழந்த முகத்தை என்றும் நான் கண்டதில்லை. துயரத்திலும் நிபுணிகைமீது நம்பிக்கையும் கடவுள்மீது நம்பிக்கையும் இருக்கின்றனவே! தன்னைப்பற்றிய நம்பிக்கை இழந்தாள். இப்போது தவிர்க்க முடியாத எத்துணை மாறுதல் இளவரசியின் இடத்தே ஏற்பட்டுள்ளது! நான் மிக்க துயரத்தோடு அவளைப் பார்க்கத் தொடங்கினேன். என் கண்களில் நீர் ததும்பிற்று. திடீரென அவள் பார்வை என்மீது விழுந்தது. என் துயர்நிலை கண்டதும் சில நொடிகள்வரை அவள் உலர்ந்த இதழ்களில் நனைந்த முறுவலிப்பு வரி தோன்றியது; பின்னர் இடையறாத கண்ணீர் பொழிந்தது. ஆகா! காளிதாச மாபுலவா! நீ மகிழ்ச்சியும் முறுவலிப்பும் பொருந்திய வாழ்க்கையையே நடத்திச் சென்றனை; நீ இம்மாதின் முகத்தில் தோன்றிய இரக்கமும் துயரமும் கவர்ச்சியும் குறுமுறுவலிப்பும் ஒருங்கே கலந்த பார்வையை உன் வாழ்நாளில் பார்த்திருக்கமாட்டாய். பார்வதியின் விளையாட்டுக் கெழுமிய புன்முறுவலிப்பை அழியாததாக்கி விட்டனை. செந்தளிர்மீது[1] அமர்ந்திருக்கும் மலரில் உள்ள தூய்மையும் மாசின்மையும் பார்வதியது முறுவலிப்பில் கண்டனை; பவழத்தான் ஆகிய கிண்ணத்தில் முத்துவரிசை போன்று பார்வதியின் முறுவலிப்பு இருந்ததாகக் கூறினை.

---

[1] புஷ்பம் ப்ரவாலோபஹிதம் யதி ஸ்யாந்
முக்தாபலம்வா ஸ்புடவித்ரும ஸ்தம்
ததோ அநுகுர்யாத் விஸதஸ்யதஸ்ய
தாம்ரௌஷ்டபர்யஸ்த ருசே ஸ்மிதஸ்ய

[சிவந்த இதழ்களில் பரவித் தவழும் ஒளிபொருந்திய பார்வதியினது புன்முறுவல் செந்தளிர்களிடை வைத்த வெண்மலர்க்கு ஒப்பாகும் அல்லது ஒளிபொருந்திய பவழத்திடையே வெண்முத்துப் போலாகும். (குமாரசம்பவம்)]

ஆனால் பட்டம்மையது பார்வையான யாறு, கங்கை வெள்ளத்திலே உருண்டு புரண்டு மிதந்து இறங்கியேறிப்போவதை மாபுலவா, நீ கண்டிருக்கமாட்டாய். என் இளவரசி ஒரு மலர், அது மலர்ந்த சில நொடிக்குள் யானைத்துதிக்கைபோன்று மழை பொழியத் தொடங்கிற்று; அவள் ஒரு விண்மீன், அது தோன்றியதும் திசையிடங்கள் யாவற்றையும் மூடுபனி கவ்விக் கொண்டது; அவள் வானவில், அது உண்டாகியதும் புயற் காற்றினால் வானமுழுவதும் தூசி நிரம்பிவிட்டது. இளவரசி தலை கவிழ்ந்து அழுதுகொண்டிருந்தாள். நான் செய்வதுணராது சூழ்நிலை சூழாது பொருளற்ற பார்வையுடன் நோக்கியவாறிருந்தேன்!

இலவமரத்து மற்றொருபக்கம் யாரோ அணுகும் காலடி ஓசை கேட்டேன், திடுக்கிட்டேன். அப்போதும் பட்டம்மை தலை கவிழ்ந்து கண்ணீர் கலுழ்ந்து துயருழந்து கொண்டிருந்தாள். நான் சற்று வியப்படைந்தேன்; தலைநிமிர்ந்து பார்த்தபோது செங்குருதி நிற ஆடை அணிந்தவளும் முத்தலைச் சூலமேந்தியவளுமான பைரவி மாமாயை ஆங்குவந்து நிற்பதைக் கண்ணுற்றேன். ஓரிமைப்போதிற்கு என் கண்களை நானே நம்பமுடியவில்லை. ஆனால் அவள் மாமாயையே! அகோர பைரவர் அருகில் முன்னே அமர்ந்திருந்த அந்தப் பைரவ மாதே! அதே மஞ்சள் மயிர்முடி! அதே அசோக மலர்போன்ற சிவந்த கண்! நண்பகல் மலர் வட்டம் போன்றதும் எட்டாம்பிறை போன்றதும் ஆகிய நெற்றி! நெருப்புத்தணலால் சுற்றப்பெற்ற மருக்கொழுந்தின் கொம்புபோலச் சிவந்த ஆடை அணியப்பெற்ற உடம்புக் கொடி! எல்லாம் அப்படியே, முன்னைய தோற்றமே கண்டேன். என்னை இந்நிலையில் கண்டதும் வியப்பும் நாணமும் கொண்டாள். திரும்பிப்போகவும் முடியவில்லை. என்னிடம் ஏதேனும் உசாவவும் இயலவில்லை. [1] மலையரசன் மகள் பார்வதி முக்கண்ண

---

[1] தம்வீக்ஷ்ய வேபதுமதீ ஸரசாங்கயஷ்டிர்
நிக்ஷேபணாய பதமுத்ருதமுத்வஹந்தீ
மார்காசல வ்யதிகராகுலிதேவ ஸிந்து
ஷைலாதிராஜ தநயா நயயௌ நதஸ்தௌ

[சிவபெருமானைக் கண்டதும் பார்வதி, உடல் நடுங்க வெயர்வை பொழிய முன்போக எடுத்துவைத்த அடியை அப்படியே நிறுத்தி விட்டாள். அப்பால் போகவும் இயலவில்லை, நிற்கவும் இயலவில்லை. பொழிந்துகொண்டிருக்கும் ஆற்றுவெள்ளம் குறுக்கே ஒரு பாறையால் தடுக்கப்பெற்றது போலிருந்தது.]

பெருமான் திடீரெனக் காட்சியளித்தபோது அப்பால் போகவும் இயலவில்லை, நிற்கவும் இயலவில்லை என்ற எக்கச்சக்கமான நிலைமை மாமாயைக்கு ஏற்பட்டது. நான் இமைப்பொழுதில் எழுந்தமர்ந்தேன். நெற்றி மண்ணில் தோய வணங்கிப் பட்டம்மையிடம் சொன்னேன்: "பெருமாட்டீ! எழுக, பார்வதியம்மைபோன்ற பெருமை வாய்ந்தவரும் மாமாயை வடிவ மானவரும் ஆகிய அன்னை நமது நற்பேற்றின் பயனாக வந்துள் ளார். இன்று நன்மை மலரும் நாள்; நாளும்கோளும் நன்னிலை யில் உள்ளன; கதிர்க்கடவுள் களிப்புக்கொண்டுள்ளான். ஊழ்வினைப் பயன் முடிவுற்றது. பெருமாட்டீ! எழுக, அன்னையை வணங்கி வாழ்க்கைப் பயனைப் பெறுக!" தன்னை உறுதிப்படுத்திக்கொள்ள இளவரசிப் பெருமாட்டிக்குச் சிறிது நேரம் பிடித்தது. அவள் மலர்க்கண்கள் வீங்கிச் சிவந்திருந்தன. அவள் முகம் முதுவேனில் தாக்கிய தாழம்பூவென வாடி இருந்தது. என் சொற்கேட்டு மாமாயை அன்னையை வணங்கத் தலைகவிழ்ந்தவாறு நின்றிருந்தாள். ஒருமுறை என்னை நோக்கிப்பின் ஒரு முறை பட்டம்மையைப் பார்த்தாள். நாணம், செய்தி அறிய ஆவல், நட்பு எனும் முக்கருத்துக்களும் முகத்தில் முறைமுறை தோன்றி மறைந்தன. முதலில் அறிவுறும் ஆவலைத் தணிப்பது தக்கது என முடிவு செய்தேன். "தேவி! மாண்புற்ற அகோர பைரவரிடம் நான்குறிப்பிட்ட பட்டம்மை இவள்தான். நான் இம்மாதின் ஒரு சிறு ஊழியன்" சுருக்கமாக நேற்று நடந்ததைக் கூறினேன். அவள் முகத்தே நாணக்கருத்து நீங்கிற்று. கவனத்துடன் என் மொழிகளைக் கேட்டாள். பின்னர் முறுவலிப்புடன் இளவரசியின் தலையைத் தடவிக் கொடுத்தாள்; என்னை நோக்கிக் கவலையோடும் கூறினாள்: "நல்லது நல்லது செல்வ! உன் மூலாதாரம் நன்னிலையில் உள்ளது. உனக்கு அவதூதரின் அருட்பேறு கிடைத்துள்ளது. உன் தலைவியது கேடு விலகியது. உன் கேடு இன்னும் விலகவில்லை செல்வ!" மீண்டும் சிறிது நினைத்துச் சொன்னாள்: "இன்று மாநவமி; திரிபுரசுந்தரிதன் விருப்பம் தவிர்க்க முடியாதது." அவள் முகத்தோற்றம் சற்றுக் கடுமையாகி விட்டது. அவள் தன் கருத்தில் தானே அகப்பட்டவள் போன்று காணப்பட்டாள். என்னுள்ளத்தில் அச்சம் தோன்றியது; பின் மறைந்தது. பட்டம்மைக்கும் சற்று அச்சம் ஏற்பட்டது. ஏன் எனில் மாமாயை ஆழ்ந்த கருத்திற்குள் முழுகினள் போன்றிருந்தாள். தான்கொண்ட அச்சத்தைப் பட்டம்மை

பெருமுயற்சியோடும் அடக்கிக்கொண்டாள். இளவரசியின் அந்நிலை பார்த்துச் சுவைப்பதற்குரியது. இருண்ட மயிர்முடி சிதறி நெற்றியிடத்தைக் கவிந்துகொண்டது. மலர்ந்த பெரிய கண்கள் கீழ்நோக்கிக்கொண்டிருந்தன. பவழச் செவ்விதழிரண்டும் உறுதியான கருத்துக்களால் நிரம்பியிருந்தன. வெளிறிய கன்னத்திடங்களிலும் மயிர்முடி அலைந்துகொண்டிருந்தன. சிவந்த மோவாய் இருந்திருந்து அசைந்துகொண்டிருந்தது. இடதுதோள் சோமக்கொடிபோல ஊசலாடிக்கொண்டிருந்தது. வலதுதோள் பொன்னிற முன்றானையில் மறைந்திருந்தது. தன் அடிக்கட்டைவிரல் கொண்டு நிலத்தைக் கீறியவாறிருந்தாள். இவ்விதமாகக் கவலைக் கருத்தே ஒரு வடிவம் கொண்டதென இளவரசி நின்றிருந்தாள். மாமாயை நினைவென்னும் உறக்கத்தினின்றும் விழித்தாள்; இளவரசியைப் பார்த்தாள்; பின்னர் உன்னிப்போடு திசையிடங்களைத் தன் கண்களைக் கொண்டளந்து கோட்டுவாய் விட்டவளாய், விரல் கொண்டு சீழ்க்கை ஒலித்தவளாய்க் கூறினாள்: "திரிபுவன பைரவீ! திரிபுரபைரவீ!" இப்போது மிக்க அன்போடு இளவரசியைத் தன்பால் இழுத்து அவள் மோவாயைப் பிடித்து முகத்தை மேலே உயர்த்தி உரைத்தாள்: "எனில் இவள்தான் அப்பெருமாட்டி! இவள் பெருமாட்டியாக இருத்தற்கு உரியளே. ஆகா! அமுதம் பொழியும் எத்துணை அழகிய முகம்! வருக, செல்வீ! தனியே போகலாம்." பின்னர் என்பால் திரும்பிப் பணித்தாள்: "போ, செல்வ! நிவுனியாவைத் தேடிக் கண்டுபிடி. உன் பெருமாட்டி இங்கு நலமாகவே இருப்பாள். கவலையுறுதே. உனக்கு அகோர பைரவர் அவதூதரினது அருட்பேறு கிடைத்துளது. உன் மூலாதாரம் விழிப்புடன் இயங்குகின்றது." நான் வணங்கி மெதுவாகக் கங்கையை நோக்கிப் பெயரலானேன்.

நெடுந்தொலைவு போய்விட்டேன்; ஆனால் நிபுணிகையின் இருப்புக் கண்டிலேன். இவ்வாறு அவளைத் தேடுதல் வீண் எனச் சிற்சில பொழுதில் நினைக்கவுஞ் செய்தேன். முழுகியவள் இவ்வாறு என் முன் காணக்கிடைப்பாளா? ஆனால் அவள் இறக்கவில்லை, உயிரோடிருக்கின்றாள், எங்கேனும் காணக் கிடைப்பாள் என்று என்னுள்ளம் கூறியது. இப்போது இளவரசி தன் நினைவு வந்தது; என்னை இன்னும் முன்னேறுவதினின்றும் தடுத்தது. அவள் இன்னும் உணவு உட்கொள்ளவில்லை. நானும் பசியாக இருந்தேன்; ஆனால் நெடுநாள் பசியாத இருந்து பழக்கமானவன். எனது நாடோடி வாழ்க்கை

யில் ஐயமேற்று மரநிழல் வாழும் பழக்கமுடையேன். ஆனுல் இளவரசி பட்டினி கிடக்கின்ருள் என்று நினைத்ததும் உள்ளம் வெடித்தது. உணவு தேடிக்கொடுப்பதில் வெற்றி பெற்றேனுயினும் மாவராகன் எங்கே? இப்போது தன் தொழுகைக்குரிய மாவராகப் படிமம் கையிலிருந்தும் கெட்டுப்போனதை நினைத்து வருத்தப்பட்டுக்கொண்டிருப்பாள். நான் கங்கையாற்றில் நீரில் முழுக்கடித்தேன் என்று செய்தி அறிந்தாளாகில் என்னை எவ்வளவு வெறுப்பாள்! 'அந்தோ பாணபட்ட! பேறிழந்தவனே! இளவரசி உன்மீது கொண்டுள்ள நம்பிக்கையே நீ பெற்ற பெருஞ்செல்வம்; அதனையும் இழந்தனையே.' மேற்கொண்டு நடத்தல் வீண் எனவுணர்ந்தேன். மிகுதொலைவுவரை ஆற்றுநீர் பொழிந்தவாறிருந்தது. நாணற்காடு குழலோசை எழுப்பிக் கொண்டிருந்தது. மாந்தர் நடமாட்டத்தையே கண்டிராத மணற்காடு காய்ந்துகொண்டிருந்தது. இளவரசியை விடுத்து இத்துணைத் தொலைவுவரை போயிருக்கக்கூடாது. திரும்பி அவளிருக்கும் சூழலைச் சேர்ந்ததும் பொழுது சாய்ந்தது. இளவரசியும் பைரவியும் இலவ மரத்திற்குக் கீழ்ப்பால் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அவ்விருவரும் என்னைப் பார்க்க வில்லை. இவ்வளவு விரைவில் இருவருக்கும் நட்பு ஏற்பட்டு விட்டதே! கூடிப்பிரிந்து சேர்ந்தவர்போன்று உள்ளனரே! முற்பிறப்பில் தாயும் மகளுமாக இயங்கினுரோ? பல நாள் பிரிந்து சேர்ந்த செல்வத் திருமகள்போல இளவரசி பைரவியின் மடியில் அமர்ந்திருந்தாள். மாமாயை உசாவினுள்; இளவரசி விடை பகர்ந்தாள். பேச்சின் போக்கு என்னைக் குறித்திருந்தபடியால் சற்று மறைந்து கேட்கலானேன்; இது மரபல்லவாயினும் இயல் புக்கு எதிரானதல்ல. இருவரிடையே பின்வருமாறு வினு விடைகள் நிகழ்ந்தன.

"நீ பட்டனைப்பற்றி என்ன நினைக்கின்றனை செல்வீ?"

"என்ன நினைக்கின்றேன் தேவீ! எனக்குத் தெரியவில்லை. நிபுணிகை அவனைத் தேவன் என்கின்ருள்; ஆனுல் அவனை அங்ஙனம் நினைப்பதெப்படி?"

"எனில் உள்ளத்தில் முதலில் அரும்புவதைக் கூறுக. நினைத்துச் சொல்வது எஞ்ஞான்றும் வாய்மையின்பாற் பட்டதல்ல."

"என்ன சொல்வது பெருமாட்டி! பட்டன் என்னிடம் வந்து முதன்மொழி மொழிந்தநாளே புதுப்பிறப்பு எய்தினேன்; அந்த நாள் கதிரவன் கீழ்ப்பால் குன்றின்மீது தோன்றி என்மீது

நன்மையாகிய ஒளியைப் பொழிந்தான். அந்த நாள் வைகறை என் வாழ்வு முழுவதையும் நற்பேறு நிரம்பியதாகச் செய்து விட்டது. அன்றே எனது வாழ்வு பயன்பட்டதென உணர்ந்தேன்.''

''வாழ்க்கை பயன்பட்டதெப்படி?''

''தாயே! பட்டன் மருண்ட மான் கன்றுபோல என்னைக் காணலுற்ருன். அப்பார்வையில் இழிகருத்துச் சற்றுங் கண்டிலேன். ஏதோ புதிய கதிர் கண்டவன்போல என்னை உற்றுப் பார்த்துத் தன் கண்களால் விழுங்குபவன் எனக் காணலுற்ருன். அவனது தூய விரிந்த நெற்றியிடத்தே அன்பொளி கண்டேன். ஒளிபொருந்திய வெள்ளிக்கோளினின்றும் ஒளி பீறியதுபோல அவனது பரந்த கண்ணிலே ஒளிவீசக் கண்டேன். அவன் மெல்லிய இனிய மொழியில் இன்பம் கண்டேன். பட்டன் மிகுந்த தெளிவும் பொருட்செறிவும் உள்ளச்சுருக்கமில்லாத பண்பும் பொருந்திய இரண்டொரு மொழிகளே மொழிந்தான்; எனினும் அவை சாமவேத இசையினும் இனிமையாக இருந்தன; தூயனவாகவிருந்தன. ஆனல் அவன் பெருமை அவன் சொல்லினும் மேன்மையானது. அரண்மனையில் என் அழகு பற்றி இச்சகப் பாட்டுக்கள் முன்னர் எண்ணிறந்தன கேட்டுள்ளேன். ஆனல் உண்மைமொழி முதன்முதல் அவன் வாயினின்றும் கேட்டேன். முதன்முதலில் என்னுள்ளே ஒரு தேவதை உண்டென்றும் தொழுபவன் இன்மையால் அது வாடிச்சுருங்கி இருந்ததென்றும் உணர்ந்துகொண்டேன். என்னை மாதாகப் படைத்துக் கடவுள் வாழ்த்திஞன் என்றும் முதன்முதல் உணர்ந்துகொண்டேன். என் வாழ்க்கைப் பயன் அதுவென அறிந்தேன்.''

''இஃதொன்றும் புதியதல்ல செல்வீ!''

''தாயே! முற்றிலும் புதியதோர் செய்தியே! இந்த நீல வானம், இந்த அசைவுறுங் காற்று, இந்தத் தூய கங்கையாறு யாவும் சான்று. ஒரு மாதினுக்கு இத்துணைக் கருப்பொருள் வரலாறு வடிவெடுத்தது இந்நானிலத்தில் முதல் தடவைதான் என்பதை அறிக.''

''செல்வீ! எந்தச் சொல்லின் பற்றுக்கொண்டு வாழ்க்கை சாரமுடைத்து என்கின்றனை?''

''நான் அறியாதவள், அன்னையே! எந்தச் சொல்லை எவ்வாறு ஈடுபடுத்துதல் என்ற திறன் அறியேன். பாணபட்டன் கூற்றுக் கேட்டு என் இவ்வுடல் வெறும் சுமைமட்டும் அன்று, மண்பாவை மட்டுமன்று, அதனிலும் மேம்பட்டது என்று முதன்

முதல் உணர்ந்தேன். கடவுள் என் உடலைப் படைத்தபோது என்னை ஒறுத்தற் பொருட்டுச் செய்யவில்லை. என்னை மாதாகப் படைத்து எனக்கு நலமே புரிந்தான். தாயே! பட்டன் இப் பாரில் பாரிசாத மலர்; இவ்வாழ்க்கைக் கடலின் தாமரை மலர், முள்செறிந்த வையத்தில் உள்ளங்கவரும் அழகிய மலர்.''

மாமாயை சிறிது நேரம்வரை பேசாதிருந்தாள். பின்னர் நெட்டுயிர்ப்புயிர்த்தாள். நொடிப்பொழுதுவரை அமைதி குடி கொண்டிருந்தது. பின்னர் திடீரென மாமாயை தோற்றனள் போல் கூறினாள். ''என்ன செய்தியென எப்படி அறிவேன், மகளே! ஆணைக் கட்டுப்படுத்துவதில் மாதின் வெற்றி அடங்கி யுள்ளது. ஆனால் வாழ்க்கைப்பயன் அவனை விடுதலை செய்வதில் உள்ளது எனக் குருநாதர் எனக்கு அறிவித்தார். வாழ்நாள் முழுவதும் இவ்வுண்மையை நம்பி வந்துள்ளேன். நோன்பு, தவம், வழிபாடு யாவற்றுக்கும் ஒரே குறிக்கோள்—அதுதான் வாழ்க்கையைப் பயன்பெறச் செய்தல். திரிபுர பைரவியின் காட்சியை இன்னும் நான் பெறவில்லை; இனி நிகழ்வதைக் குரு பெருமானே அறிவார். நீ வாய்மையின் காட்சி கண்டனை. உன் மொழி உண்மையாகவும் இருக்கலாம்.'' சிறிது நேரம் மறந்த ஏதோ செய்தியை நினைவுத் திரைக்குள் கொணர முயன்றனள் போல மாமாயை மொழிந்தாள்: ''வாழ்க்கைப் பயன்!'' பிறகு பேசாதமைந்தாள்.

மிக்க நேரம் மறைந்திருக்க நான் விழையவில்லை. கேட்ட அளவே ஏராளம்; இன்னும் இதனினும் அதிகம் கேட்டேனாகில் செருக்கேற்றமாகிவிடும், அறியாமை மீறும், எனதென்னும் பற்று முற்றிவிடும். இவ்வளவில் முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்தேன். 'பாணபட்டனே! வேண்டிய பரிசு கிடைத்துவிட்டது. கிடைத்தற்குரியதினும் மிக்குக் கிடைத்துவிட்டது. இன்னும் மிக்கு விழைவேனாகில் தலைக்கிறுக்கு மீறிடும்.' கனைத்து நான் வந்ததைக் குறித்தேன்; அவர்களை நோக்கி மெதுவாக நடந்தேன். மருட்சியசைவின்றிக் கண்ணெடுத்துப் பட்டம்மை என்னைப் பார்த்தாள்; தன் மொழிகளைக் கேட்டுவிட்டேனோ என்பதை அறியும் ஆவலைக் கொண்டாள். ஆனால் பாணபட்டன் இத்துணை இழிவு படைத்தோனல்லன். மெய் பொய்களின் அவி நயம் செய்தவாறே அவன் வாழ்க்கையை இந்நாள்வரை நடத்தி வந்திருக்கிறான். ஓ, வானமாதே! அழியும் நிலவுலகில் ஒரு பாத்திரம் எடுத்து நடிக்கும் இந்த ஆளைப்பற்றி அறிந்துகொள்வதில் தவறு செய்துவிட்டனை. எனினும் இத்தவறு கெடுதலாக இல்லை.

மாமாயை என்னைப் பார்த்து மகிழ்ச்சியுற்றாள். தன் துகிற் பையினின்றும் சில பழம் கிழங்கு எடுத்து எனக்குத் தந்துரைத் தாள்: ''நீ சாப்பிடாமல் இருந்தமையால் உன் தலைவி இது காறும் உணவு உட்கொள்ளாமல் இருக்கின்றாள்.'' பசியாற்றிய பின் நான் வேறு திசைநோக்கிச் சென்றேன். நிபுணிகையைத் தேடுதற்குப் போகிறேன் என்று கூறினாலும் பட்டம்மைக்குப் பேச வாய்ப்பளிக்கவே சென்றேன். இப்போது கீழ்ப்பால் சென் றேன். பொழுது முன்னரே சாய்ந்துவிட்டது. இரண்டு கல் நடந் திருப்பேன். ஒரு கூட்டம் பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் வருவதைப் பார்த்தேன். இரு மூன்று இளைஞர்கள் மிருதங் கம் புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தனர். கூட்டத்தில் மற்றவர் முன்றானைகள் அலையச் செந்துகில் அணிந்த மாதராக இருந்தனர். மார்பின்மீது நீலக்கச்சம் இறுகக் கட்டி அதன்மீது மஞ்சள் மேலாடை அணிந்திருந்தனர்; அவர் வெறிகொண்டவ ராய் நடனமாடிக் கொண்டிருந்தனர். நடனமாடும்போது சடக் கென அவர்கள் திரும்புவதால் காதற்கடலிலே சுழிகள் அசைவன போலக் காட்சியளித்தனர். அவர்கள் காலடி பெயர்தல் தாளத் திற்கேற்ப இல்லை; ஆனால் முரட்டுத்தனமாக இருந்தமையால் அவர் அனைவோரின் மஞ்சள் மேலாடையும் நீலக்கச்சங்களும் ஒரு சக்கர வடிவத்தைத் தோற்றுவித்தன. நீண்ட மயிர்ப் பின்னல் நடனத்தால் மேலும்கீழும் அசைவது நிலத்தையும் வானத்தையும் கருத்த ஒளி வரியால் தொடர்புறுத்துவது போலிருந்தது. அடிக்கடி மேலே எழுந்து கீழே விழுகிற சிவந்த அங்கைகள் வானமெனும் நீலப்பொய்கையிலே கீழ்நோக்கி மலர்ந்த தாமரையின் அழகைக் காட்டின; இப்பொழுது ஒடியுமோ அப்பொழுது ஒடியுமோ என்ற கவலையைத் தூண்டு கின்ற அவர்தம் இடையும் புயற்காற்றினால் அயர்வுற்றலை கிற நீர்மிட்டான் கொடிபோன்று காண்போர்தம் உள்ளங் களை உருக்கின. உள்ளங்குளிர நான் அவர்தம் முரட்டுத்தன மான ஆனால் கவர்ச்சி பொருந்திய நடனத்தைப் பார்த்தவாறே நின்றுவிட்டேன். நடன ஊக்கம் சற்றுக் குறைந்தபோது மிருதங்க முழக்கும் இளைஞனிடம் அவர்களைக் குறித்து உசா வினேன். அவன் சொன்னதின் கருத்துரை பின்வருமாறு: 'அவர்கள் கங்கையும் மாசரயு நதியும் சேர்கின்ற வயிரப் பொய்கை யிடத்தே தேவி பூசை செய்யச் சென்றிருந்தனர். இன்று மாநவமி நாள்; இன்று வயிரப் பொய்கையிடத்தே தேவிபூசை பெருமையுடன் நடந்தேறி வருகிறது. அவர்கள் ஊர் மாசரயு

நதியின் அக்கரையில் உள்ளது.' இவ்விதம் அவர்கள் கூறியதும் நான் என் குறிக்கோளுக்குப் பொருளுடைய வினவும் விடுத்தேன். பேர்பெற்ற, மற்போர் வல்ல உலோரிக தேவரே அவர்கள் தலைவர். அந்தணர் கடவுளர்மீது எல்லையற்ற அன்பு பூண்டவர்; என்னைப்போன்ற புலவர்களைத் தலைமேல் தாங்கும் பண்புடையவர். என்னை அத்தலைவரிடம் அழைத்துப்போக விரும்புவதாக இளைஞன் இயம்பினன். தேவியைக் காணவேண்டுமென்று கூறித் தப்பித்துக்கொண்டேன். வயிரப் பொய்கையில் வீற்றிருக்கும் தேவியை இரவில் காணப்போவது தக்கதல்ல; வாம வழிபாட்டினர் இரவிலேயே ஆங்குச் சென்று வழிபாடு செய்கின்றனர். இல்லறத்தான் அப்பொழுது அங்குச் செல்லக்கூடாது என்றும் இளைஞன் என்னை வேண்டிக்கொண்டான். பிள்ளையின் இயல்புணர்ந்து உள்ளுக்குள்ளேயே புகழ்ந்து அவன்சொற்படி நடக்காது வயிரப் பொய்கை போகலானேன். மாலை வந்து சூழ்ந்தது; பட்டம்மையிடம் நான் போயிருக்கவேண்டும். மாந்தர் அறியாத புறவல்லமை ஒன்று என்னைத் தள்ளிக்கொண்டு போயிற்றெனப் போய்க்கொண்டிருந்தேன். நானே எனக்குச் சொந்தமாயில்லை என்று உணர்ந்தேன். யானே செல்லவில்லை. ஏதோ என்னைக் காந்தம் இரும்பை இழுப்பதுபோல இழுத்தது. இதை மாந்தர் நம்பமாட்டார். எனினும் நான் சொல்வது முற்றிலும் உண்மை. என்னருகே வியக்கத்தக்க ஒரு மாது புயல் விரைவுகொண்டு எனக்கு முன்னதாக ஓடிக்கொண்டு இருந்தாள். அவள் இயல்பு பெரும் மறையாகவே இருந்தது. அவள் கழுத்தில் மண்டையோட்டு மாலை கடகடவென ஒலி செய்தது. இடையில் எலும்புக்கோவை வடம் மின்னிற்று. அவள் கையில் மண்டையோட்டு மேளம் முழங்கிக்கொண்டு இருந்தது. அவள் மயிர்முடி ஆலமர அடிமரப்பட்டை மொண்டுகளெனக் கரடுமுரடாக இருந்தது. நீண்டமயிர் முடி இடுப்பில்கட்டிய வாளின் மணிகளில் மோதுறுவதால் கிண்கிணென ஓசை கிளம்பிக்கொண்டு இருந்தது. அம்மயிர் முடித்தொங்கல்கள் கன்னத்தின் மீது தொங்கிக்கொண்டு இருந்த பலகறை மாலையில் அடிக்கடிச் சிக்குண்டன. என்னை உராய்ந்தவளாய் வானத்தில் பறப்பவள் போல ஓடிச் சென்றாள். கயிற்றில் பிணிப்புண்ட குரங்குபோல இழுக்கப்பெற்றேன்.

வயிரப்பொய்கை விரிந்ததோர் சுடுகாடாகும். நாற்பாலும் வேப்ப நெய்யில் வறுக்கப்பெறும் வெள்ளைப்பூண்டுபோல எரி பிணங்களின் நாற்றம் உயிரைத் துளைத்தது. சுடுகாட்டின்

வழிகள் எங்கும் கழுகுகள் நரிகள் இவற்றின் காலடிச் சுவடு களால் நிரம்பி இருந்தன. எலும்புகள்மீதும் சதைத் துண்டுகள் மீதும் பரவிய இரவு இருள் பேரச்சத்தத்தைத் தூண்டியது. எரிகின்ற பிணங்களின் அருகே சிறிது ஒளி காணப்பெற்றது. ஆனல் அவ்விடங்களுக்கு அண்மையிலேயே ஊசி குத்தினும் பேராத இருள் செறிந்து இருந்தது. ஆந்தைகளின் கூ கூ ஒலியும் பெண்நரிகளின் ஊளேயும் இருந்திருந்து ஒலிப்பதால், சுடுகாட்டின் சூழ்நிலே உள்ளத்தில் நடுக்கத்தை உண்டாக்கியது. இந்த அச்சந்தரும் காட்சிக்கிடையேதான் கராளதேவி மன்றம் இருந்தது. மன்றம் பேரளவுக்குத்தான், ஒரு கல் மேடை, வேள்விக்குழி, நட்டதொரு தறிக்கம்பு தவிர ஆங்கொன்றும் இல்லே. தேவியின் தோற்றம் உண்மையில் வெருளத்தக்கது. பாலருந்தும் குழந்தைகள் அதனேக் கண்டால் அலறி உயிர் விடும். அதன் தொங்கிய நாக்கு ஒரே அடியாக முழு வையத் தையும் வாரிவிழுங்குவதுபோலவும் தோன்றியது; அதனேக் காப்பது போலவும் காணப்பெற்றது. அதன் கழுத்தில் நெடிய தொரு மாந்தர் மண்டையோட்டு மாலே குதிகால்வரை தொங்கிக் கொண்டு இருந்தது. மறையியல்பினளாம் அந்த மாது தேவி யின் முன்னம், மண்டியிட்டு வணங்கிக் கொண்டிருந்தாள். அவளினும் அருவருக்கத்தக்க வடிவம் புனேந்த ஓர் ஆடவன் அப்பொழுதுதான் திரட்டிய பச்சைக் கொழுப்பைக் கொண்டு வேள்வி செய்துகொண்டு இருந்தான். கொழுப்புநெய் தீயில் விழவிழத் தழல் நாக்கு எவனேயும் வெருட்டும்வகையில் வானம் நோக்கி உயர்ந்திருந்தது. ஒரு நொடியில் வானத்தைக் கொழுப் பின் புகை கவிந்துகொண்டது. காற்றுப் பரப்பு முழுவதும் தீயநாற்றத்தால் நிரம்பி விட்டது. தீக்குழியைச் சுற்றிலும் வேள்விக்குரிய பொருள்கள் மாந்தர்மண்டை ஓடுகளில் நிரப்பி வைக்கப் பெற்றிருந்தன. என் உள்ளத்தில் அக்காட்சி வெறுப் பைத் தூண்டிற்று எனினும் என் விருப்பத்துக்கு மாருக அவ் விடம் நோக்கி இழுக்கப்பெற்றேன். முடிவில் பலியிடப் பெறும் தறிக்கம்பை ஒட்டினற்போலக் கிட்டி நின்றேன். வேள்வி இயற்றிக்கொண்டிருந்த வாமவழிபாட்டின் கொடிய ஊதல் ஓசை யொடும் சங்கற்ப மந்திரம் ஓதினன். நான் ஓவியத்தில் தீட்டப் பெற்ற படிமம்போன்று அசையாது என்னேச் சுற்றிலும் நடை பெறும் நிகழ்ச்சிகளே ஊக்கமுடன் கண்டவாறு நின்று கொண்டிருந்தேன். சங்கற்ப மந்திரத்தினல் வேள்வி தொடுப் பவன், பெயர் அகோரகண்டன் என அறிந்தேன்; வழி

பாட்டினள் பெயர் சண்டமண்டனே எனவும் அறிந்தேன். அவள் பல முத்திரைகளே அவிநயஞ் செய்து கோங்குமலர் மாலே ஒன்றினே என் கழுத்தில் இட்டாள். பின்னர் கீச்சுக்குரலில் தியான மந்திரம் ஓதினுன்:

**சண்டோத்தண்ட நிசும்பமான மதநாத்யஷ் ஞேஷ்ண ரக்தப்பிரியா**
**உத்தாலோத்தத தாண்டவாஹதநபோ வித்வஸ்த தாராகணு**
**பிண்டே ஷோடஸ நாடிகார்சித பதா ஷட்சக்ரவக்ராஸநா**
**முண்டஸ்ரக் பரிவேஷ்டிதாம்பரபடா ஸித்யை கராலா அஸ்துவः**

[மிகக் கடுமையாகக் கசக்கிப் பிழிந்த மிகுந்த இரத்த ஆவலுடைய வளும், உயர்ந்ததும் மதம் பிடித்ததுமான தாண்டவ நடனத்தால் தூளாக்கப்பெற்ற விண்மீன்கள் உதிர உடம்பின் பதினுலு நாடிகளான் அருச்சிக்கப்பெற்ற திருவடிகளே உடையவளும், அறுகோண சக்கர மாகிய தவிசினே உடையவளும், முண்டமாலே அணிந்திருப்பவளும், வானவெளியையே ஆடையாகக் கொண்டிருப்பவளும் ஆகிய ஆனந்த கராளதேவி எங்களுக்கு நன்மையைச் செய்க.]

தீ நாற்றத்தால் என் மூளே குழம்பிவிட்டது. இரத்த நாளங்கள் வீங்கிவிட்டன. புகையின் அழுத்தத்தான் என் கண்கள் பூத்துவிட்டன. எனினும் மரபுக்கு மாறுன சடங்கு கள் தடுக்க முடியாமல் நிறைவேறிவந்தன. மெதுவாக என் உணர்வு கெட்டுக்கொண்டு வந்தது. வியப்பென்னவெனில் நான் கீழே விழவில்லே. உணர்ச்சியற்றவனுய் என் முன்னர் நடந்தனவற்றைக் கண்டவாறிருந்தேன். வான்வெளியில் கொடிய பூதங்களும் பைரவிகளும் இறங்கிக் கொண்டிருந்தனர்; என்னேத் தம்முறையில் வணங்கி ஆரத்தி எடுத்தவாறிருந்தனர். வியப்பான—இதுவரை கண்டிராத வகையில் வெற்றி முழக்கம் செய்த திசை இடங்களேச் செவிடுபடச் செய்துவந்தன. ' அனே வோரையும் வெருட்டுகின்ற தோற்றங்களேக் கொண்ட பிசாசுகள் எலும்புகளேக் கொண்டு தாளமிட்டுக்கொண்டிருந்தன. உணர்வு இழந்தேன் ; அசைவற்றேன். சண்டமண்டனே மீண்டும் தொழுகைச் செய்யுள் பாடினுள் :

**யத் ப்ரம்ஹாண்ட கடாஹ ஸம்புட தடோல்லாஸி ப்ரசண்டம் மஹ :**
**யத்தத் கம்ப விபாண்ட மண்டந மஹஜ்ஜ்யோதிः பரம் ஜ்யோதிஷாம்**
**த்யாநா வஸ்தித தத்கதேந மனஸா யத் யோகிபிர் த்யாயதே—**
**தத்தே தாம நிரஸ்த விஸ்வகுஹகம் பர்கः பரம் தீமஹி ॥**

பற்பல முத்திரை அவினயங்களுடன் கத்திக்குப் பூசை நடைபெற்றது. அகோரகண்டன் எனக்குப் பணித்தான் :

“உனக்கு யாவற்றினும் இனியதாக உள்ளதை உள்ளுக.” ஒரு நொடியில் பட்டம்மையின் இளையமுக அழகு என்முன் தோன்றியது. நான் அஞ்சிக் கூச்சலிட்டேன். நான் பட்டம்மையை நாணற்காட்டில் தனியாக விடுத்து ஈங்குப் பலியாக வந்தேன். எனது இரத்த நாளங்கள் துள்ளத் தொடங்கின. அஞ்சிய நிலையில் அகோர பைரவரை நினைத்தேன். என் கண்கள் தாமே மூடிக்கொண்டன. பூதங்கள் பேய்கள் ஆரத்தி சுற்றிக் கொண்டிருந்தன. பிசாசுகளின் கொடிய குரல்கள் வெற்றி முழக்கம் முழங்கிக்கொண்டிருந்தன. ஆந்தைகளின் “குக்குக்குகுகு” என்ற ஒலி திசையிடங்களைக் கிழிக்கத் தொடங்கியது. அகோர கண்டனும் சண்டமண்டனையும் சேர்ந்து செய்த மந்திர ஊதல்கள் காற்றுப் பரப்பினை நடுங்கவைத்தன. சினமுண்ட பைரவிகளும் பிசாசுகளும் பொதுவாக விழிப்போடு என்னைச் சூழ்ந்து கொண்டன. சண்டமண்டனை கொடியதோர் மருளுற்றதாலே தலையைக் கையால் அடித்துக்கொண்டாள். அகோரகண்டன் ஹா! ஹா! ஹூ! ஹூ! என்று மந்திரம் ஊதிப் பசுங் கொழுப்பை அவியாகப் பொழிந்து சடசடவென்று ஓசையொடு தழல் வானம் எட்டுமாறு செய்துகொண்டிருந்தான். நான் கண் திறந்தேன். எதிரே மாமாயை பட்டம்மை நிபுணிகை பின்னால் உருவிய கத்தியுடன் விக்கிரவர்மன், பத்து மௌக்கரி வீரர்கள் கல்போல உணர்ச்சியற்றவராய் நின்றுகொண்டிருந்தனர். பட்டம்மை அஞ்சிய மான்போன்று நின்றிருந்தாள். நான் தன்னுணர்வற்றவனாய் வருத்தமுடன் அவளைப் பார்த்தவாறிருந்தேன். என் இரத்தநாளங்கள் தம் நிலைதாங்கும் பொறையற்றன. என் செவியருகே இரத்தக்குழாய் தானே அறுபட்டுக் குருதி தானே பொழியத் தொடங்கிற்று. குருதி கண்டு அகோரகண்டன் கலவரமுற்றான். அவன் சண்டமண்டனையை “விரைக” வெனப் பணித்தான். ஆங்குப் பட்டம்மை மூர்ச்சையுற்று வீழ்ந்தாள். அவள் உணர்விழந்து விழுந்தது கண்டு குழம்பிய மூளை இன்னும் பதின்மடங்கு குழப்பமுற்றது. நிபுணிகை வெறிகொண்டாற்போல வேதிகை நோக்கி விரைந்தாள். அவள் கால்களில் யாரோ புயற்காற்றைப் பிணித்தாற்போலும். மாமாயை கற்படிமம் போல அசைவற்று நின்றிருந்தாள். பட்டம்மையை அவள் காணக்கூடவில்லை. மாமாயை கண்களிலிருந்தும் இதுவரை கண்டிராத ஒளி பீறியது. உறுதியோடும் நிபுணிகையைப் பார்த்தவாறு இருந்தாள். புயற் காற்றுப்போல அவள் பறந்து வந்தாள். வந்து ஒரே தள்ளு

தள்ளிச் சண்டமண்டனையைக் கீழே வீழ்த்தி அவள் கையிலிருந்த கத்தியைக் கைப்பற்றிக் கொண்டாள். அதனை ஏந்தியவளாய் அஞ்சத்தக்க கொடிய நடனத்தை புரியத் தொடங்கினுள். முரட்டுத்தனமான அடி போடுவதால் அவள் காலடிக் கீழே வேள்விக்குழி சிதைந்தது. வெங்கொடி கிழிந்து துண்டு துண்டாய்ப் பறந்துபோயிற்று. பலித்தறி முறிந்து விழுந்தது. எத்துணை கடுமை கொடுமை அந்த நடனம்! அவள் பெயர்த்து வைத்த காலடியின் கீழ் நிலம் குழிவிழுந்தது; விண்மீன் குழுக்கள் நிலைதடுமாறின. கராளதேவி மீதசைந்த மனிதமண்டை மாலை கடகடகடகட வென்று ஒலித்தது. நான் மாமாயையை நோக்கினேன். உறுதியோடும் அவள் நிபுணிகையைப் பார்த்த வாறிருந்தாள். திடீரென அவள் தன் பார்வையை என்மீது செலுத்தினுள். ஆயிரம், ஆயிரம் கதிரவர் என்னை நோக்கினரோ என்று ஐயம் கொண்டேன். இதுவரை கண்டும் கேட்டுமிராத வானவால்மீன் என்மீது பாய்ந்ததோ என வியந்தேன். நிபுணிகை உணர்விழந்து நிலம்மீது விழுந்தாள். இப்போது என் முறை வந்தது. நான் அகோரகண்டனைத் தோள்மீது தூக்கிக் கொண்டேன்; எந்த வகையில் தாண்டவ நடனம் புரிந்தேன் என்பது இப்போது நினைவில் இல்லை. ஆனல் ஒன்று உறுதியாகக் கூறமுடியும், என் தாண்டவ நடனத்தின்பொழுது என் அடிமிதிபடாத சுடுகாட்டின் இடமே இல்லை. முடிவில் அகோர கண்டனைக் கங்கையாற்றுக்குள் வீசியெறிந்துவிட்டேன். மாமாயை அச்சந்தரத்தக்க விரைவோடும் என்னைநோக்கி ஓடி வந்து என்னை இழுத்துக்கொண்டு கிழக்கு நோக்கி விரைந்தாள்: இன்னும் விரைவோடும் இன்னும் விரைவோடும். கங்கையும் மாசரயுவும் கலக்கும் இடத்தே ஒரு பிணத்தின்மீது அவ்தூதர் அமர்ந்து பேசாது தொழுகையில் முழுகியிருந்தார். நான் கடுமையாகப் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருந்தேன். என்னை அவர்முன் வீசிக் கிடத்தி மாமாயை கூச்சலிட்டாள், "காப்பாற்றுக குருவே!" அகோரபைரவர் கண்கள் திறந்து சிறிது வியப்போடு கூறினர்: "மாமாயா! மாமாயா! மாமாயா!" மாமாயை உணர்விழந்தாள், அசைவற்றுள். குரு என்னைப் பார்த்தார். நான் நெடிதுயிர்த்துக் கீழே உருண்டேன்; இரைத்திரைத்துக் குளறினேன்; "காப்பாற்றுக!" அகோரபைரவர் என்னைப் பிணத்தின்மீது இழுத்துக் கிடத்தி நெற்றியைத் தடவிக் கொடுத்துக் கூறினர்: "நீ இன்னும் உயிரோடு இருக்கிருய்? திரிபுரபைரவியின் மாயை இது!" அவர் குறிப்பின்படி நடந்தன

வற்றைச் சுருக்கமாகக் கூறினேன். அசையாமல் அமர்ந்திருந் தார். பின்னர் மாமாயை முகம் நோக்கிப் புன்முறுவல் செய்து கண்டிக்குங் குரலில் கூறினர்: "அடி பைத்தியமே! பயந்து விட்டாயே!" பிறகு சிறிது தண்ணீரைத் தன் அங்கையில் எடுத்து அவள் முகத்தில் தெளித்தார். அவள் சற்றுத் தெளிந்த தும் அவள் செவியில் அகோரபைரவர் ஏதோ கூறினர்; அவள் எழுந்து கராளதேவி மன்றத்தை நோக்கிச் சென்ருள்.

அவதூதர் சிறிது நேரம் பேசாமல் தொழுகையில் ஆழ்ந் திருந்தார். பலகறை போன்ற அவர் கண்கள் முற்றிலும் அசைவற்றிருந்தன. சற்றுநேரம் கழித்து என் முதுகைத் தடவிக்கொடுத்துக் கூறினர்: "நீ கவிஞன் அல்லவா?" இது வியக்கத்தக்க வினு. இந்த நேரம் கவிதைக்குத் தேவை ஏது? ஊக்கத்தோடும் அவரைக் காணலுற்றேன். நொடிப்பொழுது பேசாதிருந்து அதட்டிக் கூறினர்: "ஆம் என்று ஏன் சொல்ல வில்லை தீவினையோனே?" மந்திரத்தான் மயக்கமுற்றவன் போலப் புகன்றேன்: "ஆம் தலைவ!" துறவி சற்றுச் சுவை நுகர்ந்தவராய்ச் சொன்ஞர்: "போலிப்பண்பினன், முன்னரே ஏன் மொழியவில்லை?" நான் சற்று நாணத்தோடும் நவின் றேன்: "எனக்குப் புலமை இருப்பது தெரியாது. பட்டம்மை என்னைக் கவிஞன் என்ருள்; தாங்களும் என்னைச் சொல்ல வைக்கின்றீர்." இன்னும் சொற்சுவை ஊக்கப்பெற்றவராய்த் துறவி உரைத்தார்: "நீ பட்டம்மையின் புகழ் பாடுவாயா?" நான் விடை பகர்ந்தேன்: "முடியாது தலைவா!" குரு உரைத் தார்: "ஏனடா, அப்படி?" நான் சொன்னேன்: "நான் உயிரோடு இருக்கும் எந்த மனிதனைப் பற்றியும் பாடமாட்டேன் என நிபுணிகைக்கு உறுதிமொழி யளித்துவிட்டேன்." துறவி உசாவினர்: "தேவியைப் புகழ்ந்து பாடுவாயா? கராள தேவியை?" நான் தலைவணங்கிக் கூறினேன்: "ஆம் தலைவ!" அவதூதர் அறைந்தார்: "தீவினையோனே! நீ தேவிக்குப் பலி யாக இருந்தனை. தேவமாதர் உனக்கு ஆரத்தி சுற்றினர்கள். பைரவிகள் உனக்காக நன்மங்கள வாத்தியங்கள் முழங்கினர். நீ தேவியின் வேட்கையைத் தணிக்கத் தவறிவிட்டனை. அவள் வெகுளியை அகற்றுக. தேவிதன் மறம்பயில் உடம்பின் அழகைப் புனைந்துரைப்பாயாக. நன்மை பெறுவாய்."

வேறு வழி காண்கிலேன் சிறிது நினைத்துப் பாடினேன்:

**பாஹூத்க்ஷேப ஸமுல்லஸத் குசதடம் ப்ராந்த ஸ்புடம் கஞ்சுகம்**
**கம்பீரோதர நாபிமண்டல கலத்காஞ்சீத்ரு தார்தாம்சுகம்**

**பார்வத்யா மஹிஷாஸுரவ்யதிகரே வ்யாயாம ரம்யம் லஸத்'**
**பர்யஸ்தா வதிபந்தபந்துரலஸத் கேசோச்சயம்பாது வ: ||**

[தோளினும் உயர்ந்து ஒளி செய்கிற முலைகளின் இடத்தின் மீது கஞ்சுகம் உள்ளது. வயிற்றிலே ஆழமாகவுள்ள கொப்பூழின்மீது மேகலையால் பற்றப்பெற்றது பாதி புடவை. பார்வதியால் மகிடாசுரன் கொல்லப்பெற்ற காரணத்தால் அவள் உடம்பு மறம்பயில் அழகு ஒளி செய்கிறது. நாலா பக்கத்திலும் கட்டப்பெற்றுத் தொங்குகிற நீண்ட கருங்குழல் தேவி எம்மைக் காப்பாளாக.]

அவதூதர் என்னை அதட்டினர்: "விலங்கு நீ, தீவினை யோனே! இதனையா தேவியின் மறம்பயில் உடம்பழகு என்று கூறுவது? மேற்கொண்டு பாடுக!" நான் மற்றொரு செய்யுள் பாடினேன்:—

**சக்ஷுர்திக்ஷுக்ஷிபத்யாஸ்சலித கமலிநீ சாருகோஷாபிதாம்ரம்**
**பத்ரம் தியாநாநுயாதம் ஜடிதி வலயிநோ முக்தவாணஸ்ய பாணே:**
**சண்ட்யா: ஸவ்யாபஸவ்யம் ஸுரரிபுஷு சராந் ப்ரேரயந்த்யா ஜயந்தி**
**த்ருட்யந்த: பீநபாகே ஸ்தநவலனபராத் ஸந்தய: கஞ்சுகஸ்ய ||**

அவதூதர் சிரித்தார்: "உன்னல் ஆகாது, எழுந்திரு; இங்கிருந்து ஓடிவிடு" என்று பணித்தார்.

## உயிர்ப்புப் பதினொன்று

என் உடம்பு முழுவதும் சடப்பொருள் தன்மையுற்றுப் பளுவாகத் தோன்றியது. மூன்று பகல் மூன்று இரவு வரை நான் உணர்விழந்துகிடந்தேன். உணர்வு அரும்பியபோது, கனவுபோன்ற நினைவு என்னை அழுத்திவைத்திருந்தது. நடுக்கந் தரும் பாலைவனத்தே திரட்சியினின்றும் விடுபட்டுத் தனியாகக் கிளம்பிய தூள் ஒன்றுபோன்று இறக்கப்பட்டு வந்தேன்; அப் பாலைவனத்தின் தொடக்கம் இறுதி இதுவெனக் கண்டுபிடிக்க முடியவில்லை; அஃது திசையின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைவரை ஒரு மாபெரும் மலைப்பாம்புபோலக் கிடந்தது; அடி வானமும் அதனை அணுக அஞ்சியதுபோலும். காற்றின் அலைகளும் அதனை அசைக்க முடியவில்லை. மிகுந்த தொலைவிலே

வானத்தொரு முனையிலே, நிலாவின் மங்கிய வட்டம் காணப் பட்டது. அங்கிருந்தே மலர்ந்த நூற்றிதழ்த் தாமரைமீதிருந்தும் ஆனந்தபைரவி மெதுவாக இறங்கி வந்துகொண்டிருந்தாள். அவள்தம் பதினெண் கைகளில் பல்படைகள் வெண்ணிலாவில் விளங்கிக் கொண்டிருந்தன. அவள் மடியில் இருந்த வெள்ளிக் கலசம் காவி ஆடையின் ஒளியால் செவ்வொளி அழகைக் கொண்டது. அவள் மூன்று கண்களினின்றும் அமுத ஒளி பீறிற்று; அவள்தம், பவழ முளைகள்போன்ற விரல்கள் என் மயிர்முடிகளில் சிக்கியிருந்தன; இளந்தளிரைத் தோற்கடிக்கும் அவள் அங்கை என் நெற்றி இடத்தைத் தடவிக்கொடுக்கும் போது நூறுநூறு பிறப்புக்களெல்லாம் பேறு பெற்றனபோன்ற உணர்ச்சி எய்தப்பெற்றேன். இடையிடையே நிலத்தின் ஈர்ப்புத் திறன் என்னைக்கீழ் நோக்கி இழுத்தது; ஆனால் அதனால் இயலாது போயிற்று. அந்த ஈர்ப்புத்திறன் மிக வலிமையுடையது என நான் உணர்ந்தபோது அந்நாளிலே திக்குக்கள் வரை பரந்திருந்த இடம் என்றுமாக மறைந்துவிட்டது; கனவுகளின் அழுத்தம் நீங்கிற்று; சடத்தன்மை நீங்கிற்று; கண்கள் திறந்தன. என் எதிரே பட்டம்மை உட்கார்ந்திருந்தாள். அவள் தம் பெரிய கண்கள் உட்குழிந்திருந்தன; முகம் வெளுத் திருந்தது; கன்னங்கள் நிறங்கெட்டிருந்தன. உண்மையில் அவள் பலநாட்கள் தூங்கவில்லைபோலும். தூங்காமை நோயி னால், கண்கள் தூசிபடிந்த புனமுருக்கம் மலர்போலும், வெய்யிலில் வருந்தும் நண்பகல் மலர்போலும், கூண்டில் சிக்கிய வலியான் குருவிக்குஞ்சுகள்போலவும் பார்ப்போருக்கு வருத் தத்தையும் ஊக்கத்தையும் தூண்டின. அவள் மயிர்முடி ஒழுங்கற்றுச் சிதறிக்கிடந்தது; அது சுருங்கிய குறுகலான கிளைகளின் இடையே நோய்பட நுழைந்து கிளம்பிய மயில் தோகை கலந்ததுபோன்று காணப்பெற்றது; புயற்காற்றினால் குழப்பமுற்ற குளத்தின் பாசிவலைபோன்றும் தென்பட்டது; புயற்காற்றில் அலையப்பெற்ற குருக்கத்திக் கொடியினின்றும் குழப்பமுற்ற வண்டு வரிசைகள் போன்றும் காணப்பட்டது. கங்கையாற்று ஒழுக்குப்போல நேர்மையும் தூய்மையும் கொண் டதும் கைலாய மலையின் நீலமரங்களின் இடை நடைவழி போன்றும் அழகாக இருந்த தலைவகிடு சிதறிய மயிர்முடியான் கவியப்பெற்றிருந்தது. என்றும் புடவை மூடியால் கவியப் பெற்றிருந்த மயிர்முடி அம்மூடி இன்மையால் எதையோ இழந்ததுபோலக் காட்சியளித்தது. எனது கால்மாட்டில் அமர்ந்

திருந்த பட்டம்மை இமைகொட்டாது என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வையினின்றும் இரக்கமென்னும் ஒழுக்குப் பொழிந்து கொண்டிருந்தது. அழகென்னும் ஆர்கலியில் திடீரெனப் பேரெழுச்சி எழுந்ததென என் கண்கள் திறந்த போதே பட்டம்மையின் உடம்பு முழுவதும் மயிர்க்கூச் செறிந்தது ; அதைத் தெளிவாகக் கண்டேன்.

எனக்கு இவ்வளவு விரைவில் உணர்வு வரும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. சற்று வெள்கினாள், பாரிசாதத் தளிர்போன்ற அழகிய விரல்கள் அவள் தன் மேலாடையைத் தேடின. சில நொடிகளுக்குள் அவள்தன் நீலப்பட்டாடை தலைவகிடு தன்னை மறைத்தது, மின்னல்கொடியானது நிலாவட்டத்தின்மீது மேக மூடி இட்டதுபோன்றும், தாமரை நாளம் ஆனது தன்மலர்மீது இலை கொண்டு மூடியது போன்றும் பவழக்கொடி அலைகளைக் கொண்டு புனற்கடவுளை மறைத்ததுபோன்றும் காட்சி தோன்றியது. அவ்வாறு அமர்ந்திருக்கும் பட்டம்மையைக் கண்டதும் என் உள்ளம் துடித்தது. தடுக்க முடியாததொரு கலக்கம் என்னைத் தூக்கி உட்காரும்படி செய்யத் தொடங்கிற்று. ஆனால் அவள் என்னை எழுந்திருக்கவிடவில்லை. அன்புநிறைந்த கண்களில் நீர் ததும்பிற்று ; மங்கிய முகத்தில் சிவப்பேறியது ; எழுந்திருக்கவேண்டாம் என ஒரு வேண்டுகோளை முகவொளி விடுப்பதெனக் காணப்பெற்றது. என்னைத் தடுக்க, அவள் தளிர் விரல்கள் என் உடம்பை அழுத்தின. "வேண்டாம்" என்ற சொல்மட்டும் ஆம்பல் வாயினின்றும் எழுந்தது. கண்ணில் இரக்கமும் அங்கையில் வியர்வை முத்துக்களும் அரும்பின. என்னிடம் இன்னும் எழுந்திருக்க வலிமையில்லை. கண்களை மீண்டும் மூடிக்கொண்டேன். பட்டம்மையின் அன்புகலந்த முகத்திருவினை நினைக்கத் தொடங்கினேன்: 'அழியும் உலகில் பைத்தியம் பிடித்த கவிஞனே! எங்கு அலைந்து திரிகின்றனை? திருச்செல்வி, என்ன, வானுலகிலா வாழ்கின்றாள்? நிலத்தினிலேயே இறங்கி இருக்கின்றாள். பட்டம்மையினும் வேறு எந்தத் திருநிறை செல்வியைப் பற்றிக் கற்பனை செய்கின்றனை? இவள் கைவிரல்களுக்கு வான்பாரிசாதத் தளிர் உவமையாகுமா? இவள் அங்கையில் அரும்பும் வியர்வைத்துளிகளுக்குக் கற்பனை அமுதம் பொருந்துமா? இவள் இதழ், குற்றம் நிறைந்த ஆடவனால் சுவைக்கப்படாத தூய அமுதத்தினும் மேலானதன்றோ? அமுதம் தேவர்களால் சுவைக்கப்பெற்றதால் எச்சிலாகிவிட்டதன்றோ?' என் உள்ளம் உயிர் நெஞ்சம் எல்லாம் மகிழ்ச்சி

என்னும் மாகடலில் மூழ்கிவிட்டன. ஒரு நொடிக்குள் நான் என் ஆட்சியில் இல்லை.

இதே நேரம் மாமாயை வந்து என் தலைமாட்டில் அமர்ந்து கொண்டாள். என் புருவ நடுவிடத்தை மிகுந்த அன்புடன் அழுத்திக்கொடுத்தாள். எனக்கிந்தக் தாய் அன்பு கனவில் ஆனந்த பைரவி வாயிலாகப் பெற்றேன். நான் அரை உணர்வு உடையவனாய்ப் படுத்திருந்தேன். இளவரசியின் கண்களில் நீர் ததும்பியது கண்டு அன்பொடும் அதட்டிக் கூறினாள்: "மீண்டும் அழுகின்றனே, பாவாய்! என்மீது உனக்கு நம்பிக்கையில்லை? பட்டனுக்கு என்ன ஆய்விட்டது? எதற்காக நீ இப்படி வருந்துகின்றனே? இன்று அவனுக்குத் தவறுது உணர்வு வந்துவிடும். மகளே! அது வசிய மந்திர வலிமை யம்மா! மயிர்க்கால்கள் வழியாக மருள்மயக்கம் புகுந்து எழுபத் திரண்டாயிரம் நாடிகளைக் கட்டுப்படுத்திச் சென்று மனத்தை வயப்படுத்துகின்றது; நாகம் கூர்மம் எனும் நாடிகளில் உயிரைத் தடை செய்கின்றது; கிருகல நாடியைத் கொப்பூழில் உதைக் கின்றது; தேவதத்தன், தனஞ்சயன் எனும் நாடிகளைத் தோற் பொறியில் நுழைத்துவிடுகின்றது. அதனால் கொடிய தளர்ச்சி ஏற்பட்டுவிடுகின்றது. நீ சிறிதும் துன்புறாதே. மகளே! இன்று பட்டனின் நாடிகள் நலத்தொடும் இயங்குகின்றன. கலைகள் மலர்ந்துள்ளன; வாயில்கள் சற்று தடைபட்டுள்ளன. இதோ பார், அலம்புழை நாடியும் அமுத நாடியும் எவ்வளவு நலத் தொடும் இயங்குகின்றன. இப்பொழுது இவன் கண்கள் திறப் பான். நிபுணிகைக்கு இன்னும் நேரம் பிடிக்கும். மருள்மயக்க விளைவால் ஏற்படும் தளர்ச்சி இன்னும் கடுமையாக இருக்கும். அஞ்சுகின்றனே? சீசீசீ! இப்படியும் வருந்தலாமா!" இளவரசி அடைபட்ட குரலால் கூறினாள்: "இல்லை அன்னையே!"

மாமாயை என் நெற்றியைக் கையால் பிடித்தவளாய்க் கூறினாள்: "வியப்பாயிருக்கிறது. பட்டன் எப்படி மருள் மயக்கத்திற்கு உட்பட்டான்? இவன் மூலாதார நாடி வியப் புடன் இயங்குகிறது; இவனுக்கு அவதூதரின் அருட்பேறு கிடைத்துள்ளது. பார் மகளே! பட்டன் மனத்துள்ள ஐந்து நாடிகளும் செம்மையாக உள்ளன. இது கற்பிகை, இதனால் சங்கற்பம் ஏற்படுகிறது; இது விகற்பிகை, இதன் மூலமாக மனத்தில் விகற்பம் உண்டாகிறது; இது தீவம், இதனால் மனதில் சடத்தன்மை ஏற்படுகிறது; இது மூர்ச்சனை, இதனால் உணர்விழக்கிறது மனம். இது மனனநாடி, இதனால் நினைக்கும்

சக்தி உண்டாகின்றது. பட்டனுக்கு இப்போது தீவ்ம் வலி குறைவாக உள்ளது; உடனே செம்மையாகிவிடும். நிபுணிகை யின் நாடிகளிலே வியக்கத்தக்க வலிமையுள்ளது. ஓருண்மை உனக்குரைக்கின்றேன் மகளே! நிபுணிகை எளிய மாதல்ல, அவள் மாமாயை. மருள்மயக்க விளைவு மிகவும் கடுமையானது. முதலில் அதனைப் பத்துநொடிகள்கூட நான் பொறுக்க முடிய வில்லை. ஓ! கொடியது! கொடியது!'' இப்போது மாமாயை ஏதோ மறந்துவிட்டாள்போல் நினைவுக்குக் கொண்டுவந்தவாறிருந் தாள். பின்னர் திடீரெனப் புகன்ருள்: "இன்று நான் போக வேண்டியுள்ளது. வைகாசி வளர்பிறை மூன்றும் நாள் நணுகி விட்டது; இங்குனக்கு ஓரச்சமும் வேண்டாம். உலோரிக தேவர் அறம்பேணுவர். உனக்கு ஒரு தொல்லையும் இருக்காது. என்ன சொல்லுகின்றனை, போய்வரட்டுமா?''

பட்டம்மை உறுதியொடும் சொன்னுள்: "வேண்டாம்.'' மாமாயை தனக்குள்ளேயே முனகிக்கொண்டாள்: "இன்னும் நான் மாமாயையினது சட்டைக்குள் சிக்கியவாறுள்ளேன். திரு புரபைரவீ! உன் திருவிளையாடல் அளவிடற்பாலதன்று. நேரம், ஊழ், அவா, கல்வி, கலை எல்லாம் மாமாயையின் சட்டைகள்; எனினும் உண்மையே! இவற்றை யார் விலக்கவல்லார்? திரிபுர சுந்தரிதன் திருவிளையாடல்!''

இளவரசி உசாவினுள்: "தாயே! உங்கள் தவத்தில் தடை யேற்படுத்துகின்றேனு?''

மாமாயை அன்போடும் உரைத்தாள்: "இல்லையடியம்மா இல்லை. தடைகளின் பூசையையே தவமாகக் கருதுகின்றேன். உங்கள் நூல்களுக்கேற்ப நீயும் ஒரு தடையே; கடவுள் தடை களின் வடிவத்தில்தான் மாதினைப் படைத்தான். என்னடி அம்மா, உன்னை நீ யாருக்காவது தடையாகக் கருதுகின் ருயா?''

இளவரசி இயல்பாக விடை பகர்ந்தாள்: "உங்களுக்காவது தடையாக இல்லை?''

"எனக்குத் தடையா நீ, இல்லை, இல்லை. நானே தடை வடிவினள் இல்லையா? உனக்குத் தெரியாது.''

"மாதின் படைப்புத் தடைக்காகவே உண்டாயிற்று?''

"வரலாறு இதனையே கூறுகின்றது. அவாவறுப்புக்காக ஆடவர்கள் செய்யும் ஏற்பாடுகள், தவத்திற்குரிய பரந்த வாய்ப்புக்கள், வீடுபேற்றுக்குரிய ஒப்பற்ற தூண்கள், எல்லா வற்றையும் அணங்கனுரின் ஒரு கோடிய புருவம் உருக்குலைத்து

விடுகிறது. அணங்கின் பார்வையிலேயே முழு அழிவிற்குரிய வித்து இல்லையா ?''

சிறிது நேரம்வரை நிறையமைதி ஏற்பட்டது. இளவரசி தோற்றுள்போலக் காணப்பெற்றுள். மாமாயை வினவினைத் தாக்க மயிர்க்கால்தொறும் ஊக்கங்கொண்டேன். என் முழு வலிமையும் எதிர்க்க ஒருமுகமாயிற்று. எனினும் நான் வலிமை யற்றுப் படுத்தவாறிருந்தேன். இளவரசி முன் மாமாயையை எதிர்ப்பது முரணுகும் என்று நான் நினைக்கவில்லை; எனினும் வாய்திறக்க முடிந்தால்தானே எதிர்க்கக்கூடும்! மீண்டும் மாமாயை வாய்மலர்ந்தாள்: ''எனில் நீ என் சொல்லை ஒப்புக் கொள்ளவில்லை. ஆம் மகளே! நான் கூறியன உண்மையே. பெண்ணின்றித் தவம் வையத்தில் இழிவுடைய தவருகும். அறம், தொழில் இவற்றிற்காக இடப்பெறும் திட்டங்கள், படை, களின் பெருக்கம், அரசுகளின் ஆக்கம் எல்லாம் நுரைக் குமிழிகளென இமைப்பொழுதில் மறைந்துவிடும். ஏனெனில் அவற்றில் மாதின் ஒத்துழைப்பு இல்லை; இந்த ஆரவாரம் வையத்தில் அமைதியின்மையையே ஏற்படுத்தும்.''

பட்டம்மை வியப்புற்று வினவினுள்: ''எனில் அன்னுய்! மாதர்கள் படைகளில் சேர்வதாலும் அரியணைகளில் வீற்றிருக்க முயல்வதாலும் அமைதி ஏற்படுமா?'' மாமாயை சிரித்துரைத் தாள்: ''நீ எளியை. நான் வேறு பொருள் உரைத்துக்கொண் டிருந்தேன். நான் சதை இரத்தத்தோடுகூடிய மாதை ஒரு பொருட்டாகக் கருதுபவள் அல்லள். உன் பட்டனும் முன்னே என்னிடம் இவ்வினுவையே விடுத்தான். நான் மாதின் தத்து வத்தைப் பற்றிக் கூறிக்கொண்டிருந்தேன். படைகளில் சதை இரத்தம் எலும்புகளுடன் கூடிய வெறும் மாதுமட்டும் சேர்ந்து நிரம்பினுல் ஒரு பயனுமில்லை. அவர்களில் மாதின் தத்துவம் இல்லையெனில் அமைதியின்மையே தாண்டவமாடும்.''

என் கண்கள் இன்னும் மூடியிருந்தன; திறக்குந்திறன் இல்லை. நான் கற்பனையில் பட்டம்மையின் கண்கள் வியப்பினுல் பரந்து காணப்பெற்றதைக் கண்டேன். சற்று முன்னதாக வளைந்து ''எனக்கு விளங்கவில்லை'' என்றுள்.

மாமாயை நெட்டுயிர்ப்புயிர்த்தாள்; பின்னர் சற்றுச் செப்ப முற்றவளாய்க் கூறினுள்: ''பரமசிவனில் இரு இயல்புகளும் ஒருங்கே செறிந்துள்ளன. சிவம் சத்தி; சிவன் நெறிவடிவினன்; சத்தி திடைவடிவினள். இவ்விரு இயல்புகளின் முட்டுதலால் முழுவையமும் ஒளிபெறுகின்றது. உடம்பில் சிவவடிவம்

ஆடவன்; சத்தி வடிவினள் மாது. ஊனிறைகிய இவ்வுடம்பை ஆடவன் அல்லது மாது என்று நினைக்கின்றனையா? எளியவளே! குருதி ஊன் இவற்ருனைகிய இவ்வுடம்பில் ஆடவனுமில்லை மாது மில்லை. தடைவடிவினளே மாது. நினைவில் வை. மாது தடை வடிவினள். எங்கேனும் தன்னையே துறக்கும் பான்மை, பிறர் நன்மைக்குத் தன்னையே துறக்கும் பான்மை இருந்தால் ஆங்கு மாது குடிகொண்டிருக்கின்ருள். திராக்கைப்பழம் போலத் தன்னையே பிழிந்து இன்பதுன்பங்கள் என்ற பல்லாயிரக்கணக் கான ஒழுக்குகளில் பொழிய விட்டுப் பிறர் மகிழத் தான் மகிழும் பான்மை எங்கேனும் உளதேல் அங்கே மாதின் பண்பு அல்லது சத்தியியல்பு தெரிந்துளது. ஈண்டு இன்பம் நுகர அவள் வர வில்லை. தன் இன்பத்தைப் பிறர் கொள்ளையிடப் பிறந்தாள். இன்றைய அறம் தொழில் முதலியவற்றின் ஏற்பாடுகள், படைத் திரட்சி, அரசுப்பெருக்கம் எல்லாம் நெறி வடிவங்கள். இவற்றில் பிறர் நன்மைக்காகத் தன்னையே கரைக்கும் பான்மை இல்லை; ஆதலின் அவை ஒரு கடைக்கண்ணில் சரிகின்றன; ஒரு முறுவலிப்பில் விற்கப்படுகின்றன. அவை நுரைக்குமிழிகள் போன்று நிலையற்றன; ஆற்று மணற்றிடல்போன்று நிலை யாதவை; நீரில் வரைந்த வரிகோடுபோன்று விரைவில் அழியக் கூடியவை. அவற்றில் மற்றவர் நன்மைக்காகத் தன்னையே பலி கொடுக்கும் பரந்த பனப்பான்மை இல்லையெனில் அங்ஙனமே ஆகும். அவர்களைத் தொழுகையில்லாப் பகலும் தொண்டு செய்யா இரவும் வருத்தாதிருக்கும்வரை அவர்களிடம் தடை வடிவினளாகிய மாதுதன் பண்பு இல்லாதிருக்கும். அதுவரை அவர்கள் பிறருக்குத் துன்பம் அளித்தவாறே இருப்பார்கள்.'' மாமாயை சற்று நின்ருள். அவள் கருத்துக் கிளர்ச்சி உற்றனள் போலும். சற்று ஒய்வு கொண்டதால் மீண்டும் செப்பமுற்ருள். நோயாளியின் தலைமாட்டில் அமர்ந்து நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தமைக்கு வருந்தினுள். தன் வருத்தம் நீங்கவே என் கண்கள்மீது தன்விரல்கள்கொண்டு தடவிக் கூறினுள் போலும்: ''பட்டன் இப்போது நலமே, இப்பொழுதே எழுந் திருப்பான்.''

பட்டம்மை ஒன்றும் பேசவில்லை. நான் கண் திறந்தேன். இளவரசி இப்போது எதையும் தாங்கும் பொறை பெற்றிருந்தாள் போலும். மாமாயை கூறிய கூற்றுக்களால் தோன்றிய வியப்பு இன்னும் இளவரசியின் கண்களில் பொலிந்து தோன்றியது. இப்போதே பறந்தோடிவிடுவோம் என்ற விழித்த நிலையில்

இரண்டு வலியான் குருவிகள் மிகவுயர்ந்த புருவங்களில் தொங்கிக்கொண்டிருந்தன. இப்போது எப்படி இருக்கின்ருய் என்று உசாவினுளாய் மாமாயை விருப்போடு என்முகம் நோக்கிக் குனிந்தாள். முயன்று கைக்குறியால் மொழிந்தேன்: "ஆம்" என. இன்னும் எனக்குப் பேச்சுத்திறன் வரவில்லை. மாமாயைதன் பேச்சின் வாயிலாக நான் உலோரிகதேவர் என்ற ஆபீரக்குறுமன்னன் இல்லத்தே இருக்கின்றேன் என்றும் நிபுணிகையும் இதே இல்லத்தில் ஓர் அறையில் படுத்துக் கிடப்பாள் என்றும் உணர்ந்தேன். மிகமிகத் துன்பத்தோடே வினவினேன்: "நிபுணிகை எப்படி இருக்கிருள்?" மாமாயை என்னைப் பேசாதிருக்குமாறு தடுத்து "நலமே" என்ருள்.

மூன்று நாட்களில் முற்றிலும் நோய் நீங்கி நலமுற்றேன். ஆபீரக்குறுமன்னன் எங்களை நெய் பாலால் குளிக்கவைத்தார். எப்பொருட்கும் குறைவில்லாதபடி செய்தார். இத்துணை அரிய விருந்தோம்பலை நான் இதுவரை யாரிடத்தும் கண்டதில்லை. இதனிடையே மாமாயை விந்தியமலைத் தொடரில் எங்கோ இருக்கும் சத்திமன்றத்திற்கு எழுந்தருளினுள். நிபுணிகை உணர்வு வரப்பெற்ருள்; எனினும் உடல்வலிமை குறைந்தவ ளாகவே இருந்தாள். இளவரசியின் இயல்பான ஒளி மீண்டும் பொலிந்தது. விக்கிரகவர்மனும் அவன் வீரப்படைஞரும் வயிரப்பொய்கை அருகே ஓரிடத்தில் படகு நிறுத்தி வசித்து வந் தார்கள். நாளும் வந்து எங்கள் செய்தி கேட்டுணர்ந்து மீண்ட வாறிருந்தார்கள். நிபுணிகை நலம்பெற்றதும் அனைவோரும் மகதநாட்டிற்கு விரைவோம் என நினைத்திருந்தேன். இத னிடையே ஒன்று நிகழ என் திட்டம் கெட்டது.

நான் பத்திரேசுரர் கோட்டையின் மேற்பால் கொத்தளத் தளத்தின்மீது நின்று கதிரவன் மறைகின்ற அழகை நுகர்ந்தவா றிருந்தேன். கதிரவன் வட்டம் விசும்பு முழுவதும் பரவியிருந்த கதிர்ப்பாயலைச் சுருட்டி மேற்பால் இழுத்தவாறிருந்தது. பகல்திரு வானத்து மேற்பால் இருந்தும் கீழிறங்கிப் போய்க் கொண்டிருந்தாள்போலும். அவள் விரைந்து செல்லும்போது அவள் காலடிகள் மிதிபடுவதால் பதுமராகக் கல்லால் இயன்ற சிலம்பு கழன்று பின்பக்கம் நழுவிவிட்டதுபோன்று கதிரவன் வட்டம் காணப்பெற்றது. கதிரவன் வட்டம் பகல் முழுதும் கைக்கிண்ணத்தில் முயன்று முயன்று செந்நிறத்தைத் திரட்டி யது. அது திடீரெனக் கவிழ்ந்துவிட்டது; வான முழுவதும் அதனுல் செம்மையாகிவிட்டது போலும். மெதுவாக மேற்குத்

திசை மாதின் செவிக்குழையாகிய சேதாம்பல்போல் விளங்கிய கதிரவன் விட்டம் திடீரென மறைந்தது. வானமெனும் பொய் கையிலே மாலையெனும் செந்தாமரை மலர்ந்தது. ஆழ்ந்த கருஞ் சேற்றினால் வரையப்பெற்ற ஏடுபோல இருள் பரப்புத் திசை முகங்களைப் போர்த்திற்று. வண்டுகளைப் புனைந்த கருநெய்தல் செந்தாமரைக் காடு நிறைந்த பொய்கையைக் கவிந்தனபோன்ற காட்சி தோன்றியது; மாலையின் செம்மை இவ்விதம் இருளால் கவ்வப்பெற்றது. மெதுவாகக் காதலாம் தேறலை நுகர விழை யும் கங்குல் மாது அணிந்த தளிர்போன்று காணப்பெற்ற அழகிய மாலைச்செக்கர் மறைந்துவிட்டது. புறுவினங்கள் இல்லங்களின் சுவர்த்துளைகளை நாடிச் சென்றன; மேன்மாடி களைக் கொண்ட இல்லங்களின் திருவானவள் இரவு விளையாட்டி னுக்குச் செவிகளில் கருங்குவளை அணிந்தாளோ என்ற அழகு தோன்றியது. நீர்க்குடந் தாங்கும் மாதர் கூட்டம் நீங்கிற்று; இல்லங்கள் உள்ளே நடமாடும் மாதர்களின் சிலம்பொலிகள் இல்லத்துக்குளங்களின் நாரைகளின் ஓசைகளை அடக்கிவிட்டன. யானைகள் தூங்கத் தொடங்கின; ஆதலின் அவற்றின் கவுளில் பொழியும் மதநீர்ச் சொட்டுக்கள் நின்றுவிட்டன; ஆதலின் காற்று இப்போது முன்னையிலும் நொய்தாயிற்று. பகல் முழுதும் வெய்யிலால் காய்ந்து களைத்த காற்று இரவுப் போதிலே மெது வாக அசைந்து அயர்வை அகற்றியது. நான் திரும்பிப்போக நினைத்ததுமே ஓர் ஆபீரவீரன் வந்து வணங்கினான். நெடுநாள் வாழ்கவென வாழ்த்துக் கூறி வினவினேன்: ''ஏதேனும் சொல்ல வேண்டுமா செல்வ!'' மிகுந்த அடக்கமும் அச்சமும் கொண்டவனாய்ப் போர்வீரன் புகன்றான்: ''குற்றம் பொறுத் தருள்க, பெருமான்; இஃது அந்தணனது சூளுரையாகும். ஆதலின் உமக்குத் தொந்திரவு தரலானேன்.'' இங்ஙனம் இயம்பி அவன் ஒரு திருமுகம் என் கையில் வைத்துவிட்டுப் போய்விட்டான். அந்நேரம் நாற்பாலும் இருள் சூழ்ந்திருந்தது; திருமுகம் படித்தல் அரிது; போர்வீரன் செய்தி புகன்றவகை என்னிடம் ஊக்கத்தைத் தூண்டியது. விரைவில் படித்துச் செய்தி அரிய வேண்டுமெனத் துடித்தேன்.

எனது அறைக்குள் புகுந்தேன்; ஆங்கு இளவரசி என் வரவை ஆவலோடும் எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். நான் உள்நுழைந்ததும் மெல்லிய அதட்டல் குரலில் கூறினாள்: ''இத்துணை நேரங்கடத்தல் நல்லதன்று.'' அவள் கண்கள் கீழே நோக்கின; கீழிதழ் குறுகி இருந்தது; மோவாய் பொறை

தாங்கியது போன்றிருந்தது. உண்மையில் நோய்வாய்ப்பட்ட நான் இரவில் நேரங்கடந்து வந்ததற்குச் சிறிது சீற்றமுற்ருள். ஆனல் அந்தச் சினம் உயர்குடிப் பிறப்பின் அடைவினலே மிக்குச் சீறவில்லே. அவள் சொல்லில் ஆட்சிப்பான்மை இருந்தது; ஆட்சியாளன் குரல் இருந்தது, கூடவே அன்பின் மேன்மையும் செறிந்திருந்தது. நான் விரைந்து உரைத்தேன்: "கோட்டைக்குள்ளேயே இருந்தேன்." ஒரு நொடிக்குள் என்னுள்ளத்தே கலவரம் உண்டாயிற்று. இத்துணேயும் நான் பொறுக்க வேண்டுமா? ஆனல் திருமுகம் படிக்கவேண்டுமென்ற ஆவலே பொங்கிற்று. நேராக என் படுக்கை அடுத்துச் சென்றேன். ஆங்கு விளக்கு வைக்கப் பெற்றிருந்தது. திருமுகம் விரித்துப் படிக்கலானேன். அது வடமொழிக் கொடுமொழியில் எழுதப்பெற்றிருந்தது. ஊர்ப்புறத்தான் பெயர்த்தெழுதியதென வுணர்ந்தேன்; எனினும் பொருள் தெரிந்துகொள்வதில் பிழைகள் தடையாக இல்லே. திருமுகத்தின் ஒவ்வோரெழுத்தும் என் குருதியில் இயைந்து விட்டது; கிளர்ச்சியைத் தூண்டிவிட்டது. என் குருதிக் குழாய்களில் குழப்பத் துடிப்புக்கள் ஏற்பட்டுவிட்டன. மீண்டும் மயக்க முற்றுக் கிடக்கையில் விழுந்துவிடுவேனே என்ற அச்சம் ஏற்பட்டுவிட்டது. திருமுகத்தைப் படித்தேன், படித்தேன், படித்தேன்......... குழப்பத்தைத் தணித்தலில் நான் சிறிது வெற்றி பெற்றபோது, இரவில் யாமம் கழிந்துவிட்டது கண்டேன். திருமுகத்தில் இவ்வாறு எழுதி இருந்தது:

"நலம்! புருடபுரத்தில் (பெஷாவர்) உறையும் சாமவேதக் கௌமுதிக்கிளே ஆசிரியன் சைமினிக் கோத்திரத்துத் தோன்றிய கன்னேசி பருவு சர்மா ஆகிய நான் அந்தணர் பௌத்தர் சமணர் கோயில்கள் அறநிலேப் பள்ளிகள் மாதர்கள் குழந்தைகள் இவர்கள் சார்பாகப் பாரத மாந்தர் அனேவோருக்கும் இந்த வேண்டுகோள் விடுக்கின்றேன்.

"உடன் பிறந்தோரே! மீண்டும் எல்லேப்புறக் காட்டு மாந்தர் அணுகியவாறுள்ளனர். வானவரும் இறங்கிவாழ விரும்பும் அத்துணே தூய பாரத நாட்டின் மாடமாளிகைகள் மீண்டும் சாம்பாராகும். மீண்டும் அவை பகல் சரியும் நேரத்தே கிளம்பிய புயற்காற்றின் சாடிப்பால் சிதறிச் சிதறிக் கலேயும் கரும்புயல்களெனத் திருவிழக்கும் காலம் அணுகிவிட்டது. சங்கும் மணியும் முழங்கப்பெறும் அரசர் தெருவில் நரிகளின் ஊளே கேட்கப்பெறும். அரண்மனே மாதரில்லங்களில் மாதர்

விளையாடும் மணிப்பொய்கைகள் மீண்டும் காட்டெருமைகள் முழுகுவதால், கலக்குவதால் சேருகிவிடும். பொற்கொம்புகளில் விளையாட்டயரும் மயில்களின் தோகைகள் மீண்டும் காட்டுத் தீயால் தீய்ந்துவிடும். கோயில்கள் மன்றங்கள் அறப்பள்ளிகள் முதலியவற்றின் படிகளிலே மீண்டும் ஓநாய்கள் நடமாடும். பயிர்ப் பசுமை அலைவீசும் பாரத நிலத்தின்கண் மறுபடியும் குருதி பெருகும், பெருகிப் பிணச்சாம்பலைச் சேருக்கும். உடன்பிறந்தோரே! எல்லைப்புறக் காட்டுமாந்தர் வருகின்றனர்!

"இதுவரை எல்லைப்புறக் காட்டுமாந்தரைத் தடுத்து நிறுத்தியவன் யாவன்? கொடிய போர் வென்றவன், வாலீகம் வீழ்த்தியவன், எல்லைப்புறத்தே வடவைக்கனல் போன்றவன், பகைவர்க்கு அரியேறு போன்றவன் கடவுள் மகன் துவர மிலிந்திரன் அவர்களைத் தடுத்து நிறுத்தினான். கோயில்கள் மன்றங்கள் காப்பவன், மாதர் குழந்தைகள் இவர்களுக்குக் கோட்டைபோன்றவன், அந்தணர்க்கும் பௌத்தருக்கும் சமண ருக்கும் புகலிடமானவன் இன்று கொடிய துயர்க்கடலில் ஆழ்ந் துள்ளான். அவன் உயிரனைய மகளைக் கவர்ந்து எல்லைப்புறக் கள்ளர்கள் எங்கோ கடத்திச் சென்றனர். மந்திர மருந்து களால் கட்டப்பெற்ற காலப்பாம்பு தன் நஞ்சினால்தானே வேகின்றதெனக் கடவுள் மகன் தன் துயராலே தானே எரிந்து கொண்டிருக்கின்றான். கடவுள்மகன் துவரமிலிந்திரனைத் துயர்க் கடலில் இருந்தும் கைதூக்கிவிடும் திறமை எவனுக்காவ துண்டா? எல்லைப்புறக் கள்ளர்களை விரட்டி அடிக்கும் பணிக் காகத் தன்னையே வழங்கும் உயிர்க்கொடையாளியும் உள்ளானா? உடன்பிறந்தோரே! மீண்டும் காட்டுமாந்தர் தலைகாட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

"கடவுள்மகன் துவரமிலிந்திரன் திருமகளைத் தேடித் தர வல்லவன் யாவன்? உடன் வாழ்வோரே! முயலுக, அத் திருமகள் இருப்பிடம் கண்டுபிடிப்பீராக. கடவுள்மகன் துவரமிலிந் திரனது யாவராலும் வெலற்கரிய வீரப்படை நிலத்தின்மீது பெயரும்போது சீரழிந்த வண்டியின் உள்ளிடம்போல நிலம் மங்கிவிடும். காவிநிறம் செறிந்த மலையிடை வழிகள் கடவுள் மகன் துவரமிலிந்திரன் குதிரைகள் குளம்புகளால் மிதி பட்டெழும்பும் தூசித்திரட்சியால் மலைக்குகைகள் ஒட்டகப்பிடரி நிறம்பெறும். மதம் பொழியும் யானைப்படை எல்லைப்புறத்தில் படரும்பொழுது மதநீர்ப் பெருக்கால் தரை இரலைமானினது மயிர்ச்செறிவு போலப் பொன்னிறமுறும். குதிரைகளால் 'திசை

வளைக்கும் யானைகளால் நிலமும், வெண்கொற்றக் குடைகளால் கொடிக்காடுகளால் வானிடமும், யானை வெறிநீர் மணத்தால் காற்றுப்பரப்பும், வெற்றி முழக்கத்தால் முந்நிலமும் முழுகுவதாக. உடன்பிறந்தோரே! எல்லைப்புறக் கள்ளர்கள் வருகின்றனர்.

"எல்லைப்புறக் காட்டு மாந்தர்தம் கொடிய பற்களிலிருந்து பாரதத்தை இன்று யார் காப்பாற்ற முடியும்? இன்று முருகன் செவ்வியன் சந்திரகுப்தன் இல்லை; இன்று தனது நாணையை யால் யவன மாபெரும் படைகளைச் சிதறி ஓடச் செய்த மாவலி சந்திரகுப்தன் எங்கே? கோவில்களை மன்றங்களை அறநிலைப் பள்ளிகளை அழித்த மாபாவிகளை ஒடுக்கிய சந்திரகுப்தன் எங்கே? நாற்கடலிலும் தனது புகழ் மணத்தால் கமழச் செய்த வனும், தனது ஊங்கார வொலியாலே எல்லைப்புறக் குறுநில மன்னர்களை அடக்கியவனும் கோயில்களை அறநிலைப்பள்ளி களைக் காத்தவனும் ஆகிய மடங்கலேறு சந்திரகுப்தன் இன்றில்லை. இன்று மௌக்கரி வீரர்தம் வீரன் கிரகவர்மனும் இல்லை; பகைவருக்குக் காலனும் எளியவர்க்குக் கற்பக மரமும் ஆன கிரகவர்மனும் இல்லை. இன்று வெட்டுக்கிளிக் கூட்டத் தினும் எண்ணில் மிக்கவரும், ஓநாயினும் கொடுமை வாய்ந்த வரும், கழுகினும் அருவருக்கத்தக்கவரும், நரியினும் இழிந்த வரும் ஆகிய ஊணக் கள்ளரிடமிருந்தும் பாரதத்தைக் காக்கத் தக்கவன் யாவன்? தேவபுத்திரன் துவரமிலிந்திரனே! உடன் பிறந்தோரே! எல்லைப்புறக் கள்ளர்கள் மீண்டும் வருகின்றனர். பகைவருக்கு அரியேறுபோன்ற தேவபுத்திர துவரமிலிந்திர னுக்கு வெற்றியுண்டாகுக. பாரத நாட்டிற்கு வெற்றி யுண்டாகுக. உடன் பிறந்தோரே! தேவபுத்திரன் கண்ணுள் மணி, அவன் உயிரினும் இனிய திருமகளைத் தேடுக. உய்வதற்கு இதுவே நல்வழி. நான் அந்தணர் சமணர் பௌத்தர் இவர்தம் சார்பாக, மாதர்கள் குழந்தைகள் சார்பாக, புலவர்கள் நோன்பினர் தவத்தினர் சார்பாக இந்நன்னில மக்களை வேண்டிக்கொள்கின்றேன். உடன்பிறந்தோரே! எல்லைப்புறக் கள்ளர்கள் வந்துகொண்டிருக்கின்றனர்.

"நான் மிகுந்த முதியவன். சாமவேதம் பயிலும் கன்னேசி அந்தணன். நான் மௌக்கரிகளின் ஆசான். சூளுரை கொண்டு கூறுகின்றேன்: இம்முடங்கலைப் படிப்பவன், இதன் பத்துப்பெயர்ப்புக்கள் எடுத்து மற்ற மாந்தருக்கு அளிப்பானுக. கடவுள்மகன் துவரமிலிந்திரன் உயிரனைய திருமகள் இருப்பிடம் தெரியாதிருக்கும்வரை இச்செயல்

நடந்தேறியவாறிருத்தல் வேண்டும். யாவருக்கும் • நலம் உண்டாகுக.''

என் உள்ளக் குழப்பம் இன்னும் தணியவில்லை. யாரிடத்தில் இதைப் பற்றிக் கலந்தாராய்வது? பட்டம்மைக்கு இச்செய்தி எட்டக்கூடாது. நிபுணிகை உடல்நலம் குன்றி உள்ளாள். அந்தோ! பாணபட்டன் தனிமையாக உள்ளான்! என்னிடம் பறக்குந்திறன் உண்டேல், உடனே பறந்துசென்று தேவபுத்திரனுக்குச் செய்தி அறிவிப்பேன். அந்த திருமுகத்துக்கண்ட செய்திகள் தூண்டிய குழப்பத்தால் கலவரமுற்றிருந்தவன் நான் பட்டம்மையது மென்குரல் கேட்டேன். மிகுநேரம் வரை அவள் என் நிலையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்போலும். அவள் திருமுகத்தே தோன்றிய இயல்பான கருத்துமெய்ப்பாடு உடலெங்கும் பரவி ஒரு கருத்தினிமையை விளங்கச் செய்தது. பவழச் செம்மை பொருந்திய நகவொளியைப் பாய்ச்சித் தலைவகிடுமீது படிந்திருந்த பட்டுத்துகிலைச் சற்று முன்னுக்கு இழுத்தவளாய்க் கட்டளைக்குரலில் கூறினள்: ''முடங்கல் படிப்பதை விடுக பட்ட! மாவராகனது அருட்பேருகிய சோறு உண்ண வருக.'' ஒரு தடவையேனும் பட்டம்மை என்னிடம் மாவராகன் செய்தி பற்றி உசாவவில்லை. நான் கங்கையாற்றொழுக்கிலே மாவராகப் படிமத்தை முழுகடித்துவிட்டேன் என்பதை அவள் அறிந்து கொண்டாள். எத்துணை துயரம் உழந்திருப்பாள் என்பதை அறிவேன். இந்த அழகிய பூவிளம் உடம்பில் எத்துணை ஆழ்ந்த உள்ளம் உள்ளடங்கி உள்ளது! இச்சிறு உடலில் இத்துணை உயர் குடிமை பொருந்தியுள்ளது! இச்சிறு நிகழ்ச்சியிலும் எத்துணை பயின்ற அறிவு செறிந்துள்ளது! மாவராகனைப் பற்றி உசாவினால் எனக்கெத்துணை வருத்தம் அரும்பும் என்பதை அறிந்திருந்தாள்; எனவே ஒரு வினவும் வினவவில்லை. ஆனாலும் மாவராகன் வழிபாடு ஒரு நாளும் நிற்கவில்லை. ''ஜலௌக மக்நாஸ சராசரா'', (நீர் வெள்ளத்தில் முழுகிய அசைவன அசையாதனவற்றைத் தன்னுட்கொண்ட பூமாதேவி...) என்ற இனிய பாவின் இசை நிற்கவில்லை. ஆதலின் மாவராகன் அருட்பேருகிய சோறு தவறாமல் கிடைத்தவாறிருந்தது. ''இப்போதே வருகிறேன்'' என்று அடக்கத்தோடு விடை தந்தேன்.

அவள் திரும்பிப்போக முற்பட்டாள். பின்னர் உடனே என்பால் திரும்பி நோக்கினள். ஒரு தூய ஒளியினால் முழு அறையும் தெளிவாயிற்று; அது ஒரே நேரத்தில் ஆயிரம்

ஆயிரம் குத்துவிளக்குப்போல அழகாகக் காட்சி அளித்தது. பன்னாட்கள் பின்னர் பட்டம்மையின் முகத்தே முறுவலிப்புக் கண்டேன். அம்முறுவலிப்பு என் உள்ளக்குழப்பத்தை ஓரளவு தணித்தது. ஊக்க மிகுதியால் தேவையில்லாத வினு விடுத்தேன். "ஏதேனும் கட்டளை உண்டோ, பெருமாட்டி?" பட்டம்மை இன்னும் மகிழ்ச்சியுற்ருள்: "இத்திருமுக ஏடு படித்து இத்துணை குழப்பம் ஏன் கொண்டனை, பட்ட?" என வினவினுள். அறியாததோர் ஐயங்கொண்டேன். பட்டம்மை படித்தாளா இதனை? ஐயத்தோடும் புகன்றேன்: "திருமுகத்தின் செய்தி கவலை தரத்தக்கதாக இருக்கின்றது. ஊழியன் குற்றம் மன்னிக்கப்பெறவேண்டும். இதனை மறைத்து வைக்க இசைந்தருளல் வேண்டும்." எனதுள்ளத்து நிலைமையைச் சுவைத்தவளாய் வினவினுள்: "அத்துணை ஆழ்ந்த மறைபொருளா என்ன?" இனிய சிரிப்பினுல் கிளுகிளுத்தாள். நான் பட்டம்மைதன் வேடிக்கைப்பான்மையைச் சுவைக்க முடியும். ஆனுல் என்னுள்ளம் எவ்வளவு பிளந்துள்ளது என்பதை அறியாள். நான் உள்ளத்துறுதியோடும் உரைத்தேன்: "ஆம் பெருமாட்டி! சில நாட்கள்வரை இச்செய்தியைத் தங்களிடமிருந்து மறைத்து வைத்தால் நலமாக இருக்கும்." மனத்தாங்கலோடும் பட்டம்மை புகன்ருள்: "நான் தடையாக உள்ளேனு பட்ட? இதுதான் பொருளா?" என் வாய் அடைந்தது.

சிறிது நேரம்வரை மெல்லிய இனிய புன்முறுவலால் என் கலவரத்தைத் தூண்டியவளாய் நின்றிருந்தாள். இயல்பான குரலில் சொன்னுள்: "ஆபீரக் குறுமன்னனின் அரசி எனக்கும் ஒரு பெயர்ப்பு அனுப்பியிருந்தாள். அதனைப் படித்தேன். வருக,. அதனில் கலவரமடைவதற்கு ஒன்றுமில்லை." நான் மிக்க வியப்பில் முழுகிவிட்டேன் நெடுநேரம்வரை. குறும்பும் மலர்ச்சியும் இனிமையும் பொருந்திய முகத்திருவினை யாதொன்றும் விள்ளாது பார்த்தவாறு சொன்னேன்: "பெருமாட்டி! நீர் வாழ்க! கடவுள்மகன் துவரமிலிந்திரருக்குத் தகுந்த திருமகள் நீவிர்! வேறு யாவர் இத்துணை உறுதிகொள்ளத்தக்கவர்? கடவுள் மகனிடமிருந்து வேறு எத்தகைய மகள் பிறக்கமுடியும்? கடலில் இருந்தே கௌத்துவமணி பிறக்க முடியும்; நிலத்திலிருந்தே சீதை பிறக்க முடியும்; இமயமலையில் இருந்தே பார்வதி தோன்ற முடியும்; திருமாலது திருவடியிலிருந்தே கங்கை பொழிய முடியும்; படைப்புக் கடவுளிடமிருந்தே முக்கல்விகளும் அரும்ப முடியும். இத்தகைய சூழ்நிலையில் குழப்பவுள்ளத்தையும் தணிய

வைக்கும் உறுதி கடவுள்மகன் திருமகள்தான் கொள்ளமுடியும். ஆறுதலுற்றேன் பெருமாட்டி! பாரதம் தன் சீரியபேறு பெற்றது; கோயில்களும் அறப்பள்ளிகளும் இன்று ஓம்பப் பெற்றன; அந்தணர் பௌத்தர் இவருக்குற்ற தடைகள் தவிடு பொடியாயின. இளநங்கையரும் சிறுவரும் இன்று கவலை யொழிந்தனர். இன்று நிலம் மகிழ்ச்சியான் குலவுகின்றது; திசைகள் மாசு அகன்றது; காற்றுத் தூய்மையுற்றது. எல்லைப் புறமெனும் பெருங்கடலில் வடவைக்கனல் தழல்கள் எழும்பும் கடவுள்மகன் தம் தோள்களென்னும் நெருப்பிலே எல்லைப்புறக் கள்ளர்கள் ஆவுதியாகப் பொழியப்பெறுவர். பெருமாட்டி! நான் பேறுபெற்றவனானேன்.''

பட்டம்மை அசையாது என் தொழுகை மொழிகளைக் கேட்ட வாறிருந்தாள். அவளிடம் ஒரு கடவுள் தன்மையொளி வீசுதல் கண்டேன். பார்வதி தன் அடியவனின் தொழுகையைக் கேட்க நின்றாள்போலும். நான் மிகுந்த பத்தியாவலோடும் மேற் கொண்டு கூற வாயெடுத்தேன். அதற்குள் அவள் என்னை அதட்டிச் சொன்னாள்: ''பட்ட! இஃதென்ன பிள்ளைகள் போன்று உறுதியற்றவனாய் மொழிகின்றனை? நான் பெருமாட்டியு மல்லள், சீமாட்டியுமல்லள், தேவியுமல்லள். எலும்பு ஊனுடன் கூடிய எளிய மங்கை. நான் தடைவடிவமானவள்; அப்படி இருத்தலே வையத்திற்கு நன்மைபோலும். நீயே இதனை எனக்கு வற்புறுத்தினை; நீயே இதனை மறக்கும்படி தூண்டு கின்றனை. நூற்றுக்கணக்கான இளநங்கையர் போலவே நானும் ஓரெளியை, சந்திரத்திகை நானுன் பட்டம்மை......'' என்று திடீரென நின்றுவிட்டாள். சொல்லவேண்யது ஏதோ சொல்ல முடியவில்லை. கண்ணீர் விட்டவளாய் முடித்தாள்: ''நான் தேவியல்ல. வருக சோறு உண்க.''

அவள் சென்றாள்; நானும் என்னையே வெகுண்டவனாய்ப் போனேன். நீ தேவி இல்லையென நீ சொல்ல முடியுமா? உன்னைக் கண்டநாள் முதலாக உனக்குத் தொழும்பு பூண இழுக்கப்பெற்றேன். எனது முழு இருப்பும் வாழ்வும் மாதுளம் பழம்போல உனது தொழும்பில் வெடிபட விரும்புகின்றேன். பொங்கியெழும் வெள்ளம்போல என் சொற்பொழிவினால் உன்னைக் குளிப்பாட்ட விரும்புகின்றேன்: இவ்விருப்பம் பிள்ளையியல்பா? நான் எளியன், சிறியன், துணையற்றவன், கருவியற்றவன், வழிதவறியவன், உண்மையே; என்னிடம் வேறு என்ன உள்ளது? எதனைக்கொண்டு உன்னைத் தொழப்

போகின்றேன். நீ தேவியே; நூறு முறை மறுத்தாலும் நீ தேவியே. குற்றமாகிய சேறு நிறைந்த இந்த நிலத்தே நீ மலர்ந்த தாமரை; புழுதி நிறைந்த காட்டில் நீ பசுமையான குருக்கத்திக்கொடி. ஆயிரக்கணக்கான பாரத நங்கையர் பேரழிவாம் குகையினின்றும் காப்பாற்றப்பெறவில்லை யானுலும் நீ காப்பாற்றப் பெறுவாய். என் துயர் என் முகத்தில் தென்பட்டிருக்கலாம். சோறுபடைத்தவளாய்ப் பட்டம்மை அன்போடும் செல்வம் காட்டிக் கூறினுள்: "கெடுதலாக நினைத் தாயோ பட்ட!" நான் நிறைந்த துயரோடும் அவளை ஏறெடுத்துப் பார்த்தேன். அவளது கண்ணில் எதிர்பாராத திருவிளையாட்டுப் பான்மை ஏற்பட்டிருந்தது. அவளுக்குச் சிறிதும் கவலை உண்டாக்கக்கூடாது என்று நினைத்தவாறு இருந்தேன். ஆனல் இளவரசி என் விடைக்குக் காத்திராமல் "கெடுதலாக நினைக்காதே பட்ட! நீ என்னைத் தேவியாக மதிப்பதில் மகிழ்ச்சி கொண்டுள்ளனே. எனில் வரம் வாங்கிக்கொள்" என்று கூறி என் தட்டில் தன் கையாலேயே சமைத்த இனிய பொங்கல் படைத்தாள். நான் முறுவலித்தேன்; அவளும் புன்முறுவல் செய்தாள்.

## உயிர்ப்புப் பன்னிரண்டு

பத்திரேசுவரம் பாதுகாப்புச் சிறந்ததொரு கோட்டை யாகும். உலோரிகதேவரது இல்லம் கோட்டை நடுவிடத் திருந்தது. கிழக்கு வாயிலில் இருந்தும் சிறிது தொலைவிலேயே யாம் தங்கிய இல்லப்பகுதி இருந்தது. அங்கிருந்து அகழிவரை அரசவழி சென்றது; அது சிறிது தொலைவு சென்று வலப்பக்க மாக வளைந்து சென்றது. அரச தெருவின் இருமருங்கிலும் நகரச் செல்வந்த மாக்களின் மாளிகைகள் இருந்தன. இரவில் இம்மாளிகைகளின் சாளரங்கள் வழியாக மங்கிய விளக்கொளி காணப்பெற்றது. பட்டம்மையின் கையால் பரிமாற மாவராக னது அருட்பேறு, சோறு உண்டு வெளிப்போந்தேன். தெரு முழுவதும் நீண்ட மலைப்பாம்புபோல ஓரோசையுமின்றி அமைதியாக இருந்தது. வெளிப்போந்து ஒரு திண்ணைமீது

அமர்ந்துகொண்டேன்; கீழ்ப்பால் செல்லும் அரசதெருவினைக் காணலானேன். வானம் தாமரை மலர்ந்த கானம்போல் காணப்பெற்றது. இரவின் முழு அமைதியிலே இந்த அரண் நகர் மிக அழகாகக் காணப்பெற்றது. என் நினைவைப் பருவு சர்மாவினது முடங்கல் செய்தி இன்னும் அகலாதிருந்தது. இளவரசியின் மலர்ந்த—மகிழ்ந்த முகத்தால் ஆறுதலுற்றேன். ஆயினும் என் கடமைப்பொறை குறையவில்லை. நிபுணிகை எனக்கு இம் முயற்சியில் உதவி செய்ய முடியும் என்று நம்பினேன். நிபுணிகையிடம் உள்ளந்திறந்து எதனையும் பேசமுடியும். இளவரசி முன்னர் எனக்கு மந்திரமயக்கச் சடத்தன்மை ஏற்பட்டுவிடுகின்றது. விடியற்காலத்தே நிபுணிகையுடன் கலந்தாராயலாம் என எண்ணியிருந்தேன். அவள் இளவரசியின் பான்மையைச் செவ்வனே அறிந்திருந்தாள்; ஆனல் நானே இன்னும் அவளை அறிந்துகொள்ள முடியவில்லை.

மெதுவாகக் கீழ்பால் மேடையிலே நிலவு தோன்றியது. முதலில் முழு வையமும் சிந்தூரச் செம்மையுற்றது; பின்னர் வெண்சந்தனத் தேய்வின் ஒழுக்கிலே முழுகியதுபோலக் காணப்பட்டது. மாளிகைச் சந்துகளுக்குப் புருக்கூட்டங்கள் வந்தடைந்தன. வெண்பொடி போன்று தூய இறக்கைகளைப் படபடவென அடித்துக்கொண்டன. அதன் வாயிலாக அப்புருக்கள் இருட்டை விலக்குவன போன்றிருந்தன. எப்போதேனும் வௌவால்களின் நிழல் என் தலைமீது கடந்து சென்றன. இதனைக் காணும்போது இருளென்னும் படைத்தலைவனின் விரல் விட்டெண்ணக்கூடிய எஞ்சிய படைஞர் நேரம் பார்த்து இங்குமங்கும் ஓடி ஒளிவதுபோலத் தென்பட்டன. முழுச்சுற்றுச் சார்பும் அமைதியும் அழகுங்கொண்டிருந்தது. நிலவென்னும் இனிய பாலில் குளித்தெழுவதுபோலக் கோட்டை காணப் பெற்றது. கருப்புரவெண்ணிற முக்கண்ண பெருமானின் மயிர் முடிமீது நூற்றுக்கணக்கான ஒழுக்குகளுடன் பொழிந்த வானயாற்றின் வெள்ளம் இமயமலைமீது இப்போது நான் காணும் அழகைக் கொண்டிருந்திருக்கும்; அப்பொழுது வானத்தைத் தொடுகிற வெண்மலைமுடி தன்னிடத்திலேயே அசையாமல் இக்கோட்டை முடிபோன்றிருந்திருக்கும்; பத்திரேசுவரர் அரண்மனை மாடிகள் அந்த வெண்ணிமயமலை முடிகளெனத் தோற்றமளித்தன; இவ்வரண்மனைகள் தம் சாளரங்களுடே எரியும் விளக்குகள்போல இமயத்தின் மருந்து மூலிகைகளும் மணிகளும் சுடர்விட்டெரிந்து காணப்பெற்றிருக்கும்.

இன்று இவ்வரண்மனைகளின் திரைகள் சுருண்டு மடங்குவது போல இமயமலை இடைப்பகுதியில் உலாவும் மேகங்கள் சுருண்டு மடங்கியிருந்திருக்கும்; இவ்வரண்மனை அழகிகள் இனிமையும் வெற்றியும் ஊட்டுகின்ற தண்காற்றினை நுகர்ந்தனர்போல இமயமலைக் குகைகளிலே சித்தர் தம் இளம் மங்கையர் வான யாற்றின் குளிர்ந்த திவலை செறிந்த இளங்காற்றினைச் சோம் பலயர்வுடனும் குறும்பு விளையாட்டுடனும் நுகர்ந்திருப் பார்கள்.

அன்று இரவில் நான் உறங்கவில்லை. நான் இன்னும் பட்டம்மையை அறிந்துகொள்ள முடியவில்லை. மௌக்கரி குறுமன்னன் அரண்மனை மங்கையரில்லத்தே பட்டம்மையின் வலிகுன்றிய வெளிறிய அழகிய திருமுகத்தைக் கண்டிருக்கின் றேன். துர்க்கை மன்றத்தே கிருஷ்ணவர்த்தனன் புகலிடத்தை முற்றிலும் மறுத்தபோது அம்பு பொத்திய இளமான்போலத் துயர் நிறைந்த முக அழகை நான் மறக்க முயன்றும் மறக்க முடியவில்லை. கவின் நிறைந்த கங்கை ஒழுக்கிலே முன்னர் தன்னைச் சிறைப்படுத்திய வரலாற்றினைக் கூறியபோது உறுதி யிழந்த பெண் சிங்கம்போல அவள் கண்களில் நெருப்புப் பொறி பறப்பது கண்டிருக்கிறேன். முடிவில் கங்கையில் விழுந்த பிறகு நான் அவளைப் பாதுகாத்துக் கரையேற்றியபோது கரைமீது மயங்கித் தளர்ந்தும் அவள்தன் மனங்கவரும் அழகானது என் அகத்தே அழியாது குடிகொண்டது. அக்காட்சி ஏழ்கடல் ஆழத்தே முழுகடிக்கப்பெற்ற பூதேவியை மாவராகன் தன் வெண்கோட்டில் அமரவைத்துத் தூக்கிவிட்டபோது நிலமகள் தன் உறுதியையும் பெருமையையும் தோற்கடிப்பதாக இருந்தது. ஆனால் அக்காட்சிகளிலும் இன்று நான் கண்ட இளவரசியின் தோற்றம் முற்றிலும் வேறானது. இந்தத் தோற்றங்கள் அனைத் தையும் கோக்க ஒரு பொது இழையைத் தேடுகின்றேன், கிடைக்கவில்லை. சில நாட்களாக, என் அறிவு என்னை ஏமாற்றி யது, தொழில் வலிமை நலிந்துவிட்டது, சொல்லொழுக்கும் உலர்ந்துவிட்டது என உணரலானேன். நான் வையத்தின் முரண்பாடுகளைக் கண்டிருக்கின்றேன்; இவ்வுலகிலே ஒன்றும் அறியாத பார்ப்பனப் பிரமசாரி அல்ல நான். செய்யத்தக்கது இது செய்யத்தகாதது இது என்று கண்டுபிடிக்கும் உலகத்தார் தம் உரைகல்லினும் என்னுடையது வேறானது உண்மையே; ஆனால் உலகில் ஒழுக்க எல்லை எதுவென அறிந்திருக்கின்றேன். எனினும் இளவரசியின் திறத்தே என்னுள்ளம் செயலற்றுப்

போய்விடுகிறது; அறிவு குறுகிவிடுகிறது; மூளை வறண்டு விடுகின்றது. கடைசியாக என்னுள்ளத்தினைக் கட்டையாக்கு வதும் அறிவை மயங்க வைப்பதும் ஆகிய அந்த அகமாறுதல்தா னென்ன? இதற்கு விடை பகர முடியவில்லையே! நானே எனக்குச் சிக்கறுக்க முடியாத புதிராகிவிட்டேன்.

ஒரு பொருள் தெளிவானது. இளவரசி, நிபுணிகை ஆகிய இருவருடன் நான் உறைவதால் என்னுள்ளம் மாறுதலை உற்றது; அவர்களைப் பாதுகாக்கவே அவருடன் இருக்கின்றேன்; இது சொல்மட்டும்தான்; ஆனால் உண்மையில் அவரிடம் புகலிடம் பெற்றவனானேன். இந்நிலையிலிருந்தும் நான் விடுதலை பெற்றாக வேண்டும். இன்று போலப் பிறர் ஆட்சிக்குட்பட்டது போன்ற நிலை எனக்கென்றும் ஏற்பட்டதில்லை. அன்புமிக்க பட்டம் மையைத் தனியேவிட்டு எப்படி நான் போக முடியும்? கடம்ப மலர் இழைகளென என் உடம்பு முழுதும் மயிர்க்கூச்செறிந்தது. கொடிய புதிர்! பிறர் ஆட்சிக்குட்படும் இந்த நிலையை மயிர்க் கூச்செறியும் என் உடம்பு வரவேற்பது போன்றுள்ளதே! உருகிய வெண்ணெய்போல் என் உள்ளம் கரைவது போல இருக்கின்றதே! மலர்ந்த செந்தாமரைபோல ஓர் அழுத்தமான ஆவல், தன் போர்வையை நீக்கி வெளிக் கிளம்ப விரும்புகின்றது. எனக்கென்ன நிலை ஏற்பட்டுவிட்டது? இந்த நேரத்திலா இக் கடமை முரண் என் உள்ளத்தில் தோன்றவேண்டும். நான் இன்று பட்டம்மையின் முகத்திலே புன்முறுவல் கண்டேன். அவள் வாயிதழ்களில் விளையாட்டுக் குறும்பு தவழ்ந்தது. அசைகின்ற அலைபோலக் கன்னத்திடத்தில் இனிய நடுக்கங் கண்டேன்; வெண்தாமரை மலர்போலக் கண்களில் செம்மை தவழ்வதைக் கண்டேன். அவள் உடம்பு முழுவதும். ஒருவகை ஒளி அலைகளால் கவியப் பெற்றிருந்தது; அவள் உடம்பு மீது முத்தழகு ஒளியலை நடனமிடுவது போலிருந்தது. இதுவே என் நற்செய்கையின் பேறுபெறும் வாய்ப்பாகும். இன்றே என் வாழ் நாள் முழுப்பயன் அடையும் வாய்ப்பாகும். ஆனால் அறிவு வீழ்ச்சியுற்றிருக்கின்றேனே! உண்மையில் இன்றெனக்கென்ன ஏற்பட்டுவிட்டது?

எனக்கு ஒவ்வொன்றாக நடந்தனவெல்லாம் நினைவிற்கு வந்தன. இன்று இளவரசி என் முன்னர் மொழிந்த சொற்களின் பொருள் என்ன? ஆயிரக்கணக்கான அரிவையர் போல நானும் ஓரெளிய அரிவையே என்றாளே! இருப்பினும் என்ன? அவள் எலும்பு தசை இவற்றால் ஆகிய எளிய நங்கைமட்டுமாக

இருப்பின் பாணபட்டன் தன்னை முற்றிலும் அவள் ஊழியத் திற்குக் கொடையாக அளிப்பதே வாழ்வின் பயன் எனக் கருதமுடியுமா? அவள் தேவ படிமம்! அந்தோ! பாழும் உலகம் எலும்பு தசைகளுடன் கூடிய இந்தத் தேவபடிமத்தைத் தொழ வில்லை. இந்த வையத்தினர் வலிமை வெறியென்னும் மணற்சுவர் எழுப்ப முனைகின்றனர். தாம் தொழக்கூடிய படிமம் எது என்பதை அறியவில்லை. இச்சொற்களால் பயன் என்ன? உலகியலில் நிறையக் கண்டிருக்கிறேன், அழகையும் ஒளியையும் அழிவுதரும் வகையிலே விற்பதனை. இதனைக் கண்டு முதன் முதல் மனம் பிளக்கப்பெற்றேன். அதனை மீண்டும் நினைக்கும் போது என் உள்ளமும் உடலும் எதிர்த்துப் போராட முற்படு கின்றன. ஆடவரைக் கவர்வது அழகும் இனிமையும் அல்ல; கண்ணால் பேசி மயக்குதலும் காதலன் கொடுக்கும் பரிசைச் செருக்கினால் உதைத்துத் தள்ளுதலுமாகிய வேசியர் பான்மையே ஆடவரைப் பெரிதும் மயக்குகின்றன. இதனையும் அறிந்திருக் கின்றேன். ஆனால் பார்ப்பதற்கு ஒன்றுக்கொன்று முரண் பாடாகக் காணும் நடத்தைகளின் உள்ளே நன்மை பயக்கும் ஒரு கடவுள் தன்மை அடங்கியிருக்கின்றது. நொடிதோறும் மாறிக் கொண்டேயிருக்கும் வெளி ஒழுக்கங்கள் ஊடே ஒரு சமநிறையே அது. முரண்பாடுகளின் சமநிறையாகிய அந்தத் தேவதையைக் காணாத இளமையைத் தான் மதவெறிகொண்ட களிற்றரசு என்கின்றனர். காதலை மனவிருள் என்கின்றனர். இயல்பான பான்மையைக் கோணிய குறும்பென்கின்றனர்; குருக்கத்திக் கொடியைச் சூழ்ந்துகொண்டு வண்டு வரிசை இசை முழங்கும் பொழுது மலர்களின் உள்ளிடத்தே நறுமண வடிவில் உறையும் மாகடவுளை நான் தெளிவாகக் காண்கிறேன். ஆறு வெறி கொண்ட விரைவோடும் தனக்குரிய யாவற்றையும் கொள்ளை கொள்க எனக் கொடையாக அளித்தவாறு கடலை நோக்கிப் பெருகும்போது மாபெரும் அன்பு பூண்ட தேவதையின் நினைவு வருகிறது. மேகத்தின் கருநெஞ்சுக்குள் நொடிப்போது வரை மின்னிப் பின் மறையும் மின்னலைக் கண்டால் நோய்த்துயரத் தேவதையைத் தவறாமல் காண்கிறேன்.

திடீரெனப் பட்டம்மையின் குரலை எனக்குப் பின்னால் கேட்டேன்: "பட்ட! மெலிந்தவன் நெடுநேரம் இரவு முழுவதும் புறத்தே இருப்பது தக்கதல்ல." முதன் முதன் மேக இடியைக் கேட்ட மான்கன்றுபோலத் திடுக்கிட்டுப் பின் திரும்பிப் பார்த்தேன்; அவள் இளவரசியே. குதிகால்வரை நீலப் போர்வை

போர்த்திருந்த அவள் திருமுகம் நூறுமடங்கு அழகை உட்கொண்டு இருந்தது. அது நிலவிலே மிளிரும் வானயாற்றெழுங்கிலே மிதந்து செல்லும் பாசி வலையில் சிக்கிய மலர்ந்த தாமரைபோல் இருந்தது; அல்லது பாற்கடலில் நீந்திச் செல்லும் நீலப் போர்வையுடைய தாமரை போலிருந்தது; அல்லது கைலாய மலைமீது மலரோடு பொலியும் மருக்கொழுந்துபோன்றிருந்தது; நீலமேகப் பரப்பில் ஒளி செய்யும் அகலாத மின்கொடிபோன்றிருந்தது. அவள் தம் பெரிய பெரிய அழகிய கண்கள் தாமே தமக்கு நிகர். பட்டம்மை திடீரென எதிர் பாராமல் வந்ததாலே ஒன்றும் தெரியாமல் மரம்போல் நின்று விட்டேன். ஒரு விடையும் சொல்லத் தோன்றவில்லை. மெல்லிய அழகிய அவள் பார்வையை ஆவலோடும் பார்த்துக் கொண்டு இருந்தேன். கருநெய்தல் மாலைபோல அவள் பார்வை என்னைப் பிணித்தது; கஸ்தூரி மேற்பூச்சுப்போல அது என் உடம்பு உள்ளம் இரண்டிலும் இன்பத்தைத் தூண்டியது; அது செம்பருத்தி மலர்மாலைபோல உடம்பையும் உள்ளத்தையும் மகிழ்ச்சியில் பொங்கச் செய்தது. அவள் அங்கு ஒரு நொடியே நின்று விட்டுப் பின் தன் இல்லம் நோக்கிப் புறப்பட்டவள் சொன்னாள்: "வருக, உள்ளே சென்று உறங்குக."

'பாதுகாப்பார் யார்? பட்டம்மைக்கு நானா? அல்லது எனக்குப் பட்டம்மையா? யார் யாருக்கு ஊழியம் புரிய ஏற்படுத்தப் பட்டனர்? நான் அவளுக்கு ஊழியம் புரிகின்றேனா, அல்லது அவள் எனக்கு ஊழியம் புரிகின்றாளா? வானத்தின் மீன்களே! நீங்களே சான்று. பாருங்கள்; இப்போது. பாணபட்டன் வழி தப்பியவனல்லன்; தறியை யறுத்துத் தலைகால் தெரியாமல் திரிகின்ற மாடும் அல்லன்; மண்வெட்டி கிளர்த்திய அருகம்புல் போலப் பேறிழந்து வழியில் வீசியெறியப்பட்டவனுமல்லன்; காட்டில் மலர்ந்து வாடிவிடும் மலர்போலப் பயனற்ற பிறவியுமல்லன்; குதிரைக் குளம்பில் மிதியுண்டெழுகின்ற புழுதிபோலத் துணையற்றவனும் அல்லன்; பாலைவனத்தே வற்றியுலரும் ஆறு போலப் பயனற்றவனும் அல்லன். ஒளிகுன்றிய இரவின் தலைவா! முழுவையத்தில் காதலிலும் சாதலிலும் பற்றிலும் பற்றின்மையிலும் வஞ்சமில்லாத சான்று நீயன்றோ? வையத்திலிருந்து வைய முடிவுவரை, காலத்திலிருந்து கால முடிவு வரை, திசையிலிருந்து திசை முடிவுவரை நீ ஒரே செய்தியைப் பரப்புக. பாணபட்டனின் வாழ்வு இனி பயனற்றதன்று. நான் இன்றே இந்நற்பேற்றினை முழுகடித்துச் செல்வேன், ஆழந்

தெரியாத மறதி என்னும் குகைக்குள்ளே! நீ நினைவில் இருத்துக!' இவ்விதம் நினைத்தவனாய் மெதுவாக எழுந்திருந்து படுக்கை அறைக்குள் சென்றேன்; உறங்கினேன், உறக்கம் நீங்கியது, பொழுது ஏறிவிட்டது. இல்லத்தின் புறத்தே நிபுணிகை எனக்காகக் காத்துக்கொண்டிருந்தாள். இவ்வளவு காலையில் நிபுணிகையைக் கண்டதும் என் வியப்பிற்கு அளவேயில்லை. அவள் முகம் உலர்ந்திருந்தது; கண்கள் மிகவும் குழிந்திருந்தன; முழு உடம்பும் வெளிறு கொண்டிருந்தது. மிகுந்த முயற்சியோடும் அவள் என்னை வணங்கினாள். அவள் வருகைக்கும் காரணம் வினவ இருந்தேன். அவளே சொல்லத் தொடங்கினாள்: "நான் மெதுவாக உடல்நலம் பெற்றுவிடுவேன்; என்னைப்பற்றிக் கவலை கொள்ளவேண்டாம். மிகமிக இன்றியமையாத செய்தி குறித்து உன்னுடன் ஆராய வந்தேன். குற்றமாகக் கருதவில்லையேல் கூறுகின்றேன்." ஏதோ கேட்கத் தகாதது கேட்கவிருக்கிறேன் என மனத்திற்குள்ளேயே நடுங்கினேன். நான் வியப்போடும் அவளைப் பார்த்தவாறிருந்தேன். நிபுணிகை மண்டியிட்டு மீண்டும் வணங்கிச் சற்றுநேரம் பேசாமலிருந்து பின்னர் கூறத் தொடங்கினாள்: "நேற்றிரவு நீ பட்டம்மையிடம் தகாதன கூறினாயோ, பட்ட?" நான் திடுக்கிட்டேன். நானா பட்டம்மை முன் தகாதன கூறுபவன்? நிபுணிகை எனக்கு இன்னும் இதுபற்றி நினைக்கும் வாய்ப்பை அளிக்கவில்லை. என் ஊக்கத்தை இன்னும் ஊக்கியவளாய் உரைத்தாள்: "நீ வேண்டுமென்றே தகாதன கூறமாட்டாய் நான் அறிவேன். பார் பட்ட, பாபச் சேற்றில் முழுகியிருந்த என் உடம்புக்குள் நூற்றிதழ்த் தாமரையை நீ மலர வைத்தனை. நீ எனக்குக் கடவுள் போன்றவன். நான் உன் பெயரைத் தொழுகிற, இழிந்த நிலையில் உள்ள எளிய மங்கை. நீ என் வாழ்வைப் பெரிதாக மதித்தனை; ஆதலின் இத்துணை குற்றம் நிறைந்த உள்ளத்தவளாயினும் இன்னும் உயிர்த்திருக்கிறேன். கதிரவன் வேண்டுமானால் மேற்பால் தோன்றலாம். ஆனால் நீ தெரிந்து பட்டம்மையிடம் துயரந்தரத்தக்கன கூறமாட்டாய் என்பதை அறிவேன். ஆனால் பட்டம்மையின் உள்ளம் பிளவுறுமாறு ஏதோ நிகழ்ந்துள்ளது. இரவு முழுவதும் அழுதவண்ணமாக இருந்தாள். கண்கள் வீங்கிவிட்டன. திருமுகம் வாடியுள்ளது. ஆவேசம் செறிந்துள்ளது. அவள் தன்னாட்சிக்குள் இல்லை. அவளுக்கு மிகுந்த காய்ச்சல் ஏற்பட்டிருக்கலாம் என்ற ஐயம் கொள்கிறேன். நீ அவளது வாடிய செவ்விதழ்களை நோக்குக. கட்டாயம் அழத்

தொடங்குவாய். என்ன நேர்ந்தது பட்ட?'' அவள் மொழிகளைக் கேட்டு உணர்வு கலங்கினேன். குளிர்காலத் தாழம்பூப் போல என்னுள்ளம் நிறங் கெட்டது. நான் பித்தனென அலறிக் கூறினேன்: "போதும், நிவுனியா, போதும்; நீ என்மீது கொடிய வைரப்படையை ஏவிவிட்டனை.''

நிபுணிகை வாயடங்கி என்னை மிகுநேரம் உற்று நோக்கிய வாறிருந்தாள். நான் மெதுவாக இரவில் நடந்தன யாவும் அவளுக்கு ஒன்றும்விடாமல் கூறினேன். அவளது மெலிந்த முகத்தில் உவகை ஒளி தவழ்ந்தது. கருப்புரப்பில்லை போன்று வெளுத்த முகம் சுடர்விட்டெரியத் தொடங்கிற்று. பாம்பின் புற்று வாயிலூடே நாகமணிபோல உட்குழிந்த கண்கள் ஒளி பீறின. சற்று நேரம்வரை அசையாமல் அமர்ந்திருந்தாள். பல திசைகளினின்றும் அவளைக் கருத்து அலைகள் மோத நிலை தடுமாறினள்போலக் காணப்பெற்றாள். பின்னர் என்னை நிமிர்ந்து கண்டாள். முத்துக்கள் நிறைந்த சிப்பிகள்போன்றும், பனித்துளிகள் படிந்த தாமரை அல்லது செம்முருக்கமலர் போன்றும், குளிர்காலத்தில் நனைந்த பாரிசாத மலர்போன்றும், பாதி மலர்ந்த வெண்ணெச்சி மலர்போன்றும் நீர் ததும்பிய கண்கள் என் உள்ளத்தில் இரக்கமெனும் பெருக்கத்தைத் தூண்டுவனவாயின. அவை இரக்கமெனும் மழையைப் பொழிந்துகொண்டிருந்தன. அவள் உருக்கமென்ற ஒழுக்கினாலே என் உள்ளத்தைக் குளிப்பாட்டினாள். மிகுந்த நேரம் வரை மறந்தனளென மயங்கினளென இழந்தனளெனப் பாழ் நோக்கம் செலுத்தினாள். பின்னர் திடீரெனச் செந்தாமரைக் கைகள் நிலம்படிய வணங்கிக் கூறினாள்: "உணர்ந்தேன் பட்ட! என் குற்றம் பொறுப்பாயாக. நீ என் குறைபாட்டினை அறிவாய். உன் குறைபாட்டை நீ அறியத்தான் வேண்டும். எனது செய்கைக்கு நாணங்கொள்ளத் தகுதியுடையேனல்லேன். நிபுணிகையின் திறம்பற்றிய எண்ணம் கைவிடுக. அவள் எண்ணிறந்த படித்துறைகளில் நீர் அருந்தி இருக்கின்றாள். உலக அறிவு நிறைய உண்டு; நன்மை தீமைகள் கண்டு கொள்ளும் திறமை உண்டு; என் பகுத்தறிவுமீது எனக்கு முற்றிலும் நம்பிக்கையுண்டு; குற்றம் நிறைந்த என் உள்ளத்தின் மாறுதல்களைப் பிறர்மேல் சாற்றமுடியும்; ஆனால் பட்டம்மை இன்னும் இளநங்கையே. வையத்தின் கடுமைபற்றிய அறிவு கடுகளவுகூட அவளுக்கில்லை. அவள் உன்னைப் புரிந்துகொள்ள முடியவில்லை; நீ முற்றிலும் எளியன் பட்ட! ஆண்மகனில்

ஆண்மை இருத்தல் வேண்டும். பட்டம்மை ஏன் கங்கையில் விழுந்தாள் என்பதை எப்போதேனும் அவளிடம் வினவினுயா? நேற்றிரவு அவள் கொண்ட இயல்புக்கு மாருன எளிமையைச் செம்மையாகப் பயன்படுத்தி அதட்டி அவ்வுண்மையை ஏன் தெரிந்திருக்கக்கூடாது?'' இன்றுவரை நான் நிபுணிகை கூறிய வற்றின் பொருளே அறியமுடியவில்லே. ஆனல் அவள் மொழிகள் என் நிலேமையை நானறிதற்கு உதவிபுரிந்தன. புயல் நீங்கிய வானமென, மூடுபனி விலகிய திசையிடமென, பாசி ஒழிந்த பொய்கையென என் உள்ளம் உவகையால் துள்ளியது. நிபுணி கையின் கருத்தைப் பாராட்டிப் பகர்ந்தேன்: ''நிவுனியா! நான் பட்டம்மையின் தொழும்பனுனேன் என்ற பெருமை கொண்டுள்ளேன்; போடகன் ஆதற்குத் தகுதியற்றேன். நான் அவளேத் தந்தைபால் சேர்ப்பித்து விடுபெற விரும்புகின்றேன். மிகுந்த பற்றில் சிக்கிக்கொள்ள விரும்பவில்லே. பட்டம்மையிடம் கூறுக; பாணபட்டன் எதிர்காலத்தை உருவாக்கும் மாபெரும் குறிக்கோள் கொண்டுள்ளான். அவன் நாளேயே தாணே சர்புரிக்குப் புறப்பட இருக்கின்ருன் என்பதைத் தெளிவாக அறிவிப்பாயாக.'' நிபுணிகை எழுந்து சென்ருள். ஊதியம் கருதி வாணிபம் செய்யவந்த வாணிகன் மூலதனத்தையே இழந் தான்போல் நிபுணிகை வருத்தமாகத் தென்பட்டாள்.

நான் நெடுநேரம் அவ்விடத்தே அமர்ந்திருந்தேன். மெது வாகக் கதிரவன் வெப்பமிகுந்தவனுனன். மலேப்பாம்பின் சீறுதல் போல மேற்பால் காற்று வீசித் திசை வளேயத்தை வெப்ப மூட்டத் தொடங்கிற்று. வெப்பத்தின் கொடுமையால் ஒணன் நொடிதோறும் நிறமாறியவாறிருந்தது; குருவி இணேகள் களேத்து மாளிகைத் துளேகளில் மறையத் தொடங்கின. காட்டு மைனுக்கள் பல்வகை மொழிகளால் தம் துயரக்கதைகளேக் கூறத் தொடங்கின. வீட்டுப் பசுக்கள் அசைபோடுகிற தவடைகளிலும் களேப்புக்குறி தென்பட்டது. நான் இமைகொட்டாமல் அரச தெருவின் ஒரு மருங்கிலே பார்த்தவாறிருந்தேன். இதேநேரம் விக்கிரகவர்மன் வந்து வணங்கிக் கிருஷ்ணவர்த்தனன் என்பால் அனுப்பிய தூதுவனே அறிமுகம் செய்துவைத்தான். என் வியப்பிற்கு அப்போது அளவேயில்லே; ஏனெனில் மன்னர்தம் மன்னன் ஹர்ஷவர்த்தனன்பால் நான் கொண்டிருந்த வெறுப்பு நீக்கி அவரை வந்து காணுமாறு கிருஷ்ணவர்த்தனன் வேண்டு கின்ருன் எனத் தூதன் அறிவித்தான்.

தாணேசர்புரிக்குப் புறப்பட முடிவு செய்தேன். கடைசி

முறையாகப் பட்டம்மையுடன் விடைபெற்றுக் கொள்ள•விரும்பி னேன். அப்போது செங்கதிர்க் கடவுள் கதிரவன் மேற்பால் மறைந்துவிட்டான். மேற்பால் வானத்தே பவழக்கொடி பரப்புப் போலச் செக்கர் அரும்பிற்று; மாபெரும் கதிர் உருண்டை வன்மையோடு மேற்கடலில் விழுந்ததாலே நீர்த்துளிகள் ஓங்கி எழுந்தன; அவையே வானத்தில் விண்மீன்களின் உருவெடுத் தனபோலும்; கதிருருண்டை விழுந்ததாலே கிளம்பிய நீர்ப் பரப்புத்தான் அண்மையின் மேற்குக்கரையின் செம்மையைக் கழுவி விட்டதுபோலும். இளவரசி நீராடித் தொழுகை மேடை மீது அமர்ந்திருந்தாள். சிறிது நேரம்வரை நான் புறத்தே காத்திருந்தேன். இன்று அவள் மிகுந்த உருக்கத்தோடு கடவுளைத் தொழுது பாடினுள்.

சிறிது நேரம்வரை நான் புறத்தே காத்திருந்தேன். இன்று அவள் மிகுந்த உருக்கத்தோடு கடவுளைத் தொழ வானமே தன் ஆயிரக்கணக்கான விண்மீன்களென்னும் கண்களை நன்ருகத் திறந்து அவள் பாட்டைக் கேட்டிருந்தனபோலும். விழுமிய தொழுகை முழுதும் முடிந்தது. மாவராகப்படிமம் இல்லை. எனினும் அவள் எழுந்து வலம் வந்து காணுத மாவராகனை வணங்கினுள். அவள் உடற்பொறிதோறும் வழிபாடென்னும் இனிய தண்ணிய அலைபொங்கியெழுந்தது. மெல்லிய குங்குமப் புடவையையும் பீறிக்கொண்டு அவள் உடம்புக்கொடியின் பேரழகு பொலியத் தொடங்கியது; நற்பேறென்னும் நிலாவின் ஒரு குறிப்பினுலேயே அழகென்னும் பெருங்கடலிலே எழுச்சி தோன்றியதுபோல் இருந்தது! சிறிது நேரம்வரை உள்ளத் தெழுச்சி உற்றனள்போலவும் பத்தியால் அடக்கப்பெற்றனள் போலவும் தந்நிலைமீது வெறுப்புற்ருள்போலவும் கால்முட்டிமீது அமர்ந்திருந்தாள். பின்னர் மெதுவாக எழுந்தாள். நான் வாயிலில் நின்றிருப்பது உணர்ந்து என்பால் திரும்பினுள். அவள் கண்களில் இயல்புக்கெதிரான பெருந்தன்மை பொலிந் தது. இமைகள் சற்றே தாழ்ந்தன. என்னை ஒரு தவிசில் அமரு மாறு சுட்டினுள். நானும் அமர்ந்தேன். அவளும் தன் தவிசில் அமர்ந்தாள். மிகுந்த நேரம்வரை அவள் திருவாயினின்றும் ஒரு சொல்லும் புறப்படவில்லை. நான் என் கருத்தைக் கோக்க முற்பட எந்த இழையையும் கோக்க முடியவில்லை. பிறகு அருள்நிறைந்த குரலிலே இளவரசிப் பெருமாட்டியே பேச்சுத் தொடங்கினுள்: "நிபுணிகை உன்னிடம் தகாதன கூறியிருப்பாள். அவற்றைப் பொருட்படுத்தாதே. அவள் என்னைத் தன்னுயிரினும் விரும்பு

கின்ருள்! உன்மீது அவள் கொண்டுள்ள அக்கரைக்குச் சான்று உண்டு. சின்ஞட்களாக அவள் இயல்பான உணர்வுடையவளாக இல்லை என்பது தெளிவு. மந்திர ஊதலினல் அவள் உள்ளத்தில் சிலமாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. நான் பகல் முழுவதும் அவளைப் பற்றியே ஆராய்ந்துகொண்டிருக்கின்றேன். மாமாயை இவ்விடத்திருந்து புறப்பட்டபோது, வைகாசி நிறைமதியின்போது தாணேசர்புரியை அவள் சேர்வதாகக் கூறிச் சென்ருள். அங்கேயே அவதூதரும் வருவாராம். நிபுணிகையிடம் ஏதேனும் கேடு பயக்கத்தக்க மூளை மாறுபாடு இருந்தால் பாணபட்டனை அனுப்பென மாமாயை கூறிப் போனள். நாளைக்குப் புறப்படுகிருயா, பட்ட?'' நாள் வியப்புற்றுப் பட்டம்மையைப் பார்க்கலானேன். அவள் கட்டளை நிபுணிகையின் அறிவுறுத்தலுக்கும் குமாரகிருஷ்ணவர்த்தனன் செய்திக்கும் ஒத்திருந்தது. நான் பேச முடியாது தவித்து நின்றுவிட்டேன். எத்துணை எதிர்பாராத ஒற்றுமை! நிபுணிகைக்குப் பித்துப்பிடித்துவிட்டதா என்ன? வைகறையில் அவள் வந்தது, பொருத்தமற்று உரையாடியது, எல்லாம் மயக்கவுள்ளதைக் குறிக்கின்றனவா? மேற்கொண்டு நினைக்கப் பட்டம்மை எனக்கு வாய்ப்பளிக்கவில்லை. நிறுத்தாமல் பேசியவாறிருந்தாள்: ''உலோரிகதேவர் மனைவி எங்களுக்கு அரண்மனை மாதரில்லத்தே இடம் கொடுப்பதாகக் கூறினர். ஆனல் நிபுணிகை நிலையைக் கண்டு ஆங்குறைவது நல்லதல்லவென்று நினைக்கின்றேன். ஆதலில் அவர் இந்த இடத்திலேயே எங்களுக்கு வேண்டிய நல்ல ஏற்பாடுகள் செய்து தருவதாக உறுதி கூறினர். இங்கேயே எங்கேயாவது படைவீடு அமைத்து இருப்பீராக என்று விக்கிரகவர்மாவுக்கு அறிவிப்பாயாக. நாளை தாணேசர்புரிக்குச் சென்று மீள்க.''

நான் மறுமொழி விள்ளாமல் கட்டளையைத் தலைமேற்கொண்டேன். ஆனல் எங்கிருந்தோ உள்ளத்தில் எறிவேல் பாய்ந்ததென நினைத்தேன். பட்டம்மையைத் தனியாக விடுத்துப் படரவேண்டியிருக்குமே. நான் முன்னே பற்றில் சிக்குறுகின்றேன் என நினைத்தது வெறும் மயக்கமே. பட்டம்மை வாயிலாகக் கட்டளை பிறக்குமாகில் நான் உள்ளக் குழப்பமுறேன். சிறிது நேரம்வரை நான் பேசாதிருந்தேன். இது கண்டு பட்டம்மை என்னை நோக்கினள். மழைப்பொழிவில் நனைந்த வலியான் குருவிக்குஞ்சுகள்போலக் கண்கள் மேலே எழவில்லை; விரைவில் கீழே நோக்கின. சற்று நின்று சாற்றத் தொடங்கினள்.: ''பட்ட! நான் நற்பேறு நலிந்த நங்கை. நீயே

நானிலத்தில் வாழ்வதற்குப் பயனும் பொருளும் உண்டென உணர்த்திளை. முற்பிறப்பின் எத்தகைய நல்வினையாற்றி னேனே, அதன் பயனுக மாவராகன் என்னிடம் உன்னை அனுப் பினுன். உன்னுடன் பழகியதால் நான் பேறிழந்தவள் என்பதை மறந்துவிட்டேன். நான் உனக்கு மிகுந்த தொல்லைகள் எல்லை யில்லாதன தந்துவிட்டேன். மீண்டும் தந்தவாறிருப்பேனே? நான் வையத்தறிவு பெருத இளநங்கை. நிபுணிகை தனது பித்தம் நிறைந்த மொழியால் என் உண்மை வடிவத்தைக் காட்டினுள். உன்னைக் கங்கையில் முழுகடிக்கவே நான் அதனில் விழுந்தேன் என அவள் கூறியது உண்மையாக ஒருவேளை இருக்கலாம். என்னல் அவ்வாறு கூற முடியாது. மௌக்கரி களின் அருவருக்கத்தக்க அக்குறுமன்னன் மீண்டும் என்னைச் சிறைப்படுத்த விரும்பினுன் என ஒரு நொடிப் பொழுதிற்காக நினைத்தேன். விக்கிரகவர்மன் தன்னை மௌக்கரி இனத்தவன் என்று உன்னிடம் கூறிக்கொண்டிருந்ததைக் கேட்டுவிட்டேன்; அதனுல் என் ஐயம் வலிமையுற்றது. ஆதலின் கங்கையில் நான் விழுந்தேன். அறிவற்ற இளமங்கையைப் பொறுத்தருள் வாயாக, பட்ட. பட்டன் இல்லாதிருந்தால் நீ கங்கையில் விழுந் திருக்கமாட்டாய்'' என்று நிபுணிகை கூறுகின்றுள். இன்று நடந்தன யாவற்றையும் நினைத்துப் பார்க்கின்றேன்; என் உள்ளத்தே தெரியாத ஆழத்திடத்தே ஒரு கருத்துக் கட்டாயம் இருந்திருக்கும். நான் கங்கையில் விழுந்தால் பட்டன் கட்டாயம் பாதுகாப்பான். அவன் என்னை முழுகவிடமாட்டான் என்று என் உள்ளம் என்னையும் அறியாது நம்பியதுபோலும். பட்ட! நீ என் உடம்பை, உள்ளத்தை, நாணத்தை, மானத்தை ஒருங்கே காத்தனை. என் நலனைக் கோரும் உயர்ந்தோனைக் கேட்டில் செருகிய குற்றம் புரிந்தவள் நான். என் குற்றம் பொறுத்தருள் வாயாக, பட்ட!'' இங்ஙனம் கூறியவளாய் இளவரசி தன் மலர்க்கைகளை நிலத்தில் படியவைத்து என்னை வணங்கினுள். வேல் பாய்ந்தாலும் நோயுணர்ச்சி யுணராத கட்டைபோல ஆய்விட்டேன். இத்துணைப் பெரிய செயல் என்முன் நடந்தேற நான் உணர்வற்றவனுய் அசைவற்றவனுய் அமர்ந்திருந்தேன். பட்டம்மை மண்டியிட்டு அமர்ந்திருப்பது கண்டு ஆவேச முற்றேன்; சடக்கென எழுந்து நின்றேன். ''என்ன சொல்லு கின்றனை, தேவீ! நிபுணிகை பித்துப்பிடித்த நிலையில் தன் மனம் வந்தன கூறியிருப்பாள். அதை உண்மையெனக் கொண்டு என்னைக் குற்றவாளி ஆக்குகின்றனை'' என்றேன். பட்டம்மை

ஒன்றும் பகராதிருந்தாள். மிகுந்த நேரம்வரை அசையாத விளக்குத்தழல் போலவும், அசையாத மின்கொடி போலவும், மலர்ந்த பூங்கொடிபோலவும் அவள் அமர்ந்திருந்தாள். பின்னர் மெல்லச் சொல்லலானாள்: "அங்கிருந்து விரைவில் திரும்புக." நான் அவ்விடம் விட்டுப் புறப்பட்டேன்: "நிபுணிகையைப் பார்க்காதே. அங்குச் சென்றபோது நிபுணிகையின் தோழி சுசரிதைதன் செய்தி அறிந்துவா. அவள் நிபுணிகைதன் கடையருகே எங்கோ இருக்கிறாளாம். அவளைத் தீவினை பற்றியது. பேறிழந்தவளானாள். ஒருமுறையே பார்த்திருக்கின்றேன். நான் சொன்னது மறக்காதே" என்று கூறி முடித்தாள் பட்டம்மை.

வைகறைப்பொழுதில் நான் தாணேசர்புரிக்குப் புறப்பட்டேன். குதிரையேறிப் பத்துநாள் இடையறாமல் வழிபோய் இறுதியில் தாணேசர்புரிக் கோட்டை வாயிலை அடைந்தேன். நகர்க்குள் நுழைந்ததும் நிபுணிகை தன் தோழி சசுரிதைபற்றிய நினைவு கொண்டேன். ஒரே முறைதான் நிபுணிகை இவளைப் பற்றிக் குறித்திருந்தாள். அப்போது அவளது முழு வரலாற்றையும் கூறுகவென வேண்டியும் நிபுணிகை பேசாமல் இருந்துவிட்டாள். பட்டம்மையிடமும் சுசரிதைபற்றிக் குறிப்பிட்டிருப்பாள். இங்குச் சுசரிதை என்ன செய்கிறாள்? ஏதோ செய்துகொண்டிருப்பாள், நல்ல தொழிலாக இருக்காது, இது தெளிவு. எனினும் அவளிடம் தவறாமல் செல்வேன். வாழ்வு முழுவதும் மாதின் உடம்பைத் தூய கடவுட்படிமம் எனக் கருதி வந்திருக்கின்றேன். அவள் எங்கிருப்பினும் என், எந்நிலையிலிருப்பினுமென், என் மதிப்பிற்கும் அக்கரைக்கும் உரியவளே. இன்று மன்னர் மன்னவனைக் காணுதல் வேண்டும், சுகதபத்திரரை வணங்குதல் வேண்டும், அகோரபைரவரைக் காணவேண்டும்; எனினும் சுசரிதையை மறக்க முடியாது. மன்னர் மன்னனைக் காணும் பெருமைக்காக, அமைதிக்காப்பாளன் கிருஷ்ணவர்த்தனைக் காணும் பேற்றினுக்காக, இன்று சேற்றில் சிக்கியிருக்கும் கடவுட்படிமத்தைக் காணாது போவேனோ? ஒருகாலும் அப்படி செய்யமாட்டேன். பட்டம்மையின் எதிர்கால நலனுக்குக் கேடு பயக்கும் எத்தொழிலையும் இயற்ற இயலேன். எனினும் கிருஷ்ணவர்த்தனன் மன்னர் மன்னன் அடிகள் சுகதபத்திரர் இவர்களைக் காணு முன்னர் ஒன்றும் செய்யமாட்டேன்.

அன்று வைகாசி நிறைமதி. அதே நாளன்று புத்தர் பெருமான் மண்ணுலகில் பிறந்தார்; அதேநாள் இயற்கையொடும் இயைந்தருளினார். பௌத்த மன்னன் தலைநகரில் தக்க

வாறு மிகுந்த ஆரவாரத்துடன் பெருமையுடன் அத்திருநாள் கொண்டாடப் பெற்றது. தெருக்களில் நன்மணங்கமழ்ந்தது. அரண்மனைகள்மீது மங்கலக் கொடிகள் பறந்தன. அரண்மனைச் சாளரங்களில் சிறு சண்பகம் மல்லி முல்லை மாலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. மாந்தர் புத்தாடைகள் புனைந்திருந்தனர். நகரத்தில் காலடி வைத்ததும் சுகதபத்திரரின் அறிவுரை நடக்க விருக்கின்றதெனக் கேள்வியுற்றேன். மன்னர் தம் மன்னன் ஹர்ஷதேவன் கிருஷ்ணவர்த்தனன் இவர்கள் தம் ஊர்வலம் பௌத்தப் பள்ளிநோக்கிச் சென்றது. இச்செய்தி கேட்டதும் என் மூளையில் இருந்த பிற குறிக்கோள்கள் மறைந்தன ; அடிகளது அறவுரை கேட்கும் அவாவினுல் இழுக்கப்பெற்றேன். பௌத்தப் பள்ளியை முன்னரே கண்டிருக்கின்றேன். அரசர் தெருவில் வெண் துகில் உடுத்திய மாந்தர் காணப்பெற்றனர். அவர் ஆடை கள், தலையணி, உடற்பூச்சு யாவும் நிலவு வெண்மையே ; அனை வோரும் வெள்ளியொழுக்கில் முழுகினரெனக் காணப்பெற்றனர். மேலே அரண்மனைச் சாளரங்களூடே நகைகளால் கைபுனைந் தியற்றிய பொன்னெளி பீறி''து. கீழே வெண்ணிறவொளி, மேலே அரண்மனைச் சாளரங்களூடே பீறிய நகைகளின் பொன் னெளி இரண்டும் கலந்தது எப்படி இருந்தது? கைலாய மலைமீது குளிர்காலக் கதிரவனின் மிகுந்த ஒளி பரந்ததென அழகு பொலிந் தது. நான் பேறு குறைந்தவனுதலின் பௌத்தப் பள்ளியை அணுகியபோது அறவுரை முடிவுற்றது. இப்போது மாந்தர் தம் ஐயங்களின் தீர்வு சபையில் தரப்பெற்று வந்தது.

மன்னர் மன்னன் வந்ததால் புறத்தே குழுமியிருந்த மாந்த ரிடையே மகிழ்ச்சியெழுச்சி, ஆரவாரம், வெற்றிமுழக்கம் கேட்டுப் பள்ளிக்குள்ளேயும் மாந்தர் கூட்டம் மிக்கிருக்கும் என்றும் வெற்றி முழக்கம் மிகுந்திருக்கும் என்றும் முடிவு செய்தேன். பௌத்தப் பள்ளிக்குள் யாவரும் போகலாம், ஆனல் அனைவ ருக்கும் உள்ளே செல்லும் துணிவில்லை. பேரவையில் பௌத்த துறவிகளின் எண்ணிக்கையே மிக்கிருந்தது. இல்லறத்தார் எண்ணிக்கை விரல்விட்டெண்ணிவிடலாம். மன்னர் மன்னனும் நெருங்கிய ஆட்சியாளருமே இருந்தனர். மன்னர் மன்னன் மேலுடம்பில் மேலாடையில்லை. உடம்பு முழுதும் மணங்கமழ் பூச்சினல் பூசப்பெற்றிருந்தது. தோளில் தோளணி ஒளி வீசியது ; மார்பில் முத்துத் தொடையலே பேறு பெற்றிருந்தது. மன்னர் மன்னன் அழகின் படிமம் போலக் காட்சியளித்தான். அவனுக்குச் சுகதபத்திர அடிகள்மீது ஆழ்ந்த அக்கரை இருந்

தது. அடிகளும் நட்பு நிறைந்த அன்புடன் மன்னர் மன்னனை நோக்கியவாறிருந்தார். மொத்தம் ஐந்நூறு மாந்தர் பேரவையில் அமர்ந்திருந்தனர். பாதிபேர் துறவிகள்; பாதிபேர் மன்னர் மன்னனின் ஆட்சி ஊழியர்களும், குறுமன்னர்களும், அரசர் குலத் தலைவியருமாக இருந்தனர். மெல்லிய திரையின் பின்னால் தலைவியர் வீற்றிருந்தனர்.

நான் பேசாமல் ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்தேன். அடிகள் மிகுந்த மகிழ்ச்சியுற்றவராகத் தென்பட்டார். முகத்தில் புன் முறுவல் தவழ்ந்தது. உறுதியும் அமைதியும் பொருந்திய குரலில் அடிகள் அரசனை உசாவினார்: "மன்னர் மன்னவ! நீங்கள் இந்த நாவலம் நிலத்தே யாவர்க்கும் சிறந்த மன்னர் மன்னன். தங்கள் நல்லறிவினால் குடிமக்கள் நலம்பெறுவர். புத்தர் பெருமான் காட்டிய அறவுரை யான் கூறக்கேட்டீர். நான் வினவு கின்றேன், தங்களுக்கு ஏதேனும் ஐயப்பாடு உண்டோ? தங்கள் உள்ளத்தே, நட்பும் அருளும் பரப்புகிற இந்தப் பௌத்த அறம் பற்றி எவ்வித ஐயமும் ஏற்படவில்லையா?"

அரசர்க்கரசன் சென்னி நிலம்படிய அடிகளை வணங்கி அசையாப் படிமம்போலக் கருத்தில் ஆழ்ந்திருந்தார். பின்னர் இருகை கூப்பித் திருவுள்ளம் வேண்டினார்: "அடிகளின் திருவுள்ளம் உண்டாயின் வினவ உண்டு."

அடிகள் புன்முறுவலோடு புகன்றார்: "நன்று நன்று நானில மன்னவ! கட்டாயம் வினவலாம்."

மன்னர் மன்னவன் மிகுந்த அடக்கத்தோடும் வினவினார்: "அருள் வடிவமான அடிகளே! பல துறவிகள் என்னிடம் ஒரு வினாவிடுத்தனர். பகவான் புத்தர் பெருமான் நம் பூசையை ஏற்றுக்கொள்கின்றாரா? விடை பகர என்னால் முடியவில்லை. அதைப்பற்றி ஆராய்ந்து என் உள்ளம் குழப்பமுற்று இருந்தது. விருப்பமுண்டேல் வினவுகின்றேன்" அடிகள் ஊக்கத்துடன் உரைத்தார்: "கட்டாயம் வினவுக, காவல! ஐயம் என்னும் கூரிய வேலை உள்ளத்தில் இருந்தும் எடுத்தாகவேண்டும். புத்தர் அறம் குருட்டு நம்பிக்கைமீது நிற்கவில்லை. அறிவுக்கூர்மைக் கும், கருத்தாராய்வுக்கும் இவ்வறம் எதிரானதல்ல, ஆதலின் அது நல்லறமே."

அடிகளே! புத்தர் பெருமான் வையத்துத் தொடர்பறுத்துக் கொண்டு இயற்கையில் கலந்த பின்னர், பூசையை எப்படி ஏற்றுக்கொள்ளுகின்றார்? இரண்டு முடிவுகள் ஏற்படலாம். புத்தர் பூசையை ஏற்றுக்கொள்கின்றார். இந்த நிலையில் அவ

ருக்கு வையத்துடன், தொடர்பு உண்டாகின்றது. அவர் வையத்தின் ஒரு பகுதியாகின்றார் எனில் நிலத்தில் ஒரு பத்துப் பொது மக்கள்போல ஓர் எளிய ஆளாகின்றார், எனில் அவரைக் குறித்த தொழுகை பயனற்றதாகின்றது, மலட்டுத்தன முறுகின்றது. ஏனெனில் முழுதும் நீத்தார், எதனையும் ஏற்றுக்கொள்ள முடியாது, அத்தகையோரைக் குறித்துச் செய்யும் தொழுகைக்கு ஒரு பயனும் இருக்க முடியாது. உயர்ந்தோரில் உயர்ந்த அடிகளே! தாங்களே இவ்வினாவுக்குரிய தக்க விடை தருதற்கு உரியவர்; இதன் உண்மையியலை அறுதியிடவல்லீர்.''

அடிகளின் திருமுகத்தே மீண்டும் இனிய புன்முறுவல் தவழ்ந்தது. மீண்டும் ஊக்கத்தோடும் உரைத்தருளினார்: ''நல்லது மன்னவ! முரண்பாடற்ற மொழியில் வினாவை முன்வைத்தீர். அறிவுக்குற்ற வகையில் உமது ஐயத்திற்குத் தீர்வு காண முற்படுகின்றேன். ஆனால் எனதொரு வினாவுக்குத் தயங்காமல் விடை அளிக்கவும்.''

''வினவுவீராக.''

''நல்லது மன்னவ! ஒரு மாபெரும் நெருப்பு எரிந்து தணிந்து விடுகிறது; அப்போது புல், விறகு முதலியவற்றை நெருப்பு ஏற்றுக்கொள்ளுமா?''

''இல்லை, அடிகள் பெருமான்!''

''மாமன்னா! அந்த நெருப்பு எரிந்து அணைந்துவிட்டதாலேயே நிலத்தில் நெருப்பே இல்லாத நிலைமை ஏற்படுகிறதா?''

''இல்லை பெருமான்! விறகு நெருப்பின் புகலிடமாகும். நெருப்பை விரும்பும் மாந்தர் தத்தம் முயற்சியால் அதனை உண்டாக்கிக் கொள்ளுகின்றனர். விறகை உராய்த்தோ அல்லது பிற வகையில் நெருப்புப் பொறியை உண்டாக்கியோ மீண்டும் மாநெருப்புத்தழலைப் படைத்துக்கொள்கின்றனர், தமது குறிக்கோளை நிறைவேற்றுகின்றனர்.''

''மன்னவா! பகவான் புத்தர் திறத்திலும் இதைப்போன்றே நிகழ்கிறது என அறிந்து கொள்வீராக. மாநெருப்புக் கொழுந்து விட்டெறிந்ததுபோன்றே பகவான் புத்தரும் ஆயிரக்கணக்கான, வையங்களுக்கும் மேலே, அறிவுத்திரு உதவிகொண்டு ஒளி செய்துகொண்டிருந்தார். ஒரு மாபெரும் நெருப்பு சுடர்விட்டு ஒளி செய்து பின் தன்னிருப்பை நீத்ததுபோன்று பகவான், புத்தரும் அறிவுத்திருவாயிலாக ஒளி செய்தபின்னர் எச்சமின்றி, வையப்பற்று நீத்தார், இயற்கையில் கலந்தருளினார். மாமன்னவா! எரிந்தணைந்த பின்னர், நெருப்பு, புல், விறகு

முதலியவற்றை ஏற்காததுபோல, வையத்திற்கு நலம்புரியும் பகவான் புத்தரும் ஒன்றையும் ஏற்பதில்லை. ஆனால் மாமன்னவா! விறகின்றி நெருப்பு அணைந்தபோதிலும் மாந்தர் தத்தம் முயற்சியால் நெருப்புப் படைத்துத் தத்தம் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதுபோலத் தேவர்களும், மாந்தர்களும் முழுவுலகப்பற்று நீத்தவராகிய பகவான் புத்தரின் உலோகப் படிமங்கள் தூண்கள் நிறுவி ஒழுக்கம், தொழுகை முதலியவற்றால் பூசை செய்கின்றனர்; மூச்செல்வமும் அடைகின்றனர். இதைப்போல மாமன்னவ, புத்தர் பெருமான் ஒன்றையும் ஏற்பதில்லை, ஆயினும் அவரைக் குறித்துச் செய்யப்படுகின்ற பூசை பயன் பெறுகின்றது வெற்றியடைகின்றது.''

அடிகள் அளித்த தீர்ப்பு நேராக, எளிதாக இனிதாகப் புரியும் வகைத்தாக இருந்தது. பேரவையில் பெரும்பாலோர் பௌத்த துறவிகள். அவர்கள் அனைவரும் ஒரே குரலில் ''நன்று! நன்று!'' என்று மேலும் கூறினர்: ''அறம் காக்கும் சுகத பத்திரர் பெருமான் வாழ்க! அற்புதம் பெருமான், இந்தத் தீர்ப்பு! இந்த அறத்தீர்ப்புச் சிறப்புடைத்து! சுகத பெருமான்—ஆசாரியர்!'' ஆனால் மாமன்னவன் முகத்தே மகிழ்ச்சிக் குறி எதுவும் காணோம்; அவர் ஏதோ கருத்தை ஆராய்ந்தவராய் இருந்தார். இதை உணர்ந்த அடிகள் மன்னனை வினவினர்: ''பூசையை ஏற்றுக்கொள்ளாதவரைக் குறித்துச் செய்யப் பெறும் பூசை பயனற்றதல்லவா என்றுதானே கேட்பீர்?''

''ஆம் அடிகளே!''

''நல்லது மன்னவா! மாபெருங் காற்று வீசி ஓய்ந்தபின்னர் காற்று வீச்சுணர்வு உள்ளதா?''

''இல்லை, பெருமான்! விசிறிகொண்டு விசிறினால் காற்று வீச்சு உணரப் பெறுகின்றது. காற்று வேண்டியவர் தன்முயற்சியால் உண்டாக்கி நுகர்ந்து வெப்பத்தைத் தணித்துக் கொள்ளலாம்.''

''அதுபோலவே பகவான் புத்தர் பல்லாயிரக்கணக்கான வையங்களில் மெல்லிய இனிய காற்றுப்போல நட்பு வடிவத்தில் பரவிக் கொண்டிருக்கின்றார். புயற்காற்று வீசித் தணிந்த பின்னர், காற்றின் இருப்பு உணரப் பெறுவதில்லை போலவே மாமன்னவா, புத்தர் பெருமான் முழுதும் நீத்தவர் ஆனார். வெப்பமுற்றோர் விசிறிகொண்டு விசிறிக் காற்று நுகர்ந்து வெப்பம் தணிப்பதுபோலத் தேவர்களும், மாந்தர்களும் புத்தர் பகவானின் உலோகப் படிம உதவியால், ஒழுக்கத்தால், நல்லறம்

பேணுதலால் வையத்துத் துன்பத்தை நீக்குகின்றனர். இவ்வித மாக, மன்னர் பெருமான்! புத்தர் பெருமான் ஒன்றையும் ஏற்காமற்போயினும் அவரைக் குறித்துச் செய்யப்பெறும் பூசை பயன்பெறுகிறது, வெற்றிபெறுகின்றது, நிறைவேறு கின்றது.

"நல்லது! நல்லது! அடிகள் பெரும! தங்கள் முடிவு அற்புதம்! உமது விளக்கம் எதிர்மறுக்க முடியாதது. வியப் பினைப் பயக்கத்தக்கது தங்கள் தருக்க நுணுக்கம்! என் ஐயப்பாடு தீர்ந்தது. ஆனல் அடிகளே! புத்த பகவான் யாவற்றையும், அறிந்தவரா? முக்காலமும் உணர்ந்தவரா? சில தீர்த்தத் துறவிகள் எனக்குக் கூறியுள்ளனர், ஒருமுக நினைவில் அமர்ந்தபோதே புத்தபகவான் யாவும் அறியும் திறன் அடைவார், மற்றநேரங்களில் அவர் நம்மைப் போலவே அறியாதவராக இருப்பார். இது உண்மைதானு?"

"ஆம் மாமன்னவ! புத்தபகவான் ஒருமுக நினைவில் அமரும்போதே அனைத்தும் அறிவார். இதனுல் பகவனின் அனைத்தறிதிறன் குறைந்துவிட்டது என்பது பொருளா?"

"ஆம் குறைந்துவிட்டது என்பதே பொருள்."

"எனில் மாமன்னவா, நான் ஒரு வினு வினவுகின்றேன், தீர எண்ணி விடை பகர்வீராக!"

"தாங்கள் மாமன்னன், மன்னர்தம் மன்னன். தங்கள் இல்லத்தில் பால், தயிர், நெய், சருக்கரை, சோறு முதலிய உணவுப் பொருட்களுக்குக் குறைவே இல்லை. நேரமில்லாத நேரத்திலே தங்களது இல்லத்திற்கு விருந்து வந்துவிடுகின்றது. அப்போது சமையல் அறையில் சமைத்த உணவு தீர்ந்து விட்டிருக்கின்றது. விருந்தோம்பலில் நேரமாகிவிடுகின்றது. எனில் தாங்கள் ஏழையாகிவிட்டீர் என்பது பொருளா?

"இல்லை, அடிகளே மாமன்னன் இல்லத்தே நேரமல்லா நேரத்தில் எப்பொழுதும் சோறு இருக்கவேண்டிய தேவை யில்லை. அதனுல் மாமன்னவன் ஏழையாகிவிடப் போவ தில்லை."

"அதுபோலவே மன்னவ, புத்தபகவானின் அனைத்தும் அறியுந்திறன் படைப்புத்தோறும் பிணைக்கப்பட்டு வந்துள் ளது. உடனறிதிறன் குறைவினுல் அவர்கள் அறிவுக்குறைவு படைத்தவராகமாட்டார். ஒருமுக ஈடுபாட்டில் அமர்ந்ததும் யாவும் அறியுந்திறன் அவருக்கு வந்துவிடுகின்றது, இதில்தான் பொதுமாந்தர்க்கும் அவருக்கும் உள்ள சிறப்பியல்பு வேற்றுமை.

" தக்கதே! தக்கதே! அடிகள் பெரும! தங்கள் அறவிளக்கம் அற்புதம்; ஐயந்தீர்வு சிறப்பு உடைத்து; என் ஐயம் தீர்ந்தது.''

சிறிது நேரம் வரை ஐயந்தீர்வுகள் நடைபெற்று வந்தன. சபை கலையும் குழல் முழங்கிற்று. மன்னர் எழுந்தார். அவர்தம் ஊழியர்க்குழாம் அசையத் தொடங்கிற்று. மாமன்னன் நெடிய யானைமீது அமர்ந்து சென்றதும் குமாரகிருஷ்ணவர்த்தனன் என்னை அழைத்து மாலை நேரம் தன் இல்லத்தில் வந்து காணுமாறு பணித்தான். பின்னர் அடிகளை அணுகினேன்.

## உயிர்ப்பு பதின்மூன்று

மன்னர் மன்னவன் என்னை மதிப்போடு நடத்தவில்லை. அரசவைவிட்டு நீங்கியதும் என் உள்ளம் சினத்தாலும் துயரத்தாலும் நிரம்பி இருந்தது. கதிரவன் மறையும் வரை ஒரு கோளுமின்றி நகரத்தெருக்களூடே திரிந்தவாறிருந்தேன். நான் தோற்றவனெனத் திரிந்தேன். அரச அவையில் நான் நுழைந்த பொழுது வயிரப்படைக்கு அஞ்சி நன்மேருமலை குலமலைகள் நடுவே இருப்பதுபோல மாமன்னவன் நிலாமணிக் கட்டிலில் வீற்றிருந்தான். ஆயிரக்கணக்கான வான விற்களால் கவியப் பெற்ற வானவெளியிலே ஈரமேகம் பொலிவுற்றதெனப் பற்பல மணி நகைகளின் ஒளியால் மாமன்னவன் உடம்பு பொலிவுற்றிருந்தது. அவன் கட்டிலின் மேலே வெண்பட்டுத் திரை நிலாவொளியை எள்ளியவாறிருந்தது. அத்திரையின் ஓரங்களில் விலையுயர்ந்த முத்துத் தொடைத் தொங்கல்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அவ்விதானத் திரை நான்கு கோணங்களிலும் மணிக்கம்புகளோடு பொற்சங்கிலிகளால் பிணிக்கப் பெற்றிருந்தது. பொன் தடிகளில் கட்டிய சாமரங்கள் இளங்காற்றைத் தூண்டின. படிகத்தாலியன்ற வட்ட முக்காலிமீது மன்னர்மன்னவன் இடது காலை வைத்திருந்தான். நீலமணியால் இயன்ற தளத்தினின்றும் சிறிது நீலவொளி அரச அவைக் கூடத்துள் எங்கணும் பரவி இருந்தது. அரையிலும் மேலுடம்பிலும் அணிந்திருந்த தூய வெண்பட்டாடைகள் பாலாவியைத்

தோற்கடித்தன; அவற்றின் ஓரங்களில் கோரோசனையால் அன்னங்கள் வரையப் பெற்றிருந்தன. தூய வெண் சந்தனத் தால் உடம்பு பூசப் பெற்றிருந்தமையால் மன்னவன் உடம்பி னின்றும் வெள்ளிய ஒளி வீசியது. சந்தனப் பூச்சின்மீது குங்குமச் சேற்றினுல் தாமரை மலர்த் தொய்யில் வரையப் பெற்றிருந்தது; அதனைக் கண்டதும் அப்போதுதான் எழுந்த கதிரவன் இளவெயிலினில் ஒளிரும் கைலாய மலை தானேவென மயங்கவேண்டி இருந்தது. மார்பில் யானை முத்துக்களான் இயன்ற தொடையல் அழகு பெற்றது. தோட்களில் இந்திர நீல வளையங்கள் களிப்பெய்தின. அவை சந்தன நறுமணத்தான் ஆவல் பூண்டு வந்த பாம்புகள் போலப் பொலிவுற்றன. செவி களில் கருநெய்தல் வடிவமான குழைகள் பார்ப்போர் உள்ளத்தைக் கவர்ந்தன. எட்டாம் நாள் பிறை போன்று பரந்த நெற்றி ஒளியை என்னென்று கூறுவேன்! தலையில் சூடா மணி அருகே இருந்த மகிழமாலை நறுமணத்தான் சபை முழு வதும் மகிழ்ச்சியால் முழுகியதென்பேன். இத்தகைய மாபெரும் செல்வத்திரட்சியை இதுவரை என் வாழ்நாளில் கண்டேனில்லை. இதனைக் கண்டதும் எனதுள்ளத்தின் ஒளியே மங்கிவிட்டதோ என்ற ஐயமுங் கொண்டேன். மாமன்னனிடம் என்னை அறிமுகம் செய்துவைத்தபோது, என்னை இகழ்ச்சியோடும் பார்த்துப் பின் திரும்பி மாளவ இளவரசனிடம் மாமன்னவன் பகர்ந்தான்—"இவன் இழிவுற்ற காமுகன்."

என் காதருகே இரத்த நாளங்கள் சிவந்தன; அவை வெடிப்பன போன்று வீங்கின. உணர்வு குன்றிக் கீழே விழுபவன் போன்றுணர்ந்தேன். பரந்த செல்வத்திரட்சி கண்டு நான் அறிவிழக்காமல் இருந்திருந்தால் இந்த இழி சொல்லுக்குக் காரமான விடை பகர்ந்திருப்பேன். நான் அரச அவைவிட்டு வெளியேறிப் போந்ததும் ஆயிரக்கணக்கான அரசனது பழிச் சொல்லுக்கு விடைகள் கிளம்பிக் கிளம்பி மறைந்தன. என் உடம்புக்குள்ளேயே உண்டாகிய நஞ்சின் விளைவாக நெடுநேரம் நானே எரிந்து கொண்டிருந்தேன். அரச அவையில் என துயிரைப் பற்றிப் பொருட்படுத்தாத துணிவுற்றிருந்தேனுயினும் கல்லாலடித்ததுபோன்ற விடை பகராதிருந்தேனே! பேரரச னுயினுமென்; பிறர்பற்றிப் பொருளற்ற கருத்துக் கொள்ளுதற்கு உரிமையில்லை என்பதை நான் மன்னர் மன்னனுக்கு அறிவுறுத்தி இருத்தல் வேண்டும். அதைச் செய்யாது விடுத்தேனே! ஆனல் சபை நடுவே நீட்டோலை வாசியாத-

குறிப்ப்றிய மாட்டாத நன்மரம்போல, ஊமை போல, உணர் வற்ற சடப்பொருள் போல நெடுநேரம் நின்றிருந்தேன்; கை கூப்பியவாறு நின்றிருந்தேன். மன்னர் மன்னவன் அப்போது பிற சூழ்வினையில் ஆழ்ந்திருந்தான். நான் நின்றிருப்பதைப் பொருட்படுத்தவே இல்லை; அவன் முன் யான் ஒன்றுக்கும் உதவாதவனாகக் கருதப்பெற்றேன். செல்வச் செருக்கும் பெருந்தன்மைக் குறைவிற்கும் இதனினும் வேறு எடுத்துக் காட்டு என்ன இருக்கப்போகிறது? சிறிது நேரம் இவ்வாறு கழிந்தது. பின்னர் ஒரு முறை அரசன் என்னை நோக்கினான். அவனும் என்னைப் பற்றி அவ்வாறு கூறியதற்கு வருந்தினான் போலும். முழு அரச அவையும் பேசாதிருந்தது; இது வியப்பிற்குரியதே. அரசன்தன் பெருந்தவற்றினைக் கண்டிக்க யாரும் வாய்திறக்கவே இல்லை. குரலைச் செம்மைப்படுத்திக் கொண்டு கூறினேன்: "குற்றம் பொறுத்தருள்க தேவ! தாங்கள் மன்னர்மன்னவன் எனினும் தமது திருவாயினின்றும் எழுந்த சொற்கள் ஒரம் பாராது நடுநிலை செய்யும் அறிஞர் கூறுவது போன்றல்ல. தாங்கள் பொருள் அறியாதவர் போன்றும், செய்வினையும் சொல்லற்குரியனவும் உலக நுகர்வும் அறியாதவர் போன்றும் பேசினீர். மாமன்னன் இவ்வாறு ஒருதலையாக முடிவு செய்யப்பெற்ற குற்றஞ்சாட்டுதல் அழகிதோ? எவனோ தீவினையோனின் கருத்தை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படை யில், என் குற்றம் ஆய எனக்கு வாய்ப்பே அளிக்காமல் பழிச் சொல் கூறிவிட்டீர். நான் வேள்வியியற்றும் புகழ்பெற்ற தூய வாத்தியாயன மரபில் பிறந்தவன்; தக்கபொழுதில் பூணூல் பூணுதல் உள்ளிட்ட அறக்கடமைகளை நிறைவேற்றியவன். வேதங்கள் அங்கங்கள் பயின்ற நற்பேறும் உடையேன்; இயன்றவரை சாத்திரங்களைப் பயின்றுள்ளேன். எந்தச் சான்று கொண்டு தாங்கள் என்னைக் காமுகன் என்று கூறினீர்?"

மாமன்னன் உள்ளம் சற்று மென்மையுற்றது. "நான் அவ்வாறு கேட்டுள்ளேன்" என்று மெதுவாக விடை பகன்றான். ஒருமுறை அக்கரையற்ற பான்மையில் என்னைப் பார்த்துவிட்டு மீண்டும் பிற சூழ்வினையில் ஆழ்ந்துவிட்டான். எனக்கு அமரத் தவிசும் கொடுக்கவில்லை, வெற்றிலைச் சுருளும் தந்து பெருமைப்படுத்தவில்லை. இப்போது என் நாடோடி உள்ளம் என்னையே எதிர்த்துக் கலகம் செய்யத் தொடங்கியது. மாமன்னன் என்னைப்பற்றிய பழிச்சொல் கேட்டிருக்கின்றான்; என்னைக் காமுக வெறியன் என எவனோ தவறாகக் கூறி இருக்

கின்ருன். நானே காமுகன் அல்லன்; ஆனல் அரசனே வெனில் எண்ணிறந்த காமுகர்களுக்கும் பிறர் மனைவியரைக் கைப்பற்றியவருக்கும், பெண் வேட்டை அயர்வோருக்கும் கற் பழிப்போருக்கும் புகலிடம் தந்திருக்கின்ருன். மௌக்கரி குறு மன்னன் போன்று எத்தனையோ குறுமன்னர்கள் மாதர் தம்மை இழிவு செய்பவருக்கும், கண்ட பெண்களைக் கற்பழிக்கும் கயவர் களுக்கும் புகலிடம் தந்து ஒறுப்பதற்கப்பாற்பட்டவராக்கி விட்டான். மாமன்னன் எனக்கெதிரான செய்தி கேட்டிருக் கின்ருன். என்னைப் பற்றி என்ன கேட்டிருப்பான்? நான் மௌக்கரி அரண்மனைக்குள் புகுந்து பட்டம்மையை விடுதலை செய்தேன் அல்லவா, அதனைக் கேட்டிருப்பான். இதுதான் என் காமுகப் பண்பா? இதுதான் மாமன்னன் செல்வச் செருக்கா? கெடுக இப்பண்பு! சினத்தின் எழுச்சியால் என் இதழ்கள் துடித்தன. நான் ஏதோ சொல்ல வாயெடுத்தேன்; அதற்குள் கிருஷ்ணவர்த்தனன் தன் பார்வையை என்பால் செலுத்தி அமைதி கொள்ளுக எனக் குறிப்புக்காட்டினன். மந்திரத்தான் அடங்கியதும் மிதிக்கப்பட்டதும் ஆன பாம்பு போல நான் அடங்கி நின்றவாறே இருந்துவிட்டேன். இப் போது மீண்டுமோர் முறை மாமன்னவன் என்பால் தன் பார்வை செலுத்தினன். குமார கிருஷ்ணவர்த்தனன் எழுந்து நின்று அடக்கத்தோடும் பணிவோடும் பகர்ந்தான்: ''பெருமான் தூய வாத்தியாயன மரபின் திலகம் போன்றவன், பாணபட்டன். தக்க பெருமை அவனுக்களித்தல் வேண்டும்.'' வாய்திறவாது மாமன்னவன் குமார கிருஷ்ணவர்த்தனனது சொல்லுக்குத் தன் உடன்பாட்டைத் தெரிவித்தான். குமார கிருஷ்ணவர்த்தனன் என்னை அவையைவிட்டு ஏகுமாறு குறிப்புக்காட்டினன். நான் சிறிது முரட்டுத்தனத்தோடே அரச அவையை விட்டேகினேன். அன்று அரச அவையில் தகாதபடி நடந்திருந்தால் எத்துணை கேடுகள் வாய்த்திருக்கும் என்று இன்று ஆராயும்போது உணர் கின்றேன். அடக்கப்பட்டவனுகப் பேசாதிருந்தது எத்துணை நன்மையாக இருந்தது. பின்னர் மாமன்னன்பால் பன்னுட்கள் பழகி அறிந்தேன், அவன் உள்ளம் மலரைப்போல் மெல்லியது. என்னைப் பற்றி அன்று எவனே அருவருக்கத்தக்கவாறு செய்தி கள் புனைந்து கூறி இருந்தானதலின் அரசன் அவ்விதம் என்னை நடத்தினன்.

எது எப்படியாயினும் அன்று என் உள்ளம் எரிந்தது. குறிக்கோளேதுமின்றி நகரத் தெருக்களில் திரிந்தேன். மாலை

நேரத்தே அரண்மனைகளிலும் இல்லங்களிலும் விளக்கேற்றப் பட்டன. பறவைகள் தத்தம் கூட்டில்லங்களை நோக்கி விரைந்தன. தூய நீல வானத்தே இரண்டொரு விண்மீன்கள் மினுமினுத்தன. நான் திரிந்து திரிந்து முன்னர் நிபுணிகை கடைவைத்திருந்த இடத்தை அடைந்தேன். அவ்விடத்தைக் கண்டுபிடிப்பதில் பெருமுயற்சி வேண்டி இருக்கவில்லை. உடனே இளவரசி கூறிய கூற்று நினைவிற்கு வந்தது. சுசரிதை இங்குத் தான் எங்கோ உறைகின்ருள்; அவளைத் தேடிக் கண்டுபிடித்தால் நலமாகத்தானே இருக்கும். மாமன்னனிடம் ஏதும் கொடுக்கவோ வாங்கவோ இல்லை. அவனிடம் இளவரசிபற்றிப் பேசவும் நா துணியவில்லை. கிருஷ்ணவர்த்தனன் அரசியல் சூழ்வினையில் கைபோனவன். அவன் சொற்களைப் புரிந்துகொள்ள என்ஞல் முடியவில்லை. அவன் என்ன விரும்புகின்ருன், அவனே அறி வான். சுகதபத்திரரிடமிருந்து இளவரசிக்காக உதவி பெற முடியும்; ஆனல் அடிகள் இந்தக் கிருஷ்ணவர்த்தனனை எதிர் நோக்கியவாறுள்ளார். சுசரிதையைக் கண்டுபிடித்தால் தடை யென்ன ஏற்படப்போகிறது? அவள்பால் சென்ருன் என மற்ற வர்கள் கொள்ளும் வெகுளியைப் பொருட்படுத்தப்போவதில்லை. பெண்ணைக் கடவுள் படிமம் என்று நினைப்பவன் மற்றவர் சினத் திற்கேன் அஞ்சவேண்டும்? ஆனல் சுசரிதை எங்குள்ளாள்? அவளைத் தெரிந்தவர் யார்? அவள் இங்கு எங்கேனும் வாழ்வாள் என்பது உறுதி. நற்குடிப்பிறந்த எவனுவது முதியவனிட மிருந்து செய்தி வினவலாம் என நினைத்தேன். கன்னேசி இளைஞர்களை யானறிவேன்; இத்தகைய செய்தி உசாவும் வெளியாரை அவர்கள் முட்டாள்களாக்கிவிடுவார்கள்; எள்ளி நகையாடித் துன்புறுத்திவிடுவார்கள். ஒருபால் ஒரு முதியவன் போவது கண்டு அவனை வினவினேன்: "உங்களிடம் ஒன்று வினவவேண்டும், பெரியோய்!"

"நீடு வாழ்க, என்ன வினு அது?"

"நீங்கள் இந்நகரத்தே வாழ்பவரோ?"

"நெடுநாளாக வாழ்கின்றேன், செல்வ! ஆனல் காசியைச் சேர்ந்தவன். இந்நகரை நன்ருக அறிவேன். நீ புதியவனே? என்ன செய்தி வேண்டும்?"

"நான் மகத நாட்டினன்."

"நேற்றுத்தான் வந்தனையோ? இதன் முன்வந்துள் ளனையோ?"

"பங்குனி மாதம் வந்து இரண்டு நாள் தங்கினேன்."

முதியவன் மலர்ந்த முகத்தினனுய்க் காணப்பெற்ருன். சுருக்கம் பொருந்திய கன்னம் புன்னகையான் மலர்ந்திருந்தது. சொன்னுன் : "மூன்று மாதங்களில் தாணேசர் புரியில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. எதிரே இருக்கும் விரிந்த மண்டபம் பார். அங்கே பஜனை நடைபெறுகின்றது. இதுவரை கண்டிராத ஒரு புதிய பத்திமுறை நடைபெறு கின்றது. நகர மாந்தர்கள் எண்ணிறந்தோர் அதில் கலந்து கொள்கின்றனர். ஆடவர்களின் ஒரு கூட்டமும் இந்தப் பஜனை யில் கலந்து கொள்கின்றது. கன்னேசி ஒரு வியப்பான நாடு, நெடியோய்! காசியில் அறத்தின் பெயரால் இப்படிக் குதித்து மிதக்கமாட்டார்கள்."

முதியவன் குறைபாடு எனக்கு விளங்கிற்று. நானே காசி யில் புராணப்பிரசங்கம் செய்து ஆயிரக்கணக்கான ஆடவர் அரிவையர்களைப் பித்தர்களாக்கிவிட்டேன். இத்திறத்தே முதிய வனின் கருத்து உண்மையின்பாற் பட்டதெனக் கொள்ள முடியாது. எனினும் அவனிடமிருந்து ஊக்கந்தரும் செய்தி கிடைப்பதால் சிறிது அவனைத் தொழுதேன். "காசியின்திறம் வேறு பெரியோய்!" முதியவன் இன்னும் ஊக்கங் கொண்டு கூறினுன் : "பலமாதங்களாகத் திருபர்வத வைணவத் தந்திரிகர் வெங்கடேச பட்டர் இந்நகர் வந்துள்ளார்." நான் இடைமறித் துக் கூறினேன் : "என்ன கூறுகின்றீர் பெரியோய்! திருபர் வதம் வாம தந்திரிகள் கபால தந்திரிகள் முதலியோரின் வழி பாட்டு இடமாயிற்றே. ஆங்கு வைணவ தந்திரிகமும் நடை பெற்று வருகிறதா ? இது எனக்குப் புதுமையாகவுள்ளது!"

முதியவன் புன்னகை செய்து செப்பினுன் : "கன்னேசிக்கு வந்துள்ளனை ; இன்னும் பலபுதிய காட்சிகள் காண்பாய் செல்வ! இந்த வெங்கடேசபட்டர் முதலில் உத்தியான பீடத்தில் சௌகத புத்த தந்திரிகத்தை வழிபட்டார் ; ஆங்கு என்ன தொல்லை ஏற் பட்டதோ, அதனை விடுத்துத் திருபர்வதம் வந்து சேர்ந்தார். பின்னர் கன்னேசிக்கு வந்து, அதனைத் தூய்மைப்படுத்திக் கொண்டிருக்கின்ருர். தொடக்கத்தில் உறுதியற்ற சில மாதர் களுக்கு அவர் தீட்சை கொடுத்தார். மௌக்கரிக் குறுமன்னன் மாதர் இல்லத்தில் பணிப் பெண்ணுக இருந்த நிபுணிகை என் பவளும் அம்மாதரில் ஒருத்தியாக இருந்தாள். ஆனுல் உடனே அவள் எங்கோ மறைந்துவிட்டாள். அவள்தன் தோழி சுசரிதை என்பவள் ஒருத்தி இருக்கின்ருள். இதே தெருக்கோடியில் இருப்பவள் ; பாடும் தொழிலில் பெயர்பெற்றவள். இவள் இன்று

நகரத்தில் பத்தினி மணி மாதர்களில் தலை சிறந்தவள் என்ற புகழ் வாய்த்தாள். மாலையானதும் நகர அரண்மனைகளின், மாதர் இல்லங்களே இங்குவந்து குழுமிவிடுகின்றன. வெண்கலத் தாளமும் மிருதங்கவாத்தியமும் வெறியை ஊட்டிவிடுகின்றன. அவற்றுடன் சுசரிதையின் இனிய இசை, மாந்தரைப் பத்தி வெறியில் தள்ளி விடுகின்றது. ஆவேசங்கொண்டு வெங்கடேச பட்டர் ஆடுவதைக் கண்டால் பூதத்தலைவனே சாராயம் அருந்தி வெறியுற்று ஆடுவதுபோலக் காணும். இது ஒரு வியப்பான மதம் நெடியோய்! சென்று ஒருமுறை நீயே காண்பாயாக.'' அடக்கத்தோடும் கூறினேன்: ''தவருமல் காண்பேன். இந்தச் ''சுசரிதை முதலில் என்ன செய்து கொண்டிருந்தாள்?'' முதியவன் நகைத்துக் கூறினன்: ''உன் வயது இளைஞர்களிடையே உசாவி அறிக. இந்த நரை முதியவனுக்கு என்ன தெரியப் போகிறது?'' முதியன் இப்போது நகைச் சுவையில் இறங்கினன். இப்போது அவனிடம் காசி நகர இயல்பு தென்பட்டது. நானும் நகைத்து நவின்றேன்: ''பொறுத்தருள்க, சான்றேய்! பஜனை காணப்போகிறேன்.'' முதியவன் கூறினன்: ''செல்வ! ஏதோ, உசாவ விரும்பினையே!'' நான் மேற்கொண்டு நேரம் வீணக்க விரும்பவில்லை. ''வேண்டிய செய்தி தெரிந்து கொண்டேன் அளவற்ற நன்றி உமக்கு'' என்று மொழிந்து விடைபெற்றுக் கொண்டு அவ்விடம்விட்டு விரைந்து சென்றேன். யான் விரும்பியதற்கும் மிகுதியான செய்திகளை முதியவன் வழங்கினன். நேராகத் தொழுகை மண்டபத்தை நோக்கிச் சென்றேன். நொடிதோறும் மாந்தர் கூட்டம் பெருகியவாறிருந்தது. வந்தமாந்தரில் பெரும்பாலோர் மாதர்களாவர். அனைவோர் முகத்திலும் மகிழ்ச்சியும் பத்தியும் தவழ்ந்தன. ஒரு சந்தனத் தவிசின் மீது அடிகள் வெங்கடேசபட்டர் பதுமாசனமிட்டு அமர்ந்திருந்தார். தவிசிற்கெதிரே ஒரு மேடை மீது ஓர் கலசம் வைக்கப் பெற்றிருந்தது. அரிசி உழுந்து இரண்டும் கலந்த வற்றுல் கீழ் நோக்கிய முக்கோணச் சக்கரம் வரையப் பெற்றிருந்தது. இது சத்தித்தாந்திரிகத்திற்குரியது. அதன் நடுவே நூற்றிதழ்த் தாமரை வைக்கப் பெற்றிருந்ததுதான் வியப்பினைத் தூண்டியது. மேல் நோக்கும் முக்கோணச் சக்கரம் சத்தித் தத்துவத்தைக் குறிக்கும். வைணவ பத்தி மார்க்கத்திற்குச் சத்திக்கோணம் பகையல்ல; ஆனல் தாமரை அதற்குப் பொருந்தாது. முக்கோணம் நடுவே தாமரை வைக்கப் பெற்றுல் வயிரப் படையும் இருத்தல் வேண்டும்; இருந்தால் அது சௌகத

தந்திரிகத்தைக் குறிக்கும். ஆனால் சத்திக் கோணத்துடன் சௌகத தாமரையைக் கலந்து வைத்ததுதான் வியப்பாகும். மகத மாந்தரில் எந்த எளியவனும் அதனை எதிர்ப்பான். ஆனால் கன்னோசி ஒரு வியப்பான நாடாகும். புறவொழுக்கத்தில் கடுகளவு மாறுதலையும் பொறுக்கமாட்டார்கள். ஆனால் அறவழி பாட்டில் நொடிதோறும் புதியமாறுதல்களை உண்டாக்குகின்றனர். நான் இங்குக் கண்டது வேடிக்கையான வழிபாட்டு முறை. வெங்கடேசபட்டர் நிபுணிகைக்கும் குருவாக இருந்தார் என்ற செய்தி இன்னும் ஊக்கத்தை ஆக்கப்படுத்தியது. இந்த வழிபாட்டு முறையைத் தொடங்கி நடத்தி வைத்தவளும் அவளாகத்தான் இருக்குமோ? அவள் ஏன் என்னிடம் இது பற்றி ஒரு சொல்லும் சொல்லவில்லை. இதற்கு ஏதேனும் காரணம் இருக்கலாம். அவளை உசாவி அறிதல் வேண்டும். இன்னும் உன்னிப்பாகக் கோணச் சக்கரம் கண்டேன். தாமரை மலர் இருந்த இடத்தே சிந்தூரத்தால் ஒரு வட்டம் வரையப் பெற்றிருந்தது. தாமரை மீது செப்புக் கலசம் வைத்திருந்தனர். கலசத்தின் வாயில், மாந்தளிர் நிறையச் செருகப் பெற்றிருந்தது. அதன் மீது மற்றொரு செப்புக் கலசம், அரிசியால் நிரம்பி இருந்தது. இப்போது விளக்குக்கள் ஏற்றப் பெற்றவாறிருந்தன. பட்டர் அருகே ஒரு முதிய அந்தணன் மந்திரம் ஓதியவாறிருந்தான். ஓர் இள நங்கை அவர் காட்டும் முறைப்படிச்செயல்புரிந்து வந்தாள். அவளே சுசரிதையாக இருக்கலாம் என உய்த்தறிந்தேன். அந்தணப் புரோகிதன் விளக்குச் சுற்றுகையோடு சங்கற்ப மொழிகள் பகர்ந்ததில் இருந்து என் ஐயம் தீர்ந்தது.

சுசரிதை தூய வெண்பட்டுச் சேலை உடுத்தி இருந்தாள். அவள் முகம் குருவை நோக்கிக் கொண்டிருந்தது. ஆதலின் தொலைவில் இருந்துகொண்டு அவளைத் தெளிவாகக் காணமுடியவில்லை. அவள் உடல் மெல்லிதாக இருந்தது; வெண்பட்டினால் அவள் உடம்பு திருமாலின் புன்முறுவல் வரி போலப் பொலிந்தது. அவள் செய்துவரும் பூசை வினைகள் ஒவ்வொன்றும் பெருந்தன்மை உட்கொண்டிருந்தது. விளக்கு வினைக்குச் சங்கற்பம் ஓதுதல் முடிந்த பின்னர் அழகிய அவிநயத்தோடும் விளக்கு ஏந்தினாள்; இடது கையைத் திரிபதாகை முத்திரையில் அமைத்தாள்; அதைக்கொண்டு விளக்கை வலமாகச் சுற்றினாள்; யாவற்றையும் அவள் எளிதாகவே புரிந்தவாறிருந்தாள். பன்னாட் பழக்கத்தினால் அவளது கை தானாகவே சுற்றுவது போலிருந்தது. இடது கையால் மூன்றானையைப் பற்றி எடுத்துக் கழுத்தில்

சுற்றிக் கொண்டாள். பத்தியோடு மண்டியிட்டமர்ந்தாள். குரு பூசையே அவள் வினைகளின் தலையானது. குருவுக்கு முன்னர் பன்முறை விளக்குகள் சுற்றியபின் நின்றுள் ; ஒருமுறை அவரை வலம்வந்து மண்டியிட்டாள். அவள் குருவை வலம்வந்த பொழுது அவள் கைகள் இடையருது விளக்கை வலமாகச் சுற்றின.

இந்த நேரத்தில்தான் அவளைத் தெளிவாகக் கண்டேன். அவள் உடம்பு நிறம் சாம்பல் ; கண்களில் அரியதோர் இனிமை தவழ்ந்தது. இதழ்களில் இயல்பான இனிய புன்முறுவல் விளையாடியது ; அதனை அழகு நூலார் அழகுப்பற்று என்பர். அது அவள் பெருமைவாய்ந்த முகத்திருவில் தெளிவாகத் திகழ்ந்தது. அவள் உடம்பின் பொறிதோறும் பத்தியலைகள் எழுந்தன. அவள் அசைவின் ஒவ்வொரு திருப்பத்திலும் நடன விதிப்படி இயன்ற இயக்கத்திலும் உயர் பண்பாடு காணப்பெற்ற தால் அவள் நிறப்படிமம் என விளங்கினுள். உள்ளங் கனிந்தவர் களிப்பூட்டும் பண்பினை மகிழ்ச்சிப்பேறு என்று விளம்பு கின்றனர். அது மலரில் அடங்கி இருக்கும் நறுமணத்திற் கொப்பானது ; தேன் உண்ணும் வண்டுக்குச் சுவைத்திறன் உண்டு ; அத்தகைய வண்டின் உள்ளத்தில் உள்ள இயல்பான கவர்ச்சியைப் போன்றுள்ளது மகிழ்ச்சிப்பேறு. அஃது சுசரிதை யிடம் நன்ருகத் திகழ்ந்தது. அழகும் ஒளியும் அவள் உடம்பிலே பொங்கின ; அவள் அடிபெயர்த்து வைக்கும்போதெல்லாம் பார்ப் போர் உள்ளத்தை விழுங்கும் அழகு பொலிந்தது. அவள் உடம் பில் நிறமும் ஒளியும் குறைவாக இருப்பினும் மற்ற அழகுகளைக் குறைவின்றிப் படைப்புக் கடவுள் அவள் உடம்பில் பொழிந் துள்ளான் என்பதற்கு ஐயமே இல்லை. இவ்விடத்திய மாதர் எடுப்பான நகைகளும் எறிந்தெறிந்தசையும் நகைகளும் விருப்ப மாக அணிகின்றனர். ஆனல் சுசரிதையின் செவிகளில் வட்டக் குண்டலமட்டும் ஒளி செய்தது ; ஒட்டியாணம் சிலம்பு முதலிய பிற நகைகளை அவள் அணியவில்லை. வல்லிக் கொடிபோன்ருள் மல்லித் தொடையல் அணிந்திருந்தாள் ; அதுவே அவள் நிறத்திற் குப் பொருத்தமாக இருந்தது. எனக்குக் கவிஞர் வராகமிகிரரின் நினைவு வந்தது. அவரது நல்ல உள்ளம் குறித்து மிகவும் மகிழ்ந்தேன். அவர் பொருத்தமாக உரைத்தார்.

**ரத்நாநி விபூஷயந்தி யோஷா பூஷ்யந்தே வநிதா ந ரத்ந காந்தயா!**
**சேதோ வநிதா ஹரந்த்ய ரத்நாநி நோ ரத்நா விநாங்கநாங்க**
**சங்காத்!!**

(வராஹ மிஹிர, ப்ருஹத்ஸம்ஹிதை 74–2)

[மணிகள் மாதர்க்கு அழகு செய்வதில்லை, மாதரால் மணிகளே அழகு பெறுகின்றன. மணிகளின்றி மாதர் அழகாகவுள்ளனர். ஆனால் மணிகள் மாதர் உடம்பிலே பொறிகள்தோறும் அமைந்த பின்னரே கவர்ச்சியுடையனவாகவுள்ளன.]

வியப்புக்குரிய செய்தி என்னவெனில் இன்று வராகமிகிரர் இங்கிருந்தால் சுசரிதையைப் பற்றி இன்னும் முன்னேறிக் கூறி இருப்பார். அறம், தொழில், கடவுள் மேல் காதல், அறிவு, அமைதி, நல்லவுள்ளம் எல்லாம் மாதர் தொடர்பின்றிக் கவர்ச்சியுறு; மாதருடம்பு கல், செங்கல் யாவற்றையும் தொட்ட போதே பொன்னுக்கும் தொடுமணியாகும்.

மரகத மணிக் கொம்புபோன்ற இளங்கவின் பூண்டவள் சுசரிதை. விளக்குச் சுற்றின பிறகு மலர்க் கைகள் கூப்பியவாறு குருவின் முன்னர் அமர்ந்துகொண்டாள். பின்னர் பற்பல ஊழ் முறைப்படித் திருமால் தொழுகை தொடங்கியது. தொழுகை முடிந்ததும் மகிழ்ச்சியான தழுதழுத்த குரலில் வெங்கடேச பட்டர் திருமாலைப் போற்றும் பாக்கள் பாடத்தொடங்கினர். உடனே மிருதங்கம், உடுக்கை முதலிய கொட்டு வாத்தியங்கள் குழுகுழுவென முழங்கத் தொடங்கின. வெண்கலச் சேமகலம் வெண்கலத் தாளம் முதலியன பாட்டின் தாளத்திற்கு உதவி செய்தன. திருமால் தொழுகைப் பாவை ஆயிரக்கணக்கான ஆடவர் அரிவையர் பாடத் தொடங்கினர். வேறு வையத்தில் ஏற்றப் பெற்றதாக நான் நினைத்தேன். இசையும் கருவிகளும் இவ்வளவு பொருந்தி இருந்ததை இதற்குமுன் எப்போதும் எங்கும் கண்டதில்லை. மதத்தை உறுதிப்படுத்த இந்த வழி முற்றிலும் புதுமையானது. காற்றின் அடுக்குத்தோறும் திருமாலின் போற்றிப்பாடல்கள் சென்று கவிந்தன; திசைவட்ட இடமுழுவதும் மிருதங்க முழக்கம் பரவியது. பிறகு திடீரெனப் பாடுதலும் வாத்தியமும் முழங்குதலும் நின்றுவிட்டன. குருவின் கட்டளை ஏற்றுச் சுசரிதை சங்கு முழங்கினள். என்றும் எங்கும் அரிவை சங்கு முழங்குவதை நான் கண்டதில்லை; ஆதலின் வியப்புற்றேன். இந்தப் பஜனைமுறை எந்தப் புதுமையைத்தான் ஏற்காது? வெங்கடேச பட்டர் இப்போது நாம சங்கீர்த்தனம் தொடங்கினர். அவர் எழுந்து நின்றார். உயர்ந்த வடிவம், கட்டமைந்தவுடல், கதவுபோலப் பரந்த மார்பு, கால் முட்டி தொடும் கைகள், முழவம்போல் முழங்கும் குரல். முகவுரை இன்றிக் கூறினர்: "திருமாலின் திருவடிகள் ஒரு சில (இரு மூன்று) பாவிகளைக் கடைத்தேற்றுகின்றன; ஆனால் "அவன்

திருப்பெயர் எல்லா மக்களின் மனத்துயரையும் ஒழித்துவிடுகிறது.'' இப்பொருள் கொண்ட வடமொழிச் சுலோகத்தை, இப் புதிய அறவுரையின் பொருள் ஆராயுமுன்னர் வெங்கடேச பட்டர் பாடத் தொடங்கினர்.

த்வித்ராப ஸமுத்தர்த்து மலம் வபூவ பாதாரவிந்தாஸ்ரயணம்
முராரே !।
அசேஷஸங்க்லேச சமம் ஜநாநாம் நித்யம் விதத்தே வசுநாம நாம॥[1]

பிறகு உள்ளம் பொங்கியவராய் ''நாராயண, நாராயண'' என்று உயர் குரலில் பாடிப்பாடி ஆடத் தொடங்கினர். ஒரு முறை முழவம் மிருதங்கம் கமகமவென முழங்கின; வெண்கலச் சேமகலம் வெண்கலக் கைத்தாளங்கள் ஒலி செய்தன; மாந்தர் கைகளும் தாளம்போடத் தொடங்கின. குருவின் கருத்தாவேசம் தாண்டவமாடியது. சில தடவைகளில் மூர்ச்சையுற்று விழுந்தார். சுசரிதை காற்றில்லாத போழ்து அசைவற்ற விளக்குத் தழல்போலக் கைகூப்பியவாறு அமர்ந்திருந்தாள். மிகுநேரம் இந்தப் பஜனை நடைபெற்றது. 'முடிவுவினை சுசரிதையின் பாட்டு! ஆகா! இசையென்னும் வானயாறு இம்மண்ணில் இவ்வாறு பொழிந்ததை இதுவரை கண்டேனில்லை. மாந்தரனைவரும் கட்டைபோல உணர்வற்று நின்றிருந்தனர். இனிமை என்னும் பொழிவில் நீராடினர் போலிருந்தனர். பாட்டு நின்றதும், அனைவரும் உணர்வு திரும்பிவரப்பெற்றனர் போலக் கண்டனர். மெதுவாக மாந்தர் குழாம் கலையத்தொடங்கிற்று. தொழும்பர்கள் தங்கள் குருவை இருப்பிடம் கொண்டு சேர்ப்பதில் முனைந்தனர். சுசரிதை மண்டபத்திலேயே இருந்தாள். எல்லோரும் விடைபெற்ற பின்னர் எஞ்சி நின்ற தொழும்பரிடம் பொருட்களைக் காக்கும் பொறுப்பு அளித்துவிட்டுச் சுசரிதையும் சென்றாள். வாய்ப்பு நோக்கி யானும் அவளை அணுகினேன்.

அவள் தனதில்லத்தை அணுகியதும் நான் துணிவுகொண்டு வினவினேன்: ''செல்வீ! சீரிதன்று எனக் கருதாயாகில் ஒரு செய்தி உசாவ விரும்புகிறேன்.'' அவள் உடனே திரும்பி

---

[1] பாகவதம் (2–7–14)

அசேஷஸ்க்லேச சமம் விதத்தே குணானுவாதஸ்மரணம் முராரே!
குத:புநஸ்தச்சரணாரவிந்த பராக சேவாரதிராத்தலப்தா.

[ஏ முராரீ! உன் குணங்களை நினைப்போரின் துன்பம் முழுவதும் அகல்கின்றன. உன் மலரடித்துகளை ஏற்றவர், நிலை கூறவேண்டாம்.]

என்னருகே வந்து மொழிந்தாள்: "உமக்கேதேனும் ஊழியம் புரியும் வாய்ப்பு நேர்ந்தால் பேறுபெற்றவளாவேன், சான்றோய்! கட்டளை என்ன?" செய்யுள் யாப்பினுல் அவள் உடம்பு இயற்றப் பெற்றதோ என ஐயமுற்றேன். அவளது ஆடை, அவளது நடை குரல் பார்வை யாவும் கவிதையே. அவள் மொழிந்தது யாழிசை போன்றிருந்தது. நான் மந்திரத்தால் மயக்க முற்றேனெனக் கேட்டவாறிருந்தேன். சிறிது பொறுத்து அவளே கூறினுள்: "வினையென்ன செய்யத்தக்கது? நான் கேட்கவும் செய்யவும் தலைநின்றேன், பணிமின்." மீண்டும் அதே யாழின் குரல்! கடம்ப மலர் இழைகளென என் உடம் பெல்லாம் மயிர்க்கூச்செறிந்தது. தாமதித்தல் தக்கதன்றென மொழிந்தேன்: "நான் வெளிநாட்டான், செல்வீ! தகாதன சொன்னுல் பொறுத்தருள்க. மௌக்கரி அரண்மனைத் தலைவிய ரில்லத்து ஊழியை நிபுணிகையை அறிவீரோ?"

சுசரிதையின் பெரிய கண்கள் பிதுங்கி வெளிவருவன போன்று காணப்பெற்றன. என்னைக் காலடி நகத்திலிருந்து முடிவரை ஏற இறங்க நோக்கினுள்; ஐயம் நம்பிக்கையின்மை முதலியவற்ருேடும் வினவினுள்: "தாங்கள் எங்கிருந்து வரு கின்றீர்? யாரைத் தேடுகின்றீர். நான் சுசரிதை. இஃதென் இல்லம். இதனினும் அதிகமாக வேறு மொழிய இயலாது, பொறுத் தருள்வீராக." ஐயத்திற்கு உற்றதை அறிந்தேன். அடக்கத் தோடும் சொன்னேன்: "செல்வீ! இத்துணை அறிமுகம் போதும்! தாங்கள் சுசரிதை பெருமாட்டி, தங்களிடமே செய்தி ஏந்தி வருகின்றேன். தங்கள் உயிரனைய தோழி நிபுணிகை இன்னும் உயிர்த்திருக்கின்ருள்; தானெடுத்த செயற்கரிய செயலை நிறைவேற்றுவதில் வெற்றிபெற்ருள். இவ்வளவே நான் கூறவேண்டிய செய்தி. தாங்களே இதற்குச் சான்று. செய்தி அறிவித்துவிட்டேன். இப்போது விடையுங் கொண்டேன்." இவ்வளவும் மொழிந்து தலைகுனிந்து திரும்பினேன் செல்வ தற்காக. சிறிது நேரம்வரை திரையில் எழுதிய ஓவியப் பாவையென அசையாது நின்றிருந்தாள். பிறகு மெதுவாக என்னைக் கூப்பிட்டாள்: "செல்வ! சினங்கொண்டீரா என்ன?" நான் மீண்டும் அதே அடக்கத்தோடும் விடைபகர்ந்தேன்: "உமது சொல்லிற்குச் சினங்கொள்ளும் தீவினையன் யார் பெருமாட்டீ? உமது நம்பிக்கையின்மை, ஐயப்பாடு இரண்டிற் கும் காரணம் அறிவேன்." சுசரிதை இங்கும் அங்கும் பார்த்து விட்டு "சான்ருேய்! உமது திருப்பெயர் அறியலாமா நான்?"

நானும் உடனே உரைத்தேன் : "பெருமாட்டி ! எனது உண்மைப் பெயர் தட்சபட்டனுயினும் பாணபட்டன் என்ற பெயரால் பெயர் பெற்றுள்ளேன். நான் மகத நாட்டினன்." பெயரைக் கேட்டதும் முன்ருனேகொண்டு கழுத்தைக் கட்டிக்கொண்டு கைகூப்பி அடக்கத்துடன் கூறினுள் : "குற்றம் பொறுத்தருள்க, சான்ருேய்! தெரியாத மக்கள் செய்யும் தவறினே மெய்யறிவுடையோர் பொறுத்தருள்வார்கள். நான் பெயர் கேட்டுள்ளேன் ; திருவுளம் உண்டேல், இல்லத்திற்கு எழுந்தருள்க; இச்செய்தி பற்றித் தங்களிடம் கலந்தாராய விரும்புகின்றேன்." ஒப்புக் கொண்டேன்.

சுசரிதையின் இல்லம், சிறியதெனினும் வேண்டிய தூய்மை கொண்டிருந்தது. வாயிற்படியிலிருந்தும் அரசத் தெருவரை சாணமிட்டு மெழுகப்பெற்றிருந்தது ; மெழுகிய இடத்தில் கலேச் சுவையோடு கோல ஓவியவரி இட்டிருந்தது. சுவரின்மீது பாற்கடலில் துயிலும் கரியமாலின் திருவடிவம் வரையப் பெற்றிருந்தது ; அதனேச் சுற்றிலும் சிறு சண்பக மலர்த் தொடையல் தொங்கியவாறிருந்தது. ஓவியத்தின் முன்னர் சிறு சிறு மேடைகள் மீது திருக்கலசங்கள் அணிபெற அமைக்கப் பெற்றிருந்தன. வீட்டிற்கு மேலே நற்பேற்றுக் கொடி அலேந்து கொண்டிருந்தது. அவள் விருப்பமோடும் ஆவலோடும் தனது விருந்தோம்பல் ஏற்குமாறு வேண்டினுள். அவள்தன் எந்தச் செயலிலும் தயக்கமோ நாணமோ காணவில்லே. அவளுடைய இயல்பான அழகின் விளேவாக இல்லத்து எப்பொருளும் அழ காகக் காணப்பெற்றன. வீட்டிற்குள்ளே பொருட்கள் குறை வெனினும் கண்கவரும் வகையில் அடுக்கி வைக்கப்பெற் றிருந்தன. இரண்டு கோரைப்புற் பாய்கள் விரித்திருந்தன. கீழ்ப்பால் பசுமேய்த்த கடவுளின் படிமம் இருந்தது ; அதன் அருகே மணவத்தி எரிந்துகொண்டிருந்தது. வீட்டில் ஒரு தோழி விளக்கேற்றல் முதலிய குற்றேவல் புரிந்து கொண்டிருந் தாள். சுசரிதை தன் இயல்பான புன்முறுவலுடன் புற்பாயிலில் என்னே அமருமாறு வேண்டிப் பின் தானும் மற்ருெரு பாயில் அமர்ந்தாள்.

சிறிது நேரம் பேசாமலிருந்தபின் நெட்டுயிர்ப்புயிர்த்து மெதுவாக மொழிந்தாள் : "எனில் பேறிழந்த அம்மாது இன்னும் உயிர்த்திருக்கின்ருள்." அவள் தன் செயல்களில் பெருங் குடிப் பண்பு நிறைந்திருந்தது. அமருவதில் பேசுவதில் உயிர்ப்பதில் யாவற்றிலும் பெருந்தன்மை நிறைந்திருந்தது. நான் அவளே

உற்றுப்பார்க்க அவள் தன்னில்தான் முழுகி இருந்தாள். சிறிது நேரம் பொறுத்துப் பேசத் தொடங்கினாள்: "சான்றோய்! நல் வினைப் பயனால் தங்கள் காட்சி கிடைக்கப் பெற்றேன். நிபுணிகை வாயிலாகத் தங்கள் வரலாறு அறிந்திருக்கின்றேன். தங்கள் பெயரெடுக்காது எளியவற்றினும் எளிய தொழிலையும் தொடங்காள். தங்களைக் கண்டு என் கண்கள் பிறவிப் பயனை எய்த வேண்டுமென நெடிய ஆவல்கொண்டிருந்தன. ஆனால் எம்போன்ற இழிதகையோருக்கு அப்பேறு எப்படி வாய்க்கும்? இன்று கடல் வண்ணக் கடவுள் களிப்புக்களவில்லை. அவரே தங்களை என்னிடம் அனுப்பிவைத்தார். இன்று முதலில் எனது அடங்கா நடத்தையால் தங்கள் உள்ளத்தில் வருத்தம் ஏற்பட்டிருக்கும். இங்கு அரச கட்டளை மயிரில் கட்டிய கத்திபோல் அசைந்துகொண்டிருக்கின்றது. அவளுக்கு மரண தண்டனை விதிக்கப்பெற்றுள்ளது சான்றோய்! அந்தோ! பேறிழந்தவளே!" இவ்வளவு கூறி நெடுமூச்செறிந்தாள். பின்னர் சொன்னாள்: "பெரியோய்! அவளை எங்குக் கண்டீர்?" இவ்வினா விடுத்துக் கொள்ளை கொள்ளும் பெரிய கண்களால் என்னைக் காணத் தொடங்கினாள். நான் தொடக்கத்திலிருந்து இறுதிவரை நிகழ்ந்த வரலாற்றினைச் சுருக்கமாகக் கூறினேன். கேட்டுக் கொண்டிருந்தபொழுது ஒரு பொழுதில் மகிழ்ச்சியும் ஒரு பொழுதில் வியப்புங்கொண்டாள். நன்றி பாராட்டும் பான்மையில் கருமுகில் வண்ணன் படிமத்தை நோக்கினாள். நீர் நிறைந்த கண்களோடும் என்னைப் பார்த்துப் புகன்றாள். "எனது நல் வினைப் பயனாகவே தங்களைக் காணும் பேறுபெற்றேன். திருமாலின் அருட்பேருகிய உணவு உட்கொள்வதில் யாதொரு தடையுமிருக்காது என நம்புகின்றேன்." ஊக்கமுடன் உரைத்தேன்: "சற்றும் தயக்கமில்லை; அந்தணன் தாங்கள் அருளுகின்ற உணவு ஏற்கத் தலைநின்றேன்." ஒரு நொடியில் நோய்ந்நிழல் பரவி இருந்த முகத்தில் மகிழ்ச்சி மலர்ச்சி தோன்றியது. உணவு ஏற்பாடு செய்ய எழுந்தாள். நான் இல்லத்தே ஆங்குத் தனியாக அமர்ந்திருந்தேன்.

நான் உன்னிப்பாகக் கண்ணன் படிமத்தைக் காணலானேன். இதனை இயற்றிய சிற்பியின் திறமையை வியந்தேன். மின்னல் கொடியை நினைவில் இருத்தி மூன்று வளைவுப் படிமத்தை ஒரே கல்லில் செதுக்கி இருந்தான். திருமாலின் படிமம் இது மிகப் புதுமையானது. மூவளைவுப்படிமம் அகச் சுவையைக் குறிப்பதாகும். இத்தகைய கண்ணன் திருப்படிமம்

இதுவரை கண்டதில்லை. கண்ணன் கழுத்தில் ஏதோ தொடையல் போன்ற பொருள் இருந்தது. படிமத்தின் முன்னிடத்தே எட்டிதழ்த் தாமரை வரியோவியத்திற்குள்ளே கீழ்முக முக்கோணச் சக்கரமும் மேன் முகச் சக்கரமும் வரையப் பெற்றிருந்தன. மாலையில் தொழுகை மண்டபத்தே இருப்பது போன்றிருந்தது. தாமரைக்குள் வயிரப்படை இருந்தது. வரைந்திருந்த வகை அழகாக இருந்தது. அருகு சென்று பார்த்தேன், வியப்புற்றேன். யந்திரத்திற்குள் மந்திர எழுத்துக்கள் பொறிக்கப்பெற்றிருந்தன; அவற்றுடன் காமகாயத்திரி வரையப் பெற்றிருந்தது. ஒருமுறை கண்ணன் படிமத்தையும் ஒருமுறை காமகாயத்திரியையும் மாறிமாறிப் பார்த்தேன்; எத்தகைய புதுமையான பொருத்தமற்ற கலப்படம்! என்ன, கண்ணன் காமப்படிமமா? இல்லையே. நான் என்ன பார்த்துக் கொண்டிருக்கின்றேன்! கண்ணன் ஒரு பால், காமகாயத்திரி மந்திரம் மற்றொருபால்: "ஓம் காமதேவாய வித்மஹே, புஷ்பபாணய தீமஹி[1] தந்நோ அநங்க: ப்ரசோதயாத்!" எனக்கொன்றும் புரியவில்லை. உன்னிப்பாகக் கண்ணன் படிமத்தைக் காணலானேன். இவ்விதம் வியப்பினால் வீழ்த்தப்பெற்று வாயடங்கி நினைக்கும் வல்லமையும் இழந்து நான் அமர்ந்திருந்த இதே நேரத்தில் சுசரிதை இல்லத்திற்குள் நுழைந்தாள்; நீராடித் திரும்பினாள். இப்போதுதான் நீராடி வந்தமையால் அவள் உடம்பின் அழகு பன்மடங்கு மிக்குத் தெரிந்தது. புயற் கருமை கொண்ட அவளது மயிர்முடி கன்னங்களில் தவழ்ந்து அழகைப் பருகிற்று. மஞ்சள் பட்டாடை அணிந்த அவள் உடம்பு பொற் கொம்பரெனத் திகழ்ந்தது. அவளது கையில் கண்ணனுக்குப் படைக்கப் பொங்கல் முதலிய உணவுப் பொருட்கள் இருந்தன. அவை ஒளிபொருந்திய வெள்ளித்தட்டில் அழகாக அடுக்கப்பெற்றிருந்தன. அத்தட்டோடு நின்றவள் மலருடன் கூடிய சந்திர மல்லிகை கொடிபோலக் காட்சியளித்தாள். வலதுகையில் அபிடேகக் கலசம் இருந்தது. அவள் வடிவெடுத்த பத்திபோலவும், அழகின் படிமம்போலவும், திருவின் உருப்போலவும், களிப்பூட்டும் மாலைப்பொழுது போலவும் என் உள்ளத்தில் முற்றிலும் இனிய சுவைபொழிந்து கொண்டிருந்தாள். நான் இந்த நிலையில் பேசாது அமர்ந்துகொண்டிருப்பது கண்டு சிறிது நாணங்கலந்த

---

[1] இன்றும் பரவர்த்தி வைஷ்ணவத்தின் பல சம்பிரதாயங்களில் காம காயத்திரியால் கிருஷ்ணபிரானைத் தொழுகின்றனர்.

வருத்தமெய்தினுள். நானும் சற்று வெட்கமுற்றேன். பத்தியோடும் கொணர்ந்த பொருட்களைக் கண்ணன் படிமத்தின் முன் வைத்தாள், முன்றுனையைக் கழுத்தில் சுற்றினுள், நெடுநேரம் பத்தியோடும் மண்டியிட்டுத்தொழுதாள். இமையாது வாசுதேவப்படிமத்தைப் பார்த்தவாறிருந்தாள். கண்ணபெருமானும் அவள் பத்தியால் களிப்பெய்தினுன் போலக் காட்சி யளித்தான். பத்தியொளி ததும்புகிற முகம் மகிழ்ச்சிக் கண்ணீரால் நனைந்தது. மந்திரம் ஓதவில்லை, தொழுகைப்பா பாடவில்லை, இன்ன பிற பூசைச் செயல்களையும் புரியவில்லை. மானசத் தொழுகையோடு பூசை முற்றுப்பெற்றது. முதலில் இருந்து இறுதி வரை சிறந்ததொரு பெருமை திகழ்ந்தது.

சுசரிதை எனக்குக் கழுவு நீர் உண்ணீர் முதலியன தந்து எனக்குரிய தவிசில் அமரச் செய்தாள். நான் அடக்கத்துடன் வினவினேன் : “செல்வீ ! தக்கதே என்பாயாகில் ஒன்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.” அவள் மகிழ்ச்சியும் அன்பும் பூண்டவளாய் விடை பகர்ந்தாள் : “சான்றேய் ! நான் சிறியவள். ஏதேனும் தொண்டுபுரிய வேண்டுமாயின் தலைநின்றேன். கட்டளை என்ன ?” அவள் கண்கள் உவகையில் மிளிர்ந்தன. நான் நவின்றேன் : “இந்த வாசுதேவப் படிமத் தொழுகையைப் பற்றி அறிய ஆவல் கொண்டேன். மாலையில் இருந்து இது பற்றி அறிய முயன்றேன். ஆனல் ஐயத்தீர்வு காண்கிலேன்.” அவள் மறுமொழி பகன்ருள் : “எனக்குக் தெரியாது. இன்றிலிருந்து மூன்று மாதங்கள் முன்வரை நான் கொடிய பாவியென என்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனல் அத்தகைய எண்ணம் என் உள்ளத்தில் இன்றில்லை. என் குருநாதரிடம் வினவுவீராகில் உமது ஐயப்பாட்டிற்குத் தீர்வு காண்பீர்.” அவள் சொல்லுக்கு மறுமொழி கூருமல் அவளை வியப்போடும் பார்த்தவாறு இருந்தேன். சிறிது நேரம்வரை பேசாமல் இருந்து பின் கூறினுள் : “மனித உடம்பு ஒறுக்கப்படுவதற்கே பிறக்கவில்லை, பெரியோய் ! அது கடவுளின் யாவற்றிலும் சிறந்த படைப்பாகும். இமி நாராயணனின் தூய கோயில் முதலிலேயே இதை உணர்ந்திருந்தால் நான் இத்தனை துன்பமும் பட்டிருக்க வேண்டியதில்லை. குருப்பெருமான் இந்த மறையை எனக்கு விளக்கியருளினுர். இதுவரை வாழ்வில் மிகப் பெரிய குற்றம் என்று நினைத்ததை யாவற்றிலும் பெரிய உண்மையென விளக்கினுர். ஏன் தனது உண்மையைக் கடவுளென மாந்தர் நம்பவில்லை ?”

சுசரிதையின் கண்கள் கீழே நோக்கின. எனக்குத் தவிசு தந்தாள், மந்திர நீர் உட்கொள்ளத் தந்தாள், கீழ் நோக்கிய கண்கள் இன்னும் அழகில் மிளிர்ந்தன. ஒரு முறையே என்னை நிமிர்ந்து நோக்கினுள். இன்னும் கேட்க ஆவல் கொண்டேன். அவள் கூறுவன எனக்கு விளங்கவில்லையாயினும் அவளது ஒவ்வொரு சொல்லிலும் பெருந்தன்மை மிளிர்ந்ததால் சிறந்த நூலினைக் கேட்பதுபோல அக்கரையுடன் கேட்டேன். அவள் கூறினுள்: ''இந்த உடம்பு நரகத்திற்கு வழிகாட்டி எனக் கருதுதல் தவறு சான்ருேய்! இதுவே வைகுந்தம்; இதனையே புகலிடமாகக் கொண்டு திருமால் திருவிளையாடல் புரிகின்ருர். மகிழ்ச்சியாலேயே கடவுள் தம் படைப்பை இயற்றுகின்ருர். மகிழ்ச்சியே படைப்பின் தொடக்கம்; அதுவே கடவுளது குறிக்கோள். திருவிளையாட்டிற்கே கடவுள் படைக்கின்ருர். படைப்புக்கு இதனினும் வேறு குறிக்கோள் இல்லை. அந்தோ! முதலிலேயே இவ்வுண்மையை ஏன் அறிந்து கொள்ளாதுபோனேன்?'' அவள் ஒளிமுகம் இன்னும் ஒளி நிறைந்தது. இவ்வாறு பேசுவதில் களிப்புக் கொண்டாள்; ஆனல் அவள் சொன்னவை எனக்கு விளங்கவில்லை. சொற்களுக்குள் ஏதோ ஒரு மறை செறிந்துள்ளது. அது அவளை மகிழ்ச்சிக் கடலில் மூழ்குவித்து நின்றது. தவிசிட்டு அதனில் என்னை அமரும்படி வேண்டினுள். பேசாது கட்டளையை நிறைவேற்றினேன்.

ஆண்டவன் அருட்பேருகிய உணவில் சில பழங்களும் இனிப்புப் பண்டங்களும் இருந்தன. அவள் கையினின்றும் விழும் பொருட்கள் கற்பகக் கொடித் தளிர்களினின்றும் வேண்டிய பொருட்கள் விழுவன போன்றிருந்தன. உணவிட்டுக் கைகூப்பி அமர்ந்தாள். அவள் கண்களில் உவகை நீர் வழிந்தது. இம்மண்ணுலகிற்கும் அப்பாற்பட்ட மகிழ்ச்சி நுகர்ந்தவாறிருந்தாள். நான் சிறுநகை பூத்தவனுய்க் கூறினேன். ''நாராயணன் அருட்பேறு ஆகிய சோறு பெற்று வாழ்க்கைப் பயன்பெற்றேன் தேவி! நாராயணனும் நீ படைத்தவற்றைப் பெற்றுப் பேறு பெற்றவனுயினுன்.'' அவள் குரல் மகிழ்ச்சியால் தடையுற்றது; பேச முடியவில்லை. அவள் மெதுவாகக் கூறினுள்: ''பெரும! நாராயணன் மாந்தருக்கப்பாலும் மாந்தரகத்திலும் உறைகின்ருன் அல்லவா? நீவிர் மகிழ்ந்தால் நாராயணனும் மகிழ்ந்தவனே. நீவிர் நாராயணன் வடிவம்.'' நீர் வழியும் கண்களோடும் நாராயணன் படிமத்தை நோக்கித் தானே சொல்லிக்கொண்டாள்: ''மனம் பெரிய பாவி, அது மனிதனை

நாராயணனுகைக் கருதுமா ?'' மீண்டும் நீர் வழியும் கண்ணுெடும் என்னைப் பார்த்துக் கூறினுள் : ''பட்டம்மையை என்ன செய்யப் போகின்றீர் பெரும !'' பத்திச் சூழ்நிலையால் உடனே விடை பகர்ந்தேன் : '' நாராயணன் செய்வான், நாம் அனைவரும் அவன் கருவிகளே.'' சுசரிதை என் கருத்தை யேற்றுக் கூறினுள் : ''ஆம் பெருமான் ! நாராயணனே யாவற்றையும் ஆட்டி வைப்பவன் ; இப்படகை ஒட்டுபவன் அவனே. நாமோ வெனில் புயலைக் கண்டு அஞ்சிக் கைகட்டி நின்று விடுகின்ரும். நாம் எவ்வினைக்கும் பொறுப்பாளிகள் அல்ல என்பதை ஏன் மனம் ஒப்புக்கொள்வ தில்லை? நாராயணன் இருக்கும்போது, மனம் ஏன் இவ்வளவு நினைக்கவேண்டும் ? வினைப்பொறுப்பைத் தன் தலைமேல் தான் உள்ளது என்று ஏன் நினைக்கவேண்டும் ?'' இரவு மிகக் கழிந்து விட்டது. நான் விடைபெற்றேன். அவள் வருத்தத்தோடும் உடன்பட்டாள். கதவு வரை வந்து பத்தியோடும் கைகுவித்துச் சொன்னுள் : ''நாளை மாலை முன்னர் பெருமானின் காட்சி காண முடியுமா ?'' நான் '' கட்டாயம் '' என்று சொல்லிக் குமார கிருஷ்ணவர்த்தனனின் விருந்து மனை நோக்கிப் போனேன். வழியில் சுசரிதையைப் பற்றி நினைத்தவாறு சென்றேன். அவளது அறிமுகத்தை வேண்டிய அளவு பெறவில்லை, பெற்ற வரை அவள் என் அக்கரைக்குரியவள் என முடிவு செய்தேன். ஆனுல் அந்தக் காசியந்தணன் என்ன கூற விரும்பினுன் ? சுசரிதையைப் பற்றித் தாணேசர்புரியில் தவறுன கருத்துக் கொண்டிருக்கின்ருர்களா ? சிறிது நேரம் கழித்து என் இருப் பிடம் சேர்ந்தேன். அங்குக் குமார கிருஷ்ணவர்த்தனனின் தூதன் திருமுகம் ஒன்று கொண்டு வந்தான்.

மூன்று திருமுகங்கள் பட்டுத்துணியில் கட்டப்பெற்றிருந் தன. முடிச்சு அவிழ்த்தேன். கருப்புர மரப்பலகை இரண்டின் இடையே முடங்கல்கள் இருந்தன. பலகைமீது அரக்கு நிறத் தால் கற்பக வல்லி வரையப் பெற்றிருந்தது. நான் வியப்பினுல் மெய்ம்மறந்தேன். பலகைகள் நடுவே பூருசுவ இலைக் கடிதம் ஐந்து மடிப்பில் மடிக்க பெற்றிருந்தது. ஐந்து மடிப்புக்கள் நட்பின் குறியென அறிந்தேன். ஆவலோடும் அதனைத் திறந் தேன். அது மன்னர் மன்னனது கட்டளையாக இருந்தது. என்னை அரசப்பேரவைப் புலவனுகப் பணித்துள்ளார் ; அத் துடன் மன்னவன் கையால் தாம்பூலம் பெறும்பேறு வாய்க்கப் போகிறது. நான் நாளைக்காலை அரச புலவன் வேடம் புனைந்து வரவேண்டும் என்ற கட்டளையும் இருந்தது. மன்னர் மன்னவன்

நம்பிக்கைக்கு உரிய அங்கத்தினனுக நியமித்தது பற்றி எல்லையற்ற மகிழ்ச்சியுற்றேன். இரண்டாவது கடிதம் திறந்தேன். அதில் நான்கு மடிப்புக்கள் இருந்தன; அதன்படி நான் குறுநில மன்னன் பதவியைப் பெற்றேனே என வியந்தேன். ஆனால் உலோரிக தேவர் பெயருக்கு அத்திருமுகம். அவர் பத்திரேசுவரர் கோட்டையோடும் சரணுத்திரி மலையில் இருந்தும் கங்கை யாற்றுக்கு வடக்கே உள்ள நிலங்களுக்குக் குறுநில மன்னனுக்கப் பெற்ருர். மூன்ருவது முடங்கல் படித்தேன். அது கிருஷ்ண வர்த்தனனது. மாவமைதிக்காப்பாளன் என்ற நிலையில் மன்னர் மன்னவனது நம்பிக்கைக்குரிய பிரதிநிதியாகிய வாத்தியாயன மரபைச் சேர்ந்த பாணபட்டனை ஓர் இன்றியமையாத செயல் பற்றிக் கலந்து சூழ விரும்புகின்ருன் என்ற செய்தி அம்முடங்கலில் இருந்தது. நாளை வைகறையில் பார்க்கவேண்டுமென வேண்டிக்கொண்டுள்ளான். கிருஷ்ணவர்த்தனன் ஏதோ ஆழ்ந்த அரசியல் சூழ்வினை என்னும் வலையை என்மீது வீசி உள்ளான் என்று தெளிவாகத் தெரிந்துகொண்டேன். ஏதோ ஆழ்ந்த அரசியல் சூழ்ச்சியில் என்னைக் கருவியாக்க விரும்புகின்ருன் போலும். ஐயப்பாடும் ஏற்படவில்லை, மகிழ்ச்சியும் மலரவில்லை. யான் எத்தகைய நாடோடியாக இருப்பினும் பட்டம்மைக்குத் தொண்டு புரியும் வாய்ப்பு ஏற்பட்டதாலேயே இத்துணை அரசியற் பெருமை எனக்கு வாய்த்ததென அறிந்தேன். இது உவகைக்குரியதுமன்று, துயரத்திற்குரியதுமன்று; கவலையற்றுப் படித்தேன்; விரைவில் உறங்கிவிட்டேன்.

வைகறைப் போதிலே நீராடல் முதலிய காலைக் கடன்களை முடித்துக்கொண்டு கிருஷ்ணவர்த்தனன் இல்லம் போந்தேன். முன்னரே என்னை எதிர் நோக்கியவாறிருந்தான். என்னைப் பெருமையோடும் வரவேற்றுத் தவிசு அளித்தான். சற்று முறுவலிப்புடன் கூறினன். "மன்னர் மன்னவனது கட்டளை பெற்றிருப்பாய், பட்ட!" தலையசைத்து அடக்கத்தோடும் ஒப்புக்கொண்டேன். குமாரன் கூறினன்: "இதனை நிறைவேற்றுதற்காக யான் பல பொய்யுரைகள் ஆடினேன். ஆனல் இதனைத் தவருக நினையற்க. நான் செய்தனவெல்லாம் பாரதத்தை அழிவுக்குழியில் விழுவதினின்றும் காக்கவே. ஓநாய்களிலும் கொடியவரும் எறும்புகளிலும் மிக்க அமைப்பு உடையோரும் ஆகிய எல்லைப்புறக் காட்டு மக்கள் எல்லைப்புறங்களில் குழுமி உள்ளனர். மீண்டும் பாரதத்தின் கோவில்கள் அறப்பள்ளிகள் முதியவர் இளைஞர் துறவிகள்

அரிவையர்கள் அந்தணர் சமணர் புத்தர் அனைவரும் முழு அழிவு என்னும் நீர்ச்சுழியில் அகப்படவுள்ளனர். இன்று குப்த மன்னர்களது வலிமை குன்றியுள்ளது. வெறிகொண்டதும் போர்க்குணம் பொருந்தியதும் ஆகிய புலிபோன்ற குப்த மரபு இன்று பல் பிடுங்கப்பெற்றுச் செருக்கடங்கி உள்ளது. மௌக் கரி மரபினரது வீர நெருப்பு அணைந்துவிட்டது. கன்னோசிப் பேரரசு ஒன்றே இந்த அழிவினின்றும் பாரதத்தைக் காக்க முடியும். ஆனால் பட்ட, இதனைக் காண்க; ஒருமுறை எல்லைப் புறக் காட்டு வாழ்நர் பாரதத்திற்குள் நுழைந்துவிட்டாரெனில் அவர்களைத் தடுத்து நிறுத்துதல் முயற்கொம்பாகிவிடும். இந்தப் பெருங்கேட்டினின்றும் காப்புப்பெற ஒரே உறுதி வழி பட்டம் பெருமாட்டியின் தந்தையாலேயே ஏற்படுத்த முடியும். அவர் இன்று துயரமும் ஊக்க மழிவும் கொண்டுள்ளார். தாணேசர்புரி குடிமக்கள் பௌத்த மன்னனிடம் வெகுளி கொண்டுள்ளனர். மௌக்கரி மரபினர்தம் குருவாகிய பருவு சர்மாவைப் பட்டம் பெருமாட்டியின் தந்தை பெரிதும் மதிக்கின்றார். கன்னோசி நாட்டில் மாமன்னவன் தங்கையெனப் பட்டம்மை பெருமை யோடும் வைக்கப் பெறுவாள். ஆனால் இங்குள்ள அரச மரபி னரில் எவன் இல்லத்திலும் வசிக்கமாட்டேன் என்பது பட்டம்மை யின் உறுதியாகவுள்ளது. பட்ட, சொல்லுக வழி என்ன?''

நான் சிறிது நேரம் வெல்லப்பட்டவன் போன்றும் ஒடுக்கப்பெற் றவன் போன்றும் கிருஷ்ணவர்த்தனனை விழித்து நோக்கியவா றிருந்தேன். குமாரன் எனது விடைக்குக் காத்திராமல் உடனே பேச்சுத் தொடங்கினான்: ''நீ மௌக்கரி குலக்கொடி, கோப் பெருந்தேவியாகிய அரசித் திருவை (காலம் சென்ற கிரகவர்ம னின் மனைவி) அறிவாயன்றோ?'' தலையசைத்து ஒப்புக்கொண் டேன். ''அவர்கள் விருந்தாளியாகப் பட்டம்மை இருக்கலாம். இதோ அவர் விடுத்த அழைப்புத்தாள்.'' இவ்வளவு இயம்பிப் பின் சிறிய வெள்ளிப் பேழைக்குள் சீனப்பட்டில் மடித்த முடங் கலை எனது கையில் வைத்தான். எனது விடை எதிர்நோக்காம லேயே சொன்னான்: ''இதன்மேல் நீ என்ன செய்தாகிலும் பட்டம்மையை இங்குக் கொண்டு வருக. மன்னர் மன்னவன் பிரதிநிதி என்ற நிலையில் நீ பட்டம்மையை அழைத்து வருக. நாளைக்கே புறப்படலாம். திரும்பிய பிறகு புருடபுரம் நீயே போகவேண்டி இருக்கும். யாவற்றையும் எச்சரிக்கையாக விரை வாகச் செய்தல் வேண்டும். பட்ட, நீ பாரதத்தை அழிவினின்றும் காத்தல் வேண்டும். விழிப்பற்ற உனது சிறிய வினையும் ஆயிர

மாயிரக்கணக்கான மக்களது உயிருக்கு உலைவைத்துவிடும். இன்று மன்னர் மன்னனைப் பார்த்துவிடு." குமாரன் பேசும் வாய்ப்பே எனக்குத் தரவில்லை. அவன் சொற்கள் உள்ளந் தொடுவன அல்ல, அளந்தெடுத்தவை, நிறுத்து எடுத்தவை, ஆதலின் அவன் அவற்றை ஆராயவே எனக்கு வாய்ப்பளிக்க வில்லை. அடக்கத்தோடும் தலைவணங்கிப் புறத்தே சென்றேன். குமாரனும் "சென்று வருக, நேரம் கழிதலால் பெருங்கேடு உண்டாகும்" என்று கூறி வழியனுப்பி வைத்தான்.

## உயிர்ப்புப் பதினான்கு

அன்று வெற்றிலைச் சுருள் விலை மிகமிக ஏறிவிட்டது. நான் மன்னர் மன்னவன் பேரவைக்கு வருவதன் முன்னர் போய்ச் சேர்ந்தேன். அரச அவையில் ஒழுங்கின்மை நிலவியது. ஒரு பால் ஒரு குறுநில மன்னன் பகடையாடக் கோடு கிழித்துக் கொண்டிருந்தான். சிலர் சூதாடிக் கொண்டிருந்தனர். சிலர் யாழிசைத்துக் கொண்டிருந்தனர். சிலர் ஓவியப் பலகை மீது மன்னர் மன்னவன் ஓவியத்தை நிறைவுறத் தீட்டியவாறிருந்தனர். ஒருவன் ஒரு செய்யுளைப் படித்தான், ஒருவன் அச்செய்யுளின் கடைசிச் சொல்லைத் தொடங்கி வேறு செய்யுள் படித்தான். இதனை அந்தாதித் தொடை என்பர். ஒருவன் மற்றவன் நினைத்துள்ள கருத்தைச் செய்யுளில் வைத்துப் பாட முயன்றான். ஒருவன் ஒரு புதிர் போட்டான், மற்றொருவன் அதனை விடுவிக்கும் பா இயற்றினான். இடையே எழுத்துக்கள் விடப்பட்ட செய்யுளை இயற்றும் முயற்சியில் சிலர் ஈடுபட்டிருந்தனர். மாந்தர் நிறைந்த பேரவையிலும் பெருந்தன்மை பாராமல் சாமர மாதர் கன்னத்தில் பொட்டு வைக்கும் கயமையும் சிலர் செய்தனர்.[1] அரச அவையில் முதன்முதல் கால் வைத்த, பண்பாடு சிறந்த மாந்தர் உள்ளத்தில் என்ன துயர் ஏற்படும் என்று நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. முழுச் சபையே ஒழுங்கீனத்தின் ஓவியமாகத்

---

[1] காதம்பரி முதற்பாகம் அரசசபை வருணனையோடும் ஒப்பு நோக்குக.

தென்பட்டது. சிலர் அரசர் பெருமான் இயற்றிய பாக்களுக்கு விரிவுரை செய்து கொண்டிருந்தனர். சிலர் சாமரம் ஏந்தும் மகளிரிடமும் வாயில் காக்கும் ஊழிய மங்கையரிடமும் பேசிக் கொண்டிருந்தனர். ஆனல் ஒழுக்கமுடைய சில பெரியார்கள் அடக்கத்தோடு அமர்ந்திருந்தனர்.

மன்னர் மன்னன் தலைமை நீதிபதியுடன் நுழைந்ததும் பேரவையில் ஒழுங்கும் கட்டுப்பாடும் உடனே ஏற்பட்டுவிட்டது. முரசு முழக்கமும் வந்தியர் தொழுகையும் வெற்றியோசையும் காற்று மண்டலத்தை நடுங்கச் செய்தன. செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பெற்ற சிற்றடிகளைப் பெயர்த்து வைப்பவரும் அகிற்புகையால் மணமூட்டப்பெற்ற கூந்தலை உடையவரும் ஆகிய சாமர மங்கையரின் நுண்ணிழைப் புடவைகள் கர்...ர்...ர் ..ரென அலைந்தன. தாமரை நாளங்களைப் போன்று மென்மையும் இளமையும் பொருந்திய தோள்களில் அணிந்த வளைகள் இனிய ஓசையைக் கிளப்பின. அவர்தம் தாமரைக் கைகளில் இருந்த வளைகள் வாய்விட்டலறின. படபடப்பாக எழுந்த குறுநிலமன்னர்கள் அணிந்த தோள் வளைகள் மோதுதலால் கணகணவென ஒலித்தன. மங்கல மந்திரமோதும் அந்தணர்கள் விரைவினல் தம் மேலாடைகளில் மாட்டிக்கொண்டு விழுவதினின்றும் மயிரிழை தப்பினர். மங்கலப் பொருட்களை ஏந்திய மங்கையர் தம் மேகலையில் உள்ள மணிகள் ஒலித்தமையால் அது கேட்டு ஊக்கங்கொண்ட அரண்மனைக் குளத்து அன்னங்கள் இட்ட ஓசை அரச அவைக்குள் இன்னும் மிக்க குழப்பத்தைத் தூண்டியது. மன்னர் மன்னவன் அரியாசனத்தில் வீற்றிருந்த பொழுதே வெற்றியோசைகளும் சங்கும் கொம்பும் முரசமும் வந்தியர் தொழுகையும் இன்னோரன்ன பிறவோசைகளும் ஒய்ந்தன. அரச அவையில் எதிர்பாராத அமைதி குடிகொண்டது. ஆனல் இடையிடையே சாமரம் வீசும் மங்கையர் கையில் இருந்த வாயாடி வளையல்களின் ஓசை கேட்கப்பட்டது. வெற்றிலைச் சுருள் வழங்கும் அரசவினை மிகமிக வேடிக்கையாக இருந்தது. நான் தக்கவாறு நடிக்க முடியவில்லை. ஆதலின் நான் நாகரிக மாந்தரது எள்ளி நகையாடலுக்கு உரியவனனேன்.

அரச அவையில் அரசவினை தொடங்கிற்று. தலைமை நீதிபதி தான் செய்த வழக்குத் தீர்ப்புக்களுக்கு அரசன் உடன்பாட்டைப் பெற்றவாறிருந்தார். கருத்துவேற்றுமை மிகக் குறைவே. சிற்சில நேரங்களில் அறநூல்வல்லவரின் உதவி வேண்டப்

பெற்றது. சிற்சில வழக்குகள் பற்றி மாவமைதிக் காப்பாளன் கிருஷ்ணவர்த்தனன் கருத்தும் கேட்கப்பட்டது. எனக்கொன்றும் புரியவில்லே. கிருஷ்ணவர்த்தனன் மனக்குழப்பத்துடன் பேசிக்கொண்டிருந்தான். தலைமை நீதிபதியின் முகத்தில் கடுமை தென்பட்டது. அரசனே அமைதியாகச் சிரிக்காமல், வெகுளாமல், குழப்பமில்லாமல் யாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தான். வழக்காராய்வு முடிந்த பிறகு கிருஷ்ணவர்த்தனன் மன்னர் மன்னனிடம் ஏதோ கூறிக் கொண்டிருந்தான். பின்னர் இசைவல்லுநர், புலவர்கள், நகைவேழம்பர்கள் தொழுகைப்பா பாடுபவர்கள் முதலானேரின் முறை வந்தது. கவிஞர்கள் தாம் இயற்றிய புதிய சுலோகங்களை வாசித்துக் காட்டினர்கள். அரசன் யாவரையும் மகிழ்வித்தான்.. சிலருக்கு இனிய மொழி வழங்கினன்; சிலருக்குத் தாம்பூலச் சுருள் வழங்கினன்; சிலருக்குப் பரிசில் வழங்கினன்; சிலருக்குத் தான் அணிந்திருந்த நகைகளை வழங்கினன்; அனைவோரின் வாழ்த்துப் பெற்றான். குமார கிருஷ்ணவர்த்தனன் குறிப்பேற்று நான் முன்னகை வந்து அரசர்க்கரசனை வாழ்த்தக் கையுயர்த்தினேன். மிகுந்த முயற்சியோடும் இச்சகம் நிறைந்த ஆரியை எனும் சந்தத்தில் ஒரு விருத்தம் சொன்னேன். துன்பம் நிறைந்த சூழ்நிலையாக இருந்தது. மாமன்னனை வாழ்த்தக் கையுயர்த்தியபோது என்னிதயம் உடைபட்டது போன்ற உணர்ச்சியுற்றேன். உயிருள்ள எந்த மனிதனையும் புகழேன் என நிபுணிகைக்கு வாக்களித்தேனே! என்ன ஆகும்! நான் இன்று முதல் ஆயிரம் நாட்களே உயிர்த்திருப்பேனே? வடபாரதத்தில் சிறப்பு வாய்ந்த வலிமைபடைத்த அரசர்க்கரசன் முன் நிற்கின்றேன் என்பதையும் மறந்துவிட்டேன்; மெய்ம்மறந்து போனேன். எனது ஆரியை விருத்தத்தின் ஒரு பகுதியைத் திரும்பக் கூறிக் கிருஷ்ணவர்த்தனன் எள்ளும் குரலில் சொன்னன்: "சூளுரை நினைத்து வருத்தமுறுவது தக்கதல்ல, பட்ட!" பேரவையில் அனைவோரும் நகைத்தனர். மாமன்னவனும் விழுந்து விழுந்து சிரித்தான். என்னையறியாதவரும் மாமன்னவன் சிரிக்க உருண்டுருண்டு சிரித்தனர். நான் வெட்கத்தோடும் அகன்றேன்: இப்போது மாமன்னவன் அன்போடும் உரைத்தான்: "நீ நல்ல கவிஞனகக் காணப்படுகின்றனை." நான் தலைவணங்கி அவன் அன்புப் பேற்றினை ஏற்றுக்கொண்டேன். பின்னர் நகைவேழம்பர்களின் மங்கலமற்ற காட்சி நடைபெற்றது. பொறுக்க முடியாமல் தவித்தேன். இதே நேரம் அரசஅவை கலையுஞ் சங்கு முழங்கிற்று.

மாமன்னன் எழுந்தனன். கங்கணம், வளை, சிலம்பு, தோள்வளை முதலிய நகைகளின் ஒலிகளோடும் தொழுவோரின் வெற்றி யோசையும் கலந்தது. மெதுவாக நங்கையர் முகத்துச் செயற்கையான மலர்ச்சி ஓய்ந்தது. அரச அவையினர்தம் இச்சகம் நிறைந்த நகைச்சுவை நின்றது. சிறிது நேரத்தில் தாழம்பூ மணமேற்றப் பெற்றமேலாடைகள் மடியத் தொடங்கின. மேலும் நகைவேழம்பர் தம் கருத்தாழமில்லாத நகைச்சுவை களைப்பு மிகுதியில் முழுகிவிட்டது. நான் மூச்சடைக்கும் சபைக் கூட்டத்தைவிட்டு வெளியே சென்றேன். நான் விரைவாகப் போய்க்கொண்டிருந்த பொழுது பின்னுக இருந்து ஒருவன் குரல் கொடுத்தான்: "செல்வ கேள்!" திரும்பி அவன் மலர்ந்த முகம் பார்த்தேன். அவன் பெயர் தாவகன். அவன் அரச அவையில் அழகிய கவிதை படித்துக் காட்டினன். அவன் பாடிக்காட்டிய முறையில் தனிவகை இருந்தது. அரசன் அன்பிற்குரியவனுகக் காணப்பெற்றான். அவனைக் கண்டதும் மகிழ்ச்சி கொண்டேன். தாவகன் நகைத்து நவின்றான்: "அரச அவைக்கு வந்துவிட் டாய்; எங்களைத் தீண்டாதவர் என மதித்துப் போகலாமா? உன் வினைகள் எப்படி நிறைவேறும்?" நான் அடக்கத்தோடும் விடை பகர்ந்தேன்: "பெரும! காரணமின்றி என்னை நாணுறச் செய் கின்றீர்." ஆனல் அவனே மகிழ்ச்சி வெறி செறிந்த ஆளாகக் காணப்பட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் என் நட்பைப் பெற்றுவிட்டான். சிறிது நேரம் வரை பல பொருள்களைப் பற்றிப் பேசிவிட்டு விடைபெற்றுக் கொள்ளும் முகத்தான் சொல்லிப்போந்தான்: "நீ மாமன்னவன் நம்பிக்கைக்குரிய ஆட்களில் ஒருவன். விரைவில் அழைப்புப் பெறுவாய்." தெளி வாக விளக்கவேண்டுமென்று வேண்ட அவன் கன்னேசி நாட் டுக்குரிய அடக்கமான சிரிப்புச் சிரித்துச் செப்பினன்: "குருவே, விரைவிலேயே பொருள் தெரிந்து கொள்வாய்." என் உடன்பாடு பெருமலேயே அப்பாற் போய்விட்டான். நான் வியப்போடு உறைவிடம் நணுகினேன்.

நாள் கழிவது அரிதாக இருந்தது. மேற்குப் பாலைவனத் தின் வெப்பக்காற்று மூவுலகத்தின் ஈர முழுவதையும் பருகுவது போல வீசிக்கொண்டிருந்தது. கன்னேசி நாட்டின் ஏரி குளங் களிலுள்ள நீர் அனைத்தையும் பருகிவிடுவது போல வெப்பக் காற்று வீசியது. கதிரவனில் வெடிப்பு ஏற்பட்டு அங்கிருந்து இடையருது வெப்பம் பொழிவதுபோல இருந்தது. கதிரவன் மறைவதற்கு ஒரு நாழிகை இருப்பினும் தாணேசர்புரியின் 'அரச

தெருவில் கதிரவன் கதிர்கள் சாய்ந்து பொழிந்தவாறிருந்தன. மலைப்பாம்பு சீறுவதென அச்சுறுத்தும் காற்றலைகள் அரண்மனை யின் பரந்த சுவர்கள்மீது மோதிப் பின்வாங்கி செந்நெறிச் செல்வாரைத் தாக்கின. காற்றுச் சுழிகளால் எழுந்த தூசுக் குழாம் வானத்தைக் கவிந்ததால் வெளியே நடமாடல் அரிதா யிற்று. எனினும் நான் புறப்பட்டேன். சுசரிதையின் அழைப் பிலே ஓர் ஈர்ப்புச்சத்தி இருந்தது. அதனை மறுத்தல் அரிதாக இருந்தது. அவள் இல்லத்தை அடைந்ததும் கதிர்க் கடவுள் தன் கதிர்வலையைச் சுருட்டிக்கொண்டான். மேற்பால் கடற் கரையில் அவனது களைத்த முகச் செம்மை பரவி இருந்தது. காற்றின் விறுவிறுப்புக் குறைந்திருந்தது. நிலாமுகப்புள் போல நான் சுசரிதை இல்லத்தின் வாயிலெதிரே சென்று நின்றேன். பகல் முழுவதும் வெய்யிலால் எரிந்து கதிரவன் மறைந்த பின்னர் தண்ணிலாவைக் காணலாம் என்ற ஆவலோடும் கீழ்ப்பால் நோக்குகின்ற அந்த நிலாமுகக் பறவை போல நான் சுசரிதை வாயிலை நோக்கினேன். ஆனால் தண்ணிலாவின் காட்சிப்பேறு கிடைக்கவில்லை. சுசரிதை இல்லத்தின் முன் தூசு படிந்திருந்தது. பல மாந்தர்கள் இவ் விடத்தை மிதித்தேறியுள்ளார் என நினைத்தேன். பாற்கடல் பள்ளிகொள்ளும் திருமால் ஓவியத்தைச் சுற்றி வேய்ந்திருந்த சிறு சண்பக மலர் மாலை வாடிவதங்கிப் போயிற்று. தொழுகை மேடை வெறுமையுற்று அச்சத்தைத் தூண்டியது. ஒன்றும் புரியவில்லை. நேற்றிரவோடிரவில் ஏதோ குறிப்பான சில நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருக்கலாம். நாளேவெனில் காமுகன் என்ற நிலையைக் கடந்து அரச அவையினனாகி அரசர்க்கரசன் பிரதி நிதியுமானேன். கடவுள் வழிபாட்டுப் பெருமாட்டியின் நிலையி லிருந்தும் எந்தப் பண்பிற்கு மாறிவிட்டாளோ? எனதுள்ளம் இனம் தெரியாத அச்சத்தினால் துடித்தது. யாரிடம் உசாவலாம்? வழிபாட்டுக் கூடத்திற்குப் போய்ப் பார்க்கலாம் என முடிவு செய்தேன்.

வழிபாட்டில்லத்தில் ஏறக்குறைய ஆயிரம்பேர் அமர்ந் திருந்தனர். இருநான்கு மாந்தர் இங்குமங்குமாகத் திரிந்து கொண்டிருந்தனர். ஓசை சிறிதும் இல்லை, அத்துணை அமைதி. அனைவோரின் முகத்தே ஆழ்ந்த அமைதி குடிகொண்டிருந்தது; அதே நேரம் சினவுணர்ச்சி குமுறியது. கூட்டத்தின் தலைவர் அமைதியான முறையில் அவையினருக்கு ஏதோ அறிவுறுத்திக் கொண்டிருந்தார். தனதுரை முடிந்ததும் பேசாமல் தம் தவிசில்

அவர் அமர்ந்தார். மிகுந்த ஒழுங்கு நிலவியது; அனைவரும் எந்திரப் பொறியென அமர்ந்திருந்தனர். வெளியே நின்ற ஆள் ஒருவனிடம் வினவியபொழுது உரைத்தான்: "இன்று விடியற் காலத்தே சுசரிதையும் பெருமான் விரதிவச்சிரனும் சிறை பிடிக்கப்பெற்றனர். நகரகாவலர், வெங்கடேசபட்டரையும் அகோர பைரவரையும் படகில் ஏற்றி எங்குக் கொண்டு சென்றனரோ அறியோம். இது பௌத்த மன்னன் தன் கட்டளை யால் நடைபெற்றது. மாந்தர் அறவழிபாட்டில் இது தெளிவான குறுக்கீடாகும். தாணேசர்புரியிலிருக்கும் அறநூல் வல்லவர் எல்லாரும் செய்யத் தக்கதை ஆராய்ந்து கொண்டுள்ளனர். கன்னோசி மக்களின் அடக்கமும் ஒழுங்கும் பெயர் பெற்றன. மகிழ்ச்சிக் கடலில் முழுகும்பொழுது உறுதியற்ற பிள்ளைகள் போலக் குதிப்பார்கள்; ஆனால் அவர்கள் ஒழுங்காக அடங்கும் பொழுது கடத்தற்கரிய கடல்போல ஆழங் கொள்வார்கள். இச் சபையில் அத்தகைய ஆழ்ந்த அமைதி குடிகொண்டிருந்தது.

சிறிது நேரம் அறநூல் ஆராய்வு நடைபெற்றது. இதன் பிறகு அவைத்தலைவர் இடி முழக்க குரலில் அறிக்கை விடுத்தார். "நலம் உண்டாகுக! பெருமக்களே! நான் இந்தச் சபையில் எழுந்தருளி இருக்கும் அறநூல்வல்லவர், பெருமக்கள், நன்மக்கள், சிறப்பும் புகழும் பெற்ற உயர் குடிமக்கள் இவர்களது நன்முடிவை அறிவிக்கின்றேன். பெருங்குடி மாந்தர்காள்! பெருங்கேடான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அடிகள் பருவுசர்மாவினது முடங் கலைத் தாணேசர்புரி மாந்தர் அனைவரும் படித்திருக்கின்றனர். எதிர்த்தற்கரிய காட்டு மாந்தர் தம் குழாங்கள் எல்லைப்புறங் களைக் கடந்து பரந்த வெளிகளுக்குள் நுழைய இருக்கின்றனர். வட பாரதத்தின் நகரங்கள், ஊர்கள், கோவில்கள், அறநிலைப் பள்ளிகள், அந்தணர் சமணர் பௌத்தர் முதியவர் இளையவர் அரிவையர் மருமக்கள் முதலானோர் ஒரு வலிமை பொருந்திய மாமன்னவன் புகலில், காவலில் இருக்க வேண்டியவர்கள். இந்த நேரத்தில் குடிமக்கள் அரசனுக்கெதிராக நடத்தல் அழிவை வரவேற்பதாகும். பெருமான் விரதிவச்சிரரின் தந்தை பட்ட கடனுக்காக அவர்மீது தொடரப்பெற்ற வழக்குப் பொய்யாகும்; நெறி நூலுக்கும் மாறானது. சுசரிதைக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு அறநூலுக்கு ஏற்றதே. இருவரும் இல்லற வாழ்க்கைக் குத் திரும்பிவிட்டனர் என்ற குற்றச்சாட்டு நெறிக்கு எதிரானது. சுசரிதை கைக் கொண்டது பன்னாட்களாக இயங்கிவரும் பத்தி நெறியே. அவள் செயற்கரிய வகையில் புலனவா மறுத்தாள்;

வியப்புக் கொள்ளற்குரிய வகையில் அறிவு நிறைந்த கடவுளுக்குத் தன்னையே ஒப்படைத்தாள்; அதனால் தாணேசர்புரியில் வாழும் புலவர் பெருமக்கள் அவள் மீது மிகுந்த அக்கறை கொள்கின்றனர். அடிகள் வெங்கடேசபட்டர் அகோர பைரவர் போன்ற ஒப்பற்ற பெரியார்கள் நாடு கடத்தப் பெற்றமையால் நாம் கழி பெருந்துயரங்கொண்டனம். ஆனால் கேடு நிறைந்த இந்நேரத்தில் அரசாங்கத்திற்குக் கேடு உண்டாக்கும் எதனையும் செய்து விடக்கூடாது; அரசுக்குத் தளர்ச்சியுறுத்தலாகாது. ஆதலின் புலவர் பெருமக்கள் நன்மக்கள் சார்பில் பதின்மர் சிறந்த பிரதிநிதிகள் மாமன்னனைக் கண்டு நிகழ்ந்த நெறியற்ற வினையைத் திருத்துமாறு வேண்டிக்கொள்வர். நம் பிரதிநிதிகள் கூறும் மொழிகளை மாமன்னர் கவனிப்பார் என்று சபை நம்புகின்றது. அன்புடையீர்! கொடிய சினம் நன்மை பயக்காது. இந்த முடிவுக்கு உங்கள் உடன்பாடு கோருகின்றோம். அவையினர் பேசாமல் இருப்பதே உடன்பாடு தெரிவித்ததற்கு ஒப்பாகும்.'' சபை பேசாமல் இருந்தது. சிறிது நேரம் வரை நிறையமைதி குடிகொண்டிருந்தது. சபை தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது போலத் தென்பட்டது.

திடீரெனச் சபை மூலையில் குளிர்கால மேகத்திலே மின்னல் தோன்றுவதுபோல ஓரொலி தோன்றியது. இவள் மாமாயை பைரவி அம்மையார். தலையிலிருந்து அடிவரைக் காவியாடை அணிந்திருந்தாள். முகம் வெகுளியால் மாலைப்புயலினின்றும் தோன்றும் நிலாவென ஒளி செய்தது. மலை நிலத்தில் ஊன்றிய முக்கண்ணபெருமான் சூலம்போல அவளது கைச்சூலம் குங்குமப் பூச்சொடும் திகழ்ந்தது. மாமாயை உரத்த கடுமையான குரலில் கூறினாள்: "பெருமான் அவைத் தலைவ! யான் சபை முன்னர் இரண்டொரு சொற்கள் கூற விரும்புகின்றேன். அகோர பைரவர் மாணவி மாமாயை நான். எனக்கு இசைவு தரவேண்டும்.'' சபைத் தலைவர் தயக்கங்கொண்டிருந்த பொழுது சபையினர் "அகோர பைரவர் வாழ்க! வாழ்க!'' என்று முழங்கி "அம்மையார் பேசுக! பேசுக!'' என்று கூவினர். அவையினர் தம் கருத்து நோக்கி "தாயே! காலம் கேடு பயக்கும் நிலையில் உள்ளது; ஆதலின் அவையினர் காலத்திற்கேற்ற அறிவுரை கேட்க ஒருப்பட்டுள்ளனர், பேசுக!'' மாமாயை கடுமையான குரலில் பேசத் தொடங்கினாள்: "பெருமக்களே! நான் பெருமான் அகோர பைரவர் மாணவி மாமாயை. என் குரு பெருமானுக்கு இழிவு ஏற்பட்டது என்ற காரணத்தால் இவள்

வெகுண்டாள் எனக் கருதற்க. அவதூதர் பெருமையிழிவு களுக்கு அப்பாற்பட்டவர். அவரை இழிவுபடுத்துவோனுக்கே இழிவுண்டாகும். ஆதலில் அவருக்கேற்பட்ட இழிவினுல் சினந்து பேசுகின்றேன் எனக் கொள்ளற்க. அகோர பைரவர் சிவபெருமானின் திருவடிவமானவர். பெருமான் விரதிவச்சிர நும் நீடுழியள் சுசரிதையும் குற்றமற்றவர் என்பதை உங்களிடம் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆனுல் மாமன்னவனிடம் இவர் களைப் பற்றி வேண்டுகோள் விடுக்கும் முடிவினை நான் எதிர்க் கின்றேன். நான் துறவி. தன் விருப்பிலேயே துன்பவழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். சாவினைக் கண்டு அஞ்சுபவ ளல்லள். தாங்கள் என் கழுத்தைத் திருகி எறியலாம்; ஆனுல் உண்மையைக் கூறுவதினின்றும் என்னைத் தடுக்க முடியாது. அடிகள் பருவு சர்மாவின் திருமுகச் சாரம் உணர்ந்திருந்தால் நீங்கள் அந்த முடிபுக்கு வந்திருக்கமாட்டீர் என்பது வெள்ளிடை மலை. அந்தத் திருமுகம் ஆண்மை அற்ற பிரசாரம். பாரத வடபகுதியில் உறையும் அந்தணர் சமணர் முதியோர் குழந்தை கள் மாதர் சிறுமியர் மருமக்கள் வலிமை பொருந்திய ஒரு மாமன்னவன் தன் புகலிடமின்றிக் காப்பாற்றப் பெருர் என்பது தங்கள் கருத்து. என்ன, வடபாரத ஆயிரமாயிர இளைஞர்கள் கையில் வளையல் அணிந்திருக்கின்றனரா, என்ன? அவர்கள் அந்தணர் சமணர் முதியோர் குழந்தைகள் இன்னோரன்ன பிற வலியற்ருரைக் காக்கத் தத்தம் உயிரையும் கொடையாக வழங்க மாட்டார்களா, என்ன? இந்நாட்டுப் பெருமக்கள் சொந்தமாகக் காப்புக்கழகங்கள் அமைக்கும் வல்லமை அற்றவர்களா? புறப்படை யெடுப்புச் செய்தி ஒருபால் இருக்கட்டும்; அதே வடபாரதத்தில் பல்லாயிரம் அழகிய இள நங்கையர் விற்கப்பட்டும் வாங்கப்பட்டும் வரவில்லையா? சொல்லுக! என்ன? அரசர்கள், படைத்தலைவர்கள், குறுமன்னர்கள் முதலானோர்தம் சிறுமியர் இழந்தால்தான் கேடு என நினைத்திருக்கின்றீர்களா? உங்கள் நாட்டில் கைப்பற்றப் பெற்றவரும் இழிவுறுத்தப்பெற்றவரும் வன்மையாகக் கற்பழிக்கப்பெற்றவரும் ஆகிய பல்லாயிர நங்கையர் உள்ளனர். இழிவு செய்யப்பெற்றவரில் யானும் ஒருத்தியே. கற்பழித்தல், உடன்படாத நங்கையரை வன்மை யோடும் கைப்பற்றுதல், உடன்பாடின்றி மணத்தல் முதலிய இழிவுடைய செயல்கள் மன்னர்கள் குறுமன்னர்கள்தம் மாதரில்லங்களிலேயே நடைபெறுகின்றன என்ற உண்மையை அறிவீர்களா? இப்போது மன்னர் மன்னவன் அரச அவையில்

சாமரந்தாங்கும் நங்கையரும் குண்டிகை ஏந்துகின்ற அணங்குகளும் இப்படி உடன்பாடின்றிக் கைப்பெற்றப்பட்ட பேறிழந்த மாதர்களே என்பதை உணர்ந்தீரா? அரசருக்கும் அரசர்க்கரசருக்கும் குற்றேவல் புரியும் பணிப்பெண்டிரெல்லாம் விலேக்கு வாங்கப்பெற்ற நற்குடி மகளிரே. பேறிழந்த இப்பெண்மக்களுக்குத் தந்தையரில்லேயா? மன்னர்மன்னர்கள் இப்பெண்கள் மீது கொள்ளும் நட்பினும் அவர்கள் தம் தாய்தந்தையரின் அன்பு பெரியதல்லவா? பெருமக்களே! இதனினும் இழிவு வேறென்ன? இத்தகைய மன்னர்கள் முன் புலவர்களும் நகரப் பெருமக்களும் கையேந்தி நிற்கின்றனரே! மன்னர் மன்னன் தங்கள் வேண்டுகோளே மறுத்துவிட்டால் என்ன செய்யப் போகின்றீர்? மன்னர் மன்னவன் ஹர்ஷவர்த்தனன், தான் தூயவனுயிருந்தும் பிற பெண்டிரைக் களவாடிக் கற்பழிக்கும் கயவர் குறுமன்னர்களுக்குப் புகலிடம் அளித்திருக்கின்ருன். பெருமக்களே! என் சொல் பொய்யாக இருப்பின் இதோ இந்த என் சூலத்தாலேயே என்னேத் துண்டு துண்டாக்கி விடுங்கள்.'' இவ்வளவு கூறிச் சற்றுப் பேசாமல் சபையினரை நோக்கிஞள். அவள் கண்களினின்றும் நெருப்புப்பொறி பறந்தது. சபை இமைகொட்டாது அவளேப் பார்த்துக் கொண்டிருந்தது. பெண் சிங்கம் போன்று கர்ச்சனே புரிந்தவளாய்க் கூறிஞள். '“சாகா வரம்பெற்ற மக்களே! சாவுக்கஞ்சுதல் மாயை! அரசனுக்கு அஞ்சுதல் வலிமையற்ருேரது கோழைத்தனம். குடிமக்களே அரசனேப் படைத்தனர். கட்டுப்பாட்டோடு காட்டு மாந்தரை எதிர்த்து நில்லுங்கள். கடவுள் மகன் என்ற பெயர் பெற்ருனேயும் மன்னர் மன்னனேயும் எதிர்நோக்கும் இழிவினே விட்டொழிக. பாரதத்தின் வடபகுதி முழுமையும் உங்கள் கையில் உள்ளது. சாகா மக்களே! பெருமான் விரதி வச்சிரரையும் நீடுழியள் சுயசரிதையையும் சிறை செய்தல் ஆயிரம் ஆயிரம் அந்தணரையும் பௌத்தரையும் காப்பாற்றுதற்காக ஏற்படவில்லே. மாமன்னவன் அல்லது அவனே அண்டிவாழும் ஒரு குறுமன்னவனது மானங்காக்கவே ஏற்பட்டது. இது முதல் நெறிக்கேடு அன்று, கடைசி நெறிக்கேடும் ஆக இருக்காது. இது அடக்க முடியாத செல்வச் செருக்கின் விளேவாகும். இதற்கு நெறி வழங்க வேண்டுமெனத் தொழுதல் வீணுகும். சாகாத வானவர்தம் மக்களே! தொழுகையால், வேண்டுதலால் அறக்காப்பு ஏற்படாது; அறநூல்மொழிகளே ஆராய்வதால் ஏற்படாது; தன்னேயே, தன்னுயிரையே கொடையாக வழங்குவதால் ஏற்

படும். நெறிக்கு உயிர்விடக் கற்றுக்கொள்க; உண்மைக்கு உயிர் வழங்கத் தெரிந்துகொள்க; அறத்திற்கு உயிரளிக்க முன்வாருங் கள், பெருமக்களே? சாவிற்கஞ்சுதல் மடமை.''

உடனே அவையிலிருந்தும் அனைவோரும் ஒரே குரலில் முழங்கினர். "சாவிற்கஞ்சுதல் மடமை!'' அம்முழக்கம் தாணேசர்புரியில் கற்சுவர்களையும் துளைத்துக் கொண்டு புற இடங்களிலும் சென்று தாக்கியது. நொடிதோறும் மாந்தர் கூட்டம் பெருகியவாறிருந்தது; மேன்மேலும் வானம் பிளக்கும் வகையில் "சாவுக்கஞ்சுதல் மடமை'' என்று முழங்கிக்கொண் டிருந்தனர். மேன்மேலும் பெருகும் மாந்தர் கூட்டத்தைக் கொள்ள முடியவில்லை அவைக்கூடம். மாமாயை திரிசூலம் எடுத்து உயர்த்தி மாந்தரைச் சாந்தப்படுத்த விரும்பினாள். ஆனால் அண்டத்தையும் பிளக்கும் மக்கள் குரல் முன்னர் அவள் சொல் கேட்கப்பெறவில்லை. கூட்டத்தினர் அரண்மனைகள் அர சாட்சிக் கொடித்தூண்கள் முதலியவற்றை இடித்துப் பிடுங்கித் தள்ளப் புறப்பட்டனர். சபையிலே திரிசூலமேந்தி உமாதேவியே வந்து காட்சியளித்தார் என்ற கூற்று எங்கும் பரவிற்று. நெறி யற்ற கொடுங்கோல் மன்னவனை வீழ்த்துக என்று உமாதேவியே கூறினார் என்ற செய்தி எங்கணும் பரவிற்று. மாமாயையது செய்தி எவ்வாறு தவறாகப் புரிந்துகொள்ளப் பெற்றது! ஆயிரக் கணக்கான மாந்தர் ஒரே குரலில் இருந்திருந்து முழங்கினர்: "சாவுக்கஞ்சுதல் மடமை!'' அவையில் தலைமை வகித்த முதிய பெருமான் இரக்கமான குரலில் மாமாயையை வேண்டிக்கொண் டார்: "சீமாட்டி! தலைவி! தாங்கள் கூறிய மொழிகள் உண்மையே. ஆனால் சினமடைந்த நகரமாந்தர் தாங்கள் கூறிய பொருளை ஏற்கத் தகுதியற்றவர். தாங்கள் இவர்களிடையே அமைதியை உண்டாக்குவீராக. அடிகள் பருவுசர்மாவின் செய்தி சூழ்நிலைக் கேற்ப விடுக்கப்பெற்றது. நிலைபெற்ற அறத்தின் அடிப்படை கொண்டதல்ல. ஆனால் அரசாட்சியை எதிர்த்து மக்கள் வலிமை யைத் திரட்டுவதன் முன்னம் காட்டுமாந்தர்க் குழாங்கள் பாரதத் திற்குள் புகுந்து எரித்துச் சாம்பலாக்கிவிடும் என்ற கூற்று உண்மையல்லவா? காலமல்லாக் காலத்தில் மக்கள் குழாத் திடை மாறான கருத்து உண்டாக்குவது தக்கதல்ல.''

மாமாயை கூட்டத்தைக் கிழித்தவாறு சென்று ஒருயர்ந்த மேடை மீதேறி நின்றாள். மின்னல் ஒளிபோல் அவள் ஒளி வீசினாள். அவளைப் பார்த்ததும் மாந்தர் அனைவோரும் வெற்றி முழக்கம் செய்தனர். திரிசூலத்தை உயர்த்திக் கட்டளைக் குரலில்

கூறினள்: "சாகாப் பண்பினரே! அமைதியுறுக!" மாந்த ரெல்லோரும் மந்திர மயக்கமுற்றவரென ஓய்ந்த எந்திரமென முழுவமைதி பூண்டனர். மாமாயை மீண்டும் மொழிந்தாள்: "சாகாமக்களே! கட்டுப்பாட்டுடன்—அடக்கத்துடன் வினை யாற்றுக. உங்கள் நகரப் பெருமக்கள் புலவர் பெருமக்கள் மாமன்னவரிடம் நெறிகோரி வேண்டுகோள் விடுக்கப்போகின் றனர். இன்று அவர்களுக்கு வாய்ப்பளிப்பீராக. ஆனல் இக் குறித்த நெறி பெறுவதால் இந்தத் தீய நெறிமுறை அடியோடு ஒழிந்துவிடாது; சமூக நெறிகேடு அறவே ஒழிந்தால் மட்டுமே தொல்லைகள் நீங்கும் என்பதை உள்ளத்திருத்துக. தடுத்தற் கரிய காட்டுமாந்தரினங்களைத் தடுத்து நிறுத்தக் கூலிப்படை களால் முடியாது. அந்தணன்தானென்ன! கடை மரபினன்தா னென்ன! தத்தம் மாதர் பெண்டிர் குழந்தைகள் முதலானேரைக் காக்கும் பொறுப்பேற்கத் தலைநிற்றல் வேண்டும். நான் எதிர் காலத்தை முற்கூட்டிக் காண்கின்றேன். வானவர்தம் பெருமக் களே! மிகுந்த கேடும் கோளும் நிறைந்த காலமிது. அரசர்களை, இராசபுத்திரர்களை, கடவுள் மகன் என்ற தனிப்பெயர் பெற்றுனை நம்பி இருந்தால் விளைவு அடிமைத்தனமே. குடிமக்களிடையே சாவுக்கு அச்சம் பரவியுள்ளது. இது நன்மையன்று. வடபார தத்தைக் காக்க விரும்பினல் உயிரையும் வழங்கப் பின்வாங்க லாகாது. அறத்திற்காக உயிர்க்கொடை வழங்குதல் எந்தத் தனி மரபிற்கும் தனியுடைமையல்ல, அஃது மாந்தரனைவருக்கும் உரியது. சாகாமரபினரே! நெறி வாய்க்கும் இடத்தில் நெருங்கி அதனைப் பற்றுக. நெறி பெறுதல் மாந்தரது பிறப்புரிமை, பெரு திருப்பது அறத்தின் பகையானது என்ற உண்மையை நீங்கள் உணரவில்லையேல் பாரதத்தின் எதிர்காலம் இருளுறும். சாகா இனமக்களே! பண்பாடற்ற காட்டுமாந்தர் படையெடுப்பு இன்று முதன்முறையாக நிகழவில்லை; அது கடைசி முறையாகவும் இருக்கப்போவதில்லை. இன்று உங்களைக் காக்கத் திருவளர் ஹர்ஷவர்த்தனனையோ துவரமிலிந்திரனையோ நம்பி இருப்பீ ராகில் ஒருவேளை கேடு ஒத்திப் போடப்படலாம், ஆனல் நாளை தவிர்க்கப்பெறுமா? ஹர்ஷதேவனும் துவரமிலிந்திரனும் என்றும் நிலைபெற்று வாழ்பவரல்லர். ஆனல் குடிமக்களே என்றும் நிலைபெற்று வாழ்பவர்! பெருமக்களே! நான் எதிர்காலத்தை முற்கூட்டியே உணர்கின்றேன். அரசர், குறுநிலத்தரசர், அரசர்க்கரசர் தத்தம் தன்னலத்திற்கு அடிமை யானவர்கள். குடிமக்கள் கோழைகளாகிக் கொண்டு வரு

கின்றனர். அரசன் குருடன், குடிமக்கள் குருடர், புலவர் குருடர். ஆதலின் அறவாழ்வில் தடையேற்படுகின்றது. நான் மேடையேறிக் கூறுகின்றேன்; இது நன்னலமுடைத்தன்று. தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்க. அறத்தில் உறுதிகொள்க. நெறிக்கு உயிர்க் கொடை வழங்குக. அந்தணன் முதல் கடை மரபினன்வரை ஒரே மரபினனாகத் திரளுக. பாறைபோல உடைபடாது உறுதியான ஒற்றுமையாக உறைக. இதுவே தப்பிப் பிழைப்பதற்கு ஒரே வழி. நீடூழிமக்களே! இராசபுத்திரர்தம் கூலிப்படைகளை நம்பி இருத்தலைக் கைவிடுக. சாவுக்கஞ்சுதல் மாயை, மடமையாகும்!'' கூட்டம் மந்திர வயப்பட்டதுபோலக் கேட்டுக்கொண்டிருந்தது. திடீரென மாமாயை அங்கிருந்தும் கிளம்பிப் போய்விட்டாள். எங்கு மறைந்தாளோ யாரும் அறியார். திகைத்த மாந்தர் ஒன்றும் புரிந்திலர். ஏதோ எதிர்பாராதது நிகழவிருக்கின்றதென நினைத்தனர்.

நான் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே நிகழ்ச்சிக் கோவைகள் விறுவிறுவென உண்டாயின. இதற்கிடையே மேற்பால் வானம் செம்மையும் மஞ்சளும் ஆக நிறமாறியவாறிருந்தது. நடுவானத்திருந்தும் குழைத்த மைபோல இருள் கவ்விக் கொண்டிருந்தது. இப்போது கீழ்வானத்தே கதிர் தோன்று குன்றின்மீது திங்கள் ஆழ்ந்த வெள்ளி ஒளி வீசாநின்றது. ஏதோ இனம் அறியாத குற்றத்திற்காகப் பெருமான் விரதிவச்சிரனும் சுசரிதையும் சிறைப்பட்டனர் என்று எண்ணினேன்; அவர் செய்த குற்றமென்ன? இப்பொருளைத் தொடாமல் முன்னமே பேசப்பெற்ற பொருள்மீது மாமாயை இத்துணை பெரிய சொற்பொழிவு ஏன் நிகழ்த்தினாள்? இந்த நெருக்கடியில் எனது கடமை ஏதேனும் உண்டோ? குதிரைப் படைஞர் மக்கள் நடமாட்டத்தை விழிப்போடும் கவனித்து வந்தனர். எங்கேனும் குழப்பம் தோன்றினால் தம் வேல்களைச் செலுத்தி அடக்கக் காத்திருந்தனர். மாமாயையின் திடீர் தோற்றத்தால் திடீர் மறைவால் மாந்தர் கூட்டம் திகைத்து நின்றுவிட்டது. யானும் இன்னது செய்வதென்பதை உணராது நின்றுவிட்டேன். நிலாவொளி எங்கும் பரவிவிட்டது. நெருக்கடியிலும் திங்களழகு சுவைக்கும் ஆவலை விட்டேனில்லை. பெரிய மரங்கள் மீது வெள்ளியை உருக்கிவிட்டாற் போன்ற வெள்ளொளி பரவிற்று. வான முழுவதும் காதலன் கூட்டத்தைப் பெற்ற காதலிபோல மகிழ்ச்சியுற்றிருந்தது. வானம் வெள்ளிக் கம்பிகளால் தாங்கப்பெற்றது போன்ற அழகைப் பெற்றிருந்தது. இதே நேரம் என்னை யாரோ

பிடித்து உலுக்குவது போன்று உணர்ந்தேன். அவன் தாவகனும் புலவனே. குறும்புத்தனம் செறிந்த நகைச்சுவையோடு காணப்பெற்றான். சந்தனக் குழம்பு அப்பிய மார்பில் மல்லிகை மாலை அழகைப் பெற்றது. தோள் தொடக்கத்தில் மகிழமாலை மகிழ்ச்சி பெற்றிருந்தது. மணநெய் இட்டு வாரி முடித்த மயிர் முடி முனையில் சாதிமல்லிக் குச்சம் சொருகப் பெற்றிருந்தது. வெற்றிலை மெல்லுவதில் சற்றும் இரக்கமற்றவன். வாய்நிறைய வெற்றிலை அடைபட்டிருந்தும் சொல்லொழுக்குச் சிறிதும் நிற்கவில்லை. வாயும் கீழ் இதழும் மேலே நோக்கப் பேசியபோதும் மேல் நோக்கிப் பொழியும் பீச்சாங்குழல் போலக் கவிதைப் பொழிவு பொழிந்து கொண்டிருந்தது. என் தோளைப்பற்றி உலுக்கி வெற்றிலைச் செம்மையும் நீரும் கலந்த சொற்கள் தூவினான்: "திங்களழகை நுகர்கின்றனையோ பெரும? யாரைப் பற்றியாவது நினைவுண்டாயிற்றா என்ன?" அவன் எள்ளி நகைத்ததால் திகைத்து நின்றேன்; எனக்கு இளவரசியின் நினைவு வந்துவிட்டது. எனினும் தாவகன் பேச்சு நிறுத்தத் தெரியாதவன், கடகடவெனப் பேசியவாறிருந்தான். "உண்மையைத் தெரிவிக்கட்டுமா? கீழ்ப்பால் வானத்தே கதிரவன் தோன்று குன்றின்மீது இரவு என்னும் மாதின் கணவனாகிய திங்களைக் காணும்போது பேறிழந்த ஓர் காதலியின் நினைவு வருகிறது; அவள் உள்ளத்திலே உறைகின்ற காதலன் பிரிந்துவிட்டமையால் பிரிவுத்துயரான் அவள் முகம் வெளுத்து விட்டது.[1] அத்தகைய காதலியின் நினைவு வருகின்றது. நான் நகைச்சுவை நுகர்ந்தவனாய் வினவினேன்: "நுகர்ந்ததைக் கூறுகின்றனையா? கற்பனையா? தோழ! மகிழ்ச்சி வெறியோடும் மாற்றந் தந்தான்: "நுகர்ச்சி உன்னுடையது, கற்பனை என்னுடையது; என் தோழா! இவ்வளவு பங்காவது எனக்குக் கிட்டாதா? நான் உனக்கு அப்பொருளையும் கற்றுக் கொடுக்கின்றேன். உன்னைப் பிரிந்த காதலியைக் காணும்போது அவளிடம் பேச வேண்டியதையும் கற்றுக்கொடுக்கின்றேன் குருவே! மிகமிகப்

---

[1] உதயகிரி தடாந்தரியமிதம் ப்ராசி சூசயதி திங்நிசாநாதம்,
பரிபாண்டுநா முகேன ப்ரியமிவஹ்ருதஸ்திதம் ரமணீ
இரத்தினாவளி (2-25)

[கீழ்ப்பால் உதயகிரியிலே திங்கள் தோன்றுவது தன்னுள்ளத்துறைகின்ற காதலன் பிரிவினால் நொந்த காதலியின் முகம்போல கீழ்வானம் வெளுத்துத் தோன்றியது.]

பெரியார்களுக்குங் கற்றுக் கொடுத்திருக்கின்றேன். 'மாமன்னன்கூட இத்திறத்தில் என் மாணக்கன்.'' சுவை மிக்கவனகக் கூறினேன் : ''சொல்லிக் கொடுக்கவும் குருவே!'' தாவகன் சாற்றினன் : ''விரைவெதற்கு? நாளைக்குக் கற்றுக் கொள்க. இப்போது குமார கிருஷ்ணவர்த்தனன் செய்தி தாங்கி உன்னைத் தேடி வந்தேன். உன்னைத் தெரிந்தவர்கள் எல்லாரும் நகர முழுவதிலும் தேட ஏவப்பெற்றனர். உன்னைத் தனக்குத் தெரியும் என்றும் உன்மீது அவளுக்கு மிக்க அக்கரை உண்டென்றும் சுசரிதை விவரித்தாள். நீ உடனே சிறைக்குள் சென்று அவளைக் கண்டு அரசாட்சிக்குச் சார்புடையவளாக்க வேண்டுமென்பது குமார கிருஷ்ணவர்த்தனனது கட்டளை. நீ தடையின்றிச் சிறைக்குள் போய்வர ஏற்பாடாகிவிட்டது. விரைந்து செல்க. இன்றேல் மாபெருங்கேடு நிகழ்ந்துவிடும்.''

தாவகன் நினைக்கவும் நேரம் அளிக்கவில்லை. தொலைவிலே பறை முழங்கிற்று. அதன் நோக்கம் விளக்கியவனய்க் கூறினன் : ''குமாரகிருஷ்ணவர்த்தனன் அமைதி அறிக்கை விடுக்கின்றான். அகோர பைரவரும் வெங்கடேச பட்டரும் திருப்பிக் கொண்டு வரப்பட்டனர். இதுபற்றிக் குமாரன், மாமன்னன் ஹர்ஷதேவன், தலைமை நீதிபதி மூவரிடையே சூழ்வினை நடைபெற்றது.'' நான் வினவினேன் : ''எந்தச் செயல் பற்றிக் கூட்டுச் சூழ்வினை நடைபெற்றது?'' தாவகன் முகம் சுளுக்கியவனய் மாற்றந் தந்தான் : ''எந்தச் செயலா? அறிவுப் பஞ்சம் ஆயிற்று; பகுத்தறிவு பறிபோயிற்று. இந்த விரதிவச்சிரன் ஒருநாள் பௌத்த துறவியாக இருந்தான். இந்தப் பெருமானுக்கு என்ன தோன்றியதோ; அகோர பைரவர் வெங்கடேசபட்டன் இவர்களது பிடியில் சிக்கிக்கொண்டான். இந்த வெங்கடேசபட்டன் ஒரு வியப்பான காமுகன் போலக் காண்கின்றான்; தோழரே! அறம் மறம் பற்றி ஒன்றும் அறியேன். அகோர பைரவரும் வெங்கடேச பட்டனும் சேர்ந்து விரதிவச்சிரனையும் சுசரிதையையும் ஒரு புதிய அறநெறியில் ஈடுபடுத்தினர்கள். இங்கொரு போலி பௌத்த பண்டிதன் வசுபூதி என்ற பேர்வழி உள்ளான்; அவனை மன்னர் மன்னவன் வீணக உயர்த்தி வைத்திருக்கின்றான். விரதிவச்சிரனது அறமாற்றத்தான் வசுபூதி வெகுண்டு தனது மாணக்கனகிய தனதத்த வணிகனைத் தூண்டி விரதிவச்சிரன் மீது ஒரு பொய் வழக்கு உருவாக்கிவிட்டான். விரதியின் தந்தை தன்னிடம் ஆயிரம் பொன் கடன்வாங்கி இறந்துவிட்டான் எனத் தனதத்தன் கூறுகின்றான். துறவியாக இருந்த வரை விரதி

வச்சிரன்மீது வழக்குத் தொடர முடியாது. இப்போது சுசரிதை யோடும் விரதிவச்சிரன் இல்லறத்தில் பிணைக்கப்பெற்றமையால் வட்டியோடு கடனைத் தீர்க்குமாறு வற்புறுத்தப்பெற்றான். சுருக்க மாகக் கூறினேன். இதுவே நிகழ்ந்தது. இதுபற்றிச் செய்யத் தக்கதைச் செய்க. நான் உன்னைச் சிறைவாயில் வரைக் கொண்டு விட்டு வேறு இடம் செல்லவேண்டும்.'' இப்போது நிகழ்ச்சி களது பொருள் சற்று விளங்கிற்று. மேலும் புரிந்துகொள்ள வினவினேன்: ''இன்று மாமாயை என்ன கேடு நிகழ்த்தி விட்டாள் தோழரே!'' தாவகன் நகைத்து நவின்றான்: ''இது தலைநகரம்; இன்னும் வேண்டியது பார்க்கப்போகிறாய். மாமாயையை இங்குச் சிலரே அறிவார். எனக்கு அவளைக் குறித்துச் சில செய்திகள் தெரியும். அவளும் காலஞ்சென்ற கிரகவர்மனின் ஒரு மனைவியாவாள். இப்போது கைமைநோன்பு பூண்டுள்ள மாவரசித்திருவின் ஓர்ப்படி ஆவாள்.'' நான் தூங்கித் திடீரென விழித்தவன்போல் திடுக்கிட்டேன்: ''ஓர்ப் படியா!'' என்று அலறினேன். தாவகன் அதட்டிக் கூறினான்: ''ஏன் கூச்சலிடுகின்றாய்? இந்நகரில் அரசிகள் தம் ஓர்ப்படி களின் காடே உள்ளது, காடு!'' நான் காதோடு காது வைத்து உரைத்தேன்: ''என்ன, மாமன்னவனுக்கும் பல மனைவியர்......'' உடனே தாவகன் தன் கைகளைக் கொண்டு காதுகளை அடைத்துச் சொன்னான்: ''தீவினை அகல்க! தீவினை அகல்க! பெண் திறத்து மாமன்னவன் நடத்தை பெருமைவாய்ந்தது. இத்துறை யில் ஹர்ஷதேவன் தூய்மையானவன். இந்நகரில் மூவரே தூய்மையானவர். ஒருவன் ஹர்ஷதேவன், ஒருவர் கைம்மை நோன்பினர் அரசித்திரு.........'' இவ்வளவு கூறித் தாவகன் ஏதோ சொல்ல மறந்துவிட்டான் போல நின்றுவிட்டான். நான் நினைவூட்டினேன்: ''பேறுபெற்ற அந்த மூன்றாம் ஆள் யார்?'' தாவகன் மிகுந்த இறுமாப்போடும் செப்பினான்: ''மாகவிஞன் தாவகன்!'' இவ்வாறு விளம்பி விழுந்து விழுந்து சிரித்தான். நானும் சிரித்தேன். தாவகன் வழிநடந்தபோது ஏதோ சொல்லிக் கொண்டே போனான். நான் மாமாயை பற்றி நினைத்தவனாகச் சென்றதால் ஒன்றும் காதில் விழவில்லை. அவள் அரசித்திருவின் ஓர்ப்படியா? நாட்டில் மாசுறுத்தப் பெற்றவரும் மானமிழந்த வரும் ஆகிய ஆயிரமாயிரம் அரிவையரில் தானும் ஒருத்தியே என்றாளே. இதில் என்ன மறை மறைந்துளதோ? என்ன மன நோயோ அரசியில் இருந்தும் துறவியாக்கியது அவளை? ஊழின் எத்தகைய குறும்பு இது? மாமாயை வலிமை பொருந்திய

மௌக்கரி குல அரசித்திருவாக இருந்தாள். இந்தச் சாய்கிற வயதிலும் அவள் முகத்தில் எத்துணை ஒளி! எத்துணை பொலிவு! இன்று மாமாயை கூறியன பல்லாண்டுகளாகத் திரண்ட கடுமையான நோய்களின் தீப்பொறிகள். இன்னும் அவளிடத்தே வீரப் பெண் சிங்கத்தின் உள்ளமும் ஆற்றலும் இருக்கின்றன! தாவகன், எத்துணை வியப்பான ஆடவன்! எத்தகைய புலவன்! எத்துணை பெரிய செய்தியை விளையாட்டாகக் கூறிவிட்டான்! அவள் வீழ்ச்சியுற்றவள் என்று பொருள் கொள்ளுமாறும் வீழ்ச்சியுருதவள் என்று பொருள் கொள்ளுமாறும் சொல்லிவிட்டான். இவ்வளவுங் கூறிய தாவகன் முகத்தில் ஒரு மாறுதலும் இல்லை, வியப்பினும் வியப்பே!

சிறைச் சாலை வாயிலை அடைந்ததும் தாவகன் கூறினன்: "பார், தோழ! வாயில் திறந்துள்ளது. குமாரன் கிருஷ்ணவர்த்தனனது கட்டளையை நிறைவேற்றுக." அங்கிருந்து தன் வழி பற்றினன். கருங்கல்லால் கட்டிய கெட்டியான கட்டடம்; சிறை உயரம் குறைவு. மிகுந்த தொல்லைப்பட்டே நேராக நிமிர்ந்து நிற்கமுடியும். முழுக்கட்டடமும் ஒரு குகைபோன்றிருந்தது. அதன் வாயிலில் ஓரரசமரம் சிறையின் அச்சத் தோற்றத்தை இன்னும் மிகச் செய்தது. காவலாளிகள் முதலில் என் பெயரை வினவினர்கள். கேட்டதும் உடனே வாயில் திறந்துவிட்டனர். உள்ளே நுழைந்து ஒரு பரந்த முற்றத்தை அடைந்தேன். அந்த முற்றத்தின் நாற்பாலும் குகைகள் போன்ற அறைகள் இருந்தன. அவற்றில் ஒன்றன்முன் என்னை அழைத்துச் சென்றான் ஒருவன். அதன் கதவு திறந்ததும் அச்சிறு அறை நிலவின் ஒளியைப் பெற்றது. அதற்குள் காற்றோ ஒளியோ நுழைவதற்கு வேறு வழி இல்லை. தளம் பாறைக்கல்லால் வேயப்பட்டிருந்தது; ஆனால் கெட்ட நாற்றம் பொறுக்க முடியாததாக இருந்தது. அதற்குள் தான் காற்றில்லாத பொழுது நேராக எரியும் விளக்குத் தழல் போலப் பதுமாசனம் இட்டுச் சுசரிதை அமர்ந்திருந்தாள். கதவு திறந்ததால் அவள் ஒருமுக நிலை சற்றுக் குறையப் பெற்றாள். தன் கழுத்தைச் சிறிது வளைத்து என்னைப் பார்த்தாள். காவலன் என்னை அறிமுகம் செய்துவைத்தான். அவள் கண்கள் வியப்பால் விரிந்தன. நொடிப்பொழுதில் அவளது முகத்தே உவகை ஒளி மிளிர்ந்தது. ஓரழகுப் பொழிவு தரைத் தள முழுவதிலும் பரவியது. அவள் கைகூப்ப முயன்றாள். கையும் கால்களும் விலங்கு பூட்டப்பெற்றிருந்தன. அவளது உள்ளங்கரைந்து எனதுள்ளத்தை முழுகடித்தது. துயர் நிறைந்த அழகு அவள்

முகத்தே! புன்முறுவல் அவள் இதழ்களில் தவழ்ந்தது. ஒன்றும் செய்ய முடியாமையால் கண்கள் கீழ்நோக்கின; கண்ணீர் தோன்றியும் வழியவில்லை. கண்ணீர் காட்டலாகாதென்ற அச்சத்தால் கடைக்கண்ணினுல் என்னை நோக்கினுள். குழப்பமுற்ற மயிர்முடி தளர்ந்து தோள்களைக் கவித்தன; அவற்றைத் திருத்தப்பெருமுயற்சி செய்தாள். தலைவகிட்டிற்கு அழகு வழங்கிய புடவை மூடி இப்போது முதுகில் படிந்திருந்தது. கை விலங்கால் அதனை வாரித்தலைமேல் இட முடியவில்லை. இந்தத் துயர்நிலை கண்ட காவலாளியினது மனமும் இரங்கிற்று. ஒரு முதியவளை அழைத்துத் தலைவகிடு மூடச் செய்தான்: "மன்னிக்க வேண்டும் பெரும! விலங்கு அகற்ற எனக்குரிமை இல்லை, இது சிறைநெறி" என்று வருத்தமுடன் காவலன் சொன்னுன். சுசரிதை மிக முயன்று முறுவலித்து மொழிந்தாள்: "இடமில்லா இடத்தே பெருமானுக்கு வணக்கம் செய்யும் இரக்கநிலை ஏற்பட்டது. குற்றம் பொறுத்தருள்க. இது திருமாலின் அருட்பேறு." ஒரு நொடிப் பொழுதிற்குள் அவள் முகம் மங்கிற்று; ஆனல் உடனே தன்னைச் செப்பம் செய்துகொண்டு செப்பினுள்: "இதனுல் நாராயணனுக்கு மகிழ்ச்சியுண்டானுல் இதுவே என் கடமையுமாகும்." யாவற்றையும் தோற்றனள் எனப் பேசாதிருந்தாள். கீழிதழ் இருந்திருந்து தெரியாத ஆளிடம் தெரியாத மொழியில் பேசுவது போலத் துடிக்கத் தொடங்கிற்று. என் உள்ளமே ஆயிரக்கணக்கான ஒழுக்குக்களில் பொழிந்துவிடும் போலிருந்தது. பாணபட்டன் உன் துயரெல்லாம் ஏற்றுக் கொள்ளத் தலைநிற்கின்ருன் எனத் தேவீ, எப்படிக் கூறுவேன்? அந்தோ, இப்படியும் நேரலாமா? எந்த அரசியல் கோணல் புத்தி இந்தத் தாமரை மலருக்கு விலங்கிட்டதோ? எந்தப் பாவபுத்தி இந்த வெண்ணெய் உருண்டையை நாணல் ஈர்க்குகளால் குத்தித் துன்புறுத்தியதோ! எந்த இழிவுயிர் மல்லி மாலையை நெருப்பில் வீசி எறிந்ததோ! உனது துயர் முழுவதையும் ஏற்ருல் அன்றி என் வாழ்க்கை பயனடையாது என்று எங்ஙனம் கூறுவேன் தேவீ! இதனில் பாணபட்டனுக்கு என்ன வலிமை இருக்கப் போகிறது? ஆனுல் சுசரிதை கலங்காது காணப்பாட்டாள். சிறைத் துன்பமும் நாராயணனது அருட்பேறெனக் கருதி ஏற்றுக் கொண்டாள்.

அப்போது நிலவு வான உச்சியில் வந்து விட்டது. மாவராகன் பூமாதேவியைத் தன் கோட்டில் இருத்திப் பாற்கடலினின்றும் வெளியேறியதுபோன்ற காட்சி கண்டேன். பாற்

கடலில் ஓரன்னம் நீந்துவதுபோல நிலவில் சுசரிதை சிறையறையில் காணப்பெற்ருள். கைலாயமலை உச்சியில் அமர்ந்திருக்கும் பார்வதிபோல வெள்ளொளி நடுவே இருந்தாள். நான் வருத்தமுடன் மொழிந்தேன் : "தேவீ ! அடக்கமின்மை பொறுத்தருள்க. உங்களுக்கு நேர்ந்ததை முதலில் இருந்தும் இறுதிவரை இயம்புக; என்ருல் ஏதேனும் நன்மையும் உமக்குண்டாகலாம்." வருந்து முகத்தில் மீண்டும் உவகை ஒளி பொலியக்கூறினுள் : "பெருமான், என்னை ஒரு பொருட்டுமின்றி வெட்கமுறச் செய்கின்றீர். என்னை அரசிபோல விளிப்பது அழகன்று. என் செயல்கள் எதுவும் மறைபொருளன்று. பாவம் புண்ணியம் அறம் மறம் ஏதேனும் என் வாயிலாக நிகழ்ந்தனவற்றை நாராயணனுக்கே ஒப்படைத்தேன். உலகம் யாவும் அவனுடையது. எதுவும் எனது வாழ்வில் மறைந்தில்லை. கட்டளை இடுக, என்ன கூறவேண்டும்?" நான் மறுமாற்றம் அளித்தேன் : "உமது வாழ்வில் இந்த விளைவு ஏன் ஏற்பட்டது? பெருமான் விரதிவச்சிரன் நடத்தையில் தங்களை ஏன் சிறைப்படுத்தினர்? இவற்றை அறிய ஆவலுடையேன்." அம்மையவள் நாணமுற்றுக் கீழ் நோக்கியவாறு மெதுவாக மொழிந்தாள்.

"எனில் பெரும! முதலில் இருந்தும் இறுதிவரை கேட்க விரும்புகின்றீர். கேளுங்கள். என் வரலாற்றை இடையில் இருந்தே தொடங்கவேண்டி யுள்ளது. குழந்தைப் பருவம் பற்றி நினைவில்லை. பெற்ருேர் நினைவுமில்லேன். போதிய இளமையிலே எனது திருமணத்தை என் பெற்ருேர்கள் முடித்துக் கடமை நிறைவேற்றிக் கொண்டனர். மாமனுர் இல்லத்தே மாமியாரை மட்டும் அறிவேன். நான் புக்ககம் புகுமுன்னரே மாமனுர் வானெய்தினுர். புக்ககம் கால்வைத்த சில நாட்களிலேயே என் கொழுநர் மீளாநெறி எய்தும் வழியில் முனைந்துவிட்டார்; துறவி ஆனுர். இந்நிகழ்ச்சிகள் நினைவில் இருக்காத அளவுக்கு இளம் பெண்ணுக இருந்தேன். மாமியார் தன் அன்பு முழுவதும் பொழிந்து என்னை வளர்த்தார். ஒருநாள் உண்மை அறியாமலேயே என்னைப்பற்றி நானே விழிப்போடும் நினைக்கத் தொடங்கிவிட்டேன். ஆண்டின் பருவங்களில் இளவேனில், இளவேனிலில் சித்திரைத் திங்கள், சித்திரைத் திங்களில் பொன் தளிர்க் குழாங்கள், பொன்தளிர்களிடையே மலரினம், மலரினத்திலே சுரும்பினம், சுரும்பினத்திலே உவகை வெறி அழைக்காமலேயே நுழைந்து விடுவதுபோல என் உடம்பில் இளமை அடியெடுத்து வைத்தது. நான் மாமி

யாருடன் தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டேன்; பல இடங்களில் சுற்றினேன், பல நகரங்களைக் கண்டேன், என்னுள்ளத்தினூடே ஒரு குறைபாட்டினுல் துயரத்தில் ஊசலாடினேன். தாணேசர்புரி என் மாமனரது பிறப்பிடம். என் மாமியாரும் தனது இறுதி வாழ்வினை அங்கேயே கழிக்கலானர். ஒருமுறை காசிக்குச் சென்ருேம். ஒரு நாள் காசிக்கருகே ஓரூர் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தோம். ஓரழகிய அந்தண இளைஞன் சொல் நயமும் வலிமையும் பொருந்திய வகையில் புராணம் வாசிப்பதைக் கண்டோம். அவனது கவர்ச்சி பொருந்திய சொன்முறை செவிக்கு இன்பந்தரும் வகையில் இருந்தது. சொல் பிரிவினை, அழகிய விரிவுரை எல்லாம் ஊரில் ஓர் அறக்கிளர்ச்சியைத் தூண்டிவிட்டன. யாமும் கதை கேட்கப்போனும். புராணம் முடிந்ததும் எனது கையை மாமியார் அந்த இளைஞனுக்குக் காட்டி வினவினுள், 'என் மகன் எப்போது திரும்புவான்' என. உண்மையைத் தங்களிடம் கூறுகின்றேன் பெரும! அன்று எனது இருப்பு, எனது வாழ்வு எல்லைகளை உடைத்துக்கொண்டு பொங்கிற்று; உடம்பு முழுவதிலும் மயிர் பொடித்தது. நாண அழுத்தத்தினுல் உள்ளங்கைகளில் வேர்வைத் துளிகள் கிளம்பின. என் உயிர் நிறைவுடைத்தன்று என்பதைத் தெளிவாக அன்றுணர்ந்தேன். எனது வாழ்வில் சிறந்தபேறு பெற்றும் நுகர வாய்ப்பில்லாக் குறைபாட்டினை உணர்ந்தேன். அந்த அந்தணன் வேர்வை நிறைந்த அங்கையினை மிக்க நேரம் பார்க்கவில்லை. புன்முறுவல் செய்து புகன்ருன்: 'நீ துண்டிக்க முடியாத மங்கலப் பேறு உடையவள், செல்வி!' அந்நாள் உள்ளத்தில் நம்பிக்கை எனும் மங்கிய ஒளி எழுந்தது. நான் உலகினின்றும் விடுபெற்ற பற்றற்ற பொருள் துண்டு அல்ல; நாற்பாலும் தடுத்தற்கரிய எதிர்ப்புக்கள் நடுவே வாழ்கின்றேன் என்று முதன்முதல் உணர்ந்தேன். நீங்கள் இதனை நம்புவீரா?''

தேவை இல்லா இந்த வினுவினது பொருளென்ன? பிறர் அவள் வரலாற்றினை நம்பவில்லை போலும் அல்லது அவளுக்கே என்மீது நம்பிக்கை இல்லைபோலும். ஆனுல் காசியில் அந்த முதியவளின் நினைவு வந்தது. அவள் தன் மருமகள் கையை எனக்குக் காட்டியது நினைவிற்கு வந்தது. அவள் தன் மகன் எப்போது வருவான் என வினவினுள். என்ன, அந்த இள நங்கையா சுசரிதை?

மீண்டும் கதையைத் தொடங்கினுள்: ''எனில் பெரும, அந்த அந்தண இளைஞன் கூறியது நிறைவேறியது. நான் துண்டிக்க

முடியாத மங்கலப் பேறுடையவளானேன். கன்னேசிக்கு மாமி யாருடன் திரும்பிக் கொண்டிருந்தேன். சித்திரைத் திங்கள். குளத்தில் புதிய தாமரை மலர்ந்திருந்தன. மாம்பூக் கொத்துக்கள் எனதுள்ளத்தைக் கவர்ந்தன. இளமை வெறியுற்ற நங்கையர் ஆம்பல் வாயினின்றும் கொப்புளித்த நீரால் மகிழ மரம் மலரத் தொடங்கிற்று; இளநங்கையரின் சிலம்பணிந்த இடது காலடி யால் மிதியுண்டு மலரத்தொடங்கிற்று. மாமரத்தின் பூங்கொத்துக் கள்மீது சுரும்பினங்கள் படையெடுக்கத் தொடங்கின. இடை யருது பொழியும் பூம்பொடிகளால் நிலம் அழகுபெற்றது. தேன் பருகி வெறிமிகுந்து வண்டுகள் கொடிகளென்னும் ஊஞ்சலில் ஊச லாடத் தொடங்கின. மாமலர்க் கொத்தினை மென்றுதின்று குரல் இனிமையுற்ற குயில்கள் இனிதாகப் பாடிக் காதலர் உள்ளங்களை வெடிக்க வைத்தன; மலரம்புக் கடவுளுக்கு எண்ணிறந்த மல ரம்புகள் ஏற்பாடாகிவிட்டன. இது சித்திர கூடத்தைச் சேர்ந்த தோர் குளம். மாமியுடன் நீராடச் சென்றேன். அக்குளத்தில் நீராடும் மங்கையரது மங்கலம் ஊழிதோறும் உடையாதிருக்கும் என்ற செய்தி யாவரும் அறிந்திருந்தனர். குளம் இருண்ட மர நிழலின் கீழ் இருந்தது. அதன் கரைகள்மீது உலர்ந்துதிர்ந்த இலைகளும் மலர்களும் பரவி இருந்தன. வண்டுகள் கிண்டப் பூம்பொடிகள் உதிர்ந்து கரையிடத்தைப் பொன்மயமாக்கி விட்டன. குளத்தில் வகைவகையான கருங்குவளை, தாமரை, நூற்றிதழ்த் தாமரை நிறைந்திருந்தன. கரையடுத்து ஒரு மாந் தோப்பிருந்தது; பூங்கொத்துக்களைத் குயில்கள் கால் நகங் களால் கிளரத் தேன் ஒழுக்குக்கள் ஒழுகிக் கொண்டிருந்தன. மற்றொரு பாங்கில் சந்தனக் கானனம் இருந்தது. அம்மரங்களில் சுற்றிக் கொண்டிருந்த பாம்புகள் மயில் கூவலினுல் வெருண்டன. கீழே உதிர்ந்திருந்த பூம்பொடித் திரள்களில் அரச அன்ன இரட்டைகள் அச்சமின்றித் திரிந்து கொண்டிருந்தன. என் மாமியார் நீரைத் தொட்டுத் தழுதழுத்த குரலில் ஏதோ மந்திரம் மிழற்றியவளாய்க் கடவுள் வழிபாட்டிலே அமைதி பூண்டிருந்தார். சிறிது நேரம் குளத்தின் அழகைச் சுவைத்தவாறு இருந்தேன். சற்று மாத்தோப்பில் போகலாம் என்ற ஆவல் பிறந்தது. இன்ன தென எனக்குப் புரியாமல் ஊக்கம் மிகுந்தது. அடிபட்ட இந்த உள்ளம் மிகுந்த நம்பிக்கை உடையது பெரும! ஏதோ என்னை இழுப்பது போன்றிருந்தது; ஆங்கென் குறிக்கோள் நிறைவுறும் என்று ஏதோ கூறிற்று. குறிக்கோளின் குறைபாட்டினுல் மறந் தனள் போன்றும் மயங்கினள் போன்றும் வருந்தி வந்துள்ளேன்.

மாந்தோப்பினூடே ஓரிளந் தவத்தோன் நீராடக் குளம் நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். என்ன கண்டேன் பெரும! முக் கண்ண பெருமான் மூன்றும் கண் நெருப்பினுல் வெந்து சாம்ப லான காமனின் நண்பன் இளவேனிலான் வருத்தத்தால் பற் றெழித்துத் தவம் மேற் கொண்டானே! அல்லது சிவபெருமான் தலைமீதுள்ள இளம் பிறையே தன் முழுக்கலைகளையும் பெறுவதன் பொருட்டுத் தவம் ஏற்றதோ! மலரம்புக் கடவுளே தனது தவறுக் குக் கழுவாய் தேடக் கொடிய தவம் பூண்டானே? மிக்க ஒளி பொருந்திய இளைஞுதலின் மிகவும் அசைகிற மின்னல் நடுவே வீற்றிருப்பவன்போல் தென்பட்டானே அல்லது முதுவேனில் கதிரவனுக்குள்ளே புகுந்தனனே! அல்லது நெருப்புத் தழலுக் குள் வீற்றிருந்தான் என்பனே? தனதுடம்பின் நிறையொளி யால் கானன முழுவதையும் பொன்னொளியாக்கிவிட்டான். ஆங் குள்ள மான் கூட்டமெல்லாம் சேர்ந்து அவனுக்குக் கண்ணழகை வழங்கினவோ அறியேன். மழித்து முடி நீக்கிய மண்டைக்குக் கீழே பற்றெழித்த வாழ்வின் வெற்றிக் கொடிகள் என மூவரிகள் தென்பட்டன. புதிய இளமையின் பற்று உள்ளத்தில் தங்காது காவியாடையின் செம்மையாகப் பொழிகின்றதோ? கீழிதழில் இட்ட கருவரி முகத்தாமரைத் தேனைப் பருகவந்த கரும்பு வரிசை போன்றிருந்தது. ஒரு கையில் குண்டிகையும் மற்றொரு கையில் செபமாலையும் கொண்டிருந்தான். காமன் எரிந்த வருத்தத்தினுல் இரதிதேவியின் சிந்துரந்தான் அம் மாலை மணிகளின் செம்மை யாகிவிட்டதோ? குதிக்கால்வரைக் காவி ஆடையால் போர்த் திருந்த உடம்பு ஒளி பீறப் பெற்ற இளந்தவத்தோனைக் கண்ட தும் மந்திரமயக்கமுற்றவள் போலானேன். யார் இவர்? பிரம்ம சரியத்தின் வெற்றிக் கொடி, அறத்தின் இளமை, சொற் கடவுளின் இளம்படிவம், கலைகளது உயிர்வடிவம், எல்லா அறிவுகளின் கோயில், அழகின் கடல், குணங்களது மலை, வெண்கைலை மலை, ஒளியின் அருவி, அன்பின் பிறப்பிடம், யாரிவன்?

"நீங்கள் நாராயணன் படிவம் பெருமான்! உங்களிடம் உண்மையை கூறுகின்றேன்; அன்று என்னுள்ளத்தினுள்ளே நூற்றுக்கணக்கான யுகக் கவிஞர்கள் திரண்டு அன்பின் கவிதை யைப் பொழிய விடுத்தனர் போன்ற உணர்வு கொண்டேன்; நூற்றுக்கணக்கான பிறவிகளின் பயனை அன்று நுகர்பவள் போன்று காணப்பெற்றேன். கடவுள் தன் அழகுக் களஞ்சியம் அளவிடற்கரியது. கேள்விப்பட்டிருந்தேன், பிரமன் காம தேவனைப் படைத்ததாலே அழகுக் களஞ்சியம் தீர்ந்துவிட்டது;

மீட்டுமோர் அழகிய ஆடவனைப் படைக்க அவனுக்கு அழகுப் பொருள்கள் எங்கு வாய்த்தன? ஆதலின் கடவுளின் அழகுக் களஞ்சியம் எல்லைக்குட்பட்டதல்ல. மிக்க வியப்பினால் உயிர்த்தல் அரிதாயிற்று; இமைகள் மேல் நோக்கின; இமையாது அந்த அழகுக் குவியலை நுகர்ந்தவாறிருந்தேன். அவன் என்னை நோக்கினான். பிறவிப் பயன் பெற்றவளானேன். நான் ஒன்று உசாவுபவள் போலவும், எனக்குரிய யாவற்றையும் அவனுக்கு ஒப்படைப்பவள் போலவும், அவனது வடிவழகில் மூழ்கியவள் போலவும், எழுதிய ஓவியப் பாவை போன்றும், செதுக்கப் பெற்ற கற்பாவை போன்றும் மூச்சற்று உணர்வற்று நின்று விட்டேன். உடல் முழுவதும் சடத்தன்மை பரவிற்று. பொறியறிவுகள் நின்றன; புலனுகர்வுகள் நின்றன; கண்கள் இமைக்கவில்லை; எனதுள்ளம் என்னையறியாது எனக்குத் தெரியாததொரு சுவைக் கடலில் முழுகிவிட்டது. அவனை அவ்வாறு விழுங்குபவள்போல் பார்ப்பதற்கு என்னை எது ஏன் தூண்டிற்று? அவனது அளவற்ற அழகா? உறுதியற்ற எனதுள்ளமா? என் புதிய இளமையா? எனக்கே புரியவில்லை. இறும்பூதுற்றேன். மிகுந்த நேரம் மரப் பாவையென நின்றிருந்தேன். கண்கள் என்னை அவன் அடிகள் வரை இழுத்துச் செல்ல விரும்பின; ஆனால் உள்ளமோ என்னைப் பின்னால் இழுத்தது. இந்தத் தீவினையேன் இரண்டு ஈர்ப்புக் களின் இடையே வருந்தினேன். ஏதோ பாவக் கருத்து என்னை வேட்டையாடுகிறது என்று நினைத்தேன். ஒளி பொருந்திய அந்தத் தவநெருப்பெங்கே, எனதுள்ளத்திலெழுந்த எளிய ஆவலெழுச்சி எங்கே, காமன் கிளர்த்திய ஆவலா? அல்லது முற்பிறப்பின் தொடர்ந்த கூட்டத்தின் ஆவலா? இவ்விதம் அவாச் சுழலில் சிக்கினேன். ஏன் என விளங்கவில்லை. சிறிது நேரம் நினைத்து உறுதி வரவழைத்துக் கொண்டேன்; அங்கிருந்து விலக முயன்றேன். வணக்கம் செய்யக் கை கூப்பினேன்; அவன் முகத்தில் என்பார்வை சென்று அழுந்தியதை விலக்க என்னால் முடியவில்லை. என் இமைகள் அசையவில்லை. சிறிது உவந்த காதின் குழைகள் கன்னத்தை விட்டுச் சற்று விலகின; மயிர்முடி தோள் மீது படிந்திருந்தது. குழைகள் தோள் நேரே ஊசலாடின. பெருமான்! நாணமின்மைக்கும் ஓரெல்லை உண்டு.''

ஒருமுறை அவள் நாணத்தால் கீழே நோக்கினாள். இந்த இடத்தில் அவள் குரல் இயங்கவில்லை. நிலவின் பொழிவு நேரே அவளது முகத்தே படிந்தது. நாணத்தால் ஏறிய முகச் செம்மையை நிலவு ஒளியாலும் மறைக்க முடியவில்லை. கங்கை

யிலே எ்திர்நிழல் செய்யும் சேதாம்பல் போலவும், நீர்க்குள் காணப்பெறும் விளக்குத் தழல்போலும், குளிர்காலப் புயலி டையே காணும் இளஞாயிறு போலவும் சுசரிதையது முகச் செம்மை பொலிந்தது. மீண்டும் வரலாற்றினைத் தொடங்கினாள்:

"ஏன் அப்படி ஏற்பட்டது பெரும! முற்பிறப்பில் பிரிந் தேனா? வரும் பிறப்பின் கட்டமா? கடத்தற்கரிய ஆற்றலின் குறிப்பு ஒன்றினாலேயே பல்லாண்டுகளாகக் காத்துவந்த நாணக் கட்டு உடைபடுதல் குற்றத்தின் பாற்பட்டதா? இவ்வரலாற்றைக் கேட்ட மற்றவர்கள் என்னைத் தீய ஒழுக்கத்தினள் என்று கருதி இயம்பினர். பன்னாட்களாக இக்குற்றச்சாட்டினால் எரிந்து கொண்டிருக்கின்றேன். துறவுக்கு அத்துணை ஆற்றலா, காதல் தெய்வத்தைக் கொளுத்திவிடுதற்கு? அதனைச் சாம்பலாக்கிய கவிஞன் பெருமை பெறுவதா?" இதற்கு விடை எதிர்நோக் கினாள்.

நான் இயம்பினேன்: "இருவினைக்களையும் ஒன்று சேர்த்து விட்டனை பெருமாட்டி! காளிதாசர் காதற் கடவுளைக் கண் நெருப்பினால் எரித்து நீறாக்கவில்லை. ஆனால் காதலைத் தவத் திற்குள்ளே அழகின் உதவிகொண்டு மேன்மைப் படுத்தினார். பார்வதியின் தவத்தினால் உண்மைத் தவத்தின் தெய்வீகம் வெளிப்பட்டது. எரிந்து சாம்பலானது பசி உறக்கங்கள் போன்ற கட்டை உடம்பின் மாறுகிற பண்பே. புலனவாவொடு தொடர்புள்ள காதல் எரிந்து சாம்பலாயிற்று. தவத்தில் தோன் றிய அன்பு நிலைபெற்றது. முழுக் கதையையும் சொல்லுக. பின்னரே இவ்வினாவுக்குத் தெளிவுரை தானாக வாய்க்கும்." சுசரிதை மருண்ட மான்போல என்னைப் பார்த்து வினவினாள்: "பார்வதியின் நோன்பு சடத்தன்மை வாய்ந்ததா? பரமசிவனை அம்மையார் ஒரே கடவுளாகத் தொழவில்லை? கோபியர் அழகிய கண்ணனைத் தொழுதனர்; அவர் கொண்ட காதலே அன் பென்றும் அன்பே காதலென்றும் கூறுகின்றனரே! [1] 'ப்ரேமைவ வ்ரஜரமாணும் காம இத்யபிதீயதே' இடைக்குல மாதர் தம் காதலே அன்பு எனப்படுகிறது."

உடனே எனக்குத் தவத்தில் அமர்ந்திருந்த பார்வதியின் நினைவு வந்தது. காளிதாசரின் வருணனைத் திறன் கண்முன் தோன்றியது. பாறைமீது துயின்றாள்; உறைவிடமில்லாதவ ளானாள். வெயில் மழை புயல்காற்று முதலியவற்றின் நடுவே

---

1. இது பத்தி ரசாம்ருதத்தில் உள்ளது.

கலங்காது நின்ருள். பெரிய இரவுகள் மின்னலென்னும் தம் கண்ணினுல் இடையிடையே எட்டிப் பார்த்து அந்த மாபெருந் தவத்தினள் பார்வதிக்குச் சான்றுகளாக இருந்தன.

சிலாசயாம் தாமநிகேதவாஸிநீம்
நிரந்தராஸ்வந்தர வாத வ்ருஷ்டிஷு
வ்யலோகயந்துந்மிஷதஸ்தடிந் மயைர்
மஹாதப: ஸாக்ஷ்ய இவ ஸ்திதா க்ஷபா:

(குமாரசம்பவம் 5–25)

பார்வதியின் அந்தத் தவநிலேயும் சுசரிதையின் இந்தத் தவ நிலேயும் எப்படி ஒத்திருக்கின்றன! எனினும் எவ்வளவோ வேற்றுமையும் உள்ளது. நான் அன்போடு நவின்றேன்: "பார்வதி சிவபெருமானேத் தன் சொந்தமெனச் செல்வமெனக் கருதினுர். ஆனுல் தவறு சிவபெருமானிடத்தில்தான் ஏற்பட்டது. தமது மனக்குழப்பத்திற்குக் காரணத்தைக் காண மூலேயில் தேடினுர். சடத்தன்மை பொருந்திய இயற்கையின் தொடர்பில் உள்ள உள்ளத்தே குழப்பம் ஏற்படுகின்றது. குழப்பத்தைத் தூண்டிய காமனே எரித்தார். சிவபெருமான் எரித்தது உள்ளத்தின் குழப்பத்தை, உள்ளத்தின் உறுதியின்மையை, புலன் அவாவினே.

ஹேதும் ஸ்வசேதோ விக்ருதேர்தித்ருக்ஷுர்
திசாம் உபாந்தேஷு ஸஸர்ஜ த்ருஷ்டிம்

[சிவபெருமான் தமது உள்ளக் குழப்பத்திற்குக் காரணத்தைக் கண்டறியக் கானன மூலேக்கப்பால் பார்வையைச் செலுத்தினுர்.]

(குமார சம்பவம் 3–69)

"மேற்கொண்டு கதையைக் கூறுக தேவீ!"

சுசரிதை சொன்னுள்: "திறமைசாலி பெருமான்! இன் சொலினிர் நீவிர் பெருமான்! அறைகுறையாகக் கேட்டு முடிவு செய்தல் அறிவுடைமையாகாது. அனேவரும் என் வரலாற்றில் பாதியைக் கேட்டனர்; அந்தப் பாதியும் இந்நகரில் மனம் போனவாறு திரித்துக் கூறப்படுகிறது. ஆனுல் நீங்கள் முழுதுங் கேட்க விரும்புகின்றீர். நிபுணிகையும் இந்தப் பாதி வரலாற்றினேயே அறிவாள்; ஆனுல் அவள் என் திறத்தே ஐயங்கொள்ள வில்லே; என் செயல்களேக் குற்றம் எனக் கருதவில்லே. அவள் நல்ல உள்ளம் படைத்தவள். நான் உமக்கு முழுதும் தெரிவிக்கிறேன். இவ்விதமாக அந்த இளந்தவத்தினன் முன்னர்,

என்னை நான் கட்டுப்பாட்டிற்குள் இழுத்துவர முயன்று கொண்டிருந்தேனுக, என் மாமியார் நான் மிகுந்தநேரம் கடத்திவிட்டமையால் என்னைத் தேடிக்கொண்டு வந்து சேர்ந்தார். அவள் அந்தச் சிவந்த ஆடைபுனைந்த இள முனிவனைக் கண்டதும் வீறிட்டலறினுள்: "அட என் செல்வமே, அமிதகாந்தா!" மூர்ச்சையுற்று அந்த இளமுனிவன் அடிகளுக்கருகில் விழுந்தாள். கடுமையான தவவுறுதி பொலிந்த அவன் முகத்தே இரக்க வரி தென்பட்டது. மெதுவாக அமர்ந்து தாயின் தலையைத் தன் மடியில் இருத்தி அதனை அமிழ்த்தத் தொடங்கினுன்; "பெருமாட்டி! உன்னைத் தாங்கிக் கொள், வீணுக மனமுடையாதே" என்று வேண்டினுன். தாயோ மிகுந்த அன்போடு மகன் முகத்தைக் கண்டு கூறினுள்: "மகனே! உன் தாய் துடித்து அழுது துயருற என்ன அறச்செல்வம் தேடி அலைகிருய்? பார், நீ திருமண முடித்த நங்கையை—பேறிழந்தவனே! இத்தகைய பொன்னை மணியை விட்டுவிட்டு வானுலகத்தில் எந்த அரம்பையைப் பெறுவதற்காக இத்துணைக் கடிய தவம் புரிகின்ருய்?" தாயின் மொழிகேட்டு உணர்வும் அற்றேன்; நாணமும் உற்றேன். நொடிக்குள் என்னென்ன நிகழ்ந்துவிட்டன? தவசி இன்னும் கலங்காத இரங்காத நெஞ்சத்தனுகக் காணப்பெற்ருன். தாய் இன்னும் துயரம் மிக்கவளாய்த் தன் உள்ளத்தைப் பொழியலானுள். ஆனல் மகனே வெளிப் பொறுமையாகக் கேட்டு மறுமாற்றம் மொழிந்தான்: "உலகம் துயரம் நிறைந்தது பெருமாட்டி!" எக்கச்சக்கமான நிலைமை. வாழ்க்கை முழுவதின் துயரங்கள் நம்பிக்கையிழந்த பான்மைகள் இவற்றின் படிமம் போன்றவளாய்ப் பெற்ற அன்னை விக்கிவிக்கி அழுது தன் துயர்க் கதையைச் சொல்லுகின்ருள். ஆவணித் திங்கள் மழைபோலக் கண்களில் நீர் கலுழ்ந்தது; ஆனல் மகனே பற்றுச் சற்றுமில்லாப் பான்மையோடும் அறவுரை அறிவித்தவாறிருக்கின்ருன். தன் தாயையே அறிந்து கொள்ளாதவன் போலக் காணப்பெற்ருன். நூற்றுக்கணக்கான எளிய மாதர்களைப் போல இவளும் ஒருத்தியெனத் தன் தாயையும் கருதினுன் போலும். எனது பெண்ணியல்பு இந்தப் பாசாங்கினைப் பொறுக்க முடியவில்லை. வெட்கம் என் குரலைத் தடுத்துவிட்டது. முடிவில் தாயின் உள்ளப்பான்மை மாறிவிட்டது. வெகுண்டவளாய்க் கூறினுள்: "அடே மூடா! உருப்போட்ட சொற்களைக் கக்குகின்றனை. உன் அன்னையை அறிந்துகொள்ள முடியாதபடி உன் கண்களை மறைக்கும் அந்த அறவழிபாடு போலித்தன்மை

வாய்ந்தது. ஏற்கெனவே துன்பம் நிறைந்திருக்கும் உலக வாழ்வினை இன்னும் துன்பம் செறிந்ததாக்குவதால் உன் இன்பத்திற்கு எந்த அரசவழி உருவாகப்போகிறது? உன் அறவழி தன்னலம் வாய்ந்தது. இழிக உன் ஆண்மை.'' இப்போது முனிவன் உள்ளம் கரைந்தது. ஒருமுறை என்னைப் பார்த்தான், ஒருமுறை தன் தாயைப் பார்த்தான். அன்னை என்னைப் பார்த்து அதட்டிக் கூறினுள்: ''என்ன பார்க்கிறுய், தீவினையாளே! இவனே உன் கொழுநன், இவனே உன் கடவுள், வா, இவன் அடிகளுக்கு உன்னை ஒப்படைத்துக்கொள். தீவினையாளே! நீ ஏன் இவன்முன் இறவாதுள்ளனை; கொழுநன் அன்பைப் பெற இறக்கக் கற்றுக்கொள். நான் மடிந்து மடிதலின் பொருளென்ன என்பதை உனக்குக் கற்றுக் கொடுக்கின்றேன். இவன் உன் கையைப் பிடித்தவன். இவனே உன்னைக் காக்கக் கூடியவன்; வா, இவன் அடிகளைப் பற்றிக்கொள். நான் போகின்றேன். மிக அழுதுவிட்டேன். துயரப்பட்டுவிட்டேன். இழந்த செல்வம் இன்று வாய்த்தது. இம்முறை இச்செல்வத்தை இழக்கும் தவறு செய்யமாட்டேன். இதுவே என் வாழ்க்கையின் இறுதி'' இவ்வளவுங் கூறி அன்னை தன் கைகளால் மார்பை அடித்துக் கொண்டு இறக்கை அறுந்த பறவைபோலப் பிள்ளையின் மடிமீது உருண்டுவிட்டாள். ஒரு நொடிக்குள் என்னைச் சுற்றிலும் இருள் மூடியது. ''அந்தோ அம்மா!'' எனக் கதறித் தாயின் இளைத்த உடம்பின் மீது விழுந்துவிட்டேன்.

உணர்வு மீண்ட பின்னர் தவ ஒளி பொருந்திய முனிவன் முகத்தில் மாறுதல் குறிகளைக் கண்டேன். அவன் கண்களினின்றும் வெண்முத்துக்களின் ஒழுக்கென நீர் பொழிந்துகொண்டிருந்தது. நான் நாணமீறியவளாய்த் துயர்மிகுந்தவளாய் உணர்வு குன்றியவளாய்க் கடமையுணராதவளாய் கல்லென இருந்தேன். முனிவன் தன் காவியாடை நுனியால் தாயின் தலைமீது காற்றுவர வீசிக்கொண்டிருந்தான். குரல் தழுதழுத்தது, என்னை நோக்கிச் சற்று நாணமுற்றவனுய்க் கூறினுன்: ''மங்கலமுடையோய்! உறுதியொடும் வேலை செய்க; குண்டிகையெடுத்துத் தண்ணீர் கொண்டு வருக.'' பிறவிப்பயன் கிடைக்கப் பெற்றேன். விடையேதும் பகராது குளத்திலிருந்து நீர் கொணர்ந்தேன். அன்னையின் முகத்திலும் தலையிலும் நீர் தெளித்து மெதுவாக ஆடை நுனியால் விசிறத் தொடங்கினேன். சிறிது நேரம் பிறகு கண்கள் கீழே நோக்க என்பால் திரும்பி உரைத்தான்: ''பெருமாட்டி! அன்னைதன் உள்ளங்கால்களை நன்ருக

அழுத்துக.'' கட்டளையை நிறைவேற்றினேன். சிறிது நேரப் பணிவிடையால் அன்னையின் கண்கள் திறந்தன. தவ முனிவ னின் நோன்பு இப்பொழுது கலைந்தது. அவா மறுப்பு என்னும் கட்டுக்குலைந்தது. நெடு நாட்களாக உருப்போட்ட மொழி மறைந்தது. கண்ணீர் பெருகிற்று. சொன்னர்: ''அம்மா! என் அம்மா!'' நட்பு, அலைமோதுகிற அவள் உள்ளம் இப்போது பொங்கி வழிந்தது. வாடிய கொடி போன்ற கைகளான் அவன் கழுத்தைத் தழுவியழுதாள்; விக்கி விக்கிக் கூறினள்: ''ஆம் செல்வ! அம்மா என்று கூப்பிடு. என் செல்வமே! இழந்த என் செல்வமே! என் அமித காந்தா! விண்ணில் உன் தந்தை உன திந்த உலர்ந்த பொலிவிழந்த உடம்பு கண்டு என்னை அதட்டு வாரே, என் மைந்த! நெடுநாள் உயிர்த்திருக்க மாட்டேன். சொல்லு, ஒரு முறை அம்மா வென்று சொல்லு. என் உயிரே! உன் மடிமீது நெடிய உறக்கம் கொள்கின்றேன்.'' இம்முறை தவசி தன்னையே தாங்க முடியவில்லை. விக்கி விக்கி அழத் தொடங்கினன்: ''வேண்டாம் அம்மா! அப்படிக் கூற வேண்டாம். நான் உன் திருவடிகளிடம் வந்து விடுகின்றேன். ஒருமுறை குருவினது கட்டளையைப் பெற்று வந்துவிடுகின்றேன்; விடைதருக.'' தாயின் முகம் சிவப் பேறியது. ஒருமுறை இரக்கச் சுவையிலே வீரச்சுவை எழுந்தது. கிழப் பெண்சிங்கம் போல் கருச்சனை புரிந்து செப்பினள்: ''யாரடா அந்தப் போலிக் குரு, தாயினும் மேலான குருவெனத் தன்னை மதிப்பவன்? நீ எனக்குரியவன். தம்பொருள் என்ப தம்மக்கள். எனது குருதியினது ஒரு பகுதி நீ. என் ஊனினது ஒரு பகுதி நீ. வேறு யாரடா உன் குரு?'' அன்னையின் மெலிந்த உடம்பு இந்த உள்ளக் கிளர்ச்சியைத் தாங்க முடியவில்லை. மூர்ச்சித்து விழுந்தாள். இப்போது என்னல் பொறுக்க முடியவில்லை. கூச்சலிட்டு அழத் தொடங் கினேன்: ''ஓ அம்மா, அம்மா! இனி என்னைத் தாங்குவார் யார்?'' தவசி தழுதழுத்த குரலில் கூறினன்: ''அஞ்சற்க, செல்வீ! அன்னையைப் பிழைக்க வைப்பது என் கையில் உள்ளது.'' முனைந்து முனிவன் பணிவிடைகளில் இறங்கினன். எனக்கும் பற்பல பணிவிடைகள் புரியுமாறு பணித்தான். நானும் பேசாது கட்டளைகளை நிறைவேற்றியவாறிருந்தேன். அன்னை தெளிந்தாள். மகன் புகன்றன்: ''நீ சொன்னதைச் செய்கிறேன் அன்னையே!'' அன்பூற அவனது அணி நெற்றி யில் முத்தமிட்டாள். அவள் மார்பில் பால் ததும்பிற்று. அவள்

அம்முனிவனை ஈராண்டுக் குழந்தைபோல எடுத்து மடிமீதிருத்தி அன்பு பாராட்டினுள். "உண்மையை உரைக்கின்றுயா, மைந்த! சொல்வது செய்கின்றேன் என்றனை, இது உண்மையா?" தவசி சாற்றினுன்: "தவருமல் செய்கின்றேன் அம்மா!" அவன் ஒரு முறை குனிந்து நிலத்தைப் பார்த்தான்; பின்னர் என்னைப் பார்த்து உரைத்தான்: "மங்கல முடையோய்! தாயின் கட்டளை கேட்டனை அல்லவா?" நான் தலையசைத்து உடன்பாடு தெரிவித்தேன். தவசி சொன்னுன்: "அன்னையின் கட்டளைமீது நான் உன் கையைப் பிடிக்கின் றேன். என்ன, என் வாழ்க்கைக் குறிக்கோள் நிறைவேறுவதில் துணைபுரிவாயா?" நான் நாணமிகுதியால் விடை கூறவில்லை; என் கழுத்து வளைந்தது. அன்னை அன்பொடும் சொன்னுள்: "கை நீட்டு மகளே!" என் கைப்பிடித்தல் நிறைவேறிற்று. மகிழ்ச்சியோடும் அன்னை வாழ்த்திக் கூறினுள் மகனிடம்: "இப்போது என்னேடு புறப்படு மகனே!" தாயின் தாள்களில் தலைவைத்து இயம்பினுன்: "ஒரு முறை குருவிடம் உடன்பாடு பெற அனுப்புக." உடன்பாடு கிடைத்தது. அவர் போய் விட்டார். பங்குனி நிறைமதி நாளன்று அவர் வந்து என்னை அழைத்துச் சென்றுர். அவர் கூறியபடியே வெங்கடேசபட்டர் எம்மிருவருக்கும் தீட்சை கொடுத்தார். ஆனல் பெரும, என் கொழுநர் திரும்பிவந்தபோது அன்னையைப் பார்க்கவில்லை. முன்னரே வானெய்தினுர். நான் உலகிற்குப் பாதி வரலாற் றையே சொல்ல இயன்றேன். அன்னையின் குறைபாட்டினல் பாதி வாரலாறு மக்கள் அறியாதவாறு அரைகுறையாக நின்று விடடது. நேற்றுத் திடீரென எனது பிற்பகுதி வரலாற்றுக்குச் சான்று கிடைத்துவிட்டது. தனதத்த வணிகன் என் கொழுநனை இன்னுனெனக் கண்டுபிடித்துவிட்டான். இந்தச் செயலால் எனது பிற்பகுதி வரலாற்றையும் மறையாக வைத்து இருக்கமுடியாது."

தனது வரலாற்றைச் சொல்லி முடித்து எனது கருத்துத் தெரிந்துகொள்ளவேண்டி என்னை நோக்கினுள். ஆனல் நான் வேறு பொருளை நினைத்தவாறிருந்தேன். முன்னே அவதூத ரிடம் முதன்முதல் வந்த விரதிவச்சிரனைப் பற்றிய நினைவு வந்தது. அமைதியும் அழகும் பொருந்திய அந்த முகத்திருவுக் குள்ளே எத்துணைத் துயரம் குமுறிக்கொண்டிருந்தது என்பது இப்பொழுதே விளங்கிற்று. முழுத்துயரமும் கழிவிரக்கமும் பருகி, புகையின்றி எரிந்த நெருப்புத் தழல் போல அவ்வழகிய

முகத்தினின்றும் அழியா ஒளி வீசிக் கொண்டிருந்ததால் அவனது உள்ளத்தாழம் கடலுக்கும் இல்லையென்றே கூறுதல் வேண்டும். இப்போது சுசரிதை பற்றியும் நினைத்துக் கொண் டிருந்தேன். எத்தகைய எளிமை! எத்தகைய செயற்கையற்ற இயல்பான செயல்! ஆகா! பொன்னும் தாமரையும் கலந்த நிறப் பண்புகளைப் பெற்ற உடம்பில்தான் மென்மையும் சுவையும் இருக்குமோ! சிறிது நேரம் பொறுத்து வினவினேன்: "தவறு உள்ளத்தில் கொள்ளற்க பெருமாட்டி! பாதி வரலாற்றை மூடி வைத்துப் பின் அது திரித்துக் கூறப்பெற ஏன் விடுத்தீர்?" உடனே விடை தந்தாள்: "பாதி வரலாறே எனக்குரிய உண்மை, பிற்பகுதி நிகழாதிருப்பினும் முற்பகுதிக்கு வேண்டிய உண்மை இருந்தது; அதுபற்றி நான் ஐயமுற்றதே கிடையாது. பிற்பாதியைத் தாங்கள் எளிதாக உணர்ந்து கொண்டீர். அவ்வளவு நம்பிக்கை மற்றவர்களுக்கு ஏற்படாது பெரும!" நான் சற்றுத் தயக்கத்துடன் கூறினேன்: "பிற்பகுதி வரலாற் றின் ஒரு பகுதியையே அறிவீர் பெருமாட்டி! பாதி எனக்குத் தெரியும். அதனில் ஒரு பகுதியை எனக்குத் தெரியாமல் மறைத் துள்ளீரா?" சுசரிதையின் மலர்க் கண்களில் இயல்பான மகிழ்ச்சி யொளி பாய்ந்தது. அவள் கூறினாள்: "நீவிர் இயல்பான நகைச்சுவை பொருந்தியவர் எனக் கேள்விப்பட்டிருக்கின்றேன். என்ன மறைத்து வைத்திருப்பேன் கூறுக பெரும!" நான் அவள் ஊக்கம் ஊறிய கண்களில் எனது பார்வையைச் செலுத்திக் கூறினேன்: "கேட்பீராக மங்கலச் செழுமையினீர்! பெருமான் விரதிவச்சிரர் அகோர பைரவரிடம் கூறினார்: "என் குரு என்னைத் திடீரென அழைத்து நீ கௌலாசாரியர் அவதூதர் அகோர பைரவரிடம் செல்க! நான் காதால் இதனைக் கேட்டதால் சான்றாக இருக்கின்றேன். அன்று நிகழ்ச்சியினது பொருள் எனக்கு விளங்காதிருந்தது. இன்றறிந்தேன். விரதிவச்சிரர் தம் குருவிடம் தமது நிலைமை முழுவதையும் சொல்லி இருப்பார். குரு தம் மாணாக்கன் திறத்தே நோன்புக் கேடு ஏற்படுவதைத் தடுத்துக் காப்பாற்ற முயன்றிருப்பார். மாணாக்கர் தொல்லையுற்றிருப்பார். ஆனால் மிகுந்த முயற்சி யோடும் குரு காட்டிய அறநெறிமுறைகளை நிறைவேற்ற முனைந் திருப்பார். ஆனால்..." நான் ஒரிமைப் போது நின்று சுசரிதை முகத்தைப் பார்த்தேன். இயல்பான நகைச்சுவை உடனே மாறிக் கருத்தாழம் நிரம்பியதாயிற்று அவள் முகத்திங்கள். அவள்.. கூறினாள்: "ஆம் பெரும! கூறுக நான் புதியன

கேட்டுக் கொண்டிருக்கின்றேன்.'' நான் நகைத்தவாறு நவின் றேன் : ''ஆம் பெருமாட்டீ! பெருமான் விரதிவச்சிரரைக் குரு ஏதோவொரு குளத்தங்கரையில் பார்த்திருப்பார். ஆங்கு இளவேனில் பிறப்பிடம்போல மாமரங்களின் தோப்பு, ஆங்கு மலர்கள் நிரம்பச் சுரும்பினம் இசை முழங்கி மொய்க்க, குயிலினம் வதுவை செய்து மகிழ, மயிலினம் தமிழ் தழுவிய சாயலவர் மாதரென நடனமாட மாணுக்கர் கண்டு உள்ளம் குழப்பமுற்றிருப்பார். ஆங்குக் குருவின் அறவுரைகளே அற மறந்து எழுதிய ஓவியம் போலவுங் கல்லில் செதுக்கிய படிமம் போலவும் உணர்வற்றவர் போலவும் புலன்கள் மீதுள்ள பற்றெல் லாம் அற்று மரம் போலவும் நின்றபடி உறங்கினவர் போலவும் அசையாதிருந்திருப்பார். இதுவும் ஒருவகையில் தவநிலே யென்ருலும் நெஞ்சத்தே வேற்றுவடிவ வழிபாடு நேர்ந்திருக்கும். இந்நிலேயில் தவங்கலங்கியவராகக் காணப்பெற்றிருப்பார். நெஞ்சுப் பாழ்மையெனும் பயிற்சியின் விளேவை அதாவது அது வெற்றிபெருததை அவர் குரு உணர்ந்திருப்பார். பாழ்மை உள்ளம் அல்லது உள்ளத்துப் பாழ்மை எங்ஙனம் யாருக்கு வாய்க்கும்? மேலும் ஓரழகுப் படிமத்தில் ஈடுபட்ட இளேஞனது உள்ளத்தே பாழ்மைப் பயிற்சி எங்ஙனம் கைகூடும்? பாழ்மை யில் ஆழும் திறமை விரதிவச்சிரருக்கு வாய்க்கவில்லே போலும். எப்படி இருந்திருக்கும் அவரது பாழ்மை நிலே முயற்சி! பொறுக்க முடியாத பிரிவுத்துயரில் இருந்தும் தப்புவதற்கு முயன்றிருப் பார். நெஞ்சத்தே உறையும் அன்புடையாளேக் காணுதற்கு அவர் தம் பொறிகளனைத்தும் துடிதுடித்திருக்கும். இவ்வகை யாக விரதிவச்சிரர் முழு உடம்பும் மாபெரும் பாழ்ப்படிமமாகக் காட்சியளித்திருக்கும். உள்ளத்தை எரிக்கும் காதல் நெருப்புப் புகை உள்ளேயே அடங்கி இருக்க அசையா இமையாக் கண்களி னின்றும் நீர் பொழிந்தவாறிருந்திருக்கும். அவர் தம் வெப்ப மான நெட்டுயிர்ப்பு ஆங்குக் கொடிமலர்களேக் கொளுத்திவிட் டிருக்கும்; அந்த எரிந்த மலர்த் துணுக்குக்கள் திசையிடங்களில் சென்று பரவி விட்டிருக்கும். இதே நிலேயில் குரு பெருமான் அவரைத் திடீரென விளித்திருப்பார். குருவைப் பார்த்ததும் குழப்பத்தோடும் எழுந்தார் போலும். உடனே மேலே கொடி களினின்றும் எறியப்பட்ட மலர்ப்பொடிகள் காமதேவனின் வசி யப்பொடி போலக் கீழே உதிர்ந்திருக்கும். அசோகந் தளிர்கள் மெல்லியனவாகத் தொட்டு இன்பச் சுவையை ஊடுருவச் செய் திருக்கும். புதிய அரசிற்குள்ளே புகவிருக்கும் இளவரசன்

போன்ற அந்த அழகிய இளைய முனிவன் நெற்றிமீது வனத்திரு வானது தேன் மழையால் தூய நீராட்டுச் செய்திருக்கும். இளவேனில் குயில்களின் இசையாலும் வண்டுகளின் முழக்கத் தாலும் சண்பக மொட்டுப் பிரசாதத்தாலும் மாம்பூங் கொத்து மங்கலத்தாலும் அவனைப் பாராட்டி வாழ்த்தி இருக்கும். நீவிர் அந்நாள் இச் செய்தியின் குறிகளில் எவற்றையேனும் கண்டீரா பெருமாட்டீ ?'' சுசரிதையின் கண்கள் கீழ் நோக்கின ; அவள் இதழ்களில் இனிய முறுவல் அலைகள் நெகிழ்ந்தன. அவள் கூறினாள் : '' எள்ளுகின்றீர் பெரும.'' பின்னர் பேசாதிருந்தாள். '' தனதத்தன் தொடுத்த வழக்கில் உண்மை உண்டா பெரு மாட்டீ '' என வினவினேன். அவள் உணர்வு கிளரப் பெற்றவ ளாய்க் கூறினாள்: '' அது முற்றிலும் பொய். என் மாமியார் கடன் செய்தி ஒன்றிருந்தால் அதைப்பற்றி என்னிடம் கூறியிருப்பார் ; இல்லையே. என் கொழுநர் துறவறம் பூண்ட பின்னர் நான் இவ்விடத்தில் இடையறாது இருந்துவந்தேன். தனதத்தன் தன் கடன் செய்தியை எனக்கேன் அறிவிக்கவில்லை. பெருமான் விரதி வச்சிரர் இல்லறத்தில் புகுந்தார் என்ற கூற்று முற்றிலும் பொய், பெரும. அவர் இப்போது செய்வனவெல்லாம் தம் குருவின் கட்டளைப்படியாகும். உலகம் அவரைப் பற்றி என்ன கருதினாலும் முன்னர் இருந்தபடியே இப்பொழுதும் ஒழுக்கத் தோடும் இயங்குகின்றார். குருவின் கட்டளைப்படி வழிபாட்டு நெறியை மாற்றிக் கொண்டார். இப்பொழுதும் அவர் முன் போலவே அறத்தின் அணியாகத் திகழ்கின்றார்.

இடை மறித்துக் கூறினேன் : '' இவ்விளைவுகளால் மாமன்னன் மீது வெறுப்புற்றீரா ?'' சுசரிதை சிரித்துச் சொன்னாள் : '' நுரைக் குமிழி போல இடைவிடாது தோன்றி மறைவதும் அழியக்கூடியதும் ஆகிய உயிர் வாழ்க்கையிலே மாமன்னனென்ன தனதத்தனென்ன ; மாமன்னன் மீது சினக்கவு மில்லை உவக்கவுமில்லை. தலைவ ! அவனினும் மேலான மாமன் னவன்தன் அடிகளைப் புகலிடமாக அடைய முயன்று கொண் டிருக்கின்றேன். அரசன் நெறி பிறழ்ந்தான். அதன் கணக்கு வழக்குகளைக் கடவுளிடம் ஒப்படைக்கப் போகின்றான். நானேன் வெகுளவேண்டும் ? எனக்கு வாய்க்கும் இன்ப துன்பங்களைக் கொண்டே நாராயணனை வழிபடுகின்றேன். இந்தக் கைவிலங்கும் அவன் தொழுகைப் பொருளாக ஒப்படைக் கின்றேன்.'' நான் அமைதியாகக் கூறினேன் : '' தேவீ ! உனக்கு ஏற்பட்ட இந்த விளைவுகளால் நகரத்தில் குழப்பமூண்டுள்ளது.

நகரத்தில் இரத்தம் பெருகுமோ என்று அரசாட்சி அலுவலாளர்கள் அஞ்சுகின்றனர். இந்த நிலையில் நீங்கள் அரசர் பெருமானுக்கு உதவி புரிவீரா இல்லையா? அறிய வேண்டுகின்றேன். அமைதி காக்கவும் குடிமக்களிடை நம்பிக்கை ஆறுதல் ஏற்படுத்தவுமே உமது உதவி வேண்டியுள்ளது. மலைக்கணவாய்களில் தடுத்தற்கரிய காட்டு மாந்தர் படைகள் கடக்கவுள்ளன. இந்நேரத்தே குடிமக்களிடை வெறுப்புக் குடிகொள்ளல் கேடுவிளைவிப்பதாகும்.'' வியப்போடும் என்னைப் பார்த்துக் கூறினாள் சுசரிதை: "புதிய செய்தி கேட்டுக்கொண்டிருக்கின்றேன், தேவ! குடிமக்கள் இதன் முன்னர் என்திறத்து அக்கறை காட்டவில்லை. இந்நகரிலே இடைவிடாத பழி பெற்றவாறிருந்தேன். இந்நகர் வாழும் குறும்பர் வம்பர் தம் பழிச்சொற்களுக்குப் பழிவாங்கும் எண்ணம் அற்றேனாதலின் அவர்கள் தம் இன்னாச் சொற்கள் எல்லை மீறின. பல பொய்க் கூற்றுக்களை என்னைப் பற்றிப் பரப்பியவாறிருந்தனர். திடீரென இக்கலகவுணர்ச்சி எங்ஙனம் கிளர்ந்தது, பெருமான்? எனக்கொன்றும் விளங்கவில்லை.'' எனக்கே இது வியப்பாக இருந்தது. நான் வழிபாட்டு அவையில் நடந்தன விடாது கூறினேன். சுசரிதை மகிழ்ச்சியோடும் கூறினாள்: "அறிந்தேன், அறிஞ! என் கொழுநரது குற்றமற்ற நடவடிக்கையால் அரசியலுக்குத் தடையுண்டாயிற்று. அதுபோலக் குடிமக்கள் அமைதிக்கும் ஊறு நிகழ்ந்ததுபோலும். இருவகை தன்னலங்களின் மோதுதல் இது; நாங்கள் மேலெழுந்தவாரியான காரணங்கள் மட்டுந்தான் தேவ! தனதத்தனின் குரு வசுபூதி பௌத்த அறத்திற்கு வெற்றி நாட்ட முனைந்தார்; பவபூதி வழியைச்சேர்ந்த பரம ஸ்மார்த்த ஆசாரியர் மேதாதிதி இன்றைய சபை கூடுதற்கு முதற்காரணமாக மறைவாக இருப்பவர்; தமது ஆரிய அறத்தை நிலைநாட்டியே அமைவார்போலும். இத்தகைய தன்னலமாந்தர் எக்கேடு கெட்டால்தான் என்ன? ஒரு கூட்டத்தின் கையில் அரச ஆற்றல் உள்ளது. மற்றொரு கூட்டத்தின் கையில் குடிமக்கள் கலகம் என்ற படைக்கலம் உள்ளது. இவர்கள் தான் தத்தம் அறத்தினைப் பறைசாற்றுகின்றனர். கடவுளே காப்பார் இவ்வறங்களை. விரதிவச்சிரர் பௌத்த அறத்தை விடுத்து வைணவ அறம் ஏற்றதுதான் உலகிலேயே தலையாய நிகழ்ச்சிபோலும்! இந்த எதிரெதிர் கருத்துப் போரில் மாந்தர் இனம் முழு அறிவைத்தான் அடைந்தாலென்? எதன்பால் உண்மை உள்ளது? இந்தக் குழப்ப நெருப்புக்கு முதலில் மாமன்னவனே விறகு இட

வில்லையா? உங்களுக்குத் தெரியாது பெரும! இக்குழப்பத்திற்கு வித்து முதலிலேயே இடப்பெற்றது. விரதிவச்சிரர் புதிய அறத்தில் தீட்சை பெற்றதும் திடீரெனத் தாணேசர்புரியில் அறக் கிளர்ச்சி உண்டாகிவிட்டது. புலவர்கள் வேண்டுகோளால் நகர வணிகர்களின் பொருட்கொடையால் பரந்த பந்தர் வேயப் பெற்றது; அங்கு என் குரு அழைக்கப்பெற்றுர். பாவியரிலும் பாவியர் தமது கருத்தைக் கேட்கவேண்டும் என்பது அவர் கொள்கை. அழைப்பை உடனே ஏற்றுக்கொண்டார். ஆனல் விரதிவச்சிரர் வெளியே தோன்ற விரும்பவில்லை. குருவின் கட்டளைக்கிணங்க என்னைத் தொகைப்பந்தருக்குப் போக விடை கொடுத்தார். வசுபூதிக்கும் எம் குருவுக்கும் இடையே தருக்கப் போரை ஏற்படுத்தவேண்டுமென்று பெருமுயற்சி செய்யப் பெற்றது. ஆனல் அவர் மாதேவரின் அவதாரமாவார். அவருக் குப் பத்தி, பூசை தொழுகை இவற்றுடன்தான் தொடர்பு. தன் தொழுகை வினைகள் முடியப்பெற்றதும் ஒரு நொடியும் தங்க இசையார்; பஜனை தொடங்கும் ஒரு நொடிக்கு முன்தான் தொழுகைக் கூடத்திற்கு எழுந்தருள்வார். இது ஒரு சில புலவர் களின் பொருமை நெருப்பினல் மூண்டது, பெரும. அதனில் அரசன் எரிந்துகொண்டிருக்கின்றுன்; குடிமக்கள் எரிந்து கொண்டிருக்கின்றனர். அந்த நேரமும் வந்துவிட்டது, பெரு மான்; அப்போது வடபாரதமும் தன் இளைஞர் சிறுமியர், பெற்றோரை இழந்தவர், முதியவர் முதலானோருடன் எரிந்து சாம்பராகும். கலகம் செய்யும் குடிமக்கள் கருத்தறியாதவர் குருடர், பெருமைக்குத் தகுதியற்றவர்.''

சுசரிதை நெட்டுயிர்ப்புயிர்த்தாள். சிறிது பேசாமல் இருந்து மீண்டும் கூறினள்: ''நீண்டகாலம் கடவுள் வழி பாட்டினள் மாமாயை; எனினும் அவள் உள்ளத்து அழுக்குத் தூய்மையான் கழுவப்பெறவில்லை. மனிதவுள்ளம் அழுக்கு நிறைந்திருத்தல் யாரும் மறுக்க முடியாத உண்மை. அதனை ஒப்புக்கொள்வதாலேயே முன்னேற்றம் ஏற்படுகின்றது. அது இல்லையென்று மூடி மறைத்தலே மாந்தர்க்கு ஊறு நிகழ்கிறது. நற்பண்பையும் தீய பண்பையும் நாராயணனுக்கு ஒப்படைக் காதவர் நிலத்திற்கு வெறும் பொறையாகத்தான் இயங்க முடியும்.'' அவள் கூற்றுக்களில் ஒரு பகுதியே பொருள் விளங் கிற்று; நேரமாவது கெடுதியை உண்டாக்கும் எனக்கருதி இடை மறித்து வினவினேன்: ''குழப்பத்தை விலக்கி நகரத்தில் அமைதியுண்டாக்க வழிதான் என்ன பெருமாட்டி?'' சுசரிதை

உடன்விடை பகர்ந்தாள்: "வழி மாமன்னன் கையில்தான் உள்ளது. எமது பிறப்புரிமை எமது வழியில் கடவுள் வழிபாடு செய்தல். அதனை மன்னன் எங்களுக்கு அளிக்கவேண்டும். மன்னவன் குறிக்கோள் அமைதி நிலைநாட்டுவதாயின் எம துரிமையை யாம் பெறவேண்டும். என் பார்வையில் முன் போலவே இந்தச் சிறைவாழ்விலும் மன்னன் என் தொழுகைக் குரியவனே. என் வழிபாட்டு நெறியில் இப்பொழுதும் ஒரு மாறுதலும் இருக்க முடியாது. என் உரிமையை யாரும் பறிக்க முடியாது."

வாய்ப்பு நோக்கி "இந்த நிபந்தனையில் என்னோடு தாங்கள் வருவதற்கு உடன்படுகின்றீரா?" என்று வினவினேன். ஊக்க முடன் மாற்றம் அளித்தாள்: "கட்டாயம், பெருமான்!"

நான் ஏற்றுக்கொண்டு பெரியோராலும் தொழத்தகை யாளைத் தலைவணங்கினேன். அந்தோ கவிஞர் பெருமானே! காளிதாசரே! புதிதாக இளமைப் பருவத்தை அடைந்த நங்கையின் நாற்பாலழகு பற்றிக் குறித்தீர். நிறக்கோலால் தீட்டப்பெற்ற பாவைபோலும் என்று கூறினீர்; கதிரவன் கதிர் களால் அவிழ்க்கப்பெற்ற தாமரைபோலும் என்று விளம்பினீர்;

**உந்மீலிதம் தூலிகயேவ சித்ரம் ஸூர்யாம்சுபிர்பின்ன மிவாரவிந்தம்**
**பபூவ தஸ்யாச் சதுரஸ்ர சோபி வபுர் விபக்தம் நவயௌவநேந**

(குமார சம்பவம் 1–32)

[பார்வதியின் உடம்பு புதிதாக அடைந்த இளமையினால் நாற் பாலும் சமநிறை அழகினைத் தெளிவாகக் காட்சியுறுத்திற்று; அவ்வழகு நிறக்கோலினால் தீட்டப்பெற்ற ஓவியம்போலவும் கதிரவன் கதிர்களால் மலர்ந்த தாமரை போலவும் இருந்தது.]

ஆனால் புதிதாக அடைந்த இளமைப் பருவத்திலேயே எல்லையற்ற தெய்வீக இன்பக் குவியலைத் தன்னுட்கொண்டு ஞாயிறுபோல ஒளிவீசும் பேருள்ளத்தினைக் கண்டீரோ காளி தாசரே? இளமை கேடுவாய்ந்தது, குருட்டுத்தனமானதென எவன் கூறுகின்றான்? அதனில் உயர்ந்த பண்புள்ளது. நான் வணங்கியதைக் கண்டு சுசரிதை வருத்தமுற்றாள். "பெருமான் என்னைக் குற்றவாளி யாக்குகின்றீர்" என்று கூறிப் பருவிலங்கு நிலையிலும் நிலம் சென்னிதோய வணங்கிக் கழுவாய் செய்தாள். என்னை ஒறுக்குங் குரலில் கூறினாள்: "என்னை நாணுறச் செய்ததற்கு என்ன காரணம் கண்டீர், பெரும? பயிற்சிப் பழக்கத்தான் மிக்குப் பேசிப் பரந்த அறிவாளிபோல நடித்தேன்,

அவ்வளவுதானே. சிறுமையின் கட்டுக் கடுமையானது; விரைவில் விடுவதில்லை. என் கொழுநர் முதலில் வரப்படுத்திய மொழிகளைச் சொல்லிக்கொண்டு இருந்த பழக்கத்தை விடுத்தவர் இன்னும் வாய் திறவாமலேயே இருக்கின்றார். நானோ தீவினையேன், வரப்படுத்திய பேச்சுக்களை வாந்தியெடுத்தவாறுள்ளேன். கழிவிரக்கந்தான்; என்ன செய்யப்போகின்றேன், நல்லவளோ கெட்டவளோ அப்படியேதான் உள்ளேன்; பழிபெற்றவள், இழிவுறுத்தப்பெற்றவள் நாராயணன் மீது இடப்பெற்ற மலர் வாடிவிடுகின்றனவே அவற்றில் ஒன்றுபோல நானும் மணமற்றவளாயினும் வாழ்க்கையிலே பொருளற்றவளல்ல. என் குற்றம் பொறுத்தருள்க பெருமான்!'' நான் அடக்கத்தோடும் விடை பகர்ந்தேன்: ''உமது வாழ்க்கை பொருளுடைத்தே; பயனுடைத்தே. உம் மனம் உடல் இரண்டும் பொருள் வாய்ந்தனவே. உம்முன்னர் பணிவதால் வாழ்வுக்கடலில் பொருளற்றவராய் நீந்தும் எந்த மாந்தரும் பயனடைவர். கற்பின் எல்லை நீவிர், பெண்மையின் அணியும் ஆவீர்.'' சுசரிதை நகைத்து இடைமறித்துக் கூறினாள்: ''நீவிர் கவிதை இயற்றத் தொடங்கிவிட்டீர்.''

அவள் மாற்றத்தின் குறிப்புரை உணர்ந்தேன். விரதிவச்சிரன் கற்பனைப் படிமம் இயற்றிச் சுசரிதையின் அன்புள்ளத்தே மகிழ்ச்சிக் கடலைத் தூண்டிவிட்டேனாக, அவன் நினைவு அவள் உள்ளத்தினின்றும் அகலவில்லை. நான் எங்கு மீட்டும் ஒரு கற்பனை அழகுப் படிமத்தைப் படைத்துவிடுவேனோ என அஞ்சினாள். மனத்தில் பிறந்த காமதேவனை வெறும் சடத்தன்மை வாய்ந்த உடற் பண்பெனவே கருதுகின்றேன். அவள் தன் உரையால் என் மயக்கம் தெளிந்தது; விரதிவச்சிரன் முன்போலவே இப்போதும் இயங்குகின்றார்; இல்லறத்தில் முழுகவில்லை. நான் இதுவரைக்கும் கீழ் மட்டமான நிலையில் நின்றும் அவள் உரைகளைக் கேட்டுவந்தேன்! இப்போது அவள் கற்பினைப் பற்றிப் புகழ்பாடத் தொடங்கிவிட்டேன். ஒரு நொடியில் இரு நெஞ்சங்களை ஒன்றுபடுத்திய மனத்தில் பிறந்த மலரம்புக் கடவுளது ஆற்றலை இப்பொழுதாவது உணர்ந்தேனா? இல்லையே. நான் எனது நாணத்தை ஒழிக்கக் கூறினேன்: ''இல்லை தேவீ! நான் உணர்ந்த உண்மையினைக் கூறியவாறிருக்கின்றேன். ஒருண்மை தெரிவிக்கட்டுமா, பெருமாட்டீ? இறும்பூது கொள்வீர்!'' ஊக்கமுடன் வினவினாள்: ''என்ன அது அன்புடையீர்?'' தாமதித்து அவளது ஊக்கத்தை ஆக்கப்படுத்தி

உரைத்தேன் : "வரும்பொருள் உரைத்தலில் நான் திறமை சாலி. காசியருகே ஓரூரில் காரணமின்றி உங்கள் உள்ளத்தில் கொழுநனைக் காணும் ஆவலைத் தூண்டியவன், அந்த அந்தணன் யானே!'' சுசரிதை கண்கள் திறந்தவை திறந்தபடியே மிகுந்த நேரம் நின்றுவிட்டன. சிறிது நேரம் பிறகு நெற்றி நிலம்படிய என்னை ஆர்வமோடு வணங்கினாள்.

## உயிர்ப்புப் பதினைந்து

பத்திரேசர்க்கோட்டை அண்மையிடம் நாணற்காடு காணப் பெற்றது. வெள்ளிப் பலகைபோல வெள்ளொளி வீசும் மணற் காட்டினைக் கவிந்து எரியும் நிலத்து நெருப்புத் தழல்களாகிய ஆயிரம் ஆயிரம் நாக்குக்கள் வானந்தொட முயல்கின்றனபோல நாணற்காடு காணப்பெற்றது. இருந்திருந்து காற்றினால் கொள்ளையிடப்பெற்ற மணற்குவியல் நெருப்பு, மேலெழுந்து எரிந்து அச்சத்தை விளைவித்தது. கீழும் மேலும் எங்கும் தண்மை காண்டலரிதாக இருந்தது. நான் பன்னாட்கள் குதிரை மீது அமர்ந்து வழிகடந்தேன். ஒருமுறை கவலை நிறைந்த பட்டம்மையின் முகமும் மற்றொருமுறை சுசரிதையின் மலர்ந்த முகமும் நினைவுக்கு வரும். ஒரு நினைவு என்னைப் பத்திரேசர்க் கோட்டை நோக்கி இழுத்தது; மற்றொன்று தானேசர்புரி நோக்கி இழுத்தது. தானேசர்புரியில் நிகழ்ந்தனயாவும் கண்ணாடி நிழற்படிவம் போலத் தெளிவாகக் காட்சிக்குற்றன. சுசரிதையை விடுதலை செய்துகொண்டு வெங்கடேசபட்டரிடம் சென்றபோது அவதூதர் அகோர பைரவரும் மாமாயையும் இருந்தனர். அது அரியதோர் காட்சியாக இருந்தது. சுசரிதை வணங்கி ஒரு பக்கம் அமர்ந்தாள். நானும் அப்படியே செய்தேன். நெடுநேரம் அமைதி நிலவிற்று. அவதூத அடிகள் மாமாயைக்கு நாட்டைப்பற்றிச் சில சொல் சொன்னார். அம் மொழிகளை நினைத்தபோதெல்லாம் எனதுடம்பு மயிர்க்குச் செறியும். என்ன நிகழுமோ! வெளியே எங்கும் வெடிப்புநிலை குடிகொண்டிருந்தது. மக்கட் கூட்டம் குழப்பமுற்றிருந்தது. காலக்கடவுளின் அச்சந்தரு புருவங்கள் யாவரையும் வெருட்டிக்

கொண்டிருந்தன. பத்திரேசர்க்கோட்டை உச்சிகளைக் கண்டதும் பட்டம்மையின் நினைவே தலைமையாகக் என்னைக் கவ்விற்று. பன்னாட்கள் பின்னர் மீண்டும் இளவரசியைக் காண்போம். ஆனால் அரசியல் வினைகளும் ஆற்றவேண்டியுள்ளது. முதலில் அம்மையைக் காணும் ஆவல் மீறினாலும் உலோரிக தேவரிட மிருந்து முதலில் விடுதலையடைய விரும்பினேன். இந்தக் கொளுத்தும் வெய்யிலில், முழங்கும் நாணற் காட்டினில் வேகும் காற்றினில் இளவரசியின் நினைவு வந்ததும் உள்ளத்தில் ஒரு தண்மை ஏற்பட்டது. அவளிடத்தே கற்பகக்கொடி முளைத் துள்ளதோ, திங்கள் கதிர்கள் முளைத்துள்ளனவோ சந்தனச் செடியின் தளிர் முளைத்தனவோ யாதென அறியேன். என் உடம்பு முழுவதும் கடம்ப மலர்போன்று மயிர்பொடித்தது. எதிரே மெல்லிய ஒழுக்கொடு சரயு நதி பாய்ந்துகொண்டிருந்தது.

மாசரயுவில் நீராடி நேராக உலோரிக தேவரிடம் சென்றேன். என்னைக் கண்டதும் நல்ல உள்ளத்தினர் ஆயிரக் குறு மன்னர் கண்களில் நீர் ததும்பிற்று. மிகுந்த அன்போடு வணங்கி என் நலம் உசாவினர். பட்டம்மையின் நலன்களையும் எனக்கு அன் போடும் விவரித்தார். மகிழ்ச்சிக் குரலில் உரைத்தார்: "பட்டம்மை இந்த மலட்டு வையத்திலே கற்பகக் கொடி, பெருமான்! அவள் தெய்விக இயல்பு எந்த நோன்பின் பயனோ? நீங்கள் அந்த அம்மையை என் இல்லத்தில் கொண்டுவந்ததால் மகிழ்கின்றேன். கடன் பட்டுள்ளேன். என் வினை தீரப் பெற்றேன். போங்கள் உங்களைக்கண்டு அம்மை மிக மகிழ்வாள். அவருக்கு உமது காட்சி தருக." உலோரிக தேவருக்குப் பணி வுடன் வணங்கி மாமன்னன் திருமுகம் அவரிடம் தந்தேன். பட்டம்மை இருக்குமிடம் விரைந்தேன். அவருக்குப் படிக்கத் தெரியாததால் தம் மந்திரியை அழைத்துக் கொண்டிருக்கும் போதே நான் அப்பாற் போனேன்.

இங்கு மாராணி அரசித்திருவின் திருமுகம் படித்துப் பட்டம்மை துயரமுடன் என்னை நோக்கிப் பின் கீழ்நோக்க லானாள். கோவைப் பழம் போன்ற அவள் செவ்விதழ்கள் வெயிலால் எரிந்த தாழம் பூவென வெளிறுபட்டன; அவள் பெரிய பெரிய கண்கள் நீரில் முற்றிலும் நனைந்த வலியான் குருவிக் குஞ்சுகளென அசையாமல் நின்றுவிட்டன. பன்னாள் பின்னர் என்னைக் கண்ட மகிழ்ச்சியால் பூங்கொம்பர் அனைய அவள் உடம்பு அலைமோதியது. திருமுகம் படித்த பின்னர் அசையாமல் மரமென ஆயிற்று. அலைவீசிய மகிழ்ச்சிக் கடல்

திடீரென வீசிய பனிப்புயலால் உறைந்து பாறையாகி விட்டது போலும். அவளது இதழ் துடித்தது, நெற்றி சிறிது சுருங்கி விட்டது; மோவாய் சிறிது அசைந்து இல்ல முழுவதிலும் அழகைப் பொழிந்தது. என்னுல் மாபெருங் குற்றம் நிகழ்ந்து விட்டது என உணர்ந்தேன்; நான் குற்றவாளியென இழிந்தோனென நொய்யவனென மகிழ்ச்சிக் கெதிரான பண்பினனென அவள் முன்னுல் செய்வன உணராது மரமாயினேன். அவள் என் மீது இரக்கங் கொண்டாள், தன்னையே தாங்கிக் கொள்ள முயன்றுள். இதே நேரம் நிபுணிகை வந்து சேர்ந்தாள், அவள் இன்னும் வலிகுன்றிய நிலையில் இருந்தாள், அவள் உடம்பு வெளுத்திருந்தது. நான் மீண்ட செய்தி கேட்டு உவகை பூத்தாள். நல்ல செய்திகள் கேட்கும் ஆவலால் அணுகினுள். ஆனுள் பத்தினியம்மையின் நிலையையும் எனது நிலையையும் கண்டு அவளும் மரமென நின்று விட்டாள். பேசாமல் எனக்கு வணக்கம் செய்து பட்டம்மைபால் அணுகினுள்; வெள்ளிப் பேழைக்குள் இருந்த திருமுகம் கண்டாள். அவள் ஆவலைத் தணிக்கத் திருமுகத்தின் வரலாற்றினைச் சுருக்கமாக விவரித்தேன். அவள் முகத்தே பல்வகைத்தான கருத்து மெய்ப்பாடுகள் வந்தன, பின் மறைந்தன. அவள் ஒரே மூச்சில் ஏதேதோ கூறிவிட்டாள். மிதிபட்ட பெண்சிங்கம் போன்று வெகுண்டு தன் தோளைத் தேய்த்தவளாய்க் கூறினுள்: "இழிவுறுக பட்ட! பட்டம்மைக்கு இழிவுண்டாக்க நீ எப்படி உடன்பட்டாய்? கன்னேசி மாமன்னன் காமுகர்களுக்குப் புகலிடம் அளிக்கும் இழிதகை மன்னன் பட்டம்மையின் ஊழியனைத் தன் அரச அவையினன் ஆக்க எத்துணை துணிவு கொண்டான்? எந்த அறிவு கொண்டு மௌக்கரிகளின் அரசி தன் திருமுகம் சுமந்து வர ஒருப்பட்டனை? சே! சே!. இளவரசிக்குத் தீங்குறுத்தும் என்ற செய்தியை அறியும் வல்லமையற்றனை. இந்தத் திருமுகத்தைக் குப்பைத் தொட்டியில் இட்டுவிடும் துணிவு உனக்கில்லாது போயிற்றே!" அவள் வெகுண்டவளாய்த் திருமுகத்தைக் கிழிக்கத் தொடங்கினுள். மௌக்கரி மரபினர் அனைவரையும் நசுக்கி விடுவாளோ எனுமாறு அவள் விரல்கள் துடித்தன. பட்டம்மை மெதுவாக அவளைத் தன்பால் இழுத்தணைத்துக் கொண்டு தலையில் தடவிக் கொடுத்துக் கூறினுள்: "என் உடன் பிறந்தாளே! அப்படிக் கூருதே. பட்டன் நம் போடகன், காப்பாளன், வளர்க்குந் தந்தை. எம் திறத்து ஏதுஞ் செய்ய உரிமை அவனுக்குண்டு. அவன் நமது நன்மைக்கும் நாட்டு

நன்மைக்கும் செய்வனவற்றிற்கு மதிப்புத் தருதல் வேண்டும். நீ பட்டம்மையை என்னவெனக் கருதுகின்றனை? சீ! சீ! இவ்வளவு சினம் கொள்ளலாமா?'' அவள் பட்டம்மை மடிமீது மூர்ச்சித்து விழுந்தனளேனும் கண்களில் இடையருது நீரொழுகியது.

இப்போது பட்டம்மை என்னை நோக்கினுள். முன்னை யினும் மிகுந்த துயரப் பார்வையினள் ஆகிக் கூறினுள்; நிபுணிகையைப் பொறுத்து அருளுகபட்ட! அவள் உடம்பிலும் உள்ளத்திலும் வலி குன்றினுள்; உடனுக்குடன் உள்ளக்கிளர்ச்சி கொள்கின்ருள். அவளது சதைக்கட்டுத் தளர்ந்து விட்டது.'' சிறிது நேரம் பட்டம்மை நிபுணிகையின் தலையினைத் தடவிக் கொடுத்தது இராகு வாயின்றும் விடுபெற்ற திங்கள்மீது கற்பக இலை அமுதம் பூசுவது போலிருந்தது. நிபுணிகை இன்னும் உணர்விழந்து உறக்கநிலை யெய்தினுள். பட்டம்மை அவள் தலையுச்சியைத் தடவியவளாய்ச் சாற்றினுள்: ''அண்மையி லிருந்து இவளது நிலை இப்படித்தான் இருக்கின்றது. ஆவேச முறுகின்ருள்; ஆத்திரப்படுகின்ருள். விளைவாக மூர்ச்சித்து விழுகின்ருள். நல்லது, பட்ட, நிபுணிகை பற்றி மாமாயையுடன் பேசினுயா?'' யானே வெட்கமெனும் கடலில் முழுகி எழுந்த வாறிருந்தேன். பட்டம்மை திறமையோடும் எனது நினைப் பினை வேறு வழிக்குத் திருப்பினுள். அவதூதர் அவளுக்கு ஒரு மருந்து கொடுத்திருந்தார்; விட்டுணுக்கிரந்தி இலைச் சாற்றில் கலந்து அருந்த வேண்டும். உடனே அது நினைவுக்கு வந்தது. மருந்தினை இளவரசிக்கு அளித்தேன் நான்; அவளைக் கண் ணெடுத்துப் பார்க்க எனக்குத் துணிவில்லை. இளவரசி என் நிலைமையைக் காணப் பொறுக்கிலள். என் துயரை மறக்கடிக்கப் பற்பல கட்டளைகள் இடத் தொடங்கினுள். படுக்கை செம்மைப் படுத்தினேன், விசிறினேன்; தண்ணீர் தெளித்தேன். பிறகு அவளைத் திறந்த முற்றத்திற்கு எடுத்துப்போக முடிவு செய் தோம். பேசாமல் பட்டம்மையிட்ட பணிகளை நிறைவேற்றிய வாறிருந்தேன். ஆனுல் ஒரு நொடிக்காயினும் நிபுணிகை கடிந்து கூறியனவற்றை மறக்க முடியவில்லை. என் தவறுகளை உணர்ந்தேன். 'என்ன செய்து விட்டேன்! தீவினையோனே! நாடோடியே! இளவரசியின் பெருமைக்காக உன்னையே ஊறு படுத்திக் கொண்டனையே; முடிவில் செருக்கு மிகுந்த கன்னேசிப் பேரரசன் உன்னைப் பெண்டிர் பின்னுக ஓடுபவன் என்று கூறி இழிவு செய்தானே, அப்போது இளவரசிக்குப் பெருமை தரத்தக்க விடையொன்று ஏன் பகரவில்லை. 'நீ இழிக! தீவினையோனே நீ

இழிக! மௌக்கரிகள் தம் பேரரசியினது திருமுகத்தை மாமன்னர் மன்னன் முன்னுலேயே நீ ஏன் காலில் இட்டுத் தேய்த்துவிடவில்லே. அந்த நேரத்தே உனது தன்மான மெல்லாம் எங்குப் போயிற்று?' இளவரசிக்கு இழிவுண்டாகும் படி செய்தேன். இந்தத் தவறுக்குக் கழுவாய் இல்லே, கழிவிரக் கமுமில்லே, நெருப்பில் எரித்தாலும் கழுவாய் ஏற்படாது.

முற்றத்திற்கு வந்து பட்டம்மை முறுவலிக்க முயன்ருள். தன்னுள்ளத்தே துயரில்லே, துன்பமில்லே வெட்கமில்லே என்று தெரிவிக்க விரும்பினுள். மலர்ந்த தாமரை போன்ற அவளது முகத்தே முயன்று வரவழைத்த புன்முறுவல் அழகுடையதாகவே இருந்தது. இந்த நகை எனது நெஞ்சினேப் பிளந்தது. ஆகா, இந்தத் தெய்வீக மேன்மைக்கு ஊறு நிகழ்த்திவிட்டேனே! தாமரை மலரினும் மெல்லிய இதயத்தில் பேரிடி விழும்படி செய்துவிட்டேனே! என் உள்ளம் முழுவதும் கரைந்து இளவடி களில் பாய விழைந்தது. குரல் அடங்கிவிட்டது. சொல்லாற்றல் சுருங்கியது; இடையருத கண்ணீர்ப் பொழிவினுல் என் முகம் நனேந்தது; நாணத்தாலும் கழிவிரக்கத்தாலும் முழுவுடம்பும் வெந்தது. திசைகளில் பாழ்மை செறிந்தது. நேராக நிற்க முடியவில்லே, தலே சுழலத் தொடங்கிற்று. பட்டம்மை என் னருகே வந்தாள்; அன்போடு என் தலேமீது கைவைத்துத் தடவிக் கொடுத்துக் கனிந்த குரலில் கூறினுள்: "நீயும் உள்ளக் கிளர்ச்சியுற்றனேயோ, ஆவேசமுற்றனேயோ, பட்ட! நிபுணிகையின் சொற்களால் இவ்வளவு கலங்கிவிட்டனேயே! எழுந்திரு, பார், பேறிழந்த உன் பட்டம்மையைப் பார். நீ ஒரு குற்றமும் செய்யவில்லே. நீ கன்னேசி மன்னன் அவையினுகி விட்டால் எனக்கெப்படி மானக்கேடாகும். ஏன் வீணுகை நெஞ்சங் குமுறுகின்றனே." எனதுணர்வு மெதுவாகத் திரும்பிற்று. மண்டியிட்டுக் கூறினேன்: "பெருமாட்டீ! நீ யாவற்றையும் பொறுக்க முடியும், எந்தத் தீமையையும் மறக்க முடியும், ஆனல் பேறிழிந்த பாணபட்டன் உள்ளத்தணிவு எப்படிப் பெற முடியும்?"

அவள் முகத்தில் ஒரு புதிய இரக்கம் அரும்பிற்று. அவள் குரலும் அடங்கிவிட்டது. முகம் வெளுத்தது. நீரில் முற்றிலும் நனேந்த கடம்ப மலர் வெய்யிலில் காய்ந்ததென அவள் முகம் காணப்பெற்றது. நான் மீண்டும் உரைத்தேன்: "தேவீ! கழிவிரக்கமெனும் கடலில் முழுகியவாறுள்ளேன். நாணம் ன்னும் ஆழ் சேற்றில் செருகப்பெற்றுள்ளேன். எனக்குச் செய்யுத்தக்க

கடமைகள் விளங்கவில்லை. நிபுணிகை உண்மையையே உரைத்தாள். மௌக்கரி மாராணியின் அழைப்பை அப்பொழுதே கிழித்தெறிந்திருக்க வேண்டும். பட்டம்மைக்கு பணிபுரியும் பெருமை வாய்ந்தவன் மாமன்னர் தம் சபையில் அங்கத்தினனாக வேண்டியதில்லை. எந்த ஆற்றல் மோதியதால் அறிவிழந்தேனே அறியேன். எந்த முகத்தைக் கொண்டு பொறுத்தருளுமாறு உம்மை வேண்டுவது?''

இப்போது பட்டம்மை பொறுக்க முடியாதவளானாள். அவள் முகம் கதிரவன் தோன்றுமலைமேல் ஏறியமர்ந்த திங்கள் போலச் சிவந்தது. அவள் கூறினாள்: "நான் அவ்விதம் கருதவில்லை. நீ குமாரகிருஷ்ணவர்த்தனனுக்கு மிகவும் கடன்பட்டவன். குமாரனனின் வேண்டுகோளின்படி செய்தனை. இது நிபுணிகைக்குத் தெரியாது, எனக்குத் தெரியும். நீ ஏன் குமாரனுக்குக் கடன்பட்டனை? என் பொருட்டல்லவா? நீ குற்றவாளி என்று கூறுவதன் முன்னம் நான் கண்டதுண்டமாதல் வேண்டும். நீ எவ்விடத்தும் என்றும் எனக்கு இழிவு வரும் வகையில் நடந்து கொள்ளவில்லை. உடல் நலக் குறைவினால் நிபுணிகை தீக்குறள் மொழிந்தாள். நீ செய்வது எனக்கு முறைமையே, உடன்பாடே. இனியன கூறுதவன் என்ற பெயரெடுக்காதே. நம்புக. நீ விரும்புவது எனக்கு அறம் எனத்தகும். எழுக பட்ட, என்னைத் தாங்குக. நான் இத்துணை வெட்கப் பொறையை ஆற்ற முடிகிலேன்.'' ஒரு நொடியில் என் சடத்தன்மை விலகியது. மூடு பனியகன்ற பின்னர் திசையிடம் உவகை மலர்வதென, இருள் நீங்கிய பின் கீழ்ப்பால் மலர்ச்சியுறுவதென, புயல் அடுக்குகள் நீங்கின பிறகு குளிர்கால வானம் மகிழ்ந்ததென என்னுள்ளம் மலர்ச்சியுற்றது. பட்டம்மையின் கண்களில் இதுவரை இல்லாத தோர் இனிமை கண்டேன். பிறவிதோறும் வாழ்க்கைப் பயன் பெற்றவனானேன் என்று மகிழ்ந்தேன். அவள் பார்வை புதிய சுவைக் கடலில் மூழ்குவித்தது, அறிமுகமில்லாத மகிழ்ச்சியுலகிற்கு இழுத்துச் சென்றது. நான் விரைவாக எழுந்தேன்; "தேவீ! பட்டம்மையே!'' என்று மட்டும் கூற முடிந்தேன்; உவகைக் கண்ணீர் பொழிய அவளை நோக்கினேன். அவள் ஒன்றும் பேச வில்லை; அருள் நிறைந்த அழகிய கடைக்கண்ணில் என்னை நோக்கி விட்டுக் குனிந்தாள்.

அப்போது கதிர்க்கடவுள் மேற்பால் சார்ந்தான். பூமியிலிருந்தும் வானம் வரை செங்கதிர் வலையைப் பரப்பினான். வீட்டுக் குளங்களில் வெண்ணுரைகள் ஒலி செய்தவாறு தத்தம் உறை

விடங்களை நண்ணின. நடனமயில்கள் தாம் வாழ்கிளைகளை ஆவலுடன் பார்க்கத் தொடங்கின. நீர் தாங்கிச் செல்லும் அரிவையர்தம் சிலம்பொலி உள்ளத்தை உருக்கா நின்றது; வான இடங்களில் இருந்தும் இன்னதென அறிதற்கரிய களைப்பு நிலத்தின் மீது இறங்கத் தொடங்கிற்று. பட்டம்மையின் கன்னங்கள் நாணத்தால் சிவப்பேறின. அவற்றில் ஒரு சிறந்த மலர்ச்சி காணப்பெற்றது; கடைக்கண் பார்வையில் சொல்லற் கரிய மென்மைத் தன்மை இருந்தது. பன்னாட்கள் வரை திரண் டிருந்த துன்பம் உள்ளத்தைவிட்டு அகன்றமையால் தூய மகிழ்ச்சிப் பெருக்கம் முகத்தில் பாயத் தொடங்கிற்று. அப் பெருக்கம் முகத்தில் தோன்றும் இயல்பான மெய்ப்பாடுகளுடன் மோதிற்று. ஆகா! பட்டம்மையின் அத்தோற்றம் காணக் கிடைக்காத தொன்றாகும். வானயாற்றுச் சுழல்களில் சிக்கிய பாரிசாதக் கொடிபோலப் பூங்கொம்பர் அனைய அவளது உடம்பு பல்வேறு மெய்ப்பாடுகளின் மோதுதல்களில் அகப்பட்டுக் கொண்டது. மிகு நேரம் வரை உற்று நோக்கியவாறிருந்தாள். பின்னர் சென்று ஒரு திண்ணையில் அமர்ந்துகொண்டாள். தனது தலைவகிட்டினைச் சேலையால் மூடமுயன்றாள். அம் முயற்சியின்போது ஒரு முறை என்னை நோக்கினாள், அஃதென் உள்ளத்தைத் துருவி அதனுள் உள்ள கருத்தை உணர முயன்றதுபோல இருந்தது. புன்முறுவல் செய்ய முயன்றாள்; ஆனால் முயற்சி தோற்றது. குளிர்கால வான இடத்திலே திடீரென மின்னல் கொடி தோன்றி மறைந்தது போலிருந்தது; அழகென்னும் கடலில் ஒரே அலை எழுந்து மீண்டும் அமைந்தது போலுமிருந்தது. நான் கைகட்டியவனாய் வினவினேன்: "பெருமாட்டீ! ஊழியனைப் பொறுத்தருளினீர், மிகவும் கடமைப் பட்டுள்ளேன். எனினும் என் நெஞ்சகத்திருந்த வெட்கம் எனும் முடிச்சு அப்படியே உள்ளது. அருள் உண்டேல் சாற்றுக! காலம் சென்ற மௌக்கரிமன்னன் மாராணியினது அழைப்பைப் படித்து எதற்காகத் துயரமுற்றீர்? ஊழியன்மீது வெகுளலும் அருளலும் என்றும் தக்கதே. என்னிடம் குற்றம் நிகழ்ந்ததில்லை யெனில் உமது உள்ளத்தே துயரம் எங்ஙனம் உண்டாகும்?" மிகுந்த நேரம் வரை ஒரு பொருளும் அற்ற பார்வையான் பார்த்துக்கொண்டிருந்தாள். உள்ளத்தை எங்கேயோ வைத்து மறந்தாளோ? ஏற்கும் ஆற்றலை உள்ளம் இழந்துவிட்டதோ? உள் துடிப்பு அடியோடும் நின்று விட்டதோ? என்னென்று உரைப்பது? வேம்பு மர உட்பகுதிபோல அவள் முகம் வெளுத்து

விட்டது. புதிய துயரம் உண்டாகிவிட்டதோ வென நடுக்கம் கொண்டேன். ஆனால் பட்டம்மை தன்னையே தாங்கிக்கொண்டாள், கண்கள் கீழ்நோக்கின; கீழிதழ் துடித்தது. மூக்கந் தண்டின்மீது சிறிது சுருக்கத்தால் தயக்கவுணர்வு காணப் பெற்றது. "என்னை அவதூதர் அடி நிழலுக்கு அழைத்துச் செல்க, அல்லது சுசரிதையிடம் அழைத்துச் செல்க, வருகின்றேன்."

பட்டம் பெருமாட்டியின் இரண்டு முடிபுகளும் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் இந்நேரம் அவள் கருத்தை எதிர்த்தல் தகுதியன்றெனப் பேசாதிருந்தேன். அவள் என் கருத்தினை உணர்ந்து கொண்டாள். எழுந்தவாறியம்பினாள்: "அல்லது உனக்குத் தக்கது எனத் தோன்றும் இடத்திற்கு அழைத்துச் செல்க; ஆனால் நான் மௌக்கரிகளின் மாமன்னவன் அரச மரபினர் எவனில்லத்தினையும் புகலிடமாகக் கொள்ளேன்." இங்ஙனம் கூறிய பின்னர் அவள் விரைவாக நிபுணிகையிடம் சென்றுவிட்டாள். நான் அங்கேயே நின்று விட்டேன். இரண்டு நாழிகை கழிந்த கங்குலாக இருக்கும். எவனோ மைகொண்டு பூசிவிட்டான்போல எங்கும் இருள் சூழ்ந்து கொண்டது. என் உள்ளத்தில் பல கவலைகள் தோன்றி மறைந்தன. செய்யத் தக்க கடமைகளை முடிவு செய்ய முடியவில்லை. இதே நேரம் புறத்தே ஆயிரக்கணக்கான குரல்கள் வெற்றியோசை முழங்கக் கேட்டேன். எந்த விழாவணி அது எனப் புரிந்து கொள்ள முடியவில்லை. சற்றே வெளிப்போந்து அறிந்து கொள்ளலாம் எனப் புறப்பட்டேனாகலும் பட்டம்மை என்னைத் தன்பால் விளித்தாள். நிபுணிகையின் உணர்வு திரும்பிக்கொண்டிருந்தது. பட்டம்மை அன்போடு அவளுக்கேதோ அறிவுறுத்திக் கொண்டிருந்தாள். நிபுணிகை அழுது கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் எழுந்திருக்க முயன்றாள்; ஆனால் பட்டம்மை அவளைத் தடுத்தாள். அவள் கண்ணீரே அவள் உள்ளத்துத் துயரைத் தெரிவிப்பது போன்று காணப்பெற்றது. நான் அவள் அண்மையில் சென்று வினவினேன்: "எப்படி இருக்கிறாய் நிவுனியா?" விடைக்கு மாறாகக் கண்ணீரே மிக்குப் பொழிந்தது. பட்டம்மை காதலோடும் அவள் தலையைத் தொட்டுக் கொடுத்துக் கூறினாள்: "உள்ளந் தணிக நிவுனியா, பட்டன் சுசரிதையின் செய்தி அளிப்பான்." உடனே நிபுணிகையின் முகம் மலர்ந்தது. திடீரென எதிர்பாராத வலிமை வரப் பெற்று வினவினாள்: "சுசரிதையைக் கண்டாயா, பட்ட?

பேறிழந்த அந்த அரிவை எவ்வாறு இருக்கின்ருள்?'' விடையிறுத்தேன்: ''பேறிழந்தவள் அல்ல அவள்; குறையாத மங்கலப்பேறுடையாள். அவள் கொழுநன் திரும்ப அவள் பால் வந்துள்ளான்.'' நிபுணிகை வியப்பும் உவகையும் ஒரு சேரப் பெற்றவளாய்க் கூறினள்: ''உண்மையாகவா?'' நானும் சுவை மிகப் பெற்றவனாய் இயம்பினேன்: ''உண்மை!''

இப்போது வெற்றி முழக்கம் பெருகியவாறு பட்டம்மை இருந்த இல்லத்திற்கு நேராக வந்தது. ஆயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் கடவுள் மகன் துவரமிலிந்திரருக்கு வெற்றி முழக்கம் செய்துகொண்டிருந்தனர். பட்டம்மை வியப்பும் செய்தி அறிய ஆவலும் மிகப் பெற்ருள். இதற்குள் ஒரு பணிப் பெண் ஓடோடியும் வந்து கூறியதன் சுருக்கம்: ''குறுமன்னன் உலோரிக தேவர் தம் அரசியொடும் துணைவரொடும் வந்துள்ளார்; அவர் கையில் தொழுகைப் பொருள்கள் உள்ளன. அவர்கள் காலதாமதமின்றி இளவரசியின் காட்சி விழைகின்றனர்.'' இளவரசி ஒரு நொடியில் பெண் சிங்கத்தின் பெருமிதம் கொண்டாள்; எனக்குக் கட்டளையிட்டாள்: ''பார், பட்ட, என்ன செய்தியென!'' எனக்கொன்றும் விளங்கவில்லை. வாயிற் கண் வந்து கண்டேன், வியப்புற்றேன்.

நூற்றுக்கணக்கான தீப்பந்தங்கள் ஒளி செய்ய ஒரு மாபெரும் மாந்தர் தம் குழாம் நடனம் பாட்டு வாத்திய முழக்கம் முதலியனவற்ருல் திசையிடங்களில் எதிரொலி உண்டாமாறு குழுமி இருந்தது. யாவருக்கும் முன்னதாகக் குதிரைமீது உலோரிக தேவர் அமர்ந்திருந்தார்; அவர் பின்னல் மந்திரி புரோகிதர் இருவரும் குதிரைமீது அமர்ந்திருந்தனர். அவருக்குப் பின்னல் ஒரு பெரிய பல்லக்கில் அரசி அமர்ந்திருந்தார். பல்லக்கின் பின்னல் மற்போர் வல்லுநரின் கூட்டம் இருந்தது. அவர்கள் தமது போர்க்கலை பயின்றவாறிருந்தனர். அவர்கள் விளையாட்டில் முரட்டுத்தனம் இருப்பினும் கட்டுப்பாடு இருந்தது. நூற்றுக்கணக்கான வீரர் தத்தம் படைக்கலங்களைக் கையாண்டவராய், உடம்பு நீளல் சுருங்குதல் குதித்தல் தாண்டுதல் வளைதல் முதலிய அழகிய-ஆனல் திடுக்கிடும் நடை பயின்றவாறிருந்தனர். அவர்கள் அடி மிதித்தலால், ஆயுதங்கள் மோதுதல்களால், தோள் தாக்குதலால் இடிபோன்ற பேரோசை வான இட முழுவதையும் பற்றிக் கொண்டது; இரண்டிரண்டு வீரர்கள் உடற் பெருக்கமும் சுருக்கமும் செய்தவராய்ப் போரில் சிக்கிக் கொள்வார்கள்; திடீரென ஒன்றும் நேரவில்லை போலப் பிரிந்து-தொலை

வில் நிற்பார்கள். நூற்றுக்கணக்கான மல்லர்களாயினும் ஏதோ புறக்கட்டளைப்படி ஒரே நேரத்தில் இயங்கினர் போன்று தென் பட்டனர். அடிக்கடி திடீரென போர் விளையாட்டுக்கள் நிற்கும், வாத்திய முழக்கங்கள் நின்றுவிடும், அப்போது பேரமைதி ஏற்படும். அமைதி முடிவில் அனைவோரும் ஒரே குரலில் முழக்கம் செய்வர். மீண்டும் போர் விளையாட்டுக்கள் தொடர்ந்துவிடும். அது நடைபெற்றபோதிலும் பட்டம்மை இல்லம் முன்னர் ஒரு வட்டத்தில் இயங்கினர். பெரிய வட்டத்துள்ளே ஓரைம்பது இரட்டையர்கள் சிறு வட்டமாக நின்றனர். அவர் கைகளில் தடிகள் இருந்தன. உலோரிக தேவர் கீழே இறங்கினர். புரோகிதரும் அமைச்சரும் இறங்கினர்கள். உலோரிக தேவரது குறிப்பின் பேரில், அனைவரும் அமைதி பூண்டனர். அவர் மிகுந்த ஆர்வமொடு பட்டம்மையை அழைத்து வருமாறு வேண் டிக்கொண்டார்; கூறினர்: "பெருமான், கடவுள் மகன் துவர மிலிந்திரன் திருமகள் செய்தி எமக்குத் தெரியாதிருந்தவரை ஏற்பட்ட குற்றங்கள் யாவும் பொறுத்தற்குரியன. இப்போது அம்மையார் யாரென விளங்கிவிட்டது; அவருக்குச் செய்ய வேண்டிய தொழுகையில் சற்றும் தாமதம் ஏற்படக்கூடாது. தாங்கள் கன்னேசி மாமன்னவனின் திருமுகம் எனக்களித்தீர். அதன் வாயிலாக எமக்கு எல்லாச் செய்திகளும் தெரிந்துவிட்டன. உம்மிடத்தில் பேச நிறைய உண்டு, ஆனல் தொழுகைக்கு நேர மாகிவிடும். அம்மையாரை அழைத்து வருக."

நான் செய்தியைப் பட்டம்மைக்குத் தெரிவித்தேன். சிறிது நேரம் தயங்கியபின் வினவினள்: "போக வேண்டுமா, பட்ட?" "கட்டாயம்" என்றேன்.

பட்டம்மை தோன்றியதும் வாள் உருவி உலோரிக தேவர் பணிந்தார். உடனே புரோகிதர் சங்கு முழங்கினர். உடனே திசைகள் முழுவதும் துவரமிலிந்திரர் தம் திருமகளுக்கு வெற்றி எனும் முழக்கம் பரந்தது; பத்திரேசர்க்கோட்டை இல்லங்களில் அவ்வொலி மோதி எதிர் முழங்கியதால் வெற்றி முழக்கம் பதின் மடங்காயிற்று. இதே நேரம் உலோரிக தேவர் தமது இருபத் திரண்டு அங்குல வாளை உயர்த்தினர். பார்த்துக்கொண்டிருக் கும் பொழுதே நூற்றுக்கணக்கான பாணுத்தடிகள் கடகடவென மோதின. அஃதோர் அச்சந்தரு காட்சி! தடிகள் மோதலால் தீப்பந்தங்கள் நடுங்கின. ஒவ்வொரு மல்லனும் தடியடிகளுக்குக் குறியானுன் எனத் தோன்றினுன். இடையருது தடிகள் சுழன்ற போதிலும் எவனுக்கும் அடிபடவில்லை என்பது வியப்புறத்தக்க

செய்தியாகும் ; எவனும் இடம் பெயரவில்லை, நடுக்கமுற்வில்லை. வட்டம் சுருங்கியவாறு மிகச் சிறியதாகிவிட்டது ; வெறும் தடிகளைத் தவிர்த்து வேறெதுவும் காட்சிக்கு வரவில்லை. தடிகள் தடதடவென முழங்கின. அனைவோரும் வெற்றியோசை எழுப்பினர். வியப்புடன் கண்டேன், தடிகளின் இரு மேடைகள் உருவாயின. இளஞ்சிறுமியர் அகச்சுவை செறிந்த பல்லவியை இனிய குரலில் பாடி நடமாடிக் கொண்டிருந்தனர். தடிகள் மோதுதலால் ஏற்பட்ட கடிய ஓசை நடுவே இளஞ்சிறுமியரின் இனியவோசை எடுப்பாக இருந்தது. எப்பொழுது மீண்டும் மல்லர்கள் வட்டத்தில் நின்றனர், எப்போது மீண்டும் நடுவட்டத்திற்கு மாதர்கள் வரிசையொற்றுமைக்குத் திரும்பினர் என்பதை அறியமுடியவில்லை. இது நடனத்திறமை. எத்தனையோ வகைக் கால் பெயர்ச்சி இருப்பினும் யாவும் தாளத்திற்கேற்றவாறிருந்தன. இளஞ்சிறுமியர் அழகிய அவிநயத்துடன் அசைந்து பட்டம்மையினைச் சூழ்ந்து கொண்டனர். அவளை எளிதில் மலர்க்குழுவைத் தூக்குவதெனத் தூக்கித் தடிகளால் இயன்ற மேடைமீது அமர்த்தினர்கள். பிறகு குரவைக் கூத்துத் தொடங்கிற்று. பூதங்களின் நடனத்திற்கு நடுவே பார்வதி வீற்றிருந்தால் போலிருந்தது. பட்டம்மையின் இயல்பான பெருமிதம் அவள் தோற்றத்தில் மிளிர்ந்தது. ஒரு நொடியும் கலக்கம் கொள்ளவில்லை. முட்செடிகளுக்கு நடுவே சந்திர மல்லிகை போல மலர்ந்த முகத்தோடு தன்னில்தான் நிறைவுற்றிருந்தாள். கடுமையான நடனத்தைத் தொடர்ந்து வெண்கலங்கள் முழங்கின. தடிகள் மோதிப் பேரோசை கிளப்பின. இவற்றிடையே மாதர் சிலம்பொலி உள்ளத்திற்கு உவகை ஊட்டிற்று.

பட்டம்மைக்குப் பின் உள்ள தடிமேடைமீது உலோரிக தேவரும் அரசியும் அமர்ந்திருந்தனர். நடனம் நின்றது. புரோகிதர் சங்கு முழங்கினர். அமைச்சர், புகை, விளக்கு, நீர், மலர் முதலியவற்றோடும் தொழுகை நடத்தினர். உலோரிக தேவர் வெள்ளித் தட்டில் தேங்காய், வெற்றிலை பாக்கு வைத்து வழங்கினர். பிறகு தழுதழுத்த குரலில் கூறினர் : "தெரியாததால் ஏற்பட்ட குற்றங்களைப் பொறுத்தருள்க. பகைவர்க்கு அரியேறு போன்றவரும் எல்லைப்புறக் காட்டு மாந்தருக்கு வடவைக கனல் போன்றவரும் பாரத மக்களின் மானம் காப்பவரும் ஆகிய கடவுள் மகன் துவரமிலிந்திரர் கண்மணியாகிய தாங்கள் எனதில்லம் போந்தீராகலின் பெருத பேறு பெற்றவனுனேன். தங்கள் திருவடிகளால் எமதில்லம் தூய்மை பெற்றது.

என் பத்தாயிரம் மல்லர்கள் தங்கள் கட்டளையை எதிர்நோக்கியுள்ளனர். உலோரிக தேவன் நற்பண்புச்கு அடிமை; மாமன்னர்களின் புருவ வளேப்பினைப் பொருட்படுத்தாதவன். சமுத்ர குப்த மரபிற்குத் தாழ்வேன், அல்லது தன்னுரிமையோடும் இருப்பேன். ஆனால் இன்றோ குப்தர்களது ஆட்சி மங்கிற்று. மௌக்கரி மரபினரது தோளாற்றலும் குன்றியது. ஆரிய 'பகைஞனை பௌத்த மன்னனது வீரமற்ற ஆட்சியால் பாரதம் அழிவு நோக்கித் தள்ளப்படுகிறது. இப்போது நான் நம்பிக்கை ஒளியை எங்கும் கண்டேனில்லை. இன்று எல்லைப்புற மலை வாழ்களுக்கப்பால் காட்டுமிருண்டிகள் திரண்டவாறுள்ளனர். பாரத நாட்டினை இந்த ஊனக் கூட்டத்தினராகிய தடுத்தற்கரிய மாபெரும் படைகளைத் தடுத்து நிறுத்திக் காப்பவன் யாவன்? தன் தோள்களை எல்லைப்புற வாயில்களுக்கு மாபெரும் தாழ்களாகப் பயன்படுத்தும் அந்த ஆடவன் யாவன்? தனது புகழ் நெருப்பினால் எல்லைப்புறக் காட்டு மாந்தர்களை வெட்டுக்கிளிகளைப் போல எரிக்கவல்லவன் யாவன்? கடவுள் மகன் துவரமிலிந்திரனே அத்தகைய வீரன்! தங்கள் பிரிவினால் அவர் துன்பம் எல்லையற்றதாகிவிட்டிருக்கும். உலோரிக தேவனின் மல்லர் படைஞர் பேரூக்கத்தோடும் கடவுள் மகன் துவரமிலிந்திரனது வெற்றியோசை கிளப்புவர். பெருமாட்டி! உமக்குப் பணிபுரியும் வாய்ப்பு நேர்ந்ததால் முழுப் பாரதத்திற்கும் ஊழியம் புரியும் பேறு பெற்றவனானேன். பெருமாட்டி! இந்த வாய்ப்புத் தருவீராக.'' பட்டம்மையின் கண்களில் மகிழ்ச்சி நீர் ததும்பிற்று. அருள் நிறைந்த பார்வையை உலோரிக தேவர்பால் செலுத்திச் செப்பினாள்: ''பெரும, என்னை வீணாக நாண முறுத்தாதீர்.'' உலோரிக தேவர் அவளுக்கு மீட்டும் மாற்றந்தர வாய்ப்பளிக்காமல் விரலைக் கொண்டு சுட்டிக் காட்டவும் பற்பல வாத்தியங்களும் முழங்கத் தொடங்கின; கடவுள் மகன் துவரமிலிந்திரர் திருமகளுக்கு வெற்றி வெற்றி யென்ற ஓசையால் வானம் பிளந்தது. பட்டம்மை தன் பவழத் தளிர் போன்ற விரல்களால் தாம்பூலந் தொட்டாள். புரோகிதர் குமுகுமுவெனச் சங்கு முழங்கினர். நடனப்பாக்கள் வாத்திய இசைகள் முழங்கத் தொழுகை வினைகள் முடிந்தன. மல்லர்கள் ஒழுங்கான நடையோடும் விலகிச் சென்றனர். இளஞ்சிறுமியர் பட்டம்மையைத் தூக்கி நடனமாடினர். விழா முடிவுற்றபோது நள்ளிரவு ஆய்விட்டது.

உலோரிக தேவர் தமது பேச்சில் ஒரு சொல் எனக்கெனவே

உரக்கக் கூறினர். கன்னேசி மாமன்னன் கீழ்க் குறுமன்னன் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். இது புதிய சிக்கல். இன்று என் கோள் சீற்றங் கொண்டுள்ளது. நான் கிருஷ்ணவர்த்தனன் தன் கடன் தீர்க்க எனக்கும் பட்டம்மைக்கும் பல தொல்லைகளைத் தேடி வைத்துவிட்டேன். அவற்றினின்றும் விடுதலை பெற வழியேதும் தென்படவில்லை. அரசியல் சூழ்ச்சியென்னும் நல்ல பாம்பு என்னைத் தீண்டிவிட்டது; தப்புதல் அரிது. குறுமன்னர்கள் மாமன்னர்கள் இவர்களது பேராசை நிறைவேறக் கருவியாகப் பட்டம்மை அமைவாளா என்ன? இது ஆகாத செயல். ஏதேனும் நினைத்து வழி உண்டாக்கித்தான் ஆகவேண்டும். வாயிற் புறத்தே இதே நினைவோடும் அமர்ந்திருந்தேன். உச்சிமீது வானத்தே விருச்சிகராசி மேற்கு வானத்தே சரிந்து போய்க் கொண்டிருந்தது. அதன் பக்கத்தில் செவ்வாய்க்கோள் நெருப்புப் போலக் காணப்பெற்றது. விருச்சிகத்தின் (தேள்) முதுகில் அமர்ந்திருக்கும் செவ்வாய்க்கோள் அச்சந்தரும் ஓர் கருத்தை உண்டாக்குகின்றது. எத்தகைய அரிய கூட்டம்! விருச்சிகத்துடன் செவ்வாய்க்கோள் சேர்ந்தால் நிலம் மாந்தரின் இரத்தப் பொழிவினுல் நனைவுறும் என்று நூல்கள் எழுதி உள்ளன. இது உண்மைதானு? புண்ணிய பாரதத்தில் ஓநாய் நரிகளின் தாண்டவம் நடைபெறுமா? மனத்திற்குள்ளேயே நரசிங்கக் கடவுளின் அச்சமிகுந்த கண்கள் நினைவுக்கு வந்தன; அவற்றைக் கண்ட போதே அவுணனின் பரந்த மார்பு பிளந்து செம்மை நிறங் கொண்டது.

ஜயத் யுபேந்த்ர: ஸசகார தூரதோ விபித்ஸயாய: க்ஷண லப்த லக்ஷ்யயா
த்ருசைவ கோபாருணயா ரிபோருர: ஸ்வயம் பயாத் பின்ன மிவாஸ்ர பாடலம்.

(காதம்பரி 13.)

விருச்சிகத்தில் தங்கிய செவ்வாய்க்கோள் நரசிங்கரது கண் நிழலாம். ஒருவேளை நிலம் மாந்தர் தம் குருதியால் நனையுமோ? பயிர்கள் எரிந்து சாம்பராகுமோ? ஊர் வாழ்மக்கள் எல்லைப் புறக் காட்டுமிருண்டிகள் மூட்டும் வேள்வித் தழலில் நெய்யுணவாகி விடுவார்களோ? கொடிய காலத்தினது தாண்டவம் வடபாரதத்தை அருவருக்கச் செய்துவிடுமோ?

ஓ கடவுளே! இந்தக் குருதிப் பெருக்கத்தை வராது தடுக்க முடியுமா? அரசர்கள், குறுமன்னர்கள் இவர்களது பிடிவாதப்

பண்பினுல் செயல்கெட்டுவிடுமா? தாணேசர் புரியில் என் முன்னர் அகோர பைரவர் மாமாயையை அதட்டிக் கூறினுர்: "உன்ஞல் திரிபுர பைரவியின் விளேயாட்டைத் தடுக்கமுடியாது. உன்ஞல் மாகால நடனத்தைத் தாங்க முடியாது. சூலிக்கு உரு வாகும் மண்டையோட்டு மாலேயை நீ தடுக்க முடியாது. நீ பரா சத்தியுடன் கலந்த பின்னரே அவள் திருவிளேயாட்டினே உன் விருப்பப்படி திருப்ப முடியும். பைத்தியக்காரீ! திரிபுர சுந்தரிக்குக் கொடையாக உன்னே வழங்கும் அளவிற்கு உன் உண்மை பொலிவு பெறும். எப்போதாவது மாந்தர் தம் துன் பத்தை உன் துன்பமாக ஏற்றனேயா? நான் சொல்வது கேள். உண்மை கடைப்பிடி; வஞ்சம் பொய்மை கை விடு. நீ சாகாப் பண்பினர் என மக்களே விளித்தனே. நீ உண்மையில் சாகாப் பண்பினள் ஆயினேயோ? உன்னே முற்றிலும் சாகா மக்களின் அடிகளுக்கு ஒப்படைப்பாயாக. பின்னரே சொன்ன சொற்படி நடந்தவளாவாய். திரிபுர பைரவியின் திருவிளேயாடலே வேறு பக்கம் திருப்ப வேண்டினுல் நீயே திரிபுர பைரவியாதல் வேண்டும். கேடு சூழும் நிகழ்காலம் அணுகிக் கொண்டுள்ளது." மாமாயை கலங்காமல் விடைபகர்ந்தாள்: "வாழ்த்துப்பெற வந் தேன்." இதனேக் கேட்டு அவதூதர் அதட்டிக் கூறினுர்: "பொய் இது; இது பாசாங்கு, உன் வாழ்த்துப் பெற வையமெல் லாம் துடித்துக் கொண்டுள்ளது. நீ மாசத்தியின் அறிகுறி யாவாய். நான் உன்னேத் திரிபுர பைரவியின் வடிவத்தில் கண்டு பேறுபெற்றவனுவேன். நான் வாழ்க்கை முழுவதும் பெண்மை யைத் தொழுது வந்துள்ளேன். என் தொழுகை முயற்சி அரை குறையாகிவிட்டது. நீ தூய நங்கையாகி என்னேக் கரையேற்றுக! தூய நங்கை–திரிபுர பைரவி!"

மாமாயை தனது முன்ருனேயை யெடுத்துக் கழுத்தில் சுற் றிக்கொண்டு கையில் திரிசூலம் எடுத்து நின்று விட்டாள்; வீரத் தோடும் கூறினள்: "கட்டளேயைத் தலேமேல் தாங்கினேன் குருபெருமான்!" அவள் கண்களில் அரிய ஒளி மிளிர்ந்தது; அவளது முகம் நடுப்பகல் கதிரவன்போலச் சுடர்விட்டது. குரு பெருமான் தனது முதுகை நேராக நிமிர்த்தி அமர்ந்தார்; புரு வம் நெற்றி முற்றச் சென்றன. மிகு நேரம் வரை தம் கண்களே அவள் ஒளி முகத்தில் பதிய வைத்தார். மாமாயை பொற் பாவை யென அசையாது நின்றிருந்தாள். குரு பெருமான் தமது பார்வையை விலக்கியதும் விரைவாக மாமாயை அப் பாற் சென்ருள் அந்தக் காட்சியை நினேவிற்குக் கொண்டு

வரும்பொழுதெல்லாம் என் உடம்பு மயிர்க்கூச்செறியும்: என்ன, நிலம் இரத்தப் பெருக்கில் முழுகுவதினின்றும் மாமாயை யால் தடுக்க முடியுமா அல்லது நிலம் அதனில் முழுகிவிடுமா? உண்மையில் மாமாயை திரிபுர பைரவியானுளா? மாகாலத் தாண்டவம் தடையாகுமா? அவதூதர் மொழிகளின் பொருள் என்ன? ஓ திரிபுரசுந்தரி! நீ எங்குள்ளனை? பழியும் அருவருப் பும் நிறைந்த இந்த நிலத்தினை ஏன் அழகுபடுத்தவில்லை? என்ன, பயங்கரத் தாண்டவத்தினால் நிலத்தின் மீது பேரழிவாம் திருவிளையாட்டை நடத்தப் போகின்றனையா? எங்குள்ளனை, சினமூண்டவளே! உனது அருள் முகம், உனது இளம் பண்பு, நெஞ்சுருக்கும் முறுவல் உள்ளங் கவரும் சாயல் எங்கே? உனது அருள் இரங்கும் உலகிற்குத் தண்மை அளிக்கவல்லது; துயர் விசும்பினுக்கு ஆறுதல் அளிக்க வல்லது; நிலத்தை இரத்த நீராடுவதினின்றும் காப்பாற்றவல்லது. தேவீ! பராசத்தீ! நீ எங்கே? இந்நினைவுச் சுழலில் அகப்பட்டுச் சுழன்று கொண் டிருந்தேனாக என்னெதிரே இளவரசி வந்து நின்றாள். அவள் பெரிய கண்களில் நீர் ததும்பக் குரல் தழுதழுக்க முகம் செவ் வொளி வீசா நின்றது. இதுவே திரிபுர பைரவியின் அருள் முகமோ? அருள் முகம்! அதனில் இருந்துதான் அருள் பொழிவு பெருக்கெடுத்தோடுகிறது; அன்பொளி தவழ்கிறது; அழகிய நட்புப் பொலிகிறது. புவன மோகினியின் படிமம் இது தானே? இவளைத் தொழுமாறு இவ்வளவு தூண்டினாரே அவதூதர்! மான்போன்ற மருண்ட பார்வை, ஐப்பசி கார்த்திகை மாதத் திங்கள்போன்று உவகை பொருந்திய முகம், கோவைப் பழம் போன்ற சிவந்த இதழ், சந்தன நறுமணம் வீசும் உடம்பு, அருள் நிறைந்த நீரால் நனைந்த அழகிய கண்கள் உள்ளத்தைக் கவர்கின்றன.

**குரங்க நேத்ராம் சரதிந்து வக்த்ராம் பிம்பாதராம் சந்தனகந்த**
**லிப்தாம்**
**த்ருசா கலத்காருணி காஸ்ரயந்த: சம்மோஹயந்தீம்**
**த்ரிஜகந்மநோஜ்ஞாம்.**

பட்டம்மைதான் புவன மோகினியின் படிமமா? அவதூத குருவே இந்தத் தொழுகை மந்திரத்தைக் கற்றுக் கொடுத்தார். அந்தோ! இதனினும் மூவுலகங்களையும் கவர்கிற அழகு வேறென்ன இருக்கப் போகிறது? உள்ளத்தை உருக்கும் எத்துணை அழகிய பார்வை! அமுதம் பொழிதல்போன்ற சொல்

தொடர்ச்சி, அருள் நிறைந்த ஒழுக்கம், மாசற்ற ஒளி! புவன மோகினியின் இந்தப் படிமத்தினைக் கண்டவன் வேறொன்றையும் பார்க்கத் தேவையில்லை. அருள்வேண்டியவன் போலப் பட்டம் மையைப் பார்த்தவாறிருந்தேன். அவள் வினைக் குரலில் கூறினாள்: "களைத்து வந்தனை, பிரசாதம் உண்கிலையோ? உள்ளே வருக!" நான் பேசாமல் மந்திரத்தில் கட்டுண்டவன் போல் அவள் பின்னால் தொடர்ந்தேன். எங்கு ஈர்க்கப் பெற்றேன்?

## உயிர்ப்புப் பதினாறு

நான் எழுந்தபோது கதிரவன் கீழ்ப்பால் நிறைய ஏறிவிட்டிருந்தான். முதற்காட்சி நிபுணிகை; அவளது மயிர் முடி அப்போதும் நனைந்திருந்தது. வைகறையில் தோன்றும் திங்களின் பின்னால் ஈரமுகில் தொங்குவதுபோல அவளது நனைந்த கருங்குழல் வெளுத்த முகத்தோடும் காணப்பெற்றது. வெள்ளைப்புடவையோடு விளங்கும் மெல்லிய உடம்பு மலர்ந்த கற்பகமரமெனத் திகழ்ந்தது. முகம் வெளுத்திருப்பினும் வலியான் குருவிபோல அசையும் கண்கள் பார்ப்பதற்கு அழகாக இருந்தன. இன்று அவள் இதழ்களில் இயல்பான முறுவல் திகழ்ந்தது. நான் எழுந்தபொழுது நிலந்தோய வணங்கினாள். நான் பேசுதற்கு முன்னமேயே பேசத் தொடங்கினாள்: "நீ என்னை மன்னித்தனை அல்லவா, பட்ட? நீ பெரியன். நான் நொய்யவள். ஆதலின் தவறுமல் பொறுத்திருப்பாய். மௌக்கரிகளின் அரசித் திருவின் (காலஞ்சென்ற கிரகவர்மன் இரண்டாம் மனைவி) அழைப்பிதழ் ஏற்று உனக்கு மாத்திரம் அல்லாமல் நம் இளவரசிப் பெருமாட்டிக்கும் இழிவையும் கோளையும் தேடிவிட்டாய். உங்களுக்கேற்படும் இழிவை என்னால் பொறுக்க முடியாது. நீ வந்ததும் வராததுமாகக் கடுஞ்சொல் கூறி உன் நெஞ்சத்திற்குத் துன்பம் விளைவித்தேன். ஆதலின் மிக மிக வருந்துகின்றேன். தக்க உணர்வில்லை; அப்பொழுது என் உள்ளம் உறுதி இழந்து இருந்தது, எதனையும் பொறுக்க முடியவில்லை. எனினும் நான் நேற்று நவின்றன யாவும் தக்கனவே." நேற்று அவள் கண்களில்

பொறிபறந்தன; இன்று ஆங்கே மலர்ச்சி தவழ்ந்தது. 'நேற்று அவள் முகத்தே நெருப்பொளி சுடர்விட்டது; இன்று ஆங்கே குறும்பு பொலிந்தது. களிப்பிலள்; மகிழ்ச்சியள். அன்போடும் சொன்னேன்: "நிவுனியா! தவறு செய்துவிட்டேன், வழி தோன்றவில்லை. செய்யத்தக்கதைக் காட்டுக. தவறுகளைக் கணக்கிடுவதில் இப்பொழுது பயனில்லை." புன்முறுவல் பூத்தவளாய்ப் புகன்ருள்: "தவறு நீ செய்தல்; வழி நான் காட்டுதல்?" சொற்சுவை நுகர்ந்தவனுய்ச் செப்பினேன்: "இது புதிதல்லவே நிவுனியா." "ஒரு பிராம்மண பிரம்மசாரியைப் பற்றி நினைவு வருகிறதா?" என்று வினவி முன்ருனை கொண்டு முகத்தை மூடியவாறு சிரித்துக் கொண்டிருந்தாள்; அவள் அழகிய விரல்கள் முன்ருனை மீது துடித்துக் கொண்டிருந்தன; அந்த விரலினது அழகுக்காகவே அவளை நாடகக் குழுவில் முன்பு நான் சேர்த்தேன்.

உடனே எனக்கு விதிசை நகரத்துப் பிரம்மசாரியின் நினைவு வந்தது. தன்னை நாடகக் குழுவில் சேர்த்துக் கொள்ளுமாறு நாள்தோறும் தொல்லை செய்துகொண்டிருந்தான். அவன் தலை பருமன், கண்கள் வெடித்த மாதுளம் பழம்போலச் சிவந்திருந்தன. குரல் கரகரப்பாகக் காதில் நாராசம் விழுவதுபோலிருந்தது. அவனுக்குக் கொடுக்க எந்தப் பாத்திரமும் இல்லை. எனினும் பிடிவாதம் செய்து வந்தான். குழுவினர் அவன்மீது வெறுப்புக் கொண்டனர். ஆனல் என்பொருட்டுப் பேசாமல் இருந்தனர். நிபுணிகை ஒருத்தியே அவனைத் தொந்தரவு செய்வதில்லை. அவள் தன்னிடம் அக்கரை கொள்ளாதிருத்தலைக் காதல் என்று தப்பாக நினைத்துக் கொண்டான். பிரம்மசாரியின் தாடிமயிர் துடைப்ப ஈர்க்குப்போல இருந்தது. பாறைமீது நாணல் இங்குமங்கும் முளைத்ததென அவன் தவடைமீது ஒழுங்கற்ற முறையில் தாடிமயிர் முளைத்திருந்தது. நாடகம் நடைபெறும்போதும் மேடையின் மீது ஏதேனும் வேடத்தில் நுழைய வேண்டுமென்று துடிதுடிப்பான். ஒருநாள் சகுந்தலை நாடகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அன்று நகரப் பெருமக்கள் வரவிருந்தனர். அன்று மாரீசர் வேடம் புனையும் தேவராதன் திடீரென நோயாகப்படுத்துவிட்டான். அந்தப் பிரம்மசாரியை மாரீசனுக்கி விடுவதெனத் தீர்மானித்தேன். நாள்முழுவதும் கண்மூடிப் பேசாதிருக்கப் பயிற்சியளித்தேன். மாலையில் நாடகம் தொடங்கிற்று. இளவரசரும் வந்திருந்தார். நாடகம் நன்ருக நடந்தேறி வந்து கொண்டிருந்தது. நிபுணிகை பானு

மதி வேடம் எடுத்துக்கொண்டாள். இன்று மல்லிகை மாலையில் அவள் மணியுடற் கொம்பு பார்ப்போர் கண்ணைக் கவர்ந்தது. கருங்குழலில் செருகிய அசோகந் தளிரும் காதுகளில் மேல் அசையும் மயிரும் அதை மீறிப் பொலியும் வாகை மலரும் அவள் அழகைப் பதின் மடங்காக்கின. கடைசி அங்கம் தொடங்கிற்று. நானும், நிபுணிகை பக்கம் திரைபின்னால் இருந்து கொண்டு நடிப்பு நோக்கிக்கொண்டிருந்தேன். பிரம்மசாரி மாரீசன் வேடத்தில் மேடையில் அமர்ந்திருந்தான். அவன் அற்புதக் குறும்புகள் செய்யத் தொடங்கினான். இருந்திருந்து சபையோரை உற்று நோக்கினான். மக்கள் தன் நடிப்பை விரும்புகின்றார்களா ? இதையறிய விரும்பினான். பின்னர் அடிக்கடி திரும்பித் திரையைப் பார்க்கலானான். ஒரு நொடியும் அவனால் அமைதியாக அமைய முடியவில்லை. நான் செய்தன வெல்லாம் வீணாயின. பார்ப்போர் முகத்தில் சிரிப்புக் கண்டேன். நான் துயரத்தோடும் கூறினேன். "எல்லாம் கெட்டுப்போயின நிவுணியா" என்றேன். நொடிப்போதுவரை கவலை யுற்றவளாய் என்னைப் பார்த்துக் கூறினாள் : "நீயே மாரீசனாக வருவதற்கு ஏற்பாடு செய். நான் இவனைப் பார்த்துக் கொள்கிறேன்." இவ்விதம் கூறி அவள் வண்ணாத்திப் பூச்சிபோல நடித்தவாறு மேடையில் நுழைந்ததால் அவைக்களத்தை மிக மகிழ்வித்தாள். முட்டாள் பிரம்மசாரி எழுந்து நின்று விட்டான். நிபுணிகை தனது வலது கையால் அவன் தாடியைப் பிடித்துக் கொண்டு பாடத் தொடங்கினாள் : "ஆண் மகனே, நீ என்னோடும் ஆடாயோ ?" இமைப்போதில் முழுச் சூழ்நிலையே நகைச் சுவை மயமாகிவிட்டது. பிரம்மசாரி துள்ளிக் குதிக்கலானான் ; எனினும் நிபுணிகை தாடியை விடவில்லை. ஒவ்வொரு துள்ளலுக்கும் அவள் ஏதோ மறைமொழிகள் நவின்றவாறு நடித்தாள். இந்தப் புதிய நகையாடல் மிகுநேரம் நடைபெற்றது. பற்பல நடனவகைகள் காட்டி அவனைத் தன் காலடியில் விழவைத்தாள், அவன் இடுப்புப் பிடித்து ஆடினாள் ; மயிர்முடி பிடித்து ஆடினாள். கெட்டுப்போன நிலைமையைச் செம்மைப் படுத்திவிட்டாள். பின்னர் அழகாக அவனை இழுத்தவாறு திரைபின்னால் வந்துவிட்டாள். நூற்றுக்கணக்கான அவையினர் உரத்த குரலில் "நன்று ! நன்று !" எனக் கூவிப் பாராட்டினார்கள். இளவரசர் நல்லவுள்ளம் படைத்தவர். நிலைமையைப் புரிந்து கொண்டார். தமது . விலையுயர்ந்த மேல் வேட்டியை நிபுணிகைக்குப்

பரிசாக அளித்துப் பாராட்டினர். இந்தக் குழப்பக் காட்சிக்குப்பின்னர் மரீசி ஆசிரமக் காட்சி அமைதியான சூழ்நிலையில் மிகவும் வெற்றிபெற்றது. அன்று நிபுணிகை என்னைக் காப்பாற்றினாள், மானம் காத்தாள். அதே நிகழ்ச்சியை நினைவூட்டி நிபுணிகை நகைத்தாள். "ஆம் நிவுணியா, தவறு நான் செய்தால் நீ வழி காட்டுகின்றாய்; உண்மையே" என்றேன். நெடுநேரம் வரை ஏதோ ஆழ்ந்து ஆராய்ந்து கொண்டிருந்தாள். "விளையாட்டு அல்ல பட்ட, உண்மையில் வழிகாட்டவே வந்தேன்; கேள் என் சொல்" என்றாள்.

இப்போதும் அவளது தோற்றம் அழகாக இருந்தது. குளிர்காலத் திங்கள் போன்றும் பாற்கடல் போன்றும் அமுதக் கலசம் போலும் அவள் வெளுத்த முகம் காணப்பெற்றது. தன் ஒவ்வொரு சொல்லையும் அளவெடுத்தாள் போல மெதுவாகப் பேசத் தொடங்கினாள்: "பட்டம்மை தாணேசர்புரிக்குச் செல்வாள், ஆனால் எவன் இல்லத்திலும் விருந்தாளியாக அல்ல; அவள் சொந்த ஆட்சியில் அவள் இருப்பாள். உலோரிக தேவரிடம் கலந்து ஏற்பாடு செய்; அவர் படைஞரில் ஓராயிரம் வீரர் அவளோடும் வருவார்கள்; அவள் தனியுரிமை நாட்டரசியாக ஆங்குச் செல்வாள், இந்தத் தீவினையாளாகிய நானும் அவளொடு இருப்பேன். பட்டம்மையின் பணிப் பெண்ணைத் தொடுதற்குத் தாணேசர்புரி மாமன்னனாலும் முடியாது. நிபுணிகை தாணேசர்புரி அரசியல் சூழ்வினையில் இழுக்கப் பெற்றால் ஆங்கு இரத்தக் களரியாகும். முதற்பலி கன்னோசி அரச அவையினன், பாணபட்டனே ஆவான். உடன்பாடா இது பட்ட? ஓரெளிய பணிப்பெண்ணுக்காக உயிர்விட ஒருப்படுகின்றாயா?" இதுவரைக் கீழ்நோக்கியவாறு பேசிக்கொண்டிருந்தவள் இப்போது நிமிர்ந்து என்னைப் பார்த்துக்கூறினாள்: "பட்ட! எந்தக் குற்றத்திற்காகத் தீயோருக்குப் புகலிடம் அளித்த கன்னோசி மன்னன் எனக்கு மரண தண்டனை விதித்தான்? நான் செய்த அதே குற்றத்தின் அடிப்படையிலே அவ்வரசன் கடவுள் மகன் துவரமிலிந்திரரோடு நட்புப் பூண விரும்புகின்றான். என்னைப்போன்ற ஆற்றலற்ற அரிவையருக்குத் தூக்குத் தண்டனை அளிக்கும் வல்லமையுடைய அரசனது வலிய தோளுக்குக் காட்டுமாந்தர் படைகளை விரட்டிக் குடிமக்களைக் காக்க வலிமை இருக்குமா? வீரமில்லா இவ்வாட்சியின் படைகள் கடவுள்மகன் துவரமிலிந்திரன் படைகளுடன்

சேர்ந்தாலும் பாரத நாட்டை இரத்த வெள்ளத்தில் முழுகாதபடி காக்க முடியும் என்று நம்புகின்ருயா, பெருமான்? பாரத சமுதாயத்திற்குள் பூச்சரிக்கத் தொடங்கிவிட்டது; அதனைப் பேரழிவிலிருந்தும் பாதுகாக்க முடியாது. நான் வினவு கின்றேன், சிறிதளவு உண்மை பேருண்மைக்குப் பகையாக இருக்க முடியுமா?'' விடைக்காக அவள் என்னை நோக்கினுள். இந்த வினு பொருத்தமற்றதாயினும் நான் விடை கூறினேன்: "எதுவும் உண்மைக்குப் பகையாக இருக்க முடியாதெனக் கேள்விப்பட்டிருக்கின்றேன்.'' நிபுணிகை ஆறுதலுற்றுச் சொன்ஞள்: "பெருமான், நீ என் தேவன். நீயே எனக்கு உண்மை. உன்னேடு பன்ஞள் பழகும் வாய்ப்புப் பெற்றேன். என் மீதே, ஆணையிட்டுக் கூறுகின்றேன். வாழ்நாள் முழுதும் துயரம் என்னும் நெருப்பில் எரிவதற்கு எத்தகைய குற்றத்தைச் செய்தேன்? சொல்லுக. என்ன நான் பெண்ணுக இருப்பதன் காரணமாகவே எல்லா ஊறுகளையும் பெறவேண்டுமா? இச்சிறிய உண்மையோடுகூட நீ அரசியலைச் சார்ந்த பெரிய உண்மைக்குப் பகை ஏதுமில்லை என்று கருதுகின்ருய். பெரிய உண்மையெனக் கூறிக்கொண்டு போலி அரசியல் நாடகங்கள் நடைபெற வில்லையா? கடவுள்மகன் துவரமிலிந்திரன் சேனையால், அவன் தோள்வலிமையால் பாரத சமுதாயத்தை அழிவுக் குழியினின்றும் காப்பாற்ற முடியுமா? மாகாளி வெளிப்படையாக இங்கே நடனம்புரிவாள். பேரழிவு என்னும் சுழலில் அகப்பட்டு இவை யாவும் பஞ்சுத் துணுக்குப்போலப் பறந்து போய்விடும்; மன்னிப்பிற்குத் தகுதியற்ற குற்றங்களுக்குக் கழிவிரக்க வாயிலாகக் கழுவாய் கிடையாது. இழிவுறுத்தப்பெற்ற எளிய மாது நான். மாந்தர் சமுதாயத்திலே குறுகிய சுவை என்னும் நெருப்பில் தினைத்தினையளவில் என்னையே எரித்துக்கொண் டேன்; இம்மொழிகள் எனது இதய நெருப்பாழத்திலிருந்தும் எழுகின்றன. நீயும் மற்றவர்களும் வரப்போகும் பெரும் புயலைத் தடுக்கமுயல்கின்றீர். ஒருமுறை நீ மாமன்னர்களின் புருவ வளைப்பைப் பொருட்படுத்தாமல் இயங்குவாயாகில், இம்மாபெரும் உண்மையை மாமன்னர்கள் ஓரளவாவது உணர்வார்களாயின் இப்பெரும்புயல் தணியும்; மாகால நெருப்புத் தணியும். பெரிய வருத்தம் உண்டாகக் கூடியது யாதெனில் இம்மாபெரும் உண்மையை உணராத குறைபாட்டின் மீதுதான் இப்பெரிய வல்லரசின் தேர்வழியானது போகிறது. நானே ஒரு நெருப்புப் பொறி மட்டுந்தான். எனது நெருப்பாலேயே

முழுத்தொல்லையையும் எரித்துச் சாம்பலாக்கும் வலிமையைத் தகுதியை என்னிடம் உண்டாக்குக. எனக்குக் கை கொடுப்பா யாக. உனது உதவியைத்தருக. இழிவுபெறுவதற்காக அரிவை யின் பிறப்பெடுத்தல் நலமில்லை. நீயே, எனக்கு மகிழ்ச்சி யென்ற ஒளிப்பொறியை வழங்கினை ; நீயே அதனைப் பேரொலியோடும் சுடர்விட்டுத் திகழும்படி செய்க.''

வியப்புடன் அவள் சொற்பொழிவைக் கேட்டவாறிருந்தேன். இஃதெத்தகைய நெடிய ஓலம் ! உடம்பின் வலிமைக் குறைவால் மீண்டும் தலை வால் இல்லாமல் உளறுகின்றளா ? வெறும் ஓலமெனில் அதனில் எத்துணை உண்மை செறிந்துளது ? ஒரே வினு என்னுள்ளத்தைப் பிளந்து இடைவிடாமல் எதிரொலி செய்யத் தொடங்கிற்று. சிறிய அளவு உண்மை பெரிய அளவு உண்மைக்கு எதிராக அமைய முடியுமா ? அவ்வாறு நிகழ்வதைத் தான் கண்டுகொண்டிருக்கின்றேன். சில வினைகளை ஆற்று வதால் சிறியோர் இழிவு செய்யப்படுகின்றனர் ; சமூகத்தில் உயர்நிலையில் உள்ளோர் அவ்வினைகளை ஆற்றினுல் பெருமை அடைகின்றனர். நிபுணிகையிடம் மிகக் கடுமையான மாறுதல் ஏற்பட்டுள்ளது ; இவள் இன்று துன்பமென்னும் நெருப்புத் துண்டாகக் காட்சியளிக்கின்றுள். இவள் என்ன செய்யமுடியும் ? ஒரு மரம் தோப்பாகாதே, ஒரு கை தட்டலால் ஓசையெழும் பாதே. சமுதாயத்தின் நெருப்புத் தழல் நாள்தோறும் சில ஆட்களை ஆவுதியாக ஏற்று வருகின்றது. மீட்சிக்கு வழி யென்ன ? மாதினும் விலையுயர்ந்த மணி வேறென்ன இருக்கப் போகிறது ? ஆனுல் மாதினும் கொடிய நிலையில் துன்புறுபவள் வேறு யார் ? என்னிடம் என்ன நன்மை நிபுணிகை எதிர் நோக்குகின்றுள் ? தூய பெண்மையின் துணைபெறவில்லை, ஆதலின் அவதூதரின் அறமுயற்சி வெற்றி பெறவில்லை. நிபுணிகைக்கு ஆடவனின் துணை வாய்க்கவில்லை, ஆதலின் அவள் தியாகப் பேராவல் வெற்றி பெறவில்லை. பின்னர் உண்மை எத்தகையது ? நிபுணிகையின் கண்களில் நெருப்புப் பொறி பறத்தலைக் காண்கிறேன். என்ன, மீண்டும் உணர்விழப் பாளா ? என்ன விடை அளித்தல் ? நினைத்துக்கொண்டிருந் தேன், அவள் இறக்கை அறுபட்ட பறவையென என் அடிகள் மீது விழுந்துவிட்டாள்.

நிபுணிகை உணர்வற்ற நிலையிலும் என் அடிகளைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டாள் ; மிகுந்த இறுக்கமாகப் பற்றிக் கொண்டாள். நான் பட்டம்மையைப் பார்த்ததும் எழுந்திருக்க

முயன்றேன்; அவள் இறுகப் பிடித்திருந்தமையால் என் முயற்சி வீணாயிற்று. பட்டம்மை இரக்கத்தோடும் இயம்பினாள்: "பிடியை விலக்காதே, அவளுக்கு உன்னடிகள்புகலிடமாக, அமைதி பெறுமிடமாக இருக்கலாம்." பாதி விடுதலை பெற்ற நிலையிலேயே, பாதி எழுந்துநின்ற நிலையிலே இருந்துவிட்டேன். பட்டம்மை கீழே அமர்ந்து நிபுணிகையினது நனைந்த கூந்தலை விரல்களால் தடவிக்கொடுத்தாள். மிகுந்த முயற்சியோடும் நானும் கீழே அமர்ந்தேன். இன்னும் நிபுணிகை கைகள் என் அடிகளைப் பற்றியவாறிருந்தன. நான் சுருக்கமாக நிபுணிகை கூறிய ஆவேச மொழிகளைக் கூறினேன். பட்டம்மை ஒன்றும் மாற்றம் விள்ளவில்லை. அவளது கீழ்நோக்கிய தலையை மெதுவாகப் பிடித்துப் பிடித்து அமிழ்த்தினாள். இளவரசியின் கண்கள் பெருக்கெடுத்தன. அதைக்கண்டு என் உள்ளம்கரையத் தொடங்கிற்று. கண்ணீர் தோன்றாமலிருக்க என்ன செய்தல் வேண்டும்? அவள் மெல்லிய இதயம் குழம்பாதிருக்க என்ன கூறுதல் வேண்டும்? தன் முன்றானையிலிருந்து மருந்தெடுத்து நிபுணிகையின் கண் நெற்றி இடங்களில் பூசினாள். சிறிது பணிவிடைக்குப் பிறகு நிபுணிகை உணர்வு பெற்றாள். பட்டம்மையைப் பார்த்து வருத்தமுடன் கூறினாள்: "என்னைக் கைவிடமாட்டாயே இளவரசிப் பெருமாட்டி! தீயோருக்குப் புகல் தந்த கன்னோசி மாமன்னனுக்கு அஞ்சவில்லை." இளவரசி அன்புடன் அதட்டிச் சொன்னாள்: "சிச்சீ, உடன்பிறந்தோய்! உன்னை இழந்தும் உயிர் வாழ்வேனோ?" நிபுணிகையின் வெளுத்த கன்னங்கள்மீது கண்ணீர் பெருகிற்று.

அவள் எழுந்து அமர்ந்து கொண்டாள். சிறிது பேச விரும்பினாள், ஆனால் இளவரசி தடுத்துவிட்டாள். தலை கவிழ்ந்தவாறு மிகுந்த நேரம் இளவாசிபால் அமர்ந்திருந்தாள்; பெருமாட்டி அவள் கருங்குழலைத் தடவிக்கொடுத்தாள்; நான் எண்ணங்கள் என்ற கடலுள் மூழ்கி இருந்தேன். மிகு நேரம்வரை இல்லத்தில் முழுவமைதி கெழுமியிருந்தது.

பிறகு நிபுணிகை மொழிந்தாள்: "உள்ளும் புறமும் எரிகின்றன பெருமாட்டீ, இன்னும் ஒரு சொல் பட்டனிடம் நான் கூறவேண்டும், ஒருப்படுக; என் உள்ளம் கொதிக்கிறது; எரிந்து சாம்பராக 'விழைகின்றேன்." இளவரசி விரலால் சுட்டி, "ஒரே சொல்லில் கூறிவிட வேண்டும்" என்று எச்சரிக்கை செய்தாள். "எனில் இப்போது தேவை இல்லை" என்று வருத்தமுடன் கூறினாள்: "தக்கதே!" என்றுசொல்லி அவளைப்

பெருமாட்டி உள்ளே அழைத்துச் சென்ருள். நான் கவலையில் ஆழ்ந்தேன்.

ஒரு கிழவி, பணிமாது, வந்து "உலோரிக தேவரைச் சென்று காண்க. முன்னர்க் குளித்துவிடுக" என்று கூறிப் போந்தாள். நண்பகல் முன்னமேயே கதிர்க் கடவுளின் கதிர்கள் வெள்ளிக் கம்பிகள் போன்று பாயத் தொடங்கி மிகுந்த வெப்பத்தை விளைவித்தன. சரயு நதிக்கரை மணற்காடு கொதித்தது. தொலைவில் வானமளாவி இருக்கும் அரசமரத்தின்மீது காட்டுப்புருக்களின் கூவலைத் தவிர்த்து வேறு ஓசை இல்லை. கிளைகளில் தலையசைத்தவாறிருந்த ஓணன்கள் கீழிறங்கி வீணுக நீர் தேடி அலைந்து கொண்டிருந்தன. மெல்லிய நீரொழுக்குடைய மாசரயு நதி பாதரசக்கோடு போலக் காணப்பெற்றது. தூசு நிரம்பிய வானம் தாண்டவ நடன சிவபெருமான் சடை முடிபோலத் திசையிடங்களைக் கவிந்து கொண்டிருந்தது. புயலுக்கு முன்னைய அமைதியைக் காற்றுப் பரப்புக் கொண்டிருந்தது. நீராடி உலோரிக தேவரை அணுகிய போது நடுப்பகல் சங்கு முழங்கிற்று. சோறுண்ட பிறகு மூன்ரும் யாமத்தே தமது ஓய்வுமனையில் என்னைக் காண்பதாக அருளிய செய்தி எனக்கறிவிக்கப்பெற்றது.

மூன்ரும் யாமத்தே ஓய்வு மனையை யான் அடுத்தபோது வியப்புக்கொண்டேன். ஆங்குக் கிளி நாகணவாய்ப் பறவைகள் இசையைக் கேட்கவில்லை. முற்றத்திற்கு முன்னுள்ள வாயிற் படியில் சிறு சண்பக மலர் மாலை தொங்கவில்லை. சந்தனக் கட்டையால் இயன்ற கட்டில் இல்லை; கருங்காலி முக்காலி மீது மல்லிமாலை மங்கலக் குறியாகக் காணவில்லை. யானைக் கோட்டு முனைகள் மீது சுற்றிலும் பச்சை மருதோன்றி மாலை வட்டமாக மாட்டிய வீணை இல்லை. கட்டிலின் மீது விலையுயர்ந்த காந்தார மெல் விரிப்புமில்லை. நகை வேழம்பர் மகிழ்ச்சிக்காக வெற்றிலைபாக்கு, நறுமணத் தைலம், மாதுளந்தோல், மெழுகுச் சிமிழ் முதலியன வைக்கப்பெறவில்லை. வாத்தியாயன வரலாற்று ஓவியமும் தீட்டப்பெறவில்லை. இத்துணை ஆடம்பர அணிகள் இல்லாமல் உலோரிக தேவரின் ஓய்வுமனை எளிமை என்ற தனிப்பண்பு கொண்டிருந்தது. கற்சுவர்மீது சில யானைக் கோட்டு முனைகள் அறைந்திருந்தன. அவற்றின்மீது உடற்பயிற்சிக்காகக் கட்டை உருளைகள், வில்வளைவுகள் வைக்கப் பெற்றிருந்தன. உலோரிகதேவரின் கட்டைத் தவிசின் மீது கம்பளம் விரிக்கப் பெற்றிருந்தது. சூதாட்டு வட்டுகள்

காணப்பெறவில்லை. மனை முழுதும் குறுமன்னன் உடல் வலிமையையும் எளிமையையும் நினைவூட்டிற்று. தவிசின் தலைமாட்டில் வாசுதேவப் படிமம் முன்னர்க் குத்துவிளக்கெரிந்து கொண்டிருந்தது. செயற்கை அழகுகள் எங்குங் காணேம். இதனல் மிகவும் வியப்புற்றேன். எக்காலத்தும் மன்னர் குறுமன்னர் ஒய்வு மனைகள் உலகத்துக்குச் சிறந்த பொருட்களால், கலைப்படைப்புக்களால், உயர் நுகர்ச்சிப் பொருட்களால் நிரம்பி இருப்பது வழக்கமாக இருக்கும். இக் குறுமன்னன் ஒய்வு மனை பொதுமையிலும் பொதுவான எளிய மாந்தர் தம் ஒய்வுமனை போன்றிருத்தல் இயல்புக்கு முற்றிலும் மாருனதே.

என்னைக் கண்டதும் உலோரிக தேவர் ஆதரவுடன் எழுந்து வரவேற்ருர். எனக்கு இருக்கை அளித்து நறுமண மலர்ச் செண்டு அளித்துப்பின் தன் கட்டைத் தவிசின் மீது அமர்ந்து கொண்டார். முகவுரை இன்றியே வினவினர்: ''பட்டரே! நீவிர் முதலில் எனக்குக் கடவுள் மகன் திருமகளைப் பற்றிய அறிமுகம் அளிக்காமல் கன்னேசி மன்னனுக்கு மட்டும் ஏன் அளித்தீர்?'' நானும் முகவுரை இன்றியே விடை அளித்தேன்: '' நான் பட்டம்மையின் அடக்கமான பணியாளன். அவள் தன் கட்டளையின்றி அவளது அறிமுகம் யார்க்கும் அளிப்பதற்கில்லை. கன்னேசி மன்னனுக்கு அவள் செய்தியை நான் அளிக்கவே இல்லை. குமாரகிருஷ்ணவர்த்தனனே மாமன்னனுக்கு அறிவித் திருப்பான். அவனுக்குப் பட்டம்மையின் அறிமுகம் உண்டு. ஏன் அப்படி அவனுக்கு அவளைப் பற்றித் தெரியும் என்ற செய்தியை இப்போது உங்களுக்கு அறிவிப்பதற்கில்லை.''

உலோரிகதேவரின் சுருங்கிய புருவங்கள் இயல்பாயின; கன்னச் சுருக்கங்கள் மறைந்தன. கண்களில் நம்பிக்கைக் குறிகள்தோன்றின. அடக்கமாக உரைத்தார்: ''பாருங்கள், பட்டரே! என் இரத்த நாளங்களில் குப்தர்களது சோற்றினல் உண்டான இரத்தம் ஓடுகிறது. பதினெட்டாம் ஆண்டில் குப்த மன்னரது படையில் சேர்ந்தேன். நான் சிந்து நதியிலிருந்து கும்பா நதிவரை குப்தரின் கருடக் கொடியைப் பறக்கவிட்டேன். இப்போது எழுபதுக்கும்மேலாகிவிட்டது. இந்த முதுமையில் எனக்குச் சோறிட்டவர்கள் ஆற்றலிழந்துள்ளனர்; அதனல் நேற்றைய வணிகர்களை மன்னர்மன்னரென ஏற்பேனே? ஒருகாலும் முடியாது. குப்தர் ஆட்சியை ஏற்பேனே ஒழிய வேறு''எவன் ஆட்சியையும் ஏற்கமுடியாது. சரணுத்திரிக்

கோட்டைக்குக் கீழ்ப்பால் கன்னேசி மன்னர்மன்னனைக் காலடி எடுத்துவைக்கவிடமாட்டேன்.'' கண்களில் வெகுளிததும்பிற்று. மீண்டும் இயல்பாகிற பேச்சுத் தொடர்ந்தார்: "எல்லைப் புறத்தினின்றும் கேடு நிறைந்த செய்தி வந்துள்ளது. ஆண்மை யற்ற கன்னேசி மன்னர் மன்னனுல் அக்கேட்டினைக் தடுக்க முடியாது. அந்தோ! இன்று குப்த இனத்தே வலிமைபொருந்திய எந்த ஆண்மகனும் மில்லை. கந்தகுப்தரோடே குப்தர் புகழ் நெருப்பணைந்துவிட்டது. தகுதியுடன் தகுதி சேர்ந்தாலே வலிமை பிறக்கிறது. பட்டரே! தகுதியற்ற மன்னர்மன்னனுடன் நட்புரிமை பாராட்டினுல் துவரமிலிந்திரர் வலிமை பெறமுடியாது என்பதை உறுதியுடன் நம்புக. அரசியல் சூழ்ச்சி யானறியேன். உங்களைப் போன்று இடைவிடாமல் நூல்களைப் பயின்று சாணைக் கல்லில் கத்தி கூராவது போல அறிவைக் கூர்மையாக வைத்திருக்க நேரமும் வாய்ப்பும் எனக்கில்லை. நான் குதிரை முதுகையே ஒய்விடமாகக் கொண்டு வந்தேன். போர் வாத்திய முழக்கத்திடையே இரவுகளைக் கழித்து வந்தேன். அரசியல் துறைத்திறன் பெற்றவன் என்ற பெருமிதமெனக்கில்லை. இயல்பான செய்திகளை இயல்பாகத்தான் நான் உணர முடியும். உண்மையும் பொய்யும் கலந்திருக்க முடியாது. வட பாரத மாந்தரிடையே பல சமுக நிலைகள் ஏற்பட்டு விட்டன. இது கடவுள் ஊழ்முறையன்று; அத்தகைய சமூக நிலைகள் செயற்கை யாகும்; உண்மைக்கு மாருனதாகும். எல்லைப்புறக் காட்டு மிராண்டிகளின் படைகள் வருகின்றனவே அவற்றில் இப்பொய்ச் சமூகநிலைகள் கிடையா. கண்ணுல் கண்ட உண்மையை உமக் கறிவிக்கின்றேன். வலிமை வாய்ந்த குப்த மன்னர்கள் இந்த நெறியற்ற சமூக வேற்றுமைகளுடன் தாராளக் கருத்துக்களைச் சேர்த்துச் சமூக சமநிறை நாட்ட முயன்றனர். அது தவறு. கோவிந்த குப்தர் இம்மறையை அறிந்திருந்தார்; துவரமிலிந் திரரும் அறிந்திருக்கின்ருர்; ஆனுல் குப்த மன்னர்மன்னர்கள் உணரவில்லை. அவர்கள் கவலையுற்றுப்போயினர். பெருமான் கோவிந்த குப்தரின் அறிவுரையின்படி நான் என்படைஞ ரிடையே சமூக வேற்றுமைகள் இயங்க உடன்படவில்லை. என் பத்தாயிரம் மல்லர்கள் ஒரே மக்கள் இனமாக இயங்குகின்றனர். முன்னே குப்த மாமன்னர்கள் எல்லைப்புறக் காட்டுமிராண்டி களுடன் போரிட முனைந்தபொழுதெல்லாம் என்னுடைய ஆபிர மல்லர்கள் துணை நின்றனர். இன்று காட்டுமிராண்டிகளை எதிர்க்கும் மாபெரும் கடமையில் துவரமிலிருந்திரருக்கு

என்னுடைய ஆபிரப் படைஞர்களும் குப்தர்கள் தம் படைஞர் களுமே உறுதுணையாக இருக்கமுடியும். கன்னேசிப் படைகள் துவரமிலிந்திரருக்குச் சுவையாகத்தானிருக்கும். என் மொழி களின் கருத்துத் தெரிந்து கொள்கின்றீர் என நினைக் கின்றேன்.''

அடக்கமுடன் தலையசைத்தேன். அவர் மீண்டும் தொடர்ந் தார்: ''முழு வடபாரதமும் இரத்தப் பெருக்கால் நனைய விருக் கிறது. கன்னேசி அரசியல் சூழ்ச்சி பாரதத்தைக் காக்க முடியாது. பெருமிதத்தால் நான் பேசவில்லை; முழு நாட்டு நன்மைக்காக உங்களை எச்சரிக்கின்றேன். பட்டம்மையைக் கன்னேசி மாமன்னன் பிடியில் அகப்படுத்த வேண்டாம்.'' இவ்வளவுங் கூறி அவர் என்னை வினு நிறைந்த பார்வையோடும் பார்த்தார். நான் அடக்கமும் உறுதியும் பொருந்திய வகையில் விடைபகர்ந் தேன்: ''ஆபிர மன்னவ! தங்கள் அறிவுரைக்கு நன்றி. நான் வாழ்க்கை முழுவதும் கட்டுக்குட்படாத காளை போல வெறி யோடும் கழித்தேன். எனக்கு அரசியல் சூழ்ச்சி தெரியாது. போர் அமைதிகளும் தெரியா. நான் தெரியாத்தனமாகத் தவருக அரசியல் சூழ்ச்சியில் சிக்கிக்கொண்டேன். என் கையில் இருந்து பட்டம்மையைக் கூற்றுவனும் பறிக்க முடியாது. அவள் எங்கிருப்பினும் அரசியாகவே இயங்குவாள். தாங்கள் தவருகக் கொள்ளமாட்டீரெனில், அவளைத் தங்கள் மாதரில்லத்தி லும் அரசியாகவே மதிப்பேன்.'' உலோரிகதேவர் நகைத்தார். நீ எளியன், கவடுசூது அறியாதவன் என்பதே அவர் நகைப்பின் பொருள் போலும். ஆனல் மாற்றமொன்றும் கூறவில்லை. சிறிது நேரம் அமைதியாக இருந்து பின்னர் இயம்பினர்: ''நான் பத்தாயிரம் மல்லர்களை இளவரசிக்கு அளித்துள்ளேன். அவர் களை எந்த வகையிலும் அவள் பயன்படுத்தலாம். புருடபுரம் (பெஷாவர்) வரை அப்படைஞரே அவளை அழைத்துச் செல்ல லாம். இம்முடிவில் சிறிதும் தன்னலம் எனக்கில்லை. ஏதேனும் தன்னலம் இருந்தால் அது பின்வருமாறு: குப்தர் தம் பகைவர் கையில் இத்தூய நாட்டின் பாதுகாப்புக் கடமையைவிட விரும்பு கிறேன். நான் கன்னேசி உள்வினைகளில் தலையிட விரும்ப வில்லை. குப்த மன்னர்மன்னனுக்குக் கொடுத்த உறுதிமொழி யைக் கன்னேசி மாமன்னவன் மீறிவிட்டான். நன்ருக நினைப் பீராக, பட்டர் பெருமான், நாட்டின் முழு நன்மையும் என் கருத்தில்தான் உள்ளது.''

நான் உண்மையில் நினைவென்னும் நீள்கடலில் ஆழ்ந்தேன்.

குமாரகிருஷ்ணவர்த்தனனுக்கு என்ன மாற்றம் கூறுவேன்? இத்துணைப் பெரிய படை கன்னேசி நாட்டின் மார்பைக் கீறிக்கொண்டு போரில்லாமல் கடந்து செல்ல முடியுமா? போரினுல் பேரழிவு ஏற்படுமே. இளவரசியின் எதிர்காலம் நிலையற்றதாகிவிடுமே. உலோரிக தேவர் எளிய பான்மையுடையவர், கன்னேசி மன்னர்மன்னனைப் பற்றித் தவருன கருத்துக் கொண்டுள்ளார். ஆனுல் அறுபதாண்டுப் பகைமை இமைப் போதில் கரைந்து விடுமா? வழிதான் என்ன?

நான் பட்டம்மையின் கட்டளை பெறவேண்டுமென்றேன். மகிழ்ச்சியோடும் அவர் எனக்கும் விடைகொடுத்தார். உலோரிக தேவர் இல்லத்தினின்றும் வெளிவந்தேன். பல சிக்கல்கள், கவலைகள் என் மூளையைக் குழப்பின. புண்ணிய பாரதம் காட்டுமிருண்டிகளின் படையெடுப்பால் இரத்தப் பெருக்கில் ஆழ்ந்துவிடும் என்பது தெளிவாகத் தென்பட்டது. பேரழிவைத் தடுக்கும் வழியைக் கடவுள் என்னிடம் வழங்கி உள்ளார்; ஆனுல் அதனை முறைப்படி பயன்படுத்தும் வழிவகை அறியாது தவிக்கின்றேன். ஒவ்வொன்ருக நிகழ்ந்தவை நினைவிற்கு வந்தன. நிபுணிகையைத் தற்செயலாகப் பார்த்தல்; மௌக்கரி அரண்மனையில் மாதர் கோலத்தில் நுழைந்து இளவரசியை விடுவித்தல்; சுகத பத்திரர், அவதூதர் இவர்களைக் காணுதல்; குமாரகிருஷ்ண வர்த்தனனைக் காணுதல்; பிற பிற......என்ன, இவை யாவும் முன்னமே விதிக்கப்பட்டனவா? இத்தனை பெரிய நிகழ்ச்சிகள் தற்செயலாக எப்படி ஒருங்கு கூடின? விளைவிக்கமுடியாத செயல்! இவை யாவும் திறமை பொருந்திய கவிஞன் கட்டிய கதைபோன்று தென்படுகின்றன. என் முழுவாழ்வையே ஒரு குலுக்குக் குலுக்கி அகோர பைரவர் கூறினுர்: 'பட்டம்மையே நீ போற்றக்கூடிய கடவுள்!' இன்று நிகழ்ச்சிகளின் சுற்று வட்டமானது என் முடிவான குறிக்கோளையே இடைக்கருவியாக மாற்றிவிட்டது. எங்கும் நல்வழிக்குரிய ஒளிவரியே காண முடியவில்லை. ஆனுல் முடிவான குறிக்கோளை இடையே ஏற்பட்ட விளைவின் கருவியாகக் கருதுதல் அறிவு பயிலாத உள்ளத்தின் கற்பனையேயாம். இக் கற்பனையை உறைந்து வடிவங் கொள்ளுமாறு விட்டால் தவருக முடியும். இதனுல் உலக முழுவதற்கும் நன்மை ஏற்பட்டால் எனக்கழிவு உறுதியாகிவிடும். ஒருபால் பாரதம் பாதுகாக்கப்பெறுதல், மற்ருெருபால் எனது முழு அழிவு. எதனைத் தேர்ந்தெடுத்தல்? இப்போது அவதூதரின் கருத்து நினைவிற்கு வருகின்றது. விரதிவச்சிரருடன் அவர் முன்னர்

சொன்னார் : "பார், விரதி ! உண்மை பிரிக்க முடியாததொன்று. உங்கள் பௌத்த சமயத்தினர் உண்மையை நடைமுறையுண்மை என்றும் அதனினும் மேலான பேருண்மையென்றும் இரண்டாகப் பிரித்து விட்டதாகப் பெருமிதம் கொண்டனர். அவை இரண்டிற்கும் வேற்றுமை உள்ளதுபோல நினைத்தனர். எனது உண்மை, உண்மையாக உண்மையெனில் அது முழு உலகத்திற்கும் உண்மையே ; அந்த நடைமுறை உண்மையே மேம்பட்ட உண்மையுமாகும் ; அதுவே முக்காலத்திற்கும் உண்மையாகும்." அவதூதரின் கருத்துப் பொருள் என்னவாக இருக்க முடியும் ? ஒரு செய்தி உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்கமாகத் தென் படுகிறது. எனது உண்மையை நடைமுறையில் கொண்டு வரலாம் ; உலக முழுவதின் நன்மையை நான் விரும்பினால் நானேற்கலாம். ஆனால் பட்டம்மையை அரசியல் நெறிக்கு விளையாட்டுப் பொம்மையாக்கமாட்டேன். அவள் என் அரசிக் கரசி. அவள் முன்னர் மன்னர்மன்னன் ஹர்ஷதேவனும் ஒரு பொருட்டு மல்லன், உலோரிகதேவனும் ஒரு பொருட்டுமல்லன். அரசிக்கரசிக்கு அரும்பணியாற்றலே என் வாழ்வுக்கடன். என் உயிர் இயங்கும்வரை இக்கடமையில் தடையுண்டாக்க விட மாட்டேன். ஆபிர மன்னன் கூற்றில் என் கடமைக்கு எதிரான செய்தி ஏதேனும் உள்ளதா ? அவ்விதம் ஏதும் உள்ளதாகக் காண்கிலேன். கிருஷ்ணவர்த்தனின் கூற்றில் என் கடமைக் கெதிரானது உள்ளதோ? அதிலும் ஏதும் காண்கிலேன். குமாரன் கூறினான். "எந்த நிலையிலாயினும் எவ்வகையானும் பட்டம் மையை ஈண்டுக் கொணர்க." பட்டம்மையை அரசிக்கரசி என்ற நிலையில் அழைத்துச் செல்வேன். ஓராயிரம் ஆபிர மல்லர் அவருக்கு ஊழியம் புரிவர், அவர்கள் அவள் ஒரு குறிப்பினால் தம் ஆருயிர் விடவும் ஒருப்படுவர். இதில் என் கடமைக்கு எதிரானது இல்லையே. பட்டம்மைக்கு ஊறு நிகழ்ந்தால் கன்னோசியில், ஆபீரப்படை அவனைச் சூழ்ந்து நாட்டைக் கிழித்துக்கொண்டு வெளியேறும், அப்போது குறுக்கே தலையிடுவோர் ஒன்று என்னை வீழ்த்தவேண்டும் அல்லது அவர்களே என்னால் வீழ்த்தப்பெற வேண்டும். நான் மடிந்த பின்னர் இளவரசியின் கதி என்ன ? கெடுக வாலறுந்த காளை போன்றவனே ! பேறழிந்த பட்டனே ! இத்துணை கோழை ! நீ பட்டம்மையின் பாதுகாவலன் என வீறுகொண்டனை ! இளவரசியே உன் முடிவு வெற்றி, அவள் பணிப்புரிந்து உயிர்விடக் கடவேன். இத்தகைய நூற்றுக்கணக் கான கற்பனைகளை எண்ணியவாறு போய்க்கொண்டிருந்தேன்.

பின்னால் யாரோ ஆழ் குரலில் என்னை விளித்தனன்: "பெருமான், எம்மை மறந்தீரே!"

பின்னர் திரும்பினேனாக, மௌக்கரி வீரன் விக்கிரகவர்மன் நின்றிருந்தான். நெற்றி நிலந்தோய வணங்கினான். வாழ்த்துக் கூறி அவனது நலன் அவனைச் சார்ந்த மறவரது நலன் உசாவினேன். தக்க விடை பகர்ந்து தொடர்ந்தான். "பெரும! ஆபிர மல்லர் பதினாயிரவரைக் கருதி மௌக்கரிகள் பதின்மரைப் பொருட்படுத்தாமை தக்கதன்று. யாம் மாராணி, காலம் சென்ற கிரகவர்மரின் மனைவியார் அரசித்திருவின் அடக்கமான மறவர்கள், பணியாளர்கள். எவனாவது அரசித்திருவைப் பற்றி இழிசொல் பகர்ந்தாலே அவனுக்கு ஊறு உறுதல் உறுதியாம். இந்த வெளி நாட்டில் தங்கள் கட்டளையால் யாம் மிகுந்த பெருமை பூண்டுள்ளோம். ஆபிரக் குறுமன்னன் கன்னோசி மன்னர் மன்னனைக் குறித்துத் தகாதன கூறினன் எனக் கேள்விப் பட்டோம்; நாங்கள் வெகுண்டால் ஈண்டுக் குருதி யருவி பாயும். நாங்கள் மந்திரக் கட்டில் பட்ட கரும்பாம்பு போல அடங்கி இருக்கின்றோம். காலம் எதிர் நோக்குகின்றோம். ஆனால் உமது கட்டளை பிறந்தக்கால் ஒரு நொடியில் பத்திரேசர்க் கோட்டையின் செருக்குப் பிடித்த வீரர்கள்மீது காலப் பாம்பின் பத்து நாக்குகளென நாங்கள் பதின்மரும் பாய்வோம்; அவர்களை நக்கி விழுங்கி விடுவோம்." இப்படிக் கூறி வாளை உருவினான்.

என் முகத்தில் வேர்வைத் துளிகள் அரும்பின. அவனைத் தணிவிக்கச் சாற்றினேன்: "ஓ! ஆண் புலி போன்றவனே! சிறுசிறு சொல்லுக்காக வலிமையைப் பாழ்படுத்துதல் தக்கதன்று. நீ மௌக்கரிகள் குரு பருவுசர்மாவின் கட்டளை முடங்கல் படித்திருப்பாய். தடுக்க முடியாத எல்லைப்புறக் காட்டுமிராண்டிகளின் எல்லையற்ற படைகள் இறங்கக் காத்துள்ளன. ஆண்டு மௌக்கரிகளின் தோளாற்றல் பயன்படும். நீவிர் கன்னோசி அரசித்திருவின் கட்டளைமீது பட்டம்மைக்கு ஊழியம் புரிய நியமிக்கப் பெற்றீர். அம்மையைப் பாதுகாத்தலைத் தவிர வேறு கடமை உமக்கில்லை. ஆபிரப் படைகள் உமக்கு இப் பணியில் உதவிபுரியும். ஆண்டகையே! பார், வடபாரதத்தைப் பேரழிவினின்றும் காத்தல் வேண்டும். பெரிய குறிக்கோளுக்கு உயிர் விடுக. தம்முயிரைக் கொடையாக வழங்க இதனினும் சிறந்த வாய்ப்பேது?" விக்கிரகவர்மன் தாழ்ந்து பணிந்தான். வாளை உறையில் இட்டுக் கூறினான்: "யாவற்றினும் சிறந்த கடமை செஞ்சோறு வழங்கியவனின் மானங்காத்தல், பெருமான்!

எனினும் உமது கட்டளை எமது கடமை. பட்டம்மையைக் காக்கும் சிறந்த பொறுப்பு எம்முடையதே என்பதை மறக்க வேண்டாம்.'' பின்பு வணங்கிவிட்டு விலகினுன் அவன்.

அங்கே மேலே வானச் செக்கர் மனத்தை உருக்கிற்று. மேக அடுக்குகளிலும் செந்நிறம் ஊடுருவிற்று. வடபாரதம் பிரிந்து முயன்ருல் இரத்தப் பெருக்கில் ஆழும் என மாகாலன் அறிவுறுத்துகின்ருன் போல அக்காட்சி காணப் பெற்றது. மேலே வானில் விழவிருக்கும் முதிய கதிரவனின் இரண்டொரு கதிர்கள் அப்போதுதான் நீராடியதால் நனைந்த மாகாளியது மயிர் முடியென காணப் பெற்றன. முழு வானமும் புகை நிரம்பிய நெருப்புக் குழிபோலக் காட்சி யளித்தது. நெருப்புத் தழலுக்கு அஞ்சி ஓடும் வனதேவதைகள் தம் அடிகள் செம் பஞ்சுக்குழம்பு பட்டது போன்று மரவுச்சிகளில் படிந்த கதிர்கள் போலிருந்தன. இவ்வானச் செவ்வி எத்தகைய எதிர்காலக் கேட் டினைக் குறிக்கின்றதோ அறியேன். திரிபுர பைரவியின் இந்தக் கோணிய விளையாட்டுக்கு நான் சான்ருகப் போகின்றேனே; என்ன நிகழப் போகின்றதோ?

## உயிர்ப்புப் பதினேழு

நிபுணிகையின் உடல்நிலை கவலைக்கிடமாக இருத்தல் கண்டு வருந்தினேன். அவளோடும் நான் செலவழித்த நாட்கள் ஒவ் வொன்ருக் நினைவுக்கு வந்தன. என் நாடகக் குழுவில் அவள் சேர்ந்த போது அவள் பதினுறு ஆண்டு நிரம்பியவளாக இருந் தாள். அவள் அஞ்சியவளாகக் காணப்பெற்ருள். என் முன்னர் அவள் கண்ணெடுத்தும் பார்க்கத் துணியவில்லை; வாய் திறக்க வும் துணியவில்லை. அவளைச் சேர்ப்பதால் தொல்லை வரும் என நினைத்தேனுயினும் சேர்த்தேன். அழுதவாறிருந்தாள். அவள் மீது மிகுந்த இரக்கத்தால் அன்றிரவு முழுவதும் நான் உறங்க வில்லை. அப்போது இளவேனில் வெறியூட்டும் பருவம். திசை முனைகள் மாம்பூங்கொத்து இழைகள்போலக் கூர்மையாயின; வெறியூட்டுவனவாயின. தேனருந்திய வண்டினம் தெருத்தோறும் திரியத். தொடங்கின. மரங்களும், செடிகளும் மலர்களாலும்

இளந்தளிர்களாலும் நிரம்பி இருந்தன. இளந்தென்றலினல் மலர்களும் தளிர்களும் அலேந்தன. வெறிபடைத்த குயில்கள் இசைத்துக் காரணமின்றியே மாந்தருள்ளங்களேக் குழையச் செய்தன. கான் இடம் கொடி நடனத்தால் மகிழ்ச்சியுற்றிருந் தது. இந்த அழகிய சூழ்நிலேயில் நிபுணிகையின் வருந்திய முகம் தென்பட்டது. என்னுள்ளம் பகல் முழுவதும் ஏக்கற் றிருந்தது. அவள் வயது என்ன? அவள் உள்ளத்தில் எத்தகைய கருத்து உறுத்தியுறுத்தி வருத்துகின்றது? அன்று நாடகக் குழுவில் சேர்வதற்கு இத்துணைத் துணிவு எவ்விதம் கொண்டாள்? சமூக அகத்தில் ஏதோ குற்றம் புகுந்துள்ளதாக அன்று நினேத்தேன். மிக ஆராய்ந்தும் அவளேப் பற்றி அறிய முடியவில்லே. அவளும் தன்னேப் பற்றி ஒன்றும் விளக்கவில்லே. வருத்தமின்றி அவள் கூறுவதை ஏற்றுக்கொள்ளலாம் என்றிருந் தேன். அன்று முதல் அவளுடன் இந்தவகைத் தொடர்பே இருந்தது. மகிழ்ந்து ஏதேனும் கூறிஞல் ஏற்றுக்கொண்டேன். நிறைய உசாவுவது தக்கதல்ல, பயனுடையதுமல்ல. மாதர் உள்ளத்துத் துயரம் மிக ஆழமானது; அவர் கூறுவன அத்துயரத்தின் பத்தில் ஒரு பகுதியையும் விளக்க முடிவதில்லே. கூட இரங்குவதால் உள்ளத்துத் துயரின் ஒரு பகுதியை உணர முடியும். நிபுணிகை நேற்றுத்தான் நவின்ருள்: "என்மீது ஆணேயிட்டுக் கூறுக, உண்மையைக் கூறுக பெரும! என்னிடம் எத்தகைய குற்றம் உள்ளது? அதன் பொருட்டாகத் துயரமென் னும் நெருப்புக் குழியில் வாழ்நாள் முழுவதும் எரிந்தவாறுள் ளேன். நான் பெண்பாலாக இருப்பதுதானே என் துயரத்துக் கும் காரணம்?" இம்மொழிகளில் எத்துணே வருத்தம் நெருங்கி யுள்ளது. உறவினரால் சமூகத்தினரால் தொழத்தகுந்த அத் துணேப் பண்புகளும் நிபுணிகையிடம் உள்ளன. ஆனல் அவள் தொழப் பெறவில்லே. இத்தனே நாட்கள் அவளொடும் இருந் தேன். ஒரு குற்றமும் அவளிடம் காணவில்லே. முறுவலித்த முகத்தினள், நன்றியறிந்தவள், கவர்ச்சியுடையவள், விளேயாட் டுப் பண்பினள்; என்ன, இவை குற்றங்களா? குற்றம் வேறிடத் தில் உள்ளது. நற்பண்புகளேக் குற்றமெனக் கருதும் அவ்விடத் தேயே தவறுள்ளது. அஃதென்ன? பொய்க்கு உண்மையின் வடிவம் கொடுக்கிறது குற்றம் நிறைந்த சமூகம். என் கடன் பணிசெய்து கிடப்பதே எனும் பான்மை நிபுணிகையிடம் நிறைய இருத்தல் கண்டு வியப்புக்கொண்டேன். அவள் எனக்குச் செய்த ஊழியமும் பணிவிடைகளும் அம்ம! ஏழேம் பிறப்புகளிலும்

மறவேன். தீர்க்க முடியாத பெருங்கடன் பட்டேன் அவளுக்கு. நிபுணிகை கூறியதன் கருத்து: "உன்மீது காதல் கொண்டேன். ஆனால் உனது நகைப்பினால் எனது காதலில் இடி விழுந்தது." ஆனால் நான் வேண்டுமென்றே அவளைப் புண்படுத்தவில்லை. எனக்குப் பணிபுரிய விரும்புபவள், அழகான முறுவலிப்புடைய வள், குறும்பு விளையாட்டழகு உடையவள்; இந்த அழகுகளைக் கண்ணுற்று அக்கரையும் அன்பும் கொள்ளாத ஆடவர்கள் கல் போன்றவர்களே. என்னை உயிரற்ற கல் என்றுளே நிபுணிகை, அன்றே என்மீதுள்ள கவர்ச்சி விட்டனவா? முதலில் எப்போதும் தன் காதல் உணர்ச்சியை என்னிடம் அவள் காட்டவில்லை. கருத்துக்களின் மெய்ப்பாட்டினால், பணிவிடைகளால் ஒருவகை யான தனி மகிழ்ச்சி நுகர்ந்தாள்; இந்த வினைக் கூட்டங்களின் ஆழத்தே ஏதோ விலை மதிப்பரிய பொருள் தங்கி இருந்திருக்கும். இன்றும் அது நிலைபெற்றுள்ளது என நினைக்கின்றேன். ஆனால் அதன் மேல்நுரை மட்டும் நீங்கிற்று. இன்றும் அவள் இதயக் கோயிலில் மறைந்த இடத்தே ஏதோ தேவதை அமைதியாக அமர்ந்துள்ளது. அதற்கு மௌன பூசை ஆற்றி வருகின்றாள். அவளைக் கண்டதால் என்னுள்ளத்தே எண்ணங்கள் அலை மோதின. நானும் அப்பெண் தகையை உள்ளத்தே தொழு தேன். ஆனால் என் எல்லையை நான் உணர்ந்தவன். எல்லைக் குள்ளேயே இயங்கும் வல்லமையைக் கடவுள் எனக்கருளினார் போலும். அந்தோ! நிபுணிகை வாழ்வு துயர நெருப்பில் எரிந்து வருகின்றது. நான் அவளுக்கென ஊழியம் புரிய முடியுமா? அன்று என்னுயிரைக் காப்பதற்காக மந்திர மயக்கத் தால் ஏற்பட்ட துன்பம் நீக்குதற்காகத் தன்னையே ஓமம் செய்து கொண்டாள். இளவரசிப் பெருமாட்டியிடம் என்மீது தான் கொண்ட காதல் பற்றிக் கூறி இருப்பாள்போலும், இல்லையெனில் "காலை அகற்றுதே; அவள் உள்ளத்திற்குத் தணிவு ஏற்படுவதாக இருக்கலாம்" என்று ஏன் இளவரசி கூறினாள்? சீச்சீ! வெட்கப் படக்கூடிய எத்தகைய செய்தி! நிபுணிகை என்மீது கொண் டுள்ள அவா இன்னும் குறைந்தபாடில்லை என நினைக்கின்றேன். அவள் உள்ளத்தில் ஏதோ ஒரு முனையில் இன்னும் நெருப்புப் பொறி அடங்கி இருக்கின்றது போலும். இன்னும் அறியாதவள். நான் எப்படி? என்னைப் பற்றி ஆயப்புகின் ஒருண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாகவுள்ளது. எனது தொழுகை மலட்டுத்தனமானது; அதில் எங்கும் மலர், காய், பழம், ஏதும் கண்டிலேன். ஒவ்வொரு கடமைக்கும் ஒரு

மனவூற்று உண்டு. ஒருவன் புகழாவலாலோ, பொருள் விருப்பத்தாலோ, கடவுள் வழிபாட்டு ஆவலாலோ தன் கடமையை ஒருப்படுத்துகின்ருன். நான் ஏன் என் நாடகக் குழுவைக் கலைத்துவிட்டேன்? ஆறு ஆண்டுகளாக நாடோடியாக ஏன் திரிந்தவாறிருந்தேன்? என் கடமைகளுக்கு ஏதேனும் மனவூற்று இருந்ததா? நிபுணிகைமீது விருப்பம் என்னுள்ளத்தில் இருந்ததா? அந்தோ? நிபுணிகை கூறினுள் முன்னே. "நான் எரிந்து புகையாவது தடைபட்டுவிட்டது. நான் கொழுந்துவிட்டெரிய இருக்கின்றேன்" அப்படிக் கூறியவளின் உள்ளம் எவ்வளவு கொதித்திருக்கும்? அன்று முதல் அவள் உள்ளம் ஏதோ ஆழ்ந்த வருத்தத்தில் துன்புற்று வந்துள்ளது. அவள் கண்கள் இடையருது நீர் பொழிவதைக் கண்டு என் வாழ்வே கரைந்துவிடும் போலிருந்தது. நான் இங்கு வந்து மூன்று நாட்களாயின. இதற்குள் என்னென்ன பார்த்துக் கொண்டிருக்கின்றேன்! பட்டம்மை வேண்டுகோள் விடுத்தாள்: "மணப்பொய்கை அருகே சிவன் கோயிலுக்குச் சென்ருல் மந்திரத்தாலுற்ற மயக்கம் நீங்குமாம்." அவதூதர் கொடுத்த மருந்தின் மீது நம்பிக்கை கொள்வதே நலம் என்று நான் கூறியதும் அம்மையின் கண்களில் நீர் பொழியத் தொடங்கிற்று. வேறு மாற்றம் உரைக்காமல் அங்ஙனமே நிபுணிகையை மணப்பொய்கைக்கு அழைத்துப் போவதாக உறுதியளித்தேன். பட்டம்மையின் கண்ணீர் கண்டதும் என்னுள்ளம் உடைபடுகின்றது; என்னிதழ்கள் உலர்கின்றன; முகம் வேர்வையில் முழுகுகின்றது; மூச்சுத் திணறுகின்றது. ஆகா! நான் தன்னுட்சி அற்றவனுனேன்?

பட்டம்மையிடம் ஒருமாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. நேராத நிகழ்ச்சி நேர்ந்துவிடும் என்ற அச்சம் அவளைத் துன்புறுத்துகின்றது. அவள் உள்ளத் துடிப்பு வெளிப்படையாகத் தென்படவில்லை. அவள் ஆற்றும் பலவினைகளில் ஊக்கமின்மை தென்பட்டது. எதிர் நோக்கியது விளையவில்லை என்ற ஏக்கம் உள்ளத்தைக் குலுக்கியவாறிருந்தது. நிபுணிகை பற்றி நான் கூறச் சென்றபோது தான் முன்னர் மொழிந்ததை மறந்து விட்டிருந்தாள். சிறிது நேரம் வரை இமை கொட்டாது என்னைப் பார்த்தவாறிருந்தாள். போதிய உறக்கமில்லாத நிலையில் திடீரென எழுந்தவள் விழிப்பதுபோலப் பார்க்கத் தொடங்கினுள். அப்பொழுது அவள் அழகு காணத்தக்கது. தளர்ந்த கூந்தலால் சூழ்ந்த நனைந்த முகம் பாசியால் சூழப்

பெற்ற, 'நீர்த்துளியால் நனைந்த நூற்றிதழ்த்தாமரை போலிருந்தது. மனக்குழைவின் காரணமாகத் தளர்ந்த புருவம் காமனது உடைந்த வில்லை நினைவூட்டியது. பாதிரி மலர்ச் செம்மை பெற்றிருந்த இதழ்கள் உலர்ந்திருந்தன. எனதுள்ளத்தே அச்சம் தோன்றியது. அவள் கன்னங்களில் ஊக்கம் காணவில்லை; மலர்ச்சி தென்படவில்லை; சுறுசுறுப்புந் தோன்றவில்லை. உடற்பொறிகளின் புறத்தொழில்களெல்லாம் உள்முகமாயினபோலும். அகத் தொழில்களெல்லாம் இன்னும் ஆழ்ந்ததோரிடத்தே ஒரு முகமாயினபோலும். அசைவுமில்லை; ஆழ்ந்த கவலையே நிலவுலகில் பரவிற்றோ எனத் தென்பட்டது. எத்தகைய துயரம் அவள் உள்ளத்தில் ஆட்சி மேற்கொண்டது! மணப்பொய்கை பத்திரேசர்க்கோட்டைக்கு அண்மையில் தான் உள்ளது. பட்டம்மையின் விருப்பந் தெரிந்து ஆபிரக் குறுமன்னன் நிபுணிகைக்குப் பல்லக்கும் எனக்குக் குதிரையும் ஏற்பாடு செய்திருந்தார். எம்மோடும் நம்பிக்கையான ஆட்கள் தொடர்ந்தனர்.

நடுப்பகல் மணப்பொய்கைச்[1] சிவன்கோவிலைக் குறுகினோம். இவ்வழகிய பொய்கையைப் பார்த்ததும் நிபுணிகை எல்லையற்ற மகிழ்ச்சியுற்றாள். நானும் நிறைந்த மகிழ்ச்சியுற்றேன், உள்ளத் தணிவுற்றேன். ஊழிக்காலத்தே திசைக் கட்டுக்கள் உடைபெறும்போது வானப் பரப்பு நிலத்தை அடைந்து கவிந்து அமைந்ததோவெனக் கருதுமாறிருந்தது அப்பொய்கை. மாவராகன், மூழ்கிய நிலமகளைக் கோட்டில் குத்தி எடுத்துக் காத்தானன்றோ; அன்று கோடு குத்திய இடத்தில் நீர் நிறைந்ததோ? மேற்கிலும் கிழக்கிலும் பரந்திருந்த பொய்கை தானே தன் நிகராம். கொடிய நெருப்புத் தழலைக் கக்கும் முதுவேனிலிலும் மலர்ந்த அல்லிகள் கருநெய்தல்கள் செந்தாமரைகள் பொய்கையின் அழகை உட்கொண்டு மிளிர்ந்தவாறிருந்தன. மலர்ந்த தாமரை மலர்களினின்றும் வழிந்த தேன் துளிகள் நீரின் மீது மயிற்பீலிக் கண்கள் எனத் தோற்றமளித்தன. சுரும்பினங்கள் தாமரை மலர்களைச் சூழ்ந்திருந்தன. தேன் பருகும் இரட்டை யன்னங்கள் மாதர் சிலம்பொலி போன்று ஒலி செய்தவாறிருந்தன. நாரைகள் கொக்குகள் ஓசையால் காற்றுப் பரப்பினை அலையெழச் செய்தன. நீர்வாழ்வன துள்ளிப் பாய்வதால் நீரலைகளும் வாயாடிகளாயின. காற்றலைகள் தூண்டி

---

[1] மணப்பொய்கை – சௌரபஹ்ருத் – ஒரு வேளை உத்தரப் பிரதேசத்தில் பலியா ஜில்லாவில் இப்போது சுரஹா ஏரியாக இருக்கலாம்.

எழுப்ப நீரலைகள் எழுந்தெழுந்து சிதைந்து விழுந்தன. அலை களின் சிதைவால் எழுந்த திவலைகள் மழையை நினைவூட்டின. வனதேவதைகளின் கூந்தலில் அணி செய்யும் மலர்கள் மணம் வீசுவதுபோல விட்டுவிட்டுப் பொய்கை மணம் வீசிற்று. வெண் தாமரை மலர்கள் மீது அமர்ந்திருந்த அன்னச் சேவல்கள் தம் காதற் பெட்டைகளை விளிக்காதிருக்கும் வரை அவற்றின் இருப் பைக் காணமுடியாமல் பெட்டைகள் உள்ளம் குழறின. நிழல் வடிவமான திங்கள்வட்டம் ஓரமுதப்பரப்பை உண்டாக்கியது போல வெண்தாமரை மலர்கள் பொய்கை முழுவதிலும் நிரம்பி இருந்தன. கரையில் வளர்ந்திருக்கும் மரங்களின் தளிர்கள் வீசிய இளங்காற்றினுல் நீரில் கிளர்ந்த சிற்றலைகள் தவழ்வது புனல்தேவியர் தம் கண்புலனுகாத குழந்தைகள் தவழ்வது போன்ற காட்சியை உண்டாக்கிற்று.[1] இவ்வழகிய பொய்கை கண்டு காதல் விழைவு மறுக்கப் பெற்றதால் எரியும் உள்ளமும் தண்மைபெறும்; பிரிவாற்ருமை எரிக்கும் உள்ளமும் அமைதி யுறும்; வெறிகொண்ட மூளையும் செப்பமுறும். மிகு தொலைவு வரை பரவி இருக்கும் காட்டுப்பலா, காட்டில்ந்தை, கதிரம் எனும் பிசின் மரங்கள், புளிய மரங்கள் வளர்ந்திருந்தன. மேற்பாலில் இருந்து வீசும் வெப்பக் காற்றுத் தழல் வீசி மூவுலகங்களையும் கொளுத்துவேன் எனச் சூளுரைத்தது போல இயங்கிற்று; காட்டுத் தீயும் காட்டுச் செடிகளை எரித்துக் கொண்டிருந்தது; அப்போது சுழல் காற்றினுல் மேலே வீசப் பெற்ற தூசு வானத் தைக் கவிந்து கொண்டது. கதிரவன் கடுமையான கதிர்கள் நிலத்தின்மீதுள்ள பசுமையை ஒழிப்பதற்காக முனைந்திருந்த பொழுது, மணப்பொய்கை பின் நாலாப்பக்கங்களிலும் மரஞ் செடி கொடிகளின் இருண்ட பசுமையைக் காத்து வந்தது. ஆங்குக் குளிர் காலத்திலே மேகமில்லாத வானம் நினைவுக்கு வந்தது. மிக்க வெப்பமுற்ற மேற்பாலில் இருந்தும் வீசும் காற்றுப் பழக்கப்பட்ட புலி போன்று தன் இயல்பை மறந்து வீசிற்று. நிபுணிகை இவ்வழகை மிகவும் சுவைத்தாள்.

நீராடிச் சிவன் கோயிலுக்குள் நுழைந்தோம். பொய்கை யின் திவலைகளால் உடம்பு தண்மையுற்றது. கைலாயத்திற்கே வந்துவிட்டோமோ என்ற மயக்கங் கொண்டோம். ஆகா! இந்த காற்றுத்தானு கைலாயத்து அருவிகளின் நீர்த் திவலைகளைச் சொந்தமாக வாரிக்கொண்டு வீசுவது, பூருசுவ இலைகளை விழச்

---

[1] காதம்பரி கதாமுகம் பம்பாசரோவர வருணனை ஒப்பு நோக்குக.

செய்வது, சிவனேறும் காளை அசைபோடும் அதன் வாய் நுரையைத் தொடும் பேறு பெறுவது, சிவபெருமான் தலைமுடிக்கு அணியாக இருக்கும் கங்கை நீரைப் பருகும் பெருமை பெறுவது, பார்வதியின் காதில்சொருகிய தளிர்களை அசைய வைப்பது, உருத்திராக்க மலர்த் தாதுக்களால் மணம்பெறுவது, சுரபுன்னைத் தளிர்களால் வீசப்பெற்றச் சிவபெருமானின் களைப்பை விலக்குவது? இந்தச் சிவன் கோவிலுக்கு மாந்தர் வருவது அரிதே. மிகு தொலைவுவரை மரகதப் பசுமையை மாஞ்செடிகள் கொண்டிருந்தன. பறவைகளின் இனிய இசை உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. மொட்டுகள் வண்டுகளின் நடனத்தாக்குதலால் விரிந்து மலர்ந்து பழமை எய்திவிட்டன. ஆங்கு வெறியுற்ற குயில்கள் காட்டு மாந்தளிர்களைக் கொத்திக்கொண்டிருந்தன. வெறியுற்ற சுரும்பினங்களின் இன்னிசையால் கண்ணுக்கெட்டிய தொலைவில் அடிவானம் முழக்க முற்றிருந்தது. ஆங்குத் திங்கள் திகழும் கங்குல்களில் அச்சமகன்ற நிலாமுகப்புட்கள் நிலவின் அமுதக்கதிர்கள் எனும் தளிர்களைச் சுவைத்தவாறிருக்கும்; சண்பகப் பொன் தாதுக்களால் காடைகளும் சாதகப் புட்களும் மஞ்சள் நிறமெய்தின; பழச்சுமையால் வருந்திய மாதுளஞ் செடிகளில் சிட்டுக் குருவிகள் விளையாட்டுப்போர் நடத்திக் கொண்டிருந்தன. காட்டுப் புருக் குஞ்சுகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டனவாய்த் தம் வளர்கிற சிறு இறக்கைகளில் ஒட்டிக்கொண்டிருந்த பூந்தாதுக்களை விலக்கிக் கொண்டிருந்தன. ஆங்குக் கிளிகளும் நாகணவாய்களும் கொத்திய பழத் தோல்கள் காட்டு நிலத்தினை மகிழ்ச்சி யுறுத்தின; கிளைகள் மீது அமர்ந்து புருக்கள் இறக்கைகளை உதறுவதால் மலர்க் கொத்துக்களைச் சிதறடித்தன. இத்தகைய இனிய அழகை உட்கொண்டிருந்த காட்டு மரங்கள் மாந்தர் அறிமுகம் பெறவில்லைபோலும். சிவபெருமான் தாம் உறைவதற்கு எத்துணை அழகு பொருந்திய காட்டிடத்தைத் தேர்ந்துள்ளார்! நிபுணிகை இன்று மிக மகிழ்ச்சியுற்றிருந்தாள்; பறப்பவள் போல விரைந்தாள்; வாழ்க்கைப் பயன் பெற்று விட்டவள்போன்று காணப்பெற்றாள். சிவபெருமான் கோயில் வரைப் பசுமையான புல்தரை கண்டு அதன்மீது அமர வேண்டுமென்ற அவா பிறப்பதில் வியப்பேதுமில்லை. மிக முயன்று இந்த ஆவலைத் தடுத்தோம். முதலில் முக்கண்ண பெருமானை வணங்குதல், பின்னர் வலம் வருதல், பின்னரே ஏனைய வினைகள். நேராகக் கோவிலுக்குள் நுழைந்தோம். நான்கு தூண்கள்மீது படிகமண்



LIBRARY 107869

டபம் இருந்தது. அதன் நடுவே மூவுலகத்திறைவன் சிவபெருமானின் நான்முக இலிங்கம் இருந்தது ; அது முத்து வெள்ளைக் கல்லால் இயன்றது. நிபுணிகை எல்லையற்ற பத்தி உணர்வோடும் இலிங்கத்தின் அடியில் அப்பொழுதுதான் மலர்ந்த பதினொன்று தாமரை மலர்களை இட்டு வணங்கினாள். அவள் வணங்கியது காமனைப் பிரிந்து வருந்தும் இரதிதேவியே முக்கண்ண பெருமானின் சினந்தணிக்க வணங்கியது போன்றிருந்தது. நிபுணிகையின் மயிர்க்கால் தோறும் நன்றி பாராட்டும் உயிர்ப்புப் பொங்கிற்று. சிவபெருமான் திருவடிகளில் இட்ட நீர் சொட்டும் தாமரை மலர்களைக் கண்டு 'என்னுள்ளம் கரைந்தது. அத்தாமரை மலர்கள் திங்களினின்றும் பறிக்கப் பெற்ற இதழ்கள் போன்றும், தாண்டவ நடனம் விழையும் சிவபெருமானின் கொக்கரிப்பின் சிறுபகுதிகள் போன்றும், தாண்டவ நடனத்தால் சிதைந்த வாசுகிப் பாம்பின் படத்துணுக்குகள் போன்றும், பாஞ்சன்னியசங்கின் உடன் பிறப்புக்கள் போன்றும், பாற்கடலில் அரும்பும் இதயத்தாமரைகள் போன்றும், ஐராவத யானை வழங்கிய முத்து மகுடங்கள் போன்றும் சிவபெருமானின் அழகை வளர்த்தின. சிவபெருமான் முன்னர் மண்டியிட்டுத் தொழுகையில் அமர்ந்த நிபுணிகை உள்ளத்தே வானயாற்றின் அலைகளென நூற்றுக்கணக்கான பத்தியலைகள் கிளம்பியவாறிருந்தன. மாதேவனை வணங்கும் நிபுணிகையை நான் கண்டபோது இந்தத் தூய்மையின் படிமத்தை, பத்தியின் அருவியை, அக்கரையின் ஒழுங்கினை, அன்பின் உறைவிடத்தை, தொழும்பில் ஊற்றுப் பொழிவினைப் பேசாமல் உள்ளம் ஆரப் பணியாமல் இருக்க முடியவில்லை. வலம் வந்த பின்னர் புறவாயில்மீது ஒரு முறை நிபுணிகை களைத்தவளென, உடம்பு மரத்தவளென, இழந்தவளென நின்றுவிட்டாள். குரல் தடைபட்டிருந்தது; கண்கள் கலுழ்ந்தன ; முகம் இளக்கமுற்றது. மிகுந்த நேரம் வரை நான்கு பட்டைச் சிவலிங்கத்தை நன்றியுணர்ந்த கண்களால் கண்டவாறிருந்தாள். பின்னர் மெதுவாக என்னை அணுகினாள். நானும் கடைசி வணக்கம் செலுத்தி மணப் பொய்கை நோக்கிப் புறப்பட்டேன். சிவன் கோவிலுக்கு அருகிலேயே ஓருயர்ந்த மகிழமரம் இருந்தது. நாங்கள் இருவரும் சிறிது நேரம் பேசாமல் அமர்ந்திருந்தோம்.

பிறகு நிபுணிகையே மொழியலானாள் : "பெருமான்! இன்று என் பிறப்பெல்லாம் பேறுபெற்றன போல உணர்கின்றேன். எனதுள்ளத்தின் தழல் தணிந்ததெனக் காண்கின்றது.

"உனது பிறப்புப் பயனற்ற தன்று' என நீ கூறினை. இன்றே முன்னேயினும் அதன் உண்மை எனக்குத் தெளிவாயிற்று. தொலைவிலே பொய்கையில் தாமரை இலைகளில் அமர்ந்திருக்கும் கொக்கு வரிசையைப் பார்க்கின்ருய் அல்லவா; அவை மரகதக் கிண்ணங்களில் வைத்த முத்துச் சிப்பிகள் எனக் காண்கின்றன. அவ்வரிசை ஒழுங்குபோல என்னுள்ளம் இன்று அமைதியும் மாறுதலின்மையும் பொருந்தியுள்ளது.'' நான் உவகை பூத்த வனுய்க் கூறினேன்: ''மிக மகிழ்கின்றேன்; நீ அமைதி பெற்றனை ஆதலின் ஆறுதல் அடைகின்றேன்.'' நிபுணிகையின் கண்களில் விளையாட்டுப் பான்மை தவழ்வதைக் கண்டேன். சொன்னுள்: "உனக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்க வேண்டும் பெரும! என்னுள்ளம் அழுக்கு நீங்கப் பெற்று இன்னும் தூய்மையுற வேண்டும்; இன்னும் குறைபாடுள்ளது என்பது கேட்டு நீ வருத்த முறுவாய். மேலும் என் உள்ளம் தூய்மையாகிவிட்ட தென நீ அக்கரையின்மை கொள்ளப் போகின்ருய்.'' அவள் கூறியதின் மறையுணர்ந்து விடை பகர்ந்தேன்: ''பன்னுட்களாக உன்திறத்தே அக்கரையின்மைதான் கொண்டிருந்தேன். அது உனது உள்ளத்தின் குழப்பங்களை அடக்க முடிந்ததா? இன்று நான் அக்கரை கொள்ளாதிருப்பின் அதனுல் பயனென்ன, ஊறு தான் என்ன கூறுக?'' நிபுணிகையின் வெளுத்த கன்னங்களில் அன்பின் செம்மை ஒளி செய்தது; மலர்ந்த கண்களில் அன்பு அலை எழுந்தது. நெற்றியிடத்தில் சத்துவ மெய்ப்பாடு தோன்றியது. ஒரு முறை என்னைப் பார்த்துக் கீழ் நோக்கத் தொடங்கினுள். சற்று நேரம் சென்ற பிறகு தழுதழுத்த குரல் கூறினுள்: "ஆம் பெருமான்! நீ அக்கரை கொள்ளாமல் இருத்தலே எனது செல்வமாகும். நீ என் அன்பைப் பொருட்படுத்தாதிருக்கும் போது என் பிறவி பயனுடைத்தென அறிகின்றேன். மணமிழந்த மலராகிய நான் உன்திருவடிவரை அணுகத் தகுதி பெறவில்லை என நீ நினைக்கவில்லை. நாடகமேடைத் திரையின்பின்னர் அன்றிரவு உனது சிரிப்பு என் உள்ளத்தைத் துண்டுதுண்டாக்கிற்று. ஆனுல்அது என் தவறுதான். நீ நாடகக் குழுவைக் கலைத்து என் மனத்துத் தகாத ஆவல் ஏற்பட்டதென்பதை மெய்ப்பித்து விட்டனை. அந்தோ! எட்டாத பொருளின் மீது காதல் பூண்டேன்! நான் அதற்குத் தகுதியுடையவள் அல்லள். ஆறு ஆண்டுகளில் ,கழிவிரக்கத்தால் என் தகாத அவா அறுந்தது. கடவுள் அதன் பரிசாக மீண்டும் எனக்கு உன் புகல் பெற அருளினர். உண்மையான மனக்குழப்பம் அடைந்த நான்

வேறெங்குப் போக முடியும்?'' வெங்கடேசபட்டரிடம் நான் தீட்சை பெற்ற செய்தியை ஏன் கூறவில்லை எனக் குறை சொல்லும் குரலோடும் வினவினாய். அந்தத் தீட்சை உண்மைக்கு மாறானது. உன்னைப் பார்த்த நாளன்றே நான் அதனை மறந்து விட்டேன். நான் மன ஊற்றுக்களை நாராயணனுக்கு ஒப்படைக்கும் முயற்சியில் தோல்வியுற்றேன். சுசரிதை முயற்சியில் வென்றாள் எனில் அவள் பேறு பெற்றவளே. ஆனால் உன்னை மீண்டும் பெற்று என் மனநிகழ்ச்சிகளையே வெற்றிக்குப் படிகளாகக் கருதினேன். ஆனால் ஒரு வினா விடுக்க ஆவலுடையேன், பட்ட!'' அவள்கண்களில் நாணமும் ஆவலும் ஒருங்கே தோன்றின. நான் நட்பு நிறைந்த குரலில் வினவினேன்: ''என்ன அறிய ஆவல் பூண்டனை நிவுணியா?'' அவள் கண்கள் கீழே நோக்கின; மெல்லிய சுறு சுறுப்புள்ள விரல்கள் ஓரறுகம்புல்லைக் கிள்ளுவதில் ஈடுபட்டிருந்தன; முன்றானையைத் தலைவகிட்டின் மீது வலித்து இட்டுக் கூறினாள்: ''நீ என் காதலைப் பொருட்படுத்தாததால் ஏற்படும் நன்மை பேறிழந்த எனக்கு வாய்க்கத்தக்கதா பட்ட?'' நான் விடை பகர்ந்தேன்: ''கட்டாயம் நன்மை உனக்கு வாய்த்தது. நிவுணியா, என்ன நான் உயிரற்ற கல் துண்டா?'' நிபுணிகையின் முகத்தோற்றம் அன்பொளியால் பொலிவுற்றது. அவள் குரலில் சடத்தன்மை நீங்கிற்று. நீர் ததும்பும் கண்களால் என்னைப் பார்த்துப் புகன்றாள்: ''பேறு பெற்றேன், பெருமான், என் மலட்டு வாழ்க்கை இன்றே பயனடைந்தது. இதனினும் மிக்கது விழைந்தேனாகில் தகாத ஆவலாகிவிடும். தகுதியற்றவள் நான். நான் பாவி. பெருமான்! பிறர் இன்பத்தில் எனக்கேன் அழுக்காறு தோன்றவேண்டும்? நான் தன்னலமற்ற தொழும்பில் வெற்றிபெறவில்லை; தோழியின் கடமையிலும் வெற்றியுறவில்லை. அந்தோ! நீ என் பாவ நெருப்புத் தழலைக் காண முடிந்தால்! சிவபெருமான் காட்சியால் என் வாழ்வு பயனடையும். நீ என்னைப் பொறுத்தருள்க, பெருமான். எனதுள்ளம் பொறை நீங்கப் பெற்றது போன்று உணர்கின்றேன்.''

நிபுணிகை ஏன் இப்படிக் கூறியவாறிருக்கின்றாள்? பகற்பொழுதில் ஒரு யாமம் இருக்கும்போதே அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டோம். கதிர்க் கடவுள் தன் செங்கதிர்களைச் சுருட்டுவதில் முனைந்திருந்தான். அதற்குள்ளாகவே நாங்கள் பத்திரேசர்க்கோட்டையை நண்ணினோம். பட்டம்மை கவலையொடும் எமது வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். எம்மை அன்போடும் வரவேற்றாள். போதிய ஓய்வு பெற்ற பின்னர் பட்டம்மை

என்னை அழைத்து ஒரு முடங்கல் அளித்தாள். அது குமார கிருஷ்ணவர்த்தனனது முடங்கல். அதனில் சுருக்கமாகத் தன் உடன் பிறந்தாளுக்கு நிகரான சந்திரதீதிதிக்கு நட்புச் செய்தி வரைந்துள்ளான்; மாமன்னன் ஹர்ஷ தேவனின் செய்தியும் குறித்திருந்தான். அறிமுகமில்லாத உடன்பிறந்தாளாகிய சந்திர தீதிதியைக் காணவேண்டுமென்ற ஆவலை மாமன்னன் தெரிவித்திருந்தான். எந்த நிலையில் பட்டம்மை தாணேசர்புரிக்கு வர விரும்பினும் தடையில்லை. அவள் விரும்பிய நிலையில் அழைத்து வரலாமென எனக்குக் குமாரன் எழுதி இருந்தான். ஆபிரக் குறுமன்னனுக்கு எல்லாவகையிலும் மகிழ்ச்சியுறும் வினைகளைச் செய்வதாகச் செய்தி எழுதியது எனக்கு வியப்பை அளித்தது. எல்லைப்புற மலைக் கணவாய் வழிகளுக்கும் அப்பால் காட்டுமிருண்டிகளின் படைகள் திரண்டிருக்கின்றன. மழைக் காலம் அகன்றதும் வெட்டுக்கிளிக் குழாங்கள் போலப் பரந்த வெளிகளில் இறங்கும் அதன் படையெடுப்பை ஆபிரக் குறுமன்னனின் படைகளே தடுத்து நிறுத்த முடியும் என்றும் எழுதி இருந்தான். தன் அன்பிற்கினிய உடன்பிறந்தாள் சந்திர தீதிதிகை இந்த ஒப்பற்ற பணியில் தமது வீரப்படையை ஈடுபடுத்த ஆபிர மன்னனை வேண்டிக் கொள்ளவேண்டுமெனக் குமாரன் கேட்டுக்கொண்டான். ஆபீரக் குறுமன்னனைக் கன்னோசி ஆட்சிக்குட்பட்ட குறுமன்னன் நிலையை விரும்பாது போயினும் நட்பு முறையில் அரசனாக வரவேற்கத் தலைநிற்பதாக எழுதி இருந்தான். இறுதியில் மிகுந்த இன்றியமையாததென ஒன்று குறித்திருந்தான்; காசியில் தத்துவ நூல் ஆராய்ச்சி வல்லுநர், என் முன் பிறந்தார் உடுபதிபட்டரை உடன்அழைத்து வரவேண்டுமென எழுதி இருந்தான். அடிகள் பருவுபாதர் தாமே பட்டம்மையை நேரில் காணவேண்டுமென விரும்புகின்றார். அவர் நான்கைந்து நாட்களில் தாணேசர்புரியில் எழுந்தருள இருப்பதால் பத்திரேசர் கோட்டையில் தாமதிக்கலாகாதென வேண்டிக் கொண்டிருந்தான். முடிவாக உடன் பிறந்தாள் சத்திரதீதிதியைக் காணப் பேராவல் கொண்டிருப்பதாக எழுதி இருந்தான். முடங்கல் முழுவதிலும் அரசியல் சூழ்ச்சியின் திருவிளையாடல் செறிந்திருந்தது. யாரையும் விட்டுவிடவில்லை. நிறுத்திய அளந்த மொழிகளால் ஒவ்வொருவனையும் அகப்படுத்தும் பொறிகளைக் கொண்டிருந்தது. எங்கும் இழிவுறுத்துங் குறிகாணேம்; ஆட்சிச் செருக்கும் இல்லை. எழுதுபவனின் நல்லவுள்ளம், பரந்த மனப்பான்மை ஒவ்வொரு

சொல்லிலும் செறிந்திருந்தது. முடங்கல் படித்துக் கவலைமிக் கவனுனேன். மீண்டுமோர் சிக்கலில் அகப்பட்டுக் கொள்வேனே என அஞ்சினேன். இப்போது எச்சரிக்கை கொண்டேன்.

பட்டம்மை சற்று நேரம் விடை எதிர்நோக்கிக் கொண் டிருந்து பின்னர் மொழிந்தாள்: "என்ன நினைத்துக் கொண் டிருக்கின்றனை பட்ட?" நான் அவளைப் பார்த்துக் கூறினேன்: "பெருமாட்டி! உனது கட்டளையே எனது கடமையாகும். மீண் டும் ஏதோ வலைக்குள் அகப்படுவேனே என்று ஆராய்ந்து கொண்டிருக்கின்றேன்." நிபுணிகை பொருட்படுத்தாக் குரலில் கூறினுள்: "வலை எத்தகையது பட்ட? தெளிவான செயலைத் தெளிவற்றதாக்குகின்றனை. ஆபீரக் குறுமன்னன் படைஞ ரோடு உரிமை பொருந்திய நாட்டின் தன்னுரிமை வாய்ந்த அரசிபோலச் செல்வாள் இளவரசி. மாமன்னன் ஹர்ஷதேவன் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசவும் செய்யவும் வரு வானுகில் இளவரசியைப் பார்க்கவரும் பொழுதெல்லாம் ஆயிர முறை ஆராய்ந்து பார்ப்பான். இளவரசியின் பெருமைக்கு ஊறு நிகழ்த்த இலையும் அசையுமாகில் இரத்தப் பெருக்கெடுத் தோடும். வேறு யாரும் உயிர்விடத் துணியவில்லை யெனில் நீயும் நானும் இவ்வொப்பற்ற குறிக்கோளுக்காக இன்னுயிரைக் கொடையாக வழங்கத் தலைநின்ேறும். இதனில் அச்சப்படு தற்கு என்னவுள்ளது? நான் இளவரசியின் பெருமையையே உரைகல்லாகக் கொண்டு செல்வேன். நீ உயிர்விட ஏன் பின் வாங்குகின்றனை?" நான் அமைதியாக விடை பகர்ந்தேன். "உயிர்விடுதல் இனிமையானது என்ற சூழ்நிலை ஏற்படும்போது உயிர்விடுதல் தக்கதே. அதன் முன்னரே ஏன் இறக்க வேண் டும்?" யான் சொன்னதைக் கேட்காதவள்போலிருந்து இளவரசி கூறினுள்: "தாணேசர்புரிக்குச் செல்வதாயின் வருக. ஏன் காலங்கடத்தவேண்டும்? அடிகள் பருவுபாதர் எழுந்தருளியிருப் பாரெனின் இங்கும் வருவார். அவர் எண்பதாண்டு நிறைந்த முதியவர். அவருக்கு மிகுந்த தொல்லையாகும். இப்போதைக்கு ஆபீரக் குறுமன்னர் தம் படைஞர் ஓராயிரவர் போதும். குமார கிருஷ்ணவர்த்தனன் உடன்பிறந்தான் போன்றுன். அவன் அரசியல் நெறிமுறையை நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஆபீரக் குருமன்னனிடம் ஒன்றும் கூற விருப்பமில்லை. அவர் எனக்குக் காட்டிய இரக்கம் வேறு யாராலும் காட்ட முடியாது. அவர் தமது கடமையைத் தாமே முடிவு செய்யத் தக்கவர்."

இளவரசியின் முரண்பாடற்ற தயக்கமற்ற தெளிவான கட்டளை

யால் புத்துயிர் பெற்றேன். இன்றுவரை இவ்வளவு தெளிவாகக் கட்டளை அளிக்கவே இல்லை. தானே தன் கடமையை உருவாக்கி விட்டாள். இவள் உருவாக்கிய கட்டளையின் பிறப்பிடம் என்ன ? இவள் என்னை இரண்டுங்கெட்டான் நிலையில் கொண்டு வைக்க இப்படி முடிவு செய்தாளா? துயருழக்கும் உள்ளத்தில் தந்தையைக் காண வேண்டுமென்ற பேரவா கிளர்ந்ததா ? இது வரை இளவரசியின் சொற்கள் கட்டளை வடிவில் இல்லை ; முதலில் அவள் கூற்றுக்களில் ஒருவகை எளிமையும் தளர்ச்சியும் இருந் தன. இப்போது அவள் ஏவலில் தலைமையும் பெருமை உணர் வும் செறிந்துள்ளன. மலர் அனைய இந்தவுள்ளம் எத்துணை ஆழமுடையது ? காளிதாச மாகவிஞ ! நீ எங்குள்ளாய் ? தவத்தில் நிலைத்து நின்ற பார்வதியின் படிமத்தைக் கற்பனையில் படைத் தனை. அதன் உண்மை வடிவம் இதோ இங்கே உள்ளதே ! இளவரசிப் பெருமாட்டியில் பொன்மணிகள் கோவை போன்ற மென்மை அழகுகளின் ஒற்றுமை வேறெங்குக் காணமுடியும் ? நாராயணன் கொள்ளும் நலக் கருத்தும், சிவபெருமான் செய்யும் தவமும், இந்திரன் தலைமையும், வானவர் தம் குருவின் குற்றமற்ற பேரறிவும், காமதேவனின் வென்றியாவலும், பார்வதியின் ஒப் பற்ற பெருமையும், நாமகளின் தூய்மையும் ஒருங்கே வடிவெடுத் துப் பட்டம்மையாயினவோ? அவள் வடபாரதத்தைப் பாது காக்கக் காப்புக் கட்டிக்கொண்டாள். இலட்சக்கணக்கான பாமர மக்கள்பால் கொண்ட பற்றுனது வெண்ணெய் போன்ற உள் ளத்தைக் கரைத்தது. புறத்தே புகை தோன்றுதிருப்பினும் அவள் உள்ளத்தின் ஆழத்தே கட்டாயம் துயர நெருப்புத் தழல் கொழுந்துவிட்டு எரிந்தவாறிருக்கும். பட்டம்மை தாணேசர் புரிக்குப் போக உடன்பட்டாள்.

தாணேசர்புரி! மனிதப் பிசாசுக்கு நூற்றுக்கணக்கான பட்டம்மைகள் போன்ற கன்னியர்கள் பலியான மௌக்கரி அரண்மனை அங்கேதான் உள்ளது. பட்டம்மை மீண்டும் அங்கே போகின்றுள். அந்த அரண்மனையை எதிர்த்துச் சாம்ப ராக்க அவள் உள்ளத்தில் சினம் கிளம்பாதா? தவருமல் அவள் உள்ளத்தில் சினநெருப்புக் குமுறுகின்றது. அவள் ஆழமுடை யவள் ; பெருமையிற் சிறந்தவள் ; என்னை மீளமுடியாத சிக்கல் களில் தள்ளிவிட விருப்பமில்லாதவள். இப்பொருள் பற்றிக் கூர்ந்து ஆய்ந்துள்ளனளா? நிபுணிகை அடிக்கடி உயிர்விடுதல் வேண்டும் என்று அறைகூவிக் கொண்டிருக்கின்றுளே, அதன் மறைபொருள்தான் என்ன? இந்தப் பாணபட்டன், கயவன்

மௌக்கரிக் குறுமன்னனை மன்னிக்கமாட்டான். அரசியல் சூழ்ச்சியும், பாம்புப்போக்குப் போன்ற அரசியல் நெறியும் பாண பட்டனைக் கடமையினின்றும் பிறழவைக்க முடியா. வெறிபிடித்த மௌக்கரிக் குறுமன்னன் தான் செய்தனவற்றிற்குத் தக்க தண்டனை பெறுவது உறுதி. பட்டம்மை நாளை ஆங்குச் செல்வாள்.

இனியும் ஆய்ந்து நேரங்கடத்தல் தக்கதன்று. மழை நெருங்கு கின்றது. வானம் கரும் புயலால், நிலம் புதிய வெள்ளத்தால், திசைகள் மின்கொடிகளால், காற்று நீர்த்திவலைகளால் நிரம்பி இல்லாத பொழுதே வழிப்போவது நல்லது. விரைவிலேயே சிறு சண்பகம் மலரும்; கடம்ப மலர் இழையொடும் பொலிவுறும்; அல்லி பூக்கும்; மயில்கள் நடனமாடத் தொடங்கும்; கரும் புயலும் மின்னல் கொடிகளும் கண்ணாமூச்சி ஆடத் தொடங்கும். அப்போது பட்டம்மையின் சிவிகைகளும் மாட்டு வண்டிகளும் வழிப்போதல் வினையை விலைக்கு வாங்குதற்கு ஒப்பாகும். இப் போதே நல்ல வாய்ப்பு. இப்போது புறப்பாடு ஏற்பாடு செய் தல் நல்லது. நிபுணிகை உடல் நிலையால் மேற்கொண்டு நான் கைந்து நாட்கள் வரை தங்கவேண்டி இருந்தது. கங்கை விழா வின் பத்தாம் நாளன்று, அதாவது நிபுணிகை சற்று நலமுற்ற போது, ஆபிரக் குருமன்னன் தன் ஆயிரம் மல்லர்கள் பட்டம் மையின் வெற்றி முழக்கம் செய்து முழுவானத்தையும் நடுங்க வைத்தனர். அவளது சிவிகையைச் சுற்றிலும் பத்து மௌக்கரி வீரர்களின் அஞ்சுதரு வாட்கள் ஒளிமின்னின. நிபுணிகைக்குத் தனிப் பல்லக்கு ஏற்பாடாயிற்று. விக்கிரகவர்மனும் அவன் கூட்டாளிகளும் பட்டம்மை அருகிலேயே மெய்க்காப்பாளராக இருக்க வேண்டுமென்ற கோரிக்கையில் வெற்றியுற்றான். பட் டம்மையின் படை தாணேசர்புரிக்குப் புறப்பட்டது.

## உயிர்ப்புப் பதினெட்டு

தாணேசர்புரிக்கு இருகல் தொலைவில் பட்டம்மையின் பாடி வீடு அமையப் பெற்றது. குமாரகிருஷ்ணவர்த்தனன் தானே நேரில் வந்திருந்தான். மாமன்னன் ஹர்ஷதேவன் ஏற்பாடு செய்யும் விழாவில் பங்கெடுக்க வேண்டிக் கொண்டான். ஆனால் இளவரசி உறுதியோடும் மறுத்துவிட்டாள். எனக்கு விழாவில் கலந்து கொள்ளுமாறு இசைவு தந்தாள். கிருஷ்ணவர்த்தன னுடன் பேசியதால் உள்ளத்தின் குழப்பங்கள் பல தீரப்பெற் ருள். வாப்பிரவ்வியன் நலமே. மாராணியார் அரசித்திருவுக்கு (கிரகவர்மனின் மனைவி) ஊழியம் புரிந்து வருகின்றான் என்ற செய்தி கேட்டு இளவரசியின் உள்ளந் தணிந்தது. அவள் மரு மத்தில் தைத்த வேல் அகன்றது போன்று காணப்பெற்றாள். மௌக்கரி குறுமன்னனது செல்வம் பறிமுதல் செய்யப்பட்டு அரசக்கருவூலத்தோடும் சேர்க்கப்பட்டது என்றும் காமுக மௌக் கரி குறுமன்னனுக்கு இளவரசி விருப்பப்படி தண்டனை விதிக்க லாம் என்றும் செய்தியைக் குமாரன் அறிவித்தபோது அவள் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டாள். "மாமன்னன் ஹர்ஷவர்த்தன ரின் உடன் பிறந்தாள் போன்ற இளவரசிப் பெருமாட்டிக்கு ஊறு விளைவித்த கீழ்மகன், கயவன் குறுமன்னனுக்கு ஏற்ற தண்டனை விதிக்கப்படும்" என்று மிகுந்த அடக்கத்தோடும் குமாரன் கூறி னன். அவன் வருகையால் இளவரசி தான் என்ன, நிபுணிகை யும் ஆறுதல் பெற்றாள். கடவுள்மகன் துவரமிலிந்திரன் திருமகள் தோழியெனும் நிலையில் அவளும் பெருமை பெற்றாள். மொத்தமாகப் பார்க்கும்போது குமாரகிருஷ்ணவர்த்தனனுக்கே வெற்றி ஏற்பட்டது. அவனுடைய தடுத்தற்கரிய நன்னடத்தை, இனிய சொல் எனும் படைகள் வெற்றியைக் கொண்டன. நன்றி பாராட்டும் பார்வை செலுத்தி இளவரசி பேசாதிருந்தாள். நற் செய்திகளைக் கேட்ட அவள் தம் உடம்பில் ஏற்பட்ட மகிழ்ச்சி மெய்ப்பாடுகளால் குமாரன் இறும்பூதடைந்தான். உடன் பிறந் தாரின் கூட்டத்தினும் சிறந்திருந்தது இந்த இருவர் தம் நடத் தையும்.

இளவரசியின் உள்ளம் உவகை பூத்தது. அவளது இனிய அழகு பால் வெண்மையும் கவர்ச்சியும் கொண்டது. அவள் அழகு, இந்த இயல்பான உவகை ஒளியானது, மலர்ந்த சிறு சண்பக மலர்த் தொடையல் போலக் கண்ணைக் கவர்ந்தது. உள்ளத்துவகை எத்துணை வலிமை வாய்ந்த சுவை மருந்து! இளவரசியின் அழகு இன்று நூறு மடங்காயிற்று. இதழ்கள் கொவ்வைப் பழத்தை வென்றன. கண்களின் இனிய அழகு தாழம்பூ இதழ்களைத் தோற்கடித்தது. அது பத்து மடங்கு பெருகிவிட்டது. கன்னங்களின் அழகு இருப்பை மலர்களை எள்ளிற்று. கழுத்தின் சங்கழகு அலைகொண்டது. பைத்தியக்காரக் கவிஞர்கள் வீணுகக் கற்பனை வலையில் அகப்பட்டுக்கொண்டு துடிக்கின்றனர். அவர்கள் அழகுச் செல்வத் தேவதையை, அழகின் இருப்பிடத்தை, அழகின் அலைமோதும் கடலினைப் பார்த்ததே இல்லை. பட்டம்மை மகிழ்ந்திருப்பதைக் கண்டு மயிர்க்கூச்செறிந்தேன். எனது மகிழ்ச்சியையும் அவள் உணர்ந்திருப்பாள் என நினைக்கின்றேன். அப்பொழுது யாரோ வெளியே பாடிக் கொண்டிருந்தார்கள். இளவரசி என்னை அழைத்துக் கபடமற்ற புன்முறுவல் செய்தவளாய்க் கூறினுள்: "இன்று மிக மகிழ்ச்சியுற்றனை." உண்மையே. என்னுல் இயன்றுல் என் உள்ளத்தைக் கரைத்து இளவரசியின் அழகை ஒப்பற்ற ஓவியமாகத் தீட்டி விடுவேன். அவள் கூறினுள்: "பார், வெளியே யாரோ பாடியவாறு போய்க்கொண்டிருக்கிருர்கள்." மகிழ்ச்சிக் கடலில் முழுகியவனுய் வெளியே சென்றேன். ஆகா! என்ன காண்கின்றேன்? காவியுடை அணிந்த பைரவிகள் இனிய உரத்த குரலில் பாடிக் கொண்டிருந்தனர். அதனை ஆபீர வீரர்கள் செவிகளாரப் பருகி மயக்கமுற்றவர் போலக் கேட்டுக் கொண்டிருந்தனர். பாட்டுப் பாகத மொழியில் இருந்தது. பைரவிகள் பாடிய பாட்டின் சாரமாவது:

"அமர மக்களே! மலையரசு இமயத்தின் தண்ணிழல் பொருந்திய மார்பிலே இன்று குழப்பம் தென்படுகிறது. பார்வதியின் தந்தையின் இதயத்திலே இன்று இத்துணைத் துன்பம் எதற்கு? இளைஞர்காள்! எல்லைப்புறக் காட்டுமிருண்டிகள் வருகின்றனர்.

"சமுத்திர குப்தரின் அருந்திறல் ஆற்றிய தென்ன? சந்திர குப்தனின் போர் முழக்கம் என்ன செய்தது? வெல்லற்கரிய மௌக்கரிகளின் பெரும் போர்ப் படை என்ன செய்தது? காட்டு மிருண்டிகள் இன்னும் வாழ்கின்றனர். அமர மக்களே! எல்லைப்

புறக் காட்டுமிருண்டிகள் வருகின்றனர். வடபாரத வாலிபர்களே! வாழக் கற்றுக்கொள்க, நன்மைக்கு உயிர் கொடுக்கத் தெரிந்துகொள்க. வரலாற்றினின்றும் உண்மை தெரிந்து கொள்க—வடபாரதம் அழிவின் ஓரத்தில் நின்றுள்ளது. இளைஞர்களே! எல்லைப்புறக் காட்டுமிருண்டிகள் வருகின்றனர்.

"அரசர்களை எதிர்நோக்கி இருத்தல் மிகமிகத் தவறு. இராசபுத்திரர் படைகளை நம்பி இருத்தல் மிகமிகக் கோழைத்தனம். தற்காப்புக் கடமையைப் பிற இனத்தவரிடம் ஒப்படைத்தல் முட்டாள்தனம். எலலைப்புறக் காட்டுமிருண்டிகள் வருகின்றனர்.

"முழுப்பாரதமும் ஒன்றே, ஒரே மாந்தர்க் கூட்டம், ஒரே உயிர், ஒரே அறம். நாட்டுக் காப்பு அனைவோரின் ஒத்த கடமை. இளைஞர்களே எழுக! எல்லைப்புறக் காட்டுமிராண்டிகள் வருகின்றனர்.

"சிறிய எளிய துன்பத்தினாலும் தொட்டால் சிணுங்கி போலச் சுருங்குபவன் கடவுள் மகன் துவரமிலிந்திரன் போன்றோர் மீது நம்பிக்கை கொள்ளற்க. நீங்கள் உங்களைத் தாங்குமென நம்பி இருக்கும் தூண்கள் வலிமை அற்றவை; உளுத்துப் போனவை; செல்லரித்துப் போனவை; எச்சரிக்கையோடும் செல்க சிறுவர்காள்! செல்வர்காள்! எல்லைப்புறக் காட்டுமிருண்டிகள் வருகின்றனர்.

"அமரமக்களே! புயற்காற்றென மிதந்து செல்க! புல் பறப்பதென எல்லைப்புறக் கள்ளர்களைச் சிதறடியுங்கள். கேடு கண்டு நடுங்குதல் இளமைக்கு அழகல்ல; ஆண்மைக்கழகல்ல. எல்லைப்புறக் காட்டுமிராண்டிகன் வருகின்றனர்.

"அதோ பாருங்கள்! திருமணமுடித்த இளமங்கையர் கண்ணீரோடும் உங்களை எதிர்நோக்கியவாறுள்ளனர். அவர்தம் திருமண நலம் உங்கள் கையில் உள்ளது. இளைஞர்கள்காள்! எல்லைப்புறக் காட்டுமிருண்டிகள் வருகின்றனர்.

"அதோ பாருங்கள்! தாய்மார்கள் உங்களையே ஆவலாக எதிர்பார்த்தவாறுள்ளனர்; ஆங்குக் காண்க, பால் மணமாறாத முகத்தினர் குழந்தைகள் உங்களையே பார்த்துக்கொண்டிருக்கின்றனர். நிற்காதீர்! எல்லைப்புறக் காட்டுமிருண்டிகள் வருகின்றனர்.

"யார் வடபாரதத்தைத் துன்பங்கள் என்னும் நீர்ச்சுழிகளினின்றும் காப்பாற்றுபவன்? கடவுள் மகன் துவரமிலிந்திரன் அன்று, மன்னர் மன்னவன் ஹர்ஷதேவன் அன்று, குறுமன்னர்

களுமன்று; செல்வர்களே! இளைஞர்களே! எல்லைப்புறக் கள்ளர்கள் வருகின்றனர்.

"பின்னை யார் வடபாரதத்தை துன்பங்கள் என்னும் நீர்ச் சுழிகளினின்றும் காப்பாற்றத் தகுந்தவர்? வடபாரத இளைஞர் களே! எல்லைப்புறக் கள்ளர்கள் வருகின்றனர்.

"அமர மக்களே! சாவென்னும் வேள்வியில் அவியுணவு ஆகுக; தாய்மார்களுக்காக, திருமணப்பெண்டிருக்காக இன் னுயிர் வழங்கக் கற்றுக்கொள்ளுங்கள். எழுக இளைஞர்களே! எல்லைப்புறக் கள்ளர்கள் வருகின்றனர்.

"அமர மக்களே! சாவுக்கஞ்சுதல் மடமையாகும். மற்றவரின் உயிருக்காகச் சாகுங்கள். மற்றவர் நன்மைக்காக உயிர்விட வாழுங்கள். மலைக்கரசு இமயம் உங்களையே எதிர்பார்க்கின்றது. இளைஞர்களே எழுக! எல்லைப்புறக் காட்டுமிருண்டிகள் வருகின் றனர்.

"மாமாயை பெருமாட்டி உங்களை விளிக்கின்றாள். மாமாயை உங்கள் அன்னை. அன்னையின் மானம் காப்பாற்றுக. அமுத மக்களே! எல்லைப்புறக் காட்டுமிராண்டிகள் வருகின்றனர். வீரர்களே! மாமாயை குலத்தின் மீது ஆணை. காட்டுமிருண்டி களது நிழலும் இந்நாட்டைத் தொடக்கூடாது. இளைஞர்களே! எழுக! எல்லைப்புறத்தினர் வருகின்றனர்.

"அமுத மக்களே! சாவுக்கஞ்சுதல் மடமையாகும். கடமையி னின்றும் பின்வாங்குதல் குற்றமாகும். தயக்கமும் கடமை முரணும் சாபத்திற்கொப்பாகும். இளைஞர்களே! எழுக! எழுக! எல்லைப்புறக் கள்ளர்கள் வருகின்றனர்."

பாட்டு முடிந்தது. பைரவிகள்தம் திரிசூலங்களை உயர்த்தி அசைத்து ஊக்கமுடையவராய்க் கூறினர்: "வெற்றி! வெற்றி! பாரதத்தின் இளைஞர்காள் வாழ்க! மாமாயை அன்னை வாழ்க!" ஆயிரம் ஆயிர மறவர்களும் ஒரே குரலில் முழங்கினர்: "மாமாயை அன்னைக்கு வெற்றி! வெற்றி!" பின்னர் பைரவிகள் மொழிந்தனர்: "ஆயிரம் படங்கொண்ட பாம்புபோல யாரங்கே முழங்குவது? இது புயலில் குழம்பிய மாகடலன்று! மின்னும் மேகமுமன்று! அதுதான் பாரதத்தின் வெல்லற்கரிய வீரப்படை! யார் இதன் ஏற்றத்தைத் தடுத்து நிறுத்தவல்லார்? இதன் சுழியில் முழுகாதவர் யாருமில்லை. அஞ்சத்தக்க இதன் பொழிவிலே மிதந்து போகாதவர் யாருமில்லை. அதுதான் பாரதத்தின் வெல்லற்கரிய படை!

"அமுத மக்களே! திருமங்கையர் நலம் உங்கள் கையில்தான்

உள்ளது. இளமங்கையர் மானங்காத்தல் உமது ஆற்றலிலே உள்ளது. முதியோரின் மானங்காத்தலும் உமது கையிலே உள்ளது. அதுதான் வெல்லற்கரிய வீரப்படை !''

பிறகும் ஒருமுறை மாமாயை அன்னைக்கு வெற்றி! வெற்றி! என்ற ஓசை முழங்கிற்று. பைரவிகள் பேசாமல் சென்றனர். ஆபீர வீரர் தாமே முழங்கினர்: ''காட்டுமிருண்டிகளின் நிழலும் இந்நாட்டைத் தொடக்கூடாது.''

என் குருதியில் ஒரு புதிய துடிப்புத் துடித்தது. பாரத நாட்டு இளைஞர்மீது அரியதோர் நம்பிக்கை என்னுள்ளத்தில் உண்டாயிற்று. போர்த் துர்க்கைதன் கொடிய நாட்டியம் தொடங்கவுள்ளது; எனினும் பாரதத்தை ஒன்றும் அசைக்க முடியாது. மாமாயையின் மாணவிகள் மாபாரதத்தைப் பேரழி வினின்றும் காப்பாற்றும் வழிகளைக்காட்டிவிட்டனர். மங்கையர் தம் இனிய மெல்லிய குரலில் எத்தகைய அற்புத ஆற்றல் உள்ளது! வீரம் செறிந்த இந்த இசை மென்குரல்களினின்றும் கிளம்பி நூறு மடங்கு வன்மையைப் பெற்றது. அவர் தம் மென்குரல் சற்று நடுங்கி இசைத்தது: ''இளைஞர்களே! காட்டுமிருண்டிகள் வந்துகொண்டிருக்கின்றனர்.'' அப்போது காற்று மண்டலத்தில் ஒவ்வோர் அடுக்கும் நடுங்குவது போலிருந்தது; வானத்தின் மூலைமுடுக்கெல்லாம் நடுக்கங் கொண்டது; திசை மண்டலங்களின் ஒவ்வோரணுவும் ஆடத் தொடங்கிற்று; எங்கும் அச்சத்தின் அறிகுறியைக் காணவில்லை. பாரதத்தின் இளைஞர்கள் இன்று பேறுபெற்றனர். கோயில்களும் பயிர் நிலங்களும் கேடின்றித் தப்பின. மாதர்கள் குழந்தைகள் இன்று ஆறுதல் பெற்றனர். இன்று வையத்தின் முழு இளமை யும் கொதித்தெழுந்துள்ளது. பட்டம்மை ஆவலோடும் பைரவிகள் தம் பாட்டுச் சாரத்தினைக் கேட்டவாறிருந்தாள். சிறிது நேரம் மறந்துபோன ஏதோ எண்ணத்தில் அகப்பட்டாள் போன்று காணப்பட்டாள். மாமாயை பாடிய பாட்டில் கடவுள் மகன் பற்றிய குறிப்பு அவளுக்குப் பிடிக்கவில்லை. அவள் கவலையை அகற்றுவதற்காகக் கூறினேன்: ''தேவீ! அன்னை மாமாயை பாதி உண்மையையே உணர்ந்திருக்கின்றாள். தொட்டால்சிணுங்கி போலச் சுருங்குதலில் எத்துணைத்திறன் அமைந்துள்ளது என்பதனை உணர்ந்தால் எஞ்சிய உண்மையும் காட்சியுறும்.'' பட்டம்மை முறுவலித்தாள். அரியதோர் இனிய சுவை அவள் இதழ்களில் பொலிந்தது. கண் மலர்களில் ஒரு விளையாட்டுக் குறும்பு நடனமாடியது. அவள் மொழிந்தாள்:

"நீயும் பாதி உண்மையையே உணர்ந்திருக்கின்றாய்." பட்டம்மை என்னை இவ்விதம் எள்ளியதன் பொருள் அறிந்தேன். ஆனால் என்ன விடை பகர்தல் என்பதை அறிந்திலேன். உண்மையிலேயே என் தந்தையின் உள்ளத்தே பிள்ளை மீதிருந்த எல்லையற்ற பற்று எத்துணை ஆற்றல் வாய்ந்தது! நான் இதனை உய்த்துணர்கின்றேன். மாமாயை சொற்களில் குற்றங்குறை காணும் ஆற்றல் எனக்கு உள்ளதா! உரிமையும் உள்ளதா? பட்டம்மை என் குறைபாட்டினை அறிந்திருந்தாள். நான் நாணமுற்றேன். அதனைக் கண்ணுற்றுப் பட்டம்மை இன்னும் மிகு மகிழ்ச்சியுற்றாள். அவள் மீண்டும் மொழிந்தாள்: "நான் வேறு பொருள்பற்றிக் கூறிக்கொண்டிருந்தேன். மாமன்னர்களையும் குறுமன்னர்களையும் நம்பி இருத்தலால் மாபாரதத்தின் பாதுகாப்பு நிலைபெறாது என்று மாமாயை கூறியது உண்மையே. ஆனால் இதுவும் உண்மையில் ஒரு பகுதியே." பட்டம்மை மீண்டும் பேசாதிருந்தாள்; மேற் கொண்டு உரைக்க முடியவில்லை; ஏனெனில் இயல்பான பெருங்குடிப்பான்மை அவளைத் தடுத்தது. நான் அவளது ஊக்கம் செறிந்த முகத்தைப் பார்த்தவாறிருந்தேன். கண்கள் கீழ்நோக்கியவாறிருந்தன; கழுத்தும் சற்று வளைந்து காணப் பெற்றது; கவனியாமல் தலைவகிடுவிட்டு முன்றானை விலகிற்று. மேக இருளைக் கவ்விய தலைமுடி நடுவே வகிடு, பார்வதியின் தலைமுடியிலே வானகங்கையின் வெண்பொழிவு வழிமறந்து வந்து தங்கியது போன்ற அழகைக் கொண்டிருந்தது. ஆகா! இந்த வகிட்டு வெண்கோட்டின்மீது குங்குமம் தீட்டப்பெறும் அந்த நாள் எத்துணை நலம் பொருந்தியதாகும்! இந்த நெடிய கூந்தலின் இருளொலி இளஞாயிறு தன்னைச் சிறைப் படுத்தும் அந்த நாள், திங்கள் வட்டத்து நடுவே வைகறை வரி துடிப்புறும் அந்தநாள், இருண்ட புயலின் நடுவே அசையாத மின் கொடி இடையறாது ஒளி செய்யும் அந்த நாள் எத்துணை அழகியதாக இருக்கும்! ஆகா! அந்தநாள் எத்துணை மங்கல மாக இருக்கும்! பட்டம்மை தனது கடைக்கண் பார்வையால் என்னைப் பார்த்து "என்ன நினைத்துக் கொண்டிருக்கின்றனை பட்ட?" என்றாள்.

நான் என்ன நினைத்துக்கொண்டிருக்கின்றேன்! இளவரசி தன் தளிர்விரல்களால் முன்றானையை எடுத்துத் தலைவகிட்டின் மீது இட்டவளாய் இயம்பினாள்: "நான் ஒன்று நவிலட்டுமா பட்ட? என்பிறப்பு ரோமாபுரிக்கு வடக்கே ஆஸ்திரிய நாட்டில்

ஏற்பட்டது. அங்கிருந்து புருடபுரம் வரை (பிஷாவர்) என் தந்தை மடிமீதே தவழ்ந்து வளர்ந்து வந்தேன். பன்னுடுகள் பார்த்திருக்கின்றேன். பல மாந்தரினங்களைக் கண்டிருக்கின் றேன். குழந்தைப் பருவமாகலின் பல மாந்தரினங்களின் உள்ளத்தில் மறையை அறிய முடிந்திலேன். ஆனல் ஏழு நதி நாடாகிய வட பாரதத்தினைப் போன்ற புதியதொரு மாந்தர் சமூக நிலையினை வேறெங்கும் கண்டிலேன், இத்தனை இன வேற்றுமைகளும் என்னிடத்தே வியப்பினைத் தூண்டுகின்றன. இங்கு மாந்தர் எப்படித்தான் வாழ்கின்றனர்? இங்குப் பல நன்மக்களையும் தொழுதகை பெரியாரையும் கற்புடைய மங்கை யரையும் காண்கின்றேன். கடவுளுக்கு ஒப்பான இந் நன் மக்கள் ஏன் மடிகின்றனர் என்ற வினு வியப்பூட்டுகின்றது. இங்குள்ள வாழ்வும் எனக்குச் சிக்கறுக்க முடியாத புதிராக வுள்ளது.'' முகத்தில் எவ்வித மாறுதலும் கொள்ளாமல் இளவரசி மீண்டும் தொடர்ந்தாள்: ''இதனைக் கவனி. நீ ஒரு யவன மாதினைத் திருமணம் புரிவாயாகில் அஃது சமூகத் திற்கே அச்சமூட்டும் எதிர்ப்பென கருதப்பெறுகின்றது. யவனமாதும் மனித இனத்தவளே, அந்தண இளைஞனும் மனித இனத்தவனே; இது உண்மைதானே? வேற்றுமை இதுதான்: சமூகத்தில் உயர்வு தாழ்வு கருதப் பெறு கின்றது. பாரத சமூகத்தில் ஆயிரம் இனவேற்றுமைகள் உள்ளன. ஆங்குக் காட்டுமிருண்டிகளில் இருமூன்று இன வேற்றுமைகளே உள்ளன, இந்த ஆபீரமறவர்களைப்போல் என அறிந்துகொள். பாரத சமூகத்தில் உயரினத்தவர் மிக உயர்ந்தோராகவும் தாழ்ந்த இனத்தோர் மிகமிகத் தாழ்ந்தோராக வும் மதிக்கப் பெறுகின்றனர். அவர்களிலே மங்கையர் அரசியலில் இருந்தும் பணிப்பெண்வரை கணிகையர் வேசியர் போன்ற நூற்றுக் கணக்கான வேற்றுமைகள் கிடையா. அவர்கள் அனைவோரும் அரசிகளே, அனைவோரும் பணிப் பெண்டிர்களே. அவர் தம் முரட்டு வடிவத்தை மட்டும் கண்டுள்ளனை; அவர்தம் மெல்லிய உள்ளத்தை நீ கண்டதில்லை. இந்தத் தூய பாரதத்தில் இந்த ஒப்பற்ற அறவழிபாடு கொண்டிருக்கும் பொழுது அந்தக் காட்டுமிருண்டிகளின் ஒரு மைப்பாட்டினை ஏன் ஏற்கலாகாது? வேண்டாத இனவேற்றுமை களை ஏன் அகற்றலாகாது? இவ்விரண்டும் ஒரே நேரத்தில் நிகழ்வில்லையாகில் நிலைபெற்ற அமைதி காண்பது அரிது. மாமாயை பாதியுண்மையையே பார்த்தாள். பௌத்த அறத்

தினரும் பாதியுண்மையையே கண்டார்கள்! நீ நான் கூறிய எஞ்சிய பாதி உண்மையையும் பரப்புவாயாகில் எத்துணை நலமாக இருக்கும்!''

நான் அடக்கத்தோடும் விடை பகர்ந்தேன்: "நான் புதியன கேட்கின்றேன், பெருமாட்டீ! நீர் இடும் கட்டளைகளைத் தலைமேல் ஏற்கக் காத்திருக்கின்றேன்.''

பட்டம்மையின் கடைக்கண் ஒளிர்ந்தது. நண்பகல் மல்லிகை மலர்ந்ததென முகம் பொலிவுற்றது; சொன்னாள்: "எனக்கிந்தப் பாகவத அறம் விருப்பமாகவுள்ளது பட்ட!'' என் ஊக்கம் ஆக்கப்பெற்றது. இன்னும் மிக்குக் கேட்கும் ஆவலால் உசாவினேன்: "யான் எவ்வகையில் பயன்படுவேன் கூறுக பெருமாட்டீ!'' இளவரசி கம்பீரக் குரலோடும் கூறினாள்: "நீ? நீ இந்தப் பாரத நாட்டின் இரண்டாம் காளிதாசன். உன் திருவாயினின்றும் தூய சொற்பொழிவு பொழியா நின்றது. பிறர் நலம் பேணும் ஆவல் செறிந்தமையால் உனதுள்ளம் தூயது. உனது புகழ் இமய அருவி போலத் தண்மையும் தூய்மையும் பொருந்தியது. உனது நாவில் நாமகள் உறைகின்றாள். முரடர்கள் எனப்படும் காட்டுமாந்தருள்ளத்தே பிறர்க்கிரங்கும் பான்மையை நீ புகுத்த முடியும். மாதரை மதிக்கும் நற்பண்பை அவர்களுக்குப் புகட்ட முடியும்; குழந்தைகளிடம் அன்பு பாராட்டும் பண்பினைக் கற்பிக்க முடியும் பட்ட! நீ வாழ்வென்னும் பாலைவனத்தே பாரிசாத மலர், தனியூற்று ஆவாய். உனது சொல் என்னைப் போன்ற திறன் அற்றாரிடத்தும் சொந்த ஆற்றலை ஊட்டும் திறமையுடைத்து. உனது நிழலைப் பெற்ற திறனற்ற மாந்தரும் இந்நாட்டில் வேண்டாச் சமூகக் கட்டுகளைத் தளர்த்த முடியும்.''

பட்டம்மையின் சொல்லொழுக்கு இன்று தன் அணையை உடைத்துக் கொண்டு பெருக்கெடுக்க முயல்கின்றது. இவ்விடத்தே அவள் தன்னை நிறுத்திக் கொள்ள விரும்பினாள். ஆனால் முரட்டுக் குதிரை கடிவாளத் தடை பெற்ற பின்னும் சிறிது தொலைவு செல்லத்தான் செய்கிறது; அதுபோல அவள் சொல்லொழுக்கு அடக்கமுற்றபோதும் இன்னும் சற்றுப் பொழிந்தது: "ஓரினம் மற்றொன்றைக் காட்டுமாந்தரெனக் கூறுகின்றது. ஒருவன் மற்றவனை இழிவாக மதிக்கின்றான். இதனினும் காரணம் குழப்பத்திற்கு வேறென்ன இருக்கப் போகின்றது? நீ யொருவனே மாந்தர் நிலத்திலிருந்து கின்னரர் தம் நிலம் வரை பரந்திருப்பது ஒரே அன்புள்ளம், ஒரே

அருள் உள்ளம் உள்ளது என்பதை அனைவோரும் உணரச் செய்யமுடியும். மனிதன் தன்னலத்தால், தகாத ஆவலால், பகைமையால், அழுக்காற்றால், விலங்குப் பான்மையைக் கடைப் பிடிக்கின்றான். நான் உனது கவிச் செல்வம் பெற்றேனாகில் மிகுந்த ஆற்றலுடையவளாவேன். நீ எனது வேண்டுகோளை ஏற்றுக் கொள்வாயாக.''

பட்டம்மையின் குரலில் எத்துணைச் சடத்தன்மை வந்து விட்டது! முதன்முதலில் கண்டபோதும் அவள் கூறினாள்: 'நீ இரண்டாம் காளிதாசன்.' இன்று மீண்டும் அதனையே உரைக்கின்றாள். ஆனால் அன்றைய கூற்றில் இத்தகைய சடத் தன்மை, சாரமின்மை இல்லை. அன்று அவள் கடைக்கண்ணில் இத்துணை தளர்ச்சி இல்லை; சொற்பொழிவும் இவ்வளவு விறுவிறுப் பாக இல்லை; முகமும் இவ்வளவு ஒளி பொருந்தியதாக இல்லை. இன்று நான் புதியன கேட்டுக் கொண்டிருக்கின்றேன். எனது மயிர்க்கால்தோறும் அவளது சொல் எதிரொலி செய்தது. 'இந்த மாந்தர் நிலத்திலிருந்து கின்னரர் தம் நிலம் வரை பரந்திருப்பது ஒரே அன்புள்ளம்; ஒரே அருள் பொருந்திய உள்ளம்!' இந்த உண்மையைப் பரப்புவதால் அடக்குதற்கரியன வும் தகாதனவும் ஆகிய அவாக்கள், கட்டுக் கடங்கா ஆசைகள், எண்ணித் துணியாக் கருத்துக்கள் இவற்றின் அச்சந்தரு தோற்றங்கள் குறையப்பெறுமா? காவியச் சுவையான் அருளற்ற, அறிவற்ற, அறத்தின்பாற்படாத மனச்செயல்கள் உயர்வினும் உயரிய செயல்களில் ஈடுபடுத்தப் பெறுமா? காளிதாசரின் குறிக்கோள் வெற்றியுற்றதா? இளவரசி என்ன விரும்புகின்றாள்? காட்டு மாந்தரின் உள்ளம் பண்படுத்தப் பெறுமா? பிறர்க்கிரங்கும் பான்மை அம்மாந்தருக்கு வருமா? மாதென்னும் ஆற்றலுக்குப் பெருமை அளிக்க முற்படுவாரா? அந்தோ! மாகவிஞரே! நீரேன் என்னுள்ளத்தில் இறங்கி வீற்றிருக்கலாகாது? பட்டம்மையின் குறிக்கோளை நிறைவேற்றுதற்காகவேனும் போதிய அறிவு வல்லமை அளிப்பீரா? எனது கூர்த்த மதி சுருங்காது மலர்ச்சி யுறுதல் வேண்டும்; அதன் உதவி கொண்டு மாந்தர் நிலத்தி லிருந்து கின்னரர் தம் நிலம்வரை பரந்துள்ள ஒரே அன்புள்ள மும் அருளுள்ளமும் இருப்பதை நான் உணர்தல் வேண்டும். அந்தோ! மாகவிஞரே! இது நடைபெறுமா என்ன? எனது கவிச்செல்வம் பெற்றுப் பட்டம்மை வலிமை மிக்கவள் ஆவாளா? அந்தோ! என்னிடம் என்ன உள்ளது? அவருக்குக் கொடையாக வழங்க முடியாதது என்னிடம் ஒன்றுமில்லையே! நான் வருத்தத்

துடன் உரைத்தேன் : "என்னிடம் உள்ளன யாவும் உன்னுடையனவே. என்னிடம் ஏதேனும் காவிய ஆற்றல் உளதாகில் அஃதை உனக்கே ஒப்படைக்கின்றேன்." என் சொற்கேட்டு அவள்முகம் சுடர்விட்டொளிர்ந்தது. அவள் அழகும் திருவும் நெடிய கண்களில் அருவியாகப் பொழிந்தன ; அந்நிலையில் மலர்ந்த முகத்தைக் கண்டு இழைகள் பாதியாகப் பிரிந்த தாமரை மலரின் நினைவு வந்தது. அவளது இளநகை என் மனத்தினைத் தூய்மையாக்கிற்று ; உள்ளத்தை உவகை வெள்ளத்திலாழ்த்தியது ; இதயத்தை இதுவரை நுகர்ந்திராத அன்பினால் நிரப்பியது. என் சொல் பேறுபெற்றது ; என் ஒவ்வொரு செயலும் பயனுடையதாயிற்று ; உடம்பெடுத்ததில் பயன் பெற்றேன். நான் அடக்கத்தோடும் சொல்லாடினேன் :

"தேவீ! உனது அருளால் நான் சற்றே அடக்கங்கெட்டவனானேன். எனது எளிமையால் சில வினவ ஒருப்பட்டேன். தலைவர் தம் அருள் சிறிதளவு பெற்றாலும் உறுதியற்ற ஊழியனும் வாயாடலுற்படுகின்றான். சிறிது நேரம் தங்கும் உறுதியற்ற ஆளும் வாயாடுந் திறமை பெற்று விடுகின்றான். அணுவளவு இரக்கம் பெற்றாலும் மனிதனுக்குப் பற்று மிக உண்டாகிவிடுகின்றது. தேவீ! ஆதலின் உன் அருள் உண்டேல் நான் ஒன்று அறிய விரும்புகின்றேன். உன் கூற்றுக்களின் பொருட்பயன் என்ன? மலரிலும் மெல்லிய உடம்பு, வைரக்கல் போன்ற உறுதியான நோன்பு, காண்டற்கரிய பத்திவழிபாடு வானுலகத்திலும் அரிது அரிது. ஒரு நொடிக்காயினும் இதனைத் தவறாகக் கொள்ளேன். கங்கைதன் தூய ஒழுக்கின் பிறப்பிடம் எத்துணை அழகியது! பார்வதியின் பிறப்பிடம் எத்துணை தூய்மையது! திருமகளின் பிறப்பிடம் எத்துணை பெருமையது! இதனை நன்றாக அறிவேன். இந்தக் கடவுளர்க்கரிய அழகினைத் தவசியர்க்கரிய நோன்பினை மலரினும் அழகிய மென்மையினைக் கொண்டுள்ள உன்னைப் பெற்றெடுத்த அந்த மாந்தரினம் வாழ்க! அந்த இனம் தூய்மையது! உன் அன்னை பேறுபெற்றவள்! உன் தந்தையின் வாழ்வு பயன் பெற்றது! காட்டு வாழ்க்கையினரை அடுத்து இரக்கமுடையவராக்கப்போதிய ஆற்றல் உன்னிடம் உள்ளது தேவீ! அவர் உள்ளங்களிலே மிகமிக உயர்ந்த வழிபாட்டுணர்வும் உண்டாக்க முடியும் ; மதிப்பிற்குரியாரை மதிக்கும் பண்பாட்டினை அவர்கள் பெறுவார்கள். நான் விரும்பினாலும் என் கவிதை யாற்றலை உனதுள்ளத்தே எவ்வாறு புகுத்த முடியும்? பாரத சமூகத்தின் இன

வேற்றுமைகளை அகற்ற என்னிடம் ஓராற்றலும் இல்லை. தெளி வாகக் கூறுக அன்னாய், இஃதெவ்வாறு இயலும்?''

இளவரசியின் இதழ்களில் புன்முறுவல் தவழ்ந்தது. "உன திந்தச் சொற்பொழிவு உயர்ந்த பான்மையது, அரியது, வியப் புறத்தக்கது, தூயது. உனது புகழுரையால் என் வாழ்வு பொரு ளுடையதாயிற்று. பேறிழந்த என் வாழ்வு இன்று பயனுடைத் தாயது. என்னுள்ளத்தே தன்னுயர்வு நிரம்பியது. அரசுக் குரிய பெருமையைப் பெறுவதால் எனக்கு மகிழ்ச்சி யுண்டாய தெனக் கருதுகின்றனையோ! உனது சொற்பொழிவு என்னும் தூய ஒழுக்கிலே நீராடி நான் தூய்மையைப் பெறுகின்றேன். இதிலிருந்தே எனக்குத் தன்னாற்றல் வருகின்றது. பழியற்ற, அழுக்கற்ற உனதுள்ளத்தைக் கண்ட பின்னரே தொழும்புக்குத் தெளிந்த வழி காணப்பெறுகின்றது. நீ கூறுவது அத்துணை அரியதோ கூறுக, பட்ட!''

இளவரசி எனக்கு ஆராயவே வாய்ப்பளிக்கவில்லை. அவள் கூறினாள்: "ஆனால் இச்செய்தியை இப்பொழுது ஒத்திப் போடு. அடிகள் பருவுபாதர் ஒரு வாரத்தில் வருவார். யார் அறிவார்? என் ஊழ் என்ன முடிவு செய்கிறதோ, நான் எங்குப் போக எழுதிவைத்திருக்கின்றதோ? இதற்கிடையே குமார கிருஷ்ணவர்த்தனன் மன்னர்மன்னன் ஹர்ஷதேவனை இங்கு அழைத்து வருவான். இன்று என்னுள்ளத்தே யாரைக் குறித்தும் எரிச்சல் கிடையாது. விருந்தினரின் அருளுக்கு நன்றி புரிய என்னிடம் என்னவுள்ளது? எனக்குரியவன் நீ இருக்கின்றனை; யாவற்றிற்கும் உன்னையே நம்பி இருக்கின் றேன். மாமன்னன் பெருமைக்கேற்ப வரவேற்புச் செய்ய ஏதேனும் செய்க. இன்று நமது வரவேற்புக்காக நகரக் கலைஞர் அனைவரும் திரட்டப்பட்டுள்ளனர் எனக் கேள்விப்பட்டேன்; எனக்குரியவன் எல்லாம் நீயே.'' இவ்வளவுங் கூறி என்னை நம்பிக்கையோடும் பார்த்தாள். அவள் கண்களில் செய்ந்நன்றி குறிக்கும் நீர் ததும்பிற்று.

இதே நேரம் யாரோ பெரியான் ஒருவன் என்னைக்காண வந் திருக்கின்றான் என வாயில்காப்பவன் அறிவித்தான். வெளியே வந்தேனாகத் தாவகனைக் கண்டேன். என்றும் மலர்ந்த முகம், கண்டிக்குங்குரல், செயற்கை அழகு யாவும் மாறாதவனாக இன்றும் காட்சி அளித்தான். ஆடி மாத நிறைவில் சிறு சண்பக மாலைக்கும் மல்லி மாலைக்கும் குறைவேது? நிறையத் தோளிலும் தலையிலும் அணிந்திருந்தான். கத்தூரிப் புகை ஊட்ட பெற்ற

மேலாடையாலும் சிறு சண்பக மாலையாலும் தன்னைச் சுற்றிலும் ஒரு நறுமணச் சூழ்நிலையை உண்டாக்கி விட்டான். சண்பக மலர்மாலை எனக்கும் ஒன்று கொண்டுவந்தான். வெற்றிலை மெல்லுவதே அவனது சிறப்பான நோயாகும். இன்றும் அருளற்ற பான்மையில் மென்று கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் கொழுந்துவிட்டெரியும் தழல்போலக் கிளம்பி என்னை வரவேற்றான். மிகு நேரம்வரை இறுகத் தழுவிய நிலையில் இருந்தோம். நலம் உசாவிய பின்னர் என்னை முதுகில் தட்டிக் கொடுத்துக் கூறினான்: ''இறைவ, காண்க! நீ பெறும் பேறு அளவிடற்கரியது. இன்று சாருசுமிதையின் (அழகிய முறுவலிப்பினள் என்று பொருள்) மயிற்கூத்து நடை பெறும் எனில், நாளை வித்யுதபாங்கைதன் (மின்கடைக் கண்ணினள்) இனிய இசை நடைபெறும். கடவுள் மகன் துவர மிலிந்திரர் தம் திருமகள் உனக்குத் தடையற்ற ஆட்சி அளித்தி ருக்கின்றாள். நல்வினை எழுச்சிபெற்ற உறவினனே! கேட்பா யாக! என்னையும் உன் மருங்கே அமரச்செய்க. இத்தகைய நேரத்தில் நண்பனை மறப்பது நன்றன்று.'' அவன் உள்ளத்தின் மறை கண்களில் பொலிந்ததால் அதனை அறியச் சொல்லால் தூண்டினேன்: ''மறந்தால் என்ன விளைவு ஏற்படும் நண்ப!'' வெற்றிலைத் தழும்பேறிய சொற்களை தூவினான்: ''கொடிய விளைவு நண்ப! தாமரைக் கொடி மென்மை பொருந்திய தொரு பொருளுக்குள் அகப்பட்டுக் கொள்ளும் விளைவு. அதன் கட்டினினின்றும் விடுபெற முடியாது. விடுபெறும் விருப்பமும் தோன்றாது.'' நான் வினவினேன்: ''எத்தனை முறை நீ கட்டுண்டனை?'' அவன் என் குறும்பைப் பொருட் படுத்தாதவனாய்க் கூறினான்: ''இறைவ, தாவகன் செய்தி விடுக, நீர்த்துளி தாமரையிலை மீதிருப்பினும் பற்றற்றது. ஆனால் உன்னிடம் உண்மையைக் கூறுகின்றேன். இந்த நடனவிழா எனக்குப் பிடிக்கவில்லை. ஒரு வெறிபிடித்த கவிஞன் ஒருமுறை மழைக் காலத்தோடு நடனமாதின் ஊக்கமுள்ள நடனத்தினைக் கண்டு ஒரு செய்யுள் இயற்றினான். ஆனால் ஒரு நொடியிலேயே அவனது கற்பனையில் ஏழ்மை வந்து விட்டது. வானத்தே மேகத்தின் அழகிய ஒப்பனைப் புனைவு கண்டான்; நாட்டியமாடும் மின்னலைப் பார்த்தான்; இடிமுழக்கம் கேட்டுக்கூறினான். இந்த நடன ஒப்பனையின்போது மின்னலின் நடனந் தொடங்குகின்றது. அதற்கு மேகம் மங்கல மிருதங்க முழங்கிற்று. பின்னர் என்ன நிகழ்ந்தது தெரியுமா? உள்ளம்

எரிந்த வழிப்போக்கன் கோவிலில் நுழைந்தான். காகத்தின் குரல் கேட்டுக் காதலி முன்னமேயே சென்று கோவில்முற்றத்தில் அமர்ந்துகொண்டான். இப்பொருள் கொண்ட சுலோகம் :— (இது இயற்றிய கவிஞன் யாரெனத் தெரியாது)

"த்ருஷ்ட்வா டம்பரமம்பரே கனக்ருதம் ஸௌதாமினீ நர்தகீ
நிருத்யாரம்ப ம்ருதங்க மங்கல ரவம் ஸ்ருத்வாசதத்கர்ஜிதம்
புஷ்ப்யத் புஷ்ப பராநதாங்கண தருஸ்கந்தா வஸத் வாயஸ
க்வாணுகர்ண நஸோத் ஸவாப்ரியதமம் பாந்தாயயுர் மந்திரம்

இதில் ஏதேனும் பொருத்தமுள்ளதா, எதுகை மோனைகள் உள்ளளவா?" நான் மேலும் சுவைபெறத் தூண்டினேன்: "நீ எத்தகைய பொருத்தமும் எதுகை மோனைகளும் சேர்க்க விரும்புகின்றனை நண்ப?" உடனே விடை இறுத்தான்: "எதுகை மோனைகளோ அசைவில் உள்ளன; இடிமுழக்கம் மழையின் சடசட வென்ற முழக்கம் இவை மிருதங்க முழக்கத்தோடும் பொருந்துகின்றன. பொன் கிண்கிணியின் மெல்லிய இசை, மேகலையின் தெளிந்த இனிய இசை வாயாடி வளையல்களின் இனிய இசை ஆகியவைகளோடும் நடமாடும் இளமங்கையரும் மின்னல் கொடிகளும் மழைக்காலத்தில் மண்ணையும் விண்ணையும் ஒன்று சேர்க்கவல்லார்." மீண்டும் வினவினேன்: "ஏதேனும் வருணனை செய்து காட்டுக. சுவையற்ற உரையால் பயனென்ன?" உடனே தாவகன் தடையின்றிச் சாற்றினன்: "தாமரைச் செங்கண் மாதின் அருளைப் பெற்ற ஒரே கவிஞன்தான் நீவிரும்பியவாறு வருணனை செய்ய முடியும்.[1] யாரவன்? காமன் அன்பினுல் ஆழ்ந்த புண்பெற்ற ஒரு தேவனுக இருக்கலாம்." தாவகனே அந்தத் தேவனை அறிய முடியும் என்பான்போல் கண்களை நடித்துக் காட்டினன். நான் சுவைமிக்கவனுய் வினவினேன்: "பின்னர் கன்னேசி மாமன்னனுக்கு இதனையேன் நீ கற்பிக்க

---

[1] ஸௌகர்ய மிந்தீவரலோசநாநாம் தோலாஸு லோலாஸு யதுல்லலாஸ, யதி ப்ரஸாதால்லபதே கவித்வம் ஜாநாதி தத் வர்ண யிதும் மநோபூ:

[அழகிய தாமரை மலர்கள் உடையவளும் கண்ணில் திருவிளையாட்டுக் குறும்பு உடையவளும் ஆகிய ஒருமாதின் அருளைப்பெற்றவனே கவிதை அறிவான்; மனதில் பிறந்த காமதேவனுல் உண்டாக்கப் பெற்ற அகச்சுவை வருணனை செய்ய முடியும்.]

வில்லே?'' தாவகன் மிகுந்த ஊக்கத்தோடும் உரைத்தான்: ''ஓ கடவுளே! மகத நாட்டுமுட்டாள் கிடைத்தான்! இறைவ! இந்த விழா உன் இளவரசிக்கு நடைபெறுகின்ற தென்கின்ருயா? கன்னேசி அரசுக்கெதிராகக் கலகம் செய்யும் குடிமக்களுக்குக் கள்ளென வேலே செய்யவேண்டி இவ்விழா ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது. இளவரசிக்காக இவ்விழா நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்குமாங்கே பொசியுமாம் என்ற கூற்றுக்கேற்ப ஏற்பாடாகி யுள்ளது. குடிமக்களுக்கு நடைபெறுவது இவ்வரசிக்கும் பயன் படட்டும். இவ்விடத்திய முட்டாள் குடிமக்களுக்கு எதுகை களால் பயனென்ன? சாருசுமிதையின் நடனமும் வித்யுத பாங்கையின் இசையும் எத்தகையன வாயினும் ஈண்டுப் பேரூக் கத்தைத் தூண்டிவிடும். மேதாதிதியும் வசுபூதியும் சொற்போரில் மண்டைகளே உடைத்துக் கொள்ளட்டும், மடியட்டும்; கன்னேசி மக்கள் மாமன்னன் புகழைப் பாடுவார்கள். நீ இத்துணே எளிய சொல்லேயும் புரிந்து கொள்ளாதவன் கடவுள் மகன் திருமகளின் அமைச்சனுகிவிட்டாய்.'' இக்கருத்து என்னிடத்தே என்ன விளேவு உண்டாக்கும் என்பதையும் உன்னுமல் கூறிவிட்டான். அவன் பொருத்தமின்றிக் கிளர்ந்துகொண்டே இருந்தான்: ''ஆனல் சாருசுமிதை உயர்தரத்திய நடிகை. தளுக்குக் குளுக்குக் குறும்புகள் முதலியவற்றில் அவளே வெல்வோர் யாரு மில்லே. சத்துவ நடனத்திலும் கைதேர்ந்தவள். அவள் அசைவில் அரியதோர் இனிமை உள்ளது; அழகாகப் புல்லாங்குழல் வாசிப் பாள். அவ்வளவு திறமையோடும் மிருதங்கமும்வாசிப்பாள். சோம் பல் அவளேத் தொட்டதே இல்லே. நடனமாடும்போது, பரத முனிவர் இவளேப் பார்த்த பின்னரே பரதநூல் இயற்றினரோ என மயங்குமாறு தோற்றமளிப்பாள். பொருளுடைமையில் குணத் தில் பரந்தபான்மையில் நல்விளேயில் உறுதியில் வீரத்தில் அவள் தனக்குத் தானே நிகர். மென்மையளவிற்கேற்ப இனிமையும் உண்டு; இனிமைக்கேற்ப விளேயாட்டுக் குறும்பும் உடையாள்.[1]

அவள் இந்நகரத்திற்கு அருங்கலன். அவள் அழகே அவளது நாட்டியத்திற்கு ஆக்கந் தருகின்றது''. நான் தாவகனின் சொல்

---

[1] இப்பொருள் கொண்ட சுலோகம் நாட்டிய நூல் 34–46இல் உள்ளது:—

அர்த்த ரூப குணெளதார்ய செளபாக்ய தைர்யவீர்ய சம்பந்நா
பேசலமதுரா ஸ்நிக்தா ந–ச–விகலா சித்ரகர்ம குசலாச

வெறியில் சுவை கொண்டவனை மேலும் அறிய உசாவினேன் : "வித்யுதபாங்கையிடம் என்ன பண்பு சிறப்பாகவுள்ளது அன்ப?" அவன் தொடர்ந்தான் : "வித்யுதபாங்கையின் தன்மை வேறு. பாடுகின்றாள் நன்றாக, வடிவமோ பேரைக் கொண்டு உய்த்துணர்க (மின்னல் கடைக்கண்ணினள்.) ஒருநூறு உள்ளங்களைத் துளைத்த லான்றிக் குறும்புக் கடைக்கண் பெருமை பெறாது என்கின்றனர். அவளிடத்தே இத்தகைய கடைக்கண் உள்ளது." நான் இடை மறித்துக் கூறினேன்: "துளைக்கப் பெற்றனையா எங்கேயாவது?" இம்முறை தாவகன் விழுந்து விழுந்து வயிறு குலுங்கச் சிரித்தான் : "கவிஞன் துளைப்பதில்லை நண்ப, பிளக்கின்றான். கடைக்கண்ணினாலன்று ; சொல்லென்னும் அம்பினால்."

நெடுநேரம் தாவகன் இவ்வாறாகச் சிரித்தும் சிரிப்பு மூட்டியும் வந்தான். இத்தக் கவிஞன் புதியவனாகத் தென்பட்டான். இவன் உலகம் கலவரமற்ற வெறியுலகம். மற்ற கவிஞரின் உள்ளம் கரை யும் சூழ்நிலையிலும் அவன் மகிழ்ச்சி வெறிக்குரிய வாய்ப்பினைப் படைத்துக் கொள்கின்றான். நடந்தவாறு கூறினான் : "ஒரு பொருளில் எச்சரிக்கையாக இருப்பாயாக நண்ப! கன்னோசியில் யாரையும் நம்பாதே. யாவரும் உன்னைக் கீழறுக்க முயல்வார்கள். காசியில் இருந்தும் ஒரு தருக்க நூல்வல்லானைக் கொணர் கின்றனை! அவனுக்கும் இச்செய்திபற்றி எச்சரிக்கை செய்து விடுக ; வீணாக இங்கும் அங்கும் சொற்போரில் மாட்டிக்கொள்ள வேண்டாமெனக் கூறுக. கன்னோசி வியப்பான நாடு. ஒருமுறை மக்கள் கைதட்டி ஆதரவு காட்டிவிட்டால் அஃது தொடரும். பகைப் புலவர்களை ஒரு சீழ்க்கை நேரத்தில் கவிழ்த்து விடுவார் கள்." போகும்பொழுது என்னை இறுகத் தழுவித் தாவகன் சென்றான். மிகு தொலைவு சென்று அவனை வழியனுப்பிவிட்டு மீண்டேன். ஒரு நொடிக்கும் நாவினுக்கு ஓய்வே தரவில்லை. அவன் வாயிலாகப் பல செய்திகள் உணர்ந்தேன். 'அகோர பைரவர் ஈண்டுத் துர்க்கைக் கோவிலில் இருக்கின்றார். மூவுலகங் களிலும் காண்டற்கரிய புதிய முறையில் விரதிவச்சிரன் சுசரிதை இவரிடையே வழிபாடு நடைபெறுகின்றது. உட்டியான பீடத்து வெங்கடேச பட்டர் எங்கோ மறைந்து விட்டார். மாமன்னவன் இரத்தினாவளி என்னும் நாடகத்தை வடமொழியில் இயற்றி யுள்ளான். இதனில் நைந்தாருக்குப் புகலிடமாகிய அரசமர நிழலில் அமர்ந்த குணமலை புத்தர் பெருமானுக்கு வணக்கம் செய்யவில்லை ; ஆனால் பார்வதியையும் திருமகளையும் நினைத்துச் சிவபெருமானையும் திருமாலையும் போற்றி வணங்கித் தொடங்கி

யுள்ளான்'[1] தாவகனின் சில சுலோகங்களும் அந் நாட்கத்தில் சேர்க்கப் பெற்றுள்ளன. இன்னோரன்ன பிற செய்திகளை இந்த வெறியன் வாயிலாக அறிந்தேன். அவன் கூறிய சில செய்திகளை உன்னுந்தோறும் என் தலை சுழலத் தொடங்கிற்று. இந்தக் கவிஞன் பொறிகளனைத்தினும் எத்துணை மகிழ்ச்சிப் பொழிவு பொழியா நின்றது. இத்துணை உள்ளத்து அலைகள்! இத்துணை கொந்தளிப்பு! எனினும் இத்துணை பற்றின்மையோடு எத்துணை சுவையருவி பொழிகிறது! எதிர்ப்பின் ஐயப்பாடு அதனில் இல்லை, யார் மீதும் நல்லவிளைவையோ தீய விளைவையோ உறுத்தும் வாய்ப்பு அதனில் இல்லை. அவன் மாந்தர் வைப்பில் உள்ளம் பொங்குதலாகிய சுவையை வாரிக்கொள்ளவே பிறந்தான்போலும். உழவன் கரும்பைச் சிதைத்துச் சாறு பிழிந்து கொள்வதே போலப் பிறருக்கு இன்பமோ துன்பமோ அதைப்பற்றிய அக்கரையில்லை, தனக்கு வேண்டிய சுவையைத் தாவகன் இறக்கிக் கொண்டான்.

கன்னோசியின் கலக மாந்தரைத் தன் பிடிக்குள் கொண்டு வருவதற்காகச் சாருசுமிதையின் நடனம் கருவியாகக் கையாளப்படுகிறது எனத் தாவகன் கூறினான். இது உண்மையா? எத்துணை எளிய பான்மையில் இந்த மிக இன்றியமையாத செய்தியை அறிவித்துவிட்டான். சாருசுமிதையின் புகழினைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளேன். அவள் பண்புகளை விவரித்தான். எத்துணைச் சிறந்த பண்புச் செல்வத்தினை எத்துணை இழிந்த

---

நாகாநந்தர் சுலோகங்கள்: இதில் புத்த பெருமானுக்கு அஞ்சலி உள்ளது.

[1] த்யான வ்யாஜமுபேத்ய சிந்தயஸி காமுன்மீல்ய சக்ஷு: க்ஷணம்
பஸ்யாநங்க ஸராதுரம் ஜநமிமம் த்ராதாபி நோ ரக்ஷதி
மித்யா காருணிகோ அஸி நிர்க்ருணதரஸ் த்வத்த: குதோ
அந்ய: புமாந்
இத்தம் மாரவதூபிரித்யபிஹிதோ பௌத்தோ ஜின: பாது வ:
11 (1) 11

காமேநாக்ருஷ்ய சாபம் ஹதபடுபடஹா வல்கிபிர்மாரவீரைர்
ப்ரூபங்கோத் கம்பஜ்ரும்பாஸ்மிதலலிதவதா திவ்ய நாரீஜநேந
ஸித்தை: ப்ரஹ்லோத்தமாங்கை: புலகிதவபுஷா விஸ்மயாத்
வாஸவேந
த்யாயம் போதேரவாப்தா வசலித இதி வ: பாதுத்ருஷ்டோ
முநீந்த்ர:

குறிக்கோளுக்காகப் பயன்படுத்துகின்றனர்! நடிகை நகரத்திற்கு அருங்கலமா? நெருப்பா? என்ன, அவள் அமுத நஞ்சுகளின் கலப்பா? சூத்திரகன் எனும் கவிஞன் மிருச்சகடிகம் எனும் நாடகத்தில் கூறியுள்ளார்: வசந்தசேனே தாமரையில் இல்லாத திரு; உடம்பில்லாத தேவதையாகிய காமனின் அழகிய படைக் கலம்; நற்குடி மகளிருக்குத் துன்பம்; காமனென்னும் மரத்தின் மலர். இந்தப் பொருள் கொண்ட சுலோகப்பகுதி: (மிருச்ச கடிகை 5–12.)

அபத்மா ஸ்ரீரேஷாப்ரஹரணம் அநங்கஸ்ய லலிதம்
குலஸ்த்ரீணும் சோகோ மதன வர வ்ருக்ஷஸ்ய குஸமம்

ஊழ்தான் எப்படி எள்ளுகின்றது. திருவே துன்பவடிவினள்; மலர் போன்றவளே கொல்லும் படைக்கலமும் ஆகின்ருள்; பட்டம்மை முன்னர்க் கூறிஞள்: "காட்டுமிருண்டிகள் என்று எல்லேப்புறத்தாரைக் கூறுகின்றனேயே; அவரிடையே அரசி என்றும் பணிப்பெண் என்றும் நடிகையென்றும் வேசியரென் றும் நூற்றுக்கணக்கான இனப்பிரிவுகள் வேற்றுமைகள் கிடையா." இஃதெனக்குக் கேட்டிராத செய்தியே. என் கருத் துப்படி வீட்டுப்பேறு அந்த மக்களினத்திலேயே இருக்க முடியும். துன்பங்கள், உள்ளத்தில் எரிவு, கொலேகள், இழிவுகள், பிறர்மனே நயத்தல் முதலியன கெட்டுப்போன, அழுகிப்போன சமூகத்தின் கெட்ட நடவடிக்கைகள் ஆம். இளவரசி இதனேச் செம்மையாக அறிந்து கொண்டாள். அக்கருத்து அவளது குருதித் தழலிலே எரிந்து தூய ஒளியாக மிளிர்ந்தது. அநாகரிக மாந்தரில் நூல் ஆராய்வு இல்லே, ஏழ்மையே அவரது சொந்த செல்வம். இவற்றினே அகற்றிச் செப்பஞ் செய்துவிட்டால் அவ்வினத்தே வானுலக இன்பமே திகழும். ஆனல் பாரதத்தில் வான் உலக இன்பத்தை நிலேநாட்டுவது அரிது. இங்குத் தன்னலம், தகாத விருப்பம், ஆவல் முதலியன குடிகொண்டுள் ளன. மாகவிஞர் காளிதாசர் ஒரொப்பற்ற செல்வக் கடவுளர் உலகத்தைப் பற்றித் தம் உள்ளம் தீட்டிய ஓவியம் காண்க.[1] ஆங்கு, இயக்கர் உலகத்தே, உவகைக்காக அன்றி வேறு பொருட் டால் கண்ணீர்ப் பொழிவு இல்லே. மலரம்புக் கடவுளால் உறுத் திய காதல் நோயன்றி வேறு நோய் இல்லே. அதுவும் விரும்பிய கூட்டத்தால் அகல்வதொன்ருகும். ஊடலாற் பிரிதல் அன்றி

1. காளிதாசரின் மேகவிடுதூது 2.4.

வேறு பொருட்டால் பிரிவில்லை; இளமை தவிர்க்க வேறு வாழ் நாள் படிகள் இல்லை.

> ஆநந்தோத்தம் நயநஸலிலம் யத்ர நாந்யைர் நிமித்தை
> நாந்யஸ்தாப: குஸுமஸரஜாதிஷ்ட ஸம்யோகஸாத்யாத்
> நாப்யந்யஸ்மாத் ப்ரணய கலஹாத்விப்ரயோகப்ரபத்தி
> வித்தேசா நாம் ந ச கலுவயோ யௌவநாதந்ய தஸ்தி

[செல்வக் கடவுளர் வைப்பில் (குபேரன் உலகில்) உவகைக்காக அன்றி வேறு பொருட்டால் கண்ணீர்ப் பொழிவில்லை; மலரம்புக் கடவுளால் உறுத்திய காதல் நோயன்றி வேறு நோயில்லை; அதுவும் விரும்பிய கூட்டத்தால் அகல்வதொன்றுகும். ஊடலாற் பிரிதலின்றி வேறு பொருட்டான் பிரிவில்லை; இளமை தவிர்த்து முதுமை முதலியன இல்லை.]

பட்டம்மை கூறியன யாவற்றையும் மலைக்கணவாய்களுக்கும் அப்பால் உள்ள கற்பனை உலகிலே காட்டுமாந்தரிடையே நடைமுறைக்குக் கொணர முடியும். ஆனல் இம் மாபெருமுயற்சியைச் செய்ய முடியுமா? இம்மாபெரும் கடமைக்கு என்னிடம் என்ன ஆற்றல் உள்ளது?

எல்லைப் புறத்திற்கும் அப்பால் மிகுந்த வெறுக்கத்தக்க காட்டுமிருண்டிகள் உறைவதாகக் கேள்விப்பட்டுள்ளேன். கொலையும் கொள்ளையும் அவரது தொழில்; கோவில்களைக் குலைப்பதே அவரது அறம்; அந்தணரையும் சமணரையும் கொலை புரிவதே அவருக்கு மகிழ்ச்சி; நற்குடிமங்கையரையும் இளஞ் சிறுமியரையும் கற்பழித்தலே அவரது பொழுதுபோக்கு; கொலையும் தீ வைத்தலுமே அவரது சிறந்த கடமை எனக் கேள்விப்பட்டிருந்தேன். புருடபுரத்திலிருந்து (பிஷாவர்) அயோத்தி வரை பரந்த ஊர்களனைத்தையும் மிதித்துத் துவைத்து அழித்து விட்டனர். கால்வழியாக நாம் கேட்டுவருவது இதுவே. [1]மாகவிஞர் காளிதாசர் இரகுவமிசம் என்ற மாகாவியத்தில் அயோத்தியழிவை வருணிக்கும் சாக்கிட்டு வெறுக்கத்தக்க கொள்ளைக் கூட்டத்தாரின் தீய செயல்களை வருணித்தார். நெஞ்சந் திடுக்கிடும் அழிவு விளையாட்டைக் கேட்டதுமே என் உடம்பு சிலிர்க்கின்றது. பொழுது முடியும் நேரத்தே கொடிய புயற்காற்றினல் சிதறடிக்கப் பெற்ற வான்புயல் அடுக்குகள் போல நகரங்கள் திருவை இழந்தன; காதலரை நாடிச் செல்லும் கனிந்த காதலின்

[1] இரகுவமிசம் 11, 12, 16.

காரிகைமார் நள்ளிரவிலும் அச்சமின்றி மன்னர் தெருக்களில் போகும்பொழுது உள்ளம் உருக்கும் சிலம்பொலி கேட்கப்பட்டு வந்தது; அத்தகைய மன்னர் தெருக்களில் இப்பொழுது நரிகள் ஊளை கேட்கப்படுகிறது. குளக்கரைகளில் நீராட்டு விழாவின் போது மிருதங்க இன்னேசை கேட்கப்பட்டது; ஆங்குக் காட்டெருமைகள் நீரை உழக்குவதால் நீர் குழம்பியது. பொற் கொம்புகள்மீது ஒய்வு கொண்டிருந்த நடன அழகு பெற்ற வீட்டு மயில்கள் காட்டுமயில்களாயின. நெடுநிலை மாடங்களின் படி களிலே மாதர்கள் அடிவைத்துச் சிலம்பு இன்னிசை எழுப்பினர்; ஆங்குக் குருதிவெறிகொண்ட புலிகளின் கூருகிற் கால்களின் அடிச்சுவடுகள் காணப்பெறுகின்றன. மன்னர்களுக்குச் சொந்த மான மதவெறி மிகுந்த களிறுகள் தாமரைக் காட்டில் புகுந்து தாமரைக் கொடிகளைப் பிடுங்கிப் பிடிகளுக்கு அன்போடு வழங் கின; அவை இப்போது கொடிய சிங்கங்களால் துன்புறுத்தப் பெறுகின்றன. அரண்மனைத் தூண்களை ஒட்டிக் கட்டையால் இயற்றப்பெற்ற மாதர் படிமங்கள் தூசுபடியப் பெற்றன; அப்படிமங்கள் மீது மாட்டிக் கொண்டிருக்கும் பாம்பு உரிகளே மேலாடைகளாயின. அரண்மனைகளின் மாசற்ற வெண்மதில்கள் கருமை யெய்தின. திங்களின் நிலாவும் அவற்றை மீண்டும் ஒளிபெறச் செய்ய முடியாது. பூங்காக்களில் கொடிகளினின் றும் இளநங்கையர் அருளொடும் மென்மையாகத் தம் தளிர் விரல்களால் பூக்கொய்தனர்; இன்று குரங்குகள் கண்டபடி கொய்தெறிந்து கொண்டிருந்தன. அரண்மனைச் சாளரங்களில் இரவில் மங்கல விளக்குகள் ஒளிசெய்யவில்லை. பகலில் நங்கை யர் தம் முகங்களும் ஒளி செய்யவில்லை. மாதர் மானங்காப்பது போல எட்டுக் காலிகள் வலை பின்னியுள்ளன. ஆற்றங்கரையில் தொழுகைப் பொருட்கள் வைக்கப் பெறுவதில்லை. நீரோடும் இன் னேசை காணேம். அந்நதிகளின் கரைகளில் பிரம்புக் கொடி மனைகள் வெற்றிடங்களாயின. இத்தகைய பேரழிவுகளை மாந்தர் குழாத்திடை உறுத்தும் காட்டுமக்களிடையே மாந்தருள்ளம் காணமுடியுமா? பட்டம்மை எத்தகைய ஆவல்பூண்டாள்? மனிதன் இத்துணை அருளற்றவன் இரக்கமற்றவன் வெறுக்கத் தக்கவன் கொடியவன் ஆக இருக்க முடியுமா? அவரிடத்திலும் ஒரே அன்புள்ளம் உள்ளதெனக் கூறுகின்றாளே!

இவ்வாறு எண்ணங்களின் சுழலில் அகப்பட்டவாறு அமர்ந் திருந்தேனாக நிபுணிகை என்னை விளித்தாள். அப்பொழுது வானம் கருமையாகிக் கொண்டிருந்தது. மரங்களின் உச்சிகளை

யும் கருமேகங்கள் கவிந்தமையால் கானக நிலம் இன்னும் மிக்குக் கருமை எய்திவிட்டது. வானம் கதிரவன் உடம்பையே விழுங்கிவிட்டது போலும். கதிரவன் இன்னும் மறையவில்லை. பகற்பொழுது இன்னும் இருந்தது எனினும் இருள்சூழ்ந்து கொண்டது. இந்த இருள் சூழ்நிலையில் கற்பலகையில் தீட்டிய பொன் வரி யென நிபுணிகை தோற்றமளித்தாள். அவளது வெளுத்த கன்னம் இந்நாட்களில் மகிழ்ச்சிச் சுவையால் அரிய ஒளிபெற்றிருந்தது. அவள் சொல் முன்னையினும் இனியதாகி விட்டது. கண்மலர்களில் அழகு செழிப்புற்றது. அவளைப் பார்த்து எனக்கு மகிழ்ச்சி யுண்டாயிற்று. அவள் இதழ்களில் புன்முறுவல் தவழ்ந்தது; கண்களில் குறும்பு பொலிந்தது; சொல்லில் வெறி சொரிந்தது. நான் மகிழ்ந்து மொழிந்தேன்: "என்ன சொன்னாய் நிவுணியா?" என்னை உன்னுமலேயே பார்க்காமலேயே விடையிறுத்தாள்: "இளவரசியின் சொற்களுக்குப் பொருள்தெரிந்து கொண்டனையா?" நான் சொன்னேன்: "சில சொற்கள் விளங்கின, சில விளங்கவில்லை; இவற்றை அறிய முயல்கின்றேன்." அவள் சிரித்து உரைத்தாள்: "நான் அவள் சொற்களின் பொருள் பற்றி உசாவவில்லை. மாமன்னனுக்கு ஏற்ற வகையில் வரவேற்பளிக்கவேண்டும். அதைப்பற்றியே குறித்தேன்." பல செய்திகள் இடையே இதனை மறந்தே போனேன். இதைப் பற்றி நினைத்துப் பார்க்கவே இல்லை, ஒன்றும் விளங்கவில்லையே. நான் கவலை யுற்றது கண்டு நிபுணிகை கூறினாள்: "அஞ்சற்க; வழி சொல்லுகின்றேன். நீ மீண்டும் நடிக்கப் பயிற்சி தொடங்க வேண்டும். நான் பட்டம்மைக்குப் பன்முறை உனது நடிப்புத் திறமை பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். உன் அழகிய அவிநயங் காணவேண்டுமென மிகுந்த ஆவல் பூண்டுள்ளாள். 'அரசர்க் கரசன் ஏதோ நாடகம் இயற்றி இருப்பதாக உனது நண்பன், தாவக கவிஞன் கூறினான் அல்லவா? அதனையே ஏன் வரவேற்பு நாளன்று மேடைக்கேற்கக் கூடாது?" நிபுணிகை ஒரேயடியாக என்னைப் புதுச்சுழலில் தள்ளிவிட்டாள். நடிப்புத் தொழிலை நான் பன்னாட்கள் முன்னரே நிறுத்திவிட்டேன். பட்டம்மை முன்னர் அவிநயஞ் செய்தல் என்றால் முடியாத வினையாகும். ஆனால் அதுதான் அவள் விருப்பமாயின் நான் நாடகத்தில் குதித்துத்தான் ஆகவேண்டும். இன்னும் மிக்குச் செய்தியறிய வினவினேன்: "நீ மீட்டுமொருமுறை மேடை ஏறத் துணிவு கொண்டனையா நிவுணியா?" அவள் சிரித்தாள்; ஆனால் கீழ்

நோக்கியதும் முறுவலிப்பு மறைந்துவிட்டது. நெட்டுயிர்ப் புயிர்த்துக் கூறினாள்: "நடித்துத்தான் வருகின்றேன். உண்மையாக இருப்பதை அமிழ்த்துவதும் பொய்யை நடத்தி வைப்பதும்; இதுதானே நடிப்பு? வாழ்வு முழுவதும் இதனையே நடித்து வந்துள்ளேன். ஒரு நாள் மேடையேறி நடிப்பதால் உயர்வு என்ன வரப்போகிறது, தாழ்வு என்ன நேரப்போகிறது?" அவள் சொற்கள் என் உள்ளத்தைப் பிளந்துவிட்டன. உண்மையில் வாழ்க்கை ஒரு நடிப்புத்தானே? அடிதோறும் தடைகள், மூச்சுதோறும் கட்டுக்கள் இவை நடிப்புக்களா? நிபுணிகை இதற்காகத் துன்புற்றாள், ஆனால் இதனின்று விடுதலை என்ன? ஒருமுறை வாழ்க்கையில் உறும் தடைகள் பற்றிய நினைப்பு ஏற்பட்டது. மற்றொரு நொடியிலேயே இதனில் உள்ள நற்பகுதியும் காட்சியுற்றது. இந்த வாழ்க்கைக்கட்டு அழகியது, புலனடக்கமென்பார்கள். நற்சுவை பெற்றது. நிபுணிகை வீணைக் கலவரமுறுகின்றாள். தடைகளென்னும் கரைக்குள்ளே வாழ்வென்னும் அருவி பொழிகின்றது; ஈரமுடையதாகின்றது சுவைபெற்றதாகின்றது, இனிமையுறு கின்றது. "இல்லை, நிவுணியா, கட்டு அழகானதே, தன்னடக்கம் சுவைமிக்கது, தூயது, தடைகள் இனியவை. அவை இன்றேல் வாழ்க்கை வீண் பொறையாகின்றது. உண்மைகள் வெற்று வடிவத்தில் குறுமுகை உறுகின்றன" என்றேன். தூண்டிய விளக்கு இருளை அகற்றுதல் போல இச்சிறுசொல் என்னுள் ளத்தே ஒளியைத் தூண்டியது. காட்டுமாந்தர்களிடையே அடக்கம் எனும் பண்பு குறைவாகவுள்ளது; புலனவாக் கட்டுப் பாடும் குறைவு. அவர்களுக்கு இப்போது இவை இன்றியமை யாதன. பாரதசமூகம் கட்டுப்பாட்டினை உண்மையென மதித்து உலகிற்குச் சிறந்த பொருளைத் தந்தது. நாங்கள் இருவரும் பேசாதிருந்தோம்; வெளியே கடுமையான மழை பொழிந்து கொண்டிருந்தது. அதே நேரம் இனிய குரலில் இளவரசி 'ஜலௌகமக்நா .....' என்ற தொழுகைப் பாவைப் பாடினாள்.

எமது ஒருமுகநிலை குலைந்தது. இளவரசியின் தொழுகை முடிந்தது. உறக்கத்தினின்றும் எழுந்தவள் போல எழுந்தாள் நிபுணிகை. சொன்னாள்: "ஆம் பட்ட, கட்டு இனிமை யுடைத்தே!" அவள் இளவரசி அருகே போனாள்.

# உயிர்ப்புப் பதினென்பது

மன்னர்மன்னன் ஹர்ஷதேவனும் கோப்பெருந்தேவி அரசித் திருவும் (கிரகவர்மன் மனைவி) பட்டம்மையை வந்து பார்த்து மிக மகிழ்ந்தனர். மன்னர் மன்னனின் இனிய பான்மையும் அன்பும் அவளை வென்றன. உண்மையில் அவன் உடன் பிறந்தவளாகிவிட்டாள். கோப்பெருந்தேவி யது கட்டளைப்படி முதியவன் வாப்பிரவ்வியனைப் பட்டம்மை யிடம் கொண்டுவந்தேன். அவள் அவனைக் காண விரும்பினாள். இன்று அவளை வரவேற்பதற்கு பேரரசு முழுதும் முனைந்துள் ளது; அவளே ஒரு நாள் அவனாட்சியின் கீழ் இருந்தாள், கைப் பற்றப்பட்டவளாகத் தன்காவலின் கீழிருந்தாள் என அவனுக்கு எப்படித் தெரியும்? வழியெல்லாம் என்னைக் கேட்டவாறிருந் தான்: ''செல்வ! தேவபுத்திரர் திருமகள் என்னை ஏன் அழைக் கின்றாள்?'' முதியவனது எளிமை என் மனத்தைக் கவர்வதாக இருந்தது. யானும் வியப்புற்றவன் போல நடித்துக் கூறி னேன்: ''ஆம் பெரும, எனக்கும் வியப்பாகத்தான் உள்ளது. உங்களை ஏன் அழைத்தாள் தெரியவில்லை!'' முடிவில் தானே ஒரு வகையாக ஆறுதல் செய்து கொண்டான். ''தீவினையின் குறும்பு செல்வ, இருபது ஆண்டுகளாக மௌக்கரிகளின் அரண் மனையில் ஊழியனாக வேலை செய்து வந்துள்ளேன். ஊழ்வினை யால் இறுதியில் மௌக்கரிகளின் செஞ்சோறுபெறும் பேறிழந் தேன். இன்று யார் என்னை நம்புவார்கள்? அரண்மனை மாதர் இல்லங்காக்கும் தகுதியை இழந்தேன். கோப்பெருந்தேவியும் (கிரகவர்மன் மனைவி) என்மீது நம்பிக்கை இழந்தாள் போலும். இம் முதுமையில் புருடபுரம் (பிஷாவர்) போகவேண்டி இருக் குமோ அல்லது எல்லைப்புறத்திற்கும் அப்பால் போகவேண்டி இருக்குமோ அறியேன்.'' முதியவன் கண்கள் பெருகின. மௌக்கரிகள் சோற்றின் மீது இத்துணை பற்று!

பாடி வீட்டின் முன்றில் திண்ணை மீது அவனை அமர வைத்து நான் இளவரசிக்குச் செய்தி அனுப்ப இருந்தேனாக, நிபுணிகை தோன்றினாள். அவள் தன் கழுத்தில் முன்றானையை

இறுக்கக் கட்டி மண்டியிட்டு வணங்கினுள். கிழவனின் மங்கிய கண் பார்வையால், முதலில் அவளை அறிந்துகொள்ள முடிய வில்லை; அவள் நின்ற பொழுது தெரிந்து கொண்டான். நொடிப்பொழுதிற்குள் அவன் முகம் வெளுத்தது. அஞ்சியஞ்சி வினவினுன்: "நிவுணியா! நீயா?" அவன் மனநிலை உணர்ந்து ஆறுதல் செய்யும் முகத்தால் மொழிந்தாள்: "நிபு ணிகைதான் பெருமான். ஆனுல் உமது முகம் ஏன் இப்படி வெளுத்துவிட்டது? வருக, உங்களை பட்டம்மையிடத்தே அழைத்துப் போகிறேன்." தேள் கொட்டியது போன்ற உணர்ச்சியுற்ருன் கிழவன்; அவன் சொன்னுன்: "பட்டம் மையா?" நிபுணிகை உடனே உரைத்தாள்: "ஆம் பெருமான், பட்டம்மையே உம்மை அழைத்தாள்." முதியவன் வெயர்த் தான். சற்றே உணர முயன்றும் அவனுல் முடியவில்லை என் பதை அவன் வெற்றுக் கண் தெரிவித்தது. வியப்புற்று வினவி ஞன்: "என்ன சொல்லுகின்றனை நிவுணியா? எந்தப் பட் டம்மை?" அவள் உறுதியோடும் உரைத்தாள்: "அஞ்சற்க பெருமான், உம்மைத் தேவபுத்திரர் திருமகளிடம் அழைத்துப் போகின்றேன்." ஐயப்பாட்டோடும் என்னைக் கண்ட பின்னர் விருப்பத்திற்கு மாருக நிபுணிகை பின்னுகச் சென்ருன்.

முதியவனைக் கண்டதும் பட்டம்மையின் பெரிய கண்களில் நீர் பெருகிற்று. அன்போடும் வணங்கினுள். வணக்கத்திற்கு வாழ்த்துக் கூறவும் முடியாதபடி கிழவன் வியப்புற்றுத் திடுக்கிட் டான். மிகுந்த வியப்பினுல் கூவினுன்: "எதிர்கால மாதே விக்கு வெற்றி." இதன் பொருள் மௌக்கரி குறுமன்னனின் எதிர்கால மனைவிக்கு வெற்றி யுண்டாகுக. இதனைக் கேட்டதும் பட்டம்மையின் சிவந்த கன்னங்களில் கண்ணீர் பொழிந்தது. முதியவன் கூறினுன்: "பொறுத்தருள் தேவீ! பழக்கத்தால் தகாதன கூறிவிட்டேன். மௌக்கரி குறுமன்னனின் எதிர்கால மாதேவியை அறிந்து கொள்வதில் தவறு செய்தேனு? மௌக் கரிகளின் ஊழியனுக இருந்து வாழ்க்கை வருவாயை இழந்தேன். இன்று மாதேவியைக் கண்டு மகிழ்வதா துயர் உறுவதா அறி கின்றிலேன். தேவீ! தளர்ந்த உடம்பினேன். இரக்கத்திற்குரி யேன். என் அறியாமை நீங்கப் போதிய செய்தி வேண்டுகின் றேன்." பட்டம்மை ஒன்றும் பகரவில்லை. கல்போன்று அசை யாத இமையாத கண்ணோடும் முதியவனைப் பார்த்தவாறிருந் தாள். நிபுணிகையும் பற்பல நினைவுகளின் அலைமோதலால் புலன்கள் செயலற்றவளானுள். முதியவனும் முறைமுறையாக

எங்கள் அனைவரையும் பார்த்தவாறிருந்தான். முடிவில் யானே மொழிந்தேன் : "பெருமான் வாப்பிரவ்விய! ஏன் திடுக்கிட்டுப் பார்க்கின்றனை? உன் முன்னர் தேவபுத்திரர் திருமகளே நின் றிருக்கின்றாள். இவரையே மௌக்கரி குறுமன்னன் இவர் விருப் பத்திற்கு மாறாகச் சிறை வைத்திருந்தான். மாதேவியென விளித்து வீணாகச் சென்றுபோன புண்களை நினைவூட்டினை. நிவுணியாவைப் பாராட்டுக; அவளது நன்முயற்சியாலேயே முழுப்பாரதமும் அழிவினின்றும் பாதுகாக்கப்பட்டதென்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது." இவ்வளவையுங் கேட்டபின்னரே கிழவனது மயக்கமும் அறியாமையும் போயின. தன்னை ஆற் றிக்கொண்டு செம்மைப்படுத்திக் கொள்வதில் வெற்றியுற்றான். வாழ்த்துக் கூறிப் பட்டம்மை தலைமீது கைவைத்துத் தடவினான் : "மிக்க மகிழ்ச்சி மகளே! இன்று என் கழிவிரக்கம் கழிந்தது. மௌக்கரி மாதரில்லம் பாதுகாக்க முடியவில்லையே என ஏங்கி இருந்த நிலை இன்று மாறியது. இருபதாண்டுகள் அரண்மனை மாதரில்லத்தில் ஊழியனாக இருந்ததில் இருமுறைகளில் நான் தவறிவிட்டதை ஒப்புக்கொள்ள வேண்டி இருந்தது. இரண்டு தவறுகளால் பரந்த உலகினுக்கு நன்மையாக முடிந்தது. திரிபுர பைரவியின் மாமாயை என்றே நம்புகின்றேன். மிகுந்த வருத் தத்தோடு சென்ற சில நாட்கள் கழித்தேன். வாழ்க்கை இறுதி யில் கறைபடிந்தவனாகிவிட்டேன் என்று வருந்தியவன் உனது அறிமுகம் பெற்று மிகுந்த ஆறுதல் அடைந்தேன். திரிபுரசுந் தரியின் மாமாயை தன்னை யாரே அறிவார்?"

பட்டம்மை அவனுக்கு உட்காரத் தவிசு அளித்தாள். அவன் குரல் இன்னும் இயல்பாகவில்லை. அவன் அமர்ந்த பின் னர் யாம் அமர்ந்தோம். அவன் கண்களில் அன்புநீர் வழிந் தது. மிகுநேரம் வரை ஏதோ மறந்த செய்தியை நினைவிற்குக் கொணர முயன்றான். பட்டம்மையை நெடுநேரம் பார்த்திருந் தான். இதற்கிடையே நிபுணிகை தன்இயல்பு நிலையை அடைந்து இனிய குரலில் கூறினாள் : "உங்கள் நம்பிக்கையைக் கெடுத் தவள் நான், பெரும, மன்னிப்புக்குத் தகுதியற்றவள். ஆனால் என் நெஞ்சம் யான் செய்ததைக் குற்றமென உரைக்கவில்லை. பெருமானைத் துன்பத்தில் தள்ளிப் போந்ததற்காக வருந்தி னேன். எனினும் இளவரசியார் மிகவும் வருந்தினார், என்னைக் காட்டினும் அவரே மிகவும் வருந்தினார். முதல் வாய்ப்பு நேர்ந்த போதே உங்களைக் காக்க முயன்றார். ஆனால் துன்பமென் னவோ தங்களுக்கு நேர்ந்துவிட்டது." முதியவன் கண்ணில்

நீர் பொங்கிற்று. அவன் உரைத்தான்: "என்னைத் தீயிலிட்டுப் பொசுக்கியிருந்தாலும் இத்துணைத் துயரம் ஏற்பட்டிராது செல்வீ! ஆனால் தினைத்துணைத் தினைத்துணையாகக் கழிவிரக்க நெருப்பில் எரிவதுதான் முடியாத செயலாகும். அந்தோ! நான் திடீரெனக் கிருஷ்ணவர்த்தனன் இல்லத்திற்கு அழைக்கப் பட்டேன்; அப்போது யாரேனும் எனக்குத் தேவபுத்திரர் திரு மகள் தன் அறிமுகம் அளித்திருந்தால் இத்துணை நாள் இத் துணை கழிவிரக்கத்தில் எரிந்திருக்க வேண்டாம்." இப்போது இளவரசி இடைமறித்து வினவினாள்: "பெருமானுக்கு ஏதேனும் தண்டனை அளிக்கப் பெற்றதா?" முதியவன் மொழிந் தான்: "தண்டனை கொடுக்கப்படவில்லை, தேவீ! இத்துணை பெரிய குற்றத்திற்காக நான் ஏன் கழுவேற்றப்படவில்லை என்று நினைத்துப்பார்த்தேன், இன்னும் விளங்கவில்லை!" சிறிது நேரம் வரை கண்மூடி ஏதோ ஆய்ந்து கொண்டிருந்தான். பின்னர் இளவரசியைப் பார்த்துப் புகன்றான்: "நீ வெளி யேறிய பொழுதிலிருந்து வருந்தியவாறிருந்தேன். செஞ் சோறிட்டவனுக்குப் புரியவேண்டிய தொழும்பில் தவறு செய் தேன் என்று நினைத்து இருந்தேன்; வைக்கோலில் இட்ட தீயில் போல நான் எரிந்து சாம்பராயினும் என் குற்றத்திற்குக் கழுவா யில்லையென நினைத்திருந்தேன், ஆனால் தேவீ! என் எண்ணம் ஆட்டங்கொடுத்துவிட்டது; அப்படி நம்பியது தவறென இப் போதுணர்கின்றேன். ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகள் முன்னர் தந்திரிக யோகி வரும்பொருள் கூறியது முற்றிலும் உண்மையாயிற்று. இன்று வாழ்க்கையில் யாவற்றிலும் சிறந்த உண்மையைக் காண்கின்றேன். உடம்பு முழுவதும் நடுக்கமுறு கின்றேன்."

இளவரசி வியப்போடும் வினவினாள்: பெரும, தந்திரிக யோகி கூறியதென்ன?" முதியவன் களைப்புற்றான். நிபுணிகை கொணர்ந்த பாலையருந்திக் களைப்பு நீங்கிக் கூறலானான்: "இருபது ஆண்டுகள் முன்னர் அரண்மனை ஊழியனானேன். அப்போது எழுபதாண்டினன் ஆயினும் இரத்த நாளங்களில் ஆற்றல் இருந்தது. அரண்மனையில் பிரம்பு தாங்கிக் காவல் புரியும் கடமை இருந்தது. பிரம்புத்தடி எனக்கு ஓர் அழகிய அணியாக அப்போதிருந்தது, இப்போது வயது முதிர்ந்தமை யால் அதனை ஊன்று கோலாகத் தாங்கினேன். இப்போது இடர்ப்பாடின்றி நடக்கவும் முடியாது. மௌக்கரி குறுமன்னன் இல்லத்தில் ஐந்தாண்டுகளாகப் பணியாற்றலானேன். இந்த

இருபது ஆண்டுகளாக அரண்மனைகளின் மாதரில்லங்களில் எத்துணையோ இளமங்கையர் வந்தனர். அனைவோரையும் நற்குடி மணமங்கையராகவே நான் மதித்தேன். இதனையே எந்தையும் பாட்டனும் எனக்கறிவுறுத்தினர்கள். எந்தச் சிறுமியின் வரலாறும் அறிய விரும்பவில்லை. அவரெல்லாரும் மௌக்கரி மணமகளிரே. வாழ்வில் இருவர் அறிமுகத்தை நான் வினவாமலேயே அறிந்தேன்; இன்று ஒன்று, பதினைந்தாண்டுகளுக்கு முன்னர் ஒன்று.''

முதியவன் கண்ணில் புத்தொளி மிளிர்ந்தது. இருமிக் குரலைச் செம்மை செய்து கதையைத் தொடர்ந்தான்: ''இன்றிருந்து பதினைந்தாண்டு முன்னர் கிரகவர்மனது மாதரில்லத்திலே அரசர் வாழ்க்கையில் நிகழாததொரு நிகழ்ச்சி நேர்ந்தது. கிரகவர்மன் என்ற மௌக்கரி மாமன்னன் குலூதமன்னன் மகளைத் திருமணம் செய்துகொண்டான். இஃது என்னை மாதரில்லத்து ஊழியனாக அமர்த்தியதற்கு முன்னர் நடைபெற்றது. சிற்சில நேரங்களில் வாயாடிப் பணிப்பெண்டிர் சிலர் என்னிடம் வந்து அரசனுக்கும் அரசிக்கும் ஏதோ 'கர்புர்' நடைபெறுகின்றதெனத் தெரிவிப்பார்கள். ஆனால் அரசியின் திறத்தே முரண்பாடோ வெகுளியோ துயரமோ இருந்ததாக உணர்ந்திலேன். இரவு பகலாய்த் தொழுகையில் ஈடுபட்டிருந்தாள். அரசன் வரும்பொழுதெல்லாம் அரசி அவனை வரவேற்றுப் பெருமைப் படுத்துவாள். ஆனால் இருவரிடையே என்ன நிகழுமோ, என்ன சண்டை நடைபெறுமோ அறிந்திலேன்; உடனே அரசன் எழுந்து போய்விடுவான். இம்மறையை அறிய நான் ஆவல் கொண்டதே இல்லை. மாதரில்லத்தில் உறைபவரின் மறையை அறிதல் அவ்விடத்திய ஊழியனுக்கு அறமன்று. உயிரைக் கொடுத்தாகிலும் அரண்மனை மணப்பெண்டிரைக் காப்பாற்றுக என்பது என் தந்தை என் பாட்டன் இவர்களது அறவுரை. அரசனாயினும் என்ன, மாதரில்லத்தில் வரம்பு மீறினால் அவன் கழுத்தறுப்பதே ஊழியன் கடமை. அரசன் நாட்டின்மீது ஆட்சி புரிகின்றான் என்றால் மாதரில்லத்து அவனுக்குத் தன்னுரிமை கிடையாது. மாதரில்லத்து ஊழியன் அரசன் கீழ்ப்பட்டவன் அல்ல, அரசிக்கு அடங்கியவன், அரசனது சோறல்ல, அரசியின் சோற்றினையே உண்கின்றான் என என் தந்தையும் பாட்டனும் அறிவுறுத்தி இருந்தனர். ஆதலின் குலூத மன்னன் திருமகளின் மறையை அறிய ஏன் ஆவல் கொள்ளுதல் வேண்டும்?

"ஒருநாள் அரசி என்னை விளித்து 'அரசி துறவு மேற் கொண்டாள். அரசனுக்குத் தெரிவிப்பாயாக' எனப் பணித்தாள். நான் வியப்பும் துயரமும் செய்தி அறிய ஆவலும் கொண்டவனாய் அரசியைப் பார்த்தேன். சிவந்த ஆடை அணிந்து கையில் குங் குமம் பூசிய முச்சூலமேந்தி நின்றிருந்தாள். செங்காந்தள் மலர்க் குழுவினிடையே சந்திர மல்லிகை மலர்ந்ததென அவள் முகம் துயரத்தோடும் காட்சி யளித்தது. கொழுநனை இழந்த இரதிதேவி போலப் பற்று நீங்கியவர் வேடம் புனைந்திருந்தது மிக அழகாக இருந்தது. மிகுந்த அன்பும் பணிவும் கொண்ட குரலால் அரசனிடம் போமாறு என்னைப் பணித்தாள்: 'பெரும, வாப்பிரவ்வியா, நான் வையம் துறந்தேன். எனதுள்ளம் இப் போது மாதரில்லத்தை விடுத்துப் புறத்தே சென்று விட்டது. உடல் இல்லத்திற்குள் இருந்தால் மட்டும் பயனென்ன? இல்லையா யினும் பயனென்ன? அரசன் உடன்பட்டால் புறத்தே ஏகுவேன், உடன்படானாகில் இங்கேயே கிடப்பேன். ஆனால் இல்லறத் தோடும் வாழமுடியாது. அழைப்பு வந்து விட்டது. நெடுநாட் களாக இதனை எதிர் நோக்கியவாறிருந்தேன். நீ மாமன்னனுக்கு இச்செய்தியைத் தருவாயாக.'

"கைகுவித்து வேண்டினேன்: 'தாயே! உமது இவ்வேடம் கண்டு என்னுள்ளம் வெடிக்கிறது. இவ்வுலகம் உமக்கு எத் தகைய துயரத்தை உண்டாக்கிற்று? அதனைத் துறக்க இருக் கின்றீர். தவறாமல் உமது செய்தியை அரசனுக்கு அறிவிக்கின் றேன். ஆனால் இம் முதியவனைப் பொறுப்பீராக! இக்கடுமை யான முடிபு கொள்ளுதற்குக் காரணம் என்ன? மாமன்னவன் தங்கள்திறத்தே வரம்புமீறிய நடத்தை மேற் கொண்டானோ?'

"அரசியின் திருமுகத்தே இயல்பான முறுவல் தோன்றியது. அவள் கூறினாள் இல்லை பெரும, மன்னவன் வரம்புமீறி நடக்க வில்லை. தன்னால் இயன்றவரை நான் இன்பத்தோடு வாழ ஏற் பாடு செய்திருக்கின்றான். எனினும் துறவு மேற்கொள்ள முடிவு செய்தேன். திரிபுரசுந்தரியின் விருப்பம் இது. இன்றிரவு நான் காதால் கேட்ட அழைப்பைப் பொருட்படுத்தாதிருக்க என்னால் முடியாது. தெளிவாகப் பார் பெரும, திரிபுரசுந்தரியின் படிமம் புன்னகை புரிவதை. இது நலமழிவின் அறிகுறி. இன்றே மாமன்னவனைத் துறக்கிலேன் ஆகில் அவனுக்குக் கேடு உண்டா கும்! அம்மையின் சொல் கேட்டுத் திரிபுரசுந்தரியின் படிமத்தை உற்றுநோக்கினேன். அதில் நகைப்பின் குறியே கண்டிலேன். ஆதலின் அரசியின் உள்ளத்தில் மயக்கம் ஏற்பட்டிருத்தல் வேண்

டும் என்று நினைத்தேன். அரசி என் கருத்தை உணர்ந்து கொண்டு கூறினாள் : ' நீ பார்க்கவில்லையா, பெருமான் ? நன்றாக உற்றுப்பார்.'

" என்ன பார்த்தல்? எப்போதும்போலத்தான் படிமத்தின் முகம் இருந்தது. அரசியின் உள்ளத் தணிவிற்காகக் கூறினேன் : 'படிமம் உண்மையில் சிரிக்கின்றது !' அரசி மகிழ்ச்சியுற்றாள் ; அன்போடும் மீண்டும் சொன்னாள் : ' பெரும, வாப்பிரவ்வியா, மன்னவன் என்னை மணமுடிப்பதற்குமுன் என்னை ஒருவனுக்குக் கொடுப்பதாக உறுதியளிக்கப் பெற்றிருந்தது. என் தந்தை குலூத மன்னன் அன்று. நான் கைப்பற்றப் பெற்ற இளமங்கை. ஏமாற்றித் தீயவர்கள் மாமன்னனுக்கு என்னை மணமுடித்தனர். இந்த மாதரில்லத்தே நான் மிக அழுதேன் ; நானுன் மனைவியல்லள் எனத் தெளிவாக மன்னனிடம் கூறிவிட்டேன். என் தந்தை ஓர் ஆடவனுக்கு என்னை மணமுடிப்பதாக உறுதிமொழி அளித்திருந்தார். அவ்வாடவனே என் கொழுநன் என்று இவ்வளவுங்கூறிய பின்னரே மன்னவன் என் கருத்திற்கு மதிப்பளித்தான். என்னை நல்ல உள்ளத்தோடும் அன்போடும் நடத்தினான். ஆனால் இன்றுவரை என்னை மனைவியாகப் பெற வேண்டுமென்ற ஆவலைத் துறக்கவில்லை. என் தந்தை உறுதி மொழி பெற்ற அவ்விளைஞன் நிலைகலங்கித் துறவியானான். அவன் விந்திய மலைத்தொடரிலே தாமிர மலையிலே என்ன தவம் ஆற்றுகின்றானோ அறியேன். இடைவிடாமல் அவன் அழைப்பைக் கேட்டவாறுள்ளேன். இன்றிரவு நான் செவியால் கேட்டது என் உடம்பைச் சிலிர்க்கச் செய்கின்றது. நான் வையம் துறந்து தான் ஆகவேண்டும். நீ மன்னவனுக்குச் செய்தி அறிவிப்பாயாக. நேரம் கடப்பதால் பெருங்கேடு விளையும்.'

" தலைவணங்கி விருப்பமின்றிக் கட்டளையை நிறைவேற்றினேன்."

இளவரசி இடைமறித்து வினவினாள் : " அரசியின் பெயர் மாமாயை அல்லவா பெரும?" வாப்பிரவ்வியன் ஆம் என்றபொழுது வியப்புற்றவளாய் அவள் என்னைக் கண்டாள். நிபுணிகையின் கண்கள் பெரியனவாயின. "மிகமிக வியப்பாகவுள்ளது !" என்று கூறினாள். முதியவன் வரலாறு தொடர்ந்தான்.

" மன்னவன் இதனைக் கேட்டு மிகவும் வருத்தமுற்றான். அதே நேரத்தில் அரசியைக் காண என்னோடும் வந்தான். மன்னவன் அரசியின் துறவு வேடம் கண்டு அழத் தொடங்கினான் ;

சொன்னுன்: ‘தேவீ! மாதரில்லத்திற்குப் பொருந்தாத வேடம் புனைதற்கு என்ன நிகழ்ந்துவிட்டது? என்னையும் அறியாமல் ஏதேனும் தவறு செய்துவிட்டேனு?’

“மாமாயை முகத்தில் எம் மாறுதலும் ஏற்படவில்லை. அவள் அமைதியொடும் சொல் மொழிந்தாள்: ‘இன்றுவரை என்னுள்ளத்தே நிகழ்ந்த போர்கள் இன்று நின்றுவிட்டன. திரிபுரசுந்தரியின் கட்டளை இன்றே வந்துவிட்டது. இதன் பிறகும் என்னை மாதரில்லத்திற்குள் அடைத்து வைத்தால் உங்களுக்குத் தீமையே ஏற்படும். மன்னவா, அதோ பாருங்கள்! இன்று தேவியின் படிமம் சிரித்துக்கொண்டிருக்கின்றது. அத்தகைய கெடுதலான முன்னறிவிப்பு முன்னெப்போதும் யான் கண்டதில்லை. யான் இன்றிரவு தேவியின் காட்சி பெற்றேன். விந்திய மலைத்தூமிர உச்சியினின்றும் என்னை ஈர்க்கின்ற சொல் முழங்கக் கேட்டேன். இன்றே மாமன்னன் தொடர்பறுத்துவிட்டுப் போகவில்லையேல் அவன் முற்றிலும் அழிவுறுவான் எனத் தேவி என்னை வற்புறுத்திஞள். மன்னவ, ஆயிரந்தலை நல்ல பாம்பு மௌக்கரி மர பினையே நக்கி விழுங்கக் கனவு கண்டேன்’ சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே மாமாயையின் குரல் அடங்கிற்று. கண்ணீர் பொங்கிற்று; உடம்பு முழுதும் மயிர் பொடித்தது. மண்டியிட்டு வேண்டினுள்: ‘மன்னித்தருள்க மன்னவ, துறவு பூணுமல் உங்கள் தொடர்பை அறுக்க முடியாது. வையத்தில் வழங்கும் சாத்திர சமூக வரம்புகள் கெடாமல் இருக்க இதனையன்றி வேறு வழி இல்லை.’

“சிறிதுநேரம் வரை நெஞ்சம் உடைபட்டு அமர்ந்துவிட்டான் மன்னன். மீண்டும் உரைத்தான்: ‘இன்றுவரை உன் விருப்பத்திற்குமாறுக ஒன்றும் செய்யவில்லை. ஒருமுறை மட்டும் என் விருப்பத்தைத் தடை செய்யற்க.’ அரசி நன்றி உணர்வோடும் உரைத்தாள்: ‘அவ்விருப்பம் என்ன மன்னவா?’ மன்னன் உரைத்தான்: ‘எங்கோ வசிய மந்திர வேலை நடைபெறுவதாக எனக்கு ஐயம் ஏற்படுகிறது. இஃது எனது குற்ற நெஞ்சத்தின் தவருன கருத்தாக இருக்கலாம். கள்ளமின்றி உள்ளத்தின் பொருளை உரைத்தேன். உன் நெஞ்சம் இசைந்தால் ஒருமுறை தூமிரமலை சென்று நடப்பதை நானே நேரில் அறிந்து கொள்ள விரும்புகின்றேன். அதுவரை இம்மாதரில்லத்தில் தங்கி இருக்க இசைந்தருள வேண்டும். உனது நம்பிக்கைக்கு உரியதோர் ஆளை என்னேடும் அனுப்புக.’

துறவறம் மேற்கொண்ட அரசியின் இதழ்களில் துறந்தார்

தம் நகைப்புத் தோன்றியது: 'பார்த்து வருக, மன்னவா! உங்கள் மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது.'

'ஆனல் என்மீதே எனக்கு உறுதி இல்லே தேவீ! ஏன் எனில் என்னுயிர் ஈந்தாயினும் உன்னே மாதரில்லத்திலேயே என்றும் நிறுத்திவைக்க விழைகின்றேன்.'

'உங்கள்மீது எனக்கு முற்றிலும் நம்பிக்கை உண்டு மன்னவா!' மன்னன் உரைத்தான்: 'இல்லே, இல்லே; நீ உன் நம்பிக்கையான ஊழியனேக் கட்டாயம் அனுப்புக!'

'எனில் இந்த முதிய வாப்பிரவ்வியன் உம்மோடு ஏகுவான்!'

"அரசியின் கட்டளேயைப் பெற்று மன்னனேடும் தூமிர மலேக்குப் புறப்பட்டேன். தேரின் உதவி சிறிது தொலேவுதான் கிடைத்தது. விந்தியமலே மீது கால்நடையில்தான் போகவேண்டும். ஒரு பெரிய கற்பாறையின் கீழிருந்து மேல்வரை புல் செடி இன்றிப் பழுப்பு நிறங்கொண்டிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலே உச்சிமீது காட்டுச் செடிகள் காணப்பெற்றன. மாபெரும் நெருப்புத்தழல் உச்சியில் சிறிது புகைபோல அந்தச் செடிச் செறிவு காணப்பெற்றது. தூமிரமலே (புகைமலே) என்று இந்தக் காரணம் பற்றியே வந்திருக்கலாம். உச்சிக்குச் செல்ல மாந்தர்தம் பெருமுயற்சியால் செதுக்கி வைக்கப்பெற்ற படிக்கட்டுகள் இருந்தன. வழியில் மாதர் யோகியர்தம் படிமங்கள் செதுக்கப்பட்டிருந்தன. எங்கும் காணமுடியாத தந்திரிக எந்திரங்களும் பொறிக்கப்பெற்றிருந்தன. உச்சி மீது தூய தண்ணீர்க்குளம் இருந்தது. அதன் மீது கற்பாலம் அமைந்திருந்தது. குளத்தின் இப்பால் சில குகைகள் இருந்தன. அப்பால் தூமிரேசுவரியின் கோவில் இருந்தது. கோவில் பெயர் மட்டுந்தான்; ஒரு குகைக்குள்ளே மற்ருெரு குகை இருந்தது. அதனில் பத்துத் தோள் படிமம் வைக்கப்பெற்றிருந்தது. இதனேயே தூமிரேசுவரி என்றனர். கோவில் வாயிலிலே ஒரு யோகியைக் கண்டோம். அவர் மஞ்சள் கால்சட்டை அணிந்திருந்தார். கையில் வளேந்த தடி இருந்தது. கழுத்திலும் காதிலும் தோளிலும் பெரிய பெரிய உருத்திராக்கங்கள் அசைந்து கொண்டிருந்தன. மாபெரும் சடைமுடியைச் சுற்றிலும் பலகறைமாலே சுற்றப் பெற்றிருந்தது. அவர் எதிரே இரும்பு ஓடு இருந்தது. எங்களேப் பார்த்ததும் இடியிடித்துச் சிரித்தார். அரசன் மீது தன் வளேதடியைச் சுழற்றி

எறிந்தார்; அது அரசன் மீது படாதவாறு நான் இடை மறித்து அவர் எதிரே நின்று தடியை என் மார்பில் ஏற்றுக் கொண்டேன். யோகி இன்னும் உரக்க உரக்க இடியிடித்தாற்போன்று நகைத்தார். அரசனை விளித்துக் கூறினர்: 'கிரகவர்மா, நீ பேறிழந்தவன். தூமிரேசுவரி யின் காட்சி பெறுக. உன் தலைமீது கேடு சுழன்றவா றுள்ளது.'

"அரசன் முகம் வெளுத்தது. வீரனுக இருப்பினும், வட பாரதமே அவன் பெயர் கேட்டு நடுங்கும் மறம் பொருந்திய வனுக இருப்பினும் யோகியின் கூற்றுக்கேட்டு நடுநடுங்கிப் போனுன். யோகி என்னைப்பார்த்துச் சொன்னர்: 'நீ பேறு பெற்றவன். அறமென நீ நினைத்திருப்பது மறம், மறம் என நீ நினைத்திருப்பது அறம் என்று நீ கண்டறிகின்ற அந்நாளிலேயே திரிபுரசுந்தரியைக் கண்களாரக் காண்பாய். போ! தேவியை இப்போது தரிசனம் செய்க.'

"மன்னவன் கை கூப்பிக் கூறினுன்: 'யோகியர் தம் அரசே! எனக்குத் திரிபுரசுந்தரியின் காட்சி எப்போது கிடைக்கும்?'

'நீ இழிதகையோன். உன் ஊழியன் முட்டாள். அவன் அறம் மறம் என்ற தேய்ந்த கோட்டில் இயங்கி வருகின்ருன். இவனுக்கு என்ருவது ஒருநாள் உண்மை புலனுகும். நீ உன்னை அறிஞன் என்று கருதுகின்றனே. நீ அறம் என்ற போலி வேடம் புனைந்தனை. நீ கயவன் கபடி பொய்யன். போதும், இப்போது தேவியின் தரிசனம் காண்க.'

"அடக்கப் பெற்றவன் போல மன்னவன் யோகியின் அடிகளை வணங்கிக் கூறினுன்: 'என் கயமை எப்போது குறைவுபடும்?'

"யோகியின் முகம் மலர்ந்தது. சொன்னர்: 'பார் மாமன்ன! உன்னையே ஏமாற்றி வருகின்றனே. அரசியை விடமாட்டேன் என்கின்ருய்! ஆனல் அவளைச் சொந்தமாக்கும் முயற்சியை செய்தாயில்லை. வசியமந்திர வேலை நடக்கிறதா எனப் பார்க்க வந்தனையல்லவா? தன்னையே தான் முற்றிலும் கொடையாக வழங்குவதே வசியம் எனப்படுகிறது. நீ தன்னை முற்றிலும் கொடையாகவும் வழங்கவில்லை. மற்றவரையும் முற்றிலும் பெற முயன்ருயில்லை. உள்ளே போ, போ! வசிய மந்திர வேலையைப் பார்ப்பாய். போ! உடனே போ! உள்ளே போ!'

"உள்ளே சென்ருேம். ஆங்குப் பத்துத் தோள்படிமம் இருந்தது. அதன் எதிரே ஒரு யோகி மனித எலும்புக்கூடு

மட்டுமாக மெலிந்த உடம்பினனாய் ஒருமுக நினைவில் அமர்ந் திருப்பது கண்டோம். ஆண்டுகள் கணக்காக நீராடவில்லை போலும். உணவு கிடைத்ததோ இல்லையோ. வெளியே இருக்கும் யோகி கூறினார்: 'பாருங்கள் வசிய முயற்சி நடைபெற்றுக்கொண்டுள்ளது, உள்ளே போங்கள்! இன்னும் உள்ளே!'

"நாங்கள் அணுகுந்தோறும் படிமத்தில் மாறுதல் ஏற்பட்ட வாறிருந்தது. இளம் யோகியை நாங்கள் அணுகியபோது படிமம் முற்றிலும் மாறி மாமாயை (அரசன் மனைவி)யின் வடிவத்தை எடுத்துக்கொண்டது. வியப்பும் அச்சமும் கொண்ட வனாய்க் கூச்சலிட்டேன். எங்களிடம் பேசிக் கொண்டிருந்த யோகி கூறினார்: 'என்ன காண்கின்றாய் மன்னா? தேவியை அணுகி வணங்கு. உன் கேடுகள் எல்லாம் விலகிவிடும்.' மன்னன் உடம்பு வியர்த்தது. அஞ்சிக் கூச்சலிட்டு நிலத்தில் அமர்ந்தான்; பின்னர் படிப்படியாக உணர்விழந்து கீழே உருண்டுவிட்டான்: 'காப்பாற்றுக, காப்பாற்றுக' என்று நான் கூச்சலிட்டேன். என் கூச்சலால் பேசாதிருந்த இளம் யோகியின் தவம் குலைந்தது. முதிய யோகி எனக்கு ஆறுதல் கூறினார்: 'அஞ்சற்க, தேவியை வணங்கு.' நான் அடியற்ற மரம்போல் விழுந்து வணங்கினேன். யோகியர்க்கரசன் இளைஞனை ஏதோ பெயரிட்டு அழைத்தார். அந்தப் பெயரை மறந்துவிட்டேன்; கேட்க அஞ்சத்தக்கதாக இருந்தது.

"அந்த நைந்த வாலிப முனிவன் வியப்போடும் எம்மிரு வரையும் பார்த்தான். யோகியர்க்கரசன் இயம்பினான்: 'செல்வ! இவ்விருவரும் கிரகவர்மனும் அவன் ஊழியனும்' வாலிபன் முகத்தே ஒரு சிறந்த அன்பொளி தவழ்ந்தது. அவன் உரைத்தான்: 'கிரகவர்மன்! ஆகா!' மெதுவாக அரசன் தலையைத் தடவிக் கொடுத்தான். அரசனை அங்கிருந்தும் எடுத்துக் குளத்தங்கரை அடைந்தோம். சிறிது பணிவிடைக்குப் பிறகு அரசன் உணர்வுற்றான். 'தவறிவிட்டாய் மன்னா! தேவியை மகிழ வைக்கத் தவறினாய். வீடு திரும்புக. மௌக்கரி மரபின் எதிர்காலம் நலமாக இல்லை. என்றைக்காவது திரிபுர சுந்தரியின் காட்சி பெறுவாயாகில்! மாமாயை வடிவத்தில் நீ காணவில்லை; ஆனால் தேவியை மாமாயை வடிவத்தில் கண்டாய். முயல்க! ஊழ்வினை நன்மையாக இருப்பின் ஒரு நாளாயினும் தேவியின் காட்சி பெறுவாய். பல நாட்கள் வாழ மாட்டாய். ஆனால் அரசித்திரு, மாமாயை மீது நம்பிக்கை

கொள்ளாதே. வேறு திருமணம் செய்து கொள்க. வடபாரத முழுவதும் எரிந்து சாம்பராகும் எனத் தேவி இரவில் கனவில் கூறினள். மாமாயையே நாட்டைக் காக்க முடியும். அவளைத் தடுக்காதே.'

"என்னைச் சுட்டி யோகியர்க்கரசன் புகன்ருன் : 'மௌக்கரி மரபின் நன்மைக்காகத் தடியை எறிந்தேன் ; அதனை முட்டாள் நீ ஏற்றுக் கொண்டனை ? அறிவற்ற ஊழியா! தவருக எத்தகைய கேடு நிகழ்த்திவிட்டாய் ! எனினும் உன் தவறினல் ஒருநாளேனும் பாரதத்திற்குப் பேறுண்டாகலாம். வீடு திரும்புக !'

"மன்னன் பேசாமல் அமர்ந்திருந்தான். இளந்தவசி இமையாது மன்னனைப் பார்த்தவாறிருந்தான். அவன் கண்கள் உருண்டையான பலகறை போன்றிருந்தன. அவன் அசைய வில்லை. உள்ளத்தில் மாறுதலுங் கொள்ளவில்லை. அரசன் எழுந்தபொழுது அவன் கண்களில் நட்பு நீர் வழிந்தது. மன்னவன் உள்ளத்தில் அஃதோர் ஆழ்ந்த பதிவினை உண்டாக் கிற்று. எனினும் பேசாமலிருந்தான்.

"திரும்புகையில் நெடுநேரம் மன்னன் பேசாது நடந்தவா றிருந்தான். என்ன நினைத்துக் கொண்டிருந்தானே அறியேன். நகரை அணுகியதும் என்னிடம் வினவினன் : 'வாப்பிரவ்வியா, நீ என்ன கண்டாய் ?' நான் உடனே விடையிறுத்தேன் : 'தேவ, மாமாயைதேவி தூமிரேசுவரியே' மன்னவன் அதட்டிக் கூறினன் : 'முட்டாள் !' நான் வாயடங் கினேன். மன்னவன் மீண்டும் சொன்னன் : 'வாப்பிரவ்வியா ! இது வசிகரண முயற்சியல்லவா ?'

'வசிகரண வேலை !'

'ஆம் வசிகரண வேலையே ! இந்த இழிந்த தந்திரிகளின் மாயையில் நான் அகப்படேன். மாமாயையை விடவே மாட்டேன். அவள் மௌக்கரி மரபின் திருமகள் !'

"இல்லந்திரும்பி மன்னவன் மாமாயைக்கு ஏதோ அறிவுறுத் தினன். மாலையில் மாமாயை என்னை விசாரித்தாள். உசாவிய பொழுது நடந்தனயாவும் உரைத்தேன். மாமாயை கவலையுற்று வினவினள் : 'யோகியர்க்கரசன் என்னைத் தடுக்கலாகா தென்ருரா ?' 'ஆம், பெருமாட்டீ ! அரசியைத் தடுக்காதே" எனத் தெளிவாக உரைத்தார். சிறிது நேரம் அரசி கவலை யோடும் நின்றபிறகு கூறினள் : "வாப்பிரவ்வியா ! நான் தூமிர மலைக்குப் போகவேண்டும், இசைவாயாக. மன்னவன்

பற்றில் கட்டுண்டுள்ளார். நீங்கள் அனைவரும் முயன்று இரண்டாவது திருமணம்செய்து வையுங்கள். இன்று நான் ஒரு நொடிக்கேனுந் தங்கினாலும் மௌக்கரி மரபின் திரு சினப்பாள். விரைவில் என்னை அனுப்பிவிடு.'

"நான் இசைந்தேன். போய்விட்டாள். மறுநாள் அரசன் அழைத்தபோது நடந்ததைத் தெரிவித்தேன். மன்னவன் மண்டையைப் பிடித்துக்கொண்டு மண்ணில் அமர்ந்து விட்டான். 'போ! உன் வேலையைக் கவனி' என்று மட்டும் கூறினான்."

இவ்வளவுங் கூறி முதியவன் நெட்டுயிர்ப்புயிர்த்தான். இளவரசியை நோக்கிக் கூறினான்: "செல்வீ! மன்னவன் முன்னர் என் தவறு ஒப்புக்கொண்டேனாயினும் என் மனச் சான்று இடைவிடாது என் தவறின்மையை எடுத்துக் காட்டிய வாறிருந்தது. இன்றேவெனில் எனது இரண்டாவது தவறும் தவறில்லை; நன்மைக்காக முடிந்தது என்று நெஞ்சம் நவில் கின்றது." முதியவன் பேசவில்லை. மிகுந்த அன்போடும் இளவரசியின் தலைமீது தடவிக்கொடுத்துப் பேச்சுத்தொடங்கி முடிவுரை கூறினான்: "வடபாரதம் அழிவினின்றும் பாது காக்கப்பெறும். தேவபுத்திரர் திருமகளும் மாமாயையும் அதனைக் காக்க வழி செய்வார்கள். யோகியின் சொல் வீணாகாது. சித்தர் களது சொல் பழுதாகாது." பின்னர் நிபுணிகையை நோக்கி உரைத்தான்: "செல்வீ! நீ வாழ்க. நான் உன்னைப் பன்முறை சாபமிட்டேன். இன்று அந்தச் சாபங்களை நான் கொடுத்த வரங்கள் எனக் கருதுகின்றேன். மனிதனைத் தளையுறுத்தும் பலவித முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன; அவற்றின் அச்சில் அறம் பொருந்துவதில்லை. அறம் விதி முறைகளைக் காட்டிலும் உயர்வானது; ஒழுக்க விதிகளிலும் மேலானது. நான் முன்னர் அறம் எனக் கருதியதெல்லாம் எவ்விடத்தும் எக்காலத்தும் அறம் அல்ல. நீ நினைத்த அறம் பின்னர் பாவமாகவும், பாவமாக நினைத்தது அறமாகவும் காணும் நாளன்றே திரிபுரசுந்தரியின் தரிசனம் பெறுவாய் என்று யோகியார் கூறினார். பெரும் வியப்பு!"

நிபுணிகை நன்றியுணர்வோடு பார்த்துக் கூறினாள்: "ஒரு வினா, பெருமான். மௌக்கரி மன்னனை மறுமணம் செய்து கொள்ளுமாறு ஏன் யோகியார் கூறினார்? அதனால் கற்பிற் சிறந்த அரசித்திரு கைம்மையில் நலிந்து வருகின்றாரே; அவர் வாழ்நாள் வீணாயிற்றே. கைம்மையினும்

துன்பந்தரத்தக்கது மாதர்க்கு வேறு என்ன உள்ளது பெருமான் ?'' முதியவன் அதட்டிக் கூறினன் : "சீ ! நிவுணியா, அப்படிச் சொல்லத் தரமா ? அரசித்திருவின் வாழ்நாள் வீணுயிற்று ? அறியாப் பெண்ணே ! வாழ்க்கை பயன் படுவதென்றுல் என்ன ? யோகியார் தக்கதே உரைத்தார். தன்னே முற்றிலும் 'கொடையாக வழங்குதலே வசிகரணம். வாழ்க்கை முடிவிலே கிரகவர்மனுக்கு இந்தப்பயன் கிடைத்தது. பார், செல்வீ ! மாந்தர் தமக்குச் சொந்தமானதை வழங்குந்தோறும் பயன் பெறுகின்றனர். உயிர் வழங்குவதால் உயிர் பெறுகின்றனர். உள்ளம் வழங்குவதால் உள்ளம் பெறுகின்றனர். தன்னேயே வழங்கும்போது கொடையாளியும் ஏற்பவனும் ஒருங்கே பயன் பெறுகின்றனர். அரசித்திரு தம்மையே வழங்கினுர் ; பயனும் பெற்ருர். உலக அளவையால் நெஞ்சத்தில் மகிழ்ச்சியை அளவெடுக்க முடியாது. துயரம் என்பது நெஞ்சத்தில் ஏற்படும் மாறுதலே, மாந்தர் கீழிருந்து மேல்வரைக்கும் உயர் மகிழ்ச்சி யின் வடிவங்களே. தன்னேயே சிறப்பாக வழங்குவதாலேயே துயரம் அகல்கின்றது, பெரு மகிழ்ச்சி உண்டாகின்றது. யோகி யாரின் சொல் எனக்குக் கருத்துச் செறிவு உள்ளதாகக் காணப் பட்டது. நான் மீண்டும் ஒருமுறை அவரிடம் சென்றேன், ஆனல் என்னே அதட்டி விரட்டி விட்டார். ஒரு சொல்லே வழங்கினுர் ; மூடா, நீ துன்பத்தையே இன்பமாகக் கருதினல்'!'' எப்படிக் கருதமுடியும் செல்வீ ?''

சிறிதுநேரம் வரை நிறையமைதி குடிகொண்டிருந்தது. நான் வினவினேன் : "பெருமான் ! அந்த இளந்தவசியின் பெயர் அகோர பைரவரா ?'' முதியவன் வியப்பு நிறைந்த மகிழ்ச்சி யோடு விடை பகர்ந்தான் : " ஆம், ஆம் பட்ட ! அச்சந்தரும் அஃதே பெயர்தான்.''

நிபுணிகை பட்டம்மையை நோக்கினுள். பட்டம்மை பெண் மான்போலக் கண்ணே விரித்துக் காதுவரை நீட்டியவளாய்ப் பார்க்கலானுள். சிறிது நேரங்கழிந்த பின்னர் கூறினுள் : "மிக வும் வியக்கத்தக்கது ! அருமையிலும் அருமை !'' வியந்த பார்வையோடும் என்னே மிகுந்த நேரம் வரை பார்த்தவாறிருந் தாள். ஏதோ இழந்தவளென நிபுணிகை நின்றுவிட்டாள். சிறிது நேரம் வரை உயிரசைவு இல்லாதவள்போலக் காணப் பெற்ருள். கனவு கண்டெழுந்தவளெனக் கூறினுள் : " தன் னேயே தான் முற்றிலும் கொடையாக வழங்குவதே வசிகரணம் என்பர்.''

# உயிர்ப்பு இருபது

முதலிலேயே என் துயர்தரு தீவினைபற்றி மிகவும் விரித்துரைக்க மாட்டேன் என உறுதி அளித்திருந்தேன். ஆனால் மாந்தர் வாழ்க்கை காணாத ஆற்றல் ஒன்றின் வாயிலாக உருவாக்கப் பெறுகிறது. ஊழ்வினை என்னும் நடிகனின் அவிநயத்தை ஒருவன் தன் பிடிக்குள் கொணர்வானாகில் அவன் உறுதி தவறாது. இருபதாம் உயிர்ப்பு என் தீவினையின் விரிவுரை அல்ல என்று எப்படிக் கூற முடியும்? இதனில் என் நல்வினை உச்சியை எட்டிவிடவில்லை என்றும் எப்படி எல்லையிட்டுக்கூற முடியும்? இதனில் யாவற்றினும் சிறந்த பயன் எனக்கு வாய்த்துள்ளது. இதனை மிக விரித்து எப்படி எழுதுவது?

மன்னர் மன்னவன் ஹர்ஷ தேவன் தனது புதிய நாடகத்தைப் பட்டம்மையிடம் அனுப்பிவைத்தான். தாவகன் இந் நாடகத்தைப் பற்றியே குறித்திருந்தான். இளவரசியும் நிபுணிகையும் மிகுந்த சுவையுடன் அதனைப் படித்தனர். மாமன்னவன் இசைந்தருளினால், எனக்கும் மகிழ்ச்சியாக இருந்தால் ஒரு நாள் மன்னன் முன்னர் நடித்துக் காட்டலாம் என இருமாதரும் விரும்பினர். இங்கு நான் பல்வேறுவகைத்தான விழாக்களில் அகப்பட்டு உழன்று வருகின்றேன். சாருசுமிதை வித்தியுதபாங்கை இருவரின் நடன இசைகள் கண்டு கேட்டு நகரமாந்தர் சுவைவெறி மிகப்பெற்றனர்; இதற்கிடையே அடிகள் பருவுபாதர் எழுந்தருளினர் என்று செய்தி கேட்டேன். மௌக்கரி அந்தணக் குலகுருவின் வருகையால் குடிமக்கள் வெறி இன்னும் பதின் மடங்காயிற்று. பௌத்த துறவி வசுபூதி இச்செய்தி கேட்டு மிகுந்த குழப்பமுற்றார். புத்த அறத்தினர் அடிகள் பருவு சர்மாவைக் கொன்றுவிட முடிவு செய்தனர் என்ற பொய்ச் செய்தி நகரிலே காட்டுத்தீபோலப் பரவிவிட்டது. நெருக்கடியான காலத்தே குடிமக்களிடையே அறிவுமாறாட்டம் ஏற்பட்டது. நல்வினைப்பயனாக என் மூத்தவர் உடுபதிபட்டர் காசியினின்றும் வந்துசேர்ந்தார். குமாரகிருஷ்ணவர்த்தனன் இந்நாட்களில் மிகுந்த குழப்பமுற்றான். பருவுசர்மா வெறுப்புற்றால்

சினந்தால் மிகுந்த ஊறு நிகழும் என்ற உண்மையை உணர்ந் திருந்தான். அடிக்கடி கிருஷ்ணவர்த்தனன் ஹர்ஷதேவனைப் பார்த்துக் கலந்தாராய்ந்த வண்ணம் இருந்தான்; எனினும் எவ் வழியும் பிறக்கவில்லை. திடீரெனக் கிருஷ்ணவர்த்தனன் என்னை யும் உடுபதிபட்டரையும் தன்னிடம் அழைத்தான். நாங்கள் இருவ ரும் அவனில்லம் போனபோது மிகுந்த அன்போடும் பெருமை யோடும் வரவேற்றான். உடுபதிபட்டரிடம் கூறினன்: "அந்த ணர் விரும்பும் ஒரு புலவனைக் கொண்டு பௌத்ததுறவி வசுபூதி யுடன் சொற்போர் நடத்திவைக்க வேண்டுமென்று மன்னனது கட்டளை. தாங்கள் இந்தச் சொற்போர் மன்றத்தில் எதிராளி யாகக் கலந்துகொள்ளவேண்டுமென அந்தணப் புலவோரின் விருப்பம். அறநூல் உரையாடற் போரில் தாங்கள் வசுபூதியை வெல்லமுடியுமா? தங்கள் வெற்றி மீதே இவ்விடத்திய அந்த ணர்களின் மானப்பாதுகாப்புப் பொறுத்துள்ளது; அதனுடன் முழுப்பாரத்தின் எதிர்காலமும் பொறுத்துளது." உடுபதிபட்டர் தயக்கமின்றித் தம் இசைவு தெரிவித்துவிட்டார். குமாரகிருஷ்ண வர்த்தனன் அவரை உடனழைத்துக் கொண்டு மன்னர்மன்னன் பால் சென்றான். நான் பட்டம்மையிடம் மீண்டேன். உடுபதி பட்டர் வசுபூதியார் இவரிடையே மிகுநேரம் வரை சொற் போர் நிகழ்ந்தது. மறுநாள், உடுபதிபட்டர் சொற்போரில் வெற்றிபெற்றார் என்றும் மீண்டும் ஹர்ஷதேவன் பிராம்மண அறத்தில் பற்றுக்கொண்டான் என்றும் மன்னவன் கிரகவர்மன் அரசமன்றத்தில் பிராம்மண பண்டிதர்களுக்கு அளிக்கப்பெற்றி ருந்த பெருமைகள் இன்றும் அளிக்கப்படும் என்றும் நகரத்தில் பறைசாற்றப்பெற்றது. மன்னர் மன்னவன் ஹர்ஷவர்த்தனன் ஒருபடிக்கல்வி பயின்ற நூறு பிராம்மண பண்டிதர்களுக்கு நிலக் கொடை வழங்கினான். நான்மறையாளர், மும்மறையாளர் இருமறையாளர் என்பன போன்ற பல வேற்றுமைப்படிகள் இருப்பினும் அனைவோருக்கும் ஒத்த பெருமை அளிக்கப் பெற்றது. பருவுசர்மாவின் கால்வழியினர் இன்னும் சிறுவர் களாகவே இருந்தனர்; அவர்கள் இன்னும் இருமறைகளைத் தான் பயின்றனர், அவர்களும் ஒத்த மதிப்புப் பெற்றனர். முன்னமேயே புத்த பள்ளிக்குக் கொடுக்கப்பெற்ற நிலக் கொடைகள் அப்படியே இருந்தன. இரு அறத்தினரையும் சமமாக நடத்த அரசன் முடிவு செய்தான். இதுவரை தமது புகழையும் வீரத்தையும் குறிப்பதற்காக விக்கிரமாதித்தரின் புகழ்க் குறியினை அணிவது அரசனுக்கு வழக்கமாக இருந்தது. அனை

வோரின் மனத்தாங்கலை நீக்குதற்கு 'நரேந்திர சந்திரன்' என்ற பட்டத்தை ஏற்றுக்கொண்டான். அவனது புகழால் அமைதி நிலைபெறும் என்று கருதி ஹர்ஷதேவன் கருதினான் போலும். இந்த அறிவிப்பால் குடிமக்களிடையே வெற்றி வெறி குடிகொண்டுவிட்டது. நகரத்தெருக்களெல்லாம் 'நரேந்திர சந்திர'னுக்கு வெற்றி வெற்றி என்ற முழக்கமே. மகிழ்ச்சிச் சுழல் எங்கும் சுழன்றது; எங்கும் உவகை வெறி கொண்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில் அடிகள் பருவுபாதரின் வருகை ஏற்பட்டது. பட்டம்மையின் மகிழ்ச்சிக்கடல் கரை உடைத்துப் பெருகிற்று. இதுவரை இயல்பான ஆழ்ந்த பண்பினளாக இயங்கிய இளவரசி இன்று சிறுமி போன்றவளானாள்.

மாமன்னன் பருவுபாதர் இருவருக்கும் பாராட்டளிக்கும் முகத்தான் இரத்தினாவளி நாடகத்தை அவிநயம் செய்யும் பொறுப்பு என்மீது இருந்தது. அவிநயத்திற்கு இசைவு தந்ததோடும் அதனிடையே வேண்டிய மாறுதல் செய்யவும் எனக்கும் தாவகனுக்கும் மன்னன் இசைவு தந்தான். இங்குமங்குமாகச் சில மாறுதல்களும் செய்தேன். ஒரு சுலோகத்தில் மிக்க திறமையாக எனது பெயர் தட்சன் என்ற சொல்லைப் புகுத்திவிட்டேன்.[1]

மாமன்னன் அச்சுலோகத்தை மிகவும் விரும்பினான். அதனைத் தம் மற்ற நாடகங்களிலும் சேர்த்துக் கொண்டான். யாவற்றிலும் சிறந்த பொருள் யாதெனில் மாமன்னவனின் அறிக்கையும் நாடகத்தில் ஒரு சுலோக வடிவத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அது பார்ப்போர் உள்ளத்திலும் அடிகள் பருவுபாதர் உள்ளத்திலும் நல்ல பதிவை ஏற்படுத்திற்று. அவர் அனைவரும் கேட்டு மகிழ்ச்சியுற்றனர். நாடகம் நடந்தபோது சூத்திரதாரன் அந்தச் சுலோகத்தை இனிய குரலில் பாடினர்.

[2] **ஜிதம் உடுபதிநா நம: சுரேப்யோ த்விஜவ்ருஷபாநிருபத்ரவாப வந்து**
**பவதுச ப்ருத்வீ ஸம்ருத்தசஸ்யா ப்ரதபது சந்த்ரவபுர் நரேந்த்ர சந்த்ர:**

---

[1] ஸ்ரீஹர்ஷோ நிபுண: கவி: பரிஷதப்யேஷா குணக்ராஹிணி லோகேஹாரிச வத்சராஜ சரிதம் நாட்யே ச தக்ஷாவயம். [ஸ்ரீ ஹர்ஷதேவனும் சிறந்த கவிஞன் சிறந்த குணத்தைக் கவரும் பார்ப்போராகிய மாந்தருள்ளத்தைக் கவருகின்ற வத்ச ராஜ வரலாற்றினைத் திறமைசாலிகளாகிய (தட்சா) நாங்கள் நடிக்கின்றோம்.]

[2] இரத்தினாவளி பிரஸ்தாவனை.

[சொற்போரிலே வென்றவரும் அந்தணரில் காளைபோன்ற வரும் ஆகிய உடுபதிபட்டர் துன்பமற்றவராகுக. மண்ணுலகமும் பயிர்ச் செழிப்புறுக. சந்திரநரேசன் ஹர்ஷதேவன் நிலவுபோல மண்ணகத்தின்மீது ஒளி பொழிவானாக.

இதனைச் செவிமடுத்துப் பருவுபாதர் "நன்று நன்று" என்று தலையசைத்துப் பாராட்டினர். என் வேண்டுகோளுக் கிணங்கிச் சாருசுமிதை இரத்தினாவளியின் பாத்திர மேற்றாள். அவளைப் பயிற்றுவதில் மிகுமுயற்சி வேண்டியிருக்கவில்லை. நிபுணிகை வாசவதத்தை வேடம் புனைதற்கு ஊக்கமொடும் விழைந்தாள். வத்ச அரசனது பாத்திரம் யானே ஏற்றுக் கொண் டேன். தாவகனோவெனில் தன் திறமையாலேயே நகைவேழம் பன் வேடம் புனைந்தான். இன்னும் மற்ற பாத்திரங்களுக்கு மாந்தர் கிடைத்துவிட்டனர். பட்டம்மைக்கு நாடக ஒத்திகை மிகுந்த விருப்பத்தையும் சுவையையும் தூண்டிற்று. நான் ஒரு நாள் வினவினேன்: "தேவீ! இந்நாடகத்தில் தங்கள் உள்ளங் கவரும் நிகழ்ச்சி என்ன உள்ளது?" அவள் சிரித்துப் பேசா திருந்தாள். ஆனால் இப்படி பேசாமல் அமைய நிபுணிகை விரும்பவில்லை. அவள் ஊக்கமுடன் கூறினாள்: "பட்ட! இரண்டு எதிர்த் திசைகளில் செல்லும் காதலை ஒரே இழையில் கோத்தனள் வாசவதத்தை. காதல் ஒன்றே. அது பிரிக்க முடியாதது. அதனைப் பொறாமையும் பகைமையுந்தான் பிரித்து இழிவுபடுத்துகின்றன. இதனை நீ உணரவில்லை." நான் அன்று வது நிபுணிகையின் கூற்றினுள் ஆழத்தே நுழைந்து பொருள் கண்டுபிடித்திருந்தால் என் வாழ்க்கையையே பாலையாக மாற்றிய அந்தக் கொடிய கேட்டினைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால் எப்போதும் என்திறத்தே தக்க நேரத்தில் தக்கவழி தோன்றிய தில்லை! இப்போது எப்படித் தோன்றப்போகிறது?

நடக்க வேண்டியதுதான் நடந்தது. நாடக அவிநயம் மிகமிக அழகாக இருந்தது. வாசவதத்தை வேடத்தில் நிபுணிகை அரிய திறமை காட்டினாள்; அனைவரையும் சுவை வெறியில் ஆழ்த்திவிட்டாள். அவள் துயர், மகிழ்ச்சி, காதல் இவற்றின் அவிநயங்கள் மிகமிக அழகாக இருந்தன. தீவினை யேன் அவிநயத்தைத்தான் கண்டேன்; அதனினும் ஆழ்ந்த பொருளை அறிந்திலேன். முடிவுக்காட்சியில் இரத்வனாவளியின் கையை என் கையில் வைத்தபோது அவள் உள்ளம் நைந்தது.

தலையில் இருந்து கால்வரை நடுக்கமுற்றாள். அவள் உடம்பின் ஓரிரத்த நாளம் தளர்ந்துவிட்டது. ஒப்படைக்கும்போது கூற வேண்டிய உரை முடிந்ததும் அவள் மேடைமீது உருண்டுவிட்டாள். காட்சியாளர்கள் அனைவரும் "மிக நன்று மிக நன்று" என்று பாராட்டுரை கூறியவாறு திசைகளையும் நடுங்கச் செய்தனர். திரை விழுந்தது. திரைக்குப் பின்னால் நிபுணிகையின் உயிர் போய்க்கொண்டிருந்தது. பட்டம்மை ஓடோடியும் வந்து நிபுணிகை தலையைத் தன் மடிமீதிருத்தினாள்; நீர்ப் பறவைபோல ஓலமிட்டாள்: "அந்தோ, பட்ட, பேறிழந்தவளின் நடிப்பு இன்றோடு முடிந்துவிட்டது. அவள் காதலின் இருதிசைப் போக்கினை ஓரிழையால் பிணித்தாள்."

தாவகன் நடந்ததை ஒரு நொடிப் பொழுதில் உணர்ந்து கொண்டான்; அதனை நான் வாழ்க்கை முழுவதிலும் உணராதிருந்தேன். திரை வீழ்த்துவதில் ஓரிமைப்போதும் நேரங்கடத்தவில்லை. மாமன்னனுக்கும் அடிகள் பருவுபாதருக்கும் இந்தத் துயர் முடிவு அன்று தெரியாது. காண்போர் மகிழ்ச்சிக்கும் எவ்வித ஊறும் நிகழ்த்த நாங்கள் விரும்பவில்லை. தாவகன் திறமையோடும் பட்டம்மையை அவளிருப்பிடம் அனுப்பி விட்டான்; விரைவாக நிபுணிகையின் உடலைச் சுடுகாடுவரை அனுப்பிவிட்டான். தீச்சடங்குகளை நான் செய்து வைத்தேன். தாவகனும் முடிவுவரை உறுதியைத்தாங்கவில்லை. உள்ளம் பிளந்தவனாய் எரியும் உடல் முன் அடியற்ற மரம்போல் விழுந்து வணங்கினான். மகிழ்ச்சி வெறி செறிந்த அவன் முகத்தில் துயரநிழல் தவழ்ந்தது. ஆவணி மழை போலச் சொல்லைப் பொழியும் நாக்கு மரத்துவிட்டது. தாவகன் நிலை விளக்க முடியாத இயல்பை அடைந்துவிட்டது. சாருசுமிதை வெள்ளாடை உடுத்தியவளாய் மலர்ச்செண்டுடன் வருதல் கண்டோம். அந்த எளிய புனைவில் பேரழகு மிளிர்ந்தது கண்டேன். மேகக் குழு நீர் நிரம்பி இருப்பினும் அழகுடைத்தே. நீரற்ற நிலையிலும் அழகுடைத்தே. அவள் கண்களில் அக்கரை பொலிந்தது. அவள் மண்டியிட்டு எரிகின்ற உடலுக்கு வணக்கம் செலுத்தினாள்; சென்னி நிலந்தோய வணங்கிப் பூச்செண்டினைக், கண்புலனாகாது வான் எய்திய மங்கைக்குக் காணிக்கையாக அளித்தாள். தாவகன் கண்கள், நீரைப் பொழிந்தன. என்னிலையை உசாவவே வேண்டாம். திசைகள் பாழ்மையுற்றன. வானம் குயவன் வட்டமெனச் சுழலத் தொடங்கிற்று. சாருசுமிதை என்னைத் தேற்றுமுகத்தான் கூறினாள்: "வருக பெரும! இந்த அழியும் நிலத்தே இதுவே நிலைபெற்ற

உண்மை. நிபுணிகை மாதரினத்திற்கு அருங்கலனுகத் திகழ்ந்தாள். கற்புடைமைக்கு வரம்பாக இருந்தாள். எம்மைப் போன்ற வழிபிறழ்ந்தாருக்கு நல்வழி காட்டியாக விளங்கினுள்!'' அவள் கண்களில் துயரக் கருத்துத் தோன்றியது. தாவகன் நெடுநேரம் பேசாதிருந்து மொழிந்தான்: "ஆம் செல்வி, வருக.'' நான் மெதுவாக அவ்விருவரையும் பின் தொடர்ந்தேன். வழியில் ஒரு முறை நெட்டுயிர்ப்புயிர்த்துச் சாருசுமிதை கூறினுள்: "வையம் வெறும் கற்படிமங்களுக்காக உயிரை விடுகிறது.'' அதன் பொருளென்ன என்பதை அவன் உள்ளமே அறியும்.

பட்டம்மையின் பாடி வீட்டில் நிறையமைதி குடிகொண்டிருந்தது. அவளைத் தனியாக விட்டிருந்தால் அவளுக்கு என்ன ஊறு நிகழுமோ என நெஞ்சத்திற்குள்ளேயே அஞ்சினேன். ஆனல் ஆங்கு நிலவிய அமைதியால் சற்றே ஆறுதலுற்றேன். உள்ளே சென்று பார்த்தேனுக, சுசரிதை மடிமீது தலைவைத்து இளவரசி படுத்திருந்தாள். இங்கு இரவு முதல் யாமம் தீர்ந்த பின்னர் வருவது வழக்கம். மாலைத் தொழுகை, பின்னர் கொழுநனுக்குப் பணிவிடை, பின்னர் குருவழிபாடு முதலியன முறைப்படி முடிந்த பிறகு வர நேரம் வாய்த்தது. இன்று வந்ததும் நிபுணிகை வானம் எய்திய செய்தி அறிந்தாள். நன்காட்டில் எரியும் உடல் மீது மலர்க் காணிக்கை செலுத்த விரும்பினுள். ஆனல் இளவரசியின் அடங்காத்துயர் கண்டு நின்றுவிட்டாள். நல்லதாயிற்று; இல்லையேல் அப்போதைய நிலை அவளுக்குக் கேடு பயந்திருக்கும். சுசரிதை அசையாத கற்படிமம் போல அமர்ந்திருந்தாள். இளவரசி இமை கொட்டாது வானத்தைப் பார்த்தவாறிருந்தாள். என்னைக் காணவில்லை. சுசரிதை குறிப்பினுல் என்னை அமரும்படி தெரிவித்தாள். நெடுநேரம் அமைதி குடிகொண்டிருந்தது. இளவரசியின் கண்களில் நீரில்லை; உள்ளத்தில் எரியும் நெருப்பு அதனை வற்றச் செய்திருக்கும். அந்த எல்லையற்ற இடத்திற்குப் பறந்து செல்ல விரும்பினவோ கண்கள்! தன்னுணர்வு இல்லாத தோள் கொடிகள் சுசரிதை மடியில் தொங்கியவாறிருந்தன. தளர்ந்த கருங்குழல் இடது தோள் மீது பரவிப் படிந்திருந்தது. இந்தத் துயர் நிறைந்த நிலை கண்டு என்னுள்ளம் வெடித்துவிட்டது. 'ஓ! நிவுணியா! என்ன ஊறு நிகழ்த்திவிட்டனை! தினைத்தினையாகக் கரைந்து எனது கல்லொத்த உள்ளத்தை மகிழச் செய்ய முயன்றனை; ஆனல் இறுதிவரை கல் நெஞ்சமாகவே உருவாகிவிட்டது; ஆனல் இந்த வெண்ணெய்ப் படிமத்தை மரவுரி போலக் காத்தவாறு இருந்தாய்.

நீ போய் விட்டாய்! அப்படிமத்தின் நிலே இனி என்ன? அந்தோ! பேறிழந்த பாணபட்ட, இந்நாளேயும் நீ காண இருந்ததே' தன்னே முற்றிலும் கொடையாக வழங்குவதே வசிகரணமாகு மென முதியவன் வாப்பிரவ்வியன் மொழிந்த நாள் முதலாக நிபுணிகையில் மாறுதல் ஏற்படத் தொடங்கிற்று. இரத்திஞவளி நாடகத்தே வாசவதத்தையின் பாத்திரத்தில் இதே பண்பினேக் கண்டாள். சீச்சி எளியவளே; வயப்படுத்த எவ்வளவு பெரிய உயிர்க்கொடை! கண்மூடி நான் பார்த்தபோது அவள் வானு லகத்தே உவகையோடும் நடமாடிக் கொண்டிருப்பவள் போல எனக்கு உள்ளக் கற்பனேயில் தோன்றிஞள். அவள் முறுவலித்து மொழிந்து கொண்டிருந்தாள். "எனக்குச் சொந்தமாக என்னிடம் ஒன்றும் வைத்துக் கொண்டதில்லே. எனக்குரியன யாவற்றை யும் உனக்கும் பட்டம்மைக்கும் வழங்கிவிட்டேன். இரண்டிலும் முரண்பாடு இல்லே. காதலின் இருதிசைப் போக்குகளே ஒரே இழையில் கோத்தேன்!" அந்தோ உண்மையில் அவள் ஒரே இழையாகி விட்டாளா?

பட்டம்மை மெல்லிய குரலால் சுசரிதையை விளித்தாள். 'செல்வீ சுசரிதை!"

"சொல்லுக, பெருமாட்டீ!"

"பட்டன் வந்துவிட்டாஞ?"

"ஆம் வந்துவிட்டார், தேவீ!"

"அழைப்பாயாக."

"இங்கேயே அமர்ந்துள்ளார்."

விரைவாக இளவரசி எழுந்திருக்க முயன்ருள். சுசரிதை தாங்கியவளாய் "மெதுவாக, தேவீ!" என, அதனேக் கருதாது பட்டம்மை விரைவாக எழுந்தமர்ந்தாள். என் நெஞ்சம் பிளவு படுமாறு என்னேப் பார்த்தாள். இதுவரை பொழியாமல் தடை பட்ட கண்ணீர் இப்போது அணையை உடைத்துக் கொண்டு பொழியத் தொடங்கிற்று. சுசரிதையும் அழத் தொடங்கிஞள். ஆஞல் இளவரசி இழந்தனள்போல, மறந்தனள்போலப் பார்த்த வாறிருந்தாள். பின்னர் சொன்ஞள்: "பட்ட, அவள் போய்ச் சேர்ந்தாள். நீமட்டும் நின்றனே, நானும் நின்றேன். அந்தோ பட்ட!" இவ்வளவு சொல்லி மூர்ச்சையாகிக் கிடக்கையில் படுத் தாள். மெதுவாகச் சுசரிதை தலே அமிழ்த்திஞள். நான் அவள் குறிப்பின்படி விசிறினேன்; மெதுவாகப் பட்டம்மை உறங்கி விட்டாள்.

என்னே வெளியே வருமாறு சுசரிதை சுட்டிஞள். வெளியே

தாவகனும் சாருசுமிதையும் அமைதியோடும் அமர்ந்திருந்தனர். என்னுடன் வந்து சுசரிதையும் என்னைத் தேற்றக் கூறினுள்: "நிபுணிகை பெறற்கரிய பேறு பெற்ருள். அவள் கவலையை ஒழிப்பீராக, பெருமான்! நீங்கள் அவள் உயிர்க்கொடையைப் பெருமைப்படுத்துவீராக. அப்போதுதான் அது பொருளுடைய தாகும். நாராயணனது திருவிளையாடல் விளக்கத்திற்குப் புறம் பானது. நிபுணிகை தன் துயரத்தான் மாதர் பெருமைக்கு வரம்பு வகுத்தாள். துயரப்படற்க பெரும, பட்டம்மைக்குத் தொழும்பு செய்க; நிகழ்ந்த கேடு நாராயணனது அருளெனக் கொள்க. நலம் உண்டாகும். மாந்தர் உலகத்தினின்றும் வானின் துறக்கம் வரை ஒரே காதலுள்ளம் ஊடுருவியுள்ளதெனப் பட்டம்மை கூறினுள். அதன் வெற்றி முற்றுருது இடையிலேயே தடைபட்டுவிட்டது. ஏன் தடை படவேண்டும் பெரும? இவ் வெற்றி நிகழ்ந்தாலன்றி நிபுணிகையின் உயிர்க்கொடை பயனு டையதாகாது. வைகறையாகிவிட்டது; நான் இன்றியமையாத கடமைகள் நிறைவேற்றுபவளாக இருக்கின்றேன். முடித்துக் கொண்டு விரைவிலேயே திரும்புவேன். எச்சரிக்கையாக இருங்கள், போகின்றேன்."

போக இருந்தவளாக, சாருசுமிதை எழுந்து சுசரிதை முன்னுல் வந்து நின்ருள்; சுசரிதையைக் கைகூப்பி வணங்கி ளுள். சுசரிதை என்னை நோக்கினுள். எல்லையற்ற அழகு படைத்த சாருசுமிதையின் அறிமுகம் வேண்டினுள். நான் சுருக்கமாக அவளது அறிமுகம் செய்துவைத்தேன்: "கன்னேசி நகரத்தின் திரு சாருசுமிதை." சுசரிதை திகைப்புற்ருள். நம்பாது நவின் ருள்: "சாருசுமிதை!"

சாருசுமிதை வெட்கமடைந்து சொன்னுள்: "ஆம் தேவீ! நானே சாருசுமிதை. இசைவு உண்டேல் இன்று பட்டம்மைக்குப் பணிவிடை புரிகின்றேன்." சுசரிதையின் பெரிய கண்களில் வியப்புத் தவழ்ந்தது. கூறினுள்: "இன்று வேண்டாம், உடன் பிறந்தோய்! இன்று பட்டம்மையின் பால் இவரையே பணி விடைக்கு அனுப்பலாம்." சாருசுமிதையின் முகம் சற்றுத் தொங்கிவிட்டது. தாவகன் நிலைமை உணர்ந்து மெல்லிய குரலில் உரைத்தான்: "நம்மனேவோருக்கும் பட்டம்மைக்குப் பணிவிடை செய்யப் பின்னர் வாய்ப்பு நிகழும். இன்று அறிமுகமில்லாதவர் ஆங்கிருத்தல் நல்லதல்ல." பின்னர் சுசரிதையை நோக்கிப் பணிவோடும் இயம்பினுன்: "தேவீ! சாருசுமிதை வெங்கடேச பட்டரின் காட்சிபெற விழைகின்ருள். தாங்கள் இவளுக்குத்

துணைபுரிவீரா?'' சுசரிதை இன்னும் மிக்கு வியப்புற்றுச் சாரு சுமிதையை உற்றுநோக்கிக் கூறினாள் : ''நாளை எனதில்லத்திற்கு வருவீரா?'' எதிர்நோக்கிய பேறு பெற்றாள் எனச் சாருசுமிதை உவகை செறிந்த குரலில் கூறினாள் : '' ஆம் வருவேன் தேவீ !'' பத்தியோடு தலைவணங்கி நின்றாள்.

மூவரும் என்னிடம் விடைபெற்றனர். தனியாக இளவரசியை நண்ணினேன். இன்று என் நெஞ்சம் நைந்தது. முற்றிலும் நிபுணிகையின்றிப் பட்டம்மைத் தேவியின் வாழ்வைக் கனவிலும் நினைத்திலேன். இப்போதும் பட்டம்மை உறங்கிக்கொண்டிருந்தாள். உறக்கநிலை குறைவு, ஒருமுக நினைவு மிகுதிபோலும். அவள் உள்ளத்து நிகழ்ச்சிகள், கண்புலனாகாத தோழிபால் ஒன்றுபட்டுவிட்டன. மெதுவாக வைகறையாகிக் கொண்டிருந்தது. கதிரவன் கீழ்க் குன்றுச்சிமேல் வரவிருந்தான். இளவரசி எழுந்தமர்ந்தாள். வருந்திய கண்கள் சுருக்க முற்றிருந்தன ; இழக்கத்தகாத பொருளை இழந்ததால் பாழ்மை ஏற்பட்டு விட்டது. அதை எண்ணிக்கொண்டிருந்தாள். எழுந்து நின்று யாரோ ஒருவனது கையைப் பற்றுக் கோடாகப் பற்றத் தன் கையைப் பாழிடத்தில் தடவியவாறிருந்தாள். இது குருடர்தம் நிலையன்றோ ! நான் அணுகி உசாவினேன் : '' என்ன கட்டளை தேவி ?'' அவள் கைப்பற்றிக் குளிக்கும் அறைக்கு அழைத்துப் போமாறு பணித்தாள். ஆங்குக் கொண்டுவிட்டுவிட்டு நான் அவள் கிடக்கையில் சென்று அமர்ந்தேன். சிறிதுநேரம் அவள் காலடி ஓசை கேட்டேன். மாவராகப் படிமத்தருகே போவதைக் கண்டேன். ஒரு சில நொடிகள் பின்னர் என்னை விளித்தாள். குரல் அடங்கிக் கம்மலுற்றிருந்தது. ''இன்று மாவராகச் சுலோகத்தினை நீயே பாடுக ; என்னால் இயலாது.''

என் குரலும் அடங்கி இருந்ததே ! அவள் கட்டளையை நிறைவேற்றித் தான் ஆகவேண்டும். இதனை உன்னியே துயர் நிறைந்த குரலில் சுலோகம் பாடினேன். ' ஓ ! நீரில் அமிழ்ந்த அசைவன அசையாதன தாங்கும் நிலத்தைத் தூக்கிய பெருமான் ! இது எத்தகைய திருவிளையாடல் ! நொந்தவர்க்கு உறுதுணையே ! இதனில் நலம்புரி விழைவு உன்னுடையது என்ன அடங்கியுள்ளது ? நிபுணிகை போய்விட்டாள். இளவரசி, உன்னையே பற்றுக்கோடாகக் கொண்டவள், உன்னையே நாளும் தொழுபவள், தன் தோழியை இழந்ததால் இறக்கை அறுபட்ட குயில்போலத் துடிக்கின்றாள். உன் தொழுகை உன் புகழை யார் பாடுவது ?' இங்ஙனம் நினைத்தவாறு பாடினேன் :

ஜலௌகமக்நா ஸசராசரா தரா விஷாண கோட்யா

அகிலவிஸ்வ மூர்த்திநா

சமுத்ருதா யேந வராஹரூபிணா ஸ மே ஸ்வயம்பூர் பகவான்

ப்ரஸீதது.

பட்டம்மை மயக்கமுற்று மாவராகன் அடிகளில் உருண்டு விட்டாள். அந்தோ! இரண்டாவது கேடு நிகழ்ந்துவிட்டதோ என அஞ்சினேன். அவள் முகம் காலைத் திங்கள்போல ஒளி யிழந்திருந்தது. மாவராகனுக்குப் படைத்திருந்த துளசி நீரை அவள் வாயிலிட்டேன். பின்னர்த் தொழுதேன்: "ஓ கடவுளே! எல்லா வையங்களுக்கும் முதல்வனே! என் குற்றங்களுக்கு இறுதிக் கழிவிரக்கமா? கழுவாய்தானா? இதுவரை என்னை இழுத்து வந்து நரகத்து வாயிலிலே விட்டனையோ? திரிபுவன மோகினீ, தாயே! என் பட்டம்மையைக் காப்பாற்றுக." என் தொழுகை வீணாகவில்லை. இளவரசி கண் திறந்தாள். பாழ்மை செறிந்த பார்வையோடும் என்னை நோக்கினாள். ஊக்கமோடு உரைத்தேன்: "தேவீ! எழுந்திரு; இப்படி வருந்துதல் உனக்குத் தகாது. வானுலகத்தினின்றும் மாந்தர் வையம் வரை ஒரே காதல் உள்ளம் நிலைநாட்டுதலே எஞ்சிய கடமை. உன் பணியா ளனுக்குத் தக்க வழிகாட்டுக. நிபுணிகை இரக்கத்திற்கு இனி உரியவள் அல்லள், நானே இரக்கத்திற்குரியவன். என்னைப் பற்றுக்கோடின்றி விட்டுச் செல்லற்க. எழுக, தேவீ! பாரதத் தைக் காப்பாற்றுதல் எஞ்சிய கடமை. தேவபுத்திரர் திருமகளுக்கு இந்தத் துயர் தக்கதல்ல." இளவரசியின் இரத்த நாளங்கள் இயங்கத் தொடங்கின. என் மடியில் படுத்தபடியே இளவரசி மெலிந்த குரலிலே கூறினாள்: "கீழிருந்து மேல்வரை ஒரே காதல் உள்ளம் பரவியுள்ளது. நிபுணிகை இவ்வுண்மையைத் தெளிவாக்கிச் சென்றாள். என்ன சொல்கின்றாய் பட்ட! நீ எனக்குத் துணைபுரிவாயா பட்ட?" நான் உறுதியோடும் உரைத் தேன்: "ஆம், தேவீ! பணியாளன் உன் ஒவ்வொரு கட்டளையை யும் தலைமேல் தாங்கக் காத்திருக்கின்றேன்."

இளவரசி எழுந்திருந்து உட்கார்ந்து மெதுவாகக் கூறினாள்: "வட பாரதத்திற்கு இப்போது கேடு விலகிற்று பட்ட. சிறிது காலத்திற்குள்ளேயே மாமாயையின் இலட்சக்கணக்கான சீடர்கள் புருடபுரம் முன்னாகத் திரண்டிருந்தனர் என அடிகள் பருவுபாதர் அறிவித்தார். என் தந்தை அவர்களை ஒழுங்குபடுத்திப் படைப் பயிற்சியளித்து உறுதியான படைகளாக மாற்றுவதில் முனைந்

துள்ளார். கும்பா எல்லைக்கும் அப்பால் காட்டு மாந்தர் யாரு மில்லை. ஒருவேளை அவர்கள் திரும்பிப்போய் விட்டிருப்பார்கள். ஆனால் பண்படாத நிலையிலேயே அம்மாந்தர் உள்ளனர். நீ என்னோடும் ஆங்குப் போந்து வேலை செய்ய ஒருப்படுக. அந்தோ பட்ட, இந்த எனது ஆவலை நிபுணிகை ஏற்கவில்லை. ஆனால் அவள் உள்ளக் கருத்தை மாற்ற என்னால் முடியவில்லை. அவளும் போய்ச் சேர்ந்தாள்.''

நான் அவளுடன் போக இசைந்தேன். அவள் மகிழ்ச்சியுற்றாள். நான் மாவராகனைப் பணிந்தேன். மாவராகன் தனது மறை முறுவலிப்பால் எமது மகிழ்ச்சியை எள்ளி நகையாடி இருப்பார். ஏனெனில் நிபுணிகையின் பத்தாம் நாள் சடங்கு முடிவுற்றதும் அடிகள் பருவுபாதர் என்னைப் புருடபுரம் போகப் பணித்தார். அதுவரை பட்டம்மை தாணேசர்புரியிலேயே தங்க வேண்டுமெனவும் பணித்தார். இதனைக் கேட்டுப் பட்டம்மையின் முகம் வெளுத்தது. கீழ்நோக்கிய கண்ணை இன்னும் கீழ்நோக்கியவளாய்க் கூறினாள் : ''விரைவில் திரும்புக, பட்ட.''

சொல்லவேண்டிய விடையை வெளியே கூற என்னால் முடியவில்லை. அம்மையின் நடுங்கிய குரலில் கண்ணீரால் நனைந்தெழுந்த சொற்களை என்னுள்ளத்தே இருத்தினேன். ஆனால் எனதுள்ளத்தின் ஆழத்தே எவனோ கூறினான்: ''மீண்டும் காண்பதியலுமா ?''

## முடிவுரை

பாணபட்டனின் தன் வரலாறு இவ்வளவே கிடைத்தது. அது அரைகுறை வரலாருகவே நின்றுவிட்டது என்பது தெளிவு. இவ்வரலாற்ருேடும் பாணபட்டன் நூல்களிலே காணப்பெறும் ஒத்த நிகழ்ச்சிகளை எடுத்து ஒப்பிட்டு ஆராயும் முயற்சியோடும் நின்றுவிடக் கூடாது. இவ்வரலாற்றின் உள்ளே புதைந்துள்ள இலக்கிய உட்கருத்தையும் ஆராய்தல் வேண்டும். மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போதும் வரலாற்றின் நடை பாணபட்டனது காதம்பரி நடை போன்றுள்ளது எனும் உண்மை புலனுகும். மற்ற புலன்களினும் கண்புலனுக்கே மிக்க சிறப்புத் தரப் பட்டுள்ளது. வடிவம் நிறம் ஒளி அழகு முதலியவை எல்லாம் காதம்பரிபோல இவ்வரலாற்றிலும் நன்ருகப் புனையப் பெற் றுள்ளன. இவ்வளவிலேயே இலக்கிய ஆராய்வு நின்றுவிடக் கூடாது. இவ்வரலாற்று நூலை ஆழ்ந்து படிக்கும் ஒவ்வொரு நல்ல உள்ளமும் இதனைக் காணும்: 'வரலாற்றை எழுதியவரது நினைவில் நூலைத் தொடங்கும்பொழுது முழு வரலாற்றுக் கட்டுக் கோப்பும் அமைந்திருக்கவில்லை. வரலாறு இன்றைய நாட் குறிப்பு நடையில் எழுதப்பெற்றுள்ளது. வரலாற்று நிகழ்ச்சிகள் அவ்வப்போது உள்ளத்தே எழும்போது உடனுக்குடன் அவற்றி னுக்கு வரிவடிவம் தந்து வரைந்து விட்டார் ஆசிரியர் எனத் தென்படுகிறது. கருத்து முழு ஆற்றலோடும் கிளர்ந்தெழும் பொழுது முழுத்திறனையும் காட்டி எழுதினுர். துன்ப நிகழ்ச்சி எழுதும்போது எழுதுகோல் தளர்ந்துவிடுகின்றது. இறுதி 'உயிர்ப்புக்களிலே' ஆசிரியர் தம்மில் தாமே ஆழ்ந்துவிட்டார்.' இஃதெனக்கு வியப்பாகவே இருந்தது. வடமொழி இலக்கியத்தில் இந்த நடை கிடையாது. இது எனக்கு ஐயத்தைத் தூண்டியது. மற்ரெரு செய்தி. காதம்பரியிலே காதல் கருத்து வெளிப்படை யாகவே தெரிவிக்கப்பட்டது; ஆனல் ஈண்டுக் காதற் கருத்து மறைமுகமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காதல் உணர்ச்சியை வெளிப்படுத்துதற்கு மாதர்க் கருங்கலமாகிய நாணம் தடையாக இருந்தது போலும். இவ்வரலாற்றில் மாதர் தம் பெருமை

மிகுந்த தருக்கத்தோடு வன்மையாக ...புறுத்தப்பெற்றுள்ளது. வரலாறு தொடங்கிய தன்மையை ...க்குமிடத்து, காதல் மறை முகமாகத்தான் உருவாகும் என்... விளங்கிற்று. வரலாற்றின் இயல்பான மலர்ச்சியின் குறி...க்கொள்கொண்டு நோக்குங்கால் இதனில் எதிர்ப்போ குற்றமோ...காட்சியுறவில்லை. ஆனால் பாண பட்டனிடமிருந்து தெளிவா... நேர்முகமான காதற் கருத்து வெளிப்படுமெனத் எதிர்நோக்குகின்றோம். காதம்பரியிலே அகச் சுவையின் மெய்ப்பாடுகளும், முயற்சி எடுக்காத எளிய அணி களும் நிரம்பியுள்ளன. அவற்றிற்கு மாறாக இவ்வரலாற்றில் மனத்தில் ஏற்படும் மறுதல்கள், வெட்கம், கிளர்ச்சி, சடத் தன்மை முதலியனவே மிக்குள்ளன. இஃது எமக்கு நலம் எனத் தோன்றவில்லை. வரலாற்றில் இதற்கு எடுத்துக்காட்டுகளைத் தந்து அறிவுறுத்த விருப்பங்கொண்டிருந்தேன்.

வரலாற்றுப் பார்வையில் துவரமிலிந்திரர் என்ற பெயர் ஐயத்தைத் துண்டுகின்றது. அது வரலாற்றுப் பாத்திரமாக இருந்ததா இல்லையா என்பது பிதிரே. பாணபட்டர் காதம்பரித் தொடக்கத்திலே பருவுசர்மாவைத் தொழுதிருக்கின்றார். பருவு சர்மா பாணபட்டரின் குரு ஆவார். இவ் வரலாற்றில் பாணபட் டருக்கு அகோரபைரவர்மீதே மிகுந்த பற்று இருந்தது; பருவு பாதர்மீது மிகவும் குறைவே. தாவகன் என்ற சொல்லின் பொருள் கொண்டு அக்கவிஞன் வண்ணான் என்று சில மேற்கு நாட்டுப் புலவர்கள் நினைக்கின்றனர். இவ் வரலாற்றில் அதற்கு ஒரு சான்றும் இல்லை. இங்குமங்குமாகச் சில பொருட்கள் நாட்டு வரலாற்றின்படி உண்மையல்ல, ஆனால் பெரும்பாலான தகவல்கள் நாட்டு வரலாற்றுடன் உடன்பாடு கொண்டுள்ளன. இந் நூலின் பூகோள இடங்கள் குறித்து நாம் சிறப்பாகக் கவனிக்கவேண்டும். தாணேசர்புரியும் சரணுத்திரி (சுனர்) கோட்டையும் பெயரளவிற்குக் குறிப்பிடப் பெற்றுள்ளன. ஆனால் பத்திரேசர் கோட்டை, அதன் அண்மை இடங்கள் பற்றிய வருணனைகள் நிறைய உள்ளன; அவை உண்மையானவையா என்பது ஐயமே.

இந்நூலிலே ''இரத்திணவளி'' நாடகத்து ''ஜிதமுடு பதிநா'' என்ற சுலோகத்தில் கிளம்பும் ஐயப்பாட்டிற்கு முற்றிலும் விளக்கம் உள்ளது. பன்னாட்களாக இச்சுலோகம் பல புலவோரின் சொற்போருக்குக் காரணமாக இருந்து வந்துள்ளது. இதுவரை அதற்குப் பொருத்தமான உரை கொடுக்கப்படவில்லை. இந்நூல் நம்பக்கூடியதானால் அந்தப்

பிதிருக்கு, ஐயப்பாட்டிற்குத் தெளிவான அழகான விளக்கம் கிடைத்திருக்கிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த முடிபுகளைக் குறிப்பிடும் நூலினை மிக எச்சரிக்கையாக ஆராய வேண்டும். இப்படி நினைத்துக்கொண்டிருந்தபொழுது தீதியிடமிருந்து இந்த முடங்கல் வரப்பெற்றேன். நூலில் பொதிந்துள்ள மறைபொருள் இம்முடங்கல் வாயிலாக எவ்வளவு தெளிவாகின்றது, அதனை பரந்த உள்ளத்தினராகிய உங்கள் முடிவிற்கு விட்டுவிடுகின்றேன். பின்னர் எனது கருத்தைச் சுருக்கமாக உரைக்கின்றேன். தீதியின் முடங்கல் பின்வருமாறு:—

## முடங்கல்

அன்புள்ள வியோம !

ஆறு ஆண்டுகளாகத் தென் ஆஸ்திரியாவில் உறுதி இன்றித் துணிவிழந்து வாழ்ந்து வருகின்றேன். அருவருக்கத்தக்க உலகப் போர்ச் செய்தி கேட்டிருப்பாய். ஆனால் அதன் கொடிய காட்சிகளை நீங்கள் கண்ணால் பார்த்திருக்கமாட்டீர்கள். என்னைப்போல நீங்களும் பார்த்திருந்தீர்களாயின், மாந்தர் சமூக வெற்றிமீது உங்களுக்கும் நம்பிக்கை போய்விடும். கொடிய கொலைகளை நீங்கள் நற்பேற்றினால் காணவில்லை, நல்லதாயிற்று. மனிதர் கொலையல்ல; மனிதத் தன்மையின் முழுக்கொலை என்றே அறிக. ஆறு ஆண்டுகளாக இக் கொடிய காட்சிகளை முதுமையில் பார்த்து வருகின்றேன். இலட்சக்கணக்கான இளைஞர்கள், இளம்பெண்கள், குழந்தைகள் இறந்தனர்; கொலையுண்டனர். தீவினையானது கிழவியாகிய என்னை மட்டும் தப்ப வைத்திருக்கின்றது. நீ பாணபட்டன் வரலாற்றினை அச்சு ஏற்றினை. நல்லதே செய்தாய். புத்தக வடிவில் இல்லையாயினும் பத்திரிகை வடிவிலாயினும் 'வரலாறு' வந்தது சிறப்புடைத்தே. என் வாழ்நாள் இன்னும் சில நாட்கள் வரையே தொடரலாம். வரலாறு பற்றி நான் இதன் முன்னர் எழுதிய முடங்கலை அச்சில் ஏற்ற வேண்டாம். மீண்டும் உங்கள் இடையே நான் வந்து இருக்க முடியாது. உண்மையில் துறவு மேற்கொண்டிருக்கின்றேன். மக்கள் நடமாட்டமில்லாத தனியிடத்தை உறைவிடமாகக் கொண்டுள்ளேன். இதுவே என் இறுதி முடங்கல். 'தன் வரலாறு' பற்றி நீ பெரியதொரு தவறு செய்துவிட்டனை. நீ முகவுரையில் அதற்கு ஒருவன் தன் கைப்பட எழுதும் சொந்த வரலாற்றின் வடிவம் கொடுத்துவிட்டாய்—பார் அப்பனே! நீ வடமொழி பயின்றுள்ளனை என்று நம்பினேன். ஆனால் என்ன

தவறு செய்தனே! பாணபட்டன் உள்ளம் சோணையாற்று மணல் தோறும் செறிந்துள்ளது. சீ! எத்துணை அறியாமை உன்னிடத்தே! அந்த அரிய நெஞ்சத்தின் குரலை நீ கேட்டிலையோ? பாரப்பா, நீ ஆண் மகன், இளைஞன் இத்தகைய தவறு உனக்கழகன்று.

அந்தப் பொல்லாப் பூனைக்குட்டி பெண்ணாக இருந்தது. அது குட்டிகளின் ஒரு படையைப் பெற்றுவிட்டது. உலகப் போரில் இத்தனைக்கு குண்டுகள் பொழிந்தன. ஆனால் இந்தப் பாழாய்ப்போன குட்டிகளில் ஒன்றும் சாகவில்லை. எப்படித் தாங்கப் போகின்றேன்! வாழ்க்கையில் ஏற்படும் ஒரு சிறு தவறு அப்படியே நிலைத்துவிடுகின்றது. இந்தப் பூனையை வளர்க்க முற்பட்டதும் அத்தகையதொரு தவறே. உன்னைப் பற்றிக் குறைகூற ஒன்றுண்டு. நீ பொருளறியாதவன். எளியவனே! பாணபட்டன் பாரதத்தில் மட்டுமில்லை, இந்த மாந்தருலகத்திலிருந்தும் கின்னர உலகம் வரைக்கும் ஒரே காதல் உள்ளம் பரவியுள்ளது. தீதியைச் செம்மையாக அறிய முயற்சி எப்போதேனும் செய்தனையா? தவறு—விரைவுத் துணிச்சல்—கடமையை ஒத்திப் போடுதல் ஆகிய முக்குற்றங்களினின்றும் தப்பித்துக்கொள். இதனை நாள்தோறும் உனக்கறிவுறுத்தத் தீதி அங்கு வர முடியாது. வாழ்க்கையில் ஒரு தவறு எத்துணைக் காலம் எரிப்பது? நீ இத்தகைய தவறுகளினின்றும் தப்பி வாழ்வாயாக; எனது வாழ்த்து எனக்கு. தீதியின் அன்பு உனக்கு ......கை.'

எனில் 'தன் வரலாற்றினை' ஒருவன் தான் எழுதும் சொந்த வரலாறு எனப் பொருள்கொண்டு, தீதியின் நோக்கத்தில் பெருந் தீங்கு செய்துவிட்டேன்.

'என் திறத்தே தவறு—விரைவுத்துணிச்சல்—கடமையை ஒத்திப்போடுதல்—என்ற குற்றங்கள் எத்துணை அளவில் இருப்பினும் அவை எனக்குரியனவே. இம் முடங்கலில் எனக்கு வாய்த்தது இதுமட்டுமல்ல. இந்நூல் படிக்கும் நல்ல உள்ளங்களுக்கும் இம்முடங்கலில் சில செய்திகள் காட்சியுறுகின்றன. அந்நாளில் தீதி தம் கருத்துக் கிளர்ச்சியான் மிகமிக உழன்றார். அவர் எனக்கு ஒரு நரியின் வரலாற்றைக் கூறவிரும்பினார். அந்த நரி புத்தர் காலத்திலிருந்து வாழ்ந்து வருவதாக அவர் நம்பினார். பாணபட்டன் காலத்திலிருந்து வாழ்ந்துவரும் வேறு ஏதேனும் விலங்கை அவர் பார்த்திருப்பாரா? சோணையாற்று எண்ணற்கரிய மணல்களில் எந்த மணற் கூறு பாணபட்ட

னது நெஞ்சத்தின் உள்ளத்தை உருக்கும் அழைப்பை அவர் கேட்டாரோ? பாணபட்டன் பாரதத்தில் மட்டுமில்லை என்ற அவர் சொற்களின் பொருள்தானென்ன? அந்தோ! அந்த முதிய உள்ளத்தில் எத்துணைத் துயர்நெருப்பு அடங்கியுள்ளது. 'ஆஸ்திரிய நாட்டு யவன இளநங்கை தேவபுத்திரர் திருமகள் யாராக இருக்கலாம்? ஆஸ்திரிய நாட்டுத் தீதியாக இருக்கலாகாதா? ஆஸ்திரிய நாட்டில் புதிய பாணபட்டன் தோன்றியிருந்திருப்பான்! அவன் யாராக இருக்கலாம்? அந்தோ எங்களுக்குத் தெரியாத வகையில் அந்த அம்மையார் கவிஞனாகிய காதலன் கண்களால் தம்மையே பார்க்க முயன்றார்போலும். இது எத்தகைய மறைபொருள்! தீதியைத் தவிர யார் இந்த மறைபொருளை அறிவுறுத்தவல்லார்? அந்தப் புதிய பாணபட்டனைக் காணப் பேராவலுடையேன். தீதியை முன்னமேயே நானேன் கேட்கவில்லை? நான் இத்தகைய தலையான பொருளை அறிந்து கொண்டிருக்க வேண்டும்! 'வாழ்க்கையில் ஒருமுறை ஏற்படும் தவறு இறுதி வரை நிலைத்துவிடுகிறது.'

முடங்கலைப் படித்தபின்னர் மேற்சொன்னவாறு என்னெஞ்சம் இயங்கத் தொடங்கிற்று. எனது யூகம் பொருத்தமாயின் அது இலக்கியத்தில் ஒரு புத்தம் புதிய உருவமாகும். கண்ண பெருமானார் தன்னிடத்தே எந்தச் சுவையைப் பெறுகின்றார் என்பதை அறிய இராதை ஆழ்ந்த ஆவல் கொண்டாளாம். இடைக் காலக் கவிஞர் ஒருவர் தமதுள்ளத்தில் இக்கருத்தை யாத்துப் புனைந்தார். அவர் கூறினர்: 'இராதையின் கண்கொண்டு தம்மைப் பார்க்க வேண்டுமெனக் கண்ணபெருமானார் ஆவல் கொண்டார். ஆதலின் நவதீபத்தே கண்ணனார் சைதன்னிய மகாப் பிரபுவானார். காவியத்தைப் பற்றியும் அறவழிபாட்டினைப் பற்றியும் வையத்தில் நிலவும் கற்பனையைத் தீதி தம் வாழ்க்கையில் மெய்ப்பித்து அதற்கு ஒரு வடிவந் தந்தார். தாமே பாணபட்டக் கவிஞனாகித் தம் வடிவத்தைத் தீதியார் கண்டார். இப்பொருள் தொடர்பு நிலையில் எனக்குப் பெறுதற்கரிய மாபெரும் மகிழ்ச்சி உள்ளத்தில் பொங்குகின்றது. ஆனால் நூல் பயிலும் நல்ல உள்ளங்களின்முன் எனது விரிவுரையைத் தடை வடிவத்தில் வைக்க விரும்பவில்லை. இலக்கியத்தில் நன்மைகளை ஆராயும் எண்ணத்தை வெறுக்கின்றேன். உள்ளது உள்ள படியே படிக்கும் நல்ல உள்ளங்கள் முன்னர் இந்த வரலாறு உள்ளது.......வியோமன்.

முற்றிற்று.



015,1D6Bu N66 107869

4A
11-2

## பாண[illegible] தன்வரலாறு

ஹர்ஷ சரித[illegible] போன்ற காவியங்கள் இயற்றிய ப[illegible]பட்டன் என்னும் ஸம்ஸ்கிருத கவி[illegible]ரின் இனிய வரலாற்றை, அந்தக் கவிஞனே சுயசரிதை எழுதுவது போன்று சுவையான சரித்திர நாவலாகப் புனைந்துள்ளார் ஹஜாரி ப்ரசாத் த்விவேதி. உண்மையிலேயே பாணபட்டன் இயற்றிய ஓர் நூலைப் படிப்பது போன்ற பிரமிப்பை ஏற்படுத்துகிறது, வருணனையும் கற்பனை நயமும் இலக்கிய வளமும் செறிந்த இந்நூல். சரித்திர ஆதாரங்களும் பாணபட்டன் இயற்றிய இலக்கியங்களும் துணைகொண்டு எழுதப்பட்ட இந்நூல் இலக்கிய அன்பர்களால் பெரிதும் போற்றப்படுகிறது. சாகித்திய அக்காதெமியின் ஆதரவில் பல இந்திய மொழிகளிலும் இது வெளிவந்துள்ளது.